எம படரடிபடு

கோடாயிதக் கூர்

ஆதியே துணை

எமபடரடிபடு
கோடாயிதக்கூர்

யுக இறுதி ஸீதித் தீர்ப்புக்
கர்த்தர்
பிரம்மோதய சாலை ஆண்டவர்கள்
அருளிச் செய்தது

வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களையும் சர்வ காலத்திற்குள் அடங்கிய அழிவிலா ஸித்திய பூரண மேம்பாடுகளனைத் தையும் கையில் வரவழைத்துத் தரும் கிரயத்தை யுடையது இந்நத்

திருவருட் கொரல்

[இந்நக் கிரந்நத்தில் செயலில்லாத வாசகமே கிடையாது]

இந்த நூலில்

அங்கம் - அங்கி - அங்கு - அங்கே
அஙஙம் - அஙஙி - அஙஙு - அஙஙே

அந்த - அந்தி - அந்தோ - சந்தை
அந்ந - அந்நி - அந்நோ - சந்நை

அஞ்ச - அஞ்சா - அஞ்சி - அஞ்சு - அஞ்சே
அஞ்ஞ - அஞ்ஞா - அஞ்ஞி - அஞ்ஞு - அஞ்ஞே

மேல்வரி - எழுத்துவாசகமா யிருந்நதைக் கீழ்வரி-சாய்ந்ந எழுத்திலிருக்கும் - அச்சர வாசகமாய் எழுதி யிருப்பதைப் பிழையா யிருக்கிறதென்று எண்ணுதிர்கள்.

மொழிக்கு முதலில் ன - எழுத்திருக்கும்.
பார்த்துப் படித்துக் கொள்ளுங்கள்.

அச்சர மமைத்தோன் அறுந்நுபோ னதுகண்
டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்
அறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை
பாமரர் அறியார் பண்டிதர் அறிவர்
இதனை உணர்ந்நபின் எடுத்தோதிக் கிரந்நம்.

மெய்வழிச் சபையார்

ஆதியே துணை

மெய்க்கல்விக் கலாசாலை

சதுர்யுகங்களும் கண்ட மெய்ம்மை!

இறைவன் மனுக்களுக்கு வயது தந்நதின் பிரயோசனமாகியது-மெய்ப்பாலறியவே !

னூலறிவினர் இந்நக்காலத்து இது ஏது!என்பார்களே-
அதுவானதா இருக்கும்!

ஆரிக்கு முந்நின - அவ்வெழுத்துக்கு அப்பாலாய-ஆகர அச்சர பீடத்துக்கோடாலங்கிர்தம்-பிறங்குவதற்கு, இன்னது இன்னதென-இன்னதுக்கு இன்னதென-ஓர்வகை-மூவகை-ஐவகை-எண்வகைப் பொறுப்பும் உள்ளத்துள் உரிமையுற-மெய்ப்பயன் மெய்யாக மெய்யாகவே-எதிர் முகத்தில் வைத்துப் போதிக்கும்-னவக்கிரகக் கோளரி வாளராகிய எதார்த்த ஓர் தேவகுரு இல்லாது-கல்வி வீடுபதம் காண முடியாது.

னம் தமிழ் னாட்டின் கண்ணே-அம் மெய்ப்பாலறி மெய்க்கல்விக்குத் தேவபோதனாச்சாரியர் இல்லாத குறைவால்-மங்கிப்போயிருந்ந மெய்க்கல்விக் கலாசாலை, இது காலம்-ஆசியாக் கண்டம் தமிழ்த் தொண்டமான் சீமையின் ஊறல்மலைச் சாரல் வனந்நரத்திடை விளங்கும் மெய்வழிச் சாலையில்-மெய்க்கல்விக் கலாசாலை உதய னெடும் கொடி தூக்கி-யேற்றப்பெற் றிருக்கின்றது.

என்றும் பொய்யகத் துறைந்துள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டிக் காட்டி,

அகவிளைவு குடியேற்றி, உள்ளும் புறம்பும் சிறக்கச் செவ்விடடைய வைப்பனவாகிய - னரரை மக்களாக்கி- மக்களைத் தேவர்களாக ஆக்கும் - தடையற்ற முழு நிரத்தை உடையதே மெய்க்கல்வி.

மெய்க்கல்விக் கலாசாலையில் சர்வ வேதங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பும், ஒற்றுமை வேற்றுமைத் துலக்கமும், செயற்கரி பகாப்பதத் துள்ளு லாவும்- பகுபதப் பிரத்தியட்சக் காட்சி கோடாகோடி களும்-விடடைக் கூர்ப்பு விழிப்பு னுக்கும், இவை - ஆதி தலைப்பாடமாகக்-குறிப்பு உணர்ந்து-ரூபில் னிரூபித்து, னிரூபித்துப்-போதிக்கப்பெறும்.

இப் போதனைக்குள் புகுதும்போது - தடுமாறும் திகைப்புத் தந்து தடுப்பனவான - அழியும் தொழிலா பரணத் தன்மைத்தாகிய - பொய்க்கல்வியின் முரண்திற னும், பொய்ச்செயல்-பொய்யெண்ணம்- போலிஞானம்- சந்நேகப் பொதுப் புலமையும், இவை போன்ற-மலி வனைத்தும்—மாறுபடக்—களைந்நெறி போதகம் இடை யிடையே உலாவிக்கொண் டேறும். இவை யெல்லா மாகிய அனைத்தும் விரம் மலிந்த-வெற்றித் தமிழிலேயே செழித்து வளரும்.

இதுகாலம் உலகுக்கு ஒரே மேய்ப்பரென் னுளடை வில் விளங்கத் தெரிபவராகிய - இந்நக் கலாசாலையின் போதன சக்தித் தலைவர், கரைகாணு அறிவுக் கடலி னுடைய முகடேறி- முழுப் பேற்றுக் குன்றேறி னிற்கும் மெய்வழிச் சபையை உண்டுபண்ணிய ஸ்ரீ வித்து ருயகம் அவர்களாகவே இருப்பார்கள்; அதற்குரிய சட்ட ஆம்பிள்ளைகள் இடையிடையே அவர்கள் ஆக்கினைப் படிக் காணப் பெறுவார்கள்.

னில்லாத னீர்சடைமேல் னிற்கவைப்பன வாகிய அறிவுக்கு-ஆகாரப் பொருளுணவு வேண்டுகின்ற-வயது வந்த-இச்சையுடைய அகில மனுக்கள் யாவற்றிராளுக்கும்-மேற்படித் தெய்வப்புலமைக் கல்விக் கலாசாலேயில்-மெய்க்கல்வி முதற் போதனைப் பதிப்பு - தினந்நோறும் காலேயிலும் மாலேயிலும் னடைபெறும்.

இக் கலாசாலேயிற் கற்க வருகின்ற - ஏழை முதல் பணக்காரர் வரையுள்ள யாவற்றிராளுக்கும் - இப் பழமைப் புதுக் கல்விக்குப் பிரவேசக் கட்டணமோ - சம்பளமோ யாதொன்றும் இல்லே; னிர்ணயமாகத் தினந் நோறும் வரவேண்டுமென்ற னிபந்தனேயும் இல்லே.

இப் போதனேயைப் பெறுவான்வேண்டி இக் கலாசாலேக்குத் - தீங்கற்ற ஒழுக்கமும் ஆர்வ சித்தமும் உடைய உலகீர் எல்லோரும் அருகதையரென-எதார்த்த மேடேறிக் கூவிக்கொண்டிருக்கும் மெய்க்கல்விக் கலாசாலே.

குறிப்பு:-

1. கல்லாரும் கற்றோரும் அறியவேண்டிய கடமைக்கல்வி இது.

2. உழவு கைத்தொழில் உத்தியோகம் முதலிய தொழிலாபரணருக்கு உலகப்புகழ் சம்பத்து வேலேகளேத் தடைப்படுத்தி விடுமோ னேரம் குறைந்து விடுமோ என்று தமக்குள்ளே ஊசாடும் ஒரு லேசான னினேவு வரலாம். ஆனுல், ஜனகர் முதலாகிய எண்ணற்ற அரசரவர்களின் அராசாட்சி அபார வேலேகளேயே ஒரு சிறிதும் தடுக்க வில்லேயே - அற்ப னமது வேலேயா தடைபடப் போகிறது - என்று அவர்களே மெய்யாக மெய்யாகவே அது னேரம் னினேயுங்கள்.

2

உங்கள் அறிவில் சுண சுணப்பு வந்தபின், ஆறு ஏழு வருடம் படிக்கப் பாடுபட்டிருப்பீர்களல்லவா? ஆம்.

ஆதியில் விளையாட்டைக் கருதியோ, தாய் தகப்பன் கட்டாயத்தினாலோ படித்திருப்பீர்கள். போகப் போக, பிறரைப் பார்த்து விளையாட் டெல்லாம் மறந்து, படிப்பில் ஒரு தோய்வு வருகிறது; ஒரு முயற்சி கலந்து ஓடுகிறது. அப்படிப் படித்த படிப்பே உங்கள் படிப்பு. நாம் அப்படிப் படித்ததில்லை. ஆனால் நாம் கல்வியைப் பழகி வந்திருக்கிறோம்.

வேதத்தை எழுத்தெழுத்தாய்ப் படிக்கிறவனுக்கும், ஒரு கடையிலுள்ள சாமான்களின் பெயர்களை மட்டும் எழுதி எழுதிப் படிக்கிறவனுக்கும் ஏதாவது வித்தியாசமுண்டா? இல்லை. அந்தக் கடைக்கே அவனைக் கொண்டு போய் விட்டாலும், கண் முன் அங்குள்ள சாமான்களை எடுத்துக் காட்டினாலும், அந்தச் சாமான்களில் ஒன்றாவது தெரியுமா? தெரியாது. அந்த நிலையில்தான் வேத சாஸ்திரம் படித்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள். எந்த வேதத்தை எடுத்துப் பேசினாலும், நாம் நம் கையிலுள்ள பழக்கத்தையே வைத்துப் பேசுகிறோம். அப்போது எல்லாம் தானே வந்து பொருந்திக்கொள்கிறது. ஆகவே, வேதத்தைப் பழகியவரிடத்திலே படிப்பது சுலபம் என்று தெரிகிறதல்லவா?

ஒரு இரவிற்குள் நீங்கள் எம்மிடம் படிக்கும் படிப்பு, வேறு எங்கும் எவ்வளவு காலம் இருந்து படித்தாலும் வரக்கூடியதாக இல்லை. உன் வயதையே நீட்டி, முன்சென்ற வயதையெல்லாம் புகுத்தி, கோடி கோடி காலப் படிப்பு படிக்கவைக்கப் பெறுகிறது. இந்தப் படிப்பைப் படிப்பிக்கும் நம் கலாசாலைக்கு “மெய்க்

கல்விக் கலாசாலை" என்று பெயர் வைத்திருக்கிறோம். நும் அதற்கு ஒரு உபாத்தியாயர்.

உன் வயது என்ன விலைபெறும்? பல கோடி ரூபாய் தருகிறோம் என்றாலும் ஒருநாள் வயதைத் தருவாயா? தரமாட்டாய். பலகோடி ரூபாய் ஒரு நாள் வயதிற்கு நிகராகவாவது ஆகுமா? ஆகாது. அவ்வளவு அரிதிலும் அரிது, அருமையிலும் அருமையான தல்லவா வயது? அந்த வயதினை, இறைவன் கிரயம் வாங்கிக்கொண்டா உனக்குத் தந்நான்? இல்லை. இனமாகத் தந்நான். இதைப்பற்றி ஒரு நாள் கூட நீ நினைத்துப் பேசினதுண்டா? இல்லை. அவ்வளவு அலட்சியமாக இருந்துவிட்டாய். ஆகையினால்தான், உன் வயதைக் கொண்டுபோய் இன்னொருவனுக்கு உத்தியோகம் என்ற பெயரில் அடகு வைத்துவிடுகிறாய்.

இந்த உலகத்தில் ஒரு படிப்பு – விரம் மேன்மேலும் விரிட்டு எழுகிற படிப்பு– ஒன்று இருக்கிறது. ஹெடிங்கை (தலைப்பை)ப் பார்த்தவுடனேயே அந்த நூலை எழுதியவர்கள் இன்ன செயலுடையவர்கள்தான், அதிலுள்ள பொருள் இன்னதுதான் என்று தெரிகிற படிப்பு இருக்கிறது. இந்த மெய்க் கல்வித்திறன் வேறு நாட்டில் இல்லை. அப் படிப்பை நும் படித்துப் பழகி வந்திருக்கிறோம். நம்மிடம் வருகிறவர்களுக்குப் பழக்கியும் வருகிறோம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" என்று

அன்று உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தார். நீயும் அதே பிரகாரம் படித்தாய். அதே மாதிரி பிறரிடம் பேச

வும் பழகிக் கொண்டாய். ஆனால் "னற்றுள்" என்றால் என்ன என்றுதான் தெரியவில்லை. "னற்றுள்" என்பதைக் காட்டியன்றோ கற்பிக்கவேண்டும். தானே கற்றுக் கொள்ளாததற்கு முன் பிறருக்குக் கற்பிக்க வந்து விட்டார்கள். "னற்றுளை" ஒருவன் காணவில்லையென்றால், அவன் கற்கவில்லை என்றுதாளுகிறது. னற்றுளின் இலட்சணம் இன்னதென்று நம் முன்னவர்களும் ஞாமும் சொல்லி இருக்கிறோம்.

கொழுமுனையாம் கதிர்முனையில் ஆடும் பாதம்
கோடானு கோடிமறை புகழும் பாதம்
தளிரிலைபூங் காய்ப்பழமாய்ச் சொரிந்த பாதம்
சகலவுயிர்ச் சீவனிலும் ஆடும் பாதம்
பழுதணுகா தாலயத்தி னடன பாதம்
பக்தருள்ளக் கோயிலுளம் பூத்த பாதம்
வழுகுமனத் தவர்க்கதுவே ஞசை பாதம்
னம்பினவர் குடிதிருவங் கேறும் வாழ்வே!
(ஆதிமெய் உதயபூரண வேதாந்தம்)

உனக்கு எல்லா உதவியும் வல்லமையும் தந்துகொண்டிருக்கிற அழியாத யௌவனத்தோடும் பெருமையோடும் விளங்கும் னற்றுளாகிய அத் திருப்பாதத்தினைத் தெரிசிக்கவில்லையென்றால் கல்வியின் பயனை யடையாதவனே ஆவாய்!

இதை ஞம் ஏன் பேசுகிறோம்? அது எம் கையிலுள்ள சரக்கு. எம்முடைய சொந்த வியாபாரப் பேச்சு. னம் வியாபாரம் மிக லாபகரமான வியாபாரம்; இரு உலக வியாபாரம்; கால காலமாக இன்னில வுலகிற்குப் பாரவான்களால் கொண்டு வரப்பெற்ற வியாபாரம்.

இதையெல்லாம் யாராவது நின்று கவனிக்கிற துண்டா? இல்லை. அந்நத் திருப் பாதம் இவர்கட்குத் தேவையில்லை போல் தோன்றுகிறது. திருப் பாதத்தைப் போலிருந்நால் போதுமென்ருல், பணத்தைப் போலிருந் நால் போது மென்றிருந்நுவிடலாமே?

கற்பதற்குமுன் கற்றுவிட்டோம் என்று சொல்லித் திரிபவர்களைக் கேட்க இதுவரை ஆள் வரவில்லை. இப் போது கல்விக்குச் சொந்நக்காரர் வந்நுவிட்டார்கள். ஆகவே, இனி அந்நப் பருவராட்டுச் செல்லாது. இவர் கள் படித்த முதல் எழுத்தே அதாவது ஊமை எழுத்தா கிய பிள்ளையார் சுழியே மொட்டை எழுத்தாய்ப் போச்சு. குழந்நைக்கு முதல் எழுத்துத் தெரியுமா? தெரியாது; அதற்கு அது சரி. அது போகட்டும், வயது வந்ந உனக்கு, அது இன்னதென்று தெரியுமா? தெரி யாது என்கிருய். பிறகு, நீ எதற்குப் படித்தாய்?

"அறியோம் நற்ருள்கள், குருவாழ்க, குருவே துணை". இதனை, "அ, ஆ" படிப்பதற்கு முன்பே ஏன் படிக்கவேண்டும் என்று அந்ந வாத்தியாரைக் கேட் டால் தெரியுமா? தெரியாது. ஆனல், இந்ந ஊறல் மலைக் காட்டிற்குள் வந்நிருக்கிற இந்ந வாத்தியார் அதை உனக்குக் கற்பிப்பார்.

சர்வத்திலும் நின்று ஆடும் குஞ்சித பாதத்தை, ஏழ் நிலைக் கம்பமாய் மூன்றுலகத்திலும் ஊடுருவி நிற் கும் அந்நத் திருப் பாதத்தைத்தான் 'நற்ருள்' என்ருர் கள்.

இருளைச் சங்காரம்செய்து ஜீவ கிரணோதயத்தை உன் உளத்தில் ஏற்றி வைக்கின்ற ஒரு அகமிய குரு வினுடைய - மெய்க் குருவினுடைய துணைகொண்டு,

அதாவது உதவி கொண்டே யல்லாமல், ஊமை எழுத்தா கிய அந்த மெய்யறிவு னற்ருளை, னீ காண முடியாது. அத் திருப்பாதத்தைத் தரிசனையாக உன்மேல் ஏற்றி வைக்கின்ற "குரு வாழ்க! குருவே துணை" என்று முதற் குறியாக அங்கு எழுதி வைக்கப்பெற்றிருக்கிறது. ஆதி யிலே விட்டு வந்த அதைத்தான் இப்பொழுது 'னற்ருள்' என்று திருவள்ளுவ ஞயனுர் அவர்கள் கூட்டுகின்ருர் கள். அது (அந்த ஊமை எழுத்து) உன்னுடைய ஜீவா தார ஆட்டமாக இருக்கிறது. உன் னெஞ்சை இரண்டா கக் கிழித்து, இதோ பார் என்று உன் இதயாசனத்திற் குக் கூட்டிப் போய்க் காட்டினுல்தான் அது உனக்குத் தெரியும். அதை உனக்கு அறிவிக்கவே இந்தக் கலா சாலை வந்துள்ளது. ஆனல், மக்களோ அந்த னற்ருள் தெரியவில்லையே என்ற எண்ணங்கூட இல்லாத தூரத் திற்குப் போய்விட்டார்கள்.

அந்த னற்ருளைக் கற்பிக்கின்றவர்கள் தூலத்தி லிருக்கும்போது, அவர்களைப் பெரியோர், ஆன்ருேர், செம்மல், குருபிரான், ஞானி என்ற எத்திற னுமங்களோடு அழைத்தாலும், தேகம் மறைந்தபின் அவர்களைத்தான் 'தெய்வம்' என்று உலகம் கொண்டாடுகிறது.

இப்போது இந்த னுட்டில் போலிகள் வந்து னுழைந்து விட்டார்கள். கல்வி என்பது யாரிடமுமில்லை. எமன் எல்லையிலும் வெற்றி தருகின்ற மாணிக்கமாக விளங்கும் அந்த ஆயுதம் இருக்கும் எல்லைக்குச் சென்று அதைப் பெற முயற்சியுமில்லை. அப்படிப்பட்ட உலகிற்கு அந்த மெய் ஆயுதத்தைத் தர, னம் சாலை வந்திருக்கிறது.

கல்வி, நிஜமாகவே உன் தலையில் தெய்வத்தை நட்ட வந்தது. ஆனல், நீ அதை வைத்துக்கொண்டு உன் வயிற்றிற்கு ஜீவனம் பண்ணுபவனுக வந்துவிட்டாய். அதை மாற்றுவதற்குத்தான் நமக்கு இவ்வளவு பாடு.

நரனுக இருக்கிற ஒருவன் மனிதனுகிப் பிறகு தேவன் ஆக வந்தவன் என்று நிரூபித்து, அவனை அந்த மெய் நிலையில் குடியேற்றுவிக்க எழுந்ததுவே கல்வி. எத்தனைகோடியாக உன் மெய் யறிவு வளர்ந்தாலும் அவ்வளவையும் வளைத்துத் தன்னகத்து அடக்கிக் கொள்ளுகிற சலாசன பீடமாகிய சந்திரவட்ட சிலாசனமே கல்வி. அந்தக் கல்வி இங்கு முளைகண்டு இருக்கிறது. கல்வி யென்ற அந்த உண்மைப் பெட்டகம் எழுவகைப் பொருள்கள் நிறைந்ததாக இருக்கிறது. அதன் ஏட்டை ஒருவன் எடுத்து விரிக்க முடியாது. பாவம்! அவனுக்கு அது இருக்கிற இடமே தெரியாதே; விரிக்கிறது எப்போ?

3

மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய் மதம்

இதுகாலம் உதயமானதற்குக் காரணம்

★

விரிபுவன வேத மாமறைகளின்
அதிகாரணச் செழுங்கலைக் கருவூலத்து

ஆண்டவர்கள் திருவாயுரை விரிப்பு

'மறலி கைதீண்டா சாலைஆண்டவர்கள் மெய் மதம்' உதயமாகிய திருனாள், பராபவ ௵ வைகாசி ௴ 20வ (2-6-66)ல், பல ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்து னிறைந்த சபையில், அங்ஙனம் இறக்கப்பெற்ற ஆண்டவர்கள் திருவாயுரை:—

"ஆதி தலைனாளில் னாம், உங்கள் பாட்டையர் தனிகை மணிப்பிரான் அவர்களோடு, சர்வத்தையும் விட்டுத் துறவு பூண்டு எழுந்து, மெய்ஞ்ஞான வேட்கையில் ஒருமுகத் துணிவு காரங்கொண்டு புறப்பட்டுப் போன காலத்திலே, னாம் பிறந்த சாதி எம்மைப் பழித்துப் புறக்கணித்தது. மற்றைய சாதி மதத்தினரும் எம்மைச் சேர்த்துக்கொள்ள வில்லை. அது னேரம், அந்த மூர்க்க கால இளமைப் பருவத்தில், எமது உள்ளத்தில் ஒரு துணிச்சலான எண்ணம் வந்து பூத்து னின்றது. 'னித்திய வாழ்விற்கான அறிவறிந்த ஒரு சாதியை, ஓர் ஊரை னாமே உண்டாக்கிக் கொள்வோம்; இவர்கள் னம்மோடு ஒட்டாவிட்டால் போகட்டும்' என்று னினைத்தோம்.

பிறகு னமது தவவேல் வலிமை ஏற்றத்தால் விளைந்த கூரிய சத்திய அறிவுகொண்டு பார்க்கப் பார்க்க, 'எல்லாச் சாதி மதங்களின் பழக்கத்திலுள்ள வேத வேதாந்தங்கள் அனுஷ்டானங்கள் வழிபாடுகள் எவற்றிலும், அவற்றைப் பின்பற்றி வாழுகின்ற எவரது கையிலும், அம் மதங்களினுடைய மெய்ச் செயல் இல்லை-எமனை மிகைக்கும் தவ வணக்க னிஜச்செயலாகிய சர்வ மதங்களினுடைய அந்த மெய்ச்செயல் யாவரிடத்தும் இல்லை' - என்பது னெடுங்காலப் புழக்க வழக்கத்தில் எமக்குத் தெரிய வந்தது.

மேற்கூறியபடி துறவு பூண்டு எழுந்த னும், குருபிரானவர்களே கதியெனப் பின் தொடர்ந்து, 22 வருடங்கள் அவர்களோடு உயிரும் உடலும் போலே, உருவமும் னிழலும் போலே, விழி இமைச் சேர்க்கையராய் அகில வலம் வந்நோம். அதன்பின் அவர்கள் உத்திரவுப்படி ஆடு மேய்க்கும் தொழிலாபரணத்தை ஓராண்டுக் காலம் மேற்கொண்டு இருந்து அது முடிந்ததும், எமது குருகொண்டலவர்களின் பெரிய திருவுள்ளத்தின் கட்டளைப்படியே மதுரையம்பதிக்கு அடுத்த திருப்பரங்குன்றின் குகையில் னெடுனள் அன்ன ஆகாரமின்றிக் கடும் தியானமுகமாகத் தவத்தி லிருந்துவிட்டோம். அவ்வாறிருந்து இக் கலிப்பவகர உலகத்தைத் துண்டாடிப் புது உலகம் புரப்பிப்பான் வேண்டிப் பேரருள் ஆயுதங்களைச் சத்திய யுகப்பரிசு தேவ சன்னதங்களாகப் பெற்று, ஆசீர்பாதக் கங்கணமும் பூண்டு பூர்த்தியானதும், சர்வ வேதங்களினுடைய உயிர் ஆதிக்கப் பதவிகளை எல்லாம் பூரணமாக எம் இதயாசனத்தின்கண்ணே னிரம்பப் பதிப்பித்து, எம்மை வாளுருவி விட்ட எமது னிறையறி

வுக் குடி வரத திலக பிரானவர்கள் இட்ட கலங்கா னிலே னலங்கோடேற்ற ஆக்ஞையின்படி, எமது கையில் னிறைந்து எழிலோங்கி னிற்கும் சர்வக்ஞத் தன்மை யின் னிரந்நர மகிழ்ச்சியை, சாதிமத வேற்றுமையின்றி மனுக்கோலம் எடுத்த அனைவரும் பெற்று மகிழவேண் டும் என்னும் எமது தவ வலிமைத் தனித் துணிவு ஒரே னுட்டத்தோடு, மதுரை திருப்புத்தூர் திருக்கோஷ்டியூர் கீழச்சேவல்பட்டி காரைக்குடி தேவகோட்டை முதலிய இடங்களில் தங்கித் தங்கிப் பிரசங்கம் செய்து வந்நோம். அது காலத்திலே, அங்குள்ள மக்கள்பால் ஆடம்பர உல் லாச வாழ்க்கையும் னுகரிக வெளி மினுக்குப்பாடும் அதிக மாக மலிவுற்று, ஞானவாழ்வில் லட்சிய உணர்வே இல்லாம லிருப்பதைக் கண்டு, அந்ந ஊர்களை எல்லாம் விட்டுக் கடைசியில் மானுமதுரைக்கு அடுத்த இராஜ கெம்பீரத்தில் வந்நு தங்கினேம். அங்கு, னன்னெறி அழிக்கும் வின்ன வெங்கலியை மாற்றச் சென்னெறிப் பிரசங்கம் செய்து வருங்காலத்திலே, படர்செறிப் பவத் தலைப் பொருமைப் பாதகர்கள், சகம் உய்ய வந்நுள்ள னம் தெய்வ மெய்ச் செயலை அழித்துவிட னினைத்து, இரவு பகலாய்ப் பல இன்னல்கள் இயற்றிவர, அவை யாவும் வெற்றி காணுது போகவே, னும் இருந்நுவந்ந குடிசைக்கும் இரவு னேரத்தில் னும் உள்ளே இருக்கும் போது வெளித்தாளிட்டுத் தீ வைத்து இழைத்த கொடு மையினின்றும் தப்பி, பிரஞ்சு ஆட்சியிலிருந்ந காரைக் கால் னேக்கிக் கால் னடையாக ஒரு லங்கோடு, ஒரு யோக தண்டு, கவுன் உடையுடன் தனித்துச் சோழவள னுட்டுத் தஞ்ஞாவூர் தாண்டிப் பிரயாணமாய்ப் போய்க் கொண்டிருக்கும் காலத்தில், இரவெல்லாம் பட்டினி,

காலே இள னேரம், ஒரு ஏரிக் கரையில் ஏறி, மறு புறம் இருந்த மடையின் பக்கம் இறங்கிப் பசிக் கொடுமையால் ஏதாவது ஊரோ வீடுகளோ தெரிகிறதா என்று பார்த்த வண்ணம் னடக்கும்போது, எம் உள்ளத்தில் ஓர் எண்ணம் வந்நது. "னமக்கென மெய்யானதவச் செயலுடைய ஒரு மதமும், ஓர் ஊரும் உண்டாக்கிக் கொள்ள வேணும்; அப்படியிருந்நால், னமக்கு இம்மாதிரியான கஷ்டங்களெல்லாம் வராதே" என்ற னினைவு வந்நது. பசியால் வருந்நி, அனாதையைப்போல் னும் போய்க் கொண்டிருக்கிற அந்ந னேரத்தில், 'கட்டிக் கிடக்கிறது குட்டிச் சுவரு, கனாக் காணுகிறது மாட மாளிகை கூட கோபுரம்' என்று சுலோகம் சொல்லுவார்களே, அந்ந மாதிரியல்லவா னும் னினைக்கிறோம் - என்ற னினைப்பும் வந்நது. அந்நச் சுலோகம் கழுதையையும் அந்நச் சுபாவத்நிலிருக்கிற மனிதர்களையும் குறிக்கிறது; அவர்களால் இந்நக் காரியம் முடியாததுதான்; ஆனல் னம் கையில் சர்வ சாட்சியாகிய சர்வக்ஞப் பொருள், எமன் அஞ்னுகின்ற ஆயுதம் அல்லவா இருக்கிறது; ஆகவே அந்நச் சுலோகம் னமக்குப் பொருந்நாது என்று எண்ணியவர்களாய் மேல் னடந்நோம்.

சத்திய வாழ்க்கைக்குரிய ஓர் ஊரும் மறலி கை தீண்டா மெய் மதமும் உண்டாக்கவேண்டு மென்றிருந்ந அந்ந எண்ணம் இன்னெடுங் காலமாகி, எண்ணற்ற பாடெல்லாம் அனுபவித்து, இங்கு, னமது வனைந்நர உத்தியோவன மெய்வழிச் சாலையில் வந்நு னிறைவேறி விடிந்நது இன்னள்.

எமன் கை தீண்டா தனித்த வல்லபமாகிய சாதிமத வேதங்களின் சாயுச்சிய னிலை இன்று யார் கையிலும்

இல்லை. அத் தனிவல்லபப் பரிசுத்தச் சத்திய ஓர் னிலை மேம்பாட்டினைக் கொண்டு ஞம் னடத்தி வருகின்ற னமது அகண்ட ஜீவ பண்டித அருங்காரணப் பெருக்க விரிப்பைப் பார்த்து, பொய்க் குபாடப் பொருமையை இன்னும் விசிறிக் கொண்டிருப்பவர்கள், அதையே தங் ஙளுக்கு ஜீவனமாக வைத்துக்கொண்டு, மாற்ற முடியாத அசட்டுத் துணிகரப் பொய்யர்களாய் னின்று, மென்மேலும் படர் விரிப்பதைக் கண்டு, இவ்வளவு பெருந்திரளாக உள்ள னமது மக்கள் சகிக்க முடியாத துன்பத்திற்கு ஆளாவதால், இனியும் அவர்களோடு னமக்கு எவ்வித உறவும் ஆகவே ஆகாது என்ற தீர்க் கமான எண்ணத்திற்கு வந்தோம்.

அதோடுகூட, அடுத்துவரும் ஒரு சில மாத ஙளுக்குள்ளாகச் சர்வசங்கார ஊழித் தீர்ப்பு அழிவு காலம் வர னெருங்குவது, னமது பாதையில் முழுத் தோற்றமாகத் தோன்றி னிற்கின்றபடியால், இப்பவே ஞம்னம் மதத்தைத் தனித்து மாற்றிப் பிரித்துக்கொள்ள வேண்டும்; னமது மதத்தின் ஞமம் முன்னுள்ள பண் டைய மதங்களின் ஞமத்தில் ஏதாவது கொஞ்சும் ஒட்டி யிருந்தாலும், னம்மை 'அவர் இவர்' என்று சொந்நம் பாராட்டி, எச்சித்தனக் குறை கூற வருவார்கள் என்ற முடிவுக்கு இதுனுள் ஞம் வந்நுவிட்டோம். ஆகவே, சர்வ மதங்களின் அகமியத்தில் இருந்நும் புழக்கத்தில் இல்லாது மறைந்நுபோய்விட்ட அதிதீர்க்க அடிப்படை யாகிய, மகா அருங்காரண அகில மனுக்குலம் அனைத்தி னுக்கும் வேண்டுவனவாகிய முத்திச் செயலை வைத்து 'மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய் மதம்'

என்ற ஞமத்தை னமது மதத்திற்கு இன்று சூட்டு கின்றோம்.

அனந்நாதி தேவர்கள்:— 'ஞங்கள் பூரண சம் மதத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறோம்' என்று பெருந் நொனி எழும்ப வீறுகொண்டு ஆரவாரித்தார்கள்.

தொடர்ந்து ஆண்டவர்கள்:— னேரடியாக னம் கையகத்து னின்றுவிளங்கும் தவ ஆதிக்க அழியானிலே அருங்காரணச் செயலைத்தான் ஒரு ஞமம் கொடுத்து எடுத்து வைத்துள்ளோம். சர்வ உலக மனுக்குலமும், சர்வ உலக உயிர்க் கோடிகள் அவ்வளவும் மறலி கை அடக்கமே. அந்த மறலி எமது கை அடக்கம். 'இந்நச் செயலை வைத்துத்தான் னம் மதத்திற்கு இந்ந ஞமம் தந்நோம்; போடு முத்திரை.

னித்திய தூலம் எடுக்கும் னேரமாகிய அதை, உலக மக்கள் சாவு என்கிறார்கள். அது, னமக்கு னித் திய னெடும் வாழ்வு வரம் பெறும் பொன்னுடல் தோன்றி வரும் பிறப்பிடமா யிருக்கிறது. இந்ந அழிதேகத்தில்' அனித்திய தூலத்தில் ஞம் செய்து கொண்டிருகிறக் இகத்துடைய காரியங்கள் அவ்வளவும் அழிக்கப்பட்டே போகும். ஆனல் னீங்களெல்லோரும் இப்போது, அவற்றையே போதுமென் றிருந்துவிடாமல், னித்திய தூலப் பிறப்பு எடுப்பதற்காக ஒரு கருவறையில் இருக்கி றீர்கள். அதுதான் ஆசானின் அன்பகத்து இருந்து வாழ்வது. அந்நக் கருவறையில் னமக்கு வேண்டியது, ஆசான் அவர்களுடைய னித்திய அருட்பிரசாத அமுது என்ற சத்திய உணர்வோடு இங்கு ஒட்டி, இடையரு அன்பேறும் தவப் பிடியுடன் னீங்கள் இருத்தல் வேண்

டும். அதுதான் மறலி கைதீண்டா னித்திய மூர்த்தித் தேகத்தில் பிறப்பதற்கான ஒரே வழி.

சர்வ மதங்களின் அடித்தளமாகிய உண்மை, னிசத்வது சத்துவ சத்திய உயிர்ப்பு, மறலி கை தீண்டாமையே. இத் தனிச் செயல்தான் னித்திய சுவர்ணபத தூலம் எடுப்பது. அது தவறுமேயானால், கசப்புஎன்னும் தீட்டு னற்ற ஜலம் வெளியாகி, னித்திய அவஸ்தைத் தூல மாகிய அலகைத் தூலம் வந்துவிடும்.

"னம்முடைய மெய் மதத்திற்கு வேண்டிய சட்டதிட்டங்களை அப்போதைக் கப்போது உண்டாக்கிக் கொண்டே வருவோம். எல்லோரும் தலைகொடுத்து னிற்பீர்களா?" என்று ஆண்டவர்கள் வினவியருளியதைக் கேட்டதும்,

அனந்னாதி தேவர்கள்:—
"அப்படியே தலை கொடுத்து னிற்கிறோம்" என்ற பெரும் சப்தத்துடனே, பதில்தந்நபின், தொடர்ந்து:- "வந்த வந்த அவதார புருஷர்களாலும், முடிதரித்த பெலங் கொண்ட அரசர்களாலும், அறிவுடைய மதி மந்திரிமார்களாலும் கால காலம் முழுப் பிரயாசைப்பாடு கொண்டும் னீக்கிக் களைந்நெறிய முடியாத, எங்களுக் கிடையில் இருந்த, மகாக் கொடுமையோங்கிய பலவேறு சாதி மதங்களின் அஞ்ஞான இருள் வேற்றுமைக் கோரங்களை அறுத்தெறிந்த எங்கள் ஆண்டவர்களே! தங்களுடைய மானெடுங்கால ஓயாத முயற்சி உயிர்முனைப் பாடு கொண்டு, புலியும் பசுவும், ஓனயும் ஆடும், வேங்கையும் மானும் ஒரே துறையில் தன்னிச்சையாக மனமுவந்து தண்ணீர் குடிப்பதுபோல் எங்களை ஆக்கி, மாறுத

ஆன்மனேய உயிர்ஒற்றுமை என்னும் வாடாத தீபத்தை எங்கள் இதய மா மாளிகையில் ஏற்றி, 67 சாதிகளாய்ப் பிரிந்து கிடந்த எங்கள் எல்லோரையும் ஒரு தெய்வமெய்க் குலமாக விளங்க உதயம் செய்து வைத்த எங்கள் அத்தா! யுகங்கோடி காலமாக வேத மாமறைகளின் உள்ளே மறைந்து கிடந்த உயிராணி அருங்காரண னித்திய முத்தி னீதி மாணிக்கச் செயலை, எங்களெல்லோருடைய தலையிலும், என்றும் மங்காது ஏற்றிவைத்த எங்கள் முத்திப்பெருமானே! எப்பேர்ப் பட்ட வல்லபமுடைய தூல சக்தியைக் கொண்டும் யாவ ராலும் செய்ய முடியாத இந்நத் தனி மெய்க்குல உதய அருங்காரணப் பெரிய செயலைத் தங்களின் தெய்வீக சக்தியாலும், னெடுங்கால தவோன்னத வலிமை கொண்டும் செய்து முடித்த எங்கள் மெய்வழி அனந்நர் குலத் தெய்வமே! சத்தியமாகத் தலைகொடுத்து னிற் போம். இதுனேரம்முதல் எங்கள் உடல் பொருள் ஆவியைத் தங்களுடைய னீதி மாணிக்க னித்திய முத்தி மத வளர்ச்சிக்காகவே தங்களின் கை ஆயுதமாக உப யோகித்துக் கொள்ளவேண்டும் என்று மன்ருடிக் கெஞ் ஞிக் கேட்டுக்கொள்ளுகிரோம், எங்கள் தவ மேருவே!" என்று பல ஆயிரக்கணக்கான சாலை மாமணிச் சேகர மக்கள் பலரும் பல விதமாகச் சபையில் ஒருங்கே னின்று கண்ணீர் பெருக்கெடுத்தோட னீண்ட னேரம் வணங்கித் தோத்திரம் செய்து ஆரவாரித்துச் சப்தம் ஓயாது எழுப்பியதால் ஆகாயம் கிடு கிடுவென்று அல றிக்கொண்டே யிருந்தது.

அது கண்ணுற்ற ஆண்டவர்கள், தங்கள் ஜீவ சிம்மாசனக் கொலு பீடத்திலிருந்து எழுந்துனின்று

மக்களைப் பார்த்துக் கை யமர்த்தி, "உங்கள் வேண்டு கோளாகிய அன்பென்னும் பெரும்பிடியை நும் இன்று ஒப்புக்கொண்டோம்" என்று ஆசீர்பதிக்கவும், அனந் நாதி தேவர்களின் ஆரவாரம், உத்திரவுக்காக னின்றது. பல ஆயிரக்கணக்கான மக்களும் ஆசீர்பாதத்தைப் பெற்றார்கள்.

தொடர்ந்து ஆண்டவர்கள்:— இந்த உலகத்தி லுள்ள சர்வத்தையும் மனிதன் ஒருவனுக்கென்றே இறைவன் படைத்தான். மனிதன் னித்திய னன்மை அடையவேண்டும் என்ற ஒரு பெருங்குண அழியா மகிழ்ச்சிக் குறிக்கோள் வைத்தே அவ்வளவும் படைக்கப் பெற்றது. எல்லா மனிதர்களும் ஏற்றத்தாழ்வு வித்தியாச மில்லாமல் னித்திய னன்மை அடையவேண்டும் என் பதுவே இறைவனின் பெருங்கருணைப் பேரருள் எண் ணம். ஒருவன் னன்மை அடையவும் மற்றொருவன் தீமை அடையவும் படைக்கப்பெறவில்லை. அந்த னித் திய னன்மை என்ன? தெரிகிறதா? சாவுடைய னேரத் திலே அல்கைத் தேகம் எடுத்து, முடிவில்லாத னெடுங் காலு அவஸ்தைக்குள் னுழையாது, என்றென்றைக் கும் னீங்காத மகிழ்ச்சிகரப் பேரின்பம் அனுபவிக்கின்ற னித்திய தேகம் - மறலி கை தீண்டா வைரமணித் தேகம்- எடுப்பதே, அந்த னித்திய னன்மை. அந்த ஒரு தனித்த னன்மை அடையவே இறைவன் மனுக்குலத்தைப் படைத்தான்.

மனுவாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த னித் திய னன்மையை அடையவேண்டும் என்பதையே எல்லா வேதங்களும் பேசியுள்ளன. சகல வேதங்களின் அடிப்

படை இதுவே. வேதங்களில் ஒன்று உயர்வு மற்றொன்று மட்டம் என்று இருக்குமா? கோபத்தில் ஒரு வேதத்தையும் பிரியத்தில் ஒரு வேதத்தையுமா இறைவன் இறக்கியிருப்பான்? ஒரு சிலர் னன்மை அடையவும் மற்றையோர் திமை அடையவுமா வேதங்கள் இறக்கப்பெற்றிருக்கும்? அப்படி இல்லை. வேதங்கள் அனைத்தும் வந்நது, மேற்சொன்ன மறலி கை தீண்டா தனித்த ஒப்பற்ற பரிசுத்தச் செயலாகிய அந்ந ஒரு காரியத்திற்கே. அவற்றில் மேன்மை தாழ்மை இல்லவே இல்லை.

சைவம் ஆகட்டும், வைஷ்ணவம் ஆகட்டும், சொராஸ்ட்டிர மதம் ஆகட்டும், புத்த மதம் ஆகட்டும், சைன மதம் ஆகட்டும், கிறிஸ்துவ மதம் ஆகட்டும், இஸ்லாமிய மதம் ஆகட்டும், சீக்கிய மதம் ஆகட்டும், எந்நக் கோடி காலத்தில் படைக்கப்பெற்ற எந்ந ஒரு மத மாகட்டும், அது மனுக் குலக்திற்குக் காட்டிய உன்னத வழி, சாவுடைய னேரத்தில் மறலி கை தீண்டா மகிழ்ச்சிகரப் பேரின்ப னித்திய முத்தி சுவர்ணத் திருமேனிப் பிறப்பாகிய அந்ந னன்மையைக் கைபோடுவதுதான். இதைத் திட்டமாக அறிவித்து, செயல் னிரூபணையோடு பழக்கி வருகின்ற இடம், இந்ந னெடும் பிரம்மாண்ட உலகத்தில் இப்போது இதுகாலம் னம்முடைய சாலை எல்லை ஒன்றே ஒன்றுதான் என்று ஊழி பெயர்த்தெறி கோளரி வாட்கை ஆழி வாழ் ஐயர், எங்கள் சாலை ஆண்டவர்கள், ஒரு தனிப் பெருங்கருணை அதிசோபனக் கலானிதி வருஷிப்பாகிய சர்வ மதங்களிலுமுள்ள மெய்வழி வலிமை கொண்டு, இவ்வுலகம் முழுதினுக்கும் தீர்க்கத் தெளிவு பிறங்க அருளிச் செய்கின்றவர்கள் அருளிச்செய்தார்கள்.

ஆண்டவர்கள் அருட்பிரசாதம்:—

"இப்போதிருக்கும் 67 சாதிகளடங்கிய
பல ஆயிரக்கணக்கான எமது மெய்வழிப்
பெருங்குல மக்கள் அனைவரும்
னீடூழி வாழ்வது போலவே, இதனைப் பார்த்துத்
தொடர்ந்துகொள்ளும் உலக மக்கள்
அனைவரும் னீடூழி வாழ்க!"

தீர்க்கதரிசனம்

ஸ்ரீ காகபுசுண்டர்பிரான் ஜீவமந்திரம்

ஞதன்தான் வந்துலாவ சனத்தி னுள்ளே
னன்மைதரும் விந்நையால் அரச ராதி
வேதன்தான் என்றறிந்து போற்றும் போது
விவேகம்காண் கொடுத்தவரை விடாதுரட் சித்த
போதன்தான் அந்நந்ந சமயத் தார்க்கும்
பொருத்தமாய்க் காட்சிதந்து முடிவு தன்னில்
மாதன்தான் கொடுத்தகுலம் சரியா மென்று
மாற்றவும் சோதிபார் முதன்மை யாகும்.

(வால்யம்50. 95 ஆம் பாட்டு)

உண்டுகாண் தேவராதி முனிவ ரெல்லாம்
உலகினில் தெரிந்துகொண்ட மார்க்க மெல்லாம்
பண்டுகாண் எனத்தள்ளிப் புதுமை ஒன்று
பரிபலிக்கும் அக்காலே சிலது விந்நை
தண்டுவதோர் குறிப்பதிலே பளிங்கு மாகத்
தரையதனில் இவன்பார்க்க ஆக்ஷி யாமே
விண்டுரைக்கப் பலபாகம் ஒன்று செய்து
விவரிக்கப் பூர்த்தியதே அடுத்த தும்பார்.

(வால்யம் 69, 23 ஆம் பாட்டு)

சத்திய வேதம், கொரிந்தியர் 1.

"மரணமே உன்கூர் எங்கே?
பாதாளமே உன்ஜெயம் எங்கே?"

(15 ஆம் அதிகாரம் 55 ஆம் வாக்கியம்)

4

மதிப்பிலடங்கா மாணிக்கப் பரிசு

மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம் என்பது, இறுதியில் எமனிடம் சிக்கி மரண அவஸ்தையோ கசப்பு அடையாளத் திட்டு பிணனாற்றமோ இல்லாமல் ஆக்கிப் பிணிமூப்புச் சாக்காடு அணுகாப் பேரின்பம் அனுபவிக்கும் மாருத வயதுடைய நித்திய தேகத்தில் மனிதரைப் புகுத்தாட்டி வைக்கின்ற மெய் மதம்.

இறைவனால் அனுப்பப்பெற்ற அவரவர் மத வேதங்களிலுமுள்ள நிகரற்ற உயிராணிச் செயல் இதுவே. இதை நிரூபணை செய்கின்றவர்களே வரிந்து நின்று கொண்டு எழுதிய எழுத்து இது. குரு

சாலை ஆண்

பூமண்டலமே அழியும் நாள் அடுத்துவிட்டது. அடையாளச் சத்தம் அலறுவது கேட்குது – தெரியுது. தோற்றத்தில் உன்னைப் போலவே நானும் இருக்கும் ஏ... பெரிய உலகமே! மனிதனுக்கு இந்த அனித்திய தூலதேகத்துக்குப் பின், ஜீவ தேக வாழ்வுதான், முடிவு இல்லாத ஊழி ஊழி கால சுவர்க்கபதி வாழ்வு. அதை, கசப்பு திட்டு நாற்றப் பிசாசு உடலாக மாற்றிப் போடாதே என்று உனது முகம் பார்த்துக் கூறுகிறேன். இறைவன் உன்னை, இடையே அவஸ்தையில் அவமானப்பட்டுப் போவதற்காகப் படைக்கவில்லை என்று திட்டவட்டமாக எனக்குத் தெரிந்து பழகி இதை உனக்குச் சொல்லுகின்றேன். இதற்குமேல் யான் ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.

ஞசி வெளியே மூச்சு ஓடிக்கொண்டிருக்கிற மனிதர் எத்திற வல்லபம் படைத்தவராயிருப்பினும் எமனுடைய தண்டனையாகிய மரண அவஸ்தையின் பெலங்கொண்ட கூரினை முறியடித்து மாற்றும் சக்தி அவர்களுக்கு இல்லை- இல்லவே இல்லை, என்பதை மனிதகுலம் தெரிந்து கொள்ளட்டும்.

(சத்தியவேதம்: 1. கொரிந்தியர் 15ஆம் அதிகாரம் 55ஆம் வாக்கியம் பார்ப்பீராஆ)

1971 வருடங்களாக ஒலிவாமலை வைவஸ்ஸுய தவப் பாடுற்றுப் பெற்ற னெடுங்காலதெய்வமுதல் இது என்று கட்டாயமாக னினை. வாசகம் கொஞ்சமாக இருக்குதென்று னினையாதே. செயலோ மகா னிகரற்றது. னிறுத்தி னிறுத்துப் படித்துப் பார்.

சர்வேஸ்வரனுல் ஏற்படுத்தப்பெற்ற மெய்த்தவ ஞான குரு பாரவான்கள் ஞசியின் வெளியே மூச்சு ஓடாத் தவம் உடையவர்கள். அப்படியில்லாமல் கடுதாசிப் படிப்பு பட்டம் பரிசு பெற்றுவரும், தன்னை அறியாப் பொய்க்குரு பிரசங்கிகள் மனிதர்களை எமன்கை ஒப்புவித்து னரகத்தில் தள்ள, செம்மறி ஆட்டுக் கூட்டங்களாக உலகெங்கும் தோன்றிவிட்டார்கள் என்று ஆண் பெண் எல்லோரும் அறிந்துகொள்ளுங்கோ என்று அடடமாரா.

5

ஜீவன் - பஞ்சு இழை ; மயிரிழையைக் காணிலும் சிறியது. எத்தனையோ மடங்கு சிறியது. அந்த இழையிலே ஒரு துளை. அதனுள்ளே ஆவியாக னிற்பது,னுண்

ணியதினும் நுண்ணியதானது ஜீவன். அதனுடைய உசும்புதலாலேயே இந்நத் தேகாதியந்நமும் அசைகிறது. அது ஆத்ம மர்ம ஜலக்கடலின்மேல் இருந்நு கொண்டு சர்வ சக்தியோடு, பிறிதொன்றின் துணையின்றி, தேகாதியந்நத்துக்கும் உற்பனத் தாயாக, உசுப்பி னடத்துவதாக விளங்நுகிறது. பஞ்சு பூதமும் அதனிடத்திலிருந்நு கடன் பெற்றே தேகமாகிய இந்நக் கூட்டைக் கட்டிற்று. அது, மயனத்தில் மயனமாக இருந்நுகொண்டு சர்வத்துக்கும் தாய்க்குடிலாகவும், புராதனகாலம் தொடங்கிச் சர்வத்துக்கும் காரணரூபமாகவும் சர்வ சத்துக்களுக்கும் பெட்டகமாகவும், தொந்நிக் கணபதியாகவும், மணிவயிருகவும் வாய்த்திருந்நு, சகலத்துக்கும் உதவுவதான பெருவயிறுடைய பஞ்சுபூத கணத் தலையரசன் திருத்தலமாகவும் இலங்கி மிளிர்வது.

6

உன் கண்ணுக்கு எட்டியதை எவ்வாறு தகப்பன் உனக்கு உரிமையாக்குகிருனே அவ்வாறே, உன் கண் கொண்டு பார்க்க முடியாத, ஆனல் உன் இதயக் கண் கொண்டு பார்க்கக்கூடிய அழியாத செல்வத்தை உனக்குப் பங்கிட்டுக் கொடுத்து உரிமை யாக்குகிறவர்களே குரு (கு=இருள், ரு=பிரகாசம்). 'இருள் உலகத்திலிருந்நு பிரகாச உலகத்திற்கு ஏற்றி வைப்பவர்கள் குரு' என்று அந்நச் சொல்லுக்குப் பொருள்.

மறைமொழி மாந்நர் பெருமை னிலத்து
னிறைமொழி காட்டி விடும்

என்று சொல்லும்போது, மெய்ஞ்ஞானச் செம்மல் களையே மறைமொழி மாந்நர் என்று வேதம் சொல்லு

கிறது. மற்றவர்கள் உலக மாந்நர். இவர்களுக்கு அந்நப் பெயர் கிடையாது. மறை மொழி மாந்நரைப் பார்க்கிறதுதான் தரிசனை. அவர்களை அல்லாது வேறு எதைப் பார்த்தாலும் அது தரிசனை ஆகாது. பார்ப்பது தரிசனை என்றால் திருடனைத் தரிசித்தேன், வேயாளியைத் தரிசித்தேன் என்னலாமே.

7

"சிவாயனம வென்று சிந்நித் திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை" என்றது, 'சிவாயனம' என்று வாயில் சொல்லிக்கொண் டிருப்பதையா? இல்லை. சிந்நித்து இருப்பது என்றல்லவோ சொல்லி யிருக்கிறது. அனுபவித்து ருசித்த பிற்பாடுதானே சிந்நிக்க வரும். ஆகவே சர்வாங்கமும் தழுவப் பரிசுத்த ஆவியைக் கவர்ந்து சுவைக்க இருப்பதன்றோ சிந்நித் திருப்பது. இந்நத் தவ ஏற்றம், இத் தேக வல்லபமும் அதோடு இத்தேகம் கடந்து நிற்கும், அதாவது புலன் பொறி கடந்து நிற்கும், அழியாச் சுவர்ண தேக வல்லபமும் பெற்று விளங்கும் ஒரு தெய்வ ஆசரியர் அவர்களின் உதவியால்தான் கை கூடும். தேக மில்லாத அந்ந இறைவனை நீ போய் அடைவதாக இருந்நால், உன்னுடைய இந்நக் குறை தேகத்தைக் கொண்டு அதை அடைய முடியுமா? முடியாது. நீ யார்? ஒரு அழி தேகி. உன்னோடு அவ் விறைவன் கூடிப் பழகுவதாக இருந்நால் தேகமற்ற இறை சொரூபத்தின் வல்லபமும் தேகமுடைய பிரானின் வல்லபமும் சேர்ந்ந ஓர் அதி வல்லபர், தீர்க்கர் உனக்கு வாய்க்க வேண்டும். மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டப்படாத அந்ந எல்லைக்கு நீ போக வேண்டுமானால், மனோ வாக்குக் காயம் கடந்ந ஒருவர்

உன்பால் இரக்கப்பட்டு, உன்னைப்போல் ஒரு தேகியாக உன் உலகுக்கு வந்திருக்கவேண்டும். வந்து உன்னைக் கை போட்டு வழிகூட்டி னடத்த வேணும். அதல்லாது வேறு எந்த வழியில் னடப்பவர்களும் மாயை தரும் புத்தியில், வழியில் னடப்பவர்களே ஆவார்கள்.

8

அனுக்கிரகம் என்பது, னினைவிற்கும் கேள்விக்கும் எட்டப்படாதது. ஆனல் னீ அனுக்கிரகிக்க வேணும் என்று கேட்பது எப்படி யிருக்கிறதென்ருல், ஒரு வேஷ்டியை னீட்டிப் பாலை ஊற்றுங்கள் என்று சொன்னது போல இருக்கிறது. இந்நக் கதியில் உலகமே ஆகி விட்டது. னீ, அனுக்கிரகம் என்பதை என்ன னினைத்துக் கொண்டாய்? 'குறைபாடில்லாமல் உன் மனைவி லக்ஷ்மி யாகவும் மகராஜியாகவும் னீடூழி காலம் வாழ்க' என்று சொல்லுவார்களே அது மாதிரியான ஒன்றைத்தான் உனது எண்ணம் னினைத்தது. ஆனல், னிஜமான அனுக்கிரகம் செய்வதென்பது அவ்வளவு சுலபமாக வாயால் சொல்லி விடுவதல்ல.

னிசமாக அனுக்கிரகிப்பாரே அந்த எல்லையை அடைந்தாலல்லது அதன் உண்மைப்பொருள் யாருக்கும் விளங்காது. உன்னைப் பிடித்த சனியனுகிய கிரகத்தை அணு அணு அணுவாகப் பிய்த் தெறிந்து விட்டுக் கோடி சூரியப் பிரகாசப் பூணூலைப் பிரம்ம முடியுடனே தரிப்பிப்பார்களே அதுதான் அனுக்கிரகம். கிரகத்தின் வல்லமை அணுகூட அணுகாமல் சங்கரிப்பார்களே அந்தச் செயலே அனுக்கிரகம். அதைச் செய்பவர்களே அனுக்கிரகன் - குரு.

9

"தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி" என்று ஸ்ரீ மணிவாசகப்பிரான் தங்கள் குருபெருமானைச் சுட்டியுள்ளார். இதனால் ஆகாயத்திலிருந்து தொப்பென்று குதித்தவர், தம் குருபிரான் என்பது பொருளல்ல. தான் போகின்ற மெய்ப்பாதையில் தாய் என்றோ தந்தை என்றோ பாராதவர்கள்; தாய் தந்தை உற்றார் உறவினர் என்ற வித்தியாச மில்லாமல் எல்லோரையும் தன் ஜீவனாகவே கருதுகிற மெய்யான சத்திய சொரூபத்தில் இருப்பவர்கள்; தனது செவ்விய வழியில் தனித்து னின்று ஜீவரக்ஷிப்பு அதிகாரணத்தை னடாத்துபவர்கள்; தான் போகின்ற பாதையில் யாருடைய உதவியையும் தேடாதவர்கள்; அந்நப் பாதையில் அவ்வளவு மூர்க்கமான முனைப்புடையவர்கள்; தான் போகின்ற முழு தத்துவத்தில் தனித்து னின்று சர்வத்தையும் ஜெயித்து ஏறுகிறவர்கள்; எமனச்சமற்ற தனித்த தங்கள் பாதைக்கு எல்லோரையும் திருத்தி அழைத்துச் செல்பவர்கள் என்பதே அதற்குப் பொருள்.

10

மறை மொழி மாந்நராகிய ஒரு தேவ குரு சன்னிதியில் உன் ஜீவன் வேறு உடல் எடுக்கிறது. உன் ஜீவக் குழந்தை யாகிய அந்த முச்சுடர் என்னும் திருக் குழந்தை வனப்பேறி யௌவன மடைகிறது.

இன்னும் அது, அவர்களின் தரிசனை ஊற்றத்திலே யாரையும் சட்டை பண்ணாத வலிமை கொள்ளுகிறது. இவ்வாறு தன் ஜீவன் வனப்படைகிற இலக்குக்கு

வசமாக னிற்கிறவருக்கே தெய்வக் குபேர பூவண காலம் வருகிறது.

11

சாமியார் சன்னியாசி குருக்கள் யோகி என்று திரிகிருனே, அவனிடத்தில் னிறைமொழி இருந்நால் இந்நக் குறைமொழி மாந்நரைக் கண்டதும் வாய் மூடிக் கொண்டு அஞ்ஞுவாஞ? அஞ்ஞுமாட்டான். ஆகவே அவன், குறை மொழியர்களுக் கெல்லாம் கீழான குறை மொழியனே ஆவான். னிஜமாக மறைமொழி மாந்நராக இருந்நால் குறை மொழி மாந்நரைக் கரையேற்ற வல்லவோ வேண்டும்.

12

மனித உடலில் 'ஆத்மா' என்று கூறப்படுவது உண்மையிலேயே உண்டா இல்லையா என்பதைத் தக்க ஆதாரத்துடன் னிரூபிப்பவருக்கு ரூபா 68 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்புள்ள தனது பண்ணையைப் பரிசாக அளிக்கத் தயாரென்று 'ஜேம்ஸ் கிட்' என்பவர் ஒரு 'உயில்' எழுதி வைத்திருப்பதாக அமெரிக்காவில் உள்ள அரிசோஞவிலிருந்து ஒரு செய்தி வந்நதாகவும், அப்படி ஆதார பூர்வமாக யாரும் னிரூபிக்காததால் யாருக்கும் பரிசு அளிக்கப்படாமல், உயிர் உடம்பிலிருந்து பிரிந்து போவதைப் போட்டோ (படம்) பிடித்துக் காட்டவேண்டு மென்று பின்னர் அறிவிக்கப்பட் டிருப்பதாகவும், 4-7-67, 5-7-67 தேதிகளில் செய்திப் பத்திரிகையில் வெளியாயிற்று. இந்நப் பத்திரிகைச் செய்தியைத் தெய்வமவர்களுடைய திருச்சன்னிதானத்தில், 10-7-67ல்

படித்துக்காட்டியபோது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம் --

"உயிர் இருப்பதால்தான் இவனுக்கு எம பயம் இருக்கிறது. ருசி ஆசை, பண ஆசை, மனைவிமக்கள் ஆசை இவைகளுக்கு முடிவு வந்துவிடுமேயென்றுதான் மரணத்திற்குப் பயப்படுகிறான். இன்னும், உயிர் ஓர் ஆவியான பொருள்; அது எப்படி இவன் கண்ணுக்குத் தெரியும்? உயிரோடு இருக்கும்போது, உடற்பளு குறைந்திருக்கிறது. உயிர்போய் விட்டால், உடற்பளு அதிகமாகிறதே, அது ஏன்? இவனுக்குத் தெரியுமா? ஒரு தீபத்தின் சுடர் மேல்நோக்கி எரிகிறது, அது, அதன் சுபாவம்; அது போல ஆவியான உயிர் உடலில் இருக்கும் போது, அது உடலை மேலே தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதால்தான் உடற்பளு குறைந்திருக்கிறது. உயிர் போய்விட்டால் உடலைத் தூக்கிப் பிடிக்கும் பொருள் எதுவும் இல்லையாகையால், உடற்பளு அதிகமாகிறது. இந்த நிரூபணையைவிட இவனுக்குப் போட்டோ பெரிதாயிருக்கிறது" என்று பேரறிவாகர சொரூப ராகிய தெய்வமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

மறுபடியும், 9-9-67 பத்திரிகையில், மேற்படி 'உயிலை' அமுல் நடத்துவது சம்பந்தமான வழக்கு, அமெரிக்காவிலுள்ள அரிசோனாவைச் சேர்ந்த போனிக்ஸ் நகரத்திலுள்ள சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்துள்ள தென்றும், மனிதனுக்கு 'ஆத்மா' என்பது உண்டு என்பதை நிரூபிக்கும் பலவித ஆதாரங்களுடன் கூடிய மனுக்கள் பல, உலகெங்குமிருந்து கோர்ட்டுக்கு வந்தவண்ணமாக இருக்கின்றன என்றும், கோர்ட் நீதிபதி ராபர்ட்

மேயர்ஸ் என்பவர், இந்தக் கேஸில் தீர்ப்புக் கூற, 'தெய்வம் தான் வழிகாட்டவேண்டும்' என்று கூறியிருக்கின்றார் என்றும் வெளிவந்தது. ஆகையால் மறுபடியும் பத்திரிகையில் வந்த செய்தியைத் தெய்வத் திருச்சன்னிதானத்தில் விண்ணப்பிக்கவும், 'தெய்வம் தான் இந்தக் கேஸில் தீர்ப்புக் கூற வழிகாட்ட வேண்டும்' என்ற வாசகம் தெரிய வந்தமையால், அப்படித் தீர்ப்பளிக்கும் பவராகிய அதிகாரம், அந்த ஜட்ஜுக்கே கொடுத்திருக்க, அந்த அதிகாரத்தையும் மதிக்காதபடிக் குத்"தெய்வம்தான் துணை செய்ய வேண்டும்" என்று எழுதியிருப்பதைப் பார்த்து, இப்படிச் சொல்லுகிற தானது ஒரு நிஜமான நீதியான உள்ளம்தான் என்று தெரிந்து இதை எழுத உத்திரவாயிற்று-

"ஒருவன் எதைக் கொடுத்து எதை வாங்குவது என்று அறிய வேண்டும். பொய்ப் பொருளைக் கொடுத்தால் பொய்ப் பொருளைத்தான் வாங்க முடியும். மெய்யாகவே மெய்யைக் கொடுத்தால்தான் மெய்யை வாங்கலாம். நீங்கள் அறிய விரும்புவது முன்னாலும் பின்னாலும் ஒருவரால் திருப்பி ஈடுசெய்ய முடியாத ஒரு அரிய பொருள்.

உயில் எழுதியவர் தன்னிடத்தில் பொய்ப்பொருள் அதிகமாயிருக்க அதையே பெருமையாகக் கொண்டிருந்தமையால், அந்தப் பொய்ப்பொருளைக்கொண்டே மெய்ப் பொருளை வாங்கிவிடலாம், இது தனக்கு இனியொன்றும் பிரயோசனப் படப்போவதில்லை, வீணாகத்தானே போகப் போகிறது, இந்தச் செலவு செய்வது மூலமாகவாவது நன்மை வராதா என்று நினைத்து இந்த உயில்

எழுதியிருக்கிறார் என்று தோன்றுகிறது. ஆனால் அந்த 'மெய்ப் பொருளோ வையகமும் வானகமும் திரட்டித் தந் நாலும் ஈடுபண்ண முடியாதது' என்பதை யாவத்திரா ளும் அறியவேண்டியது.

உடலெடுத்துள்ள ஒவ்வொரு ஜீவனுக்குள் னின்று அதனதன் வேலையைச் செய்துவருவது ஆத்மா. அதன தன் தராதரத்திற்கு ஏற்ப, கொசுவுக்கும் யானைக்கும், வண்ணத்திப் பூச்சிக்கும் ஊர்ந்து செல்லும் அட்டைக்கும் ஆத்மா அமைந்திருக்கிறது. உடல் வளர்க்கும் அளவில் ஆத்மா அவற்றில் தங்கியிருக்கிறது. ஆனல், இந்த மனி தனிடத்தில் இவனுக்கெனத் தனிச் சீதனமாக அமைந்தி ருக்கும் ஜீவாத்மாவுடன் பரமாத்மாவும் இருக்கின்றது. இவர் அறிய விரும்புவது எந்த ஆத்மாவை? ஆத்மா என்னப் பெற்றது இந்நப் பொய்த்தூலம் கடந்த ஜீவ தேகத்திற்கு அப்பாலுள்ள காரண தேகத்திலுள்ள பொருள். அதை இந்தத் தூல தேகத்தவர்களுக்கு அறி விக்கிற தென்றால், இவர்களை முதலில் ஜீவ தேகத்தில் கொண்டுபோய் னிறுத்தி, "அதோ பார், னீ தேடும் ஆத்மா. இந்த ஜீவ தேகம் கடந்த காரண தேகத்தில் இருக்கிறது" என்று காட்டலாம். இந்தத் தேவ எல்லையில் அப்படித்தான் காட்டப்பெறுகிறது.

ஒருவன் தன் ஜீவ தேகத்தை அறிந்த பிறகுதான் அவனுக்கு ஆத்ம னிலையை அறிவிக்க முடியும். இவன் உள்ளுக்குள் னின்று னிலவிக் கொண்டிருக்கின்ற அறு சுவைகளை அனுபவிக்கிற எல்லையும், உறக்கம் வரும் எல்லையும், கனவு காணுகின்ற எல்லையும் அறிவிக்க அறிந்து, ஞானக்கண் பிரகாசிக்கப்பெற்ற பிறகுதான் அதை அறிவிக்க முடியும்.

மாட்டுக்கு இருக்கிற ஆத்மா ஒரு னேரத்தில் னம் மிடமும் இருந்நது. அதாவது னும் குழந்னைநயாக இருந்நபோது அது இருந்நது. குழவிமுதல் ஒவ் வொரு பருவமாகிய பிறவியிலும் மாறி மாறி விளேந்து முதிர்வேறி ஆருவது பிறவிக்கு வந்ந பிறகுதான், ஆத்ம னிலேயை அறியும் சக்தி னமக்கு வருகிறது. னமது அகமுகக் கருவிகள் முழு வல்லமை பெற்ற பிறகுதான் அதை அறிவித்தால் அறிய முடியும்.

இந்நத் தூல தேகத்திலுள்ளவர்கள் பரமாத்மா வைக் காண முடியாது. ஆனுல் பரமாத்மா தூலமெடுத்து வந்து இத் தூலத்திற்கு அப்பால் உள்ள ஜீவாத்மாவை அறிவிக்க அறிய முடியும். பரமாத்மாவிற்கு மூச்சு ஆடாது. மூச்சு ஆடிக் கொண்டிருப்பது ஜீவாத்மா. ஜீவாத்மாவின் மூச்சு அடங்குவது பரமாத்மாவைச் சார்ந்ந னிலேயில். இதற்கு ஜீவாத்மா தன் உடல் பொருள் ஆவியைப் பரமாத்மாவிற்குத் தத்தம் செய்து, அது தன்னுடைய உடல் என்று ஆன பிறகுதான் ஆகும்.

இத் தூலத்தை னீக்கி ஜீவ தேகத்தில் ஏற்றி ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் பரமாத்ம சொரூபர் அறிவிப்பார்கள். இந்ந உடலில் இருந்துகொண்டே ஜீவதேகம் கடந்ந காரண தேகத்திற்குள் போக்குவரத் துள்ளவர்களே இந்நச் செயலேச் செய்ய லாயக்குள்ள வர்கள்.

வார்த்தையளவில் னிற்பது தூலதேகம். னினேவு என்னப்பெற்றது ஜீவதேகம். ஆத்மா என்னப்பெற்றது காரண தேகம். தூலதேகத்திலே சதா குடியிருந்து கொண்டு அதன் உட்பொருள்களே தெரியாதிருக்கிற

வர்களுக்கு ஜீவ தேகத்திற்கு அப்பாலிருக்கிற பிரதான மான காரண தேக வல்லபக்கருவியை எப்படி அறிவிப் பது? இந்நத் தூல தேகத்தில் உள்ளவர்கள், தங்கள் ஜீவ தேகமே தெரியாமல் இருந்துகொண்டு ஆத்மாவை அறிவிக்கிறது என்பதும் அதைப்பற்றித் தீர்ப்பளிக் கிறேன் என்பதும் அவலமாகத்தான் இருக்கும்.

தெரியாதவர்கள் தீர்ப்புக் கூற வருவதானது கடல் தாண்டாமலேயே இந்தியாவில் இருந்துகொண்டு லண் டன் வந்துவிட்டேன் என்று சொல்வது போலவும், பிறந்து ஒரு வயதான குழந்தை பத்தாவது வயதில் இன்னமாதிரி இருந்தேன் என்று சொல்வது போலவும், காலமெல்லாம் காட்டில் மாடு மேய்த்துக்கொண் டிருப் பவன் அரசனுடைய அந்தப்புரத்து லக்ஷணத்தை அறுதியிட்டுக் கூறுவது போலவும் இருக்கும்.

தூல தேகத்திலுள்ளவர்களுக்குச் செவிப்புலனில் அறிவிக்கிறதென்றால், ஜீவதேகத்திலுள்ள இருட்கோள மாயிருக்கும் "அசைவற்ற நினைவை" அசைவுக்குக் கொண்டுவரும் பொருளே ஆத்மா. அதன் வல்லப லட் சணம் கூறவென்றால் நூறு நூற்றைம்பது ஆண்டு காலம் ஒருவன் உயிரோடிருந்தாலும் அவன் உடலை நாற்றத்திற்கு விடாமல் பிடித்து வைத்திருக்கிறது, காரணதேகத்தில் நின்று நிலவும் அந்த ஆத்மாதான். ஜீவ ஆவியின் ஜலமானது வெளியாகும்போது உன் மூச்சு 64 அங்குலம் வெளியே பாய்கிறது. உன் ஜீவனு டைய முழு அளவு அதுதான். அது நேரம் உன் ஜீவன் பிரியாமல் இருபத்திநாலு அங்குலம் உள்ளே இழுத்து வைப்பது காரண தேகத்தின் வல்லபம் என்று இப்படி

எடுத்துக்காட்டி அறிவது கிரமமாம். அந்த ஆத்மா இந்தத் தூலத்தை விட்டுப் பிரிந்த உடனே, ஜீவகசப்பு இந்திரிய ஜலமானது வெளியாகவும் இவன் உடலில் பிணநாற்றம் உண்டாகி விடுகிறது. அதைத் தன் வசப் படுத்தி யுள்ளவர்களாகிய இந்த ஜீவபூமிக்கு (சாலையம் பதி) அதிபதி அவர்கள், மனிதனுக்கு வரும் சாவுடைய னேரத்தில் அந்தக் கசப்பு இந்திரிய ஜலம் வெளியாகா மல், சாவாவர எல்லைக்கு ஏற்றும் பிரத்தியக்ஷச் செயல் பெற்று விளங்குகின்றவர்கள். உலகத்தில் உள்ள எல்லா வேதங்களுடைய உட்கருத்தும் இதுவே. இங்கே அறு பத்தேழு சாதிகள் ஒன்று திரண்டு ஒரு குடும்பமாக இருக் கும் பல ஆயிரக்கணக்கான மக்களும் இதற்கு சாக்ஷி.

ஆத்மாவைப்பற்றிப் பேசுகிறதற்கு, தனக்குத் தோணுமலேயே ஞசியில் மூச்சானது ஓடிக்கொண்டிருக் கிற பாவ தேகத்திலுள்ள இந்த மனிதன் எம்மாத்திரம்!

அனியாய மரணத்தைக் கிழித்தெறியும் மெய்மத உற்பன்னரும், இந்த ஜீவ பூமியை உண்டு பண்ணி யவர்களுமாகிய ஸ்ரீ மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் உத்திரவுக்கு இது அனுப்பப் பெறுகிறது.

13

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரின் திருக் குறளைப் பற்றிப் பேசாதவர்கள் உண்டா? படித்தவர்கள் அத்தனை பேரும் என்ன பொடகு பொடகியிருந்நால் னம் தமிழில் உள்ள அதை உலகத்திலே உள்ள பல மொழி களிலும் எழுதிப் படிக்கவரும்? ஒரு நூலைப் பாடுவதை விட மொழிபெயர்ப்பது மிகவும் கடினம். அப்படியிருந்தும்

இந்நூல், எத்தனையோ மொழிகளிலும் எழுதப்பெற்றிருக்கிறதென்றால், இதைப் படிப்பதன் பிரயோசனத்தைப்பற்றி எவ்வளவு பொடகாப் பொடகியிருக்க வேண்டும்? பேசுகிறவர்களில் யாரேனும் மெய்யான பலனைப் பெற்று பேசுகிறார்கள்? இல்லை. பின்னே, திருக்குறளிலே என்னத்தை அறிந்து இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்? திருக்குறளில் உள்ள மொத்தம் 1330 பாட்டுக்களிலே, வேணுமென்றால் 1329 பாட்டுக்களைத் தள்ளிவிடுவோம். ஒரே ஒரு குறளுக்குத் திட்டமான, சரியான செயலுடைய அர்த்தம் சொல்லட்டுமே! சொல்லமுடியாது. தாங்கள் சொல்லுகிற அர்த்தம் தங்கள் மனதுக்கே முழு திருப்தியாயில்லை என்று நன்றாகத் தெரியும். ஆனாலும் பிறர் மதிக்கவேண்டும் என்று பேசுகிறார்கள்; அல்லது அதனால் ஏதாவது நன்மை, புண்ணியம் வந்துவிடும் என்று நம்புகிறார்கள்.

தெய்வநாட்டுக் கோமானாகிய திருவள்ளுவரவர்களின் நூலை இவர்கள் படிக்கிறார்களே, அதில் இவர்கள் என்ன காணுவார்கள்? அந்த ஞானக் கண்டாளத்தில், அறிவாகாரக் கிடாரத்தில், மதினிதி அண்டாளத்தில் இவர்கள் எந்த நன்மையைக் கண்டு அடையப் போகிறார்கள்? அதற்கான சாவி இவர்களிடத்தில் ஏது? உதாரணமாக,

> "என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ன்னன்றி கொன்ற மகற்கு"

என்ற பாட்டிலே 'என்னன்றி' என்று சொல்லியுள்ளார்களே அது, என்ன என்று படித்துகிடித்துப் பட்டம் பெற்றவரைக் கேட்டால், 'என்னன்றி' என்றால் என்

னன்றிதான் என்பார். 'செய்னன்றி' என்ருல் செய்த னன்றி என்பார். அப்போ செய்யாத னன்றி ஒன்று உண்டா என்ருல், திருதிரு என்று விழிப்பார். இந்த அர்த்தம் யாருக்குத் தெரியாது? இதனுல் விளங்காதது என்ன விளங்கிவிட்டது? விடியாதது என்ன விடிந்து விட்டது?

என்னன்றி என்பதிலேயே எல்லா னன்றியும் அடங்கி விட்டது. பிறகு, செய்னன்றி என்று வேறே சொல்லியிருக்குதே அது என்ன? அது இந்த உலகத் திலே உள்ள எல்லா னன்றிகளுக்கும் அப்பாலுள்ளது. எவருடைய னினைவுக்கும் எட்டாதது. அது மனிதர்கள் யாராலும் செய்ய முடியாதது. உலக னன்றிகளேயே மனிதர்களால் செய்யமுடியாதே. உணவு உடை முதலிய எல்லா னன்றிகளையும் இறைவனல்லவா படைத்துக் கொடுத்திருக்கிருன்? மனிதனுல் ஏதாவது ஒன்று உண் டாக்க முடியுமா? இறைவன் இவர்கள் னுக்கிலே அறு சுவைகளை வைத்துப் படைத்ததற்காக, வெளியே அண் டத்திலேயும் அதற்கு வேண்டியதெல்லாம் படைத்தான். இவர்கள் கண்ணிலே வண்ணங்களைப் படைத்ததற் காக அண்டத்திலேயும் வண்ணங்களைப் படைத்தான். இவர்கள் காதிலே இனிமையும் பயங்கரமும் வைத்துப் படைத்ததற்காக அண்டத்திலேயும் அதற்கேற்ற தாழ்ந்த உரத்த சப்தங்களைப் படைத்தான். படைக் காதிருந்நால் உங்களுக்கென்ன கேட்கவா தெரியும்? ஆகவே, னன்றி என்ருல் உங்களைக் கேட்காமலேயே உங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் படைத்து ரட்சிக்கிற செயல். இதை ஏன் னீங்கள் னினைத்துப் பார்க்கிறதுகூட இல்லை. உங்கள் வீட்டில் னீங்கள்

வாங்கி வைக்காத பொருள் ஏதாவது இருந்நால், இது ஏது யார் வாங்கிவைத் திருப்பார்கள் என்று நினைத் துப் பார்ப்பீர்களல்லவா?

இறைவன் உங்களுக்குச் செய்திருக்கிற நன்றியை உங்கள் தாய் செய்திருப்பாளா? உங்கள் தந்தை செய்திருப்பானு? உங்கள் பெண்டுபிள்ளைகள் செய்திருப்பார்களா? அதெல்லாங்கூட வேண்டாம். உங்கள் கிட்டவே யிருக்கிற உங்கள் கை செய்திருக்குமா? உங்கள் கண் செய்திருக்குமா? உங்கள் காது செய்திருக்குமா? இதையே நினைக்காத இவர்கள் எல்லா நன்றியையும் கொன்றவர்களல்லாமல் வேறு என்ன? அப்படி எல்லா நன்றியையும் கொன்றவர்களுக்கும் உய்வு செய்கின்ற ஒரு ஒப்பற்ற நன்றி இருக்கிறதே அதுதான் செய் நன்றி.

அதை ஒருவன் எங்கேபோய்ப் பெற முடியும்? பணம் போட்டு வாங்கக்கூடியதா? இல்லை. அது மனித சக்திக்கு எட்டாதது. மனித சக்திக்கு மேலான சக்தி படைத்த ஒருவர், அதாவது இறைவனின் முத்திரை பெற்ற மெய்ஞ்ஞான சற்குருபிரான் ஒருவர்தான் அதைச் செய்ய முடியும். அவர்கள் தயவால்தான் ஒருவன் அதைப் பெறமுடியும். அதை என்றும் மறவாமல் அதில் முழுமன ஒட்டுதல் வைத்து இறுதிவரை நிலை நிற்பானேயாகில், இறைவன் தந்த எல்லா நன்றிகளையும் இவன் மறந்த குற்றமும் மன்னிக்கப்பெறும். மேற் கொண்டு எக்கோடி காலத்தும் அழியாத பெருநலம் கொழிக்கும் பேரின்பப் பெருவாழ்வும் இவனுக்குத் தரப் பெறும். இவனுடைய குற்றத்தை ஒழித்துப் புண்ணி

யத்தைச் செய்கின்ற இந்த நன்றிக்குத்தான் செய்ந்நன்றி என்று பெயர்.

இதையே இன்னொரு பாடலில் 'செய்யாமல் செய்த உதவி' என்றும், அதற்கு 'வையகத்தையும் வானகத்தையும் ஈடாகக் கொடுக்க முடியாது' என்றும் சொல்லியிருக்கிறார். அப்பேர்க்கொத்த உதவி, அது எது? ஒருவனுக்குக் கண் பார்க்கிற உதவி செய்கிறது. காது கேட்கிற உதவி செய்கிறது. நாக்கு சுவைக்கிற உதவி செய்கிறது. கையொரு உதவி, காலொரு உதவி, இப்படியே ஒவ்வொரு அவயவமும் ஒவ்வொரு உதவியைச் செய்கிறது. ஆகவே, இவன், உதவியிலே வைத்து முழு வல்லபம் உடையவன். இவனுடைய முழு வல்லபத்தையுங்கொண்டு இவனாலே செய்யமுடியாத உதவி ஒன்று உண்டு. அதுதான் செய்யாமல் செய்த உதவி. இவனுடைய உதவி வல்லபத்தினாலே செய்கிற உதவியானது எவரும் செய்யக்கூடிய உதவியாயிருந்தால் அது வையகமும் வானகமும் ஈடுபண்ண முடியாத உதவியாக இருக்குமா? வையகமும் வானகமுமே போதாது என்றால் இவன் கையிலே என்ன இருக்குது ஈடு செய்ய?

வையகமும் வானகமும் அளவு கடந்த பெரிதானவை என்றாலும் அனித்தியம்தானே? அனித்தியத்திலே வைத்து வையகத்தையும் வானகத்தையும் விடப் பெரியது எதுவுமில்லை. எல்லா அனித்தியமும் அவற்றிலே அடக்கம். மனித உதவிகளாகிய அனித்தியம், வையகமும் வானகமுமாகிய அனித்தியத்தின்முன் எம்மாத்திரம்? அந்த வையகமும் வானகமுமே நித்தியத்தின் முன் எம்மாத்திரம்? ஆகவே வையகமும்

வானகமும் ஈடுபண்ண முடியாதது னித்தியம் ஒன்று தான். அந்த னித்தியத்தை மனிதன் தலையில் ஏற்றி வைப்பதே, செய்யாமல் செய்த உதவி.

இப்படியே ஆயிரக்கணக்கில் இந்த னித்திய பெரிய செயலைப் பற்றித் திருவள்ளுவர் பெருமான் பாடியிருக்கிறார்கள். மனிதன் னினைவுக்கு இந்தச் செயல் எட்டவே எட்டாது. அப்படியிருக்க, இவர்கள் மொழி பெயர்த்துக் கொடுப்பதை வெளினாட்டான் படித்தால் அவன் அதில் என்ன சுவை காண்பான்? அவனுக்கு என்ன அதிசயம் பிறக்கும்? கொஞ்சு னேக்குக் கிளறிப் பார்ப்பான்; பிறகு, 'இதிலே என்ன இருக்குது, சாதாரண விஷயந்தானே; னம் எழுதுகிற னாவல் போலே இதுவும் ஒன்றுதான்' என்று தூக்கி யெறிந்து விட்டுப் போவான். னித்தியத்தைச் சிறிதும் அறியாமல் மலை மலையாகப் பேசியும் பயன் என்ன? னித்தியத்தைத் தந்தருளும் வல்லவரின் வாக்கிலே ஒரு திவலையே யென்றாலும் அதிலிருந்து வீசக்கூடிய அறிவாகார அதிசய வீச்சு இவன் பேச்சில் இருக்குமா?

14

சார்வரி ஆண்டு புரட்டாசி மாதம் 26 ஆம் தேதி (11—10—60) மைசூர் அரசர் அவர்கள் சந்திப்பில் வெளியாகிய திருவாக்கு –

இந்த உலக வாழ்க்கையானது ஒரு னித்தியம் போலக் காணப்படுகிறது. எண்ணிப் பார்த்தால் அப்படி அல்ல. மகா பயங்கரமான, அதிலும் மாறாத கவலையான வாழ்க்கை இது. இறைவன் இதற்காக

மனிதனைப் படைக்கவில்லை. கவலையான வாழ்க்கைக்கு அல்ல னும் வந்நது. அந்நப் பயங்கரத்தை மாற்றவும், மகா பார தூரமான காலம் கடந்ந, கோடி சூரியப் பிரகாச னித்திய வாழ்வில் னிலைப்பிக்கவும் ஆன ஒரு பொருள் இருக்கிறது. அந்ந வாழ்வு பெறத்தான் இந்ந மனித தூலம் வந்நது.

அந்ந னித்திய வாழ்வைப் பெற, இறைவனை னேருக்கு னேர் சந்நித்து அவ் வாழ்க்கையைக் கை போட, அதற்கான ஒரு வழி உண்டு. அதை அறியா மையால், இவ் வுலக வாழ்க்கையே சதம் எனக் கருதி அவலமாக னுழைகிறார்கள். இவர்கள் னுழைகிற கடவுக்குப் பெயர் சாவு. பின் எண்ணிறந்ந காலம், னரகூ அவஸ்தைத் துன்பமே. அதில் னுழையும் வழி யைத்தான் சாவு என்பது. அங்கே மீட்பு இல்லாமல் அவஸ்தையுற்றுக் கலங்குகிறார்கள். அன் னரகத்தின் னுழைவாயிலே, கடவே சாவு ஆம்.

உலகத்தில் எல்லோருக்கும் சாவுதான் சந்நிக்கி றது என்று எண்ணுகிறார்கள். அதிலே இரண்டு விதம் உண்டு. ஒன்று னித்திய வைர உடல் எடுத்துச் சாயுச் சிய பதவி அடைகிறது. இன்னொன்று மகாக் கோரமான உடலெடுத்துப் பயங்கரமான னரக அவஸ்தை யுறு கிறது. இவ் விரண்டிற்கும் அம் மரண தருவாயில் பிரத்தியக்ஷமான அடையாளம் திட்டமாக உண்டு. அதை வைத்து இவர் இன்னாரென்று அறியலாம். அச் சாயுச்சியமானது குருபிரானவர்களின் செயல்.

அத்தகைய இச் செயல் இந்ந உலகப் படிப்பு கொண்டோ அல்லது எத்திற எவ்வகை ஆராய்ச்சி யூகம்

கொண்டோ செய்ய முடியாது; காணவும் முடியாது அதைக் கைபோடுகிற செயல் உண்மையான குருபிரானவர்களிடம்தான் இருக்கிறது.

மனிதன் பிறந்நது சாகிறதற்கே அல்ல. அவனது அறியாமை என்னும் செயலால்தான் அந்த னெடிய துக்கத்தில் னுழைகிகிருன்.

இது இப்படியாக இருக்கிறது என்று அறியாமையால் - அறிவிக்காமையால்தான், ஜனங்கள் பயங்கரமான சாவுக்குள் னுழைகிருர்கள். னுழைகிறபோது கவலைப்படுகிறது, எல்லோருமே சேர்ந்நு துக்கப்படுகிறது, சாவுக்கு அழுகிறது, அது னியாயமே தான். ஏன் என்ருல், முடிவில்லாத காலம் தங்கி மீட்பேயின்றி அவஸ்தைப் படப்போகிருர்கள் அல்லவா? அதனுல் சாவுக்கு எல்லோரும் கலங்கி அழுகிறது சரி. பிசாசாகப் போகிறதனுல், அது ஞாயமேதான்.

ஆனுல், அப்படி அவஸ்தையுறப் போகாமல் சுவர்ண உடம்பெடுத்து னித்திய வாழ்க்கையை அடைய அறிவு என்ற மாணிக்கம் மனிதனுக்குத் தரப்பெற்றுள்ளது. அந்ந அறிவு மாணிக்கத்தைப் பெற்று னித்திய வாழ்வை அடையாவிட்டால், னிச்சயம் பிசாசுத் தூலம் வந்நேவிடும்.

மனிதன் ஒரு அற்ப கால வயசு உடையவன் தான் என்ருல், இவனுக்கு ஏன் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான எண்ணம், யோசனை, செயல், பொருள் சேகரித்தல், கட்டிடம் கட்டுதல், புகழ் தேடுதல் முதலானவைகள் இருக்கின்றன. ஆகவே, இவனுக்குள் னித்திய வாழ்வுக்

குரிய ஒரு வல்லப வஸ்து இருக்கிறது என்று தெரிகிறது அல்லவா? அதனுல்தான் இவனுக்குப் பெர்மனெண்ட் ஆன செயல் செய்ய எண்ணம் தூண்டுகிறது. இவன் பெர்மனெண்டாக உள்ளவன்தான். இவனைத்தவிர யானை முதல் எறும்புகடை எண்பத்துனன்கு னூருயிரம் ஜீவ ராசிகள் ஆனலும், இம்மாதிரியான அறிவு அவைகளுக்கு வருவதில்லை. மனிதனுக்கு மட்டும் இவ்வெண்ணம் வரு கிறது என்ருல், இவன் எல்லாவற்றிற்கும் அரசு ஆக வந்தவன் என்று தெரிகிறதல்லவா ?

மனுசன் - மனுவேதான் ஈசன். மனுவாய் வந்து னீசர்கள் ஆகுவதும் உண்டு; ஈசனுக வினங்குவதும் உண்டு. இதனை அறிவிக்கத்தான் பொதுப்பட மனுசன் என்று சொன்னது. இவன் தன் செயலால் மனு+ஈசன் ஆகவோ, அல்லது மனு+னீசன் ஆகவோ,எப்படி ஆனு லும் ஆகலாம்.

இருதயத்தில்தான் ஈசன் இருப்பிடம். மனிதனு டைய இருதயத்திலன்றி ஈசன் வேறு எங்கும் வெளியாவ தில்லை என்று உண்மை வேதங்கள் கூறுகின்றன. செயலும் அவ்வாறே இருக்க, ஜனங்கள் இதனை இப் படியென்று அறியாமல் பேதகமான குருக்களைப் பெரி யோர்களென்று எண்ணி அடைந்து, சாமான்ய மடை யர்களினும் கேடாக அதனைத் தவறவேவிட்டுப் பெரும் பொருளை இழந்து அவஸ்தை யுறுகிருர்கள். எல்லா வேதங்களும் இறைவன் இருப்பிடம் மக்கள் இருதயமே யென்று ஒரே இடத்தையே -அந்த ஒரே னிலையையே பேசுகிறது. சிவமதம் ஈசன் இருப்பிடம் இருதயம் என்று கூறுகிறது. வைணவ மதமும் இதயகமலவாசன் என்று

போற்றுகின்றது. கிறிஸ்துவ மதமோ, இருதயத்தில் பிரகாசம் போட்டுக் காட்டுகிறது. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அரபி தேசத்தில் வந்த முகம்மது னபி அவர்களின் ஜட்ஜ்மெண்ட்டு ஆன அவ் வேதத்திலோ எனில், அதிலும் அப்படித்தான்; கல்பு வெளிச்சமாகுதல் என்று குறிக்கப்பெற்றிருக்கிறது. கல்பு என்றால் இருதயம். ஆகவே உலக மதங்கள் எல்லாம் சர்வேஸ்வரன் இருப்பிடம் இருதயமே என்று கூறுகின்றன. ஆனதினால் அந்த சர்வேஸ்வரனை இருதயப் பிரகாசமாகச் சந்திப்பது எப்போது?

[என்று திருக்கரத்தினால் சமிக்ஞைகாட்டி வினவ, மகராஜா வியப்புற்று நோக்கி, நன்று நன்று, என்று கூறவும், தொடர்ந்து ஆண்டவர்கள்]

அவ்வாறு காணவைப்பதே பிரம்மவித்தை என்பது. அங்ஙனம் சந்திக்க வைப்பவர்களே உண்மையான தேவ குருபிரான் ஆவார்கள். அவர்கள், தங்கள் அதிமகோன்னதத் தவச் செருக்கைக்கொண்டு அங்ஙனம் சந்திக்க வைக்கிறார்கள். அது, மேலே உள்ள அந்நரங்க உலகமாக, அப்புறத்து உலகமாக இருக்கிறது. அதற்குத்தான் உபதேசம் என்று பெயர். இது ஒரு தேசம். இதற்கு அடுத்த தேசம். அதுதான் உபதேசம் என்பது. காதிலே ஏதோ ஒரு மந்திரம் சொல்லிக் கேட்க வைத்து, உருப்போடச் செய்வது அல்ல உபதேசம். நித்திய உலகத்தைச் சந்திக்க வைக்கிறதே உபதேசம். இது உலக அறிவுக்கு எட்டாதது. இதுவே மெய்.

"இருதயம் ஒரு மாமிசத்துண்டு. தாமரை மொக்கு போல் இருக்கிறது" என்றுதான் உலகத்தவர்களின் திர்

மானம். இவர்கள் அறிவுக்கு அது எட்டாது. அதுவே பிரம்மப் பிரகாசமாக மாற்றப் பெறுகிறது. அப்படிப் பிரம்மப் பிரகாசமாக மாற்றப் பெருதவர்கள் எல்லாரும் புனர்ஜென்ம மென்னும் மறுபிறப்பு அடையாதவர்களே. அங்ஙனம் மறுபிறப்பு அடைந்நவர்கள்தான் னித்தியராக ஆகி விளங்நுகிருர்கள். இந்ந உலகத்தவர்களின் அறிவுக்கு எட்டிக் காணமுடியாதது அது. அந்ந உலகத்தவர்கள் அறிவது அது. இந்ந உலகத்தவர்கள் அதனை எடைபோட்டுச் சொல்வதானது, மதிக்க முடியாத மாணிக்கமாக இருக்கின்ற அதனைச் சாம்பற் கட்டியைக் காட்டி வர்ணிக்கிறது போல அவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது. ஆதலால், இவ்வாறு னித்திய வாழ்விற்குரிய அதனை, னேராக இப்போதே பெற்றுக்கொள்கிறதுதான் உபதேசம். அதற்கு அறிவும், சக்தியும், ஆசானும் வேண்டும். இந்நத் தூல சக்தியும் வைராக்கியமும் இல்லாதபோது அதனை அடைய முடியாது. இதனை எமது 60 வருடகால அனுபவத்தைக் கொண்டு விளம்புகிறோம்.

[தங்களுக்கு இப்போது வயது? மகராஜா - ஒற்பத்திரண்டு என்று கூற, ஆண்டவர்கள் — னல்லது. இதற்கான பருவம்.]

இதயப் பிரகாசமாக ஈசனைக் காண்கின்ற 'பிரம்ம வித்தை' என்ற பெரிய செயலை, எவ்வித சாஸ்திர ஆராய்ச்சி கொண்டும், எத்தகைய அறிஞர்களாலும் செய்யமுடியாது. இப் பிரம்ம வித்தையைப் பழகித் தேர்ந்நவர்கள் னூல் எழுதினர்கள்; அறியாதவர்களும் எழுதினர்கள். ஒருவரே, அறியாத காலத்தில் எழுதிய

னூலுக்கும், அறிந்தபின் எழுதிய னூலுக்கும் னிரம்ப வித்தியாசம் உண்டு. இது எம் அனுபவச் செயலைக் கொண்டு பேசுகிறேமே ஒழிய படிப்பைக்கொண்டு பேசவில்லை.

தான், இறைவனை - ஈசனை – தன் இதய தாமரையில் தரிசனை பண்ணுமல், தன் அறிவு ஆராய்ச்சியைக் கொண்டு எழுதின எவ்வளவு னூல்கள் ஆனுலும் அவை அழிவுக்குப் போகுமே தவிர, அவை ஒருவனை னித்தியத் துவம் பெற வைக்க மாட்டா.

இது தூல தேகம். இரண்டாவது சூக்கும தேகம். மூன்ருவது காரணம். னன்காவது மகா காரணம். மெய்க் குருபிரான் மூலமாக இவற்றைத் தூலமுள்ள போதே அறிய வேண்டும். தங்கள் தவோபல வேகத்தால் அக் குருபிரானவர்கள், தங்களை அடைந்த வர்களை ஒவ்வொரு தேகத்துக்கும் ஏற்றி ஏற்றிப் பழக்கு கிருர்கள். ஆனல் இது, உலகக் காரியங்களைப்போல பகிரங்கமாக இல்லை. அந்தரங்கத்து அறவணை ரகசியமாக இருக்கிறது. தாயும் பிள்ளையுமாகப் பழகுகிற பான்மையில் வளருகிறது. இவ்வாருக னன்கு தேகங்களிலும் ஏறி ஏறிப் படிப்படியாகச் சந்தித்துப் பழகுகிற னிஜச் செயலே பிரம்மவித்தை என்பது. குருபிரான் மூலமாக ஒருவன் இதனைப் பெறவில்லை என்ருல், பிசாசு என்ற தேகம் அவனுக்குத் தானே வந்து சந்திக்கும். பிறகு எண்ணற்ற முடிவில்லாத கால அவஸ்தையாக ஆகுமே! இந்த அறிவாகாரம் தரவே, அதனைப் பெறவே மனிதனுக்கு இந்த ரூபதேகமும் வயதும் தந்தது. அப்படிப் பெற்ற மக்களை னித்திய வாழ்வில் ஏற்றி

மகிழவைக்க அல்லவா பெரியோர்களும் வந்நார்கள். இதற்காக அல்லாது வேறு எதற்காகவும் இவனைப் படைக்கவில்லை. இச் செயலைப் பெறுவதுதான் இவ னுக்கு னியதி. னும் பேசியதெல்லாம் எமது செயலே தவிர வெறும் சொல்லல்ல. படிப்பைக்கொண்டு சொல் லக் கூடியதும் அல்ல. அந்ந மெய்ப்பொருளைச் சந்நிக் கிற போது, எந்நச் சாதியாக இருந்நாலும் எல்லோரும் ஒரே சாதிதான் என்று தெரியும். இரண்டு சாதி என்பது இல்லவே இல்லை. னித்திய சக்தியைப் பெற்றவர்கள் எல் லாம் ஒரே சாதியாக இருப்பார்கள். இந்த உலகத்த வரால் இது இப்படிச் செய்ய முடியாது. எமக்கும் முடி யாதா என்றால் எமது சபைக்குள் 67 சாதிகள் ஒன்று கச் சேர்ந்நிருக்கின்றன. இப்படி எங்கும் ஆக மாட்டாது. எல்லாரும் 'ஒத்துப்போங்க' என்று வெறும் வாயினால் சொன்னதினாலே யாரும் ஒத்துப்போக மாட்டார்கள். பணத்தால், அதிகாரத்தால் அப்படிச் செய்ய முடி யாது. சொல்லுகிறவன் முதலில் ஒத்துப்போனானா? இல்லை. ஏதோ உலகப் பிரயோசனம் கருதி அப்படி ஒருனேரம் ஒத்ததாக னடிப்பதே தவிர, வாஸ்தவமாக யாரும் எங்கும் அப்படி யில்லை. சமத்துவம் என்பது வெறும் பேச்சே. எங்கோ ஆகியிருக்கிற தென்றால், ஏதோ பயங்கரம் அதிகாரம் இதனால் ஏதாவது கொஞ்ச னேரம் இருக்கும். னிஜமான சமத்துவம், உயிர் ஒட்டிய ரகசிய அறையிலே இருக்கிறது; அதுதான் சர்வ உலக சமரசம். அதனை இறைவன் மனிதனுக் குள்ளே வைத்துப் படைத்திருக்கிறான். அந்நத் தேவ சக்தி வாய்த்தவுடனே எல்லாம் சுத்தத்தில் ஆகிறது. அவ மான இகழ்ச்சி வராமல், மாரண அவஸ்தை யில்லாமல்

இப்படி அமையும் லட்சிய சமரச சமத்துவம் இதுதான்.

"எமதர்ம ராஜா" என்று சொல்லுகிற வார்த்தையை னும் கேட்டிருப்போம். கோரக் கொடூர முகமாக உள்ள எமராஜாவைச் சாந்த சைதன்ய முகத் தர்ம ராஜாவாக ஆக்கிக் கொண்டு, அந்த முகத்தில் விழிக்கும் படியாக ஆக்கி வைப்பதே எம்முடைய செயல். இன்று 67 சாதிகளுக்கும் இப்படி ஆக்கிவைத் திருக்கிறது.

னமக்கு உறக்கம் வருகிறது; பயம் உண்டாகிறது; சந்தோஷம் பொங்குகிறது; இவை எல்லாம் னமக்குள்ளே யிருந்துதான் உண்டாகின்றன. விழிப்பு, மயக்கம், தைரியம், கோபம், சாந்தம், இரக்கம், னமக்குள் எந்த எந்த எல்லைகளில் இருந்து உண்டாகின்றன? மனிதர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவை இவை. படித்து முடித்தேன், பட்டம் வாங்கினேன் என்கிறார்களே அவர்களை, இவை தமக்குள் எங்கெங்கே என்றால் பதில் சொல்லத் தெரியுமா? தெரியாது. தெரியாத இது கல்வியா? இவர்கள் கற்றவர்களா? இல்லை இல்லை. தன் வீட்டிற்குள் உள்ள பொருளை, காலமெல்லாம் தான் தெரிந்துகொள்ளாமலும், தேடாமலும் இருந்துவிட்டுக் கடைசியில் களவுபோகக் கொடுத்தவனைப்போலே இவனது வயசும் போய் சாவும் வந்து விடுகிறது. தனக்குள் சாவுப் பாதை எங்கே? சாயுச்சிய பாதை எங்கே? அவ்வை தங்கும்தலம் எது எது என்று இப்போதே காண வேண்டாமா? இவை எல்லாம் அறியத்தானே சர்வேஸ்வரன் இந்த அருமையான தூலத்தையும் அறிவையும் தந்தது? இது வேதத் தீர்ப்பு.

பிரம்ம வித்தை என்பது பிரம்மாண்டமான கோடி சூர்யப் பிரகாசத் தோற்றத்துடனே வாரிவீசுகிறது அல்

லவா? அதைத் தன்னுள் பெறுவதற்கு லாயக்குடைய வனக இருப்பதனல்தான் மனிதன் உயர்ந்நவன் மேலானவன் என்பது. இவனைக்காண உயர்ந்நது வேறு எதுவும் இல்லை. இந்ந ஏழுசாணுக்குள் இவனைப் படைத்தது அந்நப் பிரம்மப் பிரகாசத்தை இவனுக்குள் லபிக்க வைக்கிறதற்காகத்தான். ஆனல், எத்தனை காலமானலும் இது தன் முயற்சியாலே அடைய முடியாது. இதற்கு ஒரு சத்திய னித்திய ஆசானவர்கள் துணை வேண்டும். அவர்கள் ஒருவரைத்தவிர பலகோடி ஆசான்கள் இருந்நாலும் இந்நப் பிரயோஜனம் அவர்களால் இல்லை. பாடு எல்லாம் வியர்த்தமாகி அழிவிலே இழுத்து விடுகிற குருபரவர்கள்தான் எக்கச் சக்கமாக இருக்கிருர்கள்; இந்ந னித்திய இச்சையுடைய அனேகம் பேர்களையும் அவர்கள் கெடுத்தே விட்டார்கள்.

இந்நப் பிரம்ம வித்தை தனக்குத் தெரியாதிருந்தும், தெரிந்ந பெரியோர்களைப் போல மக்களிடையே வேடம் பூண்டு அடுத்து இருந்து கெடுத்தே விட்டார்கள். பிரம்ம வித்தை படிப்பைக் கொண்டு னடப்பதா? இது ஏட்டில் எழுதியதைக் கொண்டு செய்வதாக இல்லை. அறியாதவர்களின் பொய் னூல்களைப் படிப்பதனல் உண்மையான குருபிரானைச் சந்திக்க முடியாது. மெய்யான சற்குருபிரானைச் சந்நித்தால் தனது பொய்மலக் குப்பைகள் பொசுங்கப்பெறும்வரை அவர்களுடன் இருக்க வேண்டும் அவ்வாறு பொய் யனைத்தையும் பொசுக்கி மெய்யிலேற்றும் வாக்கு வரம் உடையவர் ஒருவரே. அவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். உலகில் மெய்க்குருவானவர் ஒருவரேதான். இந்ந னித்தியச் செயலைப் பெறுவது இவனுடைய பாட்

டிலே இல்லை. இவன் முயற்சியால் ஆகிறது என்றால், அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போல ஆகும். இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று அறியாமல் உலக மக்கள் பொய்க் குருமார்களை னிசமெனவே னம்பி வீணாகப் போகிறார்கள். இவை எல்லாம் ஒரு மெய்ஞ்ஞான சபைக்குள் னுழைந்நதும் தெரியவரும்.

எம்முடைய வார்த்தை செயல் உடையது; அவர்களுடைய வார்த்தைகள் செயலுக்கே வராதவை. எம்முடைய வார்த்தை ஆண் ஆக்குகிறது; அவர்களுடைய வார்த்தை வீண் ஆக்குகிறது. இந்த வித்தியாசம் தெரியாமையால் உலக மக்களை வெறும்வேடதாரிகள் பெருங்னூட்டமாகக் கூடிக் கெடுத்தே விட்டார்கள். அதனால் உலகமானது இதோ ஒரு ஆபத்தைச் சந்திக்கப்போகிறது.

இங்கு னும் காணவும் பேசவும் அரசு வந்நது மிகவும் னல்லது. னும் இந்நக் காலத்தில் இன்ன இடத்தில் இன்ன செயலைச் செய்வோம் என்று வெளியான தீர்க்க தரிசனங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இந்நப் பிரம்ம வித்தையானது ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு பூமியில் ஒருவரால் கொண்டுவரப்பெறும். அவர்களைச் சார்ந்நு ஒருசில மக்கள்தான் அதைப் பெறுவார்கள்.

ஒருவர் ஒரு அரசாங்கத் தொழிலில் அமர்ந்து வேலை பார்க்கிறார் - அதற்காக அவர் படித்த படிப்பு, கட்டிடம், பெற்றபட்டம், சன்னதம், அதைக் கொடுத்த

பெரிய மனிதர் எல்லாம் இருக்கின்றன. இவை இல்லாமல் யாரும் எந்த உத்தியோகத்திலும் அமர்வதில்லை. அதுபோல இந்தப் பிரம்ம வித்தை என்கிற பெரிய செயல் செய்பவர்களுக்கும் சன்னத முத்திரை உண்டு. அது அவர்கள் தவோபல ஏற்றத்தினுல் விளைவது. இன்னிலவுலகிற்கு இரண்டு மூன்று சன்னத முத்திரை பெற்றவர்களே வந்தார்கள். இப்போது எல்லாச் சன்னதங்களையும் பெற்றவர்கள் வந்துள்ளார்கள். மனிதர்களுக்கென, இறைவனுல் அனுப்பப்பெற்ற சன்னத அலங்கார முத்திரைகளுடன் அவர்கள் வந்துள்ளார்கள். இந்தத் தேவ சன்னதமோ உலக சன்னதங்கள்போல் அழிவதில்லை; ஏனெனில், எல்லாக் காலங்களிலுமுள்ள அழிவில்லாத நித்திய ஏக பராபரனது திருச்சன்னிதானத்தில் பெற்றுவந்தது இது.

இந்த உடலானது அழியும். ஆனல், நித்தியப் பொருளான உயிர் அழிவதில்லை. நித்திய உடல் ஒன்றை அந்த உயிர் எடுத்துக்கொள்ளுகிறது. இந்தப் பிரம்மவித்தையின் பெரிய ரகசியங்களைத் தெரியத்தான், தெரிவிக்கத்தான் கோவில்கள் உண்டாயின. உண்மையான ஒரு தேவ புருஷனைச் சந்திக்க வைக்கத்தான் எல்லா ஏற்பாடுகளும் உண்டாயின. தெய்வீக புருஷர்கள் தூலத்திலே வருகிறுர்கள். அக்காலத்திலே அவர்களை அடைந்து, அதிரகசிய பிரம்மவித்தையின் பெரிய செயலுக்குத் தலைப்படுங்கள் என்று வேதங்களும், உபநிஷத்துக்களும், தீர்க்கதரிசனங்களும் அறைகூவி அழைக்கின்றன. அவ்வாறு வந்த பெரியோர்கள் கையகத்தில்தான் எல்லா ஆசீர்பாதங்களும் அடங்கியிருக்கும்.

எமனுடைய கொடூர கோர முகத்திலிருந்து தப்புவிக்கின்ற சக்தியை அவர்கள் தங்களைச் சார்ந்தவர்களுக்குத் தந்து விடுகிறார்கள். அப்போது ஜீவ உலகம் என்ற மூச்சு ஓடாது, அப்படியே அமைந்து விடுகிறது. இதை யாராலும் செய்ய முடியாது. அந்த ஜீவசக்தி யார் கையிலும் இல்லை. இதுதான் ஜீவப் பிரயோசனம். இது வாயினால் சொல்லிவிட்டுப் போகிறதல்ல. இதோ இங்கே செய்துகாட்ட நிற்பது.

உலகில் எத்தகைய சாஸ்திர விற்பன்ன பண்டித பிரசங்க கனபாடிகளாக இருந்தாலும், ஆச்சாரியாளாக இருந்தாலும் இந்த மூச்சை மடக்கிக் கொடுக்க, ஓர் அளவிலே நிறுத்தி அமைக்க முடியாது. தாங்கள் இறைவனிடம் பெற்ற பத்தினித்தனத்து நிஜ சன்னத முத்திராங்கச் செல்வச் சிறப்பின் வல்லபத்தினால் மக்களிடத்தில் அதைப் பிரயோகிக்கிறார்கள். இது அகிம்சை என்ற சத்திய நெறிக்குள் புகுந்த மக்களுக்குத்தான்; மற்றவர்களுக் கில்லை. அது எப்படிப்போல எனின், தனது செல்வச் சிறப்பு, வாழ்வு வளங்கள் எல்லாம் புருஷன், தன் மனைவி அனுபவிக்கத் தருவானே தவிர, பரஸ்திரி அனுபவிக்க விடுவதில்லை. அதுபோல, இச் சத்திய நெறிக் கட்டுப்பாட்டினுள் தன் இச்சையாக நுழைந்த ஜெயசீலர்களுக்குத்தான் இது. மற்றை ஏனைய பாவிகளுக்கு இது இல்லை.

15

உலகத்தில் கல்யாணம் இல்லாமலிருந்தால்தான் ஞானம் வரும் என்று எண்ணுகிறார்களே! ஏன்? அப்போது, மகாவிஷ்ணு அதாவது சர்வக்ஞ கண்ணபிரான்

அவர்கள் திருமணக் கோலமாகத்தானே இருந்நார்கள். அர்ச்சுனனுக்கு உபதேசம் வழங்கினர்கள். ஞானத்தை அடைவதற்குக், கல்யாணம் கூடாதென்ருல் ஞான தாதா வான கண்ணபிரானவர்களை இவர்கள் இகழ்கிருர்களா? அறியாமையினுல் அப்படி எண்ணுகிருர்கள். இகபோக சம்பத்துடனே கூடிய மெய் விளைவு சிவபோகச் செல்வக் குபேரர்கள் இருக்கக் கூடாதா? னிஜமான ஞானம் என் ருல் அதை எது வந்து தடுக்கும்? எமனும் கண்டு னடுங் குகிற மெய்ஞ்ஞானத்தின் முன்னிலேயில் எது வந்து குறுக்கிடும்? னிஜமான ஞானமென்ருல் அப்படித்தானி ருக்கும்! மனைவி மக்கள், தேசாதிபத்தியம், புகழ், ஊண், உறக்கம் முதலிய யாவற்றையும் துறந்நாலும் ஒரு மெய்க் குருபிரான் இல்லை என்ருல் இந்ந மெய்ஞ்ஞானம் கிட்டாது. ஒரு பத்தினித்தனத்துச் செயலுடைய தேவ குருபிரானவர்கள் வாய்த்தால், தேசாதிபத்தியம், மனைவி மக்கள், சம்பத்து, உலகப் புகழ்ச்சி எது இருந்நாலும் இந்ந மெய்ஞ்ஞானத்தை வந்து தடுக்காது. இது எமது அனுபவம்.

16

உலகத்தில் கொலேஞன், புலேஞன், சத்தியன், அசத்தியன் எல்லோரும் ஒரே ரூபத்தில்தான் இருக் கிருர்கள். பரிசுத்தவான்களும் அதே ரூபத்தில்தான் வருகிருர்கள். ஆகவே அவர்களை எப்படி, எதனுல் காண் பது? ரூபத்தைக் கொண்டா? இல்லை. அவர்களுடைய செயலைக் கொண்டுதான் அறிதல் வேண்டும்.

பொய்க்குப் பொய், கோளுக்குக் கோள், திருட்டுக் குப் படுதிருட்டு, வஞ்ஞகத்துக்கு வஞ்ஞகம், எதார்த்தத்

துக்கு எதார்த்தம், இப்படித்தான் அறிவுடையோர்கள் செய்யும் ஆண்மைகள் இருக்கும். அவர்கள் பயந்து கொண்டிருக்க மாட்டார்கள். யாவருக்கும் ஆண்மை பிறங்ங வைக்கிற அவர்கள் ஏன் எதுக்குப் பயப்பட வேண்டும்? யுத்த காலத்திலே ஸ்ரீ கண்ணபிரான் அவர்களுக்கு முன்னே னிமிர்ந்நதே அது எந்நனினைவு? அது யாருக்குப் பயப்படும்? அப்படித்தான் இப்போதும்.

17

ஞமோ ஒரு கிழவர். னம்மிடம் வருகிறவர்களோ வாலிபர்கள்; அவர்களோடு, அவர்கள் எண்ணத்துக் கெல்லாம் எடை சரியாக னின்று, அவர்களுக்குச் சரி ஜோடியாகி அமர்ந்து மேலும் மேலும் அறிவாகாரம் வழங்ஙுகிற எமக்கு ரெஸ்டு (ஓய்வு) ஏது? அதுதான் ரெஸ்டு. ஒரு அரசுக்கு இகபோக ஆக்ஞா சக்கரம் இந்நத் தூலத்தளவில் எப்படிச் செல்லுகிறதோ அது போலவே, இந்நத் தூலம்கடந்ந அந்ந ஜீவதேக உலகத்தில் அவர்களுடைய பத்தினித்தன வாக்கானது செல்லுகிறது. அவ்வாறு ஜீவ உலகத்தில் செல்லுகிற வாக்கு வாள் ஆண்மை உடையவர்களாகவே அவர்கள் இருப்பார்கள். அதுதான் தேவ சக்தி என்பது. உலகோர் அறிந்திருப்பது தூல சக்தி. ஜீவலோகம் விடிந்நால் தான் தேவ சக்தி தெரிய வரும்

18

உலகீரே! ஆ எமது உடலொத்த பிறவிகளாகிய மாந்நரே! இன்றளவில் னீங்ஙள் எம்மை ஞெக்கிப் பார்க்கின்றீர்களே, அதல்ல; னீங்ஙள் னினொக்கின்றீர்

களே, அந்த அளவும் அல்ல; அதற்கெல்லாம் அதிக மேம்பாடானது. ஏன்? னீங்கள் னினைத்து, பார்த்து, னடப்பது அனைத்தும், இறுதியில் உங்களைத் துக்க துயரத்திலேயே கொண்டுபோய் அழுத்தி முழுகடித்து விடுகின்ற ஓர் வியாபாரமாக இருக்கிறது. அது துக்க வியாபாரம் என்று னீங்கள் உணர்ந்தீர்களுமில்லை. னும் உங்களை எண்ணுவதும் பார்ப்பதும் பற்றி னீங்கள் னினைத்துக்கொண்டு இருப்பீர்களே அதுவும் அல்ல. அதனை னீங்கள் உணரவும் இல்லை.

உங்கள் பார்வையின் வியாபாரமும், உங்கள் கேள்வியின் வியாபாரமும், உங்கள் னுகருதலின் வியாபாரமும், உங்கள் சுவையின் வியாபாரமும், உங்கள் உணர்ச்சியின் வியாபாரமும், உங்கள் மனத்தின் வியாபாரமும், உங்கள் ஆராய்ச்சியின் வியாபாரமும், இப்படி எல்லா வகையாகிய உங்கள் வியாபார மளிகையில் தனித்தனி ஒவ்வொன்றிலும், அதிகமான வியாபாரம் னடத்திக்கொண்டு வருகின்றீர்கள். ஆனால் உங்கள் வியாபார மளிகை ஒன்றிலேனும் லாபம் கிடையாது. லாபம் கிடைக்காவிட்டாலும் போகுது; முதலாவது தேரும் என்றாலும் தைரியமாக இருக்கலாம். அப்படி இல்லாமல் முதலும் அடியோடு போய், மேலே கடன் தலைக்கொள்ளாமல் ஏறி, பெரும் கவலைக்கு இடமான னஷ்டம் கட்டி ஏறிக்கொண்டே வருகிறது. உங்கள் வியாபாரத்தை ஐந்தொகை போட்டுப் பார்த்தால், அதில் வந்துகொண்டிருக்கும் னஷ்டத்தினால், பின்னால் னீங்கள் ஓடி ஒளிகிறதும், வாரண்டு விரட்டிக்கொண்டு வந்து ஒரே பிடியாய்ப் பிடித்து, உங்களை னீங்கா னரக ஜெயிலில் தள்ளுவதும் தெரியும். அப்படி ஐந்தொகை போடத்

தெரியவில்லை என்று மலைக்காதீர்கள். சாலையில் ஐந் நொகைக் கணக்கர் ஒருவரை வைத்திருக்கிறோம். அங்கே வந்து னஷ்டவாளிக ளாகாமல் பெரிய லாபகர மான தனம் சம்பாதித்துக் கோடீஸ்பர ராகலாம். இது இங்ஙனம் சத்தியம்.

19

தேவ ரகசியத்தை எப்போதும் உன் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிரு. அனேகர் அப்படியில்லாமல் பாவச் செயலில் அழுந்தி, பாவம் அதிகரித்துக் கஷ்டப் படுகிறார்கள். இது வரைக்கும் செய்ததற்கு, ஆண்டவ ரவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். முன்வந்த ஜீவன் முத்தர்களுக்கு இழைத்த கொடுமையில் விளைந்த சாபம் மனித அறிவில் ஒரு திரையை உண்டாக்குகிறது. அந்தச் சாபம் மனித னின் ஜீவனில் பற்றிக்கொள்ளுகிறது. அப்பேர்க்கொத்த சாபத்தை உடல் எடுத்து வந்துள்ள ஒரு ஜீவன் முத்தர் தான் னிவர்த்திக்க வேண்டும்.

20

உலகத்தில் மக்களின் மனோ வாக்குக் காயங்க ளுக்கு எட்டப்படாத வல்லபம் ஒன்று உண்டெனக் கூறு வது மெய். அதிவல்லப துல்லப பிரம்ம வித்தை என் பதுவே அது. அதன் சிறப்பினை எல்லா வேதங்களும் அவ் வேதங்களின் ரகசியங்களாகிய வேதாந்தங்களும் கூறிக்கொண்டு இருக்கின்றன. மக்கள் எல்லோரும் அதைப் படித்துக் கேட்டுச் சம்மதித்துப் பேசிக்கொண்டு மட்டும் அலைகின்றார்களே யல்லாது அதனைச் சந்தித்து எட்ட முடியவில்லை. அதற்கு ஆன ஆசையுமில்லை. அது எட்ட முடியாததாயிருப்பது ஏனெனில், மனுக்க

ளின் மனதுக்கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஒன்றை எட்டிக் கைகொண்டிருப்பவரும், வாக்குகளுக் கெல்லாம் எட்டவே முடியாத ஒன்றை எட்டிக் கைகொண்டிருப்ப வரும், காயங்களுக் கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஓர் காயத்தை எட்டிப் பெற்றுக்கொண்டிருப்பவரு மாகிய இம் மும்மூர்த்திகரமும் ஒருங்கு திரண்டு ஓர் மானிட ரூபகரமாக உள்ள ஒருவரைக் குருவாகப் பெருத தோஷத்தினல்தான் என்று நிச்சயமாக உணருங்கள்.

21

தேவர் யார்? தேவ உலகத்தின் ரகசியத்தைத் தெரிந்து கொண்டவர்கள். தன் அறிவைக்கொண்டு தானுகவா தெரிந்துகொண்டார்கள்? இல்லை – தானுகத் தெரிந்து கொள்ள முடியாது. ஆச்சாரிய வடிவம் தாங்கி வந்திருக்கும் தேவாதி தேவரின் திருக் கருணையால்தான் அதைப் பெற்ருர்கள்.

22

குதிரை வெகு அழகாக இருக்கிறது, மயில் அழ காக இருக்கிறது, பால் பசு அழகாக இருக்கிறது என் றெல்லாம் சொல்லுகிரேும். ஆனல் பத்தாயிரம் லட்சுமி கரமாகிய மயிலினங்களையோ அல்லது பத்தாயிரம் மிரு கங்களையோ கூட்டி வைத்துப் பத்தாயிரக் கணக்கான சொற்களைச் சொன்னல் அவைகளின் காதில் ஏறுமா? ஏருது. அது போலவே னன்மை பிறங்கும் வார்த்தை கள்' தேவரகசிய வார்த்தைகள், மூலமந்திர வார்த்தை கள் கோடி கோடியாகப் பேசி வருகிரேமே – அவை போய் இவன் உள்ளத்தில் படிந்து னன்மை பயக்க வில்லை என்ருல், மனித ரூபத்தில் இருந்நாலும் அந்த ஜந்துக்களில் ஒன்ருகவேதான் இவன் இருக்கவேண்டும்.

மிருகங்ஙள் கேட்டுப் பிரயோசனப்படாமல் போவது சரி. மனித உருவத்தோடு கூடிய பேய், பிசாசு, நாய், பன்றி முதலியன இருக்கின்றன என வேதம் சொல்லுகிறது. அது இந்நச் செயலை வைத்துத்தான் என்று இப்பத் தெரிகிறது.

23

திருநாள்—நமக்கு விடிந்த நாட்களெல்லாம் உலகத்தவர் களுக்கும் விடிந்தன. ஆனால் அவர்களுக்குத் துக்கம், துயரம், கவலைதான் விடிந்தன.

இனி ஒரு நாள் அதாவது மனிதனைத் தேவனாக் கிய ஓர் இரவு நமக்குப் பிறப்பிக்கப்பெற்றது. அந்த இரவில் வேதங்ஙளெல்லாம் விரிக்கப்பெற்றது. அந்நாள் வேத சூரியன் உதித்தெழுந்த நாள்; வேதாந்த ரகசியங் ஙளை வெளியாக்கி நின்ற நாள்; முன்பின் இல்லாத நாள்; அஞ்ஞானக் கிழங்ஙை வேரோடு எடுத்து எறிந்து விட்டு மெய்ஞ்ஞான விருட்சத்தை நம் உள்ளத்தில் ஊன்றி வளர்வித்த நாள்; என்றென்றைக்கும் மகிழ்ச் சியே பிறங்ஙும் நாள்.

அந்த நாள் நமக்குப் படைக்கப் பெற்றது. அதன் நீட்சியை நாம் அறிவோம்; பிறர் அறியார். அதன் துலக்கத்தை வேறெவரும் அடையவில்லை.

அந்தத் தேவ இரவில் நாம் புகுத்தப்படாவிட்டால், நாம் மெய்ஞ்ஞானிகளாக, ஜீவன் முத்தர்களாக, பிற வியின் கடல் கடந்தவர்களாக ஆகியிருக்க மாட்டோம். ஆவிடை யென்னும் தேவயோனியின் வழியாக அந்த லிங்கத்தில் பிறந்தவர்கள் நாம்.

சர்வ அண்டங்களும், சர்வ புவனங்களும், சர்வ ஞட்களும், அந்த ஞளுக்குள்ளேயே அடங்கி யிருக்கின்றன.

னம்மிடை ஒரு தேவன் பிறக்கப் போகின்ருன் என்று தேவர்களெல்லாம் பேசிக்கொண்ட ஞளாகும் அது. அன்று வேதங்களெல்லாம் னம்மைப் பற்றியே பேசின. முப்பத்து முக்கோடி தேவர்களும் ஞற்பத்தெண்ணுயிரம் ரிஷீஸ்வரர்களும் னம்மைச் சந்தித்துப் பேசிய ஞள் அது.

அந்நத் திருஞள் எப்பொழுதும் மாறப்போவதில்லே. இன்று பேசுவதும், னேற்றுப் பேசியதும், இனி வருவ னெல்லாம் பேசுவதும், அதனுள்ளேயே அடக்கம். அதன் உயர்வு, னீட்சிக்கு எல்லே காணவே முடியாது.

திருஞள், திருஞள் என்று வாயில் சொல்லிக்கொண்டு லேலத்துல் கதிர், சிவராத்திரி, வைகுந்த ஏகாதசி என்று பேர் வைத்துக்கொண்டு அன்ஞட்களில் கண் விழிக்கிருர்கள்; பட்டினி கிடக்கிருர்கள் – பலனுண்டோ? இல்லே; பாவங்களேயே திரட்டித் தலேயில் சுமத்திக்கொள்ளுகிருர்கள். துக்கத்திற் குள்ளேயே மேலும் மேலும் னுழைகிருர்கள். அங்ஙனம் செய்து, தேவர்கள் தூஷிக்கக் கூடிய இரவாக அதை ஆக்கிக்கொள்ளுகிருர்கள்.

இந்த இரண்டு வித திருஞளேயும் முடிவு செய்பவர்கள், செய்ய அருகதை உடையவர்கள் யார்? னமது மெய்வழிச் சபையில் கட்டப்பெற்று வாழ்கின்ற தேவர்

களாகிய நம் தான். அந்தகார இருளிருப்பாகிய தன் உலகத்தில் அரிய சூரியன் உதயமான திருநாளைப் பேச யோக்கியதை யுடையவர்கள் நம்தான்.

24

"மவுத்தாகிய சாவு" னம்தலைமேலே காத்துக் கொண்டே யிருக்கிறது. அதை னம் வீரம் தடுக்குமா? பொருள் தடுக்குமா? உற்றார் தடுப்பாரா? பிராந்து எடுத்துச் செல்லும் குஞ்ஞுபோல் விழிக்கும் அந்தக் காலம் வரும். அவ்வாறு எமன்கையில் பறக்கப் பறக்க விழிக்கவா நம் பிறந்தோம்?

சாயுங்காலம் ஆறு மணிக்கெல்லாம் இருட்டு வரப் போகிறதென்று நம் ஒரு விளக்கைத் தேடுகிறோம். சாவாகிய ஒரு பெரும் இருட்டு வரப்போகின்றதே. அதை ஒருவரும் எண்ணிப் பார்க்கிறார்களில்லையே!

ஒருவன் தனக்குத்தானே உதவி தேடிக்கொள்ள வேண்டும். தன் தன் கையில் ஔடதம் வேண்டும். மனைவி கை னன்றாக இருந்நால் னமக்குப் பிரயோஜனமா? மனைவி மக்கள் முதலிய இவர்களெல்லாம் னமக்குத் துணை இல்லை. ஆகவே எவர் வந்நும் உதவமுடியாத அந்த ஆபத்துக் காலத்தில் எமனுடைய அந்தச் சந்நிப்பு னேரத்தில் உதவக் கூடிய ஓர் சொந்தக்காரரை, ஓர் னேசரை அடைந்நு, இன்றே அவரை னம்மவ ராக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறோம். எந்த ஒரு அறிவும், ஆயுதமும் எட்டித் தீண்டப்படாத அந்த மகா மகா அருந்நலத்தில் வந்நு உதவுபவரை னேசித்துக் கொள்ளவேண்டு மென்கிறோம்.

25

நீ எவ்வளவு பணக்காரனுக இருந்நாலும் ஒரு அரைக்கால் படிக்குமேல் சாப்பிட்டு விடுவாயா? முடியாதே! ஆகவே இறைவனுடைய சொத்துக்குக் காவற் காரனுகத்தான் நீ இருக்கிருய். உன்னிடம் எமன் வாதையைக் கடக்கக் கூடிய ஒரு வலிமை இருக்கிறதா? உலகத்தைக் கட்டி ஆளுகிறேன் என்று சொல்லிப் பயந்து சாகிருய். சிரஞ்ஜீவிப் பட்டம் வகிப்பதற்காக வந்த நீ அதை மறந்து வாழ்கிருய்.

26

உலகத்தில் கண்ணுலே பார்த்ததை மெய் என்றும், பாராததைப் பொய் என்றும், காதாலே கேட்டதை மெய் என்றும், கேளாததைச் சொன்னுல் பொய் என்றும் சொல்வது சரியா? பார்ப்போம்.

மெய்ச்சாமியார் என்று பட்டம் பெற்ற ஒருவர், உலகத்தில் பொய் சொல்ல வேண்டியிருக்கிறதென்று அஞ்ஞி, ஊருக்கு அப்பால் ஒரு குடிசை கட்டிக்கொண்டு இருந்நார். ஒருனுள் மாலே சில பெண்கள் அவ்வழியாகப் பக்கத்து ஊருக்குப் போய்க் கொண்டிருந்நார்கள். இருட்டும் சமயம்; 5, 6 திருடர்கள் கத்தி, கம்புகளுடன் பின் தொடர்ந்து வருவதைத் தெரிந்துகொண்ட அப் பெண்கள், ரஸ்தாவை விட்டுக் குறுக்கே இறங்கி, மெய்ச் சாமியாரின் குடிசைக்குப் பின் ஓர் ஆலமரத்தின் புதரில் ஒளிந்து கொண்டார்கள். திருடர்களும் துரத்திக் கொண்டு வந்து பெண்கள் மறைந்துவிட்டபடியால், மெய்ச்சாமியாரை விசாரித்தார்கள். வழக்கம்போல்

அவர் உண்மையைச் சொல்லிவிட்டார். அத் திருடர்களால் அப் பெண்கள் இம்சிக்கப்பட்டு கைகள் பிடுங்கப்பட்டதோடு அவர்களில் ஒருத்தி இறந்தும் போனாள். போலீஸார் விசாரணையில் சாமியாரும் உதவியாய் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். அவர் சொன்னது மெய் என்றுதானே உலகம் ஒத்துக் கொள்ளுகிறது. அது சரியா?

பாவம், துயரம், கொலை உண்டாக்கிய அச்செயல் எப்படி மெய்யாகும்? மெய் இதுதான் என்று தடிப்பேறி இருக்கிறது. எல்லாச் செயல்களிலும் எல்லாக் காரியங்களிலும் உலகத்தார் நினைக்கும் மெய் தீங்கே விளைவிக்கிறது. ஆனால் மெய் மேம்பாடு தரக்கூடியது அன்றோ? மெய்யையும் பொய்யையும் எப்படிப் பிரிப்பது? உலக மக்களுக்கு மகா சிக்கலாகத் தோன்றுகிற இந்த மெய்ப்படிப்பை மெய்க்கல்வியை எம் மக்கள் படித்திருக்கிறார்கள்.

27

வைரம் கோமேதகம் புஷ்பராகம் முத்து பவளம் இவற்றை விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் ஞான ரத்தினம், ஜீவரத்தினம், சிரோரத்தினம் இவற்றை வாங்கக் கிரயம் ஏது? அப்படியே விலைக்கு வந்தாலும் அது அசல் ஞானமணி அல்ல. இச் சாலையில் அந்த ஞானமணி நிறை பொக்கிஷம் திறந்து வைக்கப்பெற்று நன்மனத்தவர் எல்லோரும் வாரிக்கொண்டு செல்ல விடப்பெற்று இருக்கிறது. ஆனால், அதை நிரப்புவதற்கான மனமாகிய பாத்திரம் சாணி, குப்பை நிரப்பப்பெற் றிருக்கிறது. அவற்றை நீக்கி உன் மனமா

கிய பாத்திரத்தைச் சுத்திகரிக்கப் பிரம்மரந்நிர தந்நிரம் ஒன்று எம் கையில் இருக்கிறது.

28

உங்கள் பழைய படிப்பு அவ்வளவையும் மாற்ற முடியுமா? மாற்றுவதாயின் எவ்வளவு காலம் வேண்டும். அதற்கான வயதைக் கொடுத்து மாற்றி, அதையும் ஒரு இரவிலேயே புகுத்தி, சர்வ வேதங்களையும் கற்பித்து விடுவதென்றால் அது எப்பேர்க்கொத்த அரும் பெரும் செயலாக இருக்கும். இவ்வாறான யுகங்கோடி கால வாழ்க்கையில் உன்னை யேற்றவே நாம் வந்திருக்கிறோம். அதைப் பெறுதற்குரிய அதிர்ஷ்டசாலி நீ தான் என்று உன்னைக் கூப்பிடுகிறோம்.

29

ஒரு தாசில்தார் வேலை பண்ண, ஒரு டாக்டர் வேலை பண்ண இந்த அழி உடல் போதும். ஆனால், தேவத் திருச்சன்னிதிக்கு ஏற எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாத வைர உடல் ஒன்று வேண்டும். அது உன் கேசாதி பாதம் வரை நிறைந்து இருக்கிறது. அதற்குச் சூக்கும உடல் என்றும், விஸ்வபரூ உடல் என்றும் பெயர். அது எந்த அக்கினியாலும் தகிக்கப் படாதது; எந்த ஜலத்தாலும் கரைக்கப்படாதது; அதற்கு விசர்வை இல்லை; புழுப்பூச்சி போய் ஒட்டாது; என்றும் தேவத் திருமணம் வீசுவது.

தேவனாட்டிற்குச் செல்லும் அந்த உடலைப் பிரிப்பது, பிறகு இந்த அழி உடலில் சேர்ப்பது ஆகிய

செயலை ஒரு குருநாதர் சன்னிதியில் பழகவேண்டும். நமது திருமறை அனைத்தும், வேதாந்தம் அனைத்தும் நமது அனுபவம் அனைத்தும் இதைத்தான் குறிப்பிடுகின்றன. இந்தச் செயலுக்குப் பிரம்ம வித்தை என்று பெயர். மனித உடல் எடுத்த பிரயோஜனம், இதை உணர்ந்துகொள்வதே யாகும். உன்னுடைய உடலில் இருக்கும் இந்தப் பிரம்மாண்டமான சூக்கும தேகத்தை வீயே பிரித்துப் பக்குவப்படுத்திப் பழகா விட்டால், கடுவாயாகிய எமன் கையில் சிக்குவாய். அவன் குரங்கு கையில் பூமாலை கிடைத்ததுபோல் பிய்த்துப் பிய்த்து எறிவான். அப்பொழுது நரகம் தான் உனக்குக் கதி.

30

இறைவனை அடைய எல்லோருக்கும் ஆசைதான். ஆதி சுருதிகளின்படி வைத்துப் பார்க்கும்போது, அந்த இறைவன் மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டப் படாத அதை—வரம்பு கடந்த அந்த ஸ்தானத்தை—அந்த வல்லபத்தை மக்கள் ஐந்தறிவு கொண்டு எட்ட முடியுமா? சப்தம் ஒரு எல்லை அளவுதான் கேட்கிறது. கண் ஒரு எல்லை அளவுதான் பார்க்கிறது. மூக்கு ஒரு எல்லைஅளவு தான் நுகருகிறது. வாய் ருசித்த அளவு தான். தேகம் ஸ்பரிசித்த அளவுதான். இந்த ஐந்து அறிவுகளுக்கு உள்ளே பிரட்டிப் பிரட்டிப் பார்த்தால் என்ன பிரயோசனம்? இறைவனை எட்ட முடியுமா? எட்டவே முடியாது. ஆனால் அவனை எட்டக்கூடிய ஒரு வஜ்ஜிர தேகம் உனக்குள்ளே இருக்கிறது. இதைக் கூட்டி வைக்க வந்தவர்களை மக்கள் அல்லத்தட்டி விட்

டார்கள். லேசாக எண்ணி, துச்சமாக எண்ணி, அலட்சியப் படுத்தினார்கள். ஆகாய விமானம் வருவதற்கு முன், நீ அதைக் கனவில் கண்டதுண்டா? நாம் ஒரு பெரிய படிப்பாளி என்று பட்டம் பெற்றிருக்கிறோம். ஆனால் விமானத்தைப் பார்த்ததில்லை. நீங்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள் அல்ல. ஆனால் விமானத்தைப் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் அதைப்பற்றி எம்மிடம் வந்து விமானம் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்று சொன்னால், அது எப்படி எம் நினைவுக்கு உருவாகும்? நீங்கள் நினைத்தால் உங்கள் அறிவுக்கு வரும். எமக்கு எப்படி வரும்? வராது. அதுபோலத்தான் இவன் அறிவை வைத்து வேதப் பொருளை நினைப்பதும் இருக்கும்.

31

'இருதயத்தில் ஈசன் இருப்பிடம்' என்பது புராதன வார்த்தை. எந்த எல்லையிலேனும் எந்தப் பலாட்டியரேனும் இருதயத்தில் ஈசனைக் காட்டியது உண்டா? உலகம் பூராவும் சபையாக்கிக் கேட்டாலும் அப்படிக் கண்டேன் என்று சொல்பவர்கள் உண்டா? இல்லை. "நாம் கண்டோம், சத்தியமாகக் கண்டோம்" என்று சொல்லுகிற சிவ மக்களை, நாம் இது காலத்தில் பல ஆயிரக் கணக்கில் கூட்டி இருக்கிறோம். எம் சம்பாதனை சிவ லோக சம்பாதனை. இந்தச் சம்பாதனையை அதற்கென்று பிறந்த மகன் பெறவேண்டும் என்றே சொல்ல வந்திருக்கிறோம். நாம் சம்பாதித்து முடிந்தது. அத்தெய்வ முதலைக் கையில் வைத்துக்கொண்டு கேட்கிறவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

32

தேவலோகத்தில் வேத பாராயணம் பண்ணுவது கேட்கு மென்றால், அது இந்தக் காதிலா? இல்லை. இருதயத்தில் அந்தக் காது இருக்கிறது. யார் அந்தக் காதைத் தருகிறார்களோ அவர்கள்தான் பகவான். அவர்கள் இருப்பிடம் குருக்ஷேத்திரம். மறுபிறப்பென்னும் கோடி சூரியப் பிரகாசமாகிய தேகத்தை 'இந்நா' என்று உன் கையில் கொடுப்பார்கள். அவர்கள் சிவசித்தர்கள். சிவகுரு பிரான்களுடைய இந்த வல்லபச் செயலைச் சிவ னுட்டார்களே அறிவார்கள்.

சூக்கும தேகத்தில் உன்னைப் புகுத்தி, பிறகு அங்கேயே விட்டு வந்தால் வழி தெரியாது. அங்கிருந்து இறக்கி மறு முறையும் இங்கே கொண்டு வந்து விட்டால்தான் தெரியும்.

33

உன் பிரயோசனத்தை நீ அடைந்து கொள்ள, உன் தெய்வீகத்தை நீ அடைந்து கொள்ள ஒரு குரு சன்னிதியில் எப்படிக் கேட்பது, என்ன கேட்பது என்றே உனக்குத் தெரியாது. புராதன வாழ்க்கையாகிய ஆத்ம சாந்தியை அடையவே நீ இச் சபையில் சேருகிறாய். அத் தனித் தலைமைச் சிறப்பை உன் தலையில் பதிக்கவேணும் வந்திருக்கிறோம். அதற்கு வேண்டிய மெய்ஞ்ஞானப் பெரும் கல்வியை உணர்த்துகின்ற கலாசாலையே எமது மெய்க்கல்விக் கலாசாலை.

34

பிரம்ம தத்துவத்தை, அந்நப் பஞ்ஞாட்சரத்தைப் பெருது வெறும் வெளி வேஷம் போட்டுத் திரிந்நவன் இறந்நால் பிசாசாகப் போகின்ருன். இதற்குச் சாட்சி யாக அவன் புதைக்கப்பட்ட இடத்திற்குப் போகப் பெண்கள் அஞ்ஞுகின்ருர்கள். தெய்வீக வாழ்க்கையை அடைந்நவரின் உடல் அடக்கம் செய்யப் பெற்ற இடத் திற்கோ அப் பெண்கள் வரம்தேடிப் போவார்கள். ஊரே சீச்சுக் கழித்துக் காறி உமிழுகின்ற அலகைக் கோலத்திற்கு னீ போகாமல், பெரியோர்கள் பெற்ற தெய்வீக னிலேக்கு 'னீ வா' என்றே ஞம் அழைக்கிருேம்.

35

விதி என்பது இறைவனுடைய கையேடு. அதை யாராவது போய்ப் பார்த்தது உண்டா? விதி போல ஆகு மென்ருல் வேதமும் அதற்குரிய வேலேயும் ஏனே? வேதத்தில் அடைவான செயல் இது என்றும் அடாத செயல் இது என்றும் வைத்திருப்பது ஏன்? பாவி என்று உன் விதி இருப்பின் பின் வேதம் எதற்கு? விதியை விட்டு மதியின் மேல் ஏறிச்சென்ருல் கரை யாகிய எமபடரைக் கடந்து மோட்சத்தில் சேர்வாய்.

இத் தூலதேகம் அழியும். அழியின் பிசாசாகவோ அல்லது வேறு எப்படியோ ஆக னேரும். ஆதலின் இப்பொழுதே தேவஞக ஆக முயலவேண்டும். பிறந்த வுடன் மவுத்து என்றது, ஒருவன் தலேயில் வந்து விடி கிறது; அதே போன்று எல்லா ஜீவராசிகளுக்கும் மவுத்து இருக்கிறது. ஆனல் அது ஆடு மாடு முதலியவைகளுக்

குத் தெரியுமா? தெரியாது. னமக்குச் சாவு இருக்கிறது என்று தெரிந்து கொள்வதை இறைவன் னமக்கு விதியாக்கி வைத்திருக்கிறான். அப்படி விதித்திருப்பது னம் மேல் அவனுக்கு உண்டாகிய பொறுமையா? இல்லை. சர்வலோக ஜீவ தயாபரரின் மகா இரக்கம்தான், மவுத்தை னம் மேல் விதியாக்கிக் கழுத்திலும் கட்டிவைத்திருக்கிறது. அப்படி வைக்காவிட்டால் அதிலிருந்து தப்பி னித்தியத்தை அடைய எண்ணம் வராது. மவுத்தை னினைத்து னீ எந்தக் காரியமும் செய்வதில்லை. பிறகு உன் கதிதான் என்ன? மனிதன் மிருகங்களைக் காட்டிலும் மேலானவன் என்பது எப்படிப் பொருந்தும்?

மவுத்து வரும் என்பதை மனிதர்கள் எண்ணத்தில் தூண்டி விடுவதற்கே அந்தந்தக் காலங்களில் இறைவனின் திருத்தூதர்களாகிய மெய்க்குருபிரான்கள் வருகிறார்கள். னும் ஏற்படுத்திக் கொள்ளுகிற குருக்களைக் கலீபாக்களென்று வேதம் சொல்லவில்லை. கலீபாக்கள் என்பவர்கள் உன் தலைக்கு வர இருக்கும் ஆபத்தாகிய சாவை ஞாபகமூட்டுபவர்களே. னீ வெளிச்சத்திலிருந்து பழகியவன். ஆனல் னீ சாவென்ற இருட்டுக் கட்டிடத்திற்குள் னுழையப் போகிறாய். ஆகையால் அந்த ஆபத்துக் காலத்திற்கு வேண்டிய சகல ஆயுதங்களையும் னீ இப்பொழுதே தேடிக்கொள்.

36

“அல்ஹம்துலில்லாஹ்” என்று சொல்லிக் கொடுத்தால் கிளி அப்படியே சொல்லும். ஆனல் பூனை வந்ததும் ‘கர்’ என்றுதான் கத்தும். அதே போன்று உன்னிடம் இஸ்ராயில் (எமன்) வருவானானல், உன் வாயிற்

சொல்லும் மந்திரங்க ளெல்லாம்போய், கரட்டுக் கரட்டு என்றுதான் இழுக்கும். அவனது ஒரு னெருக்கில் முழுக்கு வெளியாகிவிடும். காபர் என்ற தீர்ப்பு வந்து விடும். அவ்வாறு வராமல் தடுக்கின்றவர்களே கலீபாக் கள். செத்த பிறகுதான் எல்லாம் என்று உலகக் குரு மார்கள் சொல்லுவார்கள். அதெல்லாம் தங்கள் வயிற் றுப் பிழைப்புக்காக மக்களை ஏமாற்றும் வித்தையே.

இறைவனல் இப் பூமிக்கு அனுப்பப் பெற்றுள்ள ஞானமேதையாகிய சற்குருபிரான் அவர்கள் இருக்கும் போதே ஞம் னம்மை அறிந்துகொள்ள வேண்டும். அவர் கள் உனக்காகச் சிருஷ்டித்துத் தருகின்ற அந்த ஜீவ இர வில் னீ வணங்கி வந்த ஆறுமுகக் கடவுள் உன் முன் வந்து "னீ என்னை இதுகாலம் வரை வணங்கினய்; எனக்குத் தேகம் இல்லை. ஆனல் என்னைப்போல் அழகு, பாக்கியம், சிறப்பு, மதிப்புத் தருகின்றவர்கள் இவர்கள் தான்" என்று சாட்சி சொல்வார்கள். இந்த வசந்த காலத்தைப் பயன்படுத்திக் கொண்ட பல ஆயிரம் மக் கள் எம்மிடம் இருக்கிருர்கள்.

உன்னைப்போல் தேகியாக வந்து, பரத்தினுடைய லட்சணமாகிய சாகாக் கல்வி என்ற தெய்வீகக் கல்வி யையும் கற்று, இகத்தின் லட்சணத்தை உன்னைப்போல் இரண்டு மடங்கு கற்றுத் தேர்ந்தவர்களே ஜீவ பாதை யைக் காட்டுகிற மெய்க் கல்வியை உனக்குப் போதிக்க முடியும். சிவலோக பதவியை உன் தலையில் சூட்டுகிற அப் பாரவான்களுக்கு ஒப்பு உவமை ஏது? னீ ஒரு ராஜாங்கமே கொடுத்தாலும் அவர்களுக்கு அதனல் பிர யோசனம் இல்லை. னீ அவர்களுக்குச் செய்ய வேண்டி

யது, உன் சத்திய ஒட்டுதலால் உன்மேல் அவர்களுடைய இரக்கத்தைச் சாயவைத்துக் கொள்வதேயாகும். பொய்க் கல்வியாகிய ஐ.ஸி.எஸ். படிக்க ஏழையாக உள்ளவன் போக முடியுமா? முடியாது. ஆனால் இந்த மெய்க் கல்விக்கோ அரசனாயினும் ஆண்டியாயினும் போகலாம்; கற்றுத் தேரலாம்.

37

பிறந்து முடிந்தது. இனி இறப்பு ஒன்றிருக்கிறது. சாவைச் சந்திப்பதில் வலியவர்களுக் கென்றும் எளியோர்களுக் கென்றும், இளையோர்களுக் கென்றும் முதியோர்களுக் கென்றும், படித்தவர்களுக் கென்றும் படியாதவர்களுக் கென்றும், வித்தியாசமில்லை. எல்லாரும் அந்த மறுவாசலில் போய்ச் சேரவேண்டியவர்களே.

ரத கஜ துரக பதாதிகளின் நடுவில் ஒருவனிருந்தாலும் சாவென்னும் மவுத்து வந்துவிட்டால் உதவி ஏது? அங்கு உன் துணிச்சல் பிரயோசனப்படுமா? இல்லையே! உன் செவிக்கு அஞ்ஞுராணி வைக்கப்படுகிறது. மகாக் கொடுமையாகிய சப்தம் உன் காதில் கேட்கப்படுகிறது. அனலாகிய வேதனை ஒவ்வொரு அங்கங்களிலும் ஒவ்வொரு அணுக்களிலும் ஏற்படுகிறது. இந்த வாதையை வாய்விட்டுச் சொல்ல முடியுமோ என்றால் முடியாது. அதற்குப் பூட்டுப் போட்டு உள்ளே தள்ளப்படும். சரீரம் உணர்ந்து அவதிப்படும்; அதுவும் அப்படியே வெளிக்காட்டாதபடி பூட்டப்படும். ஒருவனைக் கண்ணை மட்டும் திறந்து வைத்துவிட்டு மற்றைய அவயவங்களை அசையாது ஒரு மரத்தில் கட்டித் தீ வளர்த்து அதில் போடுவதாகச் சொல்லி எடுத்துப்

போவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவனுக்குத் திமிரப் பாங்கு உண்டா, சொல்ல முடியுமா, பொறுக்கவாவது முடியுமா? இது அந்த மரண வாதையில் 70 ஆயிரத்தில் ஒரு பங்குதான். இந்தக் கதிக்கு அரசன்முதல் ஆண்டிவரை எல்லோரும் வந்தே தீரணும். அதுனேரம் எமன் முன்னுல் சிக்கிக்கொண்டு ஆலேயில் கரும்பு பிழிபடுவதுபோல் அகப்பட்டுக்கொண்டு விழிக்க னேரும். அதை மாற்றுகின்ற பிரம்ம வித்தையாகிய செயலே, அதனுல் னித்திய மேடு ஏறுகின்ற பெரிய கீர்த்தியைப் பெரிய சம்பத்தைப் பெற வந்தவர்களே மனித தூலம் எடுத்த னும் எல்லோரும்.

38

உலகத்தவர்கள் எல்லோரும் கடவுள் வழிபாடு என்று கூறி ஓர் ஒப்பனேக்காக வாய் அளவில் சொல்லித் திரிகின்றவர்களாகவே இருக்கின்றுர்கள். இன்னும் அது ஒப்பனே என்று கூடத் தெரியாத அவ்வளவு கேவலம் கெட்ட னிலேயில் இருக்கிறுர்கள். ஆன்றேர், பெரியோர், ஞானி, பாரவான் என்று போற்றிப் புகழப்பட்ட ரவீந்திரனுத் தாகூர், தன் மரணத் தருவாயில், "இவ்வளவு காலம் என்னேப் பெரியோர் என்று உலகம் னிசமாக எண்ணிக்கொண்டு இருந்தது. ஆனுல், இப்போது எனது இறுதினுள் பிரயாணத்தில் னுன் கொடிய வாதனே சூழ்ந்துள்ள கடும் இருட்டில் னுழைகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சாவதாக இருந்தால் மற்றையோர்கள் கதி என்ன? இப்படிப்பட்டவர்களே மகாப் பெரியோர்கள் என்று உலகத்தார் கொண்டாடுகின்ற லட்சணத்தைப் பார்க்கும்போது, அவர்களின்

ஆலய வழிபாடுகள், கடவுள் வழிபாடுகள், குல வழி பாடுகள் எல்லாம் ஒப்பனைக்குத்தான் என்று வெளியா கிறது. காலமெல்லாம் பாடுபட்டும் ஒன்றும் தோன் றாமலும் ஒன்றும் அறியாமலும் இவ்வளவு கேவலத்தில் இருக்கும் இவர்களுக்குக் கடவுளைப்பற்றி அலட்சியமா என்றால் அதுவும் இல்லை. ஆகவேதான் 'இரண்டும் கெட்ட உலகம் இது' என்று நாம் சொல்லுகிறோம். நாம் இப்படிச் சொல்வதற்கு அவர்களே சாட்சியாக இருக்கின்றார்கள்.

39

இந்நக் கேவல உலகத்தில், நமது மெய்ச் செயலை யார் விரும்பி வந்து கைக்கொள்ளுகின்றார்களோ அவர் களைத் தவிர ஏனையோர் கல்லும் கரடுமன்றி வேறு என்ன? இவ்வளவு கேவலங் கெட்ட தரித்திரியர்கள் நிறைந்த பட்டிக் காட்டில், கஸ்தூரி விற்க வந்திருக் கிறோம். அவர்கள் கூளகெடுத்துக்கொண்டு வந்து நம் கஸ்தூரியை, அரிசிக்குச் சரிக்குச்சரி போடுவாயா என் றும், அவர்களிலும் புத்திசாலியாய் இருப்பவர்கள் சிலர், தீட்டின அரிசி கொண்டுவந்திருக்கிறோம், ஆகவே சரிக் குச்சரி போடவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

40

ஏ மனிதனே! நீ தேவ தேவேசன் முதலாய அழியா வரத்தண்ணல் அனைவரும், அளவிலாக் காலம் அழியாப் புகழ் புகழும் அப் புகழுக்குப் பிறந்தவன். நாம் அதை நிரூபிக்க வந்திருக்கிறோம். வா. நீ அதை விட்டு விட்டுப் புழுக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பெரும்

புழுவைப் புகழ்வதுபோல், இந்த அழி ஞவினர் அனைவ ரும் புகழத் திரிகின்ற உன் பாடு இறுதியில் என்னே! இந்த அழி உலகமே அழியும். உன்னைப் புகழ்ந்தவர் அதற்குமுன் அழிவர். அவர் உன்னைப் புகழ்ந்த அப் புகழ் அதற்குமுன் அழியும். மிருகங்கள் கூடி ஓர் மிரு கத்தை உயர்த்திக் காட்டுகின்றது. இப்படியே தருக்கி னம் முதலாயதும் உளது. உஜார்.

41

ஐந்து அறிவுக்கும் தனித்தனியே கருவிக் குலங் கள் இருக்கின்றனவே, அதுபோல் ஆருவது அறிவுக்குக் கருவிக் குலம் எங்கே? ஐந்து அறிவுக்கும் கருவிக் குலங் கள் இருக்க, ஆருவது அறிவுக்கு மட்டும் கருவிக் குலம் இல்லாமலா போகும்? அது எங்கே? இந்தக் கேள் விக்கு உலகமே திரண்டாலும் பதில் சொல்ல வருமா? ஆருவது அறிவின் கருவிக் குலம் இதோ என்று தொட் டுக் காட்டப் பெறுகின்ற எல்லையே இது. ஒருவர், தம் கருணை வீட்சண்யம் கொண்டு உன் னெஞ்சை இரு கூருகப் பிளந்து, அதை – அந்த ஜீவ முதலை – உனக்குக் காண்பிக்கின்ருர்கள். "இது யாரால் முடியும்? யாருக்கு எட்டப் பெற்றது?" என்று படித்தவர்களும் படிக்கா தவர்களும் ஒரே முகமாக னின்று பேசுவார்களே அது வானதாக இருக்கும். இப்படி எல்லோருக்கும் தேவை யானதும், எல்லோரும் கண்டு அதிசயிப்பதும், எல்லோ ருக்கும் ஆச்சரியமானதும், சர்வலோக சஞ்ஜீவியான தும் ஆகிய ஒன்று இங்கே முளைகண்டுள்ளது. முழுப் பாவியாக, தன் உயிருக்கே எதிரியாக, தன் ஜீவ னலத் திற்கே மாற்றக்காரனுக இருப்பவனுக்கே இந்தத் திருத்

தலம் பிடிக்காது. திருடனுக்குப் போலீஸ் ஸ்டேஷன் எப்படிப் பிடிக்கும்? அவன் உள்ளமே அவனை அங்கே போகாதே என்று வாட்டுமன்றோ?

42

எமது மெய்ஞ்ஞானத் தந்தை எம்மைப் பார்த்து, எம்மைப்போல ஞான இச்சை உடைய ஒருவரை அதற்கு முன் பார்த்ததில்லை என்று தங்கள் திருவாய் திறந்து கூறினார்கள்; அந்தப் பூர்வ புராதனர் எம்மையும் தங்களைப்போல் புராதனராக்க நினைத்துப் பாலித்தருளிய அப்பெரும் நிலையைக் கண்டதும், அந்தக் காரமான வேகம் - முனைப்பு, எம்மிடம் முழு மூச்சாக எழுந்தது. அப்படி, ஒருமுகத் துணிவாகப் பற்றி நின்ற எம்மை அப் பெருமான் பிரிக்க நினைக்கிறார்கள் என்ற ஜாடை தெரிந்ததும், ஏக்கமும் திகிலும் அச்சமும் குழப்பமும் கொண்டு இருந்தோம். தங்கள் நீதியாம் செயலிலே எம்மைக் காலமெல்லாம் ஆண்டு வந்த பிரானவர்கள், அந் நீதியின் மீதே அதிகாரம் செலுத்தி, எம்மைப் பிரித்து, அண்ட பிண்டமெல்லாம் நிறைந்த அம் மகோன்னத அதிதீர்க்க தேவேசரவர்களின் தலை தாங்கி வந்த இறுதித் தீர்ப்புப் பொறுப்பை எம்தலையில் சுமத்தித் திருக்கங்கணமும் சூட்டினார்கள். அது எம்மைவிட்டு நழுவாததாய் இருந்தது. யாமோ தனி ஆள். உங்களைப்போல் படிப்பும் இல்லை. பொறுப்போ உலகத் தீர்ப்பு. கட்டளையோ பிரான் இட்டது. ஆதலால் அத்திருப்பணிக்கே இவ் வுடலைத் தேய்த்துவிடுவதென முழு உக்கிரம் கொண்டு எழுந்தோம்.

43

இங்ஙே வந்து பிரம்மோபதேசம் பெற்ற பலர், பெற்றதின் பின் அடிக்கடி வருவதைக் காணேமே! முன் னடந்த னடையையும் ஆரவாரிப்பையும் காணேமே! அவர்கள் எண்ணம்தான் என்ன? அவர்கள் அடையப் புகும் பலன்தான் என்ன? பணம் கொடுத்து ஒரு னல்ல னிலம் வாங்ஙி விட்டால் போதுமா? தானே பலன் கிடைக்குமா? கிடைக்காது. எருவிட்டு னீர்ப்பாய்ச்சி, உழுது விதைத்துக் களேனீக்கிக் கால காலம் கவனித் தால் அல்லவா பலன் கிட்டும். அழியக்கூடிய இதற்கே இப்படி என்ருல், என்றும் அழியாத னிதியை, இவ்வுல கினர்க்கு எட்ட முடியாத இருளாக இருந்த னிதியை, உனக்குப் பிரகாச ரூபமாக வெளியாக்கித் தந்தவுடன் அதன்மேல் என்ன ஆத்திரம் வரவேண்டும். ஒருவன் வட்டிக்குக் கடன் வாங்ஙி அதைக்கொண்டு ஒரு னிலம் வாங்ஙினன். அந்த னிலத்தை உழுது பயிரிடாமல் மாடு மேயும் தரிசு னிலமாகப் போட்டுவிட்டு, 'ஐயோ பலன் வரவில்லேயே' என்று வருஷக் கடைசியில் தெய்வத்தைக் குறை கூறினன். அப்படிச் செய்வதால் னிஜமாகப் பாடுபடும் பக்கத்து னிலத்தாருக்கும் இடையூறு செய் கிருன். "எம் பொன்னரங்ஙசபையில் உள்ளோர் என் னுளும் னீடு வாழ்க" என்று சொல்லியிருக்கிருேமே என்று பணத்தைக்கட்டி அங்ஙத்தினராக ஆகி விட் டால் போதுமா? அது எம பயத்தைப் போக்குமா? உன் னுடைய செயலால் னீ எல்லா வகையிலும் எப்பொழு தும் எம் கண்பார்க்க அழகுடையவனுக னடந்து, எம் னினேவிற்குப் பிரகாசமாக விளங்ங வேண்டும். அதற்

காகத்தான் உன்மேல் எம் ஆசிர்பாதத்தைப் பதிப்பித்தோம். அதைவிட்டு எம் நினைவிற்கு நீ குரூரமாகத் தோன்றினல் - ஒரு மிருகமாகத் தோன்றினல் - என்ன பயன் தரும்? மகா கொடூர தண்டனையே வரும். உன்னுடைய இந்த மண்ணுலகப் போக போக்கியங்கள் அனைத்தும், உன் உள்ளத்தில் பயம் தருவதாகவேதான் இருக்கும். அதனல் உன் உள்ளம் பயத்தின் உருவாகவே ஆகிவிட்டது. உண்மையான ஆசானைச் சார்ந்து அவர்களின் திருநோக்கிற்கு நின்ருல், அவர்கள் அந்தப் பயத்தைப் பிய்த்து எறிந்துவிட்டு வீரத்தை உன் உள்ளத்தில் நிரப்புவார்கள். அதனல் நீ மரண பய்த்தைக் கடக்கின்றவனகின்ருய்.

44

சொல்லாமல் சொல்லுவதும், கேளாமல் கேட்பதும், பாராமல் பார்ப்பதும், தொடாமல் தொடுவதுமாகிய ஞான துரைத்தனமுற்று, கைகால் போய் முட்டாத பூசை வணக்கமுடைய பாரவான்கள் அருளிச் செய்துள்ள மெய்மைக் கிரந்தங்களுக்கு, இதயகமல வாசனைத் தன்னில் தரிசித்தலாகிய தன்னை அறிதலென்னும் மறுபிறப்புப் புனல்ஜென்மம் பெருதவர்கள், தங்கள் அவல மதிப்புக்காக இச்சையுற்று, பொருள் தருகிறேன் என்று உரை செய்ய முற்பட்டால், அந்தப் பாரவான்களின் சாபத்திற்கு ஆளாகுவார்கள் என்பது சத்தியமே. அதோடு இறைவனின் சாபமும் அவர்கள் தலையில் வந்து விழும்.

மேற்கூறிய தவாதிக்கம் கைவரப்பெற்றுக் கற்பிக்கும் வல்லார்களே மெய்ஞ்ஞானப் பாரவான்கள். அவர்களின் திருச்சன்னிதியில் அந்த மெய் வல்லபத்தைக்

கற்பிக்கப்பெற்று வருகின்றவர்களே மாணாக்கர்களும், சாதிமான்களும், தன் னுமம் இருக்கும் திருத்தலம் அறிந்த தேவர்களும் ஆவார்கள். அவர்களுக்குத்தான் மெய்ஞ்ஞான நூல்களின் பொருள் விளங்கும். அந்தப் பாரவான்களேதான் அந்நூற்களுக்குப் பொருள் என்பதும் திட்டமாகத் தெரியவரும். மும்மலக் குறும்பை அறுத்தெறிந்த தவோன்னதப் பாரவான்களின் மெய்ச் செயல் விளங்கனிற்கும் நூற்களுக்கு, நுசியில் மூச் சோடிக்கொண் டிருக்கின்றவர்கள் சொல்லும் உரை என்ற பிதற்றல்கள் எம்மாத்திரம்? அந்த நூலறிவினர் களுக்கு, "பொருளு" க்கும் வியாக்கியானத்திற்கும் உள்ள வித்தியாசம் தெரியவரவே வராது. அன்னவர் களுக்கும், அவர்களின் வெற்றுரைகளைக் கேட்பவர்க ளுக்கும் வரும் பலன், இறுதி னேரத்தில் அவர்கள் படும் மரண அவஸ்தையில் பட்டவர்த்தனமாகத் தெரிய வந்துவிடும்.

45

சாலைத் தமிழ்

எமபடரச்சமென்னும் இருட்பிடிப்பை எவருடைய னெஞ்சகத்திருந்தும் பிடுங்கி எறியவல்ல எம்முடைய மெய்வழிச் சாலையின் ஏற்றமிகு கல்வியே தமிழாகும். தமிழானது அவ்வளவு கூரோங்கிய பேரொளி மந்திர வாளாகத் திகழ்வது இங்குதான். தமிழின் முழுப்பலமும் திரண்டெழுந்து வீறு கொண்டு விளங்குவது இங்குதான். இது மிகையல்ல. தமிழின் பலத்தை உள்ளது உள்ள படியே சொல்லுகிறோம். இங்கல்லாமல் வேறெங்காவது தமிழ், யாருக்காவது ஏதாவது தந்திருக்கிறதா? இங்கே,

அது அரியவற்றுள் அரியதாகிய சாவாவர வாழ்வை எளியவர்க்கும் எளிதாகத் தருகிறது. தனங்களுக்கெல் லாம் பெரிய தனமும், ஆற்றலுக்கெல்லாம் பேராற்ற லும், மதிப்புக்கெல்லாம் பெருமதிப்பும் ஆகிய சாவா வரம் ஒருபாடு மில்லாமல் வந்து வாய்க்கிற தென் ருல், ஒரு மனிதனுக்கு வேறென்ன வேண்டும்? மதிப்பும் எல்லாப் பலமும் எமனுக்குள் அடக்கம்தானே? அளவு கடந்த வல்லபங்களையெல்லாம் மிகவும் அனுயாச மாகத் தூக்கி விழுங்குகின்ற மகாக்கொடிய அமளி மிகுந்த வல்லபமல்லவா எமனுடைய வல்லபம்? அந்த எமனுடைய மூர்க்கமான பலத்தை முறியடித்து, மக்களைத் தேவராக்கிச் சாவாவரம் தருவதே சாலைத் தமிழ். எமனை ஒரு நாய்க்குட்டியாக்கி, "குச் குச்" என்ருல் ஓடிவரு வதும் "போ" என்ருல் போவதுமாக ஆக்கிவிட்டது எமது சாலைத் தமிழ். இந்த வேலிக்குவெளியே ஒருவன் கவிச்சக்கரவர்த்தியாக இருந்நாலும், புவிச்சக்கரவர்த்தி யாக இருந்நாலும், தமிழ் அவனுக்குத் தன் காலைக் காட்டுகிறது அல்லது முதுகைக் காட்டுகிறது; அவ்வ ளவு தான்! ஆனுல், இந்த எல்லையில் தான், எம்மிடத் தில்தான், அது தன் முழு அழகையெல்லாம் காட்டி, முடிவிலா முத்தி னடனம் செய்கிறது.

சாதி மதங்களின் தீராத கொடும் பகையின் ஆருத கோர னெஞ்சை முறித்தெறிந்து, தெய்வீக சைவ அலங்காரத்தில் சிரோங்கப் பிறப்பித்து, அறுபத்தேழு சாதிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று, ஒத்த உயிர்ப் பிறவியராய் உத்தமராய் உள்ளன்புடன்

இன்று கண்காண வாழவைத்துள்ளது எம் சாலைத் தமிழ். எல்லா வேதமாமறைகளின் வட்டப்பூட்டையும் எட்டித்திறக்க வல்ல திறவுகோல், எம் சாலைத்தமிழ் ஒன்றேதான். இது காலகால னெடுங்கால மெல்லாம் எவ்வி எட்டிப்பாய்ந்து ஏறவல்லது. சிவன் ராத்திரி, வைகுண்ட ஏகாதசி, எட்டா னுள் ராஞானஸ்னனம், லயிலத்துல் கதிர் ரா முதலான எல்லாக் குலத் தலைஇரவு களையும் ஒரே இரவாக்கித் தரவல்லது சாலைத்தமிழ். ஒருவனுக்குச் சென்ற வயதை யெல்லாம் மீட்டுத் தந்து சிரஞ்ஜீவி ஆக்கவல்லது னம் சாலைத்தமிழ். இதைப் பார்க்கிலும் பெரிய காரணமும் அதிசயமும் மனுவின் உயிர்க்கு வேண்டியது வேறெங்கே உள்ளது? இதைத் தேடிவராமல், பல்லாயிரக் கணக்கில் செலவு செய்து கொண்டு பலனின்றும் அலைகிறார்களே, எங்கே என்ன அதிசயம் கண்டார்கள்?

தமிழ்ப்பற்று என்று வெட்டியாக வாய்ப்பறை அடிக்கிறார்களே. இவர்கள் தமிழைப் பற்றியிருக்கிறார்களா, அல்லது தமிழ் இவர்களைப் பற்றியிருக்கிறதா? இவர்கள் தமிழைப் பற்றியிருக்கிறார்களோ, இல்லையோ, னிச்சயம் தமிழ் இவர்களைப் பற்றியில்லை. அது இவர்களைப் பற்றியிருப்பது உண்மையானால், எமக்கு மட்டும் தமிழ், தன் முழுவல்லபமும் கொண்டு என்னென்னவோ செய்கிறதே, அவற்றில் ஏதேனும் ஒன்றை இவர்களுக்கு ஏன் செய்யவில்லை? அது செய்யவே செய்யாது. ஏன்? இவர்கள் தமிழை அலங்காரம் செய்தார்களா? இல்லை. அதை அலங்கோலம் செய்தார்கள். அதனுடைய அருமையான முப்பத்து மூன்று அங்கங்களை அறுத்

தெறிந்து விட்டார்கள். இப்படிச் செய்துவிட்டார்கள் என்று னேராகப் பார்த்தவர்கள் னெஞ்சு பொறுக்காமல் சொன்னால், "இல்லை யில்லை, அது அந்த அங்கங்களே இல்லாமல்தான் பிறந்தது" என்று ஒரேயடியாகப் படு சாம முரண்டாட்டம் பேசுகிறார்கள். இந்தக் கொடுமைகளைச் செய்தவர்களுக்கா அது னன்மையைச் செய்யும்? ஆகவேதான், னெடுங்காலம் பொறுத்திருந்து, கடைசியில் ஒரு னாள், இவர்களை எல்லோரும் காறித்துப்பும் படியான னரகலாக்கி எமன் கையில் ஒப்புவித்து விட்டுப் போகிறது.

இந்தக் கெடுகேட்டுக்குப் போகிறவர்கள்தான் தமிழ் என்றால் இனிமை என்கிறார்கள். வாயுணர்விலேயே கிடக்கின்ற இவர்களுக்குக் கரும்பு இனிக்கிறது அல்லது கற்கண்டு இனிக்கிறது என்று சொன்னால் அது சரி. தமிழின் சுவையானது அறிவின் சுவையாயிற்றே. அறிவிருக்கும் தலமறியாமல், அறிவதனைக்கண்டறிவதனைக்கொண் டறிவதையறியாமல், வெறிகள் பிடித்துக் கலைகள் விரித்து, வீணில் அலைவோர்களுக்கு, தமிழின் சுவையும் அதன்பலனும் எப்படித் தெரியும்? இவர்களுடைய னினைவோ இவர்களுடைய தூலத்தை விட்டுப் புறத்திலேயே திரிந்தலைகிறது. இவர்கள் என்றைக்குத் தங்கள் அகமிய உலகில் னுழைந்தார்கள்? அகமிய உலகில் பாய்ந்து அறிவுத் தலமேறி, அங்குள்ள அமுத கலசத்தைக் கைப்பற்றி அருந்த வல்லவர்களுக்கல்லவா தமிழ் இனிக்கும்? (பிரம்மோபதேசம் பெற்ற மக்களை னோக்கி) னீங்கள் னேற்றிரவு அந்தப் பிரணவப் பேரொளி னாட்டில் பிறந்தீர்களே. அப்படிப் பிறந்த

வுடன் சாலைத் தமிழ் மங்கையின் கொங்கையிலே, சாலைக் கலைமகளின் கொங்கையிலே ஞானப்பால் குடித் தீர்களே. அது தான் "முத்தரெல்லாம் அமுதருந்தும் கொங்கை" யாகும். மற்றவர்களுக்குத் தமிழ் இனிக்காது. இப்படி உலகமெல்லாம் தமிழின் சுவையே அறியாமல் போகின்ற நிலையில், தமிழின் சுவை மாத்திரமல்ல— அதன் முழுவல்லபமும் நமக்குக் கிடைத்துள்ளது. அதைக் கொண்டுதான் இந்த உலகமெல்லாம் கண்டு அஞ்சிக் கழிகிற எமனுடைய கொடிய வல்லபத்தை முறியடிக்கிறோம்.

இவர்கள் காலமெல்லாம் தமிழே படிக்கிறார்கள். அதுவும் மிகப்பெரிய பட்டணமாகிய மதராசிலே படிக் கிறார்கள். அதோடு கூடத் தமிழ் வளர்க்கிறோம் என்று வேறே சொல்லுகிறார்கள். ஒரு உழவன் தமிழே படிக்கா மல் காலமெல்லாம் காடு உழுது பாடுபடுகிறான். இன் னொருவன் காலமெல்லாம் தெலுங்கே பேசுகிறான். அவர் களுக்குச் செய்யாததைத் தமிழ் இவர்களுக்கு என்ன செய்து விட்டது? நீ வெகு காலமாக வெளியிலிருந் தாயே, அப்போது தமிழ் உனக்கென்ன நன்மை செய்தது? இங்கு வந்து கூடிக்கொண்ட இவ்வளவு குறு கிய காலத்தில், எம படரைச் சங்காரம் செய்து யுகங் கோடி கால வாழ்வை உன் சிரசில் ஏற்றியுள்ளதே. இதோ இந்த மெய்வழிச் சாலைத் தமிழ், இங்குற்ற எல் லோருக்கும் இந்தப் பெரு நன்மையை அளந்திருக் கிறதே; வேறெந்த எல்லையிலுள்ள தமிழாவது இதைச் செய்திருக்குமா?

நாம் உன்னைப் போலவா படித்தோம்? இந்தக் காலத்திலே எங்கு பார்த்தாலும் நடக சாலை, நளின

மண்டபங்கள், அன்னகக்கொலு, அரண்மனைவாசலோடு பட்டுப் பீதாம்பரங்கள் செட்டுச் செட்டாய் அணிந்து ஒரே ஆடம்பர அமர்க்களப் படிப்பாயிருக்கிறது. ஆனால் நாம் படித்ததோ எங்கோ ஒரு சிற்றூரிலே, ஒரு வீட்டுத் திண்ணையின் ஓரத்திலே. ஒரு துண்டு மட்டும் கட்டிக்கொண்டு, சுவடி சுமந்துகொண்டு சென்றோம். எல்லோரும் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன தமிழுக்குத்தானே நாம் வந்தோம்? ஆனால், எவ்வளவு பாரம் அதன்மேல் நாம் ஏற்றினாலும் சுமக்குது, நீ ஏற்றினால் தூக்கி யெறியுதே. மன்னாதி மன்னரெல்லாம் எட்டி ஏற நினைக்கவும் முடியாத எல்லைக்கு ஒரு மட்டியையும் ஏற்றுகிறதே! இது இப்பொழுதுதான் வந்த தமிழா அல்லது எப்பொழுதும் இருந்ததா? என்றென்றைக்கு மிருந்த அதே ஆயுதந்தான் இப்பொழுது இந்தப் போடு போடுகிறது. எல்லாம் அதைக் கையில் எடுத்து வீசுப வரின் வல்லபந்தான் என்று இப்போதாவது தெரி கிறதா?

நீ எமது இந்த வல்லபம் தெரிந்த பிறகா வந்தாய்? எம்மை இன்னார் என்று அடையாளம் கண்டு கொண்ட பிறகா வந்தாய்? இல்லை. வந்த வந்த மெய்ஞ் ஞான பீடங்களிலே யாரைத்தான் இந்த உலகம் அடை யாளம் கண்டுகொண்டது? மேற்கொண்டு அவர்களைத் தூற்றித் துரத்தியது. எவ்வளவு வாதனை பட்டிருந்தால் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் இப்படிப் பாடியிருப் பார்கள்!

''பேசியதோர் எம்மொழியைக் கேட்க மாட்டான்
பெரியோர்கள் வாக்கியத்துக் கீடோ என்பான்
தாசிமகன் வாயினிலே மண்ணைப் போட்டுத்

தையலுக்கு உதவாத சேர்ட்டால் சன்னு
பாசிமன மடையனுக்கு னூல்வின் ளாது
பக்குவமாய் எம்மொழியைப் பதனம் பண்ணே.''

கடைசியாக வந்து கூவிக் கூவிப் பார்த்தார்களே, வடலூர் வள்ளற் பிரான். அவர்களை ஒருவருக்காவது அடையாளம் தெரிந்நதா? அவர்களோடு சில னுள் கூடவே இருந்நவனும், ''சாதுக்களுக் கடுக்காத ஆர்க் காட்டுச் சோடு அணிந்நிருந்நார்கள்'' என்று குறையாகக் குரைத்து விட்டுப் போனுன். முன்பு இவன் சாதுவாக இருந்து பார்த்தவனே? பிறகு கீதுவாகி அவர்களைப்பற்றி இப்படி உளற வந்துவிட்டானே? அதனல்தான் ''கேட்டுத் திருந்தி உடனெழுந்திறத்தில் திகழ்வா ரொருவரேனும் தேறிலர் – கடையை விரித் தோம் – கொள்வாரில்லை – கட்டிவிட்டோம்'' என்று தீர்ப் புக் கூறிவிட்டுச் சென்றூர்கள் அந்நத் திடஞானக் கொண்டலர். 'இது பிச்சுலகம்' என்று காறித் துப்பி விட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகல்லவா னும் வந்துள்ளோம்?

னீ முதலில் இந்ந மெய்வழியைக் கைதொட்ட போது எம்மை என்னவென்று னினைத்தாய்? ''இவர்களும் ஞானிதான் போலிருக்கிறது'' என்றுதானே? முன்னம் வந்ந பாரவான்களில் எவருக்காவது சற்றேறக் குறையச் சமமாகக்கூட எம்மை னீ னினைப்பதில்லை. ஆனல் இன்று னீ எப்படி னினைக்கிருய்? அப்படி னினைக்க வைத்தது எந்ந ஆயுதம்? ஒரு னுன்கைந்து தலையாவது மீளாதா என்று ஏங்கினின்ற மணிவண்ணாக் கண்ணபிரானுகிய ஆதி பரந்நாமருடைய அதே

செயல்தான் இன்று இவ்வளவு பரந்து விரிந்து பணர் வுற்று னிற்கிறது. எம் கையிலுள்ள மெய்த் தமிழின் இந்த வல்லபப் பெருக்கை னீ அணு அணுவாக னினைத் தால்தான், அது உன் ஜீவனில் ஒட்டி அறிவில் பூப் பேறும்.

இன்னில உலகிற்கு எத்தனையோ மெய்ஞ்ஞான பீடங்கள் வந்தன. எந்தப் பீடமாவது இவ்வளவு காலம் இருந்ததா? னுமோ எழுபது எண்பது ஆண்டுக ளாகப் பாடுபடுகிறோம். ஆகவேதான், னம்முடைய இவ்வளவு பாட்டுக்கும் இவ்வளவு வரவுதானு என்று சில சமயம் சலிப்பு வருகிறது. ஆனல், ஒரே ஒரு தலை கிட் டாதா என்று னும் ஏங்கி னின்ற காலமும் உண்டு. முதன் முதலாக னும் இப் புவனத்திற்கு இறங்கி வந் ததிலிருந்து, அதாவது எமது பிரானவர்கள் எம் கையில் பாசுபதக் கங்கணம் ஏற்றியதிலிருந்து, பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து னும் முதன் முதலாக தீட்சை னடத் தியபோது, தீட்சை பெற்ற பேர் இரண்டு, காவல் காத்த ஆள் ஒன்று. அந்த ஒன்று இரண்டிலிருந்து தான் எம் சாலைத் தமிழ் பல்லாயிரம் பேரைப் படைத் தது. இப்பொழுது எமக்கு வயிறு னிரம்பி விட்டது. இனி னினைத்தால், இதைப்போல ஏழு உலகங்களை உண்டாக்குவோம். னும் உத்திரவிட்டால் எட்டு னுளைக் குள் ஒருலகம் உண்டாகும். அன்று ஒரு தலையைச் சேர்ப்பதற்கு என்ன பாடுபட்டோம். சேர்ந்ததுவும் னின்றதில்லை. கலகத்துக்கு மேல் கலகம் வரும். கூடிய தெல்லாம் கலையும். மீண்டும் பாடுபட்டுக் கூட்டுவோம். மீண்டும் கலகம் வரும். இப்படியே னும் இராசகெம்பீ

ரத்தில் அனுபவித்தோமே, அப்பேர்ப்பட்ட இடைஞ்ஞ லிலே குடையடித்துத்தான் முன் வந்த பீடங்கள் முடிவுற் றன. அதெல்லாம் ஊடுருகத் தெரிந்ததால்தான் நம் இந்த ஒருருளைத் தேவரதத்தை வீரமிக்க வெற்றித் தமி ழில் யாவரும் வியக்கும் வண்ணம் இன்னமும் ஓட்டி வருகிறோம். ஆகவேதான், இதனை எல்லாச் செம்மல்க ளும் தாங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர் பார்த்து நிற்கிறார்கள். எல்லோரும் எதிர்பார்க்கும் எல்லையென்றால் நம் தேவரதத்தின் வேகமும், அது கடந்தேறி வந்துள்ள பாரதூரமும் நினைக்க முடி யுமா? மெய்ஞ்ஞான பீடங்களில் யாராவது கொடி போட் டதுண்டா? "கொடி போட்டால் போச்சு, ஆளை வைக்க மாட்டார்கள்" என்ற நிலையில்தானே வாழ்ந்தார்கள். இப் பரந்த உலகில் தலைவைத்துப் படுக்கக்கூட இடமில் லாமல் ஆபத்துக் கஞ்சியவர்களாய் ஓடிக்கொண்டு தானே இருந்தார்கள். ஆனல் இன்று எம் சாலை மெய்த் தமிழ் எக்காளம் ஊதி, துந்துமியின் அசைந்த நாதம் எழுப்பி, பேரிகை யடித்து, வானுயரக் கொடியேற்றி, வையகத்தோரை வாருங்கோ வாங்கோ என்று கூவி யழைத்தவண்ண மிருக்கிறது. உண்மை யிவ்வாறி ருக்க, இவர்கள் புராணப் புளுகையெல்லாம் சரளமாக அள்ளி வீசி, போன முயல்தான் பெரிய முயல் என்பார் கள்.

எமது சாலைத் தமிழ் இதுவரை செய்துள்ள அற் புத அதிசயங்களைத்தான் இவ்வளவு நேரம் சொன் னேம். இன்னும் அது செய்யப்போவது எவ்வளவோ உள்ளது. அதைச் சொன்னல் உன் காது கொள்

ளாது–என்று சாவா வரம் தரும் மூவா மருந்தெனும் முத்தமிழ்க்கரசரும், னீதியின் யுகம் வரச் சாதி மெய்த் தமிழ் தரும் வேதியர்க் கரசரும் ஆகிய எம்மான் சாலை ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

46

கிழக்கு வெளுக்கும் முதற்குறியிலிருந்து சூரிய உதயத்திற்கு இடையில் சுவர்ண லோகத்துக் காற்று இந்த உலகத்தின்மேல் இறங்குகிறது. அது சுமார் மூன்று னிமிஷ னேரம் இறங்கும். அது இன்ன னேரத்தில்தான் இறங்கும் என்பது இல்லை. அந்தக் குறிப்பிட்ட காலத்தின் முதல் னேரத்திலாவது மத்திய னேரத்திலாவது பிந்திய னேரத்திலாவது இறங்கும். அப்படி அக் காற்று இறங்கும் அன்னேரத்தில் விழித்துக் கொண்டு இருந்து, படித்துக்கொண்டாவது, படிப்பதைக் கேட்டுக்கொண்டாவது, அல்லது ஏதாவது வேலை செய்துகொண்டாவது இருந்தால்தான் அந்தக் காற்று உன்மேல் படியும். இப்படியாக இந்தக் காற்று உன் உயிரில் படியப் படிய, சேரச் சேர, உன் அறிவு துலங்குகிறது. உன்னிடத்தில் ஞானவேட்கை அதிகமாகிறது. ஆகையால்தான், காலை 4-30 மணிக்கு எழுந்திருந்து, கை கால் சுத்தி செய்துகொண்டு, படித்துப் பாடிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் எடுத்து வைத்தது.

47

ஒரு னிலத்தில் ஒரு சந்தன மர விதை, ஒரு வேப்ப மரத்து விதை, ஒரு கரும்பு விதை, மூன்றையும் னடுகி

ளேம். ஒரே ஜலம், ஒரே சூரியவெப்பம், ஒரே காற்று, ஒரே மண், இவற்றைக்கொண்டு அவை வளர்ந்தாலும் சந்தனம் தனக்கு வேண்டிய வாசனையையும், வேப்பன் தனக்கு வேண்டிய கசப்பையும், கரும்பு தனக்கு வேண் டிய தித்திப்பையும் கிரகித்துக் கொள்ளுகின்றன. அது போல எரிச்சல்னேய் வந்தவனுக்கு அந்தனேய், தனக்கு வேண்டிய வெப்பத்தை மட்டும், வெளி ஆகாயத்தி லிருந்து சுவாசமூலம் கிரகித்துக்கொள்ளுகிறது.

48

வயிற்றுக்கு உணவு அருந்த வாய் இருக்கிறது. வயிற்றில் உண்டான எரிச்சலே னீக்கவேண்டி உட் கொள்ளும் மருந்தை வாங்கிக் கொள்ளவும் அதே வாய் தான் இருக்கிறது. அதே போல் மனத்திற்கு னல்ல உணவோ அல்லது கெட்ட உணவோ தர, கண்ணும் காதும் இருக்கின்றன. அவைகளின் வழியாகத் தாறு மாருகத் தின்று மனமாகிய வயிறு கோளாறு அடைந் திருக்றது. மனதில் அழுக்கடைந்து ஒரு எரிச்சலும் உண் டாயிருக்கிறது. அதோடு அதற்குக் கிடைக்கின்ற உணவோ அந்த எரிச்சலே அதிகப்படுத்துவதா யிருக் கிறது. வைத்தியர்கள் கிடைக்கிருர்கள். அவர்கள் அந்த மனத்தைத் தாறுமாருகச் சிகிச்சை செய்துகொலே பண்ணுகிருர்கள். அந்த எரிச்சலேப் போக்கி, காலா காலத்தில் னல்ல உணவு தந்து, மந்தம் உண்டாகா மல் மனதைப் போஷித்து, ஒழுங்காக வளர்த்து, அதைப் பிரம்மமா ஆக்கவே னம் வைத்தியசாலே இருக்கிறது.

49

நிசமான அன்பு தன் மெய்ஞ்ஞான ஆசரியரிடம் வைத்து, அவரிடம் மறைப்பு திவலைகூட இல்லாமல், கள்ளம் திவலைகூட இல்லாமல், சர்வமும் அவருக்குத் தெரியாமல் நடவாது என்ற எண்ணத்துடன் நடப்பவனுக்கு விரோதமாக ஒரு தூசி பறந்நாலும் அதுவும் சங்ஙரிக்கப்படும். அந்த ஆபத்து எல்லையில் ஆசான் அவர்களே வந்திருப்பார்கள். அப்பேர்க்கொத்தவன் உள்ளத்தில் ஆசான் எண்ணமே சதா நிறைந்திருக்கும். மற்றைய எண்ணங்கள் தகிக்கப்படும்.

50

சாதாரண குரங்கு, உருவமுடைய ஒரு மரத்தில் தாவும். ஆனல் மனக் குரங்கு, தூலம் இல்லாத பிசாசாகையால் உருவம்இல்லாத எல்லையிலும் அது பாய்ந்து விடும் - அப்படிப் பாய்ந்நுவிட்டால் அங்கு உதவி ஒத்தாசைத் தடுப்பு கிடையாது. ஆகவே, அந்த மனக் குரங்கை நடத்துவதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும். இந்த முயற்சியைத்தான், முயற்சி திருவினை ஆக்கும் என்று சொல்லப்பெற்றது.

51

தேவ முகத்திற்குப் பாத்திரமானவர்கள் நும், நமக்கு நிச்சயம் ஆபத்தில்லை, நும் இதில் நிறையப் பற்று வைத்திருக்கிறோம், நமக்கொரு குறைவில்லை என்று நினைத்துக் கொண்டிருந்து, சிலர் கடைசியில் ஆபத்துக்குள் மாட்டிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில்

தங்கள் சௌகரியப் பாட்டிலேயே அவர்கள் மனம் சதா ஒட்டியிருக்க, வாயும் உடலும்தான் இதில் ஒட்டியிருக் கிறது. இறுதி சமயத்தில் னஜீஸ் ஆகிய னரகத்தில் தான் அம் மனம் போய்ச் சேரும். இவ்வாறு பழகிப் பலகோடி செவிகளும் பலகோடி வாய்களும் பலகோடி கண்களும் பலகோடி மூக்குகளும் பலகோடி முகங்களும் பலகோடி கால்களும் பலகோடி கைகளும் படைத்துக் கொண்ட அந்த மனம், ஒரே காலாக, ஒரே செவியாக, ஒரே முகமாக ஆகி, சுவர்க்கத் திருவாயிலாகிய அந்த சன்னத்தில் னுழையாது. இப்படிச் சொல்லிக் காட்டி னல் விளங்காதென்றே, காலமெல்லாம் பலவிதமான ஆசாரம் அனுஷ்டானம் என்ற செயல்களில் புகுத்து வது, இவனுடைய மனத்தைச் சௌகரியத்தில் ஒட்டா தடிக்கவே ஆகும். இன்னும் எத்தனையோ மந்திர ஜெபங்கள், ஆலயங்கள், தீர்த்தங்கள், யாத்திரைகள் முதலியவை வைக்கப்பட்டதும் அம் மனத்தைச் சௌ கரியத்தினின்றும் கழற்றவே. அப்படிக் கழற்றப் பெற்ற ஒருவன், இந்த உலகத்தில் எவ்வளவு கஷ்ட ஜீவனம் செய்தாலும், முடிவாகிய தன்னுடைய ஜீவ வாழ்வு வேலையில் ஜெயமடைவான். ஆனல் மனமானது சௌகரியத்தையே னாடி னின்ருல், கடைசியில் அது மாமிசமாகிய னரகத்திலே மாட்டிக் கொள்ளும். கடைசி யில் போய் ஒட்டிக் கொள்ளலாமென் றிருப்பான்; ஆனல், ஒரு ஜீவன் முத்தரே கச்சைகட்டி முயற்சி செய் தாலும், பிடுங்க முடியாத ஒரு எல்லையில், ஒரு சகதியில் மாட்டிக்கொண்டு னிற்பான். இது எம் கையேட்டு அனுபவம். இது வேதத்தில் இருந்தாலும் சரி, இல்லா

விட்டாலும் சரி, இதுவே உண்மை. சௌகரியத்தைக் கழற்றி னின்ருல்தான், எண்ணிறந்த தேவ முகங்கள், எண்ணிறந்த தேவேச முகங்கள், எண்ணிறந்த பூத முகங்கள், எண்ணிறந்த பறவை முகங்கள், எண்ணிறந்த மிருக முகங்கள், எண்ணிறந்த னஞ்சு முகங்களாகிய அத்தனை கோடா கோடியான முகங்களைத் தட்டிவிட்டு, அந்தத் தேவ சைதன்யரின் திருமுகத்திற்கு னேர் இலக்காக னிற்க முடியும். ஆகவே எப்பொழுதும் இதிலே (இந்த மெய் வாழ்விலே) உஜார் வேண்டும். சௌகரியம் சகதிக்கடல். மேல் ஏறிக்கொண்டு இருப்பது போலே தோன்றும், ஆனால் கீழே படுகுழிக்கு இழுத்துக் கொண்டே சென்றுகொண்டிருக்கும்.

52

சர்வ வல்லமையும் சர்வ னிதிகளும் சேர்ந்த ஒரு பெட்டகம் உன்னுள் இருக்கிறது. அசைவற்ற ஓர் தலம் இருக்கிறது. அத் தலத்தில் அந்தப் பெட்டகம் இருக்கிறது. அசைவற்றது என்று னீ னினைப்பது அசைவுள்ளது. அது கடந்த ஓர் எல்லை அடைந்து, அந்த எல்லையையும் கடந்த ஒரு எல்லையில் அப்பெட்டகம் இருக்கிறது. அசைவற்றது என்று னீ னினைத்தது பிரேத னிலை என்று சொல்லலாம். அதற்கும் அப்பால் உள்ளது ஒரு அசைவற்ற இடம். அதில் தெய்வீக வேடிக்கைக் காட்சி இருக்கிறது. ஆனல் அவ்வளவு வலிமை அங்கில்லை. அது குதரத்து என்று சொல்லப் பெறும். அதுவும் தாண்டி ஓர் தலம் இருக்கிறது. அதுதான் அறிவாகி னிற்கும் தலம். னினைவு பிறங்கும் தலம். அது இராதத்து என்று பேசப்பெறும்.

53

மக்கள் சாவும் தலத்திற்குப் போவார்கள். சிலர் அதற்கப்பால் காட்சித் தலம் போவார்கள். அதற்கு மேல் எட்டவேண்டு மென்றால் னீண்ட கரம் வேண்டும். அறிவுக்கு மேற்பட்ட தலம் சத்தான தலம். தேகத்தின் சத்து ஜீவன். ஜீவன் சத்து இருப்பது கரடு முரடான தலம். அதில் இறக்கைகள், கை கால்கள் பல இருக்கின்றன. இவை அனைத்தும் சேதப்பட்டு அந்நச் சத்தான தலத்தில் னுழைய வேண்டும். அதன் சர்வ வல்லமையே உலக வல்லமை. உலகப் பொருள்களாகிய மரம், கல் முதலியவற்றின் னெருக்கம் ஓர் னெருக்கமல்ல; ஆனால் அது, அவை எல்லாவற்றையும் படைக்கும் வல்லமை படைத்த ஓர் னெருக்க முடையதாயிருக்கிறது. மைன்யூட் எல்லாம் சேர்ந்த மைன்யூட் என்று சொல்லக்கூடிய னிலையிலிருக்கிறது. உன்னிடத்திலேயே இருக்கும் அது, உனக்கு எட்டாத னிலையிலிருக்கிறது. ஆனால், அதை னீ எட்டினாலும் சரி, எட்டாவிட்டாலும் சரி, அது உனக்குப் பிரயோஜன மளித்துக்கொண் டிருக்கிறது. அறிந்த காலத்திலும், அறியாத காலத்திலும், னீ னன்மை செய்தாலும், தீமை செய்தாலும், உனக்குச் சக்தி யளிக்கின்ற கருணை யுடையதா யிருக்கிறது. இந்த னன்றியை அது இறுதி வரை செய்து கொண்டே இருக்கிறது. அத் திருச் சன்னிதி எப்பேர்க்கொத்த சன்னிதியா யிருக்கும். அதன் இச்சையில் னீ கலக்கா விட்டால் கடைசியில் அதுவே உன்னைத் தூக்கிப்போட்டுக் கழுத்தறுக்கும்

வல்லமையுடையதா இருக்கிறது. அந்நச் சத்தான தலத்தில் கலந்நவர்கள் கோடா கோடியான தீமைகள் னிறைந்ந தீமைகள், கஷ்டங்ஙள், துக்கங்ஙள் வரினும் அவற்றைப் புறங்கையால் தட்டிவிட்டு என்றும் மகிழ்ச்சி வசமாகவே இருப்பார்கள். ஜலம் மண்ணை னனைத்து விடும்; தாமரை இலையை னனைக்கமுடியுமா? முடியாது. அதுபோலவே அவர்கள் தன் ஆனந்நத்தில் சுயரூபமாகிய மகிழ்ச்சியில் திளைத்து னிற்பார்கள். சூக்குமத்திலிருக்கும் வலிமை இரு தரப்பிலும் இருக்கிறது. தூலத்திலும் எட்டி ஏறி னிற்கிறது.

54

"ஒரே இரவைப் பல கோடி காலமாக னீட்டி, பொழுது விடிந்நவுடன் ஒரே இரவில் அதை மடித்துத் தந்நார்கள்" என்று உங்ஙளுக்கு இறக்கப்பெற்ற உபதேச இரவைப் பற்றி ஏன் பேசக்கூடாது னீங்ஙள்? சிறிது சிறிதாக, அடுக்கடுக்காக அதன் அளவிடற்கரிய பெருமையைப் பிரித்து னினைக்கவேண்டும். இல்லாவிடில், தான் பெற்ற பொருளுக்கு மாற்றுத்தெரியாமல் போய்விடும்.

55

மனிதனுக்கு மட்டும் விதி வைத்திருக்கிறான். பாவ புண்ணியம் வைத்திருக்கிறான். அண்ணன், தம்பி, அக்காள், தங்ஙை என்று பாகுபாடு வைத்திருக்கிறான். இதைப் போன்று மிருகங்ஙளுக்கு விதி விலக்கில்லை. அவைகளுக்குப் பாவமில்லை. னமக்குமட்டும் விதி விலக்கு

ஏற்படுத்தி யிருக்கிருன் என்ருல், இறைவனுக்கு னம் மேல் கோரமா?

இது னன்மை, அது தீமை, கள் குடித்தல் பாவம், பிறர் பொருளைத் திருடுதல் பாவம் என்று தடுக்கிருன். இவ்வித ஏவுதல் விலக்குதல்கள் வைத்தது ஒரு காருண்ய னுட்டத்தைக் கொண்டேதான். உன் தலைக்கு மேல் னிற்கிற உன் சாவை எண்ணிப்பார் என்கிருன். பாவத்தில் போகக் கூடாது என்கிருன், சாவைப்பற்றி, அதிகமாக விசாரி என்கிருன். இவை எல்லாம் எதற்கு? னீ அந்த னித்தியத்தைக்கை போடுவதற்காகத்தான்.

56

தேவகோட்டை டாக்டர் மெய்வழி கிருஷ்ண அனந்நரின் மனைவி மெய்வழி விசாலாட்சி அனந்நகியின் பேரின்பப் பரிசுத்த ஜீவப் பிரயாணத்தன்று எடுக்கப்பெற்ற போட்டோவை ஆண்டவர்களின் திருமுன்பாகக் காட்டப்பெற்ற போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:- ஒரு கோடி கொடுத்தாலும் இம்மாதிரியான சிறப்பு கிடைக்குமா? கலியாணம் ஆன அந்த வயதில் இருந்நதைவிட யவ்வன அழகும் மகிழ்ச்சிப் பூப்பும் அல்லவா இப்போது முகத்தில் மிளிருகிறது. தூலத்தை விட்டுப் புறப்படும் அந்தக் கடைசி னேரத்தில் னும் கொஞ்சும் வேறுவிதமாய்ப் பிரட்டியிருந்நோமானுல் இந்த வாழ்வு போச்சே! அப்புறம் கற்பாந்த கோடி கால வாழ்க்கை போய், கற்பாந்த கோடி கால அவஸ்தை அல்லவா வந்து விடும்? இத் தூலத்தைப் படைத்த

ஞதம் வெளியேறி விட்டதென்ருல், எல்லாம் போய் ஞற்றமும் அவலட்சணமும் வந்து கப்பிவிடும். ஆனல் அந்த ஞதம் உள்ளடங்கியிருந்து னறுமண ஏற்றம் உறுவதால்தான், ஜீவரத்தினத்தின் பிரகாசம் இம்மாதிரியான அழகையும் மகிழ்ச்சியையும் முகத்தில் வாரி இறைக்கிறது. இது இறை சக்தியின் பெருங்கருணைச் செயல்.

இவ்வண்ணமாகப் பரகாயம் புகுந்து அடக்கமானவர்கட்கு மாலைபோட்டுப் பொட்டிட்டுப் போட்டோ எடுக்கக் கூடாது. அது பாமரத்தனம். கண்டவர்கள் காறித்துப்பும்படியாக ஞறிச் செத்ததற்கு அப்படிப் பூச்சுப் பூச வேண்டியதுதான். ஆனல் னம் தேவகுல மக்கள் இறுதித் தருவாயில் ஏறிக் கைபோடுகின்ற அந்தத் தெய்வத் திருமணக் கோலத்தைச் சிறிதும் மாற்ருமல் உள்ளது உள்ளபடியே அப்படியே இருக்க விட்டுவிட வேண்டும். அந்தத் தெய்வ அழகுக்குமேல் ஒன்றும் செய்யக்கூடாது. னம் சாலைக்குள் அடக்கமாகிறவர்களுக்கு அவ்வாறு ஒன்றும் செய்வதில்லையே. ஏதாவது செய்தால் இறைவனுடைய செயல் ஏதோ மட்டமாக இருப்பதுபோலவும்; அதை மாற்றி னீ மேம்பாடு செய்வதுபோலவும் ஆகும். இறைவன் செய்யும் அந்தப் பெருங்கருணை விரிவருசிப்பு வரிசைப் பாட்டிற்கு மேற்கொண்டு னீ அளக்கிறதுபோலாகும். இதனல் இறைவனுடைய வெறுப்புத்தான் உன்மீது வரும்.

இதேபோல் னம் மெய்வழி மக்கள் செய்யக்கூடாதது இன்னென்றும் உண்டு. அதாவது தூக்கமாத்திரை சாப்பிடுவது. இது மிகவும் கொடியது. தூக்க

னேரத்தில் உங்கள் சுவாசம் 48 அங்குலம் வெளியே பாய்ந்து உள்ளே 24 அங்குலம்தான் வரும். ஒவ்வொரு மூச்சிற்கும் 24 அங்குல மூச்சாகிய வயது துண்டாடிப் பறிபட்டுப்போவது உங்களுக்குத் தெரியுமே, பிறகு ஏன் தூக்க மருந்தைச் சாப்பிடுகிறீர்கள்? தெரியாத பாமரர்கள் சாப்பிடுவது சரி. அவர்கள், தாங்கள் எக் கேடு கெட்டாலும் கவலைப்படுவதில்லை. ஆனால் பரமபத வாழ்விற்கு இடைக்கட்டி னிற்கின்ற னீங்கள் தூக்கத் தின் கேட்டை அறிந்தும், அந்த மருந்துகளைச் சாப்பிட லாமா? தூக்க மாத்திரையானது னம் தேகத்திலுள்ள உணர்ச்சிக் கருவிகளையெல்லாம் மழுங்கடித்து பலாத் கார முறையிலே பைத்தியப் படுத்தித் தூங்க வைக் கிறது. கருவிகளெல்லாம் இவ்வாறு ஒடுங்கத் தொடங் கின உடனே ஒவ்வொரு மூச்சிற்கும் 48 அங்குல சுவாசமாகிய வயது சர்வ சாதாரணமாக பிய்த்துக் கொண்டு போகும். அதோடு விடுவதில்லை. இருக்க இருக்கப் பலத்தைக் குறைத்துக் கொண்டே போய் சாவின் வரம்பிற்கே இழுத்துச் சென்றுவிடும். அதுவும், னோய் வாய்ப்பட் டிருப்பவனுக்குக் கொஞ்ச னேரம் வாதனை குறைந் திருப்பதற்காகத் தூக்க மாத்திரை கொடுப்பதானது, சாவை வருந்தி அழைப்பதற்கே ஒப் பாகும். சாதாரணமாகத் தூங்குபவனைத் திரும்பத் தட்டி எழுப்பிவிடலாம். ஆனால் மாத்திரையில் மயங்கிக் கிடப் பவனை அவ்வாறு எழுப்ப முடியாது. அவனுக்குத் தன் னினைவே கொஞ்சமும் வராது என்றால், தெய்வ னினைவா வரும். அந்த னிலையில் சாவு னெருங்கிவிட்டால் யார் தான் என்ன செய்ய முடியும்? அந்தக் கோர எமனின்

கையில் மாட்டிச் சன்னுபின்னப் படவேண்டியதுதான். இதற்கு ஞேயின் வாதனையை அனுபவிப்பது எத்தனையோ மடங்கு தேவலாமே! வாதனைப்பட்டால் என்ன கெட்டுப்போகுது? "தூக்கம் கெட்டால் னல்லதுதான்" என்ற திட எண்ணம் வரவேண்டும்! "தூங்கினல்தான் னல்லது; இல்லாவிட்டால் உடல் கெட்டுப் போகும்" என்று னினைக்கின்ற பாமர உலகத்தில் னீங்கள் புழங்குவதால் உங்களுக்கு ஞம் சொல்லுகிற இந்த ஜீவரக்ஷிப்பு எண்ணம் வருவதில்லை. இந்தத் தூக்க மாத்திரை விழுங்கும் யோசனையைச் சொல்வதற்கு எத்தனை பெரிய ஆஸ்பத்திரிகள், எத்தனை பெரிய டாக்டர்கள்! அங்கே எல்லோரும் சாவுக்குப் படிப்புப் படிக்கிருர்கள். ஆனல் இந்த னெடிய உலகத்தில் இந்த ஒரே ஒரு எல்லையில்தான் வாழ்வுக்குப் படிப்புப் படிக்கிரும்.

சாவுக்கும் வாழ்வுக்கும், அதனதன் பலாபலன் ஒளிவு மறைவு இன்றி அடையாளத்துடன் இறுதி னேரத்தில் வந்து விடுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஒருவன் ஒரு துக்கத்தைக் கண்ணுல் பார்க்கிருன் அல்லது மனத்தில் னினைக்கிருன். இன்னெருவன் மகிழ்ச்சியைக் கண்ணுல் பார்க்கிருன் அல்லது மனதில் னினைக்கிருன். இரண்டு பேருடைய முகமும் தோற்றத்தில் ஒன்ருகவா இருக்கும்? இருக்காது. ஒருவன் கடைசியில் காலனுடைய கொடூர னரக அமளியில் னுழைகிருன். அந்தக் கொடூர அமளியைப் பார்த்ததும் உண்டாகின்ற பயங்கர அவலட்சணம் அப்படியே அவன் முகத்தில் படிந்து விடுகிறது.

ஆனுல், இன்னெருவர்கள், இறுதித்தருவாயில் அளவற்ற அழகும் அளவற்ற மணமும் அளவற்ற இனிமையும் பொருந்திய சுவர்ணபூரண உலகுக்குள் னுழைகிறுர்கள். அந்நப் பொன்னுலகின் மேலாம்பரமான மகா அதிசய வண்ண எழிலினைப் பார்த்தவுடன் உண்டாகின்ற எக்களிப்பும் மகிழ்ச்சிப் பூப்பும் அவர்கள் முகத்தில் அப்படியே மின்வீசி னிற்கிறது. இல்லாவிட்டால் முகம் அப்படிச் சிரித்தவண்ண மிருக்குமா? அந்நப் பேரின்ப உலகிற்குள் னுழையும்போது தங்கள் பெண்டு பிள்ளை தாய் தந்நை எவ்ரையும் தேட எண்ணம் வராது. அவர்கள் கிட்டே வந்நாலும், "தூ" என்று துப்பி எட்டி உதைத்துத் தள்ளிவிட்டுப் போகும். காலமெல்லாம் வறுமையில் வாடிய ஒருவ்ன் திடீரென்று பெரும் புதையலைக் கண்ட பின்னும் முந்நிய வறுமை வாழ்க்கைக்குத் திரும்பவா மனம்வரும்? தங்கள் உற்ருர் உறவினர் எல்லாம் தூரப்பட்டுப் போய்விடும். சுற்றி இருப்பவர்கள் துக்கத்தோடு அழுதுகொண்டு இருக்க, தாங்கள் மட்டும் மகிழ்ச்சி பூக்கும் இளனகை யோடு காணப்பெறுவார்கள். அந்ந னேரத்தில் இந்ந உலக சம்பத்தெல்லாம் அவர்களுக்கு எட்டிக்காயா யிருக்கும். இங்கே தங்கமலை வைரமலையாய்க் கொட்டிக் குவித்து வைத்துக்கொண்டு வா வா என்று அழைத்தாலும், அவர்கள் னினைவு அவற்றை எட்டியுதைத்து விட்டுப் போகும். ஜீவப் பிரயாணமானவர்களைப் பார்த்து, "இது தன் மனைவி, தன் தாய், தன் சொந்நம்" என்று சுற்றியிருப்பவர்கள் னினைத்துக்கொள்ளுகிறுர்கள். ஆனுல், அவர்கள் ஜீவனே, தன் சாதி வேறே, குலம் வேறே, மதம் வேறே என்று போகிறது. வாழை

யடி வாழையாக அது எந்த எல்லையிலிருந்து இவ்வுடல் எடுத்து வந்ததோ, அந்த தேவத் திருச்சன்னிதியினிடத்தில் போய்ச் சேர்ந்துகொள்ளுகிறது.

இந்த அருங்காரணக் காட்சியைக் கண்டும்கூட, தாய் தந்தை அண்ணன் தம்பி என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு "நாமும் அவர்கள் அடைந்த எல்லையில் போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்" என்ற எண்ணம் வரவில்லையே. இந்த எண்ணம் வராவிட்டால் நாளைக்கு அவர்கள் கதி என்ன? நரி, நலம்குலைந்து, நாய் அடிபட்டாற்போலப் போகவேண்டியது தானே? நீச்ச நரகப் பிறப்பில் உள்ளவர்களுக்கு, இந்த வான் துதிக்கும் தேவ சாதியின் மேன்மை எப்படித் தெரியும்?

கல்லிலிருந்துதான் இரத்தினம் பிறக்கிறது. ஆனால், கல்லும் இரத்தினமும் ஒன்று? கல்லானது அடிபட்டு உடைபட்டுக் கால்களில் மிதிபட்டுக் கிடக்கிறது. ஆனால் இரத்தினமோ அரசனுடைய சிரசிலே ஏறிக்கொள்கிறது. இது வேறே இனம். அது வேறே இனம். அதுபோலவே நம் மெய்வழி விசாலாக்ஷி அனந்தகியும் நரகக் கல் முள்ளிடை பிறந்த ஜீவரத்தினம்.

இந்த அருங்காரண நிகழ்ச்சியைப்பற்றி நீங்கள் அனைவரும் உங்களை நேசித்தவர்கள் எல்லோருக்கும் சொல்லவேண்டியது, உங்கள் ஒவ்வொருவர் தலையின்மேல் ஏற்றியுள்ள கட்டாயக் கடமை உள்ளது. உங்களை நேசித்தவர்களிடம் நீங்கள் இதைச் சொல்லவில்லை என்றால், அவர்களுடைய ரத்தப்பழி உங்களு

டைய கையிலே கேட்கப் பெறும். இது வேதத்தின் தீர்ப்பு. இது னீங்கள் புகுந்துகொண்டுள்ள வான்குல சாதிக் கடன். அதை உங்களுக்குச் சொல்லவேண்டியது எமக்குக் கடன். ஆகவே ஞம் சொல்லிவிட்டோம். இந்நக் கடனையெல்லாம் 'இப்பொழுது கேட்கமாட்டோம். னீதித் தீர்ப்புக்காக மண்ணில் இருப்பவர்களை எழுப்பி, இந்நத் தூலத்துக்குப் பதிலாக அந்ந னித்திய தூலம் கொடுக்கும் ஞளிலே அது கேட்கப் பெறும். இப்போது எந்நத் தவத்தோடும், தோற்றத்தோடும் அடக்கம் ஆகிறார்களோ, அதே தோற்றத்தோடும் தவத்தோடும்தான் அப்பொழுது எழுப்பப் பெறுவார்கள். னீதித் தீர்ப்புக்குப் பின்தான் அந்ந னித்திய பேரின்பத் தூலமோ அல்லது னித்திய னரக அவஸ்தைத் தூலமோ தரப்பெறும். அவரவர் தங்கள் ஆசானோடு ஒட்டிய னடைமுறைக் கேற்ப, அவரவர் தவத்தளவுக் கேற்ப, பலன் அளக்கப் பெறுவார்கள்.

ஆகவே பரிசுத்த ஜீவப் பிரயாணத்தோடு கடன் கட்டியாயிற்று என்று எண்ணிவிட வேண்டாம். அது ஆசானுடைய அந்நஸ்துக்காக, கீர்த்திக்காக, பெருமைக்காக, தங்களின் மானம் கெட்டுப் போகக்கூடாதே என்பதற்காக உங்களுக்கு இனுமாகத் தரப்பெறுகிறது. இல்லாவிட்டால் னீங்கள் என்ன தவமா செய்து கிழித்து விட்டீர்கள்? அல்லது னீங்கள் பாடு பட்டதனுல் இது கிட்டியதா? இந்நப் பாமர பாட்டுக்கெல்லாம் கிட்டக் கூடியதென்றால் தேவகோட்டை வெங்கடாசலம் செட்டியார் என்ற மெய்வழி தேவேந்நிர அனந்நர் இங்கு வருமுன் போகுமிட மெல்லாம் சதா பூசைப் பெட்டி

யைச் சுமந்து கொண்டு பாடுபட்டாரே. அவருக்கல்லவா முதலில் கிடைத்திருக்க வேண்டும். அவருக்கே கிடைக்கவில்லையே! இங்கு வந்தல்லவா அவர் அந்த சாகாவர ஜீவ பரிசைப் பெற்றார். அந்தப் பரிசுபதம் பெறுகிறவர்கள் நீங்கள் தான் என்றாலும் உங்களுடைய பாட்டுக்குக் கூலியா— அது? இல்லை. தெய்வ ஆசானின் கையகத்தானீர்கள். அவர்களுடைய பெயர் உங்களுக்கு வைத்தாயிற்று. ஆகவே அந்தப் பெயருக்கு ஏற்ற பதவியும் உங்களுக்குத் தரப்பெறுகிறது; அவ்வளவுதான். மற்றப்படி உங்கள் தவப்பாட்டைப் பற்றிய கேள்வி இப்போது கேட்கப்பட மாட்டாது. பிரேதக் குழியிலிருந்து எழுப்பப்பெறும் நாளிலேதான் அது பற்றிக் கேட்கப்பெறும். அந்த இறுதி நீதித் தீர்ப்பு நேரத்தில், இந்த உலகத்தில் உள்ளதுபோல் ஒளிப்பு மறைப்போ, ஏழை பணக்காரன் என்ற ஏற்ற இறக்கமோ, முகத்தாட்சண்யமோ எள்ளளவும் இருக்காது. அவனவன் நன்மை தீமையானது மகாத்திட்ட வட்டமாகப் பாரபட்சமில்லாமல் நிறுவை செய்யப்பெறும். அந்த உருக்குமுகச் சோதனையில் தப்பிக்கிறதென்றால், அது அவனவன் இப்போது தன் ஆசானிடம் ஒட்டி யிருக்கும் உண்மையான அன்பினாலேயே அன்றி வேறெதனாலும் ஆகாது. அந்த நீதித் தீர்ப்பு எல்லைக்குத்தான் மகசர் மைதானம் என்று பெயர். அந்தக் கண்டிப்பான கறாரான தீர்ப்பு மைதானம் எங்கேயோ உண்டாகப் போகிறது என்று எண்ண வேண்டாம். அதுவும் இங்கேதான். இது தான் அது என்று தெரிகிற

காலம் வெகு தூரத்திலில்லை. ஆடிதொட்டு னடைபெறும் ளுளில் எல்லோருக்கும் இது திட்டமாகத் தெரிய ஆரம் பிக்கும். எல்லாம் னிர்த்தூளியாகக் கொலைக்களமாக இருக்கும். இந்த எல்லையைப்பற்றி னிணைக்கக்கூட னேரம் இருக்காது. அப்போது எங்கே போய்த் தப்புவார்கள்? - என்று னீதி உருவாய் னிறைந்நொளிர் தெய்வமாகிய சாலை ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்நருளி ளுர்கள்.

57

தூலத்தை அறிந்நவர் தேக பண்டிதர். சூக்ஷ மத்தை அறிந்நவர் ஜீவ பண்டிதர். காரணதேகத்தை அறிந்நவர் ஞான பண்டிதர்.

58

உலகத்தவரின் ஞானம் கரும்பை அடியிலிருந்து னுனிக்குச் சுவைத்து வருவது போலிருக்கும். ஆனல் னம் கையிலுள்ள ஞானம் கரும்பை னுனியிலிருந்து அடிக்குச் சுவைத்து வருவதுபோ லிருக்கும். அவர்கள் ஞானம் சாக்கடைக் குட்டை போன்றது. னம்மது சுத்த ஜலக் கடல் - கரை காணுத முதல். னீ இந்த உன்னத அறிவுப் பிறப்பில் இருக்கும்போது இது வந்நிருக்கிறதே, என்ன அருமையான வாய்ப்பு.

59

பாவச் சுவாலையில் தவிக்கும் மக்களுக்கு னம் மெய் வழிப் பொன்னரங்கம் ஒரு னிழலாக இருக்கிறது. பிறவி னோய் தீர்க்கக்கூடிய கூடஸ்தமே சாலைப் பொன்னரங்கம்.

60

வேதம் இருக்கிறது. ஆறுவது அறிவு இருக்கிறது. சூக்குமதேகம் இருக்கிறது. ஆகவே, உனக்கு அவற்றை விளக்கித்தரப் பாரவான்களும் வருவார்கள் என்பது நிச்சயம்.

61

அறுசுவை அறிபவன் மனிதன். அந்த அறு சுவைகொண் டொளித்த இடம், அதாவது ருசிசேரும் இடம் அறிந்தவர்கள் தேவர்கள்.

62

யுக யுகந்தோறும் வருவேன் என்று கூறிவிட்டுச் சென்ற கிருஷ்ண பரமாத்மா, இப்போது இப் பூமியில் வந்து பிறந்திருந்தால் உனக்கு அவரை அடையாளம் தெரியாது. ஆனால், நாம் அடையாளம் சொல்லுகிறோம். அன்று அர்ச்சுனருக்கு அவர் செய்த உபதேசம் - விஸ்வ ரூபக் காட்சி - எந்தச் சன்னிதியில் நிகழ்கிறதோ அவரே கிருஷ்ண பரமாத்மா. செயல்தான் அடையாளம். உடல் அடையாளம் அல்ல.

63

மனிதனுக்கு உன்னத அறிவு தந்தது எதற்கு? எல்லோரும் ஓர் குலம் என்பதை அறியவே. இந்த எண்ணம் ஒருவனுக்கு வந்துவிட்டால் கயிலாய வீடு தான் அவன் அடையும் முடிவு. இந்தச் செயலைச் செய்யவே சாலை வந்தது, நாமும் வந்தோம்.

64

மூச்சு லயமாகிய மனேலயத்தைச் செய்து வைப்ப வரே குரு. அதை அவர்கள்பால் பெற்றுக் கொள்பவனே மறுபிறப்பாளன்.

65

னித்திய தேகத்தைக் கைபோடவே இந்ந அறிவுத் தூலத்தைப் பெற்றிருப்பது. இதை னீ னம்பு என்கிறேம். னம்பாவிட்டால் ஞசமாகத்தான் போவாய். "ஞசமாகப் போ" என்று ஞம் சொல்லாவிட்டாலும் அப்படிப் போகத்தான் போகிறர்கள்.

66

ஒரு தேவ குருபிராஃன உன் இஷ்டத்திற்குப்பணி யவைப்பது, கரும்பு உருண்டு எறும்பினிடம் போவது போல ஆகும். அப்படிப் போனல் எறும்பின் கதி என்ன ஆகும்? இன்னும், புலியை மனிதனேடு விஃளயாட அழைப்பது போலவும் ஆகும். அவர் கஃளப் பணிய வைப்பது இறைவஃனப் பணிய வைப் பதுவே. உன் ஜீவ ரட்சிப்புக்காக அவர்கள் பணிந்து கீழே இறங்கி வந்நாலும், ஒரே உசும்பில் தங் ஙள் உலகுக்கு ஏறிவிடுவார்கள்.

67

இந்ந உலக அற்ப அனித்திய வேஃலகளாகிய உழவு வேஃல, ஜட்ஜ் வேஃல இவற்றையே ஒரு ஞளில் பழக முடியாதென்றல், பிரம்ம வித்தையாகிய அந்நப் பாரப் பெரிய ஜீவ ரக்ஷிப்பு வேஃலயைப் பழக எவ்வ ளவு காலம் வேண்டும்? னீண்ட காலத்தோடு, பெருங்

நுணம், பெருந்நகை, பெருஞ்ஞெயல்,பேரறிவு எல்லாம் வேண்டும்.

68

ஒவ்வொருமனிதனும் ஈசனுடைய ரூபத்தில் படைக்கப்பெற்றுள்ளான். அவனவன் செயலாலேயே மனுஈசன் அல்லது மனுனிசன் ஆகிறான். உப்பு னுவில் இல்லா விட்டால் உப்பை உணர முடியுமா? அது போலவே னம் உள்ளத்தில் தேவ ஞானம் ஆதியிலே படைக்கப்பெற்றிராவிட்டால் ஞானத்தை இன்று னம்மால் உணரமுடியாது. வித்தியா தத்துவமென்றும், அமானிதம் என்றும் சொல்லப்பெறும் அந்ந மெய்ப்பொருள் மனிதனிடத்தில்தான் இருக்கிறது. எவ்வளவு வலிமையுடைய மிருகமாயினும் அதனிடத்தில் அது கிடையாது. அந்ந மெய்ப் பொருளைக் கைப்பற்றிக் கொண்டவர்களே 'மனு ஈசன்' என்ற பதத்தில் ஆகின்றவர்கள்.

69

மக்களின் னினைவென்னும் ஆகாயத்தில்தான் சுவர்க்கலோகம் கட்டப்பெறுகிறது. னினைவென்னும் ஆகாய வெளியில்தான் சர்வ சம்பத்தும் இருக்கிறது. அதில் காலமெல்லாம் தீமையே ஏற்றி வந்நால், இறுதி னேரத்தில் உங்கள் கதி என்ன ஆகும்?

70

ஞய் பெற்றுள்ள இந்ந அனித்திய அசுத்த தேகத்தோடு இறைவனுடைய பரிசுத்த சன்னிதிக்குச் செல்ல முடியாது. ஆகவே, இந்ந அனித்திய உடல் இருக்கும்

போதே இதனுள் இருக்கும் னித்திய முத்தி தேகத்தைப் பெறவேண்டும். இந்த அனித்திய தேகம் ஒரு கத்தியைக் கண்டால் பயப்படும். னெருப்பைக்கண்டு அஞ்ஞும். பசி, பிணி இவற்றால் துயருறும். ஆனல் கோடி சூரியப் பிரகாசமான ஒரு னித்தியதேகம், ஜெய வீரதேகம், ஆயுதம் னெருப்புத் தீண்டாத தேகம், பசி தாகம் னேய் எட்டித் தீண்டப்படாத தேகம், இந்தப் பீத்த உடலுக்குள் இருக்கிறது. ஈசனுகிய அந்தத் தேகத்தைக் கை போட வந்தவர்களே, அதிசோபன வரவாகிய அந்த மகா சம்பத்தைப் பெற வந்தவர்களே எல்லோரும். ஆனல், அந்தத் திருஸ்தலத்திற்குக் கூட்டிப்போகிற அதிவல்லவராகிய ஒரு குருகொண்டல் கிடைக்காமலும், அவர் இருக்கும் எல்லையைத் தெரியாமலும், தெரிந்தாலும் னெருங்கி அவர் மன னேக்கிற்கு இணங்கி னடக்க இச்சையும் னேரமும் இல்லாமலும் எல்லோரும் வீணே போகின்றார்கள்.

71

மெய்ஞ்ஞானப் பாரவான்கள், தாங்கள் இயற்றியுள்ள கிரந்தங்களை மக்கள் உரை செய்து கண்டு பிடித்துக் கொள்ளட்டும் என்று மறைத்துக் கூறும் வஞ்சகர்கள் அல்ல. மெய்யை னேருக்கு னேரே வைத்துத்தான் அவற்றில் பேசியுள்ளார்கள். ஆனல் மக்களின் அறிவிற்குமுன்னே ஒரு பாவத் திரை இருப்பதால் மெய் புலப்படவில்லை. ஒரு மெய்ஞ்ஞான சற்குரு பிரானின் அஞ்ஞன சலாகை கொண்டு அத்திரை கிழிக்கப்படும் வரை வேத உலகம், னூல் உலகம் விடியாது.

72

உபதேசம் பெற்ருன் என்ருல், ஜீவதேக தெரிசனம், விஸ்வரூப தெரிசனம் பெற்ருன்; ஈசனுடைய தேகம் பெற்ருன் என்றே பொருள்.

73

தீர்த்தம்:— அகாலத்தில் வரும் எமனுகிய மிருத்யுவைக் கண்டிப்பதும், சர்வ ரோகங்களைத் தீர்ப்பதும், சர்வ பாவங்களைச் சங்கரிப்பதுமாகிய ஒரு தெய்வத் தனிப்பிரானின் திருச்சன்னிதியில் எழும்பி வர்ஷிக்கும் அமுத தாரை.

74

மெய்ஞ்ஞானிகளின் னூல்களுக்குத் தன்னை அறியாதவர்கள் செய்யும் உரை, தங்கக் குடத்திற்குக் கம்பளி உறை போட்டு, "இந்தா! அதன் அழகு னன்ருகத் தெரிகிறது பார்" என்று சொல்வதுபோல் இருக்கிறது.

75

உலக மக்களின் தான்தோன்றி ஞானம், னெல்லை விற்றுக்கொண்டே லண்டன் போவதுபோ லிருக்கும். ஆனல், மெய்ஞ்ஞானம் ஒரு தேவ ஆசானைப் பெற்று, தன்னுடைய இதய மேருகிரி வீடு பிரகாசமாகி, மெய்யான வழித்தடம் பிடித்து னடப்பது. அது, அதே லண்டனுக்குப் பவுனை வாங்கிச் சேபியில் போட்டுக்கொண்டு போவதுபோல் இருக்கும்.

76

சென்ற பத்து வருஷங்களில் னீ என்ன வேலை செய்திருக்கிருய் என்ருல், 'வீடு கட்டினேன்' என்பாய்;

'எலியும் விடுகட்டி யிருக்கிறதே' என்ருல், அதற்கு என்ன பதில் சொல்வாய்? 'இல்லே - ஞன் ஒரு கோயில் கட்டினேன்' என்பாய். னீ உண்டாக்கிய கோயிலுக்கு முன் அந்நத் தெய்வம் எங்கிருந்நது என்ருல் விழிப் பாய். ஆகவே, இதுவா உன் வேலே? மேற்கொண்டு கைலாயம் போவது னம்மால் முடியுமா? அது புண்ணி யர்களுக்கு வாய்ப்பது என்கிருய். அப்ப, உன்னேயே னீ கையாலாகாதவன், பாபி என்று சொல்லிக் கொள் கிருய். இறைவன் உன்னே அப்படிப் படைக்கவில்லே. அந்நச் சிரஞ்ஞீவி உலகுக்கு அரசனுக, ஈசனுக ஆகவே, னித்திய வலிமை யென்னும் அமானிதமாகிய வித்தியா தத்துவப் பொருளே வைத்து, னீ மனித தேகத்தில் படைக்கப்பெற்ருய். இதை னிரூபித்து உன்னே அப் படி ஆக்கவே னும் வந்நிருக்கிருேம்.

77

அஹிம்சை என்பது, னம்பிய தன்னுயிரைத் தற் கொலே செய்யாது, னித்திய தேவ வாழ்க்கையைப் பெற்று வாழ்வதற்கு ஒரு தேவ ஆசானே அடைந்து, தன்னுடைய அழிதேகத்தின் சேஷ்டைகளே எல்லாம் னீக் கிப் பஞ்ஞமா பாதகங்களேத் தவிர்த்து னடப்பது - இன் னும் எல்லாப் பாவங்களேயும் எல்லாக் கவலேகளேயும், எல்லாத் துயரங்களேயும் சர்வ சங்காரம் பண்ணக் கூடிய வேத குலாதீத எல்லேக்கு வழிகூடி னடப்பது.

78

பிறவிப் பிணியை னீக்க யாராலும் முடியாது. அதைப் போக்க, மெய் என்னப்பெற்ற அழியா அரு

மருந்தை அளிக்கின்ற ஒரு ஜீவ பண்டிதர் னமக்கு வேண்டும். அப்பேர்க்கொத்த ஜீவ பண்டிதர்கள் இவ் வுலகிற்குக் காலகாலம் தேவனுட்டிலிருந்து இறங்கி வந்து மக்களிடையில் னேரே பேசினுர்கள்; கூவி அழைத்தார்கள். அப்பொழுது அவர்களைத் தூஷித்துப் புறக்கணித்தார்கள். ஆனுல் அவர்கள் போனபின் அவர்கள் பாடிவைத்துள்ள பாட்டுக்களைப் பாடுவது, பூஜிப்பது, கோவில் கட்டித் திருவிழா னடத்துவது வழக்க மாகி விட்டது; இதைப் பார்க்கும்போது புருஷன் உயி ரோடிருக்கிற காலத்தில் அவனைப் புறக்கணித்துக் கொண்டித்தனமாக வாழ்ந்துவிட்டு, அவன் இறந்தபின் அவனை னினைத்து ஆறுகால பூஜை செய்பவளைப்போ லிருக்கிறது.

79

கைலாசவாசரின் திருச்சன்னிதி அடைந்து, அவ ரது கொலுவாசனத்தில் அமரவே, இத்தேகத்தின் அதி பதியாகிய ஸ்ரீமன் னுராயண மூர்த்தியின் திருச்சன்னிதி னிழல் போய்ச் சேரவே, னும் இந்த மானிடச் சட்டை எடுத்தோம். இதனை விட்டு ஒரு அட்வகேட் ஆக, பணக்காரர் ஆக, னுடாளும் மந்திரியாக ஆவதற்கு இத் தேகம் எடுக்கவில்லை.

80

உன் மனம், ஒன்றைப் பார்த்த பின் தான் அந்த ரூபத்தை னினைக்கும். அதேபோல இறைவனை, அந்தக் கோடி சூர்யப் பிரகாசத் திரு வல்லபப் பிரபுவை ஒரு தடவையாவது சந்தித்திருந்தால்தான் உன் மனம் அந்தத் திருச் சன்னிதிக்குப் போகும்.

உன் மனைவியை னினைத்தால் உன் எண்ணம் வீட்டிற்குப் போகும். ஆனல் உனக்குக் கல்யாணம் ஆவதற்கு முன் "மனைவி" என்றதும் உன் எண்ணம் வீட்டிற்குப் போகுமா? போகாது. இது, இகத்தில் எப் படியோ அதேபோல்தான் பரத்திலும்.

81

கல்வியில் மெய்க்கல்வி, பொய்க்கல்வி என்று இரண்டுவகை இருக்கிறது. பொய்க்கல்வியின் செயல், அழிந்துபோகிற பொய்ப்பொருள் பொய் மதிப்புக் கொடுத்து, இறுதியில் னீங்காக் கஷ்டத்தில் கொண்டு போய் மாட்டிவிடும். னல்ல குதிரையின்மேல் ஏறிச் சென்ருல் னினைத்த ஊர்போய்ச் சேரலாம். ஆனல் ஒரு சண்டிக் குதிரையை னம்பி ஏறிச்சென்ருல், பல்லுப் பகடு போகின்ற ஆபத்துத்தான் வரும். ஆகவே மனித னுகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமை, துவக்கம் முடிவு இல்லாததும், எக் காலத்தும் அழியாததுமான பிரம்மரந்திர அதிமகோன்னத பீடத்தை அடைவிக் கின்ற மெய்க்கல்வியை அது இருக்கும் எல்லை னுடி அடைவதே.

82

னம் மனைவி மக்கள் மீது னும் வைக்கும் அன்பை விடவா இறைவன் னம்மீது வைக்கும் அன்பு குறைவாக இருக்கும்? னும் தூக்குகிற ஒரு கனம் கொண்ட கல்லை னம்முடைய குழந்தையைத் தூக்கச் சொல்லுவோமா? சொல்ல மாட்டோம். அவ்வாறிருக்க, னித்திய உடலோ னுகிய அத் தனிப்பெருங்கருணை ஏகனுயகன், னீ சுமக்க

முடியாததையா கடமையாக உன்மீது சுமத்துவான்? சுமத்தவில்லை.

83

நம் இந்த மனிததேகம் எடுப்பதற்குமுன் தகப்பனின் விந்துவாகவும் தாயின் சுரோணிதமாகவும் இருந்நோம். அதற்கு நற்பத்தெட்டு நாளைக்கு முன் இரத்தமாக இருந்நோம். அதற்கு இரண்டரை நாழிகைக்கு முன் உணவாக இருந்நோம். அதற்கு முன்னே அந்த உணவுப் பொருள்களைத் தருகின்ற புல் பூண்டுகளாக இருந்நோம். ஆகவே, நம் இந்த மனித தூலம் எடுப்பதற்குள் எத்தனை பிறப்பு எடுத்து வந்துள்ளோம் என்று எண்ணிப்பாருங்கள்.

84

முன்னே வந்த பாரவான்கள், மகாத்மாக்கள் இறந்து போகவில்லை. இறந்துவிட்டார்கள் என்று எம் முன்னால் நிரூபிக்க முடியாது. நித்திய சூரிகளாக நித்திய லோகத்தில் நித்திய சுகபோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாற்றக் கூரை வீட்டைத் தூக்கி எறிந்து விட்டுச் சுவர்ண மாடிவீட்டுக்குக் குடியேறியுள்ளார்கள். அவர்களைப் பார்க்க உனக்குக் கண் இல்லை. உன் இதய லோகத்தை இரண்டாகப் பிளந்து, அங்கு பிரம்மப் பிரகாசத்தைத் தரிசிக்கச் செய்துவைக்க வல்லவர்களே அம் மகத்துக்களை உனக்குக் காட்டமுடியும்.

85

உலக காரியத்திற்கு நம்முடைய சபை இல்லை. ஆத்மார்த்திகமாகிய உள்ளமைத் தெய்வீக வளர்ச்சிக்கே இது இருக்கிறது. இது அரசனிடமும் தேவையற்ற சபை. அழியாத ஐஸ்வரியமுடைய அந்த ஏகனிடமே தன் தேவையை எதிர்பார்த்து நிற்கிற சபை.

86

இந்தப் பூமி அவஸ்தையாகிய ஒரு நிலைக்கு வந்து விட்டது. தன்னுடைய பாரத்தை மாற்றத்தான் போகிறது. பிணங்களைப் பன்றிகளைப் பாம்புகளைக் கூடச் சுமக்கும். ஆனால் பாவம் நிறைந்துவிட்ட இந்த மனு சதளங்கோடிகளை இனிச் சுமக்காது. ஒதறி எறியப்போகிறது. அதற்கான ஒரு நிவாரண காலம் நெருங்கி வந்துவிட்டது.

87

உலகத்தில் ஒருவன் வைரம், வைடூரியம் வாங்கி விற்கிறான். மற்றொருவன் கருவாடு வாங்கி விற்கிறான். பேரளவில் இரண்டுபேரும் வியாபாரிகளே. ஆனால் செயலளவில் அவர்களுடைய குணம், வரவுசெலவு முதலிய யாவும் வெவ்வேறு யிருக்கும். கருவாடு வியாபாரியிடமே புழங்கி இருக்கிறவர்கள் வைர வியாபாரியிடம் வந்து, அந்த நாற்றத்தைக் காணோம் என்று குறை கூறுகிறார்கள். காலமெல்லாம் பொய்யிலேயே புழங்கியவர்கள் எம்மிடம் வந்தும் இந்த உலக அழிசெயல் வரவையே எதிர் பார்க்கிறார்கள்.

88

மனிதர்கள் மாறி மாறிப் பேசுவார்கள். நும் அப்படிப் பேச மாட்டோம். ஏன்? உலகத்தை உய்விக்கின்ற ஒரே தொழில்தான் எமக்குத் தெரியும்; ஆகவே அதையே அன்றும் பேசினேம், இன்றும் பேசுகிறேம், என்றும் பேசுவோம், செய்வோம். எல்லோரும் இந்த மெய்ஞான நித்திய செல்வத்தைப்பெற்று அனுபவிக்க வேண்டு மென்பதே எமது முழு இச்சை.

89

வேத சாஸ்திரங்களைப் படித்துத் தேர்ந்து எம்மிடம் வரவேண்டியதில்லை. சர்வலோக சரண்யனைப்பற்றி நும் போதிக்கும்போது உன் அறிவே உனக்கு வாத்தியாராக நின்று விளங்கும். ஆகவே எமது வார்த்தைகளை உன் காதில் நுழையும்படிச் செய்துகொண்டால் போதும். அது உனக்கு அறிவிக்க வேண்டியதை யெல்லாம் அறிவிக்கும்.

90

எமனுடைய ஆயுதத்தை எரித்து, மனிதர்களை அவன் கையிலிருந்து மீட்பிக்கின்ற எமது அருங்காரணச் செயலை யாரேனும் வேண்டாமென்று சொல்வார்களா? நம்மைப் போல் உடலெடுத்து வந்துள்ள மனிதர்கள் என்று இச்சித்தே நும் வந்தோம். முன்காலத்தில் அறியாமையால் சீச்சிக்கழித்தாலும் இன்று இதை விரும்புவார்கள் என்றே, எல்லோருடைய செவிக்கும் போய் எட்டச் செய்யக் கூடிய தனைத்தும் முழு முயற்சி கொண்டு செய்துவருகிறேம்.

91

னம் கையில் ஞும் ஒரு மருந்து கொண்டுவந்திருக்கிரேும். அது அரு மருந்து – வேத மருந்து – சிவ மருந்து- எமன் அணுகாச் செல்வ மருந்து – ஜீவப்பிணி னீக்கும் தவ மருந்து. முன்காலத்திலும் இம் மருந்து கொண்டு வந்தோம். ஆனல் மக்கள் சீச்சிக் கழித்து விட்டார்கள். இப்பொழுது அதையே இக் கலிக் கடையில் ஞும் கொண்டு வந்திருக்கிரேும்.

மாதவன் தவமருந்து – சிவமாதவன் பிரம்ம மாதவன் கயிலே மாதவன் மருந்தொன்று எம்மிடம் இருக்கின்றது. அதை வாங்கி உண்டவர்களுக்குப் பிறவிப் பிணி தீரும். னிச்சயம் தீரும்.

92

குரு என்பவர்கள் உன் தலே ஓட்டில் உள்ள விதி எழுத்தை மாற்றி, மதி எழுத்தை அங்குப் பதிப்பிப்பார்கள். உன் பாவ இருட்டை உலர்த்தி, உன்னுடைய இதயாசனத்தில் சிவன் என்னும் வாடாத தீபத்தை ஏற்றிவைப்பார்கள். சிரஞ்ஞீவிப் பட்டத்தை உன் தலேயிற் சூட்டிவைப்பவர்கள் அவர்களே.

93

எம்மை னீ அடைந்தாயானல், பஞ்ஞாட்சரமாக விளங்கும் அந்தப் பிரணவ சொரூபக் கொழுந்தை உன் மதிக்கரத்தில் கைப்பந்தாகப் பெறுவாய். அந்தக் கவன மணிக் குளிகையின் உதவிகொண்டு செல்வச் சிவ ஞட்டை அடைவாய். ஒரு பறவை ஒரு கொம்பைவிட்டு

மறு கொம்பில் போய் உட்காருவதுபோல அது இருக்கும். அவ்வளவு எளிதிலும் எளிதாக இந்த அதிவல்லபச் செயலைப் பழக்கவே னும் வந்திருக்கிறேம். அறுபத்துஏழு சாதிகளைக்கொண்ட பல ஆயிரக்கணக்கான பேர்களைப் பழக்கி விட்டோம், பழக்கி வருகிறேம், பழக்கி வருவோம்.

94

முன் காலத்தில் பெரியவங்க எழுதும்போது "உ" பிள்ளையார் சுழிக்குச் சமத்துவமாக எதையும் எழுத மாட்டார்கள். ஏட்டின் தலையில் அந்த அடையாளக் குறி போட்டுவிட்டு, னேர் கீழே "சிவமயம்" என்று எழுதுவார்கள். இந்தப் பெரும்பலனே, சிவமலையைப் பற்றிப் பேசி, பிரயோசனத்தளவில் உங்களுக்குத் தருபவர்கள், இன்னெடிய உலகத்தில் இது காலம் எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. உங்கள் ஜீவனுக்கு அவசியமாக வேண்டிய அந்தச் சிவசெங்கோலை ஒரு சத்திய சுத்த வாக்கியராகிய மெய்க்குருபிரான் இரக்கத்தால் தான் னீங்கள் பெறமுடியும்.

அதுவே னற்ருள், சிவனடி பாதம், ஆதம்பாதம். அத் திருப்பாதம், உன் னெஞ்ஞகமாகிய னடு வீட்டில் வைத்திருக்கும் புதையல். புராதனச் சொத்து. அதை அறியாதவர்களே கல்லாதவர்கள்.

95

இத் தூலத்திலிருக்கும் போதே, தெய்வத் திருனடாகிய பிரணவ னட்டிற்குப் போய்வரும் திருவிளையாட்டைப் பழக்கித் தருவதுவே மெய்க்கல்வி. அதுவே சாகாக் கல்வியாகிய பிரம்ம வித்தை.

96

எமது சொந்த தேகம் அழியாதது, அநாதியானது. அதைப் பெறவே நாம் பிறந்தோம். உன்னைக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக உன்பால் அது வைக்கப்பெற்றிருக்கிறது. அதையே மூல மந்திரம், பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என்பர். அதைப் புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய்ச் சந்திப்பதையே வேதம், பிரம்ம வித்தை என்று கூறுகிறது.

97

உன்னுடைய இதயத்தின் இருளை நீக்கி, கோடி சூர்யப் பிரகாச ஆணிமுத்தாகிய மணி மந்திர மவுன வித்தை, அங்குக் கொண்டுவந்து வைப்பவரே குரு. இச்செயலன்றி ஒருவன் எவ்வளவு படித்து ஓதினவனயிருந்தாலும், எவ்வளவு பூஜை தொழுகை வணக்கம் உடையவனுக இருந்தாலும், எவ்வளவு புகழ் ஆட்சி சம்பத்து உடையவனுக இருந்தாலும் குருவாக மாட்டான்.

98

நீ பார்க்க இறந்துபோன உனது பாட்டன், இப்போது ஒரு எல்லையில் உடல் எடுத்து வந்நால், உனக்கு அவரை அடையாளம் தெரியுமா? தெரியாது. அவ்வாறுயின், பாவம் மிகுந்து நாஸ்திகம் வலுக்கொண்டெழுந்து, இருள் கப்புகிற காலத்தில், உலகு படு அழி துயர் தீர்ப்பதற்காக ஓவாது பிறந்திடுவேன் யுகந்தோறும் யுகந்தோறும் என்று கீதையில் சொல்லியுள்ள ஸ்ரீ கண்ணபிரான், இப்போது உடல் எடுத்து

வந்நால் அவரை உனக்கு அடையாளம் தெரியுமா? ஆகவே, அவர் கையில் அதுளள் கொண்டுவந்த அந்தப் பிரம்ம வித்தைச் செயல் படைத்தவர் எந்த எல்லையில் காணப் பெறுகிருரோ அவர்தான் பகவான். அந்த எல்லையே குருக்ஷேத்திரம்.

99

அழிந்து போகிற சரீர வளர்ச்சிக்குரிய உணவு லாபம் உனக்குத் தெரியும். பண லாபம் தெரியும். அழிகீர்த்தி லாபம் தெரியும். ஆனல் உன் கண்ணுக்கும் செவிக்கும் மற்றைய புலனுக்கும் வாக்குக்கும் உணர்ச்சிக்கும் எட்டப்படாத அந்த வல்லப வஸ்துவோடு கலப்பதில் வரும் லாப னஷ்டம், பொய் மெய் தெரியுமா? தெரியாது. ஆகவே அதோடு *உறவாடிக் கலந்து அதில் லாப னஷ்டம் தெரிந்தவர்கள் வாய்க்கும்போது னம் அறிவை அவர்கள்பால் தத்தம் செய்து விட வேண்டும். அவர்கள் அறிவை முன்னே வைத்து, நும் பின்னே னடக்க வேண்டும்.

100

பொன் அறம் பிறந்த பீடபூமி - சர்வ பூமிகளையும் சர்வக்ஞத் தன்மைகளையும் சிருஷ்டித்துத் தருகின்ற திருப் பூமி; எல்லாவற்றிற்கும் சர்வ அழகுகளையும் சர்வ உயிர்ப்புகளையும் தர்மமாக அளந்து கொண்டிருக்கிற திருஸ்தலம்; சர்வ கலைகளையும் பெற்று வளர்க்கிற மதி வளரும் பூவனம், உத்தியோவனம், தண்டகாரண்யம், ஒலிவாமலை; அதுவே உன் சொந்த பூமி.

101

எமனுடைய வாடை அடிப்பதுதான் மனிதர்கள் உள்ளத்தில் பயமாகவும் பேடித்தனமாகவும் இருக்கிறது. பத்துபேர் ஒரு பக்கமாகக் கூடிவிட்டால் னியாயத்தை மாற்றிப் பேசுவது மனித சுபாவம். ஆனல் மெய்ஞ்ஞான மகத்துக்களோ, எத்தனை பேர் எதிர்த்து னின்ருலும் னீதியையே பேசுவார்கள். அவர்கள் ஒத்தையா யிருந்நாலும், ஒத்தையாக இருக்கிருமே என்று எண்ணுவதில்லை. தாங்கள் சொன்ன சொல் மாறமாட்டார்கள். னீதியாகிய இறைவனின் இலக்கிற்கு னேராகத்தான் இருப்பார்கள். அந்ந னித்தியனின் திருமுகத்திற்கு மாற்றக்காரராக இருக்கக் கூடாது என்றே சதா அவர்களின் சத்திய னினைவு இருக்கும்.

102

யோக்கியன் என்று சொல்லப்பெறுகிற ஒரு வியாபாரியையும், போக்கிரி என்று சொல்லப்பட்ட ஒரு கொலை பாதகனையும் மெய்யளவில் எடுத்துக் கொண்டால், பின்னவன் பிரம்ம னிஷ்டன் ஆகும்போது, முன்னவன் யோக்கியன் என்ற எல்லைக்கு வந்நிருப்பான். அந்ந வியாபாரி, தன்னறிவிற் சாய்ந்நவனுகவே இந்ந மெய்யை ஒட்டிப் பையப்பைய ஏறுவான். ஆனல் போக்கிரியோ, முரட்டுத்தனமாக முழு வேகத்தோடு மெய்யில் பாய்வான்.

103

உன்னைப்போலத் தேகியாக வந்நு, பரத்தினுடைய லக்ஷணமாகிய சாகாக் கல்வி என்ற தெய்

வீகக் கல்வியைக் கற்றுத் தேர்ந்து, அதோடு இகத்தின் லக்ஷணத்தையும் இரண்டு மடங்கு கற்று வந்துள்ளவர்களே, உனக்கு ஜீவ வழிபாடாகிய னேர் வழியைக்காட்டிச் சிவலோக பதவியை உன் தலையில் சூட்டுபவர்கள். அதற்குக் கைம்மாருக னீ ஒரு ராஜாங்கத்தையே அவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தாலும் அதுவும் அதற்குப் பத்தாது. ஏனெனில், அது அழியக் கூடியது. ஆனல் அவர்கள், உன்னிடத்தில் எதிர்பார்ப்பது அவர்கள்பால் உன் வஞ்சகமற்ற எதார்த்த ஒட்டுதலையே. அவர்களின் பேரிரக்கத்தை உன்மேல் சாய வைத்துக் கொள்ளுகிற செயல்தான் ஞானம்.

104

தூலம் கடந்து னிற்கும் மெய்ப் பொருளைத் தரிசிக்க இப்போதுள்ள உன்பொறிகள் அனைத்தும் சாக வேண்டும். அவை தாமே சாகாது. அவற்றைக் கொன்று சாகடித்து மெய்யில் உயிர்ப்பிக்கின்ற தீர வேல் ஏந்தி வந்துள்ள செம்மல் ஒருவர் உன்பால் இரக்கப்பட வேண்டும். உன்னல் அழிக்க முடியாதவனும் உன்னைக் கொலைசெய்யும் கோரக் கொலைஞனுமாகிய எமனைக் கொலை செய்து உன்னை மீட்பிக்கும் சமர்த்தர் அவரே ஆவார். அந்த ஆபத்தில் இருந்து னீக்கி னித்தியத்தில் ஏற்றவே, எல்லா மதமும், எல்லா வேதமும், னும் வந்தோம்.

105

னீ பிறக்கும்போது உனது பெண்டு பிள்ளைகள் உன்கூடவா பிறந்து வந்தன? ஆனல் உன் கூடவே

பிறந்து உன்னை வளர்த்து உனக்கு எல்லா னன்மைகளும் செய்து வருகின்ற பொருளை - ஜீவனைப் பார்க்கக் கூட ஆசை வராமல் கைவிட்டால், இறைவன் உன்னை எப்பேர்க்கொத்த னன்றி கெட்டவன் - பாவி என்று னினைப்பான். தன் ஜீவனை அறியாதவன் சொல்லும் வார்த்தைகள் அனைத்தும் வியர்த்த அனித்தியமே ஆம். தன் ஜீவனை அறிந்து சொல்லுகின்றவர்கள் வார்த்தைகள் யாவும் னித்தியமே ஆம்.

106

ஆண்டவர்கள்:- ஞம் ஒன்று சொல்லப் போகிறேம். னன்ருய்க் கவனித்துக் கேட்கிறீர்களா?

அனந்நாதி தேவர்கள்:-அப்படியே கேட்கிறேம்.

ஆண்டவர்கள்:- எதற்காக ஒருவன் ஒரு பூமியை வாங்குகிருன்? பயிர் செய்து பலனடையத்தானே? ஆம். அதற்காக முதலில் வேலிபோட்டு, முள்ளுப் பத்தைகளை வெட்டி னீக்கி, உழுது, விதைத்து, இப்படியே பாடுபட்டு விவசாயம் செய்து, அதன் ஏழாவது பருவத்தில் கதிர் அறுக்கும் பலனை அடைகிருன். இதற்காகவே பணம் போட்டுப் பூமி வாங்கினது, பாடுபட்டது எல்லாம். ஆனல் ஆருவது பருவத்திலேயே பயிர் சேதமடைந்துவிட்டால் அவன் பட்ட பாடெல்லாம் பாழ் தானே?

இதைப் போலவே இறைவன், மனித குலத்தை னித்தியத்திற்காகவே படைத்தான். அந்ந னித்தியத்தை அடைவதற்குமுன் இவனுக்கு ஏழு பருவங்களாகிய ஏழு பிறப்புக்கள் தந்நான். ஏழு பிறப்பு என்றது செத்துச் செத்துப் பிறப்பதல்ல; ஆனல் செத்துச் செத்

துப் பிறப்பதுபோல. ஏனெனில் ஒரு பிறப்புக்கும் அடுத்துவரும் மற்றொரு பிறப்புக்கும் அவ்வளவு வித்தியாசம்.

தாய் வயிற்றில் இருக்கும்போது மூச்சும் சப்தமும் இல்லாத ஒரு பிறப்பில் இருக்கிறான். மூச்சும் சப்தமும் இல்லை என்றால் செத்துப்போன பிணம் மாதிரிதானே? ஆம். அங்கிருந்து வெளியே வந்ததும், மூச்சும் சப்தமும் உண்டாகிறது. முந்தி இருந்த பிறப்புக்கு இது எவ்வளவு மாற்றமான பிறப்பு? இப்படியே மாறி மாறி ஆறு பிறப்பை அடைகிறான். இந்த ஆறு பிறப்புகளையும் இறைவன் தன் கருணை கடாட்சத்தாலேயே அரூபத்தில் நின்று பிறப்பித்து விடுகிறான். பிறகு ஏழாவது பிறப்பு, மனுஷன் என்ற இவன் ஞமத்துக்குரிய பிறப்பு; இவன் இந்த அரிய உடல் எடுத்த பிரயோஜனமாகிய நித்தியத்தைக் கைபோடும் பிறப்பு; அந்தப் பிறப்பை இவனுக்கென்று தனித்துப் படைத்துள்ள அறிவைக்கொண்டு எப்படியாவது எப்பாடுபட்டாகிலும் பிறந்தாகவேண்டும். நித்தியத்திற்கான அந்தப் பிறப்பில் இவன் பிறக்க வேண்டுமென்றே இந்த ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வண்ண வண்ணமான உணவுகளையும் பலவிதமான சவரட்சணைகளையும் இவனுக்காகப் படைத்தான். இவன் அந்த ஏழாவது பிறப்பில் பிறக்கவில்லை யென்றால், இவனுக்காகப் படைத்த பொருள்கள் அவ்வளவையும் வீணாக்கிய பாவம் இவன் தலையில் வந்து விழுகிறது. ஆகவே இறைவன் இவனிடத்தில் எமனை ஏவி விட்டு அடித்துப் பிய்த்து, கசப்பு வெளியாக ஞறடித்து, பார்க்கிறவர்கள்

எல்லாம் "இவன் பாவி" என்று காறித்துப்பச் செய்து விடுகிறான்.

எமன் வந்து இவன்மேல் மோதி அடையாளத்தைக் காட்டியதும், ஒரு தலைமுறைகாலம் உயிர்க்குயிராயிருந்த பெண்டு பிள்ளை உற்றார் உறவினர் சினேகிதர் அடிமைஆள் எல்லோரும் எதிரியாகிய எமன் பக்கமே சேர்ந்து விடுகிறார்கள். இவனை விரோதித்து விடுகிறார்கள். "அடே பாவி! நீ பெரிய பக்திமானென்றும் சுத்தனென்றும் இத்தனைகாலம் வேஷம் போட்டுக்கொண்டிருந்தாயே. எங்களுக்குப் புத்தியெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாயே. சண்டாளா! எமன் வந்ததும் உன் குட்டு வெளியாகி விட்டதே. நுங்களெல்லாம் இனி நல்லாயிருக்கணும். திரும்பிவராதே. வந்நால் சாணிச்சட்டியும் அதிலே விளக்குமாறும் இருக்கிறது சாக்கிரதை" என்று இவனைப் பார்த்துச் சொல்வதோடு "கோவில் கதவைச் சாத்து. இவன் இப்படிப் பாவியாகி நூறி விட்டான். இவனைப் பார்த்தவர்கள் கேட்டவர்களெல்லாம் போய்க் குளிங்க, னெருப்பிலே போட்டு எரிங்க, அப்பத்தான் னம்ம குடி னல்லா இருக்கும்" என்று சொல்லி அவமானப் படுத்துகிறார்கள். இவனுக்கு ஏன் இந்த அதோகதி வந்தது? அனித்திய உலகில் அனித்தியப் படிப்புப் படித்து, அனித்தியத்தைச் சதமென எண்ணிக் காலமெல்லாம் அதே பைத்தியமாக வாழ்ந்ததால் தான். இவன் சேர்க்கையும் அனித்திய சேர்க்கையாயிருந்ததால் இறைவன் இவனை ஆறு பிறப்பில் மாற்றி மாற்றிப் பிறப்பித்துக் கொண்டு வந்தும், ஏழாவது

பிறப்பை அடையாமல் போனான். அப்படி அடையாமல் போனதால் ஏற்பட்ட னஷ்டம் லேசான னஷ்டமா? னித்திய வாழ்க்கைக் குரிய என்றைக்கும் மாறாத அழகிய அலங்கார அந்த யவ்வன தேகத்தை, கற்பாந்த கோடி கால மிருக்கக்கூடிய 'அந்த வைர மணிக் கற்பகத் தேகத்தை இழந்த னஷ்டமாச்சே. இப்படிக் கெட்டுப் போகப் போகிறவனை இப்பவே பார்த்து "ஐயோ எங்களைப் போலவே னல்லா இருக்கிறாயே; கடைசியில் எமன் கிட்டேபோய் னாசமாகப் போகப் போகிறாயே; னித்திய துன்பத்தில் அவஸ்தையில் மாட்டிக்கொள்ளப் போகிறாயே; ஐயோ அப்பா" என்றானும் ஏன் அவனைக் கட்டிக் கொண்டு அழக்கூடாது என்று எமக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வருகிறது. என்றைக் கிருந்நாலும் ஒருனாளைக்கு னஷ்டமடைந்து போகப் போகிறவன் தானே? னாளைக்குப் போனால் என்ன? இன்றைக்கே போனால் என்ன? ஆகவே னாளைக்கு வரப்போகிற அதோகதியை இப்பவே சொல்லி ஏன் அழக்கூடாது?

107

இவனைக் கருவில் அமைக்கும்போதே னித்தியத்திற்கென்றே, பூரண கால பூரண எழிலுடைய பூரண வல்லபத்திற் கென்றே, இவன் உருவாக்கப் பெற்றான். பிறந்து வெளியே வந்து, வளர்ந்து அறிவடைந்ததும் அழிந்து போகிறதையே தேடினானே ஒழிய னித்தியத்தைத் தேடவில்லை. ஏனெனில் உலகம் முழுவதுமே அந்தப் பாதையில் திரும்பிவிட்டது. இறுதியில் வரப்போகிற அவகேட்டை, அதனால் வரும் னஷ்டத்தை இவனுக்கு எடுத்துச்சொல்லி எச்சரிப்பார் யாரும் இல்லை.

எச்சரிப்பாரில்லாமல் போகட்டும்; இப்படி ஞறிச் சாகிறவர்களை அவமானப்பட்டுப் போகிறவர்களை இவன் பார்க்கவில்லையா? இவனுக்குக் கண்ணு இல்லை? இவனுடைய உலக சம்பாத்தியத்திற்கு இந்த ஞானம் குறுக்காக னின்றுகொள்ளும் என்று னினைக்கிறனே. ஜனகர் முதலாகிய ஞானிகள் அரசராக வாழவில்லையா? தேவப் பிறப்பாகிய ஞானப் பிறப்பை இவன் பெற்ருல், இந்த உலகத்தில் இவனுக்கிருந்த முந்நிய வல்லபத்தைவிட பன் மடங்காக வார்த்தை, அறிவு, செயல், ஆண்மை எல்லாம் பெருகிவிடுமே. இவனுடைய காது முதலிய கருவிக்குலங்கள் தேவ அங்கங்களாக மாறிப் பதின் மடங்கு வல்லபம் பெறுமே. ஆனல் இந்த வல்லபத்தை அடைய விரும்பாமல், தன் ஊன உடலையும் வாழ்க்கையையுமே விரும்பி, அதை வளர்க்கிற தூலத் துணையையே தேடுகிருன். தூல பண்டிதன் அனித்திய சிக்கையே குணப்படுத்துவான். அவனல் னரக அவஸ்தையாகிய னித்தியமாய் வந்து பீடிக்க இருக்கிற அந்த சிக்கிற்கு உதவமுடியுமா? முடியாது.

108

மனிதன், தன் தலையின் தரத்தை எண்ணிப் பார்க்காமல் அசலை ஞாபகமூட்ட எடுத்து வைத்த கல்லையும் செம்பையும் வெளி ஆகாயத்தையும் தெய்வமாகக் கும்பிடுகிருன். அதனல் தனக்கு மதிப்பு என்று அதில் ஈடுபடுகிருன். இவனுடைய ஒரு ரோமக் காலினிடத்திலுள்ள மதிப்பு அதற்கு உண்டா? னித்தியத்தைப் புறக்கணித்த பாவம், இவனை அப்படிக் கொண்டு போய் மூட்டடிக்கிறது. இவன் கட்டுகிற கட்டிடம்

இவன் பார்க்கும் உத்யோகம், பிறருக்கு அறிவுவர இவன் பேசுகிற பேச்சு, புண்ணியம் னன்மை என்று இவன் செய்கிற செயலனைத்தும் விளையாட்டுத்தனமாக வும் ஒரு கேலிக்கூத்தாகவுமே இருக்கின்றன. ஒருத்தனைப் பார்த்து இன்னொருத்தன் இப்படியே கெட்டு னசமாகிறான். முன்னவன் கதி என்னவாச்சு என்று னினைக்க வேண்டாமா? ஊனுக்கே உதவி தேடி உலுத்துச் செத்தாரல்லால், தனக்கு எள்ளளவும் உதவி உண்டோ? இல்லை.

109

அழிவில்லாத முடிவில்லாத அழகு ஆண்மையோடு, னோய் னொடியே இல்லாத னித்திய உடல் எடுத்து வாழவந்த மனிதன் இவன். இறைவனே உடலில்லாதவன். அந்த இறைவன் தன் வல்லபத்துக்கேற்ற எழிலான தோற்றத்தோடு வெளியாவதற்கு இருக்கின்ற அந்தப் பொன்னுலகத்தில் வாழும் யுகவித்தாக ஆக வந்தவன். அறிவு மாணிக்கத்தை இவனுக்குத் தந்ததும் வேதங்களாகிய அறிவிப்புகள் அனந்தம் தந்ததும் இதற்குத்தான். இவற்றை எல்லாம் அறிவித்து, இவனை எப்படியும் அதோகதிக்குப் போகாமல் திருப்பி, னித்தியத்தில் ஆக்கவே னும் வந்தோம். இந்த வசந்தத்தைக் கைனழுவ விட்டுப் போகிறவனை, அவன் போகிற எல்லையை எடுத்துச் சொல்லி, கடைசியாகக் கட்டி அழுது விடுவோம் என்று னினைக்கிறோம். அது னியாயந்தானே.

னீ எழுபது கோடி சாஸ்திரங்கள் படித்தாலும், னீ உடல் எடுத்தது எதற்கு என்பது இவ்வளவு சுருக்

கமாக உனக்கு விளங்காது. எல்லா வேத வேதாந்த சாஸ்திரங்கள், ஆகமங்கள் உபனிடதங்கள், அவற்றின் வியாக்கியானங்கள் எல்லாவற்றினது எசன்சு தலை இதுதான். போடு முத்திரை. இதை எழுதிப் பிறரிடம் படித்துப் பேசுங்கள் என்று உத்திரவிட்டபின், தொடர்ந்து ஆண்டவர்கள்:- உன் தேகாதியந்தத்திலும் அனித்தியமே கப்பிப் படிந்திருக்கிறது. நீ பார்ப்பது கேட்பது அனுபவிப்பது புழங்குவது எல்லாம் அனித்தியமாகவே இருக்கிறது. இங்கு நெருங்கிப் பழகப் பழகத்தான், அது சிறிது சிறிதாகச் சேதிக்கப்பட்டுப் போகும். அப்போது உன் அறிவு பிரகாசிக்கும். உனது தேகம் நித்தியத்தைப் பெறுவதற்காகவே இத்தனை வல்லபங்கள் நிரப்பப்பெற்று வந்துள்ளது. இந்நெடிய உலகில் இதை எடுத்து உனக்கு அறிவிக்கும் எல்லை இது ஒன்றே ஒன்றுதான்.

110

இந்த உலகிற்கு இதற்கு முன்வந்த பெரியோர்கள் இந்த நித்திய செயலைப் பற்றி எவ்வளவு பேசியிருப்பார்கள். அந்த எல்லைகளில் எல்லாம் ஒன்று இரண்டு என்று தான் மெய்த் தலைகள் காணப்படுகின்றன. தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் நிர்த்தாளம் பண்ணி அடிமையானவர்கள்தான் இதற்கு அருகதையானவர்கள் என்ற சட்டம் எம்முடைய காலம் வரையிலும் இருந்தது. நாம் தான் அதை மாற்றி வைத்தோம். ஏனெனில் ஊழித் தீர்ப்புநேரம் நெருங்கி விட்டது. அன்னாட்டினுக்கு யுக வித்துக்களாக நம் கையில் சிக்கின தலைகளை எல்லாம் மாற்றி ஆக்குவோம் என்ற

எம் ஆத்திரம்தான் இப்படிச் சட்டத்தை மாற்றி வைக்கச் செய்தது. உடல் பொருள் ஆவியை நீ இப்படித் தரவில்லை என்றாலும், பின்னே எமக்கு வாங்கிக் கொள்ளத் தெரியும். எம் கைப்பாணமாக, எம் ஆளாக எமன் தான் இருக்கிறானே.

ஆச்சரியத்தை, அதிசயத்தைப் போய்ப் பார்க்கிற அறிவு இவனிடத்தில் இருக்கிறதல்லவா? ஆம். சினிமா முதலியவற்றைப் போய்ப் பார்த்துச் சந்தோஷப்படுகிறானே. அவை அவ்வளவும் அழிந்துபோகிற இன்பந்தானே. நித்திய அதிசயத்தை, பேரின்பம் அளக்கும் அறிவு வல்லபத்தை அடைய, இங்கு ஏன் வரமாட்டேன் என்கிறான்? அதிசயப் பிறப்பை அடைய வந்தவனுக்கு அதிசயச் செயல் வரவேண்டும். அதிசய வாழ்வில் புக வேண்டும். காலமெல்லாம் கருவாடே தின்று கருவாட்டு வாசனையே தேடுகிறது. கஸ்தூரி வாசனை பிடிக்கவில்லை. இதைக்கண்டு நாம் வருந்தி அழாமல் எப்படி இருக்க முடியும்?

111

“மனித உருவில் இருப்பவர்கள் எல்லோரும் ஒரே மாதிரிதானே இருக்கிறார்கள். இதில் தேவர்கள், மனிதர்கள் என்று பிரித்துச் சொல்வது எப்படி? எங்களைப் போலத் தானே நீங்களும் இருக்கிறீர்கள்” என்று சிலர் கேட்கிறார்கள், என்று ஒரு மாணவர் திருச்சபையில் சொல்ல,

ஆண்டவர்கள்:- அவன் ஒரு ஜாதியிலேயே இன்னும் பிறக்கவில்லையே; நரனாகத்தானே இருக்கிறான்.

அவன் தன் ஜாதியிலேயே தள்ளப்பட்டவனாக இருக்கிறானே. அதை நினைக்காமல் பிறருக்கு ஞாயம் வேறே பேசவருதே அந்த உருவம். அது என்ன வேண்டுமானாலும் பிதற்றும். அதன் பேச்சை ஒரு பேச்சென்றுனும் கேட்டுக்கொள்ளுவதா? அவனை வேதம் மதிக்கிறதா? இல்லையே. தான் பிறந்த ஜாதிக்குத் துரோகி அவன். அவன் சொல்லும் ஞானம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அது பாவமாகத்தான் இருக்கும். ஏன்? அவனே பாவியாக இருக்கிறான். அவன், தான் இன்ன ஜாதி என்று சொல்லிக்கொள்ளுகிற அந்த ஜாதியில் இன்னும் நிஜமாகப் பிறக்கவில்லையே. காயத்திரி மந்திரத்தை அவன் வாயில் சொல்லுவதும், நும் அந்தக் கோடி சூரிய அலங்கார ரூபத்தை நேரில் தெரிசனையாகக் காண்பதும் இரண்டும் ஒன்றா? நும் அந்தக் காயத்திரி மந்திரத்தைச் சொன்னதும், அது நமக்குத் தோற்றத்தில் நின்று நம்மைப் பிரம்ம லோகத்தில் ஏற்ற, அதையே அவன் வாயில் சொல்லிக் கீழ்த்தர நரகத்திற்குப் போகிறானே, இரண்டும் ஒன்றாகுமா?

வாயில் சுவை உணர்வது மிருகம் – செவியில் சுவை உணருவோர் தேவர்கள். அவனுக்கு வாய்ச் சுவைதான் தெரியும். செவிச்சுவை தெரியாது. கடைசியில் அவனுக்கு விளக்குமாறும், சாணிச் சட்டியும் உரிய மரியாதையாகவும், நெருப்பே பஞ்சணை மெத்தையாகவும் வந்துவிடுகிறதே! எங்கே அதை மாற்றட்டும் பார்க்கலாம். அவன் செத்தால் பிண நாற்றம் கிளம்புது. அவன் வேதமே அவனை மட்டமாகச் சண்டாளன் என்று சொல்லுது. ஆனால் அதே வேதம் நம்மைப் புகழுது. நம்மைப் பிரியமாகத் தோத்

திரித்துக் கூப்பிடுகிறது. அவனைக் கேவலம் பண்ணித் தள்ளுகிறது. வேதச்சட்டம் - தேவ நீதிச் சட்டம்- நம்மைத் தேவன் என்று அழைக்கிறது. அவனை நரன் என்று சொல்லுகிறது. தேவனுடைய சொல்லு நிசமாகுமா? அல்லது பேயனுடைய சொல்லு நிச மாகுமா? அவன் எங்கே போகிறான்? நித்திய நெருப் புக்குப் போகிறான். நாம் எங்கே போகிறோம்? நித்திய பேரின்ப உலகுக்குப் போகிறோம். தேவதரம் இன்ன தென்று தெரியாதவன் எப்படி வேண்டுமானாலும் பேச லாம். அவன் கண் தெரியாத ஒரு குருடனைப் போன் றவன். நரனாக இருந்து பேயாக விளைந்து விட்டான். நரனுடைய விளைவு பேய். அதனால்தான் அந்தக் கேள்வி; வாயில் வந்ததைப் பேசுவது. தேவனுடைய விளைவு நித்திய இன்பம். அதன் பெருமையை, உன்னதத்தை, அவனால் நினைக்கத்தான் முடியுமா?

அவனுடைய வார்த்தையிலே, அவன் தலையில் நிற்கிற சாவைப்பற்றிய பேச்சு இருக்கிறதா? எம பயத்தைப் பற்றிப் பேசப் பேசத்தான் மெய்ஞ்ஞான அறிவு உண்டாகும். யாருக்கும் எமபயம் வந்த பிறகு தான் ஞான இச்சை வரும். அர்ஜுனனுக்கு அறிவு வந்தது எப்போ? போர்க்களத்தில் அந்த எமபயம் ஏற்பட்டபோது அல்லவா அறிவு வந்தது? ஆம்.

பின்னால் வரப்போகிற வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளாதவன், இந்த அழி உல கில் இன்றைக்குக் கஞ்சி குடிக்கிறானே அதைத்தான் வாழ்க்கை என்று நினைத்துக்கொண்டு இருக்கிறான். தான் நல்லா வாழ, கவசம் தாயத்தைக் கட்டிக் கொள்

வது, சோஸியம் பார்ப்பது என்று எதை எதையோ செய்கிருனே. பிறவிப் பிணி என்ற கடப்பாறை, ஆசை பூசை மந்திரம் ஜெபம் என்ற இந்த சுக்குக் கஷாயத் திலா கரையப் போகிறது. தீர்க்கமாகப் பார்க்கும் போது புராதனமாக இருக்கும் மதங்களிலே சைவம் தான் ஆதி புராதன முதல் கூராக எடுத்து வைக்கப் பெற்ற மதம் என்று தெரிகிறது. பாவியைச் சுடவும், யோகியைப் புதைக்கவும் வேண்டும் என்ற அடித்தளத் தில் வந்நது சைவ மதம். அதனுல்தான் அதில் செத் தால் தீட்டு என்பது இன்னும் மாருமல் இருக்கிறது. ஆனுல், கடைசியாக வந்ந மதத்தில் தனது வேதத் தில் சொல்லப்பட் டுள்ளதற்கு முரணுக, அந்நத் தீட்டு விட்டிலேயே உட்கார்ந்து, பிணத்தின் கையிலே கொடுத்து அதை எடுத்துத் தின்ன வந்து விட்டார்கள். பிரதானமான இதுவே மாறிவிட்டது. இதைக் குறித் துத்தான், யுகஇறுதி னேரத்தில் வேதம் வெறுங்கடித மாகப் போய்விடும் என்று தீர்க்கத் தரிசனங்களில் கூறப்பட்டு வருகிறது. அந்நப் பாவகர அசுத்தத்தை மாற்றிப் புண்ணிய பரிசுத்தத்தில் ஆக்குவதற்கு இந்ந மெய்வழி என்னும் மேடு ஸ்தாபிக்கப்பெற்று இருக்கிறது.

112

எம் யோசனையை விட்டுத் தன் யோசனைப்படிப் போகிறவன் னிச்சயம் சாகவே சாவான். எம் உத்திர வுப்படி னீ ஒரு கொங்கத்தனமாக, கூமட்டைத்தன மாக னம்பி னடந்து வருவாயானுல், பிழைப்பாய்.

குயுக்தி, மோட்டுத்தனத்தில் போவாயானால் நிச்சயம் சாவாய்.

113

உன் ரக்ஷிப்புக்குரிய தேவ ரகசியச்செயலே இங்கு வாக்கியமாக இறக்கப் பெறுகிறது. அதை உன் செவியில் வாங்கி – சிந்தித்து – பிறரிடம் பேசுவது, தவத்தைக் காண எத்தனையோ மடங்கு அதிதமான உன்னதமுடையது.

114

'நின்றதொரு பிரளயத்தின் அதிசயங்கள் நெடுங்காலம் நீ இருந்தே காணவேணும்'. நீ இருந்து காணவேணு மென்றுதான், எம் தொனியும், எமது ஆத்திரமும், எமது கோபமும், எமது வினயமும், எமது சிரிப்பும், எம் விழிப்பும், எம் சுறுசுறுப்பும், எம் ஆசையும், எம் பாடு பரப்பும் எல்லாம் அதற்காகவேதான்.

115

உன் நினைவு என்னும் பிடரியில் சூடு ஏற்றவே தான் நம் சாலையில் நடக்கும் தவவணக்கம், தூங்காது விழித்திருந்து பாரா வணக்கம் செய்தல், தீர்க்க தரிசன வசனங்களை அதம்பி உரக்கச் சொல்லுதல் முதலியனவற்றை எடுத்து வைத்துள்ளோம். இன்னும் உன்னைக் கோபிப்பதும், கவலையில் ஆழ்த்துவதும், ஏக்கமூட்டுவதும் அதற்காகத்தான்.

116

உன்னுடைய தேகாதியந்தத்திலும் மயனமயனமாக நுழைந்து வேலை பார்க்கும் பாரப் பெரிய பிரளய ஆயுதத்தின் கூரை மழுங்கடித்து, ஜெயித்து,

தூக்கி எறிகிற வல்லப சம்பாதனேயே இங்கு னடக்கும் குழல் வணக்கம். ஜீவன் முத்திக்கு வேண்டியது னிஷ்டை. ஆனல் தேக முத்திக்கு வேண்டியது சாலேக் குழல் வணக்கம்.

117

னீ இப்போது செய்கிற உனது தவத்தை உடைத்து ஒட்டையாக்குகிற பாடு ஒன்றிருக்கிறது. அதுதான் னீ பிறரைச் 'சிர்' என்று சினப்பது. னீ ஒருவரைச் சினப்பதும், உன்னே ஒருவர் சினந்நதற்குப் பதில் சினப்பதும் உன் தவத்தைப் பிடுங்கிக்கொண்டு போகும். அது உன்னே னரகத்திற்குக் கூட்டிப் போகிற ஒரு துணே ஆள்.

பிறரைக் குறை சொல்லுவதும், குறை சொல்ல எண்ணம் வருவதும், உன் தவத்தைத் தீய்த்துப்போடும். ஆனல், பிறர் கோபிக்கும்போது பொறுத்துக் கொண்டு சகோதர வாஞ்ஞையோடு னடந்நால், அவர்கள் சிந்நின தவம் உனக்கு வந்நுசேர்வதோடு, எமது சொற்படி னடந்ந னன்னம்பிக்கைப் பலனுகிய ஆசீர்பாதப் பலனேயும் சேர்த்து வாருகிருய்.

118

உனது தேகாதியந்நமாகிய உடல், உனது பொருளாகிய வாக்கு, உனது ஆவியாகிய பிரணவம், னினேவாகிய பிரம்மம் யாவும் எமது எண்ணத்துக்கு லயப்பட்டுத் துள்ளிக்குதித்து னின்ருல் மீட்பு னிச்சயம். இந்ந மெய்யினிடத்தில் இருக்கிற உனது ஆத்திரத்தின் ஏற்றத்தாழ்விற்குத் தக்கபடியே உனது மீட்பும் தண்டனேயும் படிப்படியாக இருக்கிறது. னீ,

கோர தண்டனை அடைவதைக் கண்டு எம்மால் சகிக்க முடியாதாகையால், அதைத் தடுக்கவே நாம் இப்போ இவ்வளவு ஆத்திரப் படுகிறோம்.

119

ஒரு சீடன் தன் ஆசானுக்குச் செய்யும் உபகாரம், ஒரு யானைக்கு அல்லது ஒரு புலிக்கு ஒரு எலி உபகாரம் செய்வதுபோல் இருக்கிறது. இன்னும் எலி போய், யானை அம்மணமா யிருக்கிறது என்று கோவணம் கட்ட முயற்சிப்பதுபோ லிருக்கிறது.

120

பாவம் என்பது உன் மூச்சு துண்டாடப்பட்டு நஷ்ட மடைவது; அப்படி ஆகாமல் இருப்பதுவே புண்ணியம். புண்ணியத்திற்கு ஒரு உரு இருக்கிறது. அது உன் ஆசான்தான். அவர்களையே நம்பு. அவர்களைத்தவிர வேறொன்றை நேசிக்காதே. அவர்கள் சொற்படி நட. அப்ப உன் மூச்சு விணாகாது.

121

மோனம் என்பது உன் சுவாசம் ஓடாது நிற்கும் நிலை. அதுதான் ராசி நிலை. ஏகராசிக் குவியல் நிலை என்பதும் அதுவாகும்.

122

செத்த பிணத்திற்கு ஒருவர் உயிர் கொடுக்கிறேன் என்று வந்நால், அவர் வார்த்தைகளைக் கேட்டு ஒருவர் எந்த ஆர்வத்தோடு நடப்பாரோ அந்த ஆர்வத்தோடு, எம் வார்த்தைகளைக் கேட்டு உன் உள்ளத்தில் வைத்து நடக்க வேண்டும். அதுவே உன் மீட்புக்கு வழி.

123

எம்மிடத்திலிருந்து வாக்கியங்கள் வெளியாகும் போது எம் அங்கக் குலங்கள் எவ்வளவு ஆத்திரங் கொண்டு அசைவுகள் பிறங்க இருக்கின்றனவோ அதில் கால் பங்காவது உன் அங்கக் குலங்களில் இந்த மெய்யைப் பற்றிப் பேசும்போதும் கேட்கும் போதும் ஆத்திர அசைவு பிறங்க நிற்கவேண்டும். அதுதான் ரக்ஷிப்புக்குரிய வழி.

124

அந்த வாடாத அழியாத யவ்வன தேகத்தின் பொலிவை இந்த அழிந்து போகிற தேகத்தின்மேல் பாய்ச்சி, இதையும் அழியாத் தூலம் ஆக்கும் செயலே, பிருக்த யோகம். தேகமுத்தி என்பதுவும் இதுவே.

125

ஒருவன் தான் படிக்கிற அளவைவிட அதிக மாகப் பேசவேண்டும். இல்லாவிட்டால், அதுவே அவன் ஜீவனில் களையாக மண்டிவிடும். தொனியை அதிகமாக மெய்ச் செயலில் செலவு செய்கிறவனே, ஜீவன் முத்தனாகிறான்.

126

எம்மைத் தரிசிக்கும்போதெல்லாம் உன் வாய் ஏதாவது ஒரு மந்திரத்தை உரக்கச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால், அது உன் உயிரைப் பற்றுகிற பாவமாக ஞளடையில் விளைந்துவிடும். நிஜமா முத்தி கிட்டவேண்டுமென்றால், உளம் கலங்கிக் கண்ணீர் கதகதவென்று கொட்ட உன் வாயில் மந்திரம் வெளியாக வேண்டும்.

127

ஒரு மதத்திற்குரிய மூல மந்திரத்தைப் பிரகாச ரூபமாக வெளியாக்குகிறவர்களுக்குப் பெயர் தெய்வம் என்றால், சைவ வைணவ முதலிய எல்லா மதங்களின் மூல மந்திரங்களையும் அந்தந்த மதத்தினருக்குப் பிர காச ரூபத்தில் வெளியாக்குகிறவர்கள் யாராயிருக்க வேண்டும்? ஆகவேதான் எம் செயலையும் எம்மையும் பற்றிப் பேச உனக்குத் திட்டுமுட்டு அடிக்கிறது.

128

குழந்தை பிறந்ததும் குவா குவா என்று சத்தம் போடுகிறதே, அந்தச் சப்தம் எங்கிருந்து பிறக்கிறது? அந்த ஆதிமூல இடத்தை அறிந்து அடைவதுவே வீடடைதல்.

129

பிறருக்குத் தீமைசெய்ய, அல்லது தனக்கே தீமை தேடிக்கொள்ள முயற்சி தேவையில்லை. ஆனல், பிற ருக்கு னன்மை செய்ய, அல்லது தனக்கு னன்மை தேடிக்கொள்ள அசையாத வைராக்கிய சித்தம், னிலைத்த திடம், எதற்கும் விட்டுக்கொடுக்காத தைரியம் வேண்டும்.

பிறர் குற்றம் பார்த்துக்கொண்டே போனல், உன் அங்கக் குலங்களே உன்னைப் பகைக்கும். இது எமது கையேட்டு அனுபவம்.

130

மனிதனின் சூக்கும தேகமாகிய தன் சொந்த தேகத்தில்- சிவனடி பாதத்தில், இவனை ரக்ஷிக்கிற 16

அக்கினிகளும், பக்ஷிக்கிற 9 அக்கினிகளும் இருக்கின்றன. அப்படியிருக்க, தியானம் என்று சொல்லி இவனது ஈனமனத்தை அங்ஙுக் கொண்டுபோய் வைப்பானகில் பக்ஷிக்கிற தீயில்தான் வைப்பான். உனது ஆசானகிய ஜீவபதியரசரின் உத்திரவு இல்லாமல் அங்ஙுப் போனல், நிச்சயம் அத்தீயில்பட்டுச் சுருண்டுதான் போகணும்.

131

சூத்திரன்: மெய்ஞ்ஞான இச்சையே இல்லாதவன்.

வைஸ்யன்; மெய்ஞ்ஞான இச்சையுடையவனய் ஒரு சற்குருபிரானின் சன்னிதியைத் 'தேடி அடைந்தவன். (திரைகடல் ஓடியும் திரவியம் தேடுதல் என்பது இதையே).

. க்ஷத்திரியன்: அந்தச் சன்னிதியில் ஞான பதத்தை அடைய வைராக்கிய முடையவனய் நிற்பவன்.

பிராம்மணன்: அவ்வாறு நிற்கும் அவனது வைராக்கியத்தைக் கண்டு ஆசான் கனிந்து அருள் பாலிக்க, பிரம்மோபதேசம் பெற்றவன்.

132

உன்னைப் படைத்தது இந்திரியம். அது வெளியாகிப் பறிக்கப்பட்டு இறந்நால், செத்தான் என்று சொல்லவேண்டும். அப்படி அது வெளியாகாமல் பிரயாணமானல், உள்ளேதா னிருக்கிருன்; சாகவேயில்லை என்ருகிறது. அவரைத்தான் "அடக்கம், ஆனவர் என்று சொல்லவேண்டும். அவர் சுவர்க்க லோக வித்தாக ஆகிருர். சாவாவரம் பெறல் என்பது இதுவே.

133

சுதந்திரம்:- எமன் அச்சம், எமனுடைய அதிகாரம் கடந்து நிற்றல். எமனது அரசை மிதித்து வெற்றிகண்டு நிற்கும் அந்நத் திரம் கைவசமாகி நிற்றல்.

134

உன் சுவாசம் வெளியே ஓடாமல், மூக்களவே ஓடினுல் அதுதான் தவம்.

தன் சுவாசம் அதிகம் ஓடாமல் நுனுக்குனுள் உள்ளடங்கி ஓடுவதைக் கற்கும் கல்வியே, சாகாக் கல்வி.

135

உனது மூச்சு உன் சொற்படி கேட்கிறதா அல்லது சொற்படி கேளாமல் அன்னியமா யிருக்கிறதா? அன்னியமாய், சத்துருவாய் இருக்கிறது. அதை உன் சொற்படி கேட்கச் செய்கின்றவர்களே ஆசான். நீ அவர்களிடத்தில் அன்னிய மின்றிப் பழகினுல்தான் உனது சுவாசமும் அன்னியமாயில்லாமல் உன் சொற்படி கேட்கும்.

136

இலிங்கம்:- பாவங்களைச் சங்கரிக்கும் சர்வ வல்லமையும் நிறைந்த தேவரூபம். சத்தியரூபக தீபம்.

137

பரம பத வாழ்வடையப் பரிசுத்தப் பிரயாணமாகி, கசப்பு ஜலம் வராமல் மரணிப்பதுவே ஆஸ்திகம். அந்த ஜலம் வெளியாகி அசுத்தப் பிரயாணம் அடைவது நாஸ்திகம்.

138

தெய்வம்:- தைவம், கவ்விப்பிடித்துக் கொண்டிருப்பது அதன் பிடி விட்டால் நீ இல்லை.

139

ஆதிமெய் உதய பூரண வேதாந்த நூலுக்கு நூன் முகம் கேட்டபோது, ஆண்டவர்கள்:- 'நீதியெனும் பொருளான' என்ற செய்யுள்தான் முகப்பு. அதற்கு முகப்பு "ஆதிமெய் உதயபூரண வேதாந்தம்" என்ற தலைப்பு வாசகம். அதற்கு முகப்பு "ஆதியே துணை". அதற்கும் முகப்பு ஜீவ மந்திரத்தார் கண்டு கூறியுள்ள "புள்ளியதே அவர் வைத்த கூர்" ஆகும்.

140

மரணக் குளிரை நீக்கும் தீ - நீதி. இதயாசனத்தில் விளங்கும் தெய்வ மலரில் உன்னை ஏற்றிவைப்பதே படிப்பு. அதுதான் "மலர்மிசை ஏகுதல்".

141

எழுதாமறை என்பது ரூபத்தில் வந்து நிற்கும் வந்த வேதமாகிய உனது ஆசிரியரே.

142

இந்த அழிதேகத்தை விட்டதும் சுகசொரூபத்தைக் கைபோடுவதே நித்தியம். அப்படிக் கைபோடவில்லையென்றால், துக்கமாகிய நரகமே வருகிறது.

துயரறுவது - நித்தியம். துயருறுவது - அநித்தியம்.

143

குருகொண்டலாகிய எமது ஐயன், எம் முகம் பார்த்து இப்படித் திரும்பினார்களானால், எமது எலும்பு துடிக்கும். அப்பேர்க்கொத்த அன்பேறும் உள்ளச்சமே எம்தலையில் இந்த மெய்யை இவ்வளவு வல்லபமாக ஏற்றிவைத் துள்ளது. நீங்கள் எம் முன்னர் பேசாமல் உட்கார்ந்திருக்கும் இந்த ஊமைக்கொட்டை குணத்தால் உங்களுக்கு மெய்ப் பலன் கிட்டாமல் போவதோடல்லாமல் மேற்கொண்டு உங்கள் ஐயனை அலக்ஷியம் செய்த பாவம் உங்கள் தலையில் வந்து விழுகிறது. அப்படி அடிக்கடி நாள்தோறும் விழவிழக் கடைசியில் அறிவு பிடுங்குபட்டுப் போய்விடும். உஜார்.

144

எமபயத்தைக் கடத்தாட்டி வைக்கின்ற ஒரு அனாத ரக்ஷிகரைத் தேடிக்கொள்வதற்கு, மனிதர்களின் நினைவை எச்சரித்துத் தூண்டவே ஒவ்வொரு மதமும் வந்தது.

145

எமது வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் உனது எண்ணத்தைவிட்டு நீ படாரென்று திரும்ப வேண்டும். அப்படியில்லாமல் தாமசமாகத் திரும்பினால் தண்டனையே வரும். அதோடு எம்மை அவமானப் படுத்தின ஆக்கினையும் வரும். ரக்ஷிக்க வந்த அதே ஆயுதம் பக்ஷிக்கவும் வந்து நின்றுகொள்ளும். ஆனால், நாம் சொன்ன மாத்திரத்தில் படாரென்று திரும்பினால் எம்முடைய பிரீதி உன் ஜீவன்மேல் வந்து

மோதும். உன் ஜீவனுக்கு அது ஒரு போர்வையாக இருக்கும். இப்படியே பல போர்வைகளை நீ போர்த்திக்கொண்டாயானால், வரும் அமளி ஆபத்து, உனது தேகத்தை வந்து தீண்டாது.

146

உன்னை வீரமாகப் பழக்க வேண்டி ஒரு நிஜமான புலி இந்தக் காருண்யப் பசு வேடம் போட்டுக் கொண்டு நிற்கிறது. நீ அதன் விருப்பத்திற்கு இணங்காமல் பழைய பசுவாகவே இருந்தால், கடைசியில் உன்னை அதுவே பீறிவிட்டுப் போய்விடும்.

147

"எல்லாவிதத்திலும் தன்னைப்பற்றி நல்லவன்" என்று பிறரிடமிருந்து வரும் புகழான வார்த்தைகளையே விரும்புதல் கூடாது. அப்படி விரும்பிக் கொண்டிருத்தல் - இவனுக்குப் பின்னே வரும் துக்கம் தரும் இகழுக்கும், அதற்கப்பால் வருகின்ற எக்கோடி காலத்திற்கும் நீங்கா நரக அவஸ்தைக்கும் வித்தாக இருக்கும்.

ஆகவே, இகத்தில் வரும் பழிப்பு துக்கம், புகழ்ச்சி மகிழ்ச்சி, இவைகளை ஒன்றும் கவனிக்காமல், எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று தன்னை ஆண்டு கொண்ட குரு மகான்மியராகிய ஈசன் அடிநிழற் பாதையிலேயே தன் மனதைச் சாய்த்து, மேலே கூறியபடி வரும் துக்கத்தையோ மகிழ்ச்சியையோ, இகழ்ச்சி புகழ்ச்சியையோ பொருட்படுத்தாமல் ஒத்தை மனம் படைத்து நடப்பவன், இகபர சம்பன்னனாகி, வாடாத

சிரஞ்ஜீவியுமாக இருப்பான். சிறு சிறு காரியங்களில் கெட்ட பெயர் வருகிறதே என்று எண்ணிப் பின்னிடை யக் கூடாது. உலகத்தில் இருக்கும்வரை அது வந்து கொண்டேதான் இருக்கும் என்று எண்ணுவதே ஒரு வனது அழியாத மதித்தனம்.

148

சகல பிரளயங்களிலும் ஞானிகள் சரீரத்தைத் துறக்க வேண்டியவர்களே. ஆனல் பஞ்ஞின் இழைக் கும் ஹுட்பமாக உள்ள தமர்வாசல் கண்டு திறந்து ஏற வல்லமை பெற்றவர்கள், எக்காலத்தும் இருக்கலாம். எந்த ஆயுதத்திற்கும் தட்டுப்படாத ரூபமாக அவர்கள் ஆகிவிடுகிருர்கள்.

149

அமுததாரண தீக்ஷை வரை 64 தீக்ஷை பெற்றவர் கள் இங்கிருக்கிருர்கள். நீ மாய்கை உருவாக இருக்கி ருய். ஆகவே, அதை மாற்ற எடுத்த எடுப்பே 'தீக்ஷை'.

உன்னை மெய் வீடேற்றும் அறிவாகாரப் புதை யலே ஒவ்வொரு தீக்ஷையும். உனக்குப் பக்தி உண்டாக் கவும், உன்னை மெய்யின்பால் திடசித்தம் உடையவனுக ஆக்கவும், வேதவேதாந்தங்களின்மேல் உனக்குள்ள தெய்வீக இச்சையை நிலை நிறுத்தவும், உன் னுல் அறிவு ஆராய்ச்சி கொண்டு எட்டமுடியாத தேவ ரகசியங் களை உன் அறிவுக்கு எத்தி வைக்கவுமே தீக்ஷை.

150

உன் ஆருயிர்ச் சகோதரர்கள்பால் நீ அன்பு செலுத்து. அப்போதுதான் எம் அன்பு உன்னிடம் பாயும்.

151

சுவர்ண லோகத்தில் வாழப் பாக்கியம் பெற்றுள்ள தேவ மக்களாகிய னீங்கள், தங்கம் போன்ற குணம் பெற்றவர்களாய் வாழவேண்டும். தங்கம் பழுக்கக் காய்ச்சி எடுத்த சிறிது னேரத்தில் குளிரும். வெள்ளி குளிர அதை விட னேரமாகும். இரும்பு குளிர இன்னும் அதிக னேரம் ஆகும். உலோகங்களுள் சிறந்த உலோகமாகிய தங்கத்தின் குணத்தைப் பார்த்தீர்களா? உங்களிடையே மன வெதுப்பம் தோன்றினலும், மேங்குடியில் பிறந்த னீங்கள், தங்கத்தைப் போல் உடனே வெதுப்பம் மாறி பழைய னிலைக்கு வந்துவிட வேண்டும்.

152

எம் கையில் உள்ள மெய்யானதை உன் மதம் சர்வ சம்மதம் பொழிய அதிகப் பிரியமாய் ஒத்துக்கொள்ளுகிறதே. னீர் ஏமையா ஒத்துக்கொள்ள மாட்டேன் - மாட்டவே மாட்டேன் என்கிறீர். உமது மதத்திற்கு னீர் எதிரியா, அல்லது கூடவே இருந்து குடிகெடுக்கும் சதிகாரரா, அல்லது தன் மதத்திற்குப் புத்தி பத்தாதென்று புத்தி சினந்து கூறுகின்றவரா? இதில் எது என்று கேட்கலாமா என்று னினைக்கிறோம்.

153

பழமைக்குப் பழமையாகிய பண்டைப் புராதன வழியாகத் திகழும் சிவரஸ்தாவின் வழி கூடி னடப்பவர்கள் - தொண்டர்கள்.

154

இனஞ்சேர்ந்து வாழாதான் வாழ்க்கை - களை சேர்ந்த பயிரோ டொக்கும்.

தோள்கூடி வாழாதான் வாழ்க்கை - தாள் கூடிச் செல்லாத் தடம்.

என்றும் இடித்து இடித்துக் கூறி உங்களைச் சேர்த்துச் சேர்த்து வைத்தாலும், உங்கள் பழைய குரங்கு மனம் னரகத்தில் பாயவே னிற்கும், உஜார். பெரும்பாதை செல்லும் உங்களுக்குப் பெரும் தோள் வலிமை வேண்டும் என்றே எம்முடைய எல்லாப் பாடும்.

155

னீங்கள் இந்தத் தெய்வீக சபையை வளர்க்க ஒரே வழிதான் இருக்கிறது. அதுவே, எமது மக்களாகிய னீங்கள் அனைவரும் ஒரே உள்ளம் படைத்தவர்களாக ஆவது. அதாவது எமக்கு ஒரே ஒரு மாணுக்கன்தான் இருக்க வேண்டும். அவ்வாறிருந்நால் எம் வேலை வெகுவாகக் குறையும். அப்ப னீ ஒருவன் ஒருவனல்ல. ஒரு கோடி பேரின் வல்லபம் பெற்றவனாகிறாய்.

156

தேவயோனியில் பிறந்தும் தன் ஜீவ சகோதரனுடன் பிரியமில்லாமலிருந்நால், மறுமுறையும் னரக யோனியில் புகுந்நவனே ஆவான்.

பன்னிரண்டு வருடம் ஒருவன் யோக்கியனாக இருந்து, ஒரு னாள் திருடி உதை தின்னாலும், அந்த யோக்கியன் என்ற பட்டம் போய்விடுமல்லவா? அது போல் பலகாலம் தேவனிலையிலிருந்து ஒரு னாள் தவறினாலும் னரகமே கதி.

157

ஒரு மனிதனுடைய மனத்தை மெய்ஞ்ஞானத்தில் இழுக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. 18 விதமான சாதுரியத்தைக் கொண்டு இருப்பலாம். அவற்றை 18 கான் வாதாக்கள் என்று சொல்வார்கள்.

158

அறிந்த மக்களுக்கு 'முப்பால்' எனப்படுவது, அறியாத உலக மக்களுக்கு மரணம் என்ற தலமாயிருக்கிறது.

159

வேத விற்பனம் கடந்த மந்திரோற்பன்ன சூக்கும ஆரூர் எல்லைக்கு ஏற்றி உன்னைத் தேவனாக ஆக்குமுன், எம்மிடத்தில் நீ ஓலுகோடி கற்பகாலம் படித்திருக்கிறாய். இது உன் அறிவை மூடிப் படிப்பிக்கப் பெற்றது. உன் அகத்தில் நீட்டிப் படிப்பிக்கப் பெற்றதால் அதை நீ அறியவில்லை.

ஆறுமாதம் செலவு செய்து ஆறாயிரம் மைல் கடந்து அடையவேண்டிய ஒரு பட்டணத்தை, மின்னல் வெட்டிச் செல்லும் வேகத்தில் செல்லுகின்ற விமானத்தில் ஏறி அடைந்தது போல், இத் தேவப் பிறப்பை நீ அடைந்துள்ளாய். இதற்கு உன் வயதைப் பறிப்பதில்லை. யுகாந்தப் பிரான் தங்கள் வயதைக் கொடுத்துப் படிப்பிக்கச் செய்கிறார்கள்.

160

னமது ஆதி மான்மியத்தில் "எல்லாண்டு எல்லாண்டு எண்ணுய்கிறத்தாண்டு" என்று ஆரம்பிக்கப் பெறுகிறதே. அங்கு 'எல்லாண்டு' என்று இருமுறை

சொல்லியிருப்பது, அண்டம் அணுவாக இருந்த காலத்தையும், அணு அண்டமாக இருந்த காலத்தினையும் குறிப்பிடுகிறது. இன்னும் அது, நம் ஜீவதேகத்தில் இருந்த காலத்தையும் தூலதேகத்தில் இருந்த காலத்தையும் குறிப்பிடுகிறது.

161

உள் அன்பு, வெளி அன்பு என இரண்டிருக்கின்றன. உலகத்தில் நீ உள்ளன்பு காட்டினாலும், வெளி அன்பு காட்டினாலும் பயன் துக்கமே. அங்கு உள் அன்பு வைத்துக் கொண்டு இங்கு வெளி அன்பு காட்டினால் முடிவில், தன்னையே தான் ஏய்த்துக்கொண்டதாக உணர்வாய். வெளி அன்பு துக்கத்தைத் தருகின்ற உலகத்திற்கும், உள் அன்பு நித்திய சுகத்தைத் தருகின்ற இந்த எல்லைக்குமாக ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது?

162

இத்தூல தேக வாழ்க்கை ஒரு கோழியின்மேல் ஏறிச் சவாரி செய்வதுபோலாகும். ஆனால் ஜீவ தேகத்தில் குடியேறி வாழ்வது ஒரு புலியின்மீது ஏறிச் சவாரி செய்கின்ற வெற்றி வீர வாழ்க்கையாகும்.

163

முத்திராலம்ப சக்தி வாய்ந்த ஒரு மெய்ஞ்ஞானப் பாரவான் அவர்களின் சமாதியில் நின்று அடித்து மோதி அழுதால், அவர்கள் உன்னை ஜீவன் முத்தனாக்க முடியுமா? உன் பிறவிப் பிணியை மாற்ற முடியுமா? முடியாது.

அவர்கள் தூலத்தை மாற்றிக்கொண்டு போன பின் எல்லாம் முடியும் என்று வைத்துப் பேய்க்கூத்தாடு கின்ற உலகத்தில் நீயும் இருக்கிறாய். உஜார். உங் ஙள் சர்வ பிழைகளும் தெறித்து ஓடவும், உங்ஙள் ஜீவப்பிணிகள் யாவும் இல்லாது மாறவும், உங்ஙள் வாக்கு மலங்ஙள் பொடியவும் ஆன, எமது உள்ளத்தில் சதா நின்றுலாவும் இச்சைக்கு நீங்ஙள் இணங்ஙி நடக்க, நாம் என்ன செய்யலாம் என்பதே எமது கவலை யாயிருக்கிறது.

164

மெய், உன் கை பலிதமாக வேண்டுமென்றால், உன் மனமாகிய கல்லை மெழுகாக்க வேண்டும். அதற் கான நெருப்பு, ஞானக்கினி ரூபமாகத் தயாராயுள் ளது. ஆனால் கல் தான் நெருப்பினிடம் நெருங்ங மாட்டேன் என்கிறது. நெருங்ஙினாலும் நடுவில் திரை யொன்று கிடக்கிறது.

165

உனது பழைய முழுமூட நினைவுகள் யாவையும் தீயிற் போட்டு எரித்து விட்டு, ஆசான் மேல் அன்பு பாயும்படிச் செய்ய வைப்பதற்கே உபதேசம். அந்த உபதேசம் உன்னைச் சிவமாக்காது. ஆனால் அன்பு என்னும் விசேடத்தினால்தான், வாகனத்தினால்தான் நீ சிவனடியில் சேரவேண்டும். செத்தாலும் பின்வாங்ஙாத வைராக்கிய அன்பே அந்த அன்பு.

166

இம் மனித தேகத்தில் அறுசுவையும் ஐந்து ஐந்து நாழிகைக்கு ஒருமுறை மாறி மாறி ஓடும். கைப்பு ஓடும்

போது நீ பிறந்திருக்கலாம். அதற்குத் தக்கபடியே உன் அறிவு இருக்கும் - அதை மாற்றமுடியாது. நவக் கிரகக் கோளரிவாளராகிய ஒரு தேவகுருதான் அதை மாற்றவல்லவர்கள்.

இனிப்பு ஒண்ணேகால் நாழிகை நேரம் ஓடும். அந்த நேரத்திலே ஜனிப்பது அருமை. அதிலும் ஆறு வகைக் கால மிருக்கிறது. இதையே ஆறுகாலத்தவம், ஆறுகாலத் தொழுகை என்று புறத்தில் எடுத்து வைத்துள்ளார்கள். சதாகாலம் இனிப்பு சுவாசத்தில் ஓடிக் கொண்டிருக்கிறவர்களாகிய அத் தனித்தவ வல்லவரின் உதவிகொண்டுதான் உன்னைத் தேவ நிலைக்கு மாற்ற முடியும்.

167

சஷ்டியப்த பூர்த்தி:— அறுபதாம் கல்யாணம்; இது சாவு கல்யாணம். இவனிடத்தில் இனிமேல் வேகம், கனம், வீரம், பெருமை, மேல் உலகம் அடையும் இச்சை இருக்காது என்று ஞானிகளுக்கு அறிவிக்கவே, இது எடுத்து வைக்கப் பெற்றிருக்கிறது.

168

ஒருவனுடைய அறிவைப் பலவழிகளில் சிதற அடித்தால் அவன் ஆயுள் குறையும்.

169

மனுவை ஈசனுக்குகிற திருச்சன்னிதியில் உனக்கு மூன்று பத்தியம் வேண்டும்: (1) அவர்களிடத்தில் சத்தியமே பேசுதல். (2) குயுக்தி எண்ணம் வராதிருத்தல். (3) பரிசுத்த ஒழுக்கத்தோடு நடந்து கொள்ளுதல்.

இம் மூன்றையும் சதா ஜாக்கிரதையாகக் காப்பாற்று கிற னீ குரு சன்னிதியில் வந்நால், வாடைத்திமிர் கொண்ட ஒரு பனிக்காற்று அவர்களின் இரு புருவ மய்யத்தில் அடிக்கும்; இல்லாவிட்டால் அனல் காற் றடிக்கும். அப்படி அனல் தட்டினல் அது ஏன் என்று கவனித்து அதை னீக்கவே பார்ப்பார்கள். எத்தனை சாஸ்திரங்ஙள் னீ படித்தாலும் இது உனக்குத் தெரிய வராது. இந்ந சத்திய னடக்கையை எப்படியாவது உனது உள்ளத்தில் வைத்துப் பூட்டவேண்டும் என் பது எமது எண்ணம்.

170

ஜீவன் - அவாவுடன் தாவுகின்ற செயலால் மனம் என்று பேர் பெறுகிறது. இரும்புவேலே செய்வதால் கொல்லன் என்பது போலாம். ஆகவே மனச்சாக்ஷி யாக என்று சொல்வது பிசாசு சாக்ஷியாக, பிரட்டுருட்டு சாக்ஷியாக, குல்லு முல்லு சாக்ஷியாக என்று சொல்லு வது போலாகும்.

171

யாகம் என்பது ஆசானிடத்தில் பத்தினித்தனம். அந்ந முத்தி மலேயாகிய தவ அக்கினியில், உனது அங்ஙக்குலங்ஙளே அர்ப்பணித்தல் - அதில் உன் பாவ உயிர் உடலேக் கருக்கிப் புது னித்திய உயிர் உடலேப் பெறுதல்.

172

ஜீவனின் கனம் ஞமிருக்கும் பூமியின் கனமே. ஆனல் ஜீவன் தன்னுடைய சொந்ந பலத்தைக் காட்டா மல், தான் எந்ந உடலில் குடியேறி யிருக்கிறதோ அந்ந

உடலைப் போல 32 பங்கு அதிக கனத்துடன் அதைத் தூக்கிக்கொண் டலைகிறது. நாம் படுத்திருந்தாலும் ஜீவன் விளக்கின் சுடர்போல மேல் நோக்கியே இருக்கிறது. ஆகவே உயிரோடிருக்கும்போது மனித உடலின் கனத்தைக் காண முடியாது.

173

மனிதனுக்கு நித்தியத்திற்கென்று தரப்பெற்ற மேலாம்பரமான அறிவை, தன் வயிற்றுப் பாட்டுக்கு உபயோகிப்பதைப் பார்த்தால், பல்துலக்க பல்குச்சி ஒடித்துவா என்று சொன்னதற்கு, ரம்பம் வாள் எல்லாம் திரட்டிக் கொண்டு போகிறவனைப் போல இருக்கிறது.

174

தீ எல்லாவற்யையும் சுத்தப் படுத்தி, தன் மய மாக்கக் கூடியது. அப்படி ஆக்கும் போது சுட்டுத் தீய்த்து ஹிம்சித்து அவற்றின் உருவை மாற்றித் தன் மய மாக்குகிறது. ஆனால், ஒரு தெய்வ ஆசானின் பிரம்மப் பிரகாசத் தீ, உன்னைச் சுட்டுக்கொளுத்தி ஹிம்சியாது பூப்போல் நின்று உன் பாவங்களை எல்லாம் சுத்திகரிக்கும். அப்படிச்செய்து எமன் எல்லையில் வெற்றி காணச் செய்யும் தீயே, விபூதி.

175

மானிடன்:- மாதவரிடத்தில் ஒன்றுபட்டு இருப்பவன். நாம் நமது தேவத் திருநாட்டுத் திருநெறிப் பிரான் திருவாய் திறந்து வெளியேற்றப்பெற்ற அண்டாண்ட விஸ்பரூப தெரிசனை காணுததற்கு முன்னுலிருந்த ஜென்மம் மானிடம். ஓர் அபுரூப மாதவ சிவகுரு வரத பிரானைத் தேடி அடைந்து சேர்ந்து கொள்ளும் எண்ணம் பதிந்தவன் யாவனோ அவனே மானிடன் எனக்கொள்ளுதல் நம் தேவ நெறி.

176

சர்வ ஞமங்களுக்கும் இருப்பிடமாய், தனக்கென ஒரு ஞமமுமிலதாய் விளங்கும் "அது" என்றதின் இஷ்டத்தில் கலப்பது அதிஷ்டம்.

177

பிறவிச் சுழலில் இருந்து விழிப்பவர்கள் மனிதர்கள்; பிறவா னெறியில் வாழ்பவர்கள் தேவர்கள். தன் யூகப்படிச் செய்யும்போதும் தன் அறிவில் சாயும்போதும் பிறவிச் சுழலில் சிக்கி விழிக்கிருன். ஆனல் தன் ஆசரியரின் திருநேக்கிற்கு இணங்கி னடக்கும்போது பிறவா னெறியாகிய தேவ னிலையில் இருக்கிருன்.

178

'காத்துள்ள போதே தூத்திக்கொள்' என்ற பழமொழி, "உள்ள போதே காத்து, தூத்திக்கொள்" என்றிருக்க வேண்டும். இந்நத் தேகம் என்னும் களத்தில், உள்ளமென்னும் ஒரு குவியல் இருக்கிறது. அதில் பொய்யும் மெய்யும் கலந்து பின்னிக்கிடக்கிறது. அந்நப் பொய் மெய் கலந்து கிடக்கிற குவியல், னம் தூல சக்திகொண்டு பிரிக்கப்படுவதா? இல்லே. ஆகவே இத் தூல சக்தியோடு தேவசக்தியாகிய ஜீவ வல்லபம் பெற்றுள்ள ஒருவர் வந்துள்ளபோதே காத்து, அந்நக் குவியலேத் தூத்தி, மெய்யைக் கொள்ள வேண்டும். அவர்கள்தான் பொய்யாகிய பதரை மெய்யாகிய னித்தியத்தினின்றும் னீக்கிப் பரிசுத்தத்தில் ஆக்குவார்கள்.

179

"படிப்படக்கிக் கேள்வியெல்லாம் பற்றற விட்ட டக்கிப் பார்த்திடலும் அடக்கி"- திரு அருட்பா.

இதற்கு ஒரு தன்னிலக்கணைச் சாவி யிருக்கிறது. அதைப் போட்டால்தான் இந்தப் பாட்டுத் திறக்கும். படிப்படக்கி என்றால் படிப்பையெல்லாம் விட்டுவிட்டு என்று வியாக்யனம் செய்வார்கள். அது அனுபவ சத்திய வியாக்யான மாகாது. ஆசிரியருக்கு எதன் மேல் அருவருப்பாயிருக்கிறதோ அந்தப் படிப்பை, கேள்வியை, பார்த்திடலை, அந்தக் கந்தத்தை நீக்கி விடுவதுவே ஆகும். அவர்கள் எண்ணத்திற்கு மாற் றமாக இருப்பதை விட்டுவிடுவது என்பதே அதன் உண்மை வியாக்யானம்.

180

பித் என்னும் வித்து எல்லோரிடமு மிருக்கிறது. அதைத் தெளியவைக்கும் மருந்து உலகத்தவர் கையில் இல்லை.

பயங்கரம் என்ற வயிற்றிற்குள் இருப்பது தேவ தத்தன் என்ற வாயு. அதன் மதலை தனஞ்ஞயன். இரண்டும் பித்தத்தினால் விளைவன. பித்தம் தெளிந் தால் கோபம் இல்லை. அதைத் தெளிவிக்கும் தேவ மருந்து எமது கையிலிருக்கிறது.

181

உன்னுடைய குடும்ப வேலை அழிந்தே போகிற அனித்திய வேலை. ஆனால், இறைகுருவினுடைய குடும்ப வேலை, மக்களைச் சுவர்ணபதியில் ஏற்றி னித்

திய சூரிகளாக ஆக்குவது. இறைவனின் திருச்சன் னிதியை அடைவதற்கு உன்பாலிருக்கும் மாற்றமான செயலாதிகளேச் சங்காரம் செய்து, அதற்கான சிவ கரண காரிய வளர்ச்சிகளேச் செய்வதுதான் அவர்கள் வேலே. அதைப் பற்றிப் பேசுவது வேதம்.

182

வேதத்தின் சரிதம் எந்தக் காலத்திலும் எந்தப் பூமியிலும் வெளியாவதில்லே. ஆனல் இறைவனின் தேவ குடும்பம், இந்தப் பூமியில் உண்டாக்கி னடத்தப் பெறும்போதுதான் அதனுடைய சரிதம் வெளியாகும். அப்படி வெளியாவதற்குப் பெயர் முதல் னூல், முதன் மொழி, புராதன மொழி, பழமொழி. அதை வழிபட்டு னடந்தவர்கள் பேசினதெல்லாம் வழினூல்.

தங்கள் தரிசனேயில் னேராகத் தீர்க்கமாகக் கண்டவர்களின் அமுத னுவில் னின்று கலேமகள் பேசு வது முதல்னூல். அது ஆதியனுகிய முதல்வர் பேசு வது.

183

தேகத்தை விடும்போது மாள்தல் என்று குறிக்கப் பெறுகிறது. அது அறியாமல் மாள்தல். ஆனல் செத் துப் பழகிக்கொள்ளுதல் பெருமாள்தல். அந்தப் பெரு மாள்தல் எந்த ஒரு னுளேக்கொண்டு லபிக்கப் பெற் றதோ அந்த னுளே திருனுள்.

184

னுவுக்குப் பெரியதாக உலகமில்லே. கலேவாணி குடி யிருப்பு னுவில் என்று வேதம் சொல்லுகிறது.

ஆகவே அந்தக் கலைவாணி உன்னுவில் இருக்கும்படி உன்னுவை னீட்டி, அகட்டி, வேத னுவாக வளர்க்க வேண்டும் என்பதுவே எம் எண்ணம்.

185

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப், பேணித் தமராக் கொளல்"— திருக்குறள்.

பேணி: பெரியார் உள்ளத்தைத் தன்மீது பாயச் செய்து; தமராக்கொளல்: பெரியாரை ஒரு தமராக வைத்து அதில் னீ ஒடுங்கி னுழைந்து கொள்ளக் கூடிய ஒருவனுய் ஆகிக் கொள்ளுதலே அரியவற்றுள் அரிது.

186

ஒரு மெய்ஞ்ஞானி முன்பாக ஒருவனுக்கு ஏற்படும் விசனம், அவனது ரோகங்களைத் தகித்து அவனை மெய் னிலைக்கு ஏற்றுகிறது. ஆனுல் மற்ற எல்லையில் ஏற்படும் விசனம் அவனது ஜீவனைப் போக்குகிற செயலாயிருக் கிறது.

187

வள்ளல்: பாவமாகிய கள்ளை முறித்து வட்டாக்கு பவர்கள். விஷத்தை அமிர்தமாக்குபவர்கள்.

188

னும் சபைக்கு வரும்போது 'இன்னதைத்தான் பேசவேண்டும்' என்று னினைத்து வருவதில்லை. உங் ஙள் முகத்தைப் பார்த்ததும் உங்கள் ஜீவனுக்கு அப் போது என்ன வேண்டும் என்பதை னினைத்துப் பேசு கிறேம். "னீ எம்போல் இருப்பதால் னும் உன்னிடம் இதைப் பேசுகிறேம்" என்று னும் சொல்வதுண்டு. அவ்வாறு னும் பேசுவது "அவர்கள்தான் னுமும்"

என்ற எண்ணம் உங்களுக்கு வரட்டு மென்றேதான். அத் தருவாயில் உங்கள் எண்ணம் எம்மிட மிருக் கிறது. எம் எண்ணமோ பிரம்மலயத்தில் இருக்கிறது. ஆகவே உங்கள் எண்ணமும் அங்கே போய் உலாவு கிறது.

189

எமது வான்பதித் தந்தை தனிகை மணிப்பிரான் அவர்களின் நினைவு தட்டியவுடன் எமக்கு தேகாதி யந்நம் மயிர்க் கூச்செறிகிறது. அன்பு என்பதின் அளவு எவ்வளவு கடந்து நிற்கிறதென்று பார். அன்பே சிவ மென்று வாயால் சொல்லித் திரிகிறார்கள். அவர்களுக்குத் தங்களை அன்பிலே மாட்டிவைத்துக் கொள்ளச் சக்தியில்லை. தெரியவில்லை. அழிந்துபோகிற இந்நத் தூலம் அழியாமையை அடைவது, இந்த மெய் அன்பென்னும் பிடியினாலேதான்.

190

“ஏடு தண்ணீரில் எதிர் ஏறிற்று என்று சொல்லு கிறீரே, பனையிலிருந்து விழுகிற நீரில் ஏறுகிற மீன் அதை விடப் பெரிதல்லவா” என்று ஒரு நாஸ்திகன் கேட்டால், விழிக்கிறார்கள். ஏனெனில், எதிர் ஜலத்தில் பஞ்ஞாட்சரமாகிய ஏடானது ஏறுகின்ற அந்த அகமிய மெய் வல்லபச் செயல் அவர்களிடத்தில் இல்லை.

191

எமது தனிமுதற் பெருமான் அவர்களிடத்தில் நம் பழகி வருங்காலத்தில், இந்த மெய்யின்பால் எமது

மூர்க்கத்திற்கும் ஓர்மைக்கும் ஓர் நிகரில்லை. இங்கு நும் மூர்க்கம் என்று குறித்தது ஒருவன் கொலை செய்ய நிற்கும் எண்ணத்தையும் கடந்துநிற்கும் அத்தகைய மூர்க்கமே. 'நமது மனைவி மக்கள், சொத்துச் சுதந்திரம் புகழ் கீர்த்தி போய்விடுமே, நம் உடல் ஊனந்துவிடுமே, என்ற எண்ணம் வராத தனி மூர்க்கம் அது. அதுவே இத் தெய்வ முதலை எம் கையில் தந்தது.

192

அன்னியர் வினா:— உங்கள் குருநாதர் எல்லோரையும் 'அடா புடா' என்றுதான் பேசுகிறதாமே?

விடை:— உங்களுக்கு யார் அப்படிச் சொன்னது? உங்களை எல்லாம் 'அடாபுடா' என்று சொல்லமாட்டார்கள். நீங்கள் கையெடுத்துக் கும்பிடுவதற்கு இலக்காகி - கயிலாயத்திற்குப் போக்கு வரத்தாயுள்ள, சிவ ராஜர்களாக ஆக்கப்பெற்றுள்ள தங்கள் மாணாக்கர்களை அப்படி 'அடாபுடா' என்று சொல்லுவார்களே தவிர, உங்களை எல்லாம் "ஆஆ - அப்படிச் சொல்லமாட்டார்கள். வாங்க - போங்க - இருங்க எப்ப வந்தீங்க" என்றுதான் சொல்லுவார்கள்.

193

சாதிகளின் கர்த்தாவே என்றால் யார்? சாதிகளைப் பற்றிக் கருத்துடையவர்கள் யாரோ அவர்கள்தான்.

வேதத்திற்குத் தொனி கொடுக்கவில்லை என்றால் அது வெறும் காகிதம்தான். உனது மனைவிக்கு நாதன் நீ. வேதத்திற்கு நாதன் நாம். நாதன் வந்த பின்தான் வேதத்தாய்க்குச் சந்ததிகள் உண்டாகிறது. இதை

வைத்துத்தான் 'சமரஸ வேத ஞதாவே' என்ற திரு ஞமம் எடுத்து வைக்கப்பெற்றது.

194

எக்கோடி காலமேனும் மீளா னரக அவஸ்தைக்கு ஆளாகப்படாதே என்று அச்சப்பட்டாவது, அல்லது வாடாத சுவர்ணலோக இன்பகர வாழ்வுக்கு ஆசையுற்ரு வது, ஆத்திரங்கொண்டு முனைந்து, ஓர் அறிவாகனின்று கவனிக்கிறவர்களுக்கே இந்த மெய் வந்து வாய்க்கும்.

195

எதுவும் தன்னைப்போல, அதாவது தாஞக வராது. ஒருவருக்குத் தீமை வருவதோ னன்மை வருவதோ தன் தன் இச்சையின் காரணத்தாலேதான். வேணுமென்று இவன் எதனிடம் (னித்தியமோ அல்லது அனித்தி யமோ - சுவர்க்க வாழ்வோ அல்லது னரக வாழ்வோ) சார்ந்து கொள்ளுகிருனே அதன் மயமாய் ஆகிவிடுகி ருன்.

196

கண்ணில் காதில் ஞக்கில் இறைவனல் பாவி என்று முத்திரையிடப்பட்ட சாதி - குருடு, செவிடு, ஊமை இருக்கிறதல்லவா? அதுதான் மட்டமான சாதி - தீண் டாத சாதி. இதைத்தான் ஞானிகள் னினைவு போய்த் தீண்டாது.

197

எம்முடைய னினைவு யாரை வெறுப்பாக னேக் குகிறதோ, அவர்கள் எல்லாம் அன்னியர்கள். அவர் களுக்கு னமது மெய்யுலகச் சொத்தில் பாத்தியதை கிடையாது.

னம் உத்திரவுக்கு வேலை செய்கிறவனை மாற்றிச் செய்யச் சொல்பவனே எம் விரோதி.

198

எமக்குச் சிலரிடம் அதிகப் பிரீதியாக இருக்கும். சிலரிடம் சாதாரண பிரீதியாக இருக்கும். சிலபேர்களிடம் பிரீதி தாமதித்து வரும். எம்முடைய இந்நப் பிரீதியின் தரத்தை வைத்துத்தான் எம் தாய், தந்நை, பிள்ளை, பெண்டாட்டி என்றெல்லாம் இருக்கிறது.

வெளி உலகத்தில் சொந்நக்காரனுகை வேண்டுமானல் சொந்நக் காரனுகப் பிறக்கவேண்டும். ஆனல் இங்கு அப்படித் தேவையில்லை.

எம்முடைய சாதி:—எம் னினைவில் னிலைத்து னின்று சாதிக்கின்றவர்கள்தான் எம்முடைய சாதி.

199

எமக்குப் பிறர் சொல்லிக் கொடுக்க ஞம் அதைக் கேட்கிறேம் என்று சொல்லுகிறவன், எம்மை னேரே தூஷிக்காதபடி மறைமுகமாக எம்மைத் தூஷிக்கிறன். எம் சிஷ்யரில் ஒருவனை, எமக்கு மேல் ஆளாகச் சொல்லுகிற பாதகனே அவன்.

எமது ஐயனேடு புறப்பட்டுப் போன அந்நக் காலத்தில், எம் அங்கங்கள் ஒவ்வொன்றும் மாற்றமாகச் சொல்லிக் கொடுத்தும், எம்மை அவற்ருல் மாற்ற முடியவில்லையே. அறியாத அந்ந இளமைப் பருவத்தில் எமது முரட்டு மூடனெஞ்ஞமே எம்மை மாற்ற முடியவில்லையே. இப்பவா பிறர் சொல்லை ஞம் கேட்கப் போகிறேம்.

200

பிறரைக் குறைவுபடப் பேசுவதே தனக்குவரும் உயர்வு என்று எண்ணுகிறவர்கள், அது தனக்கே வரு வித்துக்கொள்ளும் குறைவென்பதை உணர்ந்நார்க ளில்லை. அவர்கள் அதனை ஒரு தினைப்போது னேரம் னின்று கவனிப்பார்களேயானல், அது ஒரு அற்பத் தனமான மகிழ்ச்சியென்று னன்ருய்த் தெரிந்துகொள் வார்கள்.

201

கண், மூக்கு, வாய், காது, ஸ்பரிசம் இவற்றின் மூலம் அனுபவிக்கும் ஐவகை இன்பம்தான் னீ அனுப வித்திருக்கிருய். ஆனல் ஆருவது இன்பம் ஒன்றிருக் குதே; அதை இந்ந அழி இன்பத்தை வைத்து அளக்க முடியாது. இந்ந உலக இன்பம் ஒரு ரோமத்தளவு கூட அதற்கு இணையாகாது. னீ அனுபவிக்கும் இன் பத்தைச் சுருக்கமாகச் சொல்லுமிடத்து, அதுதான் சாவு. அதைக் கண்டு அஞ்சி னடுங்கும் பேடிகளே மக்கள். சாவு என்ற சொல்லைச் சொன்னலே உனது உடல், மனம், அறிவு, ஜீவன் அனந்நமும் னடுங்கும். ஏன் என்ருல் அந்ந எல்லையில் இன்பம் அனுபவிக் கத் தெரியாது. னிஜமான பெண்ணிருக்க, அவளைப் புறக்கணித்துவிட்டு, போட்டோவை வைத்துக் கொஞ் ஞும் வீணர்களா யிருக்கும்வரை, இதை அனுபவிக்க எப்படித் தெரியும்? அந்ந எல்லையில் னின்று ஒரு விஞடி னேரம் பெரியோர்கள் அனுபவிக்கும் இன்பத்தை, இந்ந அழி உலகத்தில் கோடானு கோடி காலம் இருந்து அனுபவிக்க ஒருவன் வரப்பிரசாதம் பெற்றிருந்நாலும், அந்நப் பேரின்பத்தில் ஒரு தினை அளவுகூட அனுப

விக்க முடியாது. எமக்கு அது உடலாதிய ரோமக் காலாதிய அணுக்கோடிகளாதிய அவ்வளவிலும் னிறைந்து வலிமை பெற்றிருக்கிறது. அந்த எல்லை, எமன் சரணுகதி அடைகிற எல்லையாக இருக்கிறது.

202

முன் தோன்றிய செம்மல்களெல்லாம் துஷ்ட னிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கே வந்தார்கள். ஆனுல் னம்ம காலத்தில் அப்படி அல்ல. னிக்கிரகம் என்பதே இல்லாமல் எல்லோரையும் அணைத்து அணைத்து, னும் குறிவைத்த எல்லைக்குக் கொண்டு வந்து விட்டோம். துஷ்டர்களையும் கூட னன்மன சிஷ்டர்களாக ஆக்கி யுள்ளோம். அந்தப் பாரவான் களெல்லாம் இந்த ஒருருளைத் தேவ ரதத்தை ஓட்டிய பாதை வேறு. னும் ஓட்டி வந்த பாதை வேறு. அவர்களின் தேவ ரதம் குடையடித்த எல்லைகளெல்லாம் னமக்குத் தெரியுமாகையால், அந்த எல்லைகளிலெல்லாம் குடையடிக்காதபடி முன் கூட்டியே எடுப்பெடுத்துப் பாதுகாத்து வந்ததால்தான் அறுபத்தேழு சாதிகளும் பல ஆயிரக்கணக்கான மக்களும் ஒரு தேவ குல மக்களாய்னின்று, இன்று இங்கு திரண்டிருப்பதற்குக் காரணம். உங்களுக்கு னும் இணக்கமாக இருப்பது போலவே காட்டிக் காட்டி, உங்களுக்குத் தெரியாமலேயே இந்த னெடுந்தூரம் கடத்தி வந்துள்ளோம். தண்டித்து வெறுத்து ஒருவரையும் தள்ளாமலேயே அழைத்து வந்ததால்தான் இப்படிச் சேர்க்க முடிந்தது. னேவா முதலிய தீர்ப்பு னெறிக் கர்த்தர்கள் வந்த அந்தக் காலத்திலிருந்த மக்

கள், கடவுள் ஒருவர் உண்டு என்றுவது ஒத்துக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் இறைவனுடைய திருத்தூதரை னம்பிக்கை கொண்டு வணங்கவில்லை. ஞம் வந்த இந்தக் காலமோ ''கடவுள் ஏது? எல் லாம் இயற்கையே'' என்கிற எண்ணம் எங்கும் மலிந்து பெருகி வருகின்ற காலம்.

இவ்வாறுக ஞஸ்திக எண்ணமே எங்கும் பெருகி மலிவுற்று னிறைந்துள்ள இந்த அதோகதி காலத்தில் ஞம் வந்து, உங்களை இந்த யதார்த்த னீதியில் ஏற்று கிறதாக இருந்நால் – எப்படியோ ஏற்றியாச்சுதே – ஞம் இதற்கு என்ன பாடுபட் டிருக்கவேண்டும்? லேசாகத் திருப்ப முடிந்நதா? இல்லையே. என்ன படுகளம்! இதைத் தாங்கள் பட்ட கஷ்டமாகச் சிந்நித்துச் சிந்நித் துப் பார்க்கிறவர்களுக்கே இந்த மெய் எளிதாக லபிக் கும்.

203

ஒருவன் எம்மிடம் வந்து இந்த மெய்ஞானத்தை னடத்தும் முறைபற்றி ஏதாவது யோசனை சொல்லும் போது, எமக்கு அவன் பேரில் சுர் என்று கோபம் வரும். ஆனல் ஞம் அதை வெளிக்குக் காட்டாதபடிக்கு, வெறும் சப்தத்தை உண்டாக்குகிற இந்த மிஷின், முன்பின் எல்லாம் அறிந்நதுபோல் னமக்குப் புத்தி சொல்லுது; இருந்நாலும் ஞம் உண்டாக்கிய இந்த மிஷினை இப்ப ஒன்றும் செய்யக்கூடாது; னளடைவில் கொஞ்சும் கொஞ்சுமாகத் திருத்துவோம் என்று னினைத்து, அவன் யோசனையை ஞம் முழுக்க ஏற்றுக் கொண்டதுபோல் காட்டுவோம். அதைக்கண்டு அவ

னும் ஆண்டவர்கள் னம் வார்த்தையைக் கேட்கிருர்கள் என்று சந்தோஷித்துப் பழைய தன் மந்நித்தனத்தை விட்டு விட்டுக் கொஞ்ஞம் சுடுசுடு என்று திரிவான். இவ்வாறு அவனறிவில் சிறிது சிறிதாக மெய்ப்பூப்பு உண்டாகும்படிச் செய்வோம். னும் இப்படிச் செய்யா விட்டால், அவன் அறிவு அஞ்ஞி ஒடுங்ஙி மடங்ஙி ஊைந்து னசித்தே போய்விடும். அவன் அறிவில் வளர்ச்சி என்பது உண்டாகவே உண்டாகாது. இவ் வாறெல்லாம் அணு அணுவாகக் கவனித்து, அப்போ தைக் கப்போது வேண்டிய பலவேறு தேவ னட னங்ஙள் இயற்றி, னும் உங்ஙள் எல்லோரையும் இந் நச் சுவர்ண பதி எல்லேக்குக் கூட்டிவந் நிருக்கிரும்.

204

யாரும் கட்டமுடியாத திரு மாளிகையே உன் தேகம். எவராலும் பெறமுடியாத அதனை னீ பெற்று வந்துள்ளாய். ஆனல் அதனுள் னுழைவதற்கு ஒரு வாசற்படி கதவில்லாமல் இருக்கிருய். வெளியே னின்று கொண்டிருக்கிருய். அடிக்கிற காற்று, வெயில், மழை யெல்லாம் உன் தலையில்தான். மேற்கொண்டு உன்னுடைய அந்ந வர்ணீகரமான திரு மாளிகையில் பிசாசு குடியிருக்கு. அந்நப் பிசாசை விரட்டிவிட்டு, உன் மாளிகைக்குள் னீ போய் வருவதற்கு ஒரு வாசற் படி வைத்துத்தர வந்ந செம்மல்களை, 'எனக்கு எல் லாம் தெரியும்' என்று அலட்சியம் பண்ணி விட்டாய்; விடுகிருய். உன் மாளிகைக்குள் ஒரு னளாவது னீ னுழைந்து பார்த்திருக்கிருயா? இல்லையே! ஆகவேதான் வேதம் உன்னைக் குருடன் என்று சொல்லுகிறது. தன் மாளிகைக்குத் தலை வாசல் தெரிந்து, உள் னுழைந்து,

அங்குள்ள கோடி கோடி கால வாழ்க்கைச் செல்வத்தைக் கை போடாதவர்களைச் சர்வ படைப்பினமும், வேதங்களும், வேத கர்த்தர்களும் பகைக்கின்றார்கள். ஆனால் அதைக் கை போட்டவர்களையோ, சர்வகலா இன்பங்களும் எதிர்கொண்டு வந்து நேசிக்கின்றன.

205

அறம் செய்தல் என்றால் பணத்தை அள்ளிக் கொடுப்பது என்றுதானே உன் நினைவு. ஆம். அதனால் உனது செல்வம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போய்விடுமே. இவ்வாறு குறைந்து போவதா அறம். இல்லை. இவ்வுலக இச்சையை விட்டு யதார்த்த நிச்சயத்தில் நின்று அகமுகத்தில் நாழிகைக்கு நாழிகை வலுக்கொண்டு ஏறுகின்ற அந்த நிச்சயமே அறம். அதுவே பிரம்மானந்தம். அது, மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கப் பெற்றது. ஆனால் இவன் குறைந்து போவதையே அறம் என்கிறான். இது களிம்பேறும் உடல். இது பெருமை யென்னும் மெத்தையைத் தேடுகிறது. பெருமையையே தேடி ஓடுவதால் பயம், வியாகூலம் ஆகிய அபாயத்தை அடைகிறது.

இந்த வியாகூலமெல்லாம் நீக்கப்பெற்று தெளிந்த விளக்கத்தில் ஏறி, வல்லபம்கொண்டு,சிவமாகித் தெளிவு என்று சொல்லப்பட்ட ஆட்சி ஸ்தலத்தில் குடியிருப்பதுவே அந்த அறம். உலக அறம் செய்தவனுடைய ஜீவாத்மா காலமெல்லாம் விசாரம், பயம், துக்கம் முதலியவற்றிலேயே இருக்கிறது. இந்தப் பயத்தை, இந்த மாசைச் சங்காரம் செய்து, அந்த நித்திய

னோடே சுகித்திருக்கும் பரமானந்தத்தில் உன் மனதை ஏற்றுமே, அந்த நித்திய விளக்கத்தில் உன்னைப் புகுத்தி மகிழ வைக்குமே, அதுதான் நிஜமான அறம். பயம் கோழைத்தனம் இவைகளை நீக்கி, ஆண்மையும் வலிமையும் தருவது தெளிவு. அந்தத் தெளிவில் உன்னை ஏற்றி, நிலைப்பிக்கச் செய்யுமே அதுவே அறம்.

206

இந்தப் பூமியில் ஆறு பிரளயம் ஆகியிருக்கிறது. அப்பொழுதெல்லாம் இந்தப் பூமி முழுதும் அழியவில்லை. ஆனால், அதன் பாவம் மட்டும் சங்ஙரிக்கப்பட்டது. இனி வரும் சங்ஙாரம் அப்படியானதல்ல. சர்வத்தையும் மாற்றிப் புதுப்பித்து ஆக்குவது. இப்போது ஆகாயத்தில் சந்திர, சூரிய மண்டலத்தில் நெரிசல் ஏற்பட்டு விட்டது. அந்த நெரிசல் பூமியில் வந்து தட்டுகிறதென்று, இந்தப் பூமி குலுங்கி மேடு பள்ளமில்லாமல் ஒரே சமனாக்கப்படும். அதன்பின் இப்போதிருக்கின்ற இந்த மரங்கள், மலைகள் ஒன்றையும் நீ கண்ணாலே பார்க்கமுடியாது. இந்த ஆச்சரியத்தை உன் கண் பார்க்கப்போகிறது. மலைகளெல்லாம் கத்தரிக்கப்பட்ட ரோமக்கால்கள்போல் அணு அணுவாய்ப் பிரிக்கப்படும் நேரம் அது. அந்த நெரிசலை உன்னால் தாங்கமுடியாது. சீசாவில் தண்ணீரை ஊற்றிக் குலுக்குவது போல் இந்தப் பூமி குலுக்கப்படப் போகிறது. ஒரு பூசணிக்காயை 300 மைலுக்கப்பால் வைத்தாலும், சமீபத்தில் இருப்பது போலத் தெரியும். எங்கும் ஒரே மட்டமாகச் சமதளமாக இருக்கும். அந்தக் காலம் எப்போது

என்கிருயா? "இந்நா கோடை காலம் தீர்ந்நது. இனி அறுப்புக்காலம் வராது. வந்நாலும் பலனற்றுப் போகும்" என்று வேத அதிகாரண கர்த்தர்களின் திரு வசனப்படி, அது னிகழப்போகிறது. இதை எம் தோற்றத்தில் கண்டு திட்டமாகச் சொல்லுகிறேம். இந்நச் சந்நிர சூரியர்களுக்கும் பூமிக்கும் இனி வயது இல்லே என்ற அந்ந னலம் குலேயும் னெருக்கத்திற்கு வந்நுவிட்டது.

ஞன்மறை அரசராகிய னபிகள் ஞயகம் அவர்கள், "பூமி முழுவதினுக்கும் ஒரே மெய்வழிச் சபைதான் உண்டாயிருக்கும். பூமியின் ஒரு கடைக்கோடியில் சர்வ சாட்சி வித்தகராகிய அவர்கள் உண்டாயிருப்பார்கள். அந்ந ஸ்தலத்தில் எம்முடைய கலாம் ஷரீப், அதன் அகமிய ஒளியோடு வெளியாகும். அவர்கள் குழல் ஊதி வணக்கம் எடுத்து வைப்பார்கள். காலே வணக்கத்தில் னிலே வாசிப்பும் இருக்கும். அவர்கள் இருக்கும் எல்லேயைச் சுற்றி முள்வேலி போட்டிருப்பார்கள். அங்கே ஒரு னெருக்கமான பாதை யிருக்கும்" என்று இங்கே என்னென்ன னிகழ்ந்நனவோ னிகழ்கின்றனவோ அவ்வளவும் அந்ந வேதத்தில் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிருர்கள். முன்னுதிய வேதங்களில் 'உத்தியோவனம்' என்று கூறியுள்ளதைக் கேட்டதும், மாடமாளிகை யெல்லாம் இருக்கும் ஒரு சோங்கான வனம் என்றுதானே னினேத்தோம். இந்ந வனுந்நரத்தையா, உத்தி மலிந்நு உலாவும் இந்ந வனத்தையா னினேத்திருப்போம்? இல்லே. வந்ந வந்ந வேதங்

ஙகளில் உள்ள ஆயிரக் கணக்கான தீர்க்கதரிசன அடையாளங்கள், னம்ம எல்லையை னேக்கி வந்து குவிகின்றன. அவற்றை எண்ணக்கூட முடியவில்லை. அவைகள் ஒவ்வொன்றையும் கேட்கக்கேட்க அந்த வேதங்கள் பூராவும் தித்திக்குது. வேதத்தை ஓதினலே புண்ணியம் என்ருல் அந்தச் செயல் னடை பெறுகின்ற இந்த னிச்சய னிர்ணய எல்லையில் குடியேறி இருப்பது என்ன பெரும் புண்ணியம்? வேறு எந்த எல்லையைக் குறித்தாவது இவ்வளவு தீர்க்க தெரிசனங்கள் வேதங்களில் உண்டா? இல்லை. ஆகவே, இது என்ன எல்லை என்பது ஊணிப் பார்ப்பவர்களுக்குத் தெரியாமல் போகாது.

207

எல்லோருக்கும் ஒரே இறைவன்தான். இறைவனைக் காணும்வரை பலசாதியாய் இருப்பாய். ஒற்றுமை ஒற்றுமை யென்று செய்யும் உன் பிரசாரம், உன் சொந்த னன்மையைக் கருதியோ அல்லது தன் னலத்திற்கோ ஆன பொய்யான பறை சாற்றுதலே ஆகும். சர்வலோகமும் படைத்த ஒரு பொருளாகிய இறைவனைப் பார்த்து - ஒருவர் அல்லா என்கிருர், ஒருவர் சிவன் என்கிருர், ஒருவர் விஷ்ணு என்கிருர், ஒருவர் பரமண்டலத்திலுள்ள பிதா என்கிருர். இவ்வாறு பேசி ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு சாகின்ருர்கள். உலகில் இவ்வாருக எத்தனையோ சாதிகள் வகுப்புக்கள் இருக்கின்றன. அவற்றை அதிகாரத்தால் மிரட்டி அடக்கி ஒன்ருக ஆக்க முடியுமா? முடியாது. அப்படி ஆக்க முற்படுவது, குதிரையை அதன் பின் பாகத்தில்

போய்ப் பிடிப்பதுபோல் ஆகும். உன்னுடைய சாதித் தடிப்பு உன் உள்ளத்தை விட்டுப் போகவே போகாது. ஆனால், பிறர் பார்க்க எல்லோரும் ஓர் குலம் என்று வாய்ப்பறை அறைந்து, மதிப்பு அல்லது பிரயோசனம் சம்பாதிக்கவே திரிவார்கள்.

208

அல்லா என்றும், சிவ சிவா என்றும், வைகுந்த வாசா என்றும் தொட்டதற்கெல்லாம் கதறுகிறார்களே. அந்தப் பரம் பொருள் எங்கிருக்கிறது என்று நினைத்தா சொல்லுகிறார்கள். இல்லை. காசி செல்லுகிறேனென்று கூறி நேர் தெற்கே போகிறவர்களைப்போல் இருக்கிறார்கள். கடவுள் என்றவுடன், "கடவுளே" என்று ஆகாயத்தை நோக்குகிறார்கள். கடவுள் என்றால் "கடத்திற்குள்" என்றல்லவோ அந்தச் சொல் சுட்டுகிறது. "ஆகாயத்துள்" என்று சொல்லவில்லையே. ஒரு நாளாவது இறைவனைச் சந்தித்துத் தரிசித்திருந்தால்தான், அவனை நீ நினைக்க முடியும். முக்கோடி காலம் முக்கோடி பிரசங்கம் செய்தாலும், முக்கோடி தவம் செய்தாலும், உன் எண்ணம் இறைவனின் திருச்சன்னிதானத்திற்கு, அவன் நேருக்கு நேர் தரிசனைக்குப் போகவே போகாது. ஒரு எஜமானை ஒரு தரமேனும் முன் சந்தித்து, அவன் சம்மதத்துடன் அவன் இட்ட வேலையைச் செய்தால்தான், அவன் கூலி தருவான். சந்திப்பே இல்லாத ஒரு எஜமான் கூலி தருவானா?

> "கண்டறி யாமுன்கை கொண்டிடு வானென்று
> விண்ட தெந்த வேதமோ?"

இந்த அற்பத்தனமான அறியாமை, அவலக்ஷணமான எண்ணம் உனக்கு ஸ்தாபகமாக நின்றதற்குக் கார

ணம், வண்டச் சோம்பேறிச் சாதியர் தம் வயிற்றுப் பிழைப்புக்காக உன்னைத் திண்டாட விட்டுவிட்டார்கள். அதாவது, அந்தப் பரம்பரைச் சோம்பேறிகள், உன்னை, ஒன்றும் தெரியாதவனாக அறிவில்லாதவனாக ஆக்கிவிட்டார்கள்.

209

ஒரு எவ்விலே ஏழுலகம் பாய உனக்குச் சக்தியிருக்கா? இல்லை. எமனைக்கண்டு பயப்படுபவன் தானே நீ? உன்னை மாற்றிப் பிறப்பித்து ஈரேழு பதினாலுலகத்திற்கும் அதிபனாக்கும் செயலே இங்குள்ளது. இதில் செத்தாலும் சரி என்று ஒரு மனத் துணிவோடு விழுகின்றவனே தப்பிக்கிறான்.

இந்த எல்லைக்கு, "மெய்வழிச் சாலை" என்று நாமம் தந்துள்ளோம். தெய்வ பக்தியுடையவர்கள் பெரிய படிப்பாளிகள், வியாக்யான கர்த்தர்கள் இங்கு வந்து, "அப்பொழுது நாங்கள் போவது பொய்வழியா?" என்று கேட்கட்டுமென்றே போட்டுள்ளோம். ரோஷம் வந்து நம்மை அணுகி அப்படிக் கேட்கட்டும்; அந்த முகத்திலாவது அவர்களுக்கு நம் மெய்யை அறிவிப்போம் என்பது எம் ஆசை.

210

சாவைப்பற்றி, யார் விசாரித்துக்கொண்டும் பேசிக்கொண்டுமிருக்கிறார்களோ அவர்களையே நாம் ஞாபகம் வைத்திருக்கிறோம். மற்றவர்களை மறந்து போய்விடுவோம். சாவைச் சந்திக்கிற அந்த நேரத்தில் மட்டும் பயம், ஆத்திரமாயிருக்கிறதேயன்றி, மற்ற நேரத்தில் உண்டா? உனக்கு உன் சாவைப்பற்றிய

னினைவு ஒரு புகையான னினைவாயிருக்கிறதே யன்றி, உன் உள்ளத்தில் னறுக்கென்று தைத்து உருக்கம் உண்டாக்குவதாக இல்லை. சுகபோகமாக இருக்கும் போது செத்துவிடுவோமே என்ற எண்ணம் வருவ துண்டா? இல்லை. ஆனல் எம்மைச் சார்ந்துள்ள 67 சாதிகளடங்கிய பல்லாயிரக் கணக்கான மக்கள் எல் லோரும் இப் பேச்சைப் பேசியவுடன் கலகலவென்று கண்ணீர் உகுப்பார்கள். காரணம், அந்த எமனுடைய வாதனையும் அதிலிருந்து தப்பிக்க இங்கு னிகழும் பிரம் மாதிக்கச் செயலும், அவர்கள் கண்முன்னே வந்து னிற் கிறது.

211

னம் எண்ண உலகம் இருளால் சூழப்பெற் றிருந் நது. அது விடிந்நதே யில்லை. தன்னுலகமாகிய இதய லோகம் விடிந்நதில்லை. அந்த உல்கத்திற்கு எதிர் உலக மாகிய இந்த மண் உலகமும் விடிந்நதில்லை. யாரும் எட்டமுடியாத ஆகாயத்தில் இருக்கின்ற சுவர்ணலோக மும் விடிந்நதில்லை. ஆனல், சாலை வளனடாகிய இந்தப் பீடபூமியினிடத்து னம் எண்ணம், இதயம், விண், பொன், சூரியன் பிரகாசிக்கின்ற இந்த உலகம் முதலா கிய யாவும் சேர விடிந்நது. ஐந்து உலகமும் சேர விடிந்நபோது சாலையென்றும், பீடபூமி என்றும், பொன்னரங்கமென்றும் சொல்லப்பெற்ற அந்த அருந் நவமுதலும் விடிந்நது. அவ்வாறு விடிந்ந னளை, முப்பது னழிகை கொண்ட னள் என்று னினையாதே. ஆனல் அதன் வினம் கற்பித்தவருக்கும், கற்பிக்கப்பெற்ற

தெய்வக் கை முதலுக்கும்தான் தெரியும். விசாலம் தங்கிய அந்த இரவு, பிரளய பிரளயமாக மாறி விடிந்த இரவு. எவ்வளவோ நாளைக் குறுக்கி ஒரு இரவாக உனக்குத் தரப்பெற்றிருக்கிறது. 70,000 இறக்கைகள் கொண்டு 70,000 நாட்கள் பறந்தாலும் எட்டமுடியாத நீண்ட பேரின்ப லாபத்தைப் புகட்டிப் பிறவிச் சேற்றைத் தடித்தெறிகின்ற ஒரு கோடாயுதத்தோடு பிறந்த ஒரு இரவாகும் அது.

ஒரு மலையானதிருக்கிறது – திரிகோணமலை. அது எந்தப் பெரியோர்களாலும் பார்க்க முடியாதது. அந்தப் பாதாளத்தின் விசாலத்தை அதன் அழகை ஒருவரும் முழுவதும் கண்டதில்லை. அதைக்கண்டு வந்துள்ள ஒருவர் உன்மேல் இரக்கமுற்று, அந்த இரவை உனக்காகப் படைக்கின்றார்கள்.

உன் பாவமானது வீணன் என்ற பட்டத்தை உன் நெற்றியில் எழுதிப்போட இருக்கிறது. நீ இருக்கும் சிவகோலமாகிய இந்தக் கோலத்தில், ஜீவன் முக்தர்களின் திருவிலாசத்தில், நீ தண்டிக்கப் படுவதில்லை. வேறு தேகத்தில் மாற்றப்பட்டே நீ தண்டிக்கப்படுகிறாய். அப்படியான ஒரு கிடங்கில்போய் மாட்டிக் கொள்ளாதபடிக்குத் தடுத்து ஆண்ட இரவே அதுவாகும்.

ஆயிர வருஷங்களைச் சுருக்கி அந்த ஒரே உபதேச இரவிற்குள் புகுத்தித் திணித்துவிடுவோம். அன்று பஜராகும். அது, நீ சலாமத்தை அடைந்து விடியும் இரவாக இருக்கும். அந்த இரவு எம் கையகத்தி லிருக்கிறது. உன்னுடைய ஜீவிய காலமெல்லாம் நீ கேட்டுக் கொண் டிருந்தாலும் நும் அதன் பெருமித வளத்தைப்

பற்றிச் சொல்லிக்கொண்டே யிருப்போம். அப்பேர்க் கொத்த மெய்க்கல்வியில் பூர்விகன் னுழைந்து பேசும் போது, அதை அவர்கள் னீட்டிக்கொண்டே யிருப்பார் கள். இதை விளக்கித் தருபவர்கள், இந்த அதிகாரணச் செயல் உடையவர்கள்தான் குத்தூபுக்கள், காமீல்கள், சான்ருேர்கள் என்று சொல்லப் பெறுவார்கள். அவர் கள் ஒரு பறைச் சாதியில் தோன்றியிருப்பினும், அவர் களைப் பறைச்சாதி என்று எண்ணுதே. அவர்களைச் சாதி குறித்து எண்ணுதே.

212

இந்த உலகத்தில் சக்கிலியன் உடல், பள்ளன் உடல், துலுக்கன் உடல் என்று சொல்வதல்லாமல் உயிரைவைத்துச் சொல்வதுண்டா? வேதம் உயிரை னம்பி வந்நதா? அல்லது உடலை னம்பி வந்நதா? உயிரை னம்பித்தான் வந்நது. இறைவன் என்ன சாதி? ஜீவன் என்ன சாதி? ஜீவதேகத்தில் னீ னுழைந்நா யாலுல் அந்த அருகக் கடவுளை னீ பார்ப்பாய். பிறகு இந்நச் சாதி வேற்றுமை மறைந்நு சமத்துவம் தானே துலங்கும். அவனைச் சந்திக்காது செய்யும் பூசை விர தங்கள் முதலியன இருகரைகளும் கடந்நோடும் பிரவாக மான ஒரு னதியில் ஒரு சல்லிப் புளியைக் கரைத் ததுபோ லாகும்.

213

சிவ குருமார்களை ஐந்நரை அடி உயர மனிதர்க ளாக உலகம் னினைத்ததால்தான், அவர்களைப் புறக் கணித்தார்கள். அண்டாண்டங்களும் கடந்நு விளங் கும் அகிலாண்டகோடி பிரம்மாண்ட கயிலேனுடு, மனித குலத்தை உய்விப்பதற்கென்று ஐந்நரை அடி உயரத்

தில் ஓர் கடமெடுத்து வந்திருக்கிறது என்பதை உணர் வதில்லை.

214

நீங்கள் ஐந்தாவது அறிவுதாண்டி ஆறுவது அறிவுக்கு வராமல், இடையில் இருக்கிறீர்கள் என்று ணும் நிரூபித்துக் காட்டுவோம். எம் உலகத்திற்கு நீங் கள் வந்தால் எல்லா முத்தர்களையும் எல்லாச் சித்தர் களையும் எம் செயலுக்குச் சாக்ஷி சொல்ல வைப்போம். அப்போர்க்கொத்த திருச்செயலே மறு பிறப்பில் ஆக்கும் செயல்.

215

சிவபுரச் செல்வர்களே - தினந்தினம் அச் சிவபத நாட்டிற்குப் போக்குவரத்துள்ள செம்மல்களாகிய பல ஆயிரக்கணக்கான புதல்வர்களே - ணும் பெற்றுள்ளவர் களாக இருக்கிறோம். சிவ செம்மல் அவர்களின் எண் ணமும் அவர்களது புதல்வர்களின் எண்ணமும் கூரிய வாளாயுதத்தின் முனைபோல் இருக்கும். ஆனல் மற்றை யோர்களது எண்ணம் கனிந்த பழம்போல் இருக்கும்.

216

கூச்சத்தை உதறிவிட்டு எம்மிடம் மடமடவென்று பேசிப் பழகு. வாயில் வந்ததெல்லாம் விட்டு ஓட்டு. முதலில் கொஞ்சம் ஒரு மாதிரி தடுமாற்றமாயிருந்தா லும், வரவர நீ பேசுவதெல்லாம், கேட்பவர்கள் எல் லோரும் ஆச்சரியப்படக்கூடிய மெய்வார்த்தைகளாக வரும். ஏனெனில் உன் அறிவுப் பிடரியில் நின்று உதவும் உதவி இங்கிருக்கிறது.

217

மயிர்ப்பாலம் நெருப்பாறு என்புது ஒரு நுண் ணிய பயங்கர அருந்நலம். அதைக் கடந்து செல்வது வைராக்கிய சித்தமுடையவர்கட்கே முடியும். கள்ளத் தனம் நிறைந்த உள்ளத்தை யுடையவர்களால் அதைக் கடந்து செல்ல முடியாது. இந்த அழி உலகப்பற்று அதிகமாய் இருப்பின் கீழேயே இழுத்துவிடும். அந் நத் தலத்தில் எல்லோரும் "தம்மய்யா" போட்டுத் தான் தீரவேண்டும். இங்கு உன்னை ஆண்டு கொண்ட குருபரரிடம் "தம்மய்யா" போட்டு அடங்கி நடந்திருந் நால், அந்த மயிர்ப்பாலத்தைக் கடந்து செல் வது மிக எளிமையா யிருக்கும். அந்த நேரத்தில் ஆத்திரப்படுவதால் அந்த அருஞ்செயல் கிட்டுமா? எடுகுழந்தையைப்போல் இருந்நாயானல், தெய்வத் தாயாகிய உன் ஆசான் அந்த ஆபத்து எல்லையில் உன்னைக் காப்பாற்றுவார்கள். நாமே தாண்டி விடு வோம் என்று நினைத்தால், நிச்சயமாக இருளில்தான் பாயவரும். தாயோடு இருக்கும்வரை குழந்தைக்கு ஒன்றுமில்லை. தாயைவிட்டு விலகியுள்ள குழந்தை கீழே விழுந்து காயப்படுத்திக் கொள்ளுவதுபோல் ஆகி விடும்.

218

இந்த உலக முழுதினுக்கும் பெரிய துகடமான காலம் அடுத்து வர நிற்கிறது. இனி மாதத்திற்கு மாதம் அழிவே கட்டி ஏறும். காட்டில் தனியாகக் குடிசைபோட்டு வாழ்கிறவர்களுக்குக்கூட அழிவு காலம் நெருங்கி வந்து விட்டது என்பது திட்டமாகத் தெரியும்.

இந்தப் பூமியானது இத்தனை நெடுங்காலங்களுக்கும் எத்தனையோ விளைவுகளை விளைவித்துக் கொடுத்து வந்தது. ரத்தினாதிகள் முதலானவைகளையும் தந்தது. ஆனால் அந்த விளைவு முடியும் காலம் சமீபித்து விட்டது.

ஆடியிலிருந்து பெய்யப்போகும் மழை பத்து வருட வெள்ளாமைக்காகும். இந்தச் சொல் இதோ உன் காதில் விழுந்து விட்டதல்லவா? இனிச் செயலைத்தான் பார்ப்பாய். மழை மட்டும்தான் அப்படி என்று நினைக்கிறாயா? இல்லை. காற்று அம்மியைத் தூக்கிக்கொண்டு பறக்கும். இவ்வாறாக எல்லாக் கோள்களும் மூர்க்கங் கொண்டு எழுந்துவிடும்.

முன்பெல்லாம் விட இப்பொழுதுதான் கட்டிடம் கட்டிடம் என்று எங்கும் கட்டிடமே அதிகமாகக் கட்டுகிறார்கள். வரநிற்கிற அழிவு எவர் ஒருவருடைய அறிவிலும் படவில்லை. அம் மாதிரியான பேரழிவு எப்படி நடக்கும் என்ற நினைவுதான் எல்லோருள்ளத்திலும் இருக்கிறது.

இந்த உலகத்தின் வேடம் மாற்றப்படப் போகிறது. இதை இவ்வளவு ஆத்திரத்துடன் முற்கூட்டியே உங்களுக்கு அறிவிப்பது எதற்கு? அந்த ஆபத்திலிருந்து நீங்கள் எல்லோரும் தப்பித்துக்கொள்வதற்காகத்தான்.

அந்த நேரத்தில் இந்தச் சாலையை எப்படி வைத்திருப்போம் தெரியுமா? சுற்றிலும் அக்கினிப்புடம் போட்டமாதிரி இருக்கும். இங்கே உள்ளே ஒரு காகம் கூட நுழையமுடியாது. முன்பெல்லாம் ஒரு தலைமுறை காலத்தில் புயல், பூகம்பம் என்று கேட்பது அரிது.

ஆனல் இப்பொழுதோ ஞள் தவருமல், "இங்கு புயல் அங்கு பூகம்பம்" என்று ஓயாமல் காதில் வந்து விழுந்த வண்ணமிருக்கிறது. இது னேரம் உங்கள் கவனம் அழிந்து போகிற இந்த உலகப் பொருள்களின்மேல் இருந்நால், அவை ஞசமாகும்போது உங்கள் கதியும் அதேதான்.

காலமெல்லாம் சம்பாதித்து வைத்தது, எமன் ஆவி அடித்ததும் னிற்குமா? னிற்காது. எவர் உதவியும் வந்து எட்டமுடியாத துணையற்ற னேரமாச்சே அது. அதற்கு அடுத்து னிற்பது ஐயோதான். இதுவே இப் படியானல் சந்திர சூரியாள் தாரகைகள் பஞ்சபூதங்கள் முதலிய அனைத்திற்கும் ஏகமான சாவு னேரம் வரப் போகிறதே; அப்போது என்ன செய்வார்கள்? பிரளய அமளி னேரத்தில் மக்களுக்கு வண்ணுத்திப் பூச்சியின் அறிவுதான் இருக்கும். தங்கள் பிள்ளைகளேயே, தங் கள் பிள்ளைகள் தான என்று முறைத்துப் பார்க்கிற னேரம் அது. கதிகலங்கிப்போய் ஒருவரை ஒருவர் பிரமித்துப் பார்க்கும் னேரம் அது. அந்தக் கோர அமளியினின்றும் தப்பிக்க எத்தனையோ உளவு சொல் லியும் எவர் மண்டையிலும் படவில்லை. இனிமேல் அவ ரவர் பாடு.

219

எம் மக்களாகிய னீங்கள் இம் மனிதவுடல் எடுத் துப் பெறவேண்டியதை யெல்லாம் பெற்றுக்கொண்டீர் கள். னீங்கள் செய்யவேண்டியது ஒன்று பாக்கி இருக் கிறது. எம்முடைய இச்சையாகிய, இந்த உலகத்தை உய்விக்கும் பெருங்காரியத்திற்குத் துணைக்கருவிகளாக

னீங்கள் இருக்கவேண்டியதே அது. தேவாதிதேவனு டைய திருத்தூதுவர்களாக னும் உங்களை ஆக்கி வைத் திருக்கின்றோம். னீங்கள் இனி உண்ணும் ஆகாரம் உங்களுக்காக அல்ல. இந்த உலகத்தை உய்விப் பான் வேண்டியே னீங்கள் உண்ணுகிறீர்கள். னீங் கள் அருந்தும் ஜலமும் அதற்கே. உங்கள் காரி யங்கள் எல்லாம் அப் பெருங்காரியத்திற்காகவே. இதை னீங்கள் சத்தியமாக உணருங்கள். இது உங்கள் உள்ளத்தில் உறைவதற்காக, எண்ணத்தில் தோய்வதற்காக, இதே சிந்தனையாகவே னீங்கள் இருக் கவேண்டும் என்பது எம் ஆக்ஞை. உலகம் பாவத்தில் மூழ்கி அதோகதியாகப் போகிறதே என்று அவர்களை உய்விக்கவே, னும் இடுப்புக்கட்டி இறங்கி இருக் கின்றோம். பிறவிக் கடலில் சிக்கித் தத்தளிக்கும் உல கத்தினரைப் பாவ விமோசனம் செய்து, அவர்களைத் திருக்கயிலாயத்தின் ஆட்சி அடி னிழலில் வைக்கவே உங்களைச் சேர்த்து இருக்கின்றோம்.

எல்லோரையும் இந்த மெய்ஞ்ஞான ராஜபாட்டை யில் செலுத்தி வைக்க வேண்டும் என்பது எமது எண் ணம். உனக்கு வழிபட்டு னிற்கின்ற உன் மனைவிக்குச் சொர்க்கம் கிட்டும் என்றால், எம் முன்னர் வந்து எம் மைத் தரிசித்தவர்களுக்கு லாபம் குறைவா? னும் பெற் றிருக்கும் தேவ சன்னதங்கள் இனி யாராலும் பெற முடியாது. சந்திர சூரியர்கள் உள்ள வரை, திருமூர்த் தியர்களாலும்கூடப் பெற முடியாது. மனைவி மக்களை விட்டுக் கோவணாண்டிகளாகி எம்மைப்போல் அலைந்து னீங்கள் பெறவேண்டும் என்பது எம்முடைய னோக்கம் அல்ல. எம்மைத் தரிசனம் செய்தாலும் முத்தி தரவே,

னும் கங்கணம் பூண்டு வந்துள்ளோம். பெண்டு பிள்ளைகளோடு நீங்கள் இருந்து, இந்த மெய்யைப் பெற வேண்டும் என்பதே எம் இச்சை. ஏனெனில், இந்தப் பூமிக்கு வயசு முடிவாகப் போகிற காலம் நெருங்கி விட்டது.

சர்வ உலகங்களையும் மெய்வழியில் பிரட்டி ஆக்குவது எம் நோக்கம் என்றால், உன் மனைவி மக்களை விரட்டிவிடுவோமா? ஒருவன் பட்டினியாக இருந்து மிகச் சிரமத்தோடு பகல் முழுவதும் பூப் பறிக்கிறான், இன்னொருவன் மாலையில் வந்து சொகுசாக ஒரு பூ மட்டும் பறிக்கிறான். பூப் பறித்தவர்களுக்குச் சாப்பாடு என்றால், ஒரு பூப் பறித்தவனுக்கும், பகல் முழுவதும் கஷ்டப்பட்டுப் பூக் கொய்தவனுக்கும் சாப்பாடு ஒன்றே. எம் உள்ளமும்அவ்வாறே தான் இருக்கிறது. எம் முன்பாக ஒருவன், அவனது உயிர் போகும் தருவாயிலாயினும் எம் உள்ளம் இரங்க நின்றுவிட்டால் போதும். அவனை அந்தத் தெய்வ நாட்டில் குடியேற்றி வைக்கும் கங்கணம்கட்டி இருக்கிறோம். ஆனால் அந்தத் தருவாய் - பிராணன் பிரியும் தருவாய்தான் - முற் கூட்டித் தெரிந்து கொள்ள முடியவில்லையே. ஆகவே அந்த ஆபத்து நேரம் வருவதற்கு முன்னரே, இந்தத் தெய்வத் துணையைத் தேடிக்கொள்ளுங்கோ என்கிறோம்.

220

காலில் முள் தைக்கிறதே என்று செருப்பின் துணையைத் தேடுகிறார்கள். குளிர்கிறதே என்று சட்டையின் துணையைத் தேடுகிறார்கள். குடும்பம் நடத்த மனைவியைத் துணையாகத் தேடுகிறார்கள், வழிப்பயணத்

திற்கு, வழி தெரிந்த மக்களுடைய துணையைத் தேடுகிறார்கள். இப்படி யெல்லாம் ஒவ்வொன்றுக்கும் துணையைத் தேடிக்கொள்கிற இவர்கள், நெடுங்கால நித்திய வாழ்க்கைக் குரிய ஒரு துணையை, ஏன் தேடிக் கொள்ளக்கூடாது?

221

குதிரை, ஆடு, மாடு இவைகள் இறந்த பின்பு திவசம் கொடுப்பதுண்டா? மனிதனுக்கு மட்டுந்தானே வருஷாவருஷம் தவறாமல் திவசம் கொடுக்கிறார்கள் – சடங்குகள் செய்கிறார்கள். அப்போ இவர்கள் சாகவில்லை, வேறு ரூபத்தில் இருக்கிறார்கள் என்று தெரிகிறதல்லவா? செத்தவுடன் கற்பாந்த கோடிகால கோர அவஸ்தைக்கே புறப்படுகிறார்கள் என்பதன் அடையாளம்தான், பிண நாற்றம் கிளம்புகிறது. இந்த உலகத்தில் மனிதனுடைய வாழ்க்கை நாலு நாளைக்குத் தானே. அதை ஆடுமாடு மாதிரி திரிந்து பாழாக்கி விட்டு நரக அவஸ்தைக்குப் போகிறார்களே. அப்படிப் போகக் கூடாது என்பதற்கே எம்முடைய இந்த நெடிய பாடு.

222

மாடு காலமெல்லாம் வாயினாலேயே தின்னுகிறது. மனிதன் அப்படியில்லை. இவன் கையினால் எடுத்துத் தின்னுகிறான். இவனது கைகளைக் கட்டிப்போட்டு வாயினாலேயே தின்னு என்று சொன்னால் எப்படியிருக்கும்? அதற்கு இவன் சம்மதிப்பானா? மாடுகளுக்கு முன்னங்கால்கள் என்றும் பறவைகளுக்கு இறக்கைகள் என்றும் இருக்கின்றன. ஆனால் இவனுக்குமட்டும் சிறப்

பாகக் கைகள் கொடுக்கப் பெற்றிருக்கின்றனவே இதை வைத்துப் பார்த்தால் இவன் எவ்வளவு மேலான ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வந்நவன் என்று தெரிகிறது?

முடிவில்லாத காலப் பேரின்ப வாழ்விற்குப் போக எமன் அணுகா முழு வயிர தேகமல்லவா வேண்டும். அதை இப்பவே கைபோடவில்லையென்றால் இவன் யார்?

223

மரணம் என்றால் பயப்படுகிறார்களே – அது கொடூரமானது, அவஸ்தையானது என்று தெரிந்து தானே அப்படிப் பயப்படுகிறார்கள். புலியை னேரில் பார்த்தும், அது விரட்டிக்கொண்டு வருவது தெரிந்தும், கண்களை இறுக மூடிக்கொண்டு, புலி வராது, னம்மை அடித்துக் கொல்லாது, என்று சொல்லும் மூகையர்களே இவர்கள். இவர்கள் னம்மைப் போலவே பேசுகிறார்கள், என்னென்னவோ எழுதுகிறார்கள், னம்மைப் போலவே எல்லா வகைகளிலும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏன் இந்நப் புத்தியில்லை? ஒருவேளை இவர்கள் கொடூரமான மரண அவஸ்தைக்கென்றே பிறந்திருப்பார்களோ?

இவர்களுடைய உலக அறிவை வைத்துப் பார்த்தால், இவர்கள் னமக்கும் மேலானவர்களாகத் தெரிகிறார்கள்; மட்டமாக இல்லை. அழிஞ்ஞுபோகிற காரியங்களை னுணுக்கம் னுணுக்கமாகச் செய்கிறார்கள். னம்மைவிட மட்டமான அறிவுடையவர்கள் என்று சொல்ல எமக்குத் தெரியவில்லை. முக்கால் நுட்டு

இரும்பை எடுத்து, இருநூறு ரூபா முன்னூறு ரூபா பெறும்படியாக ஆக்கி விடுகிறார்களே. அப்படிப்பட்ட அறிவுடையவர்கள் தானே! இவர்கள் ஏன் நம்மைப் போல் நித்திய சிரஞ்ஜீவி வாழ்க்கைக்கும் ஆகக்கூடாது?

இகத்தில் இவர்களுக்கும் மட்டமான அறிவுடையனும், கற்பாந்த கோடிகால வாழ்க்கைக்கு வேண்டிய துணையைத் தேடிக்கொண்டோமே; இவ்வளவு அறிவிருந்தும் இவர்கள் இதைத் தேடிக் கொள்ளவில்லையே என்று நினைக்கும்போதுதான் நமக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது.

தங்களுக்கு அவமானம், ஆபத்து, கொடூரமான அவஸ்தை வருதே – கட்டாயம் வருவதாச்சே – இவர்கள் இதை நினைக்கவில்லையே. இவர்கள் என்ன, தெரியாதவர்களா? எத்தனையோ பேர் தங்களுக்கு முன்னாலேயே செத்துப் பிணமாக நாறிப் போவதைப் பார்த்திருக்கிறார்களே!

பத்து நாளைக்கு வாழ, அதுகூட இல்லை – ஒரு நாளைக்கு வாழ, என்ன பாடுபடுகிறார்கள்? இதற்கே இப்படியானால் அந்தக் கற்பாந்த கோடிகால நித்திய வாழ்க்கைக்கு எப்பெரும் பாடு வேண்டும்? அந்த அழியாத சிறப்புக்கும் – அந்த மகா மகத்துவத்துக்கும் – அந்த மகா மகோன்னதத்துக்கும் – அந்த மகா வளமைக்கும் – எப்பேர்க் கொத்த துணையைத் தேடிக்கொள்ளவேண்டும். அதை அடுத்த ஜென்மத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்கின்றார்களே; அப்ப இந்த ஜென்மம் என்ன, கேலிக்காகப் படைக்கப்பெற்றதா? பெண்டாட்டி பிள்ளைகள் எல்லாம் கேலிக்காகவா இருக்குது? இல்லையே.

224

மனுவை னித்தியத்திற்காகவே படைத்தான். அதற்காகவே அறிவையும் தந்நான். அறிவுக்கு லட்சணம் னித்தியத்தைக் கைபோடுவதே. இதை எண்ணுமல் ஒருவன் இருந்நால் அவன் மனித ஜென்மத்தில் இல்லே. ஆகவே அதுகளே மரியாதையாக "அதுக இதுக" என்றுதான் னும் சொல்லவேண்டும்.

னித்திய தேகத்தில் னுழைந்நதற்கும் னுழையாததற்கும், னெடுங்காலத் துணையைத் தேடிக்கொண்டதற்கும் துணை தேடிகொள்ளாததற்கும் பிரத்தியட்ச அடையாளம் கடைசியில் சாவுடைய னேரத்தில் வந்நுவிடுதே. முடிவில்லாத கா்லத் துயரத்திற்கு யாராவது சம்மதிப்பார்களா?

[அன்றைய பகல் அடக்கமான தங்கள் மக்களில் ஒருவராகிய மெய்வழி முகம்மது காசீம் அனந்நரைக் குறித்து ஆண்டவர்கள்] இவனைப் போலத்தானே எல்லோரும். இவன் பிறந்நான் - வளர்ந்நான் - படித்தான் - கல்யாணம் ஆனபோது கல்யாணத்தில் மல்லிகைப் பூ வாசனை தாங்கமுடியாமல் மயக்கமுற்று விழுந்நான். (எதிரிலிருந்ந னுற்பது வயதுடைய ஒருவரைச் சுட்டிக் காட்டி) முன்னே இவனைப்போல யௌவனமாக இருந்நான் - இப்போது போய்விட்டான். இந்ந னேரத்தில் அவனுக்கு யார் துணை? அனந்நாதி தேவர்கள் :- ஆண்டவர்களைத் தவிர வேறு துணையில்லே. அந்நனித்தியத் துணையைத் தேடிக்கொண்டார். தொடர்ந்நு ஆண்டவர்கள் :—

என்றைக்கு இருந்நாலும் இந்நத் தூலம் னம்முடையதல்ல. னம்முடைய சொந்நத் தூலம் அந்ந னித்திய தூலமாகும். அதை அடைவதற்கு இப்பவே ஒரு துணை தேடிக்கொள்ளாதவன் கடைகெட்ட மூதேவியிலும் மூதேவியே. அருணகிரினாதர் அப்படிப்பட்டவனைப்பற்றி னல்லா சோபிதமாகக் கூறியிருக்கிறார்கள்-

அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை - அஞ்ஞுபூதம்
அடசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை அவிசலை ஆறான ஊனனை - அன்பிலாத
கவடனை விகடனை னானாவி காரனை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வனை - வெம்பிவீழும்
களியனை அறிவுரை பேணாத மானுட
கசனியை அசனியை மாபாத னாகிய
கதியிலியை ... ...

இதுதான் அவன் போய் அடைகின்ற அதோகதிப் புகழ்.

225

இந்ந ஜென்மத்தில் வாழுகின்ற வாழ்க்கையைப் போல அந்ந னித்திய வாழ்வு என்ன னாலுமடங்கு கொண்டதா? இல்லை. ஐந்து மடங்கு கொண்டதா? னூறுமடங்கு கொண்டதா? ஆயிரம் மடங்கு கொண்டதா? இல்லை. எண்ணிறந்ந கோடி முடிவில்லாத கால னித்திய வாழ்வு அல்லவா அது!

226

பார்த்தால் உலகத்தில் எவ்வளவோ கற்கள் இருக்கின்றன; அதிலே மாணிக்கக் கல்லும் இருக்கிறது. மாணிக்கமும் கல்தான்; மற்றதும் கல்தான். தனக்கு வருகின்ற ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேண்டிய பாடு பரப்புக்கு இங்கே ஆளாக வருகின்ற உருவங்களைப் பார்த்தால், மாணிக்கம் போல அபூர்வமாக இருக்கின்றது. மலைக் கல் ஒருவனுடைய காலில் படுகிறது. அதை அவன் தன் காலினாலே எட்டித் தள்ளி விட்டு, அதன்மீது வெறுப்போடு போகின்றான். ஆனால் மாணிக்கக் கல்லைப் பார்த்த ஒருவன், அதைக் கையிலே எடுத்துக் கண்ணிலே ஒத்திக் கொள்ளுகிறான். அதோடு அவன் அதை மிகவும் காபந்தோடு வைத்துக் கொள்ளுகிறான். இந்த மெய்யைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் பெருதவர்களுக்கும், னமக்கும் அதுகளுக்கும் உள்ள வித்தியாசம் மேலே சொன்ன மாணிக்கக் கல்லுக்கும் மலைக்கல்லுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இருக்கிறது! அதுமட்டுமா? அதற்கும் மேலாக இருக்கிறது.

உலக மக்கள் பெரும் பாடு பட்டு - அவஸ்தைப் பட்டு, அதிசயப் பொருளாகிய னித்தியத்தைத் தேடாமல், ஆபத்தையே சம்பாதிக்கிறார்கள். அவர்களை ஆபத்திலிருந்து மீட்க உதவி செய்ய வருகின்றவர்களையும் சிச்சுக் கழிக்கின்றார்கள். அதோடு மட்டுமா? அந்நச் செம்மல்களை அவமானம் வேறு செய்கின்றார்கள். இறைவன் செய்த னன்றியை மறந்துவிட்டு, அதை னினைத்துக்கூடப் பார்கக்ாமல் அவனுக்குக் கொக்காணி

காட்டுகிறார்கள். ஆடு கொடுத்தவனுக்கு மசிருகூடக் கொடுக்கவில்லை. ஆனால், எமனாகிய விரோதியின் கையில் எல்லாவற்றையும் கொடுக்கிறார்கள். ஞம் வந்நது, அழியாத நித்திய வாழ்விற்கு என்ற நினைப்பே இல்லாத, எட்டாத எல்லையில் அவர்கள் இருக்கிறார்கள். மேற்கொண்டு அதற்கு மாற்றமான நித்திய அவஸ்தையை – கொடிய நரகத்தைச் சொர்க்கமாக எண்ணிக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

227

சிவமதத்தில் ஒரே வொரு வார்த்தையில், முளை அடித்தாற்போல, "அன்பே சிவம்" என்று கூறியிருக்கிறது. வேறு வார்த்தை இல்லை. ஆனால் இவன் அன்பு எதில் வைத்திருக்கிறான்? தன்னுடையது என்று இருக்குமே, அழிந்து போகக்கூடிய தூசி, தும்பு; அதில் தான் இவனுக்கு அன்பு. அதை விட்டு அந்த ஊழி ஊழிகால சிரஞ்ஜீவி வாழ்க்கையாகிய நித்தியத்தை அளக்குகின்ற சிவசெம்மலாகிய சற்குரு பிரானிடத்தில் அல்லவா அன்பு வைக்கவேண்டும்? அதல்லவா இவனைச் சிவமாக்கும்.

228

சபையோரை நோக்கி ஆண்டவர்கள், பூமியின் தலைவு எது? என்று கேட்க, யாரும் பதில் சொல்லா திருந்ததைக் கண்டு, சிறிது நேரங் கழித்து, ஆண்டவர்கள்:— இந்த உடம்பின் தலைவு தெரிந்நால் பூமியின் தலைவும் தெரிந்நுவிடும் என்று அருளிச் செய்த பின், தொடர்ந்நு:—

முதன் முதலில் எங்கும் ஒரே இருட்கோளமாக இருந்தது. வேறொன்றும் இல்லை. பிறகு அதிலே ஒரு புழுக்கம் உண்டாயிற்று. அப் புழுக்கத்தினால் ஜலம் உண்டாயிற்று. ஜலம் விழுந்த வேகத்தால் காற்று விசிற்று. காற்று வீச வீச ஜலத்தில் நுரை உண்டாயிற்று. நுரை ஒதுங்க ஒதுங்கத் திரண்டு மண், கல், மலை இவைகள் உண்டாயின. ஆகவே பூமியின் தலைவு எது? இருட்கோளம் தான். அதே போல தேகம் ஜலத்தால் உண்டாயிற்று. முதலில் பனித்துளியில் ஒரு பாதி, தந்தையினிடத்திலிருந்து தாய்க் கருவறையில் வந்து தங்கிற்று. பிறகு அதுவே கருவாகி, வளர்ந்து உருவாயிற்று. இந்தத் தேகத்திற்குத் தலைவு, ஜலம்தான். இதைப்போலவே தான் அதை - இந்த பிரம்மாண்ட உலகத்தையும் படைத்தது. இந்தப் பூலோகம் எப்படிப் படைக்கப் பெற்றதோ அப்படித்தான் இந்த மனிதனையும் படைக்கப் பெற்றது.

(உபதேசத்திற்கு உத்திரவு கேட்டிருந்த ஒரு மாணுக்கனைப் பார்த்து ஆண்டவர்கள்: உலகம் எத்தனை என்று கேட்க, பதில் சொல்லாமல் தடுமாறவே,) ஆண்டவர்கள்: மூன்று உலகம். 1. பாதாள லோகம் - அதாவது இந்த பூமிக்குக் கீழே உள்ளது எல்லாம் பாதாள லோகம். 2. பூலோகம் - நம் இருக்கும் இந்தத் தட்டில் உள்ளவை எல்லாம் - விளைவைத் தருவது வளர்ச்சியைத் தருவது எல்லாம் இதில் அடங்கும். 3. ஆகாய லோகம் - பூலோகத்திற்கு மேல் உள்ளது. ஆக மூன்று உலகங்கள். சூரிய லோகம் சந்திர லோகம் என்று உண்டா? இல்லை. அவைகள் எல்லாம் மண்டலங்கள். உலகங்கள் அல்ல.

கடவுள் என்றால் என்ன? கடம் ஆகிய இந்நத் தூலத்துக்கு உள்ளே உள்ளது. இதையே ஔவைப் பிராட்டியார் அவர்கள்,

> "உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
> உடம்பினுள் உத்தமனைக் காண்"

என்று கூறியுள்ளார்கள். தனக்கு அப்பால் வெளியிலே போவதெல்லாம், பேயன் போகிற மாதிரி போகிற எண்ணமே. கடவுள் எங்கே இருக்கிறார் என்று நம்மில் யாராவது கேட்டுத் தெரிந்து கொண்டதுண்டா? இல்லை. பொய்வேடம் போட்ட போலிக் குருமார்கள் கையை நீட்டி மேலே பார்த்துக் கடவுளே, அல்லாவே, பராபரா, ஈஸ்வரா, வெகுதான்யா, பிரமாதீஸா என்று சொன்னார்கள். இதைக் கண்ட இவன், அஹ்ஹா! கடவுள் அங்குதான் இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டான். ஒவ்வொருவனும் இப்படியே நினைத்துக் கொண்டானே தவிர, யாரும் யாரையும் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. இப்படியே இந்த உலகம் பூராவும் அறியாமையில் மூடி முழுகிப் போச்சு. யாரும் நிலைத்து நின்று விவகாரம் பேசவில்லை. விவகாரமாகப் பேசினால் தான் இப்படி வருகிறதே— "கடத்துக்கு உள்ளே" என்று. வேதங்கள் எல்லாம் இதற்குச் சாட்சி சொல்கின்றன. எதையும் பேசி ஒரு விவகாரம் பண்ணினால் தான் ஒரு தெளிவுக்கு வரமுடியும்.

உபதேசம் என்றால் என்ன செயல்? என்று ஆண்டவர்கள் கேட்க, மாணவன்: பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் தொடர்பு கொள்ளச் செய்தல்.

ஆண்டவர்கள்: உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்வது நிரூபிக்கக்கூடிய

தாய் இருக்கவேண்டும். உபதேசம் என்பது என்ன செயல்?

மாணவன்: உப+தேசம். அடுத்த என்று இழுக்க.

ஆண்டவர்கள்: அதெல்லாம் இங்கே படித்துச் சொல்லாதிங்க. சொன்னுல் அது கிராசுக்கு னிற்கணும். சோறு சாப்பிடுகிருேம். எதற்கு? பசி என்றனுய்க்கு. கரும்பு தின்பது எதற்கு? ருசிக்காக. அப்படியானுல் அது வேறு, இது வேறு என்று ஆகிறது அல்லவா? அதுபோல உபதேசம் எதற்கு? ஏதாவது உபயோகத்துக்குத் தானே?

கண்ணுடி, பார்க்க உபயோகப்படுகிறது. வேட்டி, கட்டிக்கொள்ள உபயோகப்படுகிறது. வெற்றிலே, போட்டுக் கொள்ள உபயோகப்படுகிறது. அதுபோல உபதேசம் என்னத்துக்கு?

மாணவன்: ஜீவன் முத்தியடைய.

ஆண்டவர்கள்: ஜீவன் முத்திக்கா உபதேசம்? அதற்கு உபதேசம் தேவையில்லேயே. உபதேசம் பெற்றவன் னரகத்திலும் கிடக்கிருன். அப்போ னரகத்தில் தள்ளவா உபதேசம்?

மாணவன்: குருவுக்கும் சிஷ்யனுக்கும் உறவை னெருக்கமாக்க.

ஆண்டவர்கள்: அப்படி உறவு னெருக்கமாவதால் என்ன பிரயோசனம்? உபதேசம் சினேகிதத்திற்கு, கலகம் பண்ண என்று வேதத்தில் இருக்கிறதா? னீ சொல்லுவது செயலுக்கு ஒத்துக்கொள்ள வேண்டுமே.

மாணவன்: தன்னுள் உள்ள பிரம்மத்தைப் பார்ப்பதற்காக.

ஆண்டவர்கள்: அப்படியானல், அது வேதத்தில் இருக்கிறதா? இங்கு அனுபவத்திலும் அப்படியில்லை. வேதத்திலும் அப்படி இல்லையே. "ஏனையா கலப்பையைக் கொண்டு போகிறாய்" என்றால், வெள்ளாமை செய்து கருதறுக்க என்று சொன்னால், அதுவா பதில். உழுவதற்கு - பூமியைப் பண்படுத்துவதற்கு என்றல்லவா சொல்லவேண்டும். பிறகு, எருவிட - விதைக்க என்று அடுத்துள்ள காரியங்களைச் சொல்லவேண்டும். அப்புறம், அதற்கடுத்த பயனைச் சொல்லவேண்டும். அதை விட்டுவிட்டு எப்பவோ வருவதைச் சொன்னால்.... ஆளை எதற்குக் கூட்டிக்கொண்டு போகிறாய் என்றால், கூலி கொடுக்க என்கிறாய். களைபறிக்கணும் - அறுப்பு அறுக்கணும், அதற்காகக் கூட்டிப்போகிறேன் என்று சொல்லாமல் எதை எதையோ சொல்லுகிறாயே.

மாணவன்: ஜீவ வாழ்வில் ஆரம்பித்துவிட.

ஆண்டவர்கள்: உன் பதில் செயலுக்கும் வேதத்திற்கும் ஒத்துவரவேண்டும். உபதேசமா ஜீவ வாழ்க்கையை நடத்துது? உபதேசம் எதற்கு என்று கேட்டால் ஞானத்தையடைய - பரமபதம் அடைய - முத்தியடைய என்று எல்லோரும் இப்படியேதான் சொல்லுகின்றார்கள். எம்மிடத்தில் உபதேசம் பெறாதவர்கள், சபையில்கூடச் சேராதவர்கள், ஆனால் அன்புப் பிடியில் இருந்த பலர் முத்தி அடைந்திருக்கிறார்களே! அப்ப உபதேசம் என்னத்துக்கு? ஐயா, நீ கேட்கிறாய் என்றும் கொடுக்கிறோம். அதை நீ என்ன செய்வாய்?

பாலின் உபயோகம் தெரியாமல் அதைக் கால் கழுவ உபயோகித்தால், பால் வீணய்ப் போய்விடுமே. உபதேசம் எதற்கு என்பது சரியானபடி, வேத னடைமுறைப்படி உன் உள்ளத்தில் பதிந்திருக்கிறதா? காகிதம் வாங்குவது சமையல் செய்வதற்கென்று ஒருவன் உள்ளத்தில் பதிந்திருந்நால் எப்படியிருக்கும்? ஆசானை உணர்வதற்கும், வாக்மியாவதற்கும், வேதம் விளங்குவதற்கும்தான் உபதேசம். முத்திக்கு என்றனிணைப்பே உங்கள்பால் படிந்து கிடக்கிறதே. கடைசியில் மேற்படியான் – யார்? எமன்தான்!— வந்து னின்றுகொண்டு, "இந்நா பார்த்தாயா, உபதேசத்தினல் வருகிற முத்தியை" என்று அடையாளத்தோடு அறிவிக்கிருன். அந்த னேரத்தில், "ஒரு ஞள், ஒரு ழைிகை அவிழ்த்துவிட்டால் போதும். எனது பாழான எண்ணத்தைத் தீய்த்துவிட்டு, ஒரே அன்போடு ஆசானுகிய தெய்வத்தைய் பற்றிக்கொள்வேன்" என்று னிணைத்துக் கதறி ஆவதென்ன? "கள்ளத்தனப் பற்று" என்று அன்றுதான் தெரியும். இவ்வாறு பின்னலே உனக்கு ஆபத்து இருக்கிறது என்று உன் தாய் தந்தை வந்து சொல்வார்களா? மரணபயம் எனும் சவுக்கு, ஒருவனுக்கு என்னுளும் சதா தன் னிணைவின் முன் னிற்கவேண்டும். அதுதான் உனக்கு முத்தி னல்கும்.

உபதேசப் பொருள் உன்னிடத்தில் ஏற்கனவே இருந்ததுதானே! அதை உனக்கு விளக்கியவர் மேலன்ருே அன்பு வருதல் வேண்டும்? விளக்கியவர் மேல் அன்பு வைப்பவனே, சிவனை யோகியாக வல்

லவன். பாவிக்குத்தான் ஊனமாகிய பொருளின் மேல் அன்புவரும்.

முத்திக்கு மூலம் ஆசானின் இரக்கம். உன் னடக்கையால்தான் ஆசானின் இரக்கம் வரும். பள்ளமிருந்நால் தானே அங்குத் தண்ணீர் வரும். ஆனல் மண் வெட்டியை வைத்துக் கொண்டு விவகாரம் பேசினல் வருமா? ஆசானின் இரக்கம் கனங்கொண்டதல்லவா? பள்ளம் சிறிது கீறிவிட்டாலும் உடனே ஆசானின் இரக்கம் அங்கு வந்து பாயும். வேதம் வெறும் கடிதமாக இருளில் கிடந்நது. அதற்குத் தீபமாகவிளங்கியது னம் ஆசான் சொல்லல்லவா என்ற அன்பு வரவேணும்.

229

மறு பிறப்பு அடைந்நவர்களுக்குத் தேவர்கள் என்றும், அமரர்கள் என்றும், வானேர்கள் என்றும் பெயர். பறவை இனங்களுக்கும் நாலுகால் விலங்கினங்களுக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? ஒன்றை மற்றென்று உகக்குமா? உகக்காது. அப்படியிருக்க மனுவுக்கும் தேவனுக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கும்!

ஊர்வன, மிருகம், ஜலம்வாழ் ஜந்து, தருக்கினம் இவற்றிற்கிடையில் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தோற்றமல்லவா? மனுவுக்கும் அமரருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறியவே இந்ந எழுவகைத் தோற்றத்தை எடுத்து வைத்தது. எறும்பினங்களைப் பறவையினங்கள் தன்னினமாக எண்ண முடியுமா? முடியாது. பறவையினத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் அதில் கொசு முதல் யானையைத் தூக்கிச் செல்லும்

அண்டரண்ட பட்சிவரை எத்தனையோ வகைகள் இருக்கின்றன. ஆனல் அவைகள் எல்லாம் தோற்றத்தில் வைத்துப் பறவையினம். இதேபோல் எறும்பிலும் பல வகைகள் உள்ளன. மனிதர்களில், பார்வைக்கு ஒரே மாதிரியான உருவங்கள் இருந்தபோதிலும், தேவர்-மனு என்ற வேறுவேறன தோற்றங்களாக எடுத்து வைக்கப்பெற்றுள்ளன. மனுவுக்கும் தேவனுக்கும் இடையில் ஒருதோற்றத்திற்கும் மற்றொரு தோற்றத்திற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறதென்று அறிவிக்கவே எழுவகைத் தோற்றத்தை எடுத்து வைத்தது.

230

கோவணத்தைக் கட்டிக் கொண்டு, ரிஷியென்றும் யோகி என்றும் கூறிக்கொண்டு, தன்னைப் பார்ப்பதை மகா கிராக்கியாக்கி, அதைத் தரிசனம் என்றும் வைத்து ஏராளமாகப் பொய்ப் பொருளைச் சம்பாதித்து விட்டார்களே. ஒரு தலைமுறைகாலம் ஏமாற்றிவிட்டுப் போய் விட்டார்களே! உனக்குக் கடைசியில் இன்ன மாதிரி இடறு வருதே, அதிலிருந்து இந்த மாதிரி தப்பிக்கலாம் என்ற பேச்சு அவர்களிடத்தில் உண்டா? அந்த மதியீனர்கள் அரிதிலும் அரிய பாரதூரமான மெய்ஞ்ஞானச் செயலை எவ்வளவு கீழ்த்தரமாகக் கேவலமாகக் கொண்டுவந்து விட்டார்கள். மாணிக்கத்திற்கும் ஆட்டாம் புழுக்கைக்கும் வித்தியாசம் இல்லை என்பது போல் எவ்வளவு மட்டமாக அதை ஆக்கி விட்டார்கள் பார். அவர்களுக்கும் குரு என்றுதானே பெயர்? நிசமாகத் தான் ஒரு பிள்ளைபெற்று வளர்ப்பதும், அன்னியமான ஒருவனை வேலைக்கு அமர்த்திக்கொள்வதும் இரண்டும்

ஒன்று? வேலைக்காரனிடம் எவ்வளவு வேலை வாங்கு னுமோ வாங்கிக்கொண்டு அனுப்பவேண்டியது தானே! சொந்தப் பிள்ளையாய் இருந்தால் அப்படிச் செய்யவருமா! வராது. அதுபோலப் போலிக் குரு, உன்னை ஒரு வேலைக்காரனைப்போல ஆக்கிக்கொள்ளுகி ருன்.

சபையோர்:- இந்த அளவுக்கு யார் தெரிந்திருக்கி ருர்கள்? பெரியோர்களைப் போய்ப் பார்ப்பதுவே தரி சனை, அதனுல் புண்ணியம் வரும் என்றுதான் எல் லோரும் நினைக்கிருர்கள் -

ஆண்டவர்கள்:— அப்ப இந்த மெய்ஞ்ஞானச் செயலை, எவ்வளவு கேலியாக எளிதானதாக ஆக்கி விட் டார்கள் பார். அவ்வளவு எளிதாக நினைப்பதால்தான் கடைசியில் எமன் கையில் எளிதாக மாட்டி ஞசமாகிருர் கள். காலமெல்லாம் நிஜமாப் பாடுபட்டபின் கடைசியில் தெரியும் அவன் போலியென்று. அப்ப அவன் இருக்க மாட்டானே. நீ யாரோ, நானோ, மீன் ஆரோ, கொக் காரோ என்று போய் விடுவான். இந்த உலகுக்கு இந்த ஜடப்பொருளாகிய சூரியனே ஒன்றுதானே! ஞான சூரியன் இரண்டா இருக்கும்? அவ்வளவு சுத்த மாக துப்புரவாக மாசு மறுவில்லாமல் வாழையடி வாழை யாக அல்லவா ஞானகுருவானவர்கள் வரவேண்டும்.

இன்னொரு வேஷதாரி இருக்கிருர். அவரிடத்தில் அவ்வளவும் இங்கிலீஷ் ஞானம். அவர் அங்கு கூடியி ருக்கிற சபையிலே ராத்திரியிலே திடீரென்று விளக்கை அணைத்துவிட்டு ஓ.........ஓ.........ம் என்று சொல்லுவா ராம். எவ்வளவு குயுக்தியாக இந்த லேசான ஒன்றை

எடுத்து வைத்துக் கொள்வது பார். இது, ஞானம் இல்லை யென்று அவருக்கே னன்ருகத் தெரியுமென்ருலும், இதில் ஒரு னன்மை வராதா என்றுதான் செய்கிருர். பிசாசு கழுதையின் குரலைக் கேட்டு, கடவுள் என்று னினைத்ததாம். 'இதோ பார் குட்டிச் சுவருக்குள்ளே இவ்வளவு பெரிய சப்தமுடைய கடவுள் இருக்கிருர். இந்த மூட ஜனங்கள் இதைக்கூடப் பார்க்காமல் போகிருர்களே' என்றதைப்போல இந்த உலகம் அந்த வேஷதாரிகள்பால் திரும்பிக்கொண்டது.

கழுதை காலெனக் கண்டுனின் ருடிய அலகை
தொழுது மீண்டுமக் கழுதையைத் துதிசெய அதுதான்
பழுதி லானமக் கியார்னிக ராமெனப் பகர்தல்
முழுதும் மூடரை மூடர்கொண் டாடிய முறையே.

இந்தப் பாட்டு என்ன பொருத்தம், அந்தப் போலி ஞானிகள் செயலுக்கு என்று பாருங்க.

ஞானம் னிசமாகப் பெறவேண்டும் என்று யாரும் அங்கு போவதில்லை. கொஞ்சனேரம் ஞான விளக்கம் கேட்கலாம்; சும்மா பொழுது போக்காகக் கொஞ்ச னேரம் இருந்து விட்டு வரலாம் என்றுதான் போகிருர்கள்.

பூபதிதாசன் என்று ஒருவர் தன்னுடைய சீடர்கள் கூட்டத்துடன் சாலைக்கு வந்நார். வண்டியை விட்டு இறங்கினதும் அவருடைய கைகளை இரண்டுபேர் தாங்கிக்கொள்ளவும், ஆலயத்தை னேக்கிக் கூட்டமாக வந்நார்கள். னும் பார்த்ததும் ஓகோ...! பெரியவாள் போல இருக்கிறது என்று ஓடிப்போய், சர்வாணி போட்டுக் கொண்டு வந்தோம். அப்புறம் பார்த்தா...ப்பூ...! இவ்வளவுதான! இவரை ஒரு பெரிசா னினைத்து இந்

நப் புழுக்கத்திலே சர்வாணியெல்லாம் போட்டுக்கிட்டு வந்நோமே என்று அவர் முன்னிலையிலேயே சொன்னேனும்.

திடீரென்று கீழே விழுந்து எழுந்து, இனிமேல் மெய்வழி ஆண்டவர்களைப் புகழ்வதுதான் என்னுடைய வேலை; இதைவிட வேறு வேலை இல்லை என்று அழுதார். ஆளைப்பார்த்தா, தடபுடல்; இங்கிலீஷ் வேறு படிச்சி இருக்காரும். கொழும்பிலே வேறே அவருக்கு ஆயிரத்து முன்னூறு சிஷ்யர்களாம். இந்த எல்லைக்கு அவர் வரவில்லை என்றால் அவர் குட்டு வெளியாகுமா? அவரைப் பெரிய ஞானி என்றுதானே அவருடைய சிஷ்யர்கள் எல்லோரும் எண்ணிக்கொண்டிருப்பார்கள். இங்கு வந்நதற்குப் பிறகு, கூடவந்த சிஷ்யர்கள் அவரைக் கைவிட்டு விட்டார்கள். பாவம்...!

இந்த உலகத்தில் உள்ள அத்தனை போலிச் சாமியார்களுக்கும் எங்கு போனாலும் அவர்கள் கையிலுள்ள சரக்கு செல்லுபடியாகிறது. இந்த ஒரு இடந்தானே – இந்த உலகத்திலேயே தங்கள் குட்டு வெளியாகிற இடம்; இங்கு மட்டும் போகாதபடிக்குக் கொஞ்சும் ஒதுங்கி விட்டால் போவுது என்ற தைரியம்தான் அவர்கள் வியாபாரம் னடக்குது.

இப்ப மதராஸ் இருக்கிறது. அங்கே னரகலில் சர்க்கரையைப் போட்டு அதற்குக் கொஞ்சும் கேசரி பவுடரைக் கலந்து "சல்லில் பகார்" என்று பெயர் சொல்லி, தாதுபுஷ்டிக்குச் சிறந்தது என்று விற்றால், "எனக்கு உனக்கு" என்று முண்டி அடிச்சு விழுந்து வாங்கி மூக்கைப் பிடித்துக்கொண்டாகிலும் தின்பார்கள். விற்பனை ஆகிவிடும். கிராமத்தில் உள்ளவனுகி

லும் கொஞ்சும் தொட்டுப் பார்ப்பான். னகரத்தில் உள்ளவர்கள் அதெல்லாம் பார்க்கமாட்டார்கள். இப்படி யான உலகத்தில் எது வேண்டுமானலும் செல்லுபடி யாகுது.

இந்த உலகிற்கு னிஜமான மெய்ஞானத்தினு டைய னீட்சி, உன்னதம், தூய்மை தெரியாது. ஆகவே தரிசனே என்று வைத்து விட்டால் எல்லாம் ஞானம்தான். யாராவது அண்ணுந்து பார்த்துக் கொண்டு தன்னிஷ்டப்படி ஏதேதோ உளறினல் ஆ....! பெரிய ஞானிதான் என்பார்கள். விபரீதமாக மனிதச் செயலுக்கு ஒவ்வாததாக இருந்நால், அதுவும் ஞானம் தான். ஆனல் அது இங்கு வந்நால் கொஞ்சுனேரத்தில் சாயம் வெளுத்து வேஷம் தெரிந்துவிடும். ஆகவே, னந்நி மந்நிரத்தை இதுகால் ஈந்து னரர்களேத் தேவர் களாக ஆக்கி, பலசாதிகளேயும் ஒன்று திரட்டிப் பிரத்தி யக்ஷத்தில் வைத்திருக்கும் இந்த எல்லே எதுவாக இருக்கவேண்டும் என்று னினேத்துப் பார்.

மனிதனே, இறைவன் படைத்தது னித்தியத்திற்கு. ஆனல் மனிதன் எமனிடம் மாட்டி அவமானப் பட்டுத் தொலேயப் பழகிக்கொண்டான். எமபடரை மிதித்து ஏறும் மெய்ச் செயலே ஒரு சினிமா மாதிரி மட்டமாக னினேத்துக் கொண்டான்.

சீதோஷ்ணம் சமமாக இருக்கின்ற இந்தப் பூமி யிலேயே, முக்கனிகளும் விளேகின்ற இந்தப் பூமியி லேயே அறிவு இப்படி கீழாகப் போய்விட்டதானல், பனியானது மூடிக்கொண்டு குளிராகவே இருக்கும் னடு, மேல் னடு என்று சொல்கிற னடு, னற்றத்தையே மணம் என்று சந்நோஷமாக அருந்துகிற னடு, அந்த னட்டிற் போய் அவர்களேப் போலவே படித்து அந்த

உடை னடை பழக்கம் எல்லாம் பழகவேண்டும் என்கி ருர்களே. அந்தப் படிப்புப் படித்தால் இவர்களுக்கு என்ன வரும்? எவரையும் அலட்சியம் பண்ணும் புத்தி தான் வருகிறது. மற்றவர்களை மதிக்காத புத்தி வருகி றது. அப்படியே ஒரு தெய்வ எல்லையில் வந்து பிறரை அலட்சியம் செய்தால், இங்கு உள்ளவர்கள் இவர்களை என்ன னினைப்பார்கள். இதுதானு இவர்கள் படிச்ச தற்கு அடையாளம்? ஞம் இவர்களிடம் எப்படிப் பழகினு லும் னம்மை அலட்சியப் படுத்துகிருர்களே என்று கோரமே அவர்கள்மேல் வரும். தன்மீது கோரம் உண் டாகும்படி னடப்பது அறிவா? இல்லை. னுணுக்கத்தில் னுணுக்கமாக னுழைவதல்லவா அறிவு.

மேல் ஞட்டாரால் இப்படி னம்மைப்போல் சம் மணம்போட்டு உட்கார முடியுமா? முடியாது. அப்ப அவனுக்கும் மெய்ஞ்ஞான அறிவுக்கும் எவ்வளவு தூரம் இருக்குது; எமனுடைய னேசம்அவனுக்கு எவ்வளவு னெருக்கமாக இருக்கிறது என்று பார்! எமனைச் சங் ஙாரம் பண்ணி மிதித்து ஏறுகிற உன்னத பூமி அவ னுக்கு எவ்வளவு மட்டமானதாக இருக்கும்? இங்குள்ள வனுடைய அறிவுக்கு, இரண்டு பூமிக்கு மிடையில் உள்ள வித்தியாசத்தைக் காட்டி இந்த மெய்ஞ்ஞானத்தில் ஏற்றி எமனுடைய அமலை மிதிக்கிற செயலில் பழக்கவே, அந் தப் பூமியைப் படைத்தது.

ஒருவன் ஒரு அரச குடும்பத்தில் பிறந்த மேங்கு லப் பெண்ணையும், காடு மேட்டில் வேலை செய்யும் ஒரு தாழ்குல கிராமத்துப் பெண்ணையும் கல்யாணம் முடித் துக் கொண்டான் - அவன் மேங்குலப் பெண்ணுக்குத்

தக்கபடியும், தாழ்குலத்துப் பெண்ணுக்குத் தக்கபடியும் வேறுவேருக அல்லவா நடந்துகொள்ள வேண்டும்? அதைவிட்டு மேல் குலத்தில் பிறந்தவளிடத்தில் நடக்க வேண்டியதை தாழ்குலத்தவளிடமும், தாழ்குலத்தவளிடம் நடக்க வேண்டியதை மேல் குலத்தவளிடமும், நடந்தால் சரியாகுமா? ஆகாது. அதே போல ஊனச் செயலை ஞானத்திற்கும், ஞானச்செயலை ஊனத்திற்கும் வைத்தால் என்னவாகும்? இங்குதான் வரும்.

232

ஒரு தாய், தான் பெற்ற பிள்ளை எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதை எதிரியிடம் காட்டிக் கொடுப்பாளா? கொடுக்கமாட்டாள். அதேபோல் எமது பிள்ளை என்று வந்தவன் எவ்வளவு கொடியவனுக இருந்தாலும், அவனை எமனிடம் பிடித்துக்கொடுக்க எம் மனம் வருமா? வராது. ஆனால், அவனுகப் பிடியிலிருந்து கையை முறித்துக்கொண்டு போனல், நாம் என்ன செய்வது?

233

இந்த உலகத்தில் எப்படிப்பட்டவனும் எமன் என்னும் ஒரு கடுவாய்க்குள் தானே நுழைய வேண்டும்? அவ்வாறு அவனிடம் மாட்டாமல், அதைவிட்டுத் தப்பித்துக்கொள்ளும் எண்ணம் உடையவனே அறிவுடையவன் ஆவான்.

234

உபதேசத்தை வாங்கிக்கொண்டதும், கடையிலே வாங்கின சாமான் மாதிரி விலைத்துக் கொண்டு போய்விடுகிருன். அதனல் என்ன பலன்? அப்படிப்

போனால் அதுவே அவன் தலைக்குச் சாபமாக வந்து விடுகிறது.

235

இப்போது நாம் பேசுகிறோமே; என்னை என்னைப்பார்த்தா பேசுகிறோம்? படித்துவிட்டு வந்தா பேசுகிறோம்? இல்லை. விஸ்வநாதத்தை எம் காது கேட்குது; அதைக் கேட்டு நாம் பேசுகிறோம். ஒரு வேலையை முயற்சியோடு காலகாலம் செய்தால் மேலும் மேலும் லாபம் வருவதுபோல, ஞானத்தில் நுழைந்து இடையேறாது நின்றால் மேலும் மேலும் விளைந்து விளைந்து இந்த ஏற்றம் ஏற்படுகிறது. இது சாதாரண மனித அறிவுக்கு எப்படிப்படும்? ஆசானடியில் நெடுநாள் படிந்து நாதம் விளைந்த பிறகு அந்த ஏற்றம் ஏற்படுகிறது. அவ்வாறு கைபலிதமான ஒரு செம்மலின் ஒட்டுதல், கொஞ்சம் கிடைத்தாலும் போதுமே. அது என்ன சிறிய அளவா? அதுவே எமனை விரட்டுது என்றால், பூரண வலிமை என்ன பவர் உடையதாக இருக்க வேண்டும்.

236

ஆதிமூல ஆவியே உருவெடுத்து வந்தாலும், அதனிடம் நீ எப்படிப் பற்று வைத்துத் தொடர் பிடியாக ஏறுகிறாயோ அதே அளவுதான் உனக்குப் பலன். ஆனால் இவனுக்குத் தன் மனைவி மக்களிடத்தில் அன்பு வைத்து நடக்கிற நடக்கையா அதனிடம் வரும்? வராது. அப்போ, தன் வீட்டுக் காரியத்தைவிட மட்டமாக ஆதிமூல ஆவியை நினைத்ததாக அல்லவா ஆகும்?

அதற்குப் பலன் என்ன வரும்? தண்டனைதான் வரும். மனிதன் அந்த விதிச் சட்டத்தில் முன்னது பின்னதாகத் தாறுமாறாக நடப்பான். ஆனால், அவதார புருஷர்களோ அதிலே முழுக் கூரோங்கி நிற்பார்கள்.

237

உபதேசம் வாங்கின உடனே அதையே பெரிதாக, போதுமானதாக நினைத்துக் கொண்டால் மெய்ஞ் ஞான அறிவு வளராது. வேதத்திற்கு உயிர்கொடுக்கிற இவர்கள், இது காலம் வரை எழுத்தாக இருந்த மந்திர ரூபகத்தைப் பிரத்தியட்சப் பிரகாசப் பொருளாகக் காட்டுகிற இவர்கள், எப்பேர்க்கொத்தவர்களாக இருப்பார்கள் என்று நுணுகி நுணுகி எண்ணவில்லை என்றால் மெய்யான பிரயோசனம் கிட்டாமலே போய்விடும்.

"நீங்கள் ஒரு மெய்ப்பொருள் வாங்கினீர்களே, அதை (என்ன) செய்தீர்கள்? எதற்காக அதை வாங்கினீர்கள்?" என்று இங்குள்ள உன் சகோதரர்களை ஏன் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூடாது?

238

இந்த உடலைவிட்டுப் பிரியும் அந்த ஒரு நாள், நீ சந்திக்கப் போகும் எமனுடைய கூரை முறியடிச்சிக் கற்பாந்தகோடிகால வாழ்வில் உன்னைக் குடியேற்றுவதற்கல்லவா இங்கு செய்யும் இவ்வளவு வேலையும். எமனது வல்லபத்தை முறியடிக்க ஒரு துணை இப்பவே தேடிக்கொள்ளாவிட்டால், கடைசியில் அவனிடம் சிக்கி அடிபட்டு மிதியுண்டு நித்திய நரக தேகம் எடுக்க வேண்டியதுதான். எமனை முறியடிக்கின்ற அந்த அதி

காரம். இந்தத் தெய்வ எல்லையில் இருப்பது தெரியும். உன் பாவத்திற்குப் போக்கிடம் இது என்று உனக்குத் தெரியும். அப்படித் தெரிந்தும், இதை அலட்சியப் படுத்தி விட்டு முன்னிருந்த நரகச் சாதியே பெரிது என்று எண்ணி, அவர்களிடம் பயந்து கொண்டு இருந்தால், எமனும் பயந்துகொண்டா இருப்பான்?

எமனுடைய படரைக் கடந்து முத்திதேகம் பெற, இங்கு அடிக்கடி வந்து உன் செவி கொடுத்து அதற்கான உபாயம் தெரிந்துகொள்ள வேண்டும். எத்தனை கோடி காலம் படித்தாலும் ஒரு தெய்வ விளக்கம் உனக்கு வருமா? அது வியாகப் படித்தால் வருமா? வராது.

இப்போ வர விற்பது என்ன னேரம் என்று உனக்குத் தெரியுமா? சொல்கிறேம் கேள்! இந்த சர்வ உலகமும் தவிடு பொடியாக ஆகப்போகிறது; தூள் தூளாகப் போகப் போகிறது. வீ அதோடு போராடி ஜெயிச்சிக் கிழிச்சிப் போடுவாயோ? எமனின் பூரண அமல் ஏறிவருமே, அப்போ என்ன செய்வாய்? மலை கடல் எல்லாமே தூள் தூளாகப் போகப் போகிறதே. அந்த அமனிக்கு முன் வீ எம்மாத்திரம்? ஒரு மயிர்கூட இல்லை, ஒரு தூசிதான். உன் அற்பப் பணத்தை, கடுதாசியைத்தானே ஒரு பெரிசாக வீ வினைத்துக்கொண்டு இருக்கிறாய்? அது தெருவிலே இறைந்து கிடக்கப் போகுதே. பட்டணங்களில் நாய் நரிக் கூட்டம் நிறைந்து இருக்கப் போகுதே! அது னேரம் ஒருவன் போய் அங்கே நுழைய முடியுமா? வீ அப்போது எந்த இடத்தில் போய்க் குடியிருப்பாய்? அப்பத்தான் வீ இங்கு ஓடிவருவாய். எதற்கு? தப்பித்துக்கொள்ள.

இங்கே அந்தக் கருவாயில் எமன் என்னும் வேங்கையை வாசலில் கட்டி வைத்திருப்போமே, என்ன செய்வாய்.

ஆள் ஆளுக்குப் பெரியதனம். நாம்தான் மேல் மனிசர். பிறர் சொற்படி நாம் என்ன கேட்கிறது, என்ற நினைப்பே எல்லோரிடமும் இருக்கிறது. இப்படியே அவலமாக எங்கும் நிறைந்து விட்டது. இந்தத் தீங்கே எல்லோருடைய தலைமேலும் நிற்கிறது. எமபட்டர் முன் சர்வ உலகமும் அடக்கமாச்சே—அப்படியிருக்க அந்த வேங்கைமுன் இவன் மேட்டிமை நிற்குமா?

உபதேசம் வாங்கினால் போதுமா? உனக்கு முத்தி கொடுப்பது யார்? கடைசியிலே எமன் வந்து நிற்கப் போகிறானே, அப்போது வந்து உனக்கு உதவுகிற சினேகிதர் யார்?

அந்த ஒரு நாள்—அந்த ஒரு கருவாயில், யாருடைய உதவியும் வந்து எட்டப்படாத அந்த எமன்பதி எல்லையில், ஜெயம் அடையவேதான் நாம் இதில் தலை வைத்தது. அங்கு அபஜெயம் அடைய அல்ல. எந்தக் காரியத்திலே எதற்காகத் தலை வைத்தோம், அதற்கு என்ன செய்தோம் என்று யாரும் எண்ணுவது இல்லை. அதைத்தான் சதா எண்ண வேண்டும்.

எம்மை யார் என்று நீ நினைக்கிறாய்? இந்தத் தூலம் உன்னுடையது போலத்தானே—துளிகூட வித்தியாசம் இல்லையே? அப்படியிருந்தும் அந்த எமனை எம் கையடக்கம் ஆக்கியிருக்கிறோம் அல்லவா? இந்த எல்லையின் பெருமை ஒரு தூசிகூட உங்கள் உள்ளத்தில் இல்லை. நீங்கள் ஒவ்வொருவரும் 'நாம் எங்கு இருக்கி

றோம்? எமன் கையில் சிக்கி இருக்கிறோமா? அல்லது அதை விட்டு விலகி, தேவன் கையில் சிக்கி இருக்கிறோமா?' என்று சதா எண்ணியவண்ணம் இருக்கவேண்டும்.

239

கண்ணுக்குத் தெரியாத எமனை வாயில் சொல்லவே பயப்பட்டால், அவனைச் சந்திக்கும்போது அவன் வல்லபம் என்னவாயிருக்கும்? இந்த உலகத்தில் பெலமான படைப்பு எது? யானை. அது ஆயிரம் ஆள் பெலங்கொண்டதல்லவா? ஆம். அவ்வாறு பெருமித பெலம் கொண்ட யானையும், சர்வ உலகமும், அரசன் முதல் ஆண்டிவரை சர்வ ஜீவர்களும், அந்த மூர்க்கத் தடியனாகிய எமனிடம் அடக்கமே. அந்த எமன் எமது கை அடக்கம்.

யாராயிருந்தாலும் எம் கையில் சிக்கிக்கொள்ளவில்லையென்றால், எமன் என்னும் வேங்கையிடம் பட்டுக்கொண்டு எக்கோடி காலத்திற்கும் விழிக்க வேண்டியதுதான். உபதேசத்தை, அதன் பலன் தெரியாமல் வாங்கி எத்தனையோ வீணாகப் போய்விட்டதே என்று தெரிந்துதான் இப்படி விளக்கமாக அறிவிக்காமல் உபதேசம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்தே இந்த எச்சரிக்கை செய்கிறோம்.

ஊசியை வாங்கிக் கொண்டுபோய் தொண்டையில் குத்திக் கொள்வதா? கயிறு வாங்குகிறாயே எதற்கு என்றால் கழுத்தில் கட்ட என்கிறான். மாட்டுக் கழுத்தில் கட்டவா அல்லது தன் கழுத்தில் கட்டவா என்று தெரியணுமே. அப்படித் தெரியவில்லை என்றால் ஆபத்தல்லவா வந்துவிடும். ஞானி என்று வேஷம்போட்டுத்

திரிகின்றவன், இப்படியெல்லாம் எச்சரிக்க மாட்டான். னீ கேட்டதும் உபதேசம் கொடுத்து விடுவான்.

ஒரு மனைவி, தன் புருஷனைச் சாகிறவரைப் பிரிய மாக வைத்துக் கொள்கிறாளே. புருஷனும் மனைவியிடம் பிரியமாக னடந்து கொள்ளுகிறானே. ஒரு முரட்டு மாட்டைச் சொரிந்து கொடுத்துத் தன்னிடம் பிரியமாக இருக்கும்படி வைத்துக் கொள்ளுகிறானே. இதெல்லாம் தெரிந்நவன்தானே னீ. ஆகவே எப்படியோ - அழூதோ - தொழூதோ உன் தேவபிரான் அவர்களின் பிரியத்தைத் தேடி வைத்துக்கொள். அந்ந ஒருவர் தானே எமனச்சம் கடத்தும் செயலைச் செய்கிறவர்கள். அவர்கள் பிரியம் - தயவு அல்லவா னமக்கு வேண்டும்? அதுவல்லவா ரட்சகத் தன்மையை அளப்பது?

உபதேசம் ஒரே னாளில் முடிந்நு போவதா? (தம் மக்களில் ஒருவரைச் சுட்டிக்காட்டி) இதோ பார்; இவர் யார் தெரியுமா? இவர் ஒரு சி. ஐ. டி. யாக இருந்நவர். எத்தனை ஆண்டுகளாக இங்கே இருக்கிறார்? முப்பத் தோர் ஆண்டுகள். இவருக்கு உபதேசம் முடிந்நதா? இன்னும் முடியவில்லை. காலமெல்லாம் னடந்நு கொண்டே இருக்கிறது. புதுமை புதுமையாகப் பூத்துக்கொண்டே இருக்கிறது. சதா அதிசய அதிசயமாக விளங்ங இருக் கிறது.

உன்னுடைய இறுதித்தருவாயில் எமனுடைய கையைத் தட்டிவிட்டு, எக்கோடி காலத்திற்கும் வாழ் கின்ற வாழ்க்கையை உடைய னித்திய தேகத்தை னீ கைபோடும் வரை அல்லவா உபதேசம் னடக்கிறது. அன்றுதான் உனக்கு விடிகிறது. உபதேசமும் முடி

கிறது. எமது பொறுப்பும் ஒய்கிறது. இதுதான் எம்முடைய தீர்ப்பு. இந்தப் பேருதவியை உன் தாய் தந்தை செய்வார்களா? அவர்கள் உனக்கு உண்ணத் தின்னத் தான் உதவுவார்கள். இந்த உலகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு பெரிய படிப்புப் படித்திருந்தாலும் அவர்களுக்கு விளைப்பு உபதேசம் முத்திக்கு என்றுதான் வரும். அன்றைக்குப் பிறந்த உபதேச இரவில் உன்னைக் கொண்டுபோய் நுழைத்ததால்தானே இன்றைக்கு இந்தப் பிரம்மாண்ட அறிவிப்புக்களெல்லாம் உனக்குத் தெரிகிறது?

எமபடரை முறியடிக்கிற வல்லபம் பெற்ற ஒருவர் இருக்கிறார். அவர்களைத் தேடு. அவர்கள் உன்மீது பிரியமாக இருக்க வைத்துக்கொள். அதுவே சொர்க்கம். அவர்கள் வெறுப்பு நரகம். இது ஒன்றே வேதம்.

240

ஆண்டவர்களின் சன்னிதி முன் வணங்கி நின்று வருந்திய ஓர் மைந்தனை நோக்கி, ஆண்டவர்கள் :—ஏன் வருந்த வேண்டும்? நம் வந்திருக்கும் இக்காலத்தில் ஞானம் அடைதல் மிக எளிது. முன் காலத்திலெல்லாம் அது கடினமாக இருந்தது. இப்போது திருப்பாற் கடலை அப்படியே காய்ச்சி வட்டாக்கிச் சிறுசிறு துண்டாக் எடுத்து உருட்டி உங்கள் வாயில் போடுகின்றோம். உங்கள் வேலை, வாயைத் திறந்து வாங்கி, அதை அப்படியே விழுங்க வேண்டியதுதான். முன்னே இகபோக செல்வம் எல்லாவற்றையும் விட்டுப்போய், இதைப் பெறவேண்டியதாய் இருந்தது. அப்போது வேறு வழியில்லை. இப்போது வந்துள்ள தேவ வசந்தம் வேறு.

241

ஞானம் அடையத் தடையாக இருப்பது உன் மாயை. அது உன் அறிவிலேயே கலந்து தடை செய்கிறது. அம் மாயையை வெல்வதற்கு ஒரே உபாயம், உன்னை ஆண்டுகொண்ட குருபிரானுவர்களின் திருவாக்கில் நீ நம்பிக்கை வைத்து நடப்பதுதான். அவர்கள் எல்லையில் நம் யூகம் பயன் தராது என்ற எண்ணம் உனக்குத் திட்டமாக வர வேணும்.

இந்த மெய்ப் பாதை வேறு. இதற்கு முன் நீங்கள் மற்றவர்களிடம் கேட்டும், படித்தும், மனதிலே எழுதியும் வைத்திருக்கிற பாடம் வேறு. படிப்பினுலே, யுக்தியினுலே, பெரியோர்கள் போல வேஷம்போட்டுத் திரிபவர்களிடம் கேட்டதினுலே, அதை வைத்து ஞானம் இப்படி இருக்கும் என்று முடிவுகட்டுவதினுலே, ஒன்றும் கைவரவு ஆகாது. ஏனெனில், உன் மனம் ஒரு பிசாசாக இருக்கிறது. அதுவே ஒரு மெய்க் குருபிரானை அடைந்த பின்பு சைதன்யமாகிறது; பொருட்காட்சி யாகிறது; நிலையாகிறது; பிரம்மமாகிறது. இவ்வாறு ஞானம் அடைவதாகிய இந்தச் செயலுக்குப் பெருந்தகைமை வேண்டும். உன் மனம் இப்போது இரும்புபோல் இருக்கிறது. அதில் பிடித்திருக்கிற துருதான் மாயை. ஞானமடைவதாகிய இச் செயல் தங்கம். இதை உன்னிடத்தில் முன்னமேயுள்ள இரும்புக்குச் சரியாய் இருக்கிறதா என்று உரைத்துப் பார்க்கிருய். பொருந்துமா? பொருந்நாது.

வேதத்தில் சத்தும் அசத்தும் கலந்து இருக்கிறது. அசத்தை நீக்கிச் சத்தைமாத்திரம் தருகின்ற ஜீவன்

முத்தர்களின் வாக்கே வேதாந்த மெனப்படும். நாம் படிக்கிறதெல்லாம் எதற்கு? ஒரு பயனைக் கருதியே. அந்தப் பயன் உலகத்தில் ஒரு உத்தியோகம் செய்வது தான். அதுபோல, நாம் இதுவரை செய்து வந்த வழி பாட்டிற்குப் பயன் என்ன என்று கேட்டால் விழிக்கி றோம். உலக காரியத்திற்கு மட்டும் பயன் இப்பவே தேடு கிறாயே, தெய்வ வழிபாட்டிற்கு மாத்திரம் பயன் செத்த பிறகா? கூலிக்காரனுடைய வியர்வை மாறு முன்னே, அவனுடைய கூலியைக் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவன் வேதத்தில் விதித்திருக்கிறான். அப்படி விதித்த இறைவன், தன்னை வழிபடுவதற்குப் பயன் செத்த பிறகா கொடுப்பான்? கடனாளியா அவன்? நம்மை விடக் கேவலமானவனா? இல்லை. சிற்றின் பத்தை நாம் இவ்வுலகில் இருக்கும்போதே அனுபவிக் கும்போது, பேரின்பம் மட்டும் பின்னரா?

242

நம்மை ஈசன் படைத்தான். வேதத்தையும் தந் தான். அந்த வேதத்தில் ஈசன், நாம் நடக்கவேண்டிய நேர் பாதை போட்டுக் காட்டி யிருக்க, அதை விட்டு விட்டு நாம் தள்ளுபட்டக் கடையர்களைப்போல் விருதாவா கச் சுற்றி வருகிறோம். வேத ஏட்டிலுள்ளதைப் படிப்ப தன் பயன் இறைவனைக் காண்பதுதான்; வயிறு வளர்ப் பதல்ல. மிருகங்கள் பசியோடு இருக்கவில்லை. அவை கள் படித்து வயிறு வளர்க்கவில்லை. ஈசன், அது அதற் குத் தக்கபடி உணவூட்டி வளர்க்கின்றான். நம்மிலுள்ள தெய்வீக மலையை, ஸ்வயம்பிரகாச நித்தியானந்த மணியை அறிவேத படிப்பதன் பயன். நாம் முதல் முதல்

படிக்கத் துவங்கும் போது, உபாத்தியாயர் மூன்று ஏடு களில் எழுத்துக்களை எழுதி, மூன்று வாரெடைகளில் அவ் வேடுகளைக் கோர்த்து, ஒரு முடி போடுகிறார். அதைப் பிரம்ம முடி என்றும் சொல்வது உண்டு. முதலில் உயிர் எழுத்து என்று சொல்லப் பெறுகின்ற 'அ' 'ஆ' முதலி யவைகளைச் சொல்லிக் கொடுக்காமல், "அறியோம் னற்ருள்கள், குருவாழ்க, குருவே துணை. ஹரி னமோத்து சிந்நம்" என்று சொல்லிக் கொடுப்பதனாலேயே, "நும் எதனையோ ஒன்றை அறிவதற்காகவேதான் படிக்கி றோம்; அழிவில்லாத முதலைக் கைப்பற்றி அதை னம் முடைய முதலாக ஆக்கிக்கொள்ளவேதான் படிக்கிறோம்" என்று தெரிகிறது. ஒருவன் பசிக்குக் கருப்பட்டி கொடுத்தால், அதைக் கொடுத்தவன் மீதே கல்லாக எறி வது போலவும், ஒரு தம்படிக்காக னூறு ரூபாய் னோட்டை மாற்றுவது போலவும் படிப்பை னும் உபயோகித்து வருகிறோம்.

243

மாத்திரை மீது சர்க்கரையைப் பூசி வைத்து அதை னோயாளிக்கு இனிமையாகக் கொடுப்பது போல, பிறவிப் பிணி னீக்கும் பரபோக வாழ்வாகிய மருந்தைத் தேடியடையவே, வெளியிலே கோயில், குளம், புராணம், ஆசார அனுஷ்டானம் முதலியவற்றைப் பெரியோர் கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அவை சர்க்கரையே. மருந்தின் மீது உள்ள சர்க்கரையை மட்டும் னக்கினல் னோய் போகுமா? மருந்தை உட்கொண்டால்தான் னோய் போகும். மருந்து வேறே இருக்கிறது. வாழைப் பழத் தைப்போலே மரத்தினல் செய்து காட்டினல், உண்மை

யான வாழைப்பழத்தை அறிந்து வாங்கித் தின்ப தற்கு முயற்சிப்பான் என்று காட்டப்பட்டதே யல்லா மல், மரப் பழத்தையே சுரண்டித் தின்ன வேண்டும் என்று அது செய்துகாட்டப் பெறவில்லை. பொய்ச் செல்வத்தைக் காப்பாற்ற மாடமாளிகைகள், பெட்டகங் கள் வேண்டும். அதேபோல் இந்த மெய்ஞ்ஞான முத லைக் காப்பாற்ற உன் முழுமனமாகிய பெட்டகம் வேண் டும். செல்வம் முதலியன உருவம். இது அருவம். நும் ஒரு வியாபாரம் செய்தால் அதில் லாபமும் வரும், னட் டமும் வரும். ஆனல் இந்த மெய் வியாபாரம் அதைப் போன்றதல்ல. இதில் லாபம் ஒன்றே பெற வேண்டும். னட்டப்பேச்சே வரக்கூடாது. மற்ற வியாபாரங்கள் பிறர் மதிக்கச் செய்வது. இது தன் ஜீவனே தன்னை மதிக்கும்படிச் செய்வது. ஜீவன் முத்தர் வாக்கின் வலிமை அளவிடக்கூடாதது. ஒருவன் பிறர் பழிக்கத் தக்கவனுயிருப்பினும், ஒரு ஜீவன் முத்தர் அவனைப் பார்த்து னல்லான் எனின் அவன் அப்படியே ஆவான்.

244

ஆண்டவன் சாதியற்றவன். சாதியுற்றவன் அவனை அடைய முடியாது. மனுக்குலம் முழுதும் ஒரே சாதிதான் என்ற ஆண்டவனுடைய னோக்கத்துக்கு ஒத்து னடந்நால்தான் அவனுடைய தயவைப் பெற லாம். ஆண்டவனுடைய அந்த னிரந்தர குணம் னமக்கு வரவேண்டும். ஈசனே எல்லா மதங்களையும் உண்டாக்கினன். ஒரு மதத்தின் வேர் செல்லரித்து அதன் மெய்ச்செய லற்றுப் போகும்போது, இன்னொரு மதத்தை அவனே உண்டாக்குகிருன்.

245

உபதேசத்திற்கு முன், நீங்கள் படித்திருந்த உங்கள் படிப்பை மெச்சிக்கொண் டிருந்நீர்கள்; அதுவே போதும் என்று திருப்தியோடும் இருந்நீர்கள்; உபதேசம் வாங்கியதும் அது எவ்வளவு மட்டமானதாகப் பிரயோஜனமற்றதாகப் போயிற்று. அதனால் ஓர் அகந்தை, மேட்டிமை என்னும் தீக்குணம், முரட்டுக் குணம் முதலியன அவரவர் தேகலக்ஷணத்திற்குத் தக்கவாறு வரும். முன்னே உபதேசம் பெற்றுள்ள பிள்ளைகளோடு கூடிப் பழகுவதால், அக்குணங்கள் விலகும். அப்படி விலகாதவனின் கதி அதோகதியே. ஆசான் உன்னைப் பாதுகாக்க வந்து திருத்தினால், அவர்களோடு இணங்கி நீ ஒத்துழைக்க வேண்டும். ஒரு குழந்தையின் நாவுக்கும் மனதுக்கும் ருசியாக உள்ள பொருள் வயிற்றுக்குப் பயன்படாது. நாவுக்கு வெறுப்பாய் உள்ளதே அதற்குப் பயன் தரக்கூடியதாய் இருக்கும். அது போலவே உங்கள் நினைவுக்கு ருசியாயுள்ளது ஜீவனுக்குப் பயன் தராததா யிருக்கும். வெறுப்பாக வுள்ளது பயன் தரக்கூடியதாக இருக்கும்.

246

பையப் பையத் தின்றால் பனையையும் தின்று விடலாம். இது உங்கள் பாட்டையர் அவர்களின் திருவாக்கு. அது போலவே, இந்த மெய்யையும் பையப் பைய இடையறாது பழகித் தேரவேண்டும். ஒரே அடியில் செய்து முடித்துவிடலாம் என்ற பேராசை எண்ணம் இதில் வரக்கூடாது. உபதேசத்திற்கு முன்னே, உங்கள் மனதை முன்னும், அறிவை அதற்குப் பின்னுமாக

வைத்திருந்தீர்கள். உபதேசத்திற்குப்பின் அறிவை முன்னும் அந்த அறிவின்வழி உங்கள் மனதையும் னடக்க விடுங்கள். இந்த முறையில் னடப்பதுதான் மெய்வழி.

247

தவம், னிஷ்டை, யோகம் இம் மூன்றும் ஒரு பொருட் சொற்களே. பூரண ஞான னிஷ்டை என்பது தூலம், சூக்குமம் என இருவகைப்படும். தூல ஞான னிஷ்டை என்பது குருவுக்கு ஒத்துச் செயல்பழகி வருவது. சூக்கும ஞானனிஷ்டை என்பது அகம்பாடுற்றேங்கும் சகச னிஷ்டை.

முக முகத்தில் தந்தையாகவும் அகமுகத்தில் தாயாகவும் ஆகிறவரே குரு. அந்தச் செயலில்லாத மற்றையோர்க்கு அப் பெயர் பொருந்நாது.

248

குழந்தைப் பருவத்தில் யதார்த்த அறிவு இருக்கிறது. பின்னர் மாயைக் கலப்பால் மறதி உண்டாகிறது. இந்த உலகப் படிப்பினுடைய பயன் கடைசியில்தான் கிட்டும் – ஆனல், ஞானக் கல்விக்குப் பயன் ஆரம்பத்திலேயே கிட்டுகிறது. ஒருவன் ஞானக்கல்வியைத் தொடங்கும்போதே, ஜீவன் முத்தன் என்னும் பெயருக்கு அவன் உரியவனுகின்ருன். அத்தகைய ஞான முதலை, ஒரு ஜீவன் முத்தர் அல்லாது வேறு எவர் கொடுப்பினும் னிஜப் பயனில்லை.

249

எம் மெய்வழிச் சபையில் எமது ஐயன் அவர்களின் உத்திரவுப்படியே பிள்ளைகள் சேர்க்கப் பெறுகிருர்கள்.

ஊமையன், குருடன், செவிடன் இவர்கட்கு ஞானம் கொடுக்கலாகாது என்பது தேவகட்டளை. நூல்களிலும் அப்படியே சொல்லப்பெற் றிருக்கின்றது.

250

நம் நினைவுக்குள்ளே இன்னொரு நினைவு இருக்கிறது. அந்த அகமிய உள் நினைவைத் தொட்டால், அப்போது உண்டாகும் ஆனந்தத்திற்கு இந்த உலகில் வேறெதுவும் ஒப்பில்லை. அது கைவரவான பின் மற்றெல்லா இன்பமும் கசந்து போகும். அந்த இன்பத்தை அனுபவிக்கக் கிட்டிய ஒருவனுக்கு ஆசானைப் பாராத ஒரு நாள் ஒரு யுகம்போலத் தோன்றும்.

251

கற்புடைய பெண்ணின் ஸ்தனம், வேங்கையின் தோல், கவரிமான் வால், வீரன் கைவாள் இவற்றை உயிர் உள்ள வரைக்கும் பிறர் கைதொட முடியாது என்று அனுபவமிருக்க, வீராதிவீரனாகிய அர்ச்சுனனது கை வில்லை அவனுடைய கையைவிட்டுப் பறித்ததே, அந்தப் பலம் உடையது எது? அதுவே எமபயம். அந்த எம பயத்தை வென்று அவன் கையில் மறுபடியும் முழு வீரத்துடன் அவ் வில்லை எடுக்கும்படிச் செய்தது எது? அதுதான் பகவத்கீதை. கீதையில் உள்ள அச் செயல் என்றும் பூர்வீகமாக உள்ளதே. நாம் படித்தும் கேட்டும் நிதமென எண்ணி இருந்ததெல்லாம் அநிதமென அறிவிப்பதே கீதை. அது எந்த எல்லையில் அதே வல்லபத்தோடே வெளியாகிறதோ அதுவே குருக்ஷேத்திரம். அந்தச் செயலைக் காட்டுபவரே பகவான்.

அந்த மெய்ச் செயல் தெரியாமல் உலகம் தத்தளிக்கிறது. அச் செயலை அறியவே இம் மானிடப் பிறவியை எடுத்தோம்.

252

ஒருவனுக்குப் பல ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் இருக்கிறது. அது ஒரே இடத்தில் இருந்தாலும் மேடு பள்ளத்திற்குத் தக்கபடி பல வரப்புகள் கட்டித் தடுக்காமல், ஒரே சுற்று வரப்பு மாத்திரம் போட்டு விவசாயம் செய்ய முடியுமா? முடியாது. எளிதாகத் தண்ணீர் பாய்ச்சவே அவன் பல வரப்புப் போடுகிறான். ஆனால், எல்லா நிலங்களுக்கும் பாய்ச்சும் நீர் ஒன்று தான். இவ் வுலக நிலச் சொந்தக்காரன் பல வரப்புகளைப் போட்டு நிலத்தைப் பிரித்துச் சுலபமாக விவசாயம் செய்வதைப் போல், இந்த மெய்ஞ்ஞான உழவு பாட்டிலும் கடவுள், பல மதங்களை, அந்தந்தத் தேசம், பாஷை, மக்களுக்குத் தக்கபடி வகுத்திருக்கின்றார். இம் மதங்களில் எதைக் குறை கூறினாலும், கடவுளைப் பழிப்பதே யாகும். உன்னிலுள்ள ஏகநாயகனை நீ கண்டால் தான், அந்த சமத்துவம் வரும். ஏகநாயகனுடைய சன்னிதானத்திற்குக் கொண்டு சேர்க்கும் செயல் ஒன்றே ஒன்று தான் - தண்ணீராகிய பொருள் ஒன்று; அது இருக்கும் இடத்திற்குத் தக்கபடி பெயர்கள் வேறு வேறு. அதை அறியாதவர்களே அடித்துக்கொண்டு சாகின்றார்கள்.

253

இறைவனை அறிவது அகத்தே. ஆனால் இறைவன், கடவுள் என்றதும், நம் எண்ணம் வெளியே

போகிறது. வெளியே பார்த்துக் கையை னீட்டிக் "கட வுளே" என்கிரும். 'மனிதனுடைய இருதயத்தில் அதாவது இன்சானுடைய கல்பில் ஞன் வெளியாகின் றேன்' என்று வேதத்தில் இறைவன் சொல்லுகின்ருன். னம் பழக்கத்தால் சோறு இது, என்று தெரிந்து கொண் டது போல், கடவுள் என்றதும் னம் மனம் வெளியே போகிற பழக்கமும் பிறரைப் பார்த்து னமக்கு வந்து விட்டது. ஆனல் ஒரு முறை கடவுளைத் தரிசித்துவிட் டால், னம் மனம் பிறகு அச் சன்னிதிக்கே போகும். எலுமிச்சம் பழத்திற்குப் பொருள் கேட்டால், அதன் ருசி, உபயோகம், வடிவத்தைப் பற்றி வண்ண வண்ண மாக விரித்துக் கூறலாம். அது னமக்குப் பயன்படாது. எலுமிச்சம் பழத்தை னிஜமாக் கையில் தந்நால்தான், னமக்குப் பயன்தரும். அதுதான் பொருள். பஞ்ஞாட் சரப் பொருளை னம் உள்ளத்தில் திட்டவட்டமாக அறியவேண்டும் என்றே வேதம் சொல்லுகிறது. குர் ஆனில் – முந்நிய பருலாகிய தன்னை அறிய வேண்டும் என்பதே கட்டளை – இது பெரியோர்கள் செயல்; னம்மால் ஆகுமா என்று சொல்லுகிருன். உன் தகப்பன் உன் ஞல் சுமக்க முடியாத சுமையை உன் தலையில் ஏற்று வாஞ? ஏற்றமாட்டான். அவ்வாறே ஆண்டவனும் னம் மால் செய்யக் கூடியதையே னம்மேல் விதியாக்கி வைத் திருப்பான். ஆகவே, னம்முடைய தலைக் கடமை, ஞம் அந்ந அகமியத்தை, பிரணவத்தை, மூலமந்திரத்தைக் கட்டாயம் அறிய வேண்டும். இறைவன் வேதத்தில் திட்டவட்டமாக அறிய வேண்டும் என்று சொல்ல, அதற்கு மாருக அறிய முடியாது என்பவன் இபுலீசு.

அவன் மேடைமேல் ஏறிப் பிறருக்குப் போதிக்க வந்து விடுவான். "தான் அறியவில்லை" என்று உண்மை சொன்னால், தன்னை மதிக்க மாட்டார்கள் என்றே அப்படிச் சொல்வதில்லை.

மனிதனுக்கே ஆண்டவனை அறியும் தன்மை உரியது. எல்லா அண்டங்களும் நமக்குள் எப்படி அடங்கி இருக்கும் என்று நினைக்கிறீர்களா? நாம் ஒரு அறைக்குள்ளே தாளிட்டு, இருட்டிலே துணியைப் போர்த்திக் கொண்டு தூங்குகிறோம். அப்போது கனவில் மற்ற மக்களோடு பேசக் காண்கிறோம். ஒரு பெண்ணோடு உறவாடக் காண்கிறோம். அதற்கு அடையாளமும் வந்து விடுகிறது. பயம் உண்டாயிற்று. உடனே விழித்துக்கொண்டோம். அப்போது பயத்திற்கு அறிகுறியாக நடுக்கம் எல்லாம் உடலில் இருக்கிறது; முன்னமே கண்டவைகளைக் காணோம். நாம் எங்கேயோ போனது உண்மை என்பதற்கு அறிகுறியாக, தேகத்தில் சாட்சி வந்து விட்டது. நாம் அங்கு கண்ட அவைகள் நம்முள்ளே எப்படி வந்தன? மாடுகள் அப்படிக் காண்பதுண்டா? இல்லை. உங்கள்மேல் இரக்கம் கொண்டு, உங்களுக்குள் இருக்கும் காலச் சக்கரமும் ஒரோர் கால் தன்னைக் காட்டி மறைக்கிறது. கசகசா போன்ற ஒரு ஆலம் வித்திற்குள் உன் கண்ணுக்குத் தோற்றமாகாமல் கிடக்கும் சூட்சும வஸ்துவே, கிளைகளும் விழுதுகளும் இலைகளும் கொண்ட பெரிய ஆலமரமாக ஆகிறது. இந்த மரம் முழுதும், அந்தச் சிறிய வித்துக்குள் கண்ணுக்குத் தெரியாத நுணுகிய அளவில் அடங்கியிருக்கிறது. இன்னும் மயில் நிறம் முழுதும் அதன் முட்டைக்குள் அடங்கியிருக்கிறது. இவ்வா

ருகவே அண்ட சராசர முழுதும் உங்கள் இதய காலச் சக்கரத்திற்குள் அணுவாக அடங்கியிருக்கிறது. கருணை நயகன் இதை உனக்கு அறிவிக்கவே, இடையிடையே கனவை உண்டாக்கிக் காட்டுகிருன். இவ் வுண்மையை உன்னுக்குள் னோருக்குனேர் அறிகிறபோது, உன் பெயர் மனுஈசன்; அறியாவிட்டால், மனு னீசன். முன்னுளில் இருந்த அந்த ஞானம், இன்னும் தேய்ந்து கீய்ந்து போகாமல், அணுக்கூடக் குறையாமல், இன் னிலவுலகில் இருந்துகொண்டேதா னிருக்கிறது.

ஞானம் என்பது உபன்யாசம் செய்வது அன்று, செயல். உபன்யாசங்களைக் காலமெல்லாம் நும் கேட் டுக்கேட்டுச் சாகவேண்டியதுதான். ஒரு சிவன் முத் தரும் அவருடைய பிள்ளைகளும் மற்றவர்களைப் பார்த்து, னம்போல் கண் பெற்றும், அவர்கள் காணவில்லையே என்று பரிதாபப்படுகிருர்கள். நும் ஏனையோரைப் பார்த்து இரக்கப்பட வேண்டுமே அல்லாது, குறைவாக னினைக்கக் கூடாது. அப்படி னினைத்தால், ஆசானைக் குறைவாக னினைத்ததுபோல் ஆகும். அறியாதவனை, அவனும் னம்மைப்போல் மனிதன்தானே என்று னினைத்தால், அவன் ஒரு ளுளைக்குக் கிருதார்த்தனு வான்; அந்தப் புண்ணியம் உன் தலைக்கு வரும். மற் றையோர், ஞானமல்லாத வேறுசில செயலில் உயர்ந் திருக்கலாம். அதை யெண்ணி னம்முடைய அகந் தையை அடக்கிக்கொள்ள வேண்டும். ஒன்றைப் பற் றிக்கொண்டுதான் ஒன்றைவிட வேண்டும். ஒரு இச் சையை விட்டால்தான், இன்னென்றைப் பற்ற முடியும். பொய்யை விட்டால்தான், இந்த மெய்யைப் பற்ற முடி யும்.

கல்யாணம் செய்துகொண்டால் இந்த ஞானம் வராது என்கிறார்களே, ஒரு பெண்ணை வைத்துச் சமாளிக்க முடியாத இவன் அந்த வல்ல சக்தியை எப்படி வைத்துச் சமாளிப்பான்? அழிந்துபோகிற அற்பக் காரியத்தை எல்லாம் இப்போதே நாம் செய்கிறோம். இந்த மெய்ஞ்ஞானமாகிய பெரிய செயலை மாத்திரம் செத்த பிறகா செய்வது?

254

ஒருவனை நல்லவன் என்றோ தீயவன் என்றோ நாம் தீர்ப்புப் பண்ணுகிறதற்கு முந்தி, உன் யோசனையைக் கொண்டு நீ என்ன தீர்ப்புப் பண்ணுகிறது? சுவர்க்கம், நரகம் உன் கையிலா இருக்கிறது? இல்லையே. இன்னொருவனுக்கு நீ என்ன விதி விதிக்கிறது; தீர்ப்புக் கூறுகிறது. நாம் ஒன்றை நல்லது என்றால், நீயும் அதை நல்லது என்று பற்றவேண்டியதுதானே. தீங்கு என்றால் அப்பவே – அந்த க்ஷணமே யோசியாமல் கைவிட வேண்டியதுதானே? ஆம். உன் அறிவை வைத்து நீ யென்ன சரிபார்க்கிறது. எட்டிப்பழமே நாம் தந்நாலும் அதை அப்படியே கடக் மடக் கென்று சாப்பிட வேண்டியதுதான். நீ என்ன தனியாக யோசிக்கிறது? தன் யோசனையில் போய் நரகத்தில் பாய நிற்கிறவனுக்கு இங்கு வேலையே இல்லை.

255

சதா, சத்திய ஒட்டுதலில் நீ இருக்கவேண்டும். எமது ஆக்ஞை பிறந்த அந்த க்ஷணமே உன் எண்ணம் அந்த முகமாகத் திரும்பிவிட வேண்டும். அடுத்த மூச்சு வினைக ஓடப்படாது. அப்படி ஓடினால் எம்மை அவமானப் படுத்திய குற்றம், வெறுப்பு உன்மேல் வரும்.

ணும் கத்தியை னீட்டி அதன்மேல் னீ பாய் என்ருல் பாயவேண்டும். அப்படிப் பாய்ந்நால் உனக்கு மீட்பு னிச்சயம். தன்னறிவில் சாய்ந்து பாயாமல் இருந்நுவிட்டால், அந்நக் கத்தியே உன்மேல் வரும். னீ எம் கைவாளாக இருக்கவேண்டும். வாளை ஓங்கிக் கல்லின்மேல் விட்டால் அது அதன் மேல் பாய யோசிக்குமா? யோசிக்காது. ஏனெனில் அதன் னன்மை தீமை எம் கையில் இருக்கிறது. னீ அந்ந மாதிரியான திட னம்பிக்கையில் ஆகவேண்டும்.

எம்முடைய (திரு)வாக்கு ஒரு தீ. அது ஒரு கூர் ஆயுதம் என்று னீ னினைத்தால் ஒழிய, அதன்படி சடேரென்று பாய வராது. னீ எம்மை னோக்கி ஒரு எட்டி எடுத்து வைத்தால், உன்னை னோக்கி ணும் மூன்று எட்டி எடுத்து வைத்து னெருங்கும் காலம் இது.

256

தான் செய்கிற காரியம் எமக்குத் தெரியாது என்று னினைக்கிறவனை, எமது எண்ணமாகிய கை தொடாது. அப்படிப்பட்டவனுக்கு ணும் னேசமல்ல; எமன்தான் னேசன். ஆனுல் எவனெருவன் தன் னினைவாகிய பிடரியில், ணும் இருக்கிருேம் என்று அச்சத்தோடு வாழ்கின்ருனே அவனுக்கு, அவன் னினைத்துத் தேடியது மட்டும் அல்லாது, அவன் னினையாதது பலவும் தரப்பெறும். தொட்டது வைத்தது அனைத்தும் பொன்னுக விளைவேறும்.

னீ எம்மைத் தொடர்ந்து எமது னோக்குக்கு இணங்கிச் சலியாது னடந்நால், ணும் உனக்கு அறிவித்துள்ளது மட்டுமின்றி அறிவிக்காதது பலவும் உன் னினைவில் தோன்றும்; தானுகக் குதித்து வந்து னிற்கும்.

எண்ணு கின்றனல் லெண்ணம னைத்தையும்
எண்ணெ ணுவெலாச் சித்திமுத் திகளும்
பண்ணு றுந்நன்த னித்தலை மைப்பதி
வண்ண ஞானசித் தர்காலம் வந்ததே.

(காலந்நாட்டிய காரணப்பா)

உன்னுடைய எந்நவொரு செயல் எம்முடைய னினை வுக்கு னேராக இருக்கிறதோ, அதுதான் தவம். கொக்குக்கு ஒரே மதி என்று சொல்வதைப் போல், உனக்கு ஒரே மதி இருந்நால் போதும். அது உன்னை னித்தியத்தில் கொண்டுபோய் ஏற்றி விடும். உன்னுடைய செயல் எண்ணம் னடக்கை யெல்லாமும், மெய்யிலே எந்ந அளவில் ஒட்டிப் படிந்து இருக்கிறதோ, அதே அளவில்தான் எமது பிரீதியும் உன்மேல் இருக்கும். உனது செயல்தான் எம் பிரீதியை உன்பால் இழுத்துக் கொள்ளுகிற வல்லப முடையதே அல்லாமல், உன் தூலம் அல்ல என்பதை னிச்சயமாக ஊணி வைத்துக் கொள். எம் பிரீதியைப் பெற உன்னிடம் ஒரு குறியான அடம், ஒரு பிடிவாதமான திடம் வேண்டும்.

யாரும் பெறமுடியாத அறிவாகார தேவபிரானை, அறிவு ரூபகமாகிய புருஷரை னும் பெற்று, னமது கைப்பொருளாக வைத்திருக்கின்றோம்; னமக்குச் சர்வ உதவியினராக அவர்களை வைத்திருக்கின்றோம் என்று னீ கட்டாயமாக உன்னுள் சிறிதும் பேதக மில்லாமல் னினைக்க வேண்டும். இன்னுளிலிருந்து உனக்கு வேண்டியது, உன் கண் முன்னுலே கிடைக்குது பார் கஞ்ஜி, அதுவே போதும் என்று னினைப்பதுதான். னுனக்கு

இன்னது வேண்டும் என்ற எண்ணத்தை எட்டி உதை. உனக்கு னளக்கு வேண்டியவர், ணும் ஒருவர் தான். உன்னுடைய மற்றைய பற்றுதல் எல்லாம் போலிப் பற்றுதலே என்று கட்டாயமாக னினை. இதைக்காண சுருக்கமான ஒரு உளவு, உனக்கு வேறு யாரும் சொல்லித்தர மாட்டார்கள். ஆகையால், இந்தக் "காட்டானை வாலைப்பற்று" என்று ணும் சொல்லுகிறோம்.

257

"முகதாட்சண்யம்" கொடியதோர் வாள் என்று சொல்லுகிறோம். ஆனால் னீங்களோ, அதை வாழைப் பழம் என்று எடுத்துக் கையாளுகிறீர்கள். அதற்கு ணும் என்ன செய்வது? முகதாட்சண்யமும் பொறுமையும் சாலையில் இருக்கிறவர்களுக் குள்ளே ஆகவே ஆகாது என்ற இந்த எச்சரிப்பு உங்கள் னினைப்பில் சதா இருக்கவேண்டும்.

258

னம்முடைய மீட்புக்குத் தலையாகிய முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் இம் மூன்றும் மந்திர ஸ்திரம். இவற்றைத் தீர்க்கமாகக் கைக்கொண்டவர்கள்தான், ஆண்டவர்களைத் தங்கள் தெய்வமாகக் கொண்டு, தங்களுடையவர்களாக ஆக்கிக்கொண்டவர்கள். னம் தேகத்தை விட்டாலும் விடுவது, இந்த னித்திய மெய்யை விடுவதில்லை என்ற தீர்க்கப்பிடி வேண்டும். இதைத்தான் "சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே" என்று சொன்னது. இந்த உச்சத்தைத் தீர்க்கமாகக் கைப் பற்றியவர்களே வெற்றிமேல் வெற்றி பெறுவார்கள்.

259

தன் குற்றம் தெரியாதவன், தன் புகழுடம்பு தெரியாதவன் ஆகிவிடுவான். தன் குற்றத்தைத் தெரிந்து திருந்திக் கொள்ளல்தான், தன்னைத் தண்டித்துக் கொள்வது. நீ கைபோட னிற்கின்ற மெய் வீட்டிற்கு இதுவே அஸ்திவாரம். எமது மெய்வழிக் குலத்து மக்கள், ஆண் பெண் இருவருக்கும், வேண்டிய முதல் மந்திரம் இது.

> "ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
> தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

"மெய்ப்பொருள் காண்பது அறிவு". மெய்ப்பொருள் முன்னே ஆகாயத்தில் அரூபமாக இருந்தது. இப்பொழுது அது கால் கை அங்கங்களுடன் உன் எதிரே உன்னைப் போல் உனக்காக உன் பூமிக்கு வந்து உள்ளது.

260

உனக்குத் தலைவன், உன்னை னடத்துபவன், உன் மனமே. அவன் உன்னை எப்பவும் தீங்கில் தள்ளவே காத்துக்கொண் டிருக்கிறான். சுலபமாக ஒரு பாதையை வெட்டி விட்டுத் தீங்கில் சாய்த்து விடவே னிற்கிறான். அப்போ சைத்தான் யார்? உன் மனம் தான். உன் ஆசரியர் அவர்களை உன் உயிர் னேசமாகக் கொண்டாயானால், உன் மனதை நீ வெறுத்து விடுவாய்.

261

வரனிற்கிற அந்த அமளி னேரத்தில் உன் ரோமக் கால்கள் எல்லாம் பத்தி எரியும். நும் எடுத்து வைத்துள்ள மெய்வணக்கத்தின் பலன், அது னேரம் உங்கள் கையில் இல்லையென்றால், னிச்சயமாக உங்கள் னினை

வுக்கு டப் டப் என்று தீப்பிடிக்கும். அந்த நெருப்பில் இருந்து தப்புவிக்கின்ற ஒரு அரு மருந்தாக அல்லவா, இந்த மெய்வணக்கம் எடுத்து வைக்கப்பெற் றுள்ளது.

எமக்குப் பதிலாகவே எம் மக்கள் அந்த நெற்றிச் சுழிப்புடன் பூரியை எடுத்து வாய்வைத்து ஊதுகிறார்கள். அதன் வழியாக அது நேரம் வெளியாகிற ஆவி எம் முடைய பரிசுத்த ஆவி. அதுவே உங்கள் ஆத்ம ரக்ஷிப்புக்கு உரியது. அதைக் காதில் ஏற்றிக் கொள் ளுங்கோ என்கிறோம். அது உங்கள் ஜீவனை வல்லப சுத்தத்திலேற்றி, உங்கள் தேகாதியந்த மயிர்க்கால்கள் தோறும் சுத்திகரிப்பை உண்டாக்கும்.

262

ஒருவனுக்குச் சொத்து இருக்கிறது. இன்னொரு வனுக்குச் சொத்து இல்லை. சொத்து இல்லாதவனிடத் தில், எம் வாக்கியத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் வல்லபச் சொத்து இருக்கிறது. இன்னொருவன் இருக்கி றான்; அவன் எம் கட்டளைப்படி தினம் மூன்று மணி நேரத்திற்கு மேற்படாமல் தூங்கி வருகிறான். இந்த வைராக்யச் சொத்து அவனிடம் இருக்கிறது. மற்றொருவனுக்கு, ஒருவருக்கொருவர் விரோதம் வராமல் செய்கின்ற ஆன்மநேயச் செயலாகிய சொத்து இருக் கிறது. ஆனால், அவர்களிடம் நீங்கள் நினைக்கிற பணம் காசு இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர் களுக்குப் பணம் காசு உடையவர்கள், தங்கள் சொத்தை முடிந்த அளவில் கொடுத்து உதவி, அவர் களுக்குச் சாப்பாட்டுக் கவலை இல்லாமல் செய்தல் வேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள், தங்கள்

கையில் உள்ள சொத்தை இவர்களுக்குப் பங்கிப் பரி மாற வேண்டும். இதுதான் எம் இச்சை. ஒருவன் கட்டிச்சோறு கொண்டுவருகிருன். இன்னெருவன் பழம் கொண்டுவருகிருன். மற்ருெருவன் அவல்பொரி கொண்டுவருகிருன். வேருெருவன் சர்க்கரை கொண்டு வருகிருன். அவரவர்கள் அதையதையே சாப்பிடாமல், யாவரும் எல்லாவற்றையும் பங்கிச் சாப்பிட்டால் எவ் வளவு னன்ருய் இருக்கும். உங்களுக்கு இந்நப் புத்தி, இந்ந ஜீவவாழ்க்கையிலும் வந்நால் என்ன?

அதே சமயத்தில், னீ இன்னெருவனுக்குப் பிர யோசனம் இல்லையென்ருல், அவனிடம் னீ வாங்கி உண்பது பாவம். இந்நச் சட்டம் னித்திய வாழ்வில் உள்ள எம் பெருங்குடி மக்களுக்குத்தான்.

263

எம்முடைய வளப்பம் மிகுந்ந வார்த்தைகளைக் கேட்டு வனப்புற்றவர்கள், இந்நப் பரந்ந பூமியில் ஒரு சிலர்தானே இருக்கிருர்கள். ஆனல் னும் இந்நப் பூமி அடங்கலும் உய்யட்டு மென்றுதானே இந்ந எழுபது வருஷங்களாகப் பாடுபட்டோம். ஊர் ஊராக வீதி வீதியாக னின்று அழைத்தோம்.

உன் அறிவு முன்னும், மனம் அதன் பின்னு மாகத் திரும்ப வேண்டும். ஜீவன் முத்தர்களுக்கு மன மென்பதில்லை, எல்லாம் அறிவே. உன் எண்ணம் சுவா சத்தில் கலந்நிருக்கிறது. சுவாசமோ அறுசுவையில் கலந்நு வீசுகிறது. உன் சுவாசம் தெற்கு னேக்கி ஓடு கிறது; அது மாறி ஓடவேண்டும். 'ஆசான் அவர்களின் சொல்லானது னம்மது, அவர்கள் அறிவு னம்மது, அவர்கள் தேகம் னம்மது, அவர்கள் முயற்சி னம்மது,

என்று னினைத்ததும் அந்நச் செயல் தானே வந்து விடுகிறது.

அவர்கள் சொல் னம் இச்சை என்று னமக்கு வர வில்லையே என்ற கவலை வரவேண்டும். சதா அந்நக் கவலையில் இருந்து பழகி வருகிறவன் எண்ணம், ஒரு னேரத்தில் அங்கு 'டக்' என்று போய் மாட்டிக்கொள் ளும். இதற்காகத்தான் னன்னம்பிக்கை வைப்பு எடுத்து வைக்கப்பெற்று இருக்கிறது.

264

ஒரு எழில் ஆசரியர், ஒரு ஞான ஆசரியர், தன் அங்கத்தினன் என்று உன்னை ஏற்றுக்கொள்வதாக இருந்நால், னீ எப்படி னடந்துகொள்ள வேண்டும்? னீ என்னவாக ஆகுவதற்காக ளும் உன்னை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை னினைத்து, இதை உன் னெஞ்ஞில் அழுத்தமாக வைத்துக்கொள்.

எவ்வளவு னிதியம் செல்வம் ஆர்வம் இளமை யான வனப்பு இருக்கட்டும், மனம் யௌவனம் இல்லா விட்டால், வயது ஆயுள் ஆலோசனை எல்லாவற்றையும் அந்த மனம் விழுங்கித் தன்மயமாக ஆக்கிவிடும். வய தைப் போக்குவது உன் மனம். அதை ராஜா என்கிறோம். போகாது தடுப்பது அறிவு. அது ரூபகமாக உன் போல் வந்நிருக்கிறது – அதை மகா புத்திசாலியான மந்திரி என்கிறோம். மந்திரியின் துணையில்லாமல் ராஜா போகிறான்; அதனால் என்னவரும்? ஆபத்துத்தான் வரும். அதுபோல அறிவைத் துணைகொண்டு னடந் நால், உன் மனதிற்கு வல்லமை வரும். ஐம்புலனும் உன் மனதிற்குள் ஒடுங்கி, அறிவை ஆகாரமாகக்

கொள்ளுதலையே, அறிவதனைக்கொண்டு அறிவதனைக் காண வேண்டும் என்றது. ஆனால், அதை விட்டு உன் மனம்தான் அங்கும் இங்கும் அலைகிறதே. இங்ஙு லாவு உண்மையை உண்மை யென்று உன் மனம் வஞ் ஞகமின்றிக் கொள்ளும் போது, செவிக்கு உணவு ஏறு கிறது. அது உன் அறிவையும் மனத்தையும் செம் மைப் படுத்துகிறது. உறக்கமென்னும் இடியை உன் ஜீவன் தலையில் விழாதபடிச் சன்னம் சன்னமாகத் தடுக்கிறது. ஞம் தான் அதில் போய் கூடிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அறிவு, அந்த உறக்க மென்ற இடியைத் தடுக்கிறது. தன் எண்ணம் எதிலே ஓடிக்கொண்டிருக்கிறதோ அதிலேதான், ஞதமும் ஓடிக் கொண்டிருக்கும்.

265

துரும்பு, கலத் தண்ணீரைத் தேக்கும் என்பது வாஸ்தவம்தான். உன்னுடைய ஒரு அற்பச் செயல் பல அரிய வருவாய்களைத் தடுத்துவிடுகிறது. ஒரு னற் றிரு மேனியரின் அங்கத்தில் ஒரு துண்டு னீ, என்பதை மறந்துவிடாதே. னீ கைப்பற்றியுள்ள இது புராதனப் பழமை ஞானம். கோடி கோடி காலமிருந்து அரசு செய் ஞானம். ஒரு ஞழிகையில் அவசரமாகப் பெறக்கூடிய தல்ல இது. இதற்கு முழுயோக்கியதை உடைய வர்கள் னீங்கள்தான் என்று னம்பி, னெருக்கமான இவ் விஷயங்களைச் சொல்லி இருக்கிறோம்.

266

உன் எண்ணம் அழிந்தே போகிற னேசத்தை உயிராகக்கொண்டு இருக்கிறது. அந்த னேசத்தை

விட்டுவிட்டு ஆண்டவர்கள் அருளுக்குள் னீ னுழைந்து கொள்ள வேண்டும். அவர்கள் அருளேயே அருந்த வேண்டும். அது உன் உள்ளத்தில் சிறிது சிறிதாக னுழைந்து ஜீரணமாகி உன் ரத்தத்தில் போய்க் கலக்க வேணும். அறிவே உன் பாவ னினேவைச் சங்ஙரிக்கிறது. பின் அந்த னினேவே அறிவாக மாறுகிறது. னினேவு மாறவும் தேகம் மாறுகிறது. உன்னுடைய வாய் எழுபதினுயிரம் னுவுடைய வாயாக மாறுகிறது. பதினுயிரம் கண்கள் வருகிறது. உன் காது அணுப் புரண்டாலும் கேட்கக் கூடிய காதாக ஆகிறது. உன் னினேவைப் பரிசுத்த மாக்கிய பின்னர்தான், அந்தத் தெய்வப்பதி பக்கம் அதை னீட்டவேண்டும். ஞானத்திற்கு யெளவனமாக உன் மனம் உருமாறவேண்டும். அதாவது உன் மனம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, உன் ஆசரியருக்கு னேர் இலக்கில் னிற்க வேண்டும்.

267

ஆண்டவர்கள் வாய்மைக்குள் ஆகிவிடுவது ஒன்றுதான் உன்வேலே. இந்தச் சொத்து னம்மது; இங்ஙிருப்பவளாகிய இந்தப் பொன்னரங்கம் னமது மனேவி; இறுதிச் சுகம் தருகிறவள் இவள்தான் என்றிருந்நால், னீ ஞானத்தையே வேண்டாவிடினும் அது தானே உன் தலேயில் துவஜம் கட்டி ஏறிவிடும். இது தன்னது என்ற எண்ணம் தீர்க்கமாக வந்நால் போதும். "னமது தெய்வத் தனிப் பிரானவர்களுடைய வார்த்தையே மௌன தாரை. சர்வலோகத்திலும் பெரிது இது ஒன்றுதான்" என்ற எமது ஊக்கமும் துணிச்சலுமே எம்மை அந்தத் திரு உள்ளத்தில், வீட்டில், புகுத்தாட்டியது. னம்

பொன்னரங்கம் எல்லாவற்றிற்கும் மேலான னிஜமான ஒரு மனைவி என்று எண்ணும் எண்ணம் வருவதுவே பரத்திற்கான உபதேசம். னம் தேவன் அழியாதவர், னம் சிறப்பு அழியாதது என்று னீ சதா னினைத்துக் கொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு ஊடுருவி னிற்கும் அன்பே சாதனை. முழு வைராக்கியமே னிஷ்டை. உன்னுடைய குருபீடத்தை னீ னினைக்க, குரு பீடத்தைப் பற்றிப் பேச, அன்பெல்லாம் குரு பீடத்திலே னைவேத்தியம் செய்யவே தீட்சை.

> என்னையே னினைந்நெழு வுன்மனத்தினை யென்னிடையேவை
> என்னையே னினைந்திருனீ மற்றெனக்கே பூசனைசெய்
> என்னையே குருவாக்கொள் எப்போது மிதுசெய்யில்
> என்னையே வந்நடைதி யிதுமெய்யே யிதுமெய்யே.

வேதம் ஆசான் திருமேனி. வேத விளக்கம் அவர்கள் திருவாக்கு. எம் எண்ணத்திற்கு மாருகப் பேசினல் எண்ணினல் பாவமே வரும். எது செய்யும்போதும் எம்மையே பார்; எம்மையே னினை; எம் எண்ணம் உன் உள்ளத்தில் சதா வைத்திருக்கும்போது உன் எண்ணம் எல்லாம் வண்ணமாக மாறிவிடும்.

> பார்வையில் பாண்டியன் தன்னைனீ வைத்திடப்
> பார்க்கும்தொ ழில்வேறு இல்லையடி.

268

புல்லனுக்குப் புல்லாகப் போவதும் வல்லவனுக்கு மந்திர வாளாக னிற்பது மாகியதுவே மகாமந்திரம். உலகத்திலுள்ள தவங்களுக் கெல்லாம், தான தர்மங் களுக்கெல்லாம், னன்மைகளுக்கெல்லாம் மேலான - சிரேஷ்டமாகிய ஒரு தவம் இருக்கிறது. அது என்ன வெனில், முன்பின் இல்லாத முதல்வன் சன்னிதிக்கு

உன்னை எத்தி வைக்கின்ற வசனங்கள் எங்கு வெளியாகின்றனவோ, அந்த எல்லைக்குப் போய், அந்தத் தேவத் தீர்ப்பு வசனங்களைக் கேட்பதுவே தவம்.

அண்டாண்டங்களும் கடந்து, அகண்டங்களும் நிறைந்து, சர்வ லட்சணங்களையும் வடித்து, சர்வ போகத்தையும் அனுபவித்து, எல்லாவற்றையும் ஒரு நொடிக்குள் வைத்துத் திணித்துத் தருவது, சர்வ அந் தஸ்துக்களையும் சர்வபோக போக்கியங்களையும் உன் தலையில் சூட்டுவது, சர்வ காலங்களும் அழியாதிருப் பது அருள்; அதுவே யுகாந்த நாட்டுச் செல்வம்.

269

"பூமியிலுள்ள அனைவரின் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்" என்ற சத்தியவேத தீர்க்கதரிசன வசனம் படிக்கப் பெற்றபோது ஆண்டவர்கள்:- ஆம். அது நிச்சயமாகத் திடீரென்று நீ நினையாத நேரத்தில்தான் உன் பிடரியின் மேலே வரும். பிடரி என்றது உன் நினைவின் பிடரியில். நாம் அதற்கும் உனக்கும் இடையில் உன் நினைவின் மேலே அமர்ந்திருக்கிறோம். ஆகவே, எம் கையகத்தான நீ திரும்பினால் முதலில் அதைச் சந்திக்காமல் எம்மையே சந்திப்பாய். இதற்குத்தான் எம்முடைய இவ்வளவு நாள் பாடு. ஆனால் எம் கையகத்தாகாதவர்கள் அதைத் தாங்களே நேர் முகத்தில் சந்திப்பார்கள். இந்த உல கத்திலுள்ள ஒரு மனிதனின் வாழ்க்கை, தாவிப் பிய்த் தெறிய நிற்கிற ஒரு வேங்கையின் முன் வாழ்கின்ற ஒரு மொண்டி ஆட்டின் வாழ்க்கையைப் போல இருக் கிறது. அந்த ஆடு, தன்முன் இருக்கும் ஆபத்

தைக் கண்டு நடுங்கிய வண்ணமாகவாவது இருக்கும். ஆனால் இவனோ, எமன் என்னும் கடுவாய் தன்னை எப்ப விழுங்கலாம் என்று இருக்கிறது என்பதைத் தெரிந் தும், அந்தக் கவலை திவலைகூட இல்லாமல் இருக்கின் றான். 'ஏன் இப்படி இருக்கிறான்' என்று நீதி நினைக் காதோ?

270

அழிவதிலிருந்து அழியாததை அறிவிக்கிறதற் காகத்தான் இந்த எண்ணிறந்தகோடி வேதங்களும் கிரந்தங்களும் வேதாந்தங்களும் பாஷைகளும் வந்தன. அது மட்டுமல்லாமல் பலப்பல ரகமான முகங்களுக்குத் தக்கபடியாகப் பலப்பல ராகரக கிரந்தங்களும் கிளம் பின. ஆனால் சர்வ வேதங்களும் ஒரே லட்சியத்தை வைத்துப் பேசுகின்றவைகளே. ஆகவேதான் ஒரு மெய்ஞ்ஞானியின் நூலை நாம் எடுத்தால் ஹெடிங் கைப் பார்ப்போம். ஐந்து பத்துப் பக்கங்களாகத் தள்ளித் தள்ளிப் படித்துப் பார்ப்போம். நிஜமான ஞானியின் நூலாக இருப்பின் அழிவிலிருந்து அழியா மைக்குக் கொண்டுபோகிற அவர்களின் பிளான் வெகு லேசாகத் தெரியும்.

271

உலகப்பொருள், தேவன் என்ற இரண்டு எஜ மானருக்கு உன்னால் ஊழியம் செய்ய முடியாது. இரண்டு குதிரைமேல் ஏறிச் சவாரி செய்தால் கப்புக் கிழிய வேண்டியதுதான்.

272

பசு தூங்குவதைப் பார்த்திருக்கிருயா? பார்த்திருக்கிரேம். ஒரு சிறு அரவம் கேட்டாலும் உஜார் ஆகிவிடும். அது எதனுல்? அது காரசாரமான உணவை உட்கொள்ளுவதில்லை. னீயும் அதேபோல் காரசாரம் இல்லாத உணவை ஒரு அளவில் உண்டு வருவாயாஞல், உனக்கும் அசந்த தூக்கம் வராது; எப்பவும் உஜார் இருக்கும். இரப்பையில் கனங்கட்டித் தொங்காது. எவ்வளவு தூரமான சத்தம் ஆனுலும், குசுகுசு என்று பேசுகிற மெல்லிய தொனியாஞலும் அது உன் காதில் கணகண என்று கேட்கும். பிறர் பார்க்க, னீ தூங்குகிறதாகத் தெரியும். ஆனல் னீயோ சகலமும் கேட்டுக்கொண்டு இருப்பாய். இப்படியெல்லாம் வரவு இருக்கிறதே; அதை ஏன் னீ கைபோடக்கூடாது?

273

முன் வந்த செம்மல்கள் எல்லாம் ஞானமாகிய ஜீவன் முத்தியை அடைய எவ்வளவோ பாடுபட்டு இருக்கிருர்கள்; அப்படியிருக்க ஜீவன் முத்தியோடு தேகமுத்தியும் பெற ஆசைப்படுகிற னீ, எதை விட்டிருக்கிருய்? ருசியைக் கூட விட முடியவில்லையே. தூக்கத்தைக் கூட விட முடியவில்லையே. எக்கோடி காலத்திற்கும் ஆன வாழ்க்கைக்கு அவைகள் எட்டித் தீ வைக்கின்றன என்று அவற்றின்மேல் உனக்கு ஒரு வெறுப்பு வரவில்லையே. உன் தேகத்தில் ஒரு பாகத்தைப் பிய்த்துக் கொடுத்தாவது இதை அடையவேண்டாமா? ஆம். உன் தேகத்தை இளைக்க வைத்து, தூக்

கத்தைக் குறைக்காவிட்டால், நும் நினைக்கிற எல்லைக்கு உன்னை எம்மால் கொண்டுபோக முடியாது.

274

நூல்களுள், வேதச் சட்டங்கள் பேசுகின்ற நூல்கள், வேதத்திற்குப் புறம்பான நூல்கள், இகத்தையும் பரத்தையும் பற்றிப் பேசுகின்ற நூல்கள் எனப் பல உள. அவற்றுள் அவரவர் படித்த நூல்களைக்கொண்டு அவரவர் மனமும் பல வேறாக மாறுகின்றது. இதுவன்றி, இந்த உலகத்தில் உள்ள அனந்தங்கோடி செயல்களில் ஈடுபடுகின்ற மனம், அனந்தங்கோடியாக விரிந்திருக்கிறது. ஒருவன் பிறந்தது முதல் ஒரே எண்ணத்தில் இருப்பதில்லை. இவ்வாறாகச் சிதறிக் கிடக்கும் அந்த எண்ணங்களை எல்லாம் ஒவ்வொன்றாக மாற்றிப் பலதும் பேசிப்பேசி இந்த மெய்யின்பால் ஒரு முகமாகக் கொண்டுவர வேண்டும். ஞானம் என்றதும் ஒவ்வொருவரும் தன்தன் மனத்தில் ஒவ்வொரு போட்டோ வைத்திருக்கிறார்கள். ஆனால், நிஜமான ஞானம் இப்படியானது என்பதை யாராலும் எண்ணவே முடியாது. அவரவர் எண்ணங்களுக்கெல்லாம் இம் மார்க்கம் முற்றிலும் வேறானது. ஐம்மணிப் பொதிகைக்குள், பஞ்ஞாட்சர ரூபிக்கு நேர் நேராக ஆக்கப்பெற்று நிற்கும்போது, ஞானத்தைப் பற்றி நும் முன் நினைத்தது அனைத்தும் நம் நினைவுக்கே மகா வெட்கக்கேடாயிருக்கும். ஏனெனில் அந்தப் பாதையில் யாரும் முன் போனதுமில்லை; கண்டதுமில்லை. தன் முயற்சியால் போகவும் முடியாது; தன் நினைவிற்கும் எட்டப்படாதது அது.

275

தெய்வத் திருநாட்டிற்குப் போய் வரும் திருவிளையாட்டைப் பழக்கித் தருகிற ஒரு இடம் இந்நப் பூமியில் இருக்கிறதென்று யாராவது கேட்டதுண்டா? இல்லை - அது இந்நச் சாலை எல்லைதான் என்று யாருக்கும் தெரியாது. வித்திலே சொத்தையானல், அது விளைந்து மரமாவது எங்காவது கண்டதுண்டா? அறிவு யௌவனமாக உள்ள காலத்திலேயே வேத நூல்களைப் படிக்காவிட்டால், மெய்ஞ்ஞான இச்சை தோன்ருது. உள்ளம் உருகாது, மனம் கசியாது, வித்து முளைக்காது. சிவ நூல்கள் எவ்வளவு படிக்கிருயோ, அவ்வளவுக்கும் பொருள் பெறும் எல்லையே இந்த எல்லை. உலக தனத்தைக் குறிக்கோளாக வைத்து இச்சபை உண்டாக்கப் பெறவில்லை. சிவ நிதியைக் குறிவைத்தேதான் இது உண்டாக்கப்பெற்றுள்ளது. சிவநிலைப் பீடத்தின்பால் நீ வைக்கும் சத்தியம், பொறுமை, தாழ்மை முதலியன யாவும் உனக்குப் பயன் தரும். குரு சன்னிதானத்தில் அவை, குருவின் இரக்கம் உன்மேற் பாய உதவியாக நிற்கும். உன்னைச் சிவநிலைக் கேற்றும்.

276

பொய்யைப் பொய்யாகவும், நரகத்தை நரகமாகவும் நினைக்காத, அறியாத பெரிய கூட்டத்திற்கு இடையில் நாம் இருக்கிறோம். ஜாக்கிரதை.

இத் தெய்வச்சாலை எல்லோருடைய தாகத்தையும் தணிக்கின்ற தடாகமாகும். ஒரு சாதிக்கோ ஒரு மதத்துக்கோ சொந்த மன்று. மனித உடல் எடுத்துள்ள சர்வத்திராணுக்கும் சொந்தமானது.

277

எம் சிறுவயதில் ஞம் மகா துஷ்டத்தனத்தோடு இருந்தோம். பயம் என்பதே எமக்குத் தெரியாது. மாலக்கோவில் திருவிழாக் காலத்தில் ஆள் ஒன்றுக்கு அரைக்கால் ரூபாய் கொடுத்துத் தாய் தந்தையர் அனுப்பினர்கள். எம்முடன் வந்தவர்கள், 'அல்லி அரசாணி மாலை' முதலிய னூல்கள் வாங்கினர்கள். ஞம் 'மஹரிபத் மாலை' என்ற ஞானனூல் வாங்கினேம். வீட்டிற்குத் திரும்பியதும் எமது அம்மாவும் அத்தாவும், அதைப் பார்த்துவிட்டு, எனக்கு ஞானக்கிறுக்கு கொண்டுபோய்விடும் என்று பிடுங்கி, அதை ஒரு மரக் கைப்பெட்டியில் வைத்து மறைத்துப் பூட்டி வைத்து விட்டார்கள். எமக்கு அதில் என்ன சொல்லி வைத்திருக்கிருர்கள் என்று பார்க்கவேண்டுமென்ற ஆசை வேரூன்றி இருந்தது. அதற்குச் சமயம் வாய்க்கவில்லை. கடைசியில் அக்கா மூலம் அப் புத்தகம் கைப் பெட்டியிலிருக்கும் விஷயம் தெரிந்து கொண்டோம்.

பிறகு ஒரு னள், எங்கள் வீட்டிலுள்ள எல்லோரும் தாராபுரத்திற்கு எமது பெரியத்தா வீட்டில் னடந்த ஒரு கல்யாணத்திற்குப் போயிருக்கையில், அந்தப் பெட்டியின் அடிப் பலகையைக் கழற்றிப் புத்தகத்தை எடுத்துக் காட்டில் கொண்டுபோய் மரப்பொந்தில் வைத்துக் கொண்டு, மாடு மேய்க்கும் னேரங்களில் அதைப் படித்துப் படித்துப் பூராவும் மனப்பாடம் பண்ணிவிட்டோம். இவ்வாருன ஞான இச்சையோடு, காட்டு விவசாய வேலைகளையும் பார்த்து வருவோம். மாலையில் வரும் போது இரண்டு மூன்று ஆட்கள் கொண்டுவரக்கூடிய

புல் கொண்டுவந்நு மாடுகளுக்குப் போடுவோம். இந்த வேலைகளுக்கிடையில் வேத முத்தாகிய கலிமாவை, ஒரு கோடிதரம் சொல்லியிருப்போம். ஒரு தடவை சொன்னதாவது நிஜமாயிற்ரு? பலன் தந்நதா? இல்லை. நிஜமில்லாததைச் சொன்னுல், ஹராம் அதாவது பாவம் என்று வேதம் சொல்லுகிறதே. அப்படியிருக்க, பலனு வரும்.

கலிமா என்று வாயிற் சொல்லிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அதைத் தன் சொந்நக் கைப்பொருளாக ஆக்கிக் கொள்ளவே, இச்சபை.

278

மனிதனுடைய தேக ஆலயதித்ற்குள் பிரயாணம் செய்வதே மெய்த் தொழுகை. அது நம்மால் முடியுமா என்று சொல்லுகிறவர்கள் சொல், தான் பிழைக்க வழியறியாது, பிறர் தமக்குப் புத்தி புகட்டும் சொல்லாயிருக்கிறது.

தன்னையறிவது உன் கடமை என, இறைவன் தலைமேல் எழுதிவிட்டான். ஆகவே, இவ் வுலக சம்பத்தோடு அந்த உலக சம்பத்தும் நும் அடையவேண்டும்.

279

மக்களாய்ப் பிறந்நோர் இன்னும் ஒரே படிதான் ஏறவேண்டும். அதற்குப் போக ஒரு வாசல் இருக்கிறது. அத் திருவாசலைக் காட்டவே நும் வந்நுள்ளோம். அன்புதான் அத்தென்பு வரச்செய்யும்..

280

மனிதவுரு இறைவன் திருக்கோலமே. ரகசியத்தில் அவனது உருவே. இவ் வுடம்பாலயத்துள்

அவனைத் தவிர வேறொன்றில்லை. அவனைச் சந்திப்பதே னம் முதல் வேலை. னும் சுமக்க முடியாததை இறைவன் னம்மேல் சுமத்த மாட்டான். அவனைச் சந்திக்காமல், பராக்காக இருந்நுவிட்டால், இறுதியில் னிச்சயம் கஷ்டமாய் முடியும். இறைவன் திருச்சன்னிதியடைய அவரவர் கையிலேயே அதற்கான முதல் இருக்கிறது. அது தான் இவனுடைய யதார்த்த மனம் என்னும் அன்பு கொண்ட வாசல். அவ் வாசல் அறுத்தடைத்த வாசல். அது முன் திறந்திருந்நு னும் பிறக்கும்போது அடைக்கப்பெற்றது. மற்ற வாய் முதலிய ஒன்பது வாசல்கள் மூடப்பட் டிருந்நவை, திறக்கப்பெற்றன. அந்ந அறுத்தடைத்த திருவாசலைத் தன் அஞ்ஞன சலாகையால் திறப்பவரே ஆசான்.

281

னுற்றக் கருவறையில் உன்னை வைத்திருந்து பெற்ற உன் தாய்க்கு உன்மேல் அன்பிருப்பின், கோடி சூரியப் பிரகாசமானதும், கஸ்தூரி களபம் என்றும் வீசுகிறதுமான ஒரு தெய்வக் கருவறையில், ஒரு க்ஷண னேரமாவது வைத்துப் பெற்றெடுத்த உன் ஆசானுகிய தெய்வ அன்னைக்கு உன்மேல் எவ்வளவு அன்பிருக்கும்?

282

படிப்பதாயின் எல்லா அங்கங்ஙளும் தோயப் படிக்க வேண்டும். வாயிற் சொல்லும் ராக ஞானம் செவி கேட்க வேண்டும். செவி கேட்ட பின்னரே மனம் அதைத் தெரிந்நுகொள்ளும். அதன் பிறகுதான் அறிவு உணரமுடியும். வாய் மூடிக்கொண்டு படிக்கிற பழக்

கம் – கிரகிக்கிற பழக்கம் இந்த மெய்ஞ்ஞானக் கல்விக்கு ஆகவே ஆகாது.

வேதத்திலிருக்கும் முத்துக்களை வரிசையாக எடுத்துவிட முடியாது. ஒரு முத்து இங்கிருக்கும்; மற்றொன்று இன்னொரு அலையிலிருக்கும்; மற்றொன்று எட்டமுடியாத ஆழத்தில் இருக்கும். இவ்வாறு பாரதூரமாகிய மறைப்பு ஒளிப்புக்களுக்கிடையில் சிதறியிருந்தவற்றைத் தருமமாக ஞானிகள் திரட்டிச் சேர்த்து, வேதாந்தமென்று ஓதிவைத்திருப்பார்கள். அதை வாய்விட்டுப் படிப்பதால், கருவிக் குலங்கள் ஒவ்வொன்றும் அதைப் பருகுகின்றன. அதில் சாந்தியாகிய ஒரு சலாமத் இருக்கிறது.

283

உன் தூலத்திற்கு எவ்வளவு வயது? நூறு வயது என்று சொல்லலாம். ஆனால், ரூஹு ரூஹானியாகிய ஜீவ தேகத்திற்கு வயது சொல்ல முடியுமா? அதன் வயது, வரம்பு காணாத நீளமுடையது. ஜீவன் இதைப் போன்ற பல தேகம் எடுத்துவிட்டது. ஜீவதேகம் எமனுக் கஞ்ஞாத தேகம். அதன் திடமும், உன்னதமும் யாராலும் அளவிட்டுச் சொல்லமுடியாத பெருமிதமுடையது. அது எதற்கும் அஞ்ஞாத வாளின் முனை போன்ற கூரானது; வாழைமரமென்றும் கல்லென்றும் பாராது பாயும் வன்மையுடையது. அப்பேர்க்கொத்த அந்த வயிரமணித் தேகமும் இத்தூலமும் ஒன்றென்றால் ஒன்றாகுமா?

284

ஜீவனை நீ சந்திக்காததால், அது உன்னைத் தூக்கிப்போட்டு மிதித்து எமன் கையில் கொடுத்து விட்டுப் போகத் தயாராயிருக்கிறது. நீ அந்த ஜீவனைத் தெரிந்து கொண்டால், அதன்மேல் ஏறிச் சவாரி ஆகி, மேலவனளுடாகிய, கயிலாயம், வைகுண்டம், மெகராஜ் என்ற அதிமகோன்னத எல்லைகளுக்கு நீ போய்வருவதற்கான வாகனமாக அது நிற்கிறது. அந்த னேரத்தில் அதற்குப் புராக், அன்னம், மயில் என்று வேதங்களில் பலவித நாமங்கள் சொல்லுவார்கள். ஒவ்வொரு எல்லையில் அதற்கு வேறு வேறு னடையிருக்கிறது. அந்தப் பிரயாணத்திற்கு அஜபை என்றும் உஜூது என்றும் பெயர்.

இத் தூலத்தைவிட்டுப் பிரம்மரந்திர னிலைக்கு மேற் சொன்ன வாசியாகிய குதிரையில் ஏறிச் சவாரியராகிப் போய்க்கொண்டிருக்கும்போது அவரைப் 'பிரம்மசாரி' என்று வேதம் கூறுகிறது - நாம் இதைப் பழகிச் சொல்லுகிறோம். னீயும் அதில் பழகவேண்டும் என்பதே எம் ஆசை. பிரம்மசாரி என்ற எல்லையில் பிரயாணம் செய்யத் தயாராயிருக்கும் அந்த னிலையில் செய்யும் வணக்கத்தையே,

"தலையு டன்உடல் கால்கரம் வேறதாய்
னிலைவ ணக்கப்பெ ருந்தவ மாமிது"

என்று எமது ஆதிமெய் உதய பூரண வேதாந்தத்தில் கூறி வைத்துள்ளோம்.

285

மக்களைப் பிரம்ம லயத்தில் ஏற்றி வைக்கின்ற சத்தியமேடை, எல்லாக் காலங்களிலும் இவ்வுலகிற்கு

இறக்கப்பெறும் என்பதை, ஞன்கு வேதங்களிலும் முத்திரிக்கப்பெற் றிருக்கிறது. அவ்வாறு இறக் கப்பெற்றுத் தன் தலையை ரக்ஷித்த அந்தப் பிரம்ம பீடத்தைத் தூஷிக்கிற சொல்லே ஒருவன் கேட்டுவிட்டு அதைக் கண்டித்து மாற்றும்படியானது ஒன்றும் செய் யாது இருந்து விட்டானுகில், அவன் எவ்வளவு பெரிய ஒலித்தனம் பெற்றிருந்தாலும்கூட அவன் தவமெல்லாம் பறிக்கப்பட்டுப் பிசாசு என்னும் ஞமம் கொடுத்து, அசுத்த மரணத்தில் ஆக்கப்படுவான். இதையே 'குரு கீதையும் சொல்லுகிறது: தூஷித்தவன் ஞவைச் சேதி; அது முடியாவிட்டால் அவனே ஆயுதங்கொண்டு மிரட்டு; அதுவும் இயலாவிட்டால் அவன் அவமானப் படும்படியாகவாவது பேசு; அவன் அரசனுயிருந்தால் அவ்வூரை விட்டு ஓடிவிடு. இவ்வாறு செய்யாவிட்டால் னன்னம்பிக்கையாகிய ஈமான், சிறிதும் இல்லாமல் பிடுங்கப்பட்டு னரகத்தில் எறியப்படுவாய். ஏனென் ருல் அந்தத் தூஷணே, மணம்முடிக்க இருக்கிற ஒரு கன்னிப்பெண் மீது பிறப்பிக்கும் அவதூறு சொல்போல் ஆகும். அவள்மேல் அந்த அவதூறு உண்டாக்க விட லாமா?

குரு பீடத்திலிருந்து பிறக்கும் சொல், மனிதனேத் தேவனுக்கும் சொல்லன்ருே? அதை அலட்சியமாக இழிவு படுத்திச் சொல்லுகிற சண்டாளன் வார்த்தை யைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கிறவனுக்குச் சைதன்யத்தைக் கொடுத்திருந்தாலும் அது பிடுங்கப் படும். ஒரு தெய்வக் குரு பீடத்தை மட்டமாகச் சொல் லுகிறவன், தானும் மெய்ப்பதத்தில் ஏருது, மற்றும் ஏறு கின்றவர்களேயும் ஏருது தடுக்கின்ற படியினுல், அவ்

வாறு சொன்னவனின் நாவைச் சேதித்தல் பாவம் அல்ல என்பது வேதத் தீர்ப்பு. அப்படிச் செய்யாமலிருக்கும் முகதாக்ஷண்யம் ஹம்மாரா, லவ்வாமா என்ற மாய்கையின் செயல்கள். நரகத்தில் தாழ்த்துகிற அவற்றின் மேல் நமக்கு ஜாக்கிரதை வேண்டும்.

286

அண்டம் அவனி அனைத்தும் அழிந்நாலும், மனிதன் அழியமுடியாது. அழியாத ஒரு வாழ்க்கையை நடத்த அவனிடத்தில் வைர மணித்தேகம் ஒன்று இருக்கிறது. அதற்கு ஹக்கீகத் முகம்மது என்று பெயர். அதை அடைந்நவர்களுக்கு நித்திய பேரின்பம் – அடையாதவர்களுக்கு நித்திய நரகம்.

வேம்பைக் கரும்பென்று சொல்லுகிற நாவுக்குக் கரும்பைக் கொடுத்தால் எப்படியிருக்கும்? கசக்கும். ஆகவே? கரும்பைக் கொடுப்பதற்கு முன் அந்ந நாவிலுள்ள பித்தத்தை முதலில் மாற்ற வேண்டும். அது ஒரு ஜீவ பண்டிதரால்தான் முடியும்.

அறுசுவை ஒளிக்கும் இடம் தெரியாவிட்டால், அதை அனுபவிப்பது எப்படி? அதை நீ விளங்கிக் கொள்ளும்படிப் பேசி, உன் உள்ளம் தித்திக்கச் செய்கின்ற வல்லவர்களே மெய்க்குருபிரான்.

287

ஓரறிவுள்ள ஒரு ஆலமரத்தின் வித்துக்குள்ளேயே மரம் வாது இலை முதலிய கோடானகோடியைத் திணித்து வைத்திருக்கிறான் என்றால், உனக்குள்ளே வைத்திருக்கும் பரம வித்துக்குள் அவன் எவ்வளவு கோடி கோடி கோடான கோடி நிரப்பி வைத்திருக்க

வேண்டும்? இந்நா இதை உங்கள் காது கேட்கச் சொல்லிவிட்டு ஹயாத்தாகத் தூலதேகத்தில் இருக்கிறோம். அந்த அகமிய வித்துக்குள் - தௌகீது என்னும் தெய்வீக வித்துக்குள், கோடான கோடியான வர்ணங்களும், நீ உகக்கும் பொருள்களும், வெறுக்கும் பொருள்களும், பலகோடி காரசாரங்களும் இன்னும் பாதாளங்கள் ஏழும், சுவர்க்க உலகு எட்டும், முன் சென்ற காலங்களும், நிகழ் காலங்களும், வருங் காலங்களும் இவ்வாறு அனைத்தும் நுணுகி நுணுகிச் சிறுத்து அதனுள் அடங்கிக் கிடக்கின்றன. அதை உன் கண்கொண்டு பார்க்க முடியாது. பார்த்தால் உன் கண் தெரித்துவிடும். அணு என்று சொன்னவுடன், தன் அறிவிற் சாய்ந்து, ''அது லேசாக நசுக்கப் படுவது'' என்று நீ எண்ணி விடுவாய் என்றே 'திடமுடனேர் அணுவி லணு'' வாய்த்திரண்டு கிடக்குது என்றும் கூறிவைத்துள்ளோம். கிரீடாதிபதிகளுக்கெல்லாம் கிரீடாதிபதியின் சிம்மாசனக் கொலு, அந்தப் பரம அணுவாசனத்தில்தான் இருக்கிறது. அந்தப் பிரம்ம வித்தின் உள்ளமைப் பெட்டகத்தைத் திறந்து காட்ட வல்லவர்கள்தான் கலீபாக்கள், மெய்ஞ்ஞானச் செம்மல்கள்.

288

இரண்டு ஸ்படிக டம்ளர்கள் இருக்கின்றன. அவற்றின் அழகு எவ்வித வர்ணங்களையும் கடந்து நிற்கும் அழகு. அதன் அழகைக் கேட்கின்ற காதும் மணக்கும். அவற்றில் நிறைய ஸ்படிகம் போன்ற தண்ணீர் இருக்கிறது. அந் நீரில் ஓர் ஊசி நுனியளவு

எடுத்து விசினல், உலக முழுவதும் மணக்கும். அதில் ஓரணுவில் அணுவின் மதிப்புக்கு மூன்று உலகங்களும் நிகராகா. அந்த டம்ளருக்குள்ளே பார்த்தால், ஓர் எள்ளுமுனை போன்ற துண்டு, பிரகாசத்தோடு கிடக்கிறது. அதன் பிரபையைப் பார்த்தால், மின்னல் கிரணங்கள், சந்திர சூரியர்கள் எல்லாம் மாசுடையன என்று சொல்லுவாய். அவைகள் எல்லாம் அந்நப் பிரகாச அணுவைக் கண்டு, 'ராஜாவே' என்று புகழ்கின்றன. அதைப் பார்க்கப் பார்க்க, எம் கண் அதன் பிரபைக்குள் போய் மாட்டிக்கொண்டது; இழுக்கவும் முடியவில்லை. எமது மயிர்க்கால்களெல்லாம் அதன் இன்பம் மேய்ந்து கிடக்கிறது. இந்நப் போராட்டத்திற்குள் ளும் சதா இருக்கிறோம். உனது நினைவு என்றைக்கு அசைவற்ற நிலைக்கு வருகிறதோ அன்று சாக்கிரதையாக இருந்து அந்த இன்பக் கடலுக்குள் உன்னையும் இழுத்துவிடக் காத்திருக்கிறோம்.

289

மெய்வழிக் குபேர லக்ஷிய உச்சம்

இவ் விரிபுவன மண் பரப்பில் மனுமுளை துவங்கிய கால வரம்பிலிருந்து அவதரித்தருளிய மெய்ஞ்ஞான வாச மத நீதநெறிக் கர்த்தர்களின் உள்ளகச் சமரச ஜீவ ஆதிமூலாதார ஏகநயகச் சத்திய திடக்கொள்கையானது – இப்போது அனேகமாய் மக்கள் கையில் இல்லாது மங்கி – பலனற்ற பொதுச் சம்பிரதாயப் பேச்சாகவும் நிரூபிக்க முடியாத வெளிவேடிக்கை அற்பத்தன அற்புத காரணங்களாகவும் போய்விட்டது என – இங்கே எங்கள் மெய்வழிச் சபையிலுள்ள 67 சாதிக

ளுக்கிடையில், 72 வருடகால அனுபவத்தில் தெற்றெனப் புலனுகிவிட்டது. அப்படி மங்கிப் போயிருந்த இதயப்பிரகாச ஜீவாதிக்க ஏகனுயகக் கொள்கையினை - எல்லா வேத சாட்சியாக மக்கள் உள்ளம் னிச்சயத்தில் ஊன்றித் தித்திக்க, னேர் முகமுகத் தோற்றத்தில் வைத்துப் பெருக்கமாக னடாத்தி யாக்கியும் னடாத்திக்கொண்டும் இத் தேவ மெய்வழிச்சபை பூமியடங்கலும் உய்யட்டுமெனவே விளங்கி வருகிறது.

இது காலம் சர்வமத வேத சிகரங்களாகிய பிரணவம், பஞ்ஞாக்ஷரம், சடாக்ஷரம், அஷ்டாக்ஷரம், காயத்திரி, கலிமா முதலிய உயிர்த்தோற்றத்தில் னிலவும் மூல மந்திரங்கள் எல்லாம் - எழுத்தளவில் னின்று அவரவர்களும் தாங்கள் கற்றுள்ள னூலறிவுக்குத் தோன்றியபடி அர்த்தம் பண்ணும் வெறுஞ்சொற்களாய் - ஜீவனுக்கோர் சம்பந்தமும் இல்லாமல் பெரும்பாலும் போய் விட்டபடியால் - அம் மூலமந்திரங்களை - மனித தூலத்தை னடமாட வைக்கும் ஜீவ சுத்தாவியின் ஆத்ம வடிவினுக்குள் அண்டாண்டங்களும் னிறைந்த பொருளாக மகா வலிமை பிறங்க உறுதியுடன் னின்று விளங்கச் செய்வதாகிய - இம் மெய்யான பிரயோசனத்தைத் தெள்ளத் தெளியத் தந்து செயலாற்றி வருவது இம் மெய்வழிச் சபை.

இங்குள்ள அனந்தரும் மேற்கூறிய செயலினைக் கைப்பற்றிய அனுபவத்தில் - முன்னிருந்த தம் தம் மதங்களுக்கு ஒக்க - இது எங்களுடையது எங்களுடையது என்று திரிகரண சுத்தியாய் ஏகோபித்து ஒரே குலமாக எக்களிப்புடன் வாழ்ந்து வருகின்றதும், கடல்

சூழ்ந்த மண்பரப்பில் எங்கும் காண முடியாததுமான இந்தப் பழம்புராதனப் புதிய அதிசயத்தை - கனங் கொண்ட எதார்த்த மனத்தினர் நின்று கவனிக்கு மிடத்து - இவ்வுலகு முழுதினையும் இதே மாதிரி ஒருகுல மக்களாக ஆக்கமுடியும் என்பதற்கு, முழுத்திறலுற்ற செயற் சாக்ஷியச் சபை இப் புவனத்திற்கே இது ஒன்று தான் என்பது நிச்சயமாக அவர்கள் உள்ளத்திலே வந்து தங்கும்.

ஊன உடற்பிறப்பில் இருந்த எங்களெல்லோ ரையும் ஜீவசிம்மாசனப் பரிசுத்த ரூஹானியாகிய சூக் கும உடம்புப் பிறப்பாளர்களாக ஆக்கித் தெய்வலோகப் போக்கு வரத்தினையுடைய உள்ளமை வல்லபச் செயற் பிரசன்னர்களாகச் செய்துவைத்துள்ள செயலாதிக்கக் குல குருவாக விளங்கும் எங்கள் மெய்யான தேவகுரு கோமானை - எல்லோருக்கும் தெள்ளிய பேரறிவு ஞானத்தை அளந்துகொண் டிருக்கும் கஜானுவினை யுடைய கர்த்தரை - அவர்கள் ஒவ்வொரு நேரங்களி லும் ஏறி நின்று நெடுக நடாத்திவரும் நிச்சய நிஜச் செயலினை வைத்து - எங்களிலுள்ள அனந்த ரும் தங்கள் தங்களின் நெடுங் காலக் கைவச அனுபவ அறிவுகொண்டு கூர்ந்து பார்க்க - ஆங்காங்கு பலவாம் பாஷைகளில் தோன்றிய மெய் யெழிலோங்கும் வேதா கமக் கலைகள் பலவும், செயலடையாளங்களை வைத்துக் குறிப்பிட்டுக் கூறும் சோராத சாக்ஷிய நிரூபணையால்- ஓர்கால் கல்க்கி என்றும், மற்றோர்கால் மெஸ்ஸயா என் றும், இவ்வாறே மைத்திரேய புத்த ரென்றும், மனுமக னென்றும், யுகனாத ரென்றும், மகதி யென்றும், ஆண்

டவ ரென்றும், சாலே ஆண்டவர்களென்றும், சமரச வேத ஞைரென்றும், சாதிகளின்மேல் அரசாளுகிறவ ரென்றும், பெரியதாய் என்றும், தேவ குரு மூர்த்த சமூகத் தாய் என்றும் போற்றி ஞளும் மெய் சிலிர்க்கக் கண்களில் னீர் உகுத்து னிற்கின்றனர்.

இவ்வண்ணமான அனுபவச் சீரேற்றம் தந்நருளி னிற்கின்ற சர்வமூலமந்நிர னேர்முகனிரூபிக மகான்மிய ராகிய எங்கள் யுகவான் சாலே ஆண்டவரவர்கள் னெடுகச் செய்து வரும் சோங்கடர்ந்த அரியபெரிய செயல் அனந்நங்களில் ஒன்றையாவது எடுத்துச் சுருக்கி யுரைக்கும் இதிற் கூறுங்கால் - மனிதர்கள் - தங்கள் எப்பெரு முயற்சி னூலறிவு அனுஷ்டான வழிபாட்டிலேனும் எட்டினின்று தடுக்க முடியாததும் - மரண தருவாயில் இவன் பாவியென்று காட்ட இருக்கும் அடையாளமுமாகிய அடிக்கழுவுதலென்னும் ஸ்கலித அசுத்த பவ இழுக்கானது - அம்மரண தருவாயில் இல்லாமலே போயிப் பரிசுத்த புண்ணிய தவ சிரேஷ்டர்களாக இருக்கின்றதைப் பலருக்கு இங்கே னிகழக் கண்டாகியும் காண வைக்கவும் னடத்தி வருகின்ற இதாகிறது, சாமுனம் செத்துப்பழகும் சன்மார்க்கமாகிய உறுதியான எதார்த்த னீதியாகும்.

இதனே, இன் னெறிவழியே னல்ல செவித்துனே படைத்து உணரக் கிடக்கும் மக்கள் னின்று ஞேக்குமிடத்து - எல்லா மதங்களுக்கும் குருமூல மூர்த்தமாக விளங்குகிற எங்கள் பிரானவர்கள் - னம்மைப்போல தூல உடம்பானது ஒரு முஸ்லீம் குலத்திலெடுத்து அவதரித்தார்கள் என்பதற்காக - முன்னுண்டாவாகிய

வேதங்களின் மெய்ச்செயல் அனைத்தையும் ஒப்புக் கொண்டு இது காலம் வந்து னிலைனிறுத்தி னடாத்தி வரும் இவர்களை - முஸ்லீம்கள் தங்களுக்கு மட்டும் உரிய ஒரு வழிகாட்டிய ரென்றோ - அது போன்றே சைவர்கள், வைணவர்கள், பிராம்மணர்கள், கிறிஸ்தவர் கள், ஜைனர்கள், புத்தர்கள், மற்றுள்ள எவர்களும் அவரவர்களினுடைய மதத்திற்கு எட்டி யேறி வந்து அம் மதங்களின் உச்ச னிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் மாருத உயிருடம்பின் உடந்தை அன்புக் குறிப்பினுக்காக - தங்கள் தங்கள் மதத்திற்கு மட்டுமே உரிய ஒரு குருமூர்த்தம் என்றோ கருதுவதில் பிரயோசன மில்லை என்பதை - கலியுக வருடம் 5074 - ம், தேவ கோமான் கிறிஸ்து பிரானவர்களின் காலம் 1972 - ம், ஹிஜிரி 1392 - ம் ஆகிவிட்டதோடு இதோ சாதி சாதிக்குத் தீமை பரவி வருகிறதே யென்று னுங்கள் மெய்யாக மெய்யாகவே கூறுகின்றோம்.

எனவே எம் மதங்களுக்கும் அதிமேத பதியாகிய எங்கள் குருபிரானவர்களை - ஒரு மதத்தினர்க்கு மட்டுமே உரியவர்களென்று ஒட்டுவைப்பதானது அறியாமை யென்பது இதனால் எவரறிவுக்கும் புலனுகாமற் போகாது. ஆகலான் எங்கள் மெய்ச்செயல் வினை வேற்று குருமகான்மியரவர்கள் எல்லா மதங்களினு டைய மூலாதார ஜீவ வாழ்வினை அவரவர்க்குத் தக்கபடித் தந்நாண்டுகொண்டி ருக்கும் தெய்வத் தனித்தலைமைப் பிரான் என வேதசுருதிகளும் னுங்களும் திட்டவட்ட மாகக் கண்டறிந்து னின்று கூறுவதை இவ் வையகம் அறிக.

இன்னும் அந்நந்நக் காலங்களில் தோன்றியருளிய மதஸ்தாபகர்களால் காரணார்த்தமாக எடுத்து வைக்கப்பெற்ற வெளிமுக அனுஷ்டானங்களைப் போலவே – சம்மத மனத்தவர் அவரவர்க்கும் உள்ளகப் பூப்புப் பிரத்தியக்ஷப்பலன் தடையற னின்றளிக்கும் இங்கே - இது காலத்தில் – மெய்வழியிலுள்ள 67 சாதிகள் சூழ்ந்த இப்பெரிய குழாத்தினுக்குத் தூல சுத்தி வெளிமுக அனுஷ்டானங்களும் வேணுமேயென்று– அதற்காக ஒருமுகமான புதிய அனுஷ்டானங்கள் எடுத்து வைக்கப்பெற்று விளங்கி வருகின்றன என்பதையும் உணர்வதோடு, னூலறிவுகொண்ட அபிப்பிராயனர் னெடுகப் பரத்தி விட்டிருக்கும் எழுத்து இது அல்லவென்றும் - னிரூபணைச் செயலறிவு கொண்ட ஜீவனுள்ள தேவ தீர்ப்பு வசனம் இது ஆம் என்றும் காணுவோர் அனைவர்களும் காண்பார்களாக.

290

இராஜகெம்பீரப் பிரசங்கம்

(இராஜகெம்பீரனிலுள்ள மெய்வழி ஆஸ்ரமத்தில் ஆண்டவரவர்கள் அருளிச்செய்தது)

தூரத்திலிருந்தும் பக்கத்திலிருந்தும் வந்திருக்கிறவர்களே கேளுங்கள். இன்னெடுங்காலமாக ளும் பேசி வந்தோம். இப்பவும் பேசுகிறோம். நீங்கள் எல்லோரும் நன்றாய்ப் பகுத்து சிரத்தையுடன் நன்மை தீமைக் கிடையிலுள்ள தாரதன்மைகளை வேணுமென்று கூர்ந்து கேட்பீர்களென்று நம்பி உங்கள் மீது ஆசையுற்றுப் பேசுகிறோம்; கேளுங்கள். இப் பெரும் பூமியினிடத்தில் இந்த மனு வடிவத்தை இறைவன் படைத்தான் அல்லவா? ஆம். எந்த ஒரு ஜீவராசியாவது இந்த மனுவுக்குச் சமத்துவமாயிருக்கிறதா என்று பாருங்கள். இல்லை. யானை முதல் எறும்பு கடை எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசிகளிலும் மனுவுக்குச் சமத்துவமானது ஏதாவது இருக்கிறதா? இல்லவே இல்லை. அந்தச் சாதிகளை எல்லாம் ஒரு மனு ஆள்வான் அல்லவா? ஆம். அவைகள் அத்தனையும் சேர்ந்து, அவைகளின் அறிவைக்கொண்டு, ஒன்றும் தெரியாதவன், மகா மட்டமானவன் என்று எல்லோரும் நினைப்பார்களே - அந்த ஒரு மனுவைக்கூட - ஆள முடியுமா? முடியாது. ஆகவே, அப்பேர்க்கொத்த தரத்திலே இறைவன் மனுவைப் படைத்துள்ளான் என்று தெரிகிறதல்லவா? ஆம்.

சந்திர சூரியாள், தாரகா கணங்களிலிருந்து எல்லாப் படைப்பினங்களையும் எடுத்துக்கொள்வோம். அவைகளில் ஒன்றுக்காவது தான் நெடுங்காலம் இருக்கவேண்டும் என்ற நினைப்பு வருவதுண்டா? இல்லை. ஆனல், இந்த மனு - இருப்பது கொஞ்ஞனுள யிருந்நாலும், திடுதிப்பு என்று எல்லாவற்றையும் போட்டுவிட்டுப் போகிறவனுக இருந்நாலும், பன்னெடுங்காலம் இருக்கிற நினைப்போடு பாடுபாடுகிருன். இந்நப் பூமியில் தன் பெயர் ஆயிரம் பதினுயிரம் வருஷங்களுக்கு இருக்கவேண்டும் என்று பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுகிருனே - இந்த நினைப்பு இவனுக்கு எப்படி வந்நது? முடிவில்லாத நெடுங்காலம் வாழ இவனுக்குள்ளே நித்திய தூலம் ஒன்றை வைத்து இறைவன் படைத்திருப்பதினுலேதான் - இவனுக்கு இந்த நினைப்பு வருகிறது. மனுவாகிய நீ - நித்தியனே நித்தியன். நீ சாகப் பிறந்தவனல்ல. மற்றப் படைப்புக்கள் அனைத்தும் உனக்கு அடிமையே. இதை நிருபிக்கவே நும் வந்திருக்கிருேம்.

இன்னென்று சொல்லுகிருேம் – நீயே நினைத்துப் பார். பூலோகம், பாதாளம் முதலிய சர்வ உலகங்களையும், சந்திர சூரியாள் தாரகா கணங்கள் முதலிய அத்தனை பொருள்களையும், மனுவுக்கு ஊழியம் செய்யவே இறைவன் படைத்தான். கணக்கிட்டுப் பார்த்தால் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் இவனுக்கென்றே படைத்திருக்கின்ருன். இதை நும் பேசினேம், பேசினதை நும் நிருபிப்போம். ஆனல், அவற்றின் விளத்தையும் பெருமிதத்தையும் கேட்பதற்கு உனக்கு வயதும் இருக்காது, காதும் கொள்ளாது.

இந்த மனுவுக்கென்றே ஆயிரத்தெட்டு அண்டங்களையும் இறைவன் படைத்தான் என்றால், மனுவானவனை எந்த உயர்வுக்கென்று அவன் எண்ணிப் படைத்திருப்பான்? சர்வேஸ்வரனாகிய இறைவன் மனுவின் பேரில் என்ன பிரீதியனாக இருக்கிறான் என்று எண்ணிப் பார். மேலும், இத்தனை கோடி கோகுலங்களில் அவன் எதில் குடியிருப்பான்? 'மனுவின் தூலம் என்ற மாளிகையில்தான் நான் குடியேறியிருக்கிறேன்' என்று இறைவன் சொல்லுகிறான். இதை நிரூபிக்கவேணும் வந்திருக்கிறோம். ஆயிர ஆயிரக்கணக்கான மக்களுக்கு அப்படியே நிரூபித்தும் ஆக்கியும் இருக்கிறோம்.

'மனுவைத் தவிர வேறு எதிலும் நான் குடியிருக்கிறது இல்லை'—மனுவைத் தவிர—என்று இறைவன் சொல்லிவிட்டான். ஆனால், மனுவாகிய இவன் நினைக்கிறது எப்படி? இறைவனே! ரகுமானே! கடவுளே! ஆண்டவனே! என்று நினைத்தவுடன் விண்ணகத்திற்குப் போய்விடுகிறான். குபீல் என்று இவன் நினைப்பு—தன்னை விட்டு மேலே ஆகாயத்திற்குப் போகிறது. இவனுடைய மாய்கை—ஆவல் எவ்வளவு நிறைந்து செறிந்து இருந்தால், அது, இவன் நினைப்பை உள்ளே தங்க வைக்காதபடி வெளியே தள்ள வேண்டும்! தனது தகத்தாகிய மாளிகையை இறைவன் இவனிடத்தில் வைத்தான். ஆனால், இவன் நினைப்பு அல்பத்தில் இருப்பதால், அது இவனை அங்கு போகவிடாதபடி வெளியேதள்ளுது. இறைவன் எங்கும் இருக்கிறான் என்று சொல்லுகிறார்களே — எங்கே இருப்பான் என்று யாராவது யாரையாவது கேட்டுத் தெரிந்ததுண்டா? நினைத்துப் பாருங்கள். இதுவரைக்கும் அப்படிக் கேட்டுத்

தெரிந்து கொண்டவன் யாராவது ஒருவன் இருக்கிறுனு? இல்லே. கடவுளே! என்றதும் – குபீல் என்று எல்லோருடைய னினைப்பும் மேலேதான் போகிறது. இறைவன், சர்வக்ஞன் என்று சொன்னதுமே, உன் னினைப்பு அப்படிப் போகிறதே – இதை யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தது? ஒருவரும்இல்லே. தன்னே அறியாத அவலர்களாகிய குருக்கள்மார்கள், பிரசங்கிகள், கதாகாலட்சேபம் செய்பவர்கள், ஆகாயத்தை அண்ணுந்து பார்த்துக் கையை னீட்டி, கடவுளே! பராபரா! ஈஸ்வரா! அல்லாவே! ரகுமானே! என்று சொன்னுர்கள். அதைக் கண்ட இவன், 'அஃஆங்' அங்கேதான் கடவுள் இருக்கிருர் என்று னினைத்துக்கொண்டான். இப்படி இந்த னினைவிலேயே எல்லோரும் அவலமாக ஓடுகிருர்களே தவிர, னம்மில் யாரும் யாரையும் கேட்டுத் தெளிந்து கொள்ள வில்லே. உலகத்தி லிருக்கிற அவ்வளவு பேரும் னம் அண்ணன் தம்பிகள் தானே. வேருகவா இருக்கிருர்கள்? னும் தின்கிற உப்புதானே அவர்களும் தின்கிருர்கள்? உப்பு அவர்களுக்குப் புளிக்குமா? இல்லே. புளிப்பு அவர்களுக்குக் கசக்குமா? இல்லே. ஆகவே, இதே போலத்தான் இறைவன் என்றதும் ஆகாயத்தை னேக்கிப் பார்க்கும் னினைவு, எல்லோரிடத்திலும் போய்ப் படிந்துவிட்டது.

மனுவுக்காகவே இறைவன் ஆயிரத்தெட்டு அண்டங்களேயும் படைத்தான். இவனிடத்தில் னுக்கை வைத்துப் படைத்து விட்டோமே – அதில் இனிப்பு புளிப்பு கைப்பு கார்ப்பு உவர்ப்பு துவர்ப்பு என்ற அறுசுவையை வைத்துப் படைத்துவிட்டோமே என்று – சுவைக்கு என்று ஒரு அண்டத்தையே படைத்தான்.

ஒரு னுக்குக்கு மட்டும் - பூரா உடலுக்கும் அல்ல - ஒரு அண்டத்தைப் படைத்தது. அறுசுவையில் இனிப்பு என்ருல் எத்தனை ரகம்? கரும்பிலே இனிப்பு, பழத்திலே இனிப்பு, தேனிலே இனிப்பு, பூவிலே இனிப்பு, புல் பூடுகளிலே இனிப்பு, இப்படி இனிப்பில் எத்தனை வகை! புளிப்பில் எத்தனை ரகம்! கைப்பில் எத்தனை வகை! இப்படியே ஒவ்வொரு சுவையிலும் எத்தனை வகை! இதில் ஒரு திவலையாவது மிருகங்கள் முதலிய மற்ற படைப்பினங்கள் அறியுமா? அறியாது. மனு ஒருவன் தான் அறிவான். இப்படி, இவன் னுவு ஒன்றைக் குறி வைத்து இறைவன் ஒரு அண்டத்தையே படைத்திருக்கிருன் என்ருல், இந்த மனுவின் பேரில் அவன் எவ்வளவு பெருக்கமான அன்பும் பிரீதியும் உடையவனுக இருப்பான் என்று எண்ணிப் பாருங்கள். னும் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். பின்னுலே வேருென்றைக் கொண்டுவந்து விடப்போகிருேம். அதுதான் பிரயோஜனமானது - முக்கியமானது.

மனுவின்பேரில் இறைவன் வைத்திருக்கும் அன்பிற்கு இணையாகத் தாய் தந்தை அன்பைச் சொல்லலாமா? சொல்ல முடியாது. தாய் தகப்பன் னம்மிடம் வைக்கும் அன்பைவிட னம்மேல் இறைவன் வைத்திருக்கும் அன்பு எண்ணமுடியாத கோடி கோடி மடங்கு மேலானது என்று தெரிகிறதல்லவா? ஆம். இறைவன் னம்மை இப்படிப் படைத்திருக்க, திடுதிப்பென்று இடையில் துர்மரணமாகிய அபாய அவஸ்தைக்குப் போகலாமா என்று எண்ணிப்பார். னும் உபயோகித்து விட்டுக் கழிச்சுப் போடுகிருேமே, அந்தக் கழிவுப் பொருள்களையே யானை முதல் எறும்பு

கடை எண்பத்துனன்கு னூருயிரம் ஜீவகோடிகளும் உபயோகப்படுத்துகின்றன என்ருல், மனிதன் என்ன உயர்வுடையவன்! முன்னே, ஒரு உன்னதம் என்று னிகேத்தோம் – இப்போது இன்னும் எத்தனே அடுக்கு அடுக்கான உன்னதத்தை உடையவன் மனு – என்று தெரிகிறது! ஆகவே, மனுவைவிட இறைவனுக்கு னேசமான னெருக்கமான பொருள் வேறு எதுவும் இல்லே. இதைக் குறிவைத்தே மனுவுக்கு – மனுஃசன் – என்று பெயர் வந்நது.

பொசுக்கென்று இப்போது ஒரு னிணேப்பு வருகிறது – சொல்லட்டுமா? மனு இப்பேர்க்கொத்த உன்னதமானவன் என்பது சரி. ஆனல், ஒரு பன்றி செத்தால் மனிதன் அதன் கறியை வாங்கக் காசு எடுத்துக் கொண்டு ஓடுகிருன். அப்ப அதற்கு என்ன மதிப்பு! இன்னும் அதைக் கேட்கிறபோது அது சொல்லுது, ''அடே என் கறியை மட்டுமா என் மசிரைக்கூடக் காசுக்கு வாங்குவார்கள்'' என்று சொல்லுகிறது. எது அப்படிச் சொல்லுது? னும் போட்டோமே கழிவுப் பொருள் – அதைத்தின்று பிழைக்கிற பன்றி. அதன் பெயரைச் சொல்லக்கூட மனிதன் அசிங்கப்படுவான் அல்லவா? அது அப்படிச் சொல்லுகிறது. அது சொல்வது னியாயந்நான். தப்பு என்று சொல்ல முடியுமா? முடியாது. ஆனல் மனிதன் அதைப்போல் செத்தால் – 'சீ சீ வெளியே தூக்குங்கள் – தீட்டு' என்கிருர்கள். மேற்கொண்டு அந்நப் பன்றி சொல்லுது – ''ஆ – அவன் எங்கே என் மாதிரி செத்தான்? அவன் செத்

தால் ஓடிப்போய்க் குளிக்க வேண்டுமே - அவ்வளவு னரகலான அசூசியாக அல்லவா சாகிறான்? அந்த னரகனையும் பேயாய்ப்போகிற அவனையும் - என்னையும் ஒன்றாக வைத்துச் சொல்லலாமா?'' என்று கேட்கிறது-னியாயத்தை வைத்துப் பேசுகிறது. மனிதன் செத்துத் தூக்கிக்கொண்டு போனதுமே, சாணியைக் கரைத்துச் சட்டியிலே வைக்கவும் - அதிலே விளக்குமாத்தைப் போடவும் - ''திரும்பி னீ இங்கு வந்து விடாதே - நாங்கள் னன்றா யிருக்க வேண்டும்'' என்று சொல்லிப் பொரியை னெடுக இறைக்கவும் - இப்படி மரியாதை னடக்கிறதே. இன்னும், 'சண்டாளா! இங்கு வந்து னுழைந்துவிடாதே' என்று கிருத்தியங்களும், மந்திரங்களும், செய்யப்படுதே. முதல் னாள், மூன்றாம் னாள், ஏழாம் னாள், பத்தாம் னாள், னாற்பதாம் னாள், அப்புறம் மாதா மாதம், வருஷா வருஷம் கிரியைகள் செய்யப்படுதே. ஆனால், மற்ற ஜீவராசிகள் செத்தால், அடுத்த னாள் னினைக்கிறதுண்டா? இல்லை. உயர்ந்த ஒரு யானை, குதிரை அல்லது மாடு வளர்க்கிறோம் - அது செத்தால் அப்புறம் னினைக்கிறதுண்டா? அல்லது அதை வெறுக்கிறதுண்டா? இல்லை. அது செத்தே போய் விட்டது. அப்புறம் அது இல்லை. ஆனால், மனிதனே இருந்து அவஸ்தைப் படுகிறதாகத் தெரிகிறது.

இவன் செத்தால், திரும்பி உள்ளே வரக்கூடாது என்ற ஒரு னினைப்பு வருகிறதே - அது ஏன்? னாம் முன்னே சொன்னோமே, அவ்வளவு உன்னதமாய்ப் படைக்கப்பட்டவன், இந்தக் கதியாய்ப் போவதற்குக் காரணம் என்ன என்று யோசிப்பதில்லை. இவன் செத்தால் குளிப்பாட்ட வேண்டும் - கையிலே தொட்டால்

குளிக்க வேண்டும் - பலனூறு மைல்களுக்கு அப்பால் இருந்நாலும், செத்தான் என்று கேட்டதும் உடனே ஸ்னனம் பண்ண வேண்டும் என்ருல் - இவன் அவ்வளவு அசுத்தமாகவும் னரகலாகவும் போய்விட்டான் என்ருகிறதல்லவா? செத்ததும் அவன் அவயவம் எல்லாம் அப்படியே இருக்கிறது. ஆனல் அவன் மொகரையைப்பார் - எவ்வளவு பயங்கர அவலக்ஷணமாயிருக்கிறது. அது மட்டுமா? அவனைச் சுட்ட இடத்திற்குக்கூடப் போகப் பயப்படுகிருர்கள். புலியானது காலமெல்லாம் னமக்கு னேசமல்ல - பகை. அப்படியே, பாம்பானது னமக்கு னேசமல்ல - விரோதமாகவே இருந்நது. ஆனல், அவை செத்தால் னம் பிள்ளை குட்டிகள் பயமில்லாமல் அவைகளின் பக்கத்தில் போகிருர்கள் - பயப்படுவதில்லை. ஆனல் மனிதனை, சுட்டு எரித்தால் கூட, காலமெல்லாம் இவனோடு னேசமாக இருந்ந பெண்டு பிள்ளை, தாய் முதற்கொண்டு அத்தனைபேரும் பக்கத்தில் போவதற்குப் பயப்படுகிருர்கள். இதுதான் இவன் போய் அடைகிற உன்னதமா? இறைவன் அவ்வளவு அன்புப்பெருக்கோடு படைத்தது - இந்ந லக்ஷணத்திற்காகத் தானு?

மனிதன் மகா மேன்மையாகப் படைக்கப்பட்டவன் என்று முன்னே சொன்னபோது கேட்டுக்கொண்டாய். இப்போது பன்றியிலும் கேவலமாகப் போகிருன் என்பதையும் 'ஆமாம்' என்று கேட்டுக்கொண்டாய். ஏனென்ருல், அதுவும் உள்ளதுதான். இதுவும் உள்ளதுதான். என் சகோதர மனுவே! உன் கதி இப்படியா இருக்கணும்!

மனிதன் செத்தால் ஒரு பிணவாடை என்ற அழல் றாற்றம் அடிக்கிறதே - அது எதனல் உண்டாகிறது? எந்த ஒரு ஜந்துவுக்கும் இல்லாத இந்த றாற்றம் எங்கிருந்து வந்தது? இந்தக் கதியாய்ப் போவதற்காகவா, மனிதனை இவ்வளவு உன்னதமாய்ப் படைத்திருப்பான்? இல்லை - வெகு காலம் இருக்க - சம்பாதிக்க - கீர்த்தி தேட - நீளமான ஆசையை இவனிடத்தில் வைத்துப் படைத்தது - இவன் மானெடுங்காலம் நித்தியத்தில் இருக்கத்தான். இவன் எந்த உன்னத வேலைக் குரியவன் என்று அதை வைத்தாவது தெரிந்துகொள்ள வேண்டாமா? இவனுக்கு உற்ருர் உறவினர் எத்தனை பேர் இருந்தாலும் ஆவது என்ன? இந்த அவலக்ஷணத்திற்குப் போய்விடுகிருனே! இப்போது இந்த நினைப்பை உனக்குக் கொண்டுவர, இன்னெடிய பூமியில் எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. இந்த அதோகதியை நினைக்காதபடி மறதிக்குக் கொண்டு வந்தவர்கள், தன்னை அறியாத பொய்க் குருமார்களே.

இவன் நினைக்கிற அளவா மனிதன் வயது? இதற்காகவா இத்தனை கோகுலங்களைப் படைத்தது - அவற்றை அறிந்து ஆளுகின்ற அறிவுமாணிக்கத்தையும் வைத்து இவனைப் படைத்தது? இவ்வளவு சுருக்கமாக வாழ்ந்துவிட்டு - இவ்வளவு அருசியோடு சாகிறதற்காகவா, இடையில் அழிந்து போகிற இந்த அற்ப வாழ்விற்காகவா இறைவன் மனுவைப் படைத்திருப்பான்? அறிவு அழிகிற பொருளா? இல்லையே. ஆனல், இவன் அழிந்து போகிருனே? இதற்குப் பதில் உனக்குச் சொல்லத் தெரியாது - நாம் சொல்லுகிறோம் கேள். எம்முடைய

பழக்கம், எம்முடைய பேச்சு அது. உன்னுடைய இந்த அல்ப்ப அழிதூலத்தைக் கருதி இறைவன் உன்னையும், உனக்காக இவ்வளவு கோடாகோடியான பொருள்களையும் படைக்கவில்லை. பின்னே என்ன? உனக்குச் சொந்தமாகத் தனித்து இறைவனால் கொடுக்கப்பெற்ற நித்திய தூலம் ஒன்று உனக்குள் இருக்கிறது. அதைக் கருதியே இறைவன் இவ்வளவையும் தந்தது. கோடி சூரியப் பிரகாசமான அந்தத் தூலத்தைப் பார்த்தால், உன்னுடைய கண்ணை அது பிடுங்கி எறிந்துவிடும். அதன் வாசனையை உனக்கு நீட்டினால் உன் மூக்கைப் பிளந்தெறிந்துவிடும் — அப்பேர்க்கொத்த தூலம் அது. அதில் குடி புகவே உன்னைப் படைத்தது.

உலகத்தில் உள்ள வாசனை எல்லாம் நகல். இதற்கெல்லாம் அசல் இருக்கிறது. அதற்கான தூலம் ஒன்று உன்னுக்குள் இருக்கிறது. எக்கோடி காலத்தும் பிணிமூப்பு அணுகாத தூலம் அது. அந்தத் தூலத்தைக் கைப்பற்றி வாழ்வதற்காகவேதான், இவ்வளவு பெரிய உலகத்தையும், அதில் உள்ள வஸ்துக்கள் அவ்வளவையும், எல்லாவற்றையும் உணரும்படியான அறிவு மாணிக்கத்தையும் கொடுத்தான். ஆனால் நீ - அதை விட்டுப்போட்டு என்ன தேடுகிறாய் என்றால் — பயம், சீக்கு, லோபம், கோபம், இவைகளையே தேடி — இவைகளிலேயே சிக்கிக்கொள்ளுகிறாய். இதற்குத் தண்டனையாக வருகிற முதல் அறிகுறியே அந்த அழல் நாற்றம். ஜகன்னமாகிய ரௌரவாதி கொடூர நரகத்திற்குச் சொந்தக்காரன் ஆகிவிட்டான் இவன் என்று காட்டுகிற முதல் அடையாளமே அது. இந்த

அதோகதியைப் பற்றி எச்சரிக்கவே வேதம் வந்தது. மேலும், அதே மெய்யானது இப்போது ஞானமெடுத்து வந்து கூவிக்கொண்டிருக்கிறது.

மனு, தனித்த ஒரு வேலைக்காகவே வந்நான். பணக்காரனாகவோ, அழகு உடையவனாகவோ, மகாபலம் உடையவனாகவோ ஆவதற்காக இறைவன் இவனைப் படைக்கவில்லை. பிறகு இவனை எதற்காகப் படைத்தான்? ஒரு அழியாத நித்திய ஞானத்தை உன்னுக்குள் வைத்துப் படைத்திருக்கிறானே — இதைப் பெறுவதற்காகவே உன்னைப் படைத்தான். அந்த ஒரே வேலைக்குத்தான் உன்னைப் படைத்தான். இவ்வளவு பெரிய உலகத்தையும் - வல்லபமான அறிவையும் — அதற்குக் கூலியாக — இனமாகத் தந்நான். எங்கே நீ ஒரு வாழைப் பழம் சம்பாதிப்பாயா? சம்பாதிக்க முடியாது. இவ்வளவு நிரப்பமான புவனங்களையும், உபகரணங்களையும் தந்நதும் — வேதத்தை இறக்கித் தந்நதும் — அந்த வேதத்தை உனக்கு விளக்கித்தர உன்னைப்போலவே மனித ஞாலத்தில் செம்மல்களாகிய பாரவான்களை அனுப்பித் தந்நதும் - நித்திய ஞாலத்தைக் கைபோடுகிற அந்த ஒரு வேலையை நீ முடிப்பதற்காகவேதான்.

சாதாரணமாக எல்லா வேதங்களையும் நன்றாகச் சுருட்டி எடுத்துக் கொண்டால், 'அன்பே சிவம்' என்று ஒரு முகமாகச் சொல்லுகின்றன. ஆனால், உனக்கு எதில் அன்பு? காசு பணம், வீடு வாசல், சொத்து சுகம், தேசாதி பத்தியம், ஆடு மாடு இவற்றில் தான். இவற்றில் ஏதாவது உன் நித்திய வாழ்விற்கு உதவுகிறதா

என்று பார் - வருகிற அந்நப் பிணவாடையைத் தடுக்கிறதா என்று பார். இல்லே.

இதற்குத் தன் வாழ்நளே வீணுளாக்கிப் பட்ட பாடு என்ன? அந்நப் பெருமுதலே இழந்நுவிட்டுப் பட்ட பாடுதான் என்ன? அந்ந னித்திய மேனி வரவை - கற்பாந்ந கோடி காலம் வாழ்வதற்கான அத் திருமேனி வரவை - விட்டு விட்டுப் பாடுபட்டாயே - அப்படித் தேடிய அனேத்தும் - கடைசியில் போட்டுவிட்டுத் தானே போகப் போகிருய்? இப்படிப் போட்டு விட்டுப் போகிறதைச் சம்பாதிக்கிற னீ னிரம்ப அறிவாளியா? இதை யாரும் னினேத்துப் பார்க்கவில்லே. மனிதனுகப் பிறந்நவன், இடையிலே மற்றப் பறவைகள் விலங்ினங்களேப்போல் செத்து, இன்னும் அவைகளே விட அவகேடாய் மகானுற்றத்தோடு போவதற்காகவா, இந்நப் பிரம்மாண்டமான உலகத்தைப் படைத்துத் தந்நதோடல்லாமல் அறிவு வல்லபத்தையும் இவனுக்குக் கொடுத்திருப்பான்? சுருக்கமாக, இவன் போகும் அவகேட்டையும், அந்ந னித்திய வரவையும் வைத்துப் பார் - னன்ருக னினேத்துப்பார்.

'னீ எதற்காக வந்நாய்?' என்று கேட்டால் - 'காசு பணம் சம்பாதிக்க' என்பான். 'காசு பணம் விடாமல் தேடி என்ன பண்ணுவாய் - கடைசியில் எல்லாத்தையும் போட்டுவிட்டுத்தானே போகப் போகிருய்?' என்ருல் பின்னுலே பிள்ளேக் குட்டிகளுக்கு வேணும் என்று சொல்லுகிருன். "உன்னிடம்தான் னூலேந்நு லட்சம் இருக்கிறதே, ஏன் இந்நப் பாடுபடுகிருய்? அடே

சனியனே, உன் பிள்ளை குட்டிகள் காது செவிடாக, கண் குருடாக, வாய் ஊமையாக, கை கால் முடமாகவா போகப் போகுது? உனக்குப் பிறந்தது தானே; புலிக்குப் பிறந்து நகம் இல்லாமலா போய்விடும்? ஏன் – உன்னைப்போல் சம்பாதிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறாய், மூதேவி?'' என்று கேட்டால், ''ஆமாம் – அது என்னமோ'' என்று பதில் சொல்லமுடியாமல் விழிக்கிறான். நாம் இப்பச் சொன்னோமே – எங்கே அதைக் கிராஸ் பண்ணு பார்ப்போம்.

நீ எக்கோடி காலத்திற்கும் சாவாவரம்பெற வந்தவன். உன் சொந்தத் தூலம், இந்த நாற்றத் தூலமல்ல – பிணிக்குள் அகப்படும் தூலமல்ல. முடிவுநேரத்திலே பெருநாற்றம் வந்து அண்டுதே - அது அந்த நித்திய தூலத்திற்கு இல்லை. அதை நீ பெற வேணுமானால் ஒரு சத்திய நிஜமான பிரம்ம நிஷ்டரின் அன்பு வந்து உன் பேரில் தாக்கும்படியாக நீ செய்துகொள்ள வேண்டும். அதைவிட்டு, நீ தவமா செய்து கிழித்துவிடுவாய்? ஒரு நொடி நேரம் நீ தவத்தில் நிற்பாயா? ஒரு மூச்சு உனக்கு நிற்குமா? நீ முன்னூறு நாள் பரிசீலனை செய்தாலும், பிரம்ம நிஷ்டர்கள் தங்கள் இஷ்டப்படி மூச்சை நிறுத்துவார்களே. நீ ஒரு மூச்சு நிறுத்தினால் அடுத்த மூச்சு கிழட்டு எருமை தவிட்டுத் தண்ணீர் குடித்துவிட்டு இழுப்பது போல இழுக்குமே.

> மூச்சடங்கும் இடத்திருக்க- எவராலும்
> முடியாது இருப்பதிங் கௌரிதுதம்பி.

அந்தப் பவர் ஒரு பிரம்மநிஷ்டர் கையில்தான் இருக்கிறது – அதை நீ நன்றாய்ப் பரிசீலனை செய்யலாம்.

அவர்கள் திருமுன்பாக ஹற்பதடிக்குள்ளாக னீ இருந்துகொள். அப்போது அவர்கள் உன்னைப் பிரீதியுடன் னினைத்ததும் உன் மூச்சு அடங்கி னிற்கும். அவர்களுடைய அந்நத் தனி (பவர்) அடையாளம் உனக்கு முந்தி தெரியுமா? தெரியாது.

கலிகாலத்தில் னீ தவம் செய்ய முடியாது. ஒரு னிஜமான, தெய்வ சன்னதம் பெற்ற குரு முன்பாக இருந்து வருவதாலேயே உன் தவம் விருத்தியாகும். அத்தகைய உன்னத வல்லபம் பெற்றவர்கள், இந்ந மனித ரூபத்தில் வருகிறூர்கள் என்று எல்லா வேத வேதாந்நங்களும் பெருக்கமாகக் கூவிக்கொண்டிருக்கின்றன - மேலும் கால அடையாளம் கொடுத்துக் கூவிக் கொண்டிருக்கின்றன.

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமு முண்டு
மனிதரிலும் னீர்வாழும் சாதியுண்டு
அனேககுல மனித ருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதர்போல் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்நதுவே
அருமையென வகுத்தார் முன்ஞேர்"

—சிவானந்ந போதம்.

மூச்சடங்கும் அந்ந இடத்திற்குப் போய் வருபவரே யோகி, ஞானி. அவரே னித்திய வாழ்விற்குரிய முதல்வர். ஒரு வேதத்தில் மட்டும் இதை வஞ்சகமாகச் சொல்லி வைக்கவில்லை. இது, சர்வ வேதங்களிலும் சொல்லப் பெற்றுள்ளது. அத்தகைய ஒரு பிரம்மனிஷ்டரின் திருமுன் செல்லாதவன் வாழ்க்கை னரகலான அவஸ்தையில்தான் முடியும்.

முதலில் இறைவன் – வேதமாகிய ஒரு கத்தியை இவனிடத்தில் அனுப்பினன். காலம் செல்லவும் அது கறை படிந்து போச்சு. அதையே பிரட்டி மெருகேற்றி மறுபடியும் அனுப்பினல், அந்தக் கத்தி வேருகவா இருக்கும்? 'இது உயர்வு – அது மட்டம்' என்பது உண்டா? இல்லை. எல்லாம் ஒன்றே. அனித்திய தூலத்தில் வந்தவனை னித்திய தூலத்தில் ஆக்குவதற்கே அந் நந்நக் காலத்தில் வேதத்தை – புதுப்புது மெருகில் அனுப்பினன். ஆகவே, அவற்றிற்கிடையில் மேன்மை தாழ்மை இல்லை. மனுவை ஒரே தன்மையாகவே படைத்த இறைவன், முன்னே ஒரு மாதிரி இருந்து இப்போது வேறு மாதிரி இல்லை. அவனுக்கு முன்னே புத்தி குறைவாகஇருந்து இப்போது அதிகமாக ஆகிவிடவில்லை. முன்னூறு சாதி மனிதர்களாய் இருக்கிறபடியினல், இறைவனும் முன்னூறு விதமான மெருகேற்றி வேதத்தை அனுப்பினன். ஆகவே, வேதத்தின் அந்நத் தன்மையை வைத்துத்தான், இங்கே மெய்வழிச் சாலையில் அறுபத்தேழு சாதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்ருய்க் கூடி, ஜீவன் முத்தி திசையில் அனந்நர்கள்என்றனுமத்தில் இருக்கிறது பிரத்தியக்ஷம்.

சாதிகள் இத்தனை சொல்லுகிருயே - உன் பல் என்ன சாதி, உதடு என்ன சாதி? உன் னுக்கிலே உப்பை வைத்தால் கரிக்குது என்கிருயே – இன்னெரு சாதிக்காரன் னுக்கில் வைத்தால் அது புளிக்குமா? புளிக்காதே. சாதிக்குச் சாதி தூசி கூட மாற்றம் இல்லை. மாடு ஒரு சாதி – அது சரி. அவை ஒன்றுக்கொன்று தோற்றம், உணவு, னடைமுறையில் வேறு வேறு மாற்றமாய்

இருக்கின்றன. மனிதரில் அப்படி வேற்றுமை இல்லையே. பல சாதிகள் உண்டு என்ருல் ஆளுக்கொரு கடவுளும் வேதமும் வேண்டுமே. இத்தனை கோடி சாதிகளாகப் பிரிந்து விட்டது மனிதனுடைய அறியாமையினுலேயே. மனுக்குலத்தில் வைத்து வேறு வேறு சாதி என்று பிரிப்பது, இவனது அறியாமையாகிய குருட்டுத்தனமே. சாதி சாதி என்று ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு துன்பப்பட்டுச் சாவதே, அதனுல் இவர்கள் அடையும் பயன். இறைவன் மனுவில் வைத்து ஒரே ஒரு சாதியைப் படைத்தான். இவர்களாக எழுபத்திரண்டு சாதிகளைப் படைத்துக்கொண்டார்கள்.

மனுவிற்கு ஒரே சட்டம்தான் இறைவன் வைத்தான். னித்திய தூலத்திற்குள் இவன் குடிபுகுவதுதான் அந்தச் சட்டம். இவன் குபேரனுக இருந்தாலும் சரியே - கோவணுண்டியாக இருந்நாலும் சரியே - மனுவிற்கு இந்த ஒரே ஒரு வேலைதான் வைத்தான். னித்திய தூலத்தை அடைகின்ற னித்திய செயலாகிய தீர்மானமான இந்த ஒரு வேலைக்கே, மனு உடல் எடுத்து வந்நான் - அதற்கான வயதையும் அறிவையும் பெற்று வந்நான். ஒவ்வொரு மதத்திலும் இருக்கிற தலையான அடையாளமாகிய - பிரணவம், காயத்திரி, பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், கலிமா, ஓம் தத்சத் ஸ்ரீ ஹலால், ஓம் - ம - னி - பத் - மீ - ஹம், சமா - இசுரயேல் - அடோனு எல்லோ - ஏனே அடோனு - எஹத் என்பவை யாவும் அந்த அழியாத ஒரே தூலத்தையேதான் குறிக்கும். அந்தத் தூலத்தால்தான் பேரின்பத்தை அனுபவிக்க முடியும். உன்னுடைய இந்தத் தூலத்தில், சிற்

றின்பத்திற்கே அறுபத்னுதுன்னு அங்குல மூச்சு ஓடுது. அதாவது ஜீவன் பறிபட்டுப் போகிற அளவாகிய அந்த அளவுக்கு மூச்சு ஓடுது. என்ன கஷ்டமான வேலை செய்யட்டும் - ஓயாமல் மண் வெட்டியே எடுத்து வெட்டட்டும் - அப்போதுகூட அறுபத்துனுன்னு அங்குல மூச்சு ஓடாது. ஆகவே, இந்தத் தூலத்திற்குப் பேரின்பத்தை அனுபவிக்கிற சக்தி இல்லை - இந்நத் தூலம் அதைத் தாங்காது - தம்பி - தாங்காது. உனக்கான சொந்தத் தூலம் வேறென்று னிச்சயமாய் இருக்கிறது.

சத்தியமாக னீ பேரின்ப வாழ்க்கையை அடையவே வந்தவன். சிற்றின்ப வாழ்க்கையை அனுபவித்து விட்டுச் செத்துப்போகவந்தவன் அல்லவே அல்ல. அப்படிச் செத்துப்போவதற்கு, இவ்வளவு பெரிய உலகையும் மகா அதிசயமான அறிவையும் உனக்குத் தந்திருக்கவே மாட்டான்.

அந்த னித்திய தூலத்தைப் பெறுததால்தான், ஏமாந்து போய் அதைக் கைவிட்டுவிட்டதால்தான், அதற்கு அடையாளமாகவே இறுதி னேரத்தில் இவனுக்குக் கசப்பு வெளியாகிறது. னும் எமது ஆதி மெய் உதய பூரண வேதாந்த னூலில் சொல்லுகிறேம்:—

கசப்புஇ றுதினேரம் கண்டுவிடிலோ
கடுனரகக் கொடியோனென் றூதாதுசங்கே

சாதிமானுக் கோர்சொல்லிதே போதும்போதுமே
சண்டாளர்க் காயிரந்நான் சொன்னலுமெங்கே

இது ஓர் சொல் என்றல் ஒரு சொல்லா? உன்னுடைய ஜீவிய காலத்திற்கே செய்கின்ற திருப்பணியையும், அதனல் வரும் பிரயோஜனமாகிய – கற்பாந்த

கோடி காலம் அழியாத வாழ்விற்குரிய - செயலேயும், குறிக்கின்ற வார்த்தையே அது.

இறைவன் மனுவின் பேரில் எவ்வளவு பிரீதியனுக இருக்கின்ருன் என்று தெரிந்து கொண்டோம். அதற்குரிய பலனே மனு எங்கே அடைகிருன்? இல்லே. அப்படி அடையாமல் மனிதன் போகும் அதோகதியை னினேத்துப் பார்த்தால் எம் காது சுடுது - தலேயெல்லாம் சுடுது - எண்ணினுல் னினேவு ஒரே குழப்பமாய்க் குழம்புது - வெள்ளே எல்லாம் கறுப்பாய்த் தெரியுது - அவ்வளவு பயங்கரமா யிருக்குது. னும் னினேத்தாலே இப்படி இருக்கிறதே, அப்போது அந்தக் கைசேத னெருக்கில் அவன் படுகிற வேதனே - பாடு என்னவாக இருக்கும்? முடிவில்லாத கால வாதை அல்லவா அது? இங்கே தவறிப்போனுல், அது ஒரு னேரத்துத் தவறுதலா? கற்பாந்த கோடி கால அவஸ்தையில் புகுதும் தவறுதல் அல்லவா? னித்தியத்தில் கற்பாந்த கோடி காலம் இருந்து வாழ்கிற வாழ்க்கையை, கற்பாந்த கோடி கால அவஸ்தையாக மாற்றுகிற தவறுதல் அல்லவா அது? அந்தத் தவறுதல் வராமல் இப்படித் திரும்புவது கற்பாந்த கோடி கால வாழ்க்கையைக் கைவசப் படுத்துவது ஆகுமே.

இதுனேரம் உங்களுக்கு இன்னென்றைச் சொல்ல னினேக்கிருேம். உத்தியோகம் பெற ஒருவன் படிக்கப் போகிருன். உபாத்தியாயர் முதல் முதலில் அ, ஆ, இ, ஈ என்று சொல்லிக் கொடுத்து, அந்த னுலு எழுத்தையும் மனப்பாடமாக வரப்பண்ணச் சொல்லுகிருர். 'உ' எழுத்தை னுளேக்கு ஆரம்பிப்போம் என்று சொல்லி

அனுப்பினுர். அவனேடு படிக்க வந்த இன்ஞெருவன் மகா குயுக்திக்காரன். எல்லோருக்கும் இவர் இதைத் தானே சொல்லிக்கொடுக்கிருர். இந்த ஞெலெழுத்துத் தான் னமக்கு வந்திடுச்சே — சொல்லவும் தெரியுதே — இவருக்கு இதனல் தானே இவ்வளவு மதிப்பு என்று எண்ணி, இவரைப்போல் ஞமும் வாத்தியார் ஆகலாம் என்ற எச்சிப் புத்தி வந்து — பக்கத்திலிருந்தால் குட்டு வெளுத்து விடும் என்று ராத்திரியோடு ராத்திரி தொலே தூரம் போய் - ணமக்கும் அதே மாதிரி பிரலாபம் வரட்டும் என்று ஒரு பள்ளிக்கூடம் — ஒரு கடை வைத்தான். முன்னே சொன்ன பள்ளிக்கூடத்தில் பத்து வருஷம், இரு பது வருஷம் படிக்கிறவர்கள் இருக்கிருர்கள். ஆனுல், இவன் மட்டும் புத்திசாலி, இப்படிச் செய்தான்! இம் மாதிரியான சண்டாள அவலக் குருமார்கள் பலர் தோன்றி உலகத்தை அனியாயமாக மாய்க்கிருர்கள் — ஜனங்களே, மகோன்னதமான னித்தியத்தை அடைய விடாமல் கொடிய அவஸ்தைக்கு ஆளாக்குகிருர்கள்— சர்வஞசம் செய்கிருர்கள். அதனுல் இவனும் கெட்டு அவனும் கெட்டுப் பாழாகின்ருர்கள்.

னித்தியமாகிய பேரின்பத்தை அடைய ஒரு ஜீவன் முத்தரின் அன்புக்கு இவன் பாத்திரவாஞக இருந்தால் போதும். ஆனுல், மெய்யான ஜீவன் முத்தர் கிடைப்பதுதான் அருமை. அது கிடைத்துவிட்டால் போதும் - சர்வக்ஞ வாழ்வுவரம் இவன் கைக்கு வந்து விடும். மேலே சொன்னேமே, அது போல, அவர்கள் திரு முன்னர் ஞற்பதடிக்குப் பக்கத்தில் போனுலே அவ ருடைய பவர் எட்டிவீசி அடிக்கிறது என்ருல், அது என்ன லேசான ஜீவ கரென்டாகவா இருக்கும்!

இவனுகவே தன்னறிவில் சாய்ந்து என்ன தவம் செய்து கிழிக்கப் போகிறுன்? ஜீவனிருக்கும் எல்லேக்கு இவன் போனுல் அது எட்டி உதைக்குதே! இது பிரத்தியக்ஷ அனுபவமல்லவா? இதைக்கூடத் தெரியாதபடிக்கு வாயில்வந்தபடி கன்னே பின்னே என்று, குண்டலினி சக்தி, அகம் பிர்மாஸ்மி, மகா மாயி, ஓம் ஆம் ஊம், ஆய்ரா ஊய்ரா என்று உளறுகிறுன். இதனுல் என்ன வந்து விடும்? அவனைப் பார்த்து - முதலிலே 'நீ என்ன ஜாதி ஐயா' என்று கேட்டால், 'நான் சைவன்' என்று சொல்லுகிறுன். 'முதலிலே உனக்குப் பஞ்ஞாட்சரம் - அந்தப் பிரம்மரகசிய முதலாகிய பஞ்ஞாட்சரம் அல்லவா வெளியாக வேண்டும். அதை விட்டு வாயிலே ஆய்ரா ஊய்ரா என்கிறுயே' என்று கேட்டால் விழிக்கிறுன்.

ஒரு சைவனைக் கேட்டால் தன் மூலமந்திரம் 'நமசிவாய' என்கிறுன். ஒரு முஸ்லீமைக் கேட்டால் 'லா இலாஹி இல்லல்லாஹு' என்று சொல்லுகிறுன். இது எழுத்தா அல்லது சொல்லா? பூர்வீகமானதா, புதிதாக வந்ததா? பூர்வீகமானது என்று வாயால் சொல்லுவாய். ஆனுல், உன் நினைவில் இருப்பது எழுத்து என்றுதான். இந்த எழுத்து எப்ப வந்தது என்று உன் நினைவிற்குக் கொண்டுவந்து விடலாம். தூண்டித் துருவிப் பார்த்தால், இன்ன பாஷை இன்னராலே இன்ன காலத்திலே இன்ன எல்லேயிலே உண்டானது என்று கண்டு பிடித்து விடலாம். அப்படிப் பார்க்கும் போது, இந்தப் பாஷை இத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு முன் உண்டானது என்று தெரியும். 'அப்போ, இறைவனுடைய திருநமம் அதற்கு முன் இல்லேயோ'

என்று கேட்டால், ''இறைவன் திருனும் பூர்வீக மானது – எப்பவும் உள்ளது'' என்பான். எண்ணற்ற னெடுங்கோடி காலமாக னிற்கும் அந்நச் செயல் னுமம் எது? என்று கேட்டால் விழிப்பான். பஞ்சாட்சரம், பிரணவமாகிய கலிமா முதலிய மூல மந்திரங்களுக்குரிய பொருள் தோன்றிய காலம் சொல் பார்க்கலாம் – சொல்ல முடியாது. எட்டாத னெடுங் ஙாலமாக, அனுதியாக னிற்பது அது என்று தெரியவரும். உனக்குள்ளே அது ஜீவேசப் பொருளாக னிற்கிறது – வேண்டுமென்று உன்னே ரக்ஷிக்கிற தெய்வப் பொருளாக னிற்கிறது. அதைத் தன்னில் அறியாததால் தான் இவன் பிசாசாகப்போகிருன். அதைத் தரிசிக்காததால்தான் இவனுக்கு அந்ந அதோகதி வருகிறது.

சாதிகு லம்பாரா தேயிருந் நமணி
மந்ரம வுனவித்தே
ஆதினு ரானியைத் தன்னில நிந்நவர்
ஆண்பிள்ளே யாணிமுத்தே.

அந்ந மந்ர மவுனவித்து அண்டத்தில் இருக்குமா – பிண்டத்தில் இருக்குமா? அங்கிருக்குமா இங்கிருக்குமா? என்று தடுமாற்றமாய் னினேப்பார்களே என்றுதான் னம்முடைய னூலில் இவ்வளவு பினெய்னுகச் சொல்லி வைத்துள்ளோம். ஒரு வார்த்தையிலே வந்து உன் னினேவிலே இப்படி இது பூத்து னிற்கிறதே – இப்படி உன் னினேவிற்குக் கொண்டுவர னி, எத்தனேகோடி சாஸ்திரம் எவ்வளவு காலம் படிக்க வேணும்? அப்படிப் படித்தாலும் இந்ந அளவில் தீர்க்கமாக உன் னினேவில் வந்து னிற்காது.

நிஜமான மனிதன் நீ. நிஜமான தூலம் எடுத்தாய். நிஜமான ஜீவனைப் பெற்ருய். இறைவன், நிஜமான அறிவை உனக்குத் தந்நான் – நம்பித்தான் தந்நான். அப்படியிருக்க நீ போலாகச் செய்தால், நகலா உன்னுடைய உடம்பு? நகலா உன்னுடைய அறிவு? நிஜமான அறிவைப்பெற்ற நீ, நிஜமான வேலை செய்தல்லவா நிஜமான வாழ்க்கையைக் கைப்பற்ற வேண்டும்? நகலான பாடுபட்டால் நகலான வாழ்வல்லவா வந்து விடும்? அப்போது பட்ட பாடெல்லாம் அனியாயமாய் வீணுகப் போய்விடுமே அப்பா! கடைசியிலே உன் ஜீவன் மகா கஷ்டப்படுமே – மகா அவஸ்தைப்படுமே – அப்படி அவஸ்தையில் னுழைவதற்கா இறைவன் இவற்றை எல்லாம் தந்நான்? காது கொடுத்துக் கேட்கிறவர்களுக்குத்தானே னும் இதைச் சொல்லுவோம் – கேட்கிறவர்களுக்குச் சொல்லுகிருேம். னும் கிழடாய்ப் போனேம் – னூற்றுப்பதினுலு வயதைக் கால் எட்டி வைத்தாச்சு. இதோ னம் முன்னுலே, முப்பது னுற்பது வயதுள்ள சிங்கக் குட்டிகள் இருக்கிருர்கள் – வானத்தை வில்லாக வளைப்போம், மணலைக் கயிருகத் திரிப்போம், மண்ணைச் சோருகத் தின்போம் என்று சொல்லுவார்கள் – அவர்கள் இப்படி என்னென்னமோ வேலை செய்வார்கள் – பேசுவார்கள். ஆனுல், எமக்கு ஒன்றுதான் செய்யத்தெரியும். 'அசலான வேலை செய்து அசலான வாழ்வை அடையுங்நோ' என்று சொல்லி அதைச் செய்துவைக்க வேணும் என்று வந்திருக்கிருேம்.

மேலே பள்ளிக்கூடக் கடை ஒன்று சொன்னேமல்லவா? பார்க்க லகுவாகத்தானிருக்கும். அதனுல்

காலமெல்லாம் பட்ட பாடு வீணாய்ப் போய்விடும் – ஒன்றுக்கும் ஆகாமல் போய்விடும் – உஜார்.

(ஆண்டவர்கள் தங்கள் திருக்கரத்தில் ஒரு வாழைப் பழத்தை எடுத்துக்காட்டி) மனிதன் இந்த வாழைப் பழம் மாதிரி செய்கிறான். அதே நிறம், அதே உருவம் தங்கத்தில் செய்கிறான். விலை என்ன ஐயா என்றால், ஆயிரம் ரூபாய் என்கிறான். நாம் ஒரு கோவணாண்டி – கரீபு – பிச்சைக்காரன் ஆச்சே, அந்த விலை கொடுத்து வாங்க முடியுமா? முடியாது. இதோ இருக்கிறார் சப் ரிஜிஸ்டிரார் பிரபு! அட்வகேட் மகாப்பிரபு! (சபையில் மகிழ்ச்சி) இவர்கள் வாங்கலாம். ஆனால், நாம் எந்தக் காலத்திலும் வாங்க முடியாது. பணக்காரன்தான் வாங்கலாம். ஏழை பாழை வாங்க முடியாது. ஒரு ஊரிலே வைத்து இரண்டு மூன்று பேர் பணக்காரர்களாய் இருப்பவர்கள்தான் அதை வாங்க முடியும். அப்படி வாங்கின அது அவருக்கு என்னத்திற்கு ஆகும்? அழகுக்காகக் கண்ணாடி பீரோவில் வைக்கத்தான் ஆகும் – அதல்லாமல் அது வாசனைக்கு ஆகுமா? மிருதுவிற்கு ஆகுமா? உணர்விற்கு ஆகுமா? உயிர்ப்பிற்கு ஆகுமா? இரத்தத்திற்கு ஆகுமா? மாமிசத்திற்கு உதவுமா? மூளைக்கொழுப்பிற்கு ஆகுமா? உன் ஜல மலாதிகளுக்கு உதவுமா? ஒன்றிற்கும் பிரயோசனமாகாது. பின்னே என்னத்திற்கு ஆகும்? பணத்தைப் பேய் காக்கும் பார் – அப்படிப் பீரோவில் வைத்துக்கொண்டிருக்கவே உதவும். ஆனால், இறைவன் படைத்த இந்தப் பழம் எல்லோருக்கும் கிடைக்கும்படி மலிவாகப் படைத்திருக்கிறானே – அவன்

என்ன கருணையாளன் பார். இப்படி உயிர்ப்புக்கு ஆகிற ஒரு பழத்தை நீ செய்துவிட்டால் - அடே அப்பா - நீ என்ன செய்வாயோ? இந்த உலகத்தையே கிரயத்திற்குக் கேட்டாலும் கேட்பாய்? இறைவன் இப்படி இனமாக எத்தனை கோடி செய்து, இந்த மனுவுக்குத் தந்திருக்கிறான் பார். கொஞ்சு காலத்திற்கு இருந்து பிரயோசனப்பட வேண்டுமே என்று ஒவ்வொரு அரிசிக்கும் தவருதபடிக்கு ஒவ்வொரு பெட்டி போட்டுத் தந்திருக்கிருனே. அரிசியாக இருந்நால் கெட்டுப் போகும் - ணும் படைத்த இன்சானுகிய மனிதன் கொஞ்சு காலம் வைத்துச் சாப்பிட வேண்டுமென்று அரிசி தவருது - சிகாரா - பெட்டி போட்டு வைத்திருக்கிற இறைவனது தயாள சிந்தையையும், எம் வார்த்தையையும் ஒரு சேர வைத்து நினைத்துப் பார் - இறைவன் உன்னிடத்தில் எப்பேர்க்கொத்த பக்ஷமுள்ளவன் என்று தெரியும் - உனக்கு எவ்வளவு சொந்தமுடையவன் என்று தெரியும் - எப்பேர்ப்பட்ட தாய் தந்தை என்று தெரியும். அவனுடைய இந்த னன்றியை யாராவது நினைத்துப் பார்த்ததுண்டா? நினைக்கிறதுகூட இல்லை. ஆனல் நீ, ஒருவனுக்கு ஒரு அணு கொடுத்துக் கடையிலே காப்பி வாங்கிக் கொடுத்துவிட்டால், அதைச் சொல்லிச் சொல்லிக் காட்டுவாய். ஒருவன் ஏதாவது சிறு உபகாரம் உனக்குச் செய்துவிட்டால், அவன் உனக்குக் கொட்டிக் கொட்டி அளந்நாற்போலே அவனைப்பற்றி மகா புத்திசாலி, மகாதயாள சிந்தை உடையவர் என்று வானளா

வப் பேசுவாய். இப்படி ஒருவனைப்பற்றி மணலைக் கயிருகத் திரித்தவன், வானத்தை வில்லாக வளைத்தவன் என்று பேசும் மனிதன், இறைவனுடைய அளக்கரும் னன்றியை னினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. ஏன்? அந்த எண்ணமோ வார்த்தையோ உன் உலகத்தில் இல்லை. அதை உன் உலகத்தில் நும்தான் கொண்டு வந்து விடுகிறோம்.

மனு பிறந்நது ஒரே ஒரு வேலைக்குத்தான். அந்த னித்திய உடலை - வாசனை உடலைப் பெறுவதற்கே இவன் பிறந்நான். இதற்காகவே இறைவன் இத்தனையும் இவனுக்குப் படைத்துத் தந்நான். அந்த ஒரு வேலையோடு மற்ற சிறு வேலைகளும் செய்வதாலே தோஷமில்லை. அவனுடைய குறி - னீ அவஸ்தையில் போகாமல் கற்பகோடி காலம் வாழ்வதே. னீ எந்த வேலையும், செய்யலாம் - எந்நப் பெருமையும் தேடலாம். ஆனால் உன் சொந்த வேலையை னீ கட்டாயம் செய்து முடிக்க வேண்டும். மனிதனுக்கு அவசியமான வேலை இன்னது என்று தெரிந்து கொண்டோமல்லவா? இந்த ஒரு செயல் கெட்டியாக னம் னினைவுக்கானல் போதும் - எல்லாம் படித்ததுபோல் ஆகும்.

னீதியெனும் பொருளான மனுக்கு லத்தை
னித்தியனும் னீத்தியத்திற் கேப டைத்தான்
ஓதியிதை யுணர்ந்நறியா உயிர்க்கோ டிகள்
ஊறுபட்டு அலகைனர காள லாலே
சாதிமனுக் குலமனைத்தும் ஜீவன் கண்ட
சென்மசா பல்யகுல மாக வென்றே
ஆதிமெய் யுதயபூ ரணவே தாந்நம்
அறிந்நடைந்ந உயிருடலம் தேவ ராமே.

னீதி எனும் பொருள் யார்? மனுத் தான். னீதி என்ற பொருள் மனுவின் தலேயில்தான் உண்டு. பொருள் என்பது தோற்றமான தல்லவா? ஆம். இதை யார் சொல்லுவது? இறைவன். னித்தியம் ஒன்றுக்காகத் தான் மனுவை இறைவன் படைத்தான். அதைப் பெற வில்லே யென்ருல் அந்த ஊருக்கு - னரகத்திற்கு - அலகை ஆகப் புறப்பட வேண்டியதுதான். இறைவன் உன்னே னித்தியத்திற்குப் படைத்து விட்டான் அல்லவா? ஆகவே, னீ அதைப் பெருவிடில், அவன் உன்னேக் கொல்வதில்லே. அலகை ஆக்கி னரகத்தில் வைக்கிருன். னித்திய வயதை அதற்குத் தருகிருன். இறைவன் இரக்கத்தால் இத்தனே பொருள்களேயும் இவனுக்காகப் படைத்தானே - இவன் இப்படி அவஸ்தைக்குப் போகவா படைத்தான்? இன்பத்திலே னெடுங்காலம் வாழவே அவன் படைத்தான். ஆனல், இவன் அதை மாற்றிக்கொண்டு துன்பத்திலே போய் மாட்டிக்கொள்ளுகிருன் - கால காலம் இவனுகப் பழகிக்கொண்டது இது. எல்லா மனுவும் னித்தியமான பேரின்ப தூலத்தைப் பெற்று வாழவேண்டும் என்பதே இறைவனின் தீர்ப்பு.

'ஜீவன் கண்ட' - இதற்குப் பெயர்தான் விஸ்வ ரூப தெரிசனம். 'உயிருடலம்' என்று சொல்லியுள்ளோமே- அது என்ன ஐந்நரை அடியா? இல்லே - அதன் பரப்பு அண்டாண்டங்களும் கொள்ளாதே! மெய் என்ற அந்த னித்திய தூலத்தை எதுவும் அணுகாது. இந்த அழி தூலத்தில் எந்தச் சிக்கும் மேயும். ஆனல், அந்த மெய்த்தூலத்தை எந்த னேயும் அண்

டாது. அந்த அழியாத் தூலத்தை அடைவதே உன் வேலை என்று - உனது காதிலே - இதை இன்றைக்குப் போட்டு விட்டோம். மனு வந்தது இந்த ஒரே வேலைக் குத்தான். இவன், பற்றி னடக்கவேண்டியது இந்த ஒரே வழிதான் - வேறு எந்த வழியும் அல்ல. அது இங்கே, மெய்வழிச் சாலையில் (அறுபத்தேழு) சாதிகளைக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களுக்கிடையில் அலங்காரமான னிதரிசன னிரூபணையில் உள்ளது.

இந்த மெய்யைப் பெறுவதற்கு உருப்போட்டால் வந்திடும் என்று சொல்லுகிறார்கள். அதை னம்புகிற வர்களும் ஆயிரமாயிரம் பல்லாயிரமாக இருக்கிறார்கள். னித்தியப் பொருளை உருப்போட்டால் வந்துவிடும் என் றால் அனித்தியப் பொருள் ஏன் உருப்போட்டால் வராது? னூறுரூபாயைக் குறிவைத்து உருப்போட்டால் ஒரு ரூபா யாவது வருமா? வந்நால் ஒவ்வொரு ரூபாயாகச் சேர்த்து ஆயிர ஆயிரமாகச் சம்பாதித்து விடலாமே? இந்தப் பொய்யே வராதே - மெய்யா வரப்போகிறது? அழிந்து போகிறதே வரவில்லையே - அழியாததா வரப்போகி றது? இதெல்லாம் வெறும் புரட்டு - ஏமாந்து போகாதே - தவறிப் போய் விடாதே என்று னும் சொல்லுகிறோம். னும் தவறிப் போனால் என்ன கவலை வருமோ அதே கவலை தான் னீ தவறினாலும் எமக்கு வரும். ஏனென்றால் னீ இருக்கிற அதே உலகத்தில் னாமும் இருந்தோம்.

இறுதியில் ஓர் னாள் வருமே, அன்று ஒரு கருக்கரி வாள், கசப்பிலே செய்தது கூட்டோடே தொண்டையிலே வந்து னிற்குமே - 'கர் கர்' என்று ஏறுமே - அப்போது

என்ன செய்வாய்? அந்த எல்லையில் உனக்கு யார் துணை? இப்போது ஒரு தூசி தொண்டையில் பட்டால் என்ன கஷ்டப் படுகிறாய் - சளி வந்து தொட்டால் என்ன திக்குமுக்காடுகிறாய்? கூர்மை ஓங்கிய அந்த வாடாத கருக்கரிவாள் - கொடூரமான முழுக் கசப்பில் செய்தது - முழுச் சூட்டோடே வந்து ஏறுகின்ற அப்போது - உன் எல்லா அவயவங்களிலும் பூட்டுப் போடப்பட்டு விடுமே. அது னேரம் உன் கை அசையாது - வாய் பேசாது. ஆனல், கண் பார்க்கும் - காது கேட்கும். அப்போது என்ன செய்வாய்? என்ன கைசேதம்? என்ன கதி? ஐயோ! இதற்காகவா இந்த உலகத்தில் இவ்வளவு சூதானமா யோசனையோடு பாடுபட்டது? இந்தக் கஷ்டம். பிறருக்குத் தெரியுமா? அந்த அவஸ்தையைத் தாங்கவாவது முடியுமா? உரலில் சிக்கியாச்சு - உலக்கை வரப்போகிறதே - என்ன செய்வாய்? மனுவாகப் பிறந்து - எம் முன்னே வந்து - எம் வார்த்தையைக் கேட்டுவிட்டு - அந்த அதோகதிக்குப் போகலாமா? எமக்கு மட்டும் அது சகிக்காது. ஆகவே, அந்த எல்லையில் வந்து உங்களுக்குக் கைகொடுத்து உதவுகின்ற ஒரு மெய்ம்மை னித்திய உருவை, இப்போதே ஆராய்ந்து பார்த்துத் தேடிக் கொள்வீர்களாக!

291

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று, ஜனங்கள் பிரசங்கத் தலங்களி லெங்கும் பெருமை யோங்கப் பேசிக்கொள்ளுகிறார்கள். இது, இதுகாலம் வரை வெறும் வாய்ப் பேச்சேதான்; செயலுக்கோ எக் காலத்திலும் எவ்விடத்திலும் வரவே யில்லை. மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இது வரை, அவதார புருஷர்களான மெய்ஞ்ஞானப் பாரவான்கள், முடிதரித்த மன்னர்கள் பலரும் முழுப்பிரயாசை எடுத்தும் எவ ருடைய எல்லையிலும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'– என்ற இவ் அறிய செயல் கைகூடிப் பகிரங்கத்திற்கு வர ஆக்கப்பெற்று வந்நதே யில்லை.

இப்ப, இது காலத்தில் தொண்டமான் சீமை (புதுக்கோட்டை) ஊறல்மலைக் காட்டிலுள்ள மெய்வழிச் சபையில் – தான் தான் பிறந்த மதத்தின் உன்னத ஆச்சாரம் தெரிந்துள்ள – பல்லாயிரக் கணக்கான பல வேறு சாதிகளைச் சேர்ந்த ஒழுக்கமுடைய மக்கள் எல்ல வரும் வந்து, ஒரே குலமாகி ஒரே தேவனைக் கண்டறிந்து வணங்கும் செயலில் ஆக்கப்பெற்றுப் பெரும் திரளாக ஆகியிருப்பது பிரத்தியட்சம்.

மற்றுமுள்ள ஜனங்களும் வந்து சேர்ந்துகொள் வார்கள். வந்துதான் ஆகவேணும். ஏனென்றால், இந்த மகத்தான அரிய செயல் இப்போது இங்கு அல் லாமல் வேறு எங்கும் இல்லவே இல்லை.

இன்னும், மனிதர்கள், தங்கள் தூலத்தை விட்டுப் பிரிந்து செல்லும் இறுதிக் கால ஜீவப்பிரயாண

னேரத்தில், எவருக்கும், அரசன் முதல் ஆண்டி வரை, னரகவாதிதான் என்கிற பாவ அடையாளமாகிய கசப்பு ஜல இட்டு ஞற்றம் வெளியாவது னிச்சயம். ஆனல், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று ஆகியுள்ள எங்கள் மெய்வழிச் சபையின் ஸ்ரீ வித்துனுயகம் மெய்வழிச் சாலை ஆண்டவர்களிடம் இடையரு அன்புடையவர்களான அங்கத்தினர்கள், அத்தகைய பாவக் குறி அடையாளமில்லாமல் மகாப் புண்ணிய சீமான்களே தான் என்பதற்கான பல - தேவ அடையாளங்களுடன், பரிசுத்த ஜீவப் பிரயாணர்களாக, இங்கே திட்டமாக ஆகிக்கொண்டு வருவது இரண்டாவது பிரத்தியட்சம்.

292

மெய்வழியின் னித்திய முத்தி
பாபனச தரித்திரிய சங்கார
மகிழ்ச்சிப் பத்திரம்

ஆண்டவர்கள்:— னித்தியனகிய இறைவன் மனுக்குலத்தை னித்தியத்திற்கே படைத்தான். னித்தியம் என்கிற அழியாத னிலேத்த சிறப்பு மனிதகுலத்திற்குத் தான் சொந்தம். இந்தப் பிரம்மாண்டமான படைப்பிலுள்ள பல்வேறு ஜீவராசிகளில், ஆகாயத்தில் பறக்கின்ற பறவை யினங்கள், மனிதனைப் போல் னடந்து திரியும் விலங்கினங்கள், மரத்தில் ஒரு இலேயில் ஒட்டியிருந்து ஜீவிக்கிற புழு முதலிய ஊர்வனங்கள், ஜலம் வாழ் ஜந்துக்கள் முதலிய அனைத்தும் அனித்தியத்திற்

காகவே படைக்கப்பெற்றன. சாவுக்குப் பின் அவைகளுக்கு ஒரு வாழ்வு இல்லை, அதனால் அவைகளுக்குச் சாவைப்பற்றிய கவலையும் இல்லை. மனிதன் மட்டுமே னித்தியன் என்ற உண்மையை மனித குலத்திற்கு எடுத்து உணர்த்தவே அவை யாவும் படைக்கப்பெற்றிருக்கின்றன.

ஒரு ஆட்டுக்குட்டியின் முன்பு, ஒரு கத்தியில் புல்லைச் சுற்றிக் கொண்டுபோய்க் காட்டி, "இதுதான் உனக்குக் கடைசித் தீனி; நான் உன்னைக் கொல்லப் போகிறேன்" என்று சொன்னால், அது புல்லைத் தின்பதற்கு உன் பக்கம் நெருங்கி வரும். ஏனெனில், அனித்திய வாழ்விற்குரிய அந்த அறிவுதான் அதற்கு இருக்கிறது. அதே மாதிரி கத்தியைக் காட்டி ஒரு மனிதனைக் கூப்பிட்டால் அவன் வருவானா? தனக்கு ஆபத்து வந்து விடுமென்று சாடையாய்க் கண்டதுமே ஓடித் தப்பித்துக்கொள்வான். காரணம், சாவிலிருந்து தப்பித்துக் கொள்ளுகிற மாண்புடைய, னித்திய முத்திச் செயல் அறிவை, மனிதன் பெற்றிருக்கிறான். இதை வைத்துப் பார்க்கும்போது மனிதன் மற்ற படைப்பினங்களைப்போல் சாகப் பிறந்தவனல்ல; னித்திய சாவா வர வாழ்விற்காகப் படைக்கப்பெற்றவன் என்று திர்க்கமாக உன் அறிவே சொல்லும்.

இப்படி னித்தியத்திற்காகத் தூல மெடுத்துவந்த மனிதர்களில் யாராவது சாகாமல், அதாவது இந்த உடலை விட்டுப் போகாமல் இருந்தார்களா? இல்லை. எல்லோரும்தான் போனார்கள். இதனால், சாவு என்ற எல்லைதான் னித்திய தூலம்பெற்று அனுபவிக்கப்புகும்

சுபசோபன வாழ்க்கைக்குப் பிறப்பிடமாகவும், அவ் வாழ்க்கையைத் தொடங்கும் பிரயாணத் தலைவாயிலாக வும் இருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

ஆகவே, அந்த னித்திய வாழ்விற்குப் போகிற பிரயாணம் எப்படி இருக்கவேண்டும்? மகாப் பரிசுத்த மானதாகவும் பேராண்மை உடையதாகவும், யவ்வன முடையதாகவும், துர்வாடையோ வேதனையோ இல் லாது முகத்தில் இன்ப மகிழ்ச்சி பிறங்க 'இதோ தங்க ரதம் வந்து விட்டது; னான் போய் வருகிறேன்' என்று தெளிந்த அறிவோடு விடைபெற்றுக் கொண்டு போவ தாகவும் இருக்கவேண்டும். இதுனாள் இந்நச் செயல் எங்கள் மெய்வழிச் சபையில் பிரத்தியக்ஷ னடைமுறை யில் இருக்கிறது. அப்படியில்லாமல், 'கர் கர்' என் றிழுக்க, கபமாகிய சளிக்கடலானது னெஞ்சை னெருக்க, தோள்பட்டை தூக்கித் தூக்கிப்போட, மூச்சுத் திணறித் திருகித் திருகி வர, அலறி உளறி உறுமி, கசப்புஜலம் வெளியாகி, மகா வேதனையோடும், னாற்றத்தோடும் பார்க்கிறவர்கள் அருவருக்கின்ற அவ லட்சண கோரக்கொடிய முகத்தோடும், இவன் பிரயாண மானால் தண்டனைப்பிறப்பிற்கே போகின்றான் என்று தெளிவாகத் தெரிகிறதல்லவா? ஆம்.

ஒருவன் காட்டுக்கு வெளிக்குப் போகிறான். இன் னொருவன் னான்கு ஐந்து லக்ஷ ரூபாய் முதலோடு ரங்கூ னுக்கு வியாபாரம் செய்யப் போகிறான். இரண்டு பேர் பிரயாண அடையாளமும் ஒன்றாயிருக்குமா? அது போலவே, அழியாத னிலைத்த சிறப்பாகிய னித்திய வாழ்வை அடையப் போகிறவனுக்கும், தண்டனை

யாகிய னரக அவஸ்தைதயை அனுபவிக்கப் போகிற வனுக்கும் சாவுடைய னேரத்தில் மேற்கூறியபடி தனித் தனி அடையாளம் இருக்கிறது. இதை வைத்துத்தான் ஒருவரைத் தெய்வமாக வணங்குவதும், மற்றவனைப் பிசாசு என்று சொல்லிப் பயப்படுவதும் னெடுங்கால மாக இன் னிலவுலகில் னிகழ்ந்து வருகிறது.

னீ இந்த அனித்திய உடலைக்கொண்டு என்ன கஷ்டப்பட்டுச் சம்பாதித்தாலும் சம்பாதித்தது அனைத் தும் அழிந்தே தீரும். இது அனித்திய உடல். இதில் உன்னத அறிவை வைத்துப் படைத்தது அந்த னித் திய உடலைக் கைபோடவே; இந்த அழி உலகப் பொரு ளைத் தேடுவதற்கல்ல.

மனிதன் இந்த அனித்திய வாழ்விற்குத் தூலம் எடுத்தானே, அப்போது, தீட்டிலே அசுத்தத்திலே பிறந் நான். ஆனால், அந்த னேரத்திலே, இவன் உடலில் ஞற்றமில்லை; இவனுக்கு வேதனையும் இல்லை. அதே மாதிரியான தீட்டு ஞற்ற அடையாளங்கள், னித்திய வாழ்விற்குப் புறப்படுகிற, அதாவது ஜீவன் பிரிந்து பரத் தோடு சார்கிறதாகிய, அழியாத னிலைத்த மகிழ்ச்சி வாழ்விற்குரிய பிறப்பைச் சந்திக்கும் தருவாயாகிய சாவுடைய எல்லையில் இருக்கலாமா? இருக்கக் கூடாது. மகாப் பரிசுத்தப் பிரயாணமாக அல்லவோ இருக்க வேண்டும். சாவுடைய னேரத்தில் ஏற்படுகிற இந்த வித்தியாசம் தெரியாமல் போனதால்தான் மனுக்குலமே ஞசமாய்ப் போகுது. எத்தனை கோடி சாஸ்திரம் படித்து இதை னீ அறிய முடியும்?

எம்முடைய தெய்வீக மெய்வழிச் சபையில் சேர்ந்து எமது அன்பிற்குப் பாத்திரமானவர்களுக்கே, சாவு

டைய எல்லேயில் இந்நப் பரிசுத்தப் பிரயாணமாகிய னித்திய வாழ்வுப் பிறப்பு கிட்டுகிறது. அவ்வாறு கிட்டினவர்களே எல்லாச் சாதி, எல்லா மதத்தினுடைய மகத்துவத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள். அப்படி ஆகிக்கொள்ளாதவர்களுக்கு னிச்சயமாக னித்திய அவஸ்தை உடலாகிய னரக உடலே வந்நுவிடும்.

240

இந்நச் சத்திய முத்திச் செயலுக்கே – இந்ந ஒரு செயலுக்கே - சர்வவேத வேதாந்நங்களும் அதாவது ருக் யஜுர் சாம அதர்வண வேதங்களும், சபூர் தவுராத் இன்ஜில் புர்கான் என்ற வேதங்களும், சைவ வைஷ்ணவ சாஸ்திரங்களும், மெய்கண்ட மகத்துக்களாகிய சித்தர் முத்தர்களின் கிரந்நங்களும் வந்நன. மனிதன் னித்திய உடலே எடுக்கிற பான்மையை எடுத்துச் சொல்லத்தான் அவை யாவும் வந்நன. னித்திய உடலே எடுக்கும் பரிசுத்த அடையாளமாகிய துர்னாற்றக் கசப்பு ஜலம் வெளியாகாத சுத்தப் பிரயாணம், சாவு னேரத்தில் ஒருவனுக்கு இல்லே என்றால், அவன் எந்ந மதத்திலும் இல்லே. அவன் எந்நச் சாதியுமல்ல. அவன் தன் மதத்திற்குப் புறம்பாகத் தள்ளுபட்டவன்.

னும் இஸ்லாத்திலே பிறந்நாலும், சைவம் னும்தான். ஏனெனில், அதில் உள்ள முத்தி மெய்ச் செயல் எம்முடைய கையில்தானிருக்கிறது. அதேபோல வைஷ்ணவமும் னும்தான். பௌத்தமும் னும்தான். சீக்கிய மதமும் னும்தான். சைன மதமும் னும்தான். கிறிஸ்த்தவ மதமும் னும்தான். எல்லா வேதங்களுக்கும் மதங்களுக்கும் சாதிகளுக்கும் உரியவர் னுமே.

பழமைக்குப் பழமையானதும் புதுமைக்குப் புதுமையானதுமாக விளங்கும் மெய்வழிச்சாலை என்னும் எம்முடைய பிரம்மாண்டப் பெட்டகத்தில்தான் சர்வ மதங்களினுடைய னித்திய உயிர்ப்புச் சிறப்புச் செயல் இருக்கிறது. அதை, எமது ஓரெழுத்து மாத்திரைக்கோல் என்னும் திறவுகோல் கொண்டு திறந்து தந்நதால்தான், இங்கு வந்து கூடிய அந்நந்த மதங்களுக்கும், 67 சாதிகளுக்கும் இந்ந மெய்ச்செயல் கிட்டிற்று. ஒரே தவ மாமரத்தில், மா பலா வாழை முதலிய எல்லாச் சாதிக் கனிகளும் காய்த்துக் குலங்குவது போலவும், ஒரே சூரியன்முன் எல்லா இருள்களும் ஓடி மறைந்து போனது போலவும், எமது சர்வமத வேதத் தாயகமாகிய மெய்வழிப் பெட்டகத்தின் செயல் இன்று இவ்வாருக விளங்குகிறது.

இந்ந முத்தி வாழ்வாகிய னித்திய வாழ்வுச் செயலை எடுத்துப்பேசி உனக்கு மெய் அறிவூட்ட இம் மண்ணுலகத்தில் எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. மெய்யாக மெய்யாகவே அவரவரும் ஆதி மெய் மதத்தில் ஆவதற்குரிய வாய்ப்புடைய வசந்த னேரம், னமது தமிழ்த் தென்பாண்டி னட்டில் இதுகாலம் வந்திருக்கிறது.

எமது மெய்வழிச் சபையிலுள்ள எல்லா மதத்தினரும், 67 சாதிகளடங்கிய பல்லாயிரக் கணக்கான மக்களும், சர்வ மதங்களுக்கும் உரிமை உடையவர்களாயும் னித்திய மெய்ச்செயலைப் பிரத்தியக்ஷத்தில் பெற்றவர்களாயும் இருக்கிருர்கள்; பெறுகின்ருர்கள்; இன்னும் பெறவும் இருக்கின்ருர்கள். இது சத்தியம். பிரத்தியக்ஷம்.

மக்கள் படிக்கவேண்டிய உலகில் உள்ள சர்வ கிரந்நங்ஙளும் இது தான். இதை, எம் பெயரை வைத்துப் "போடுமுத்திரை" என்று இவ்வுலக முழுதினுக்கும் தெய்வீக னிறை விரி சோபன திருவுரு வரமருள் சாஸே ஆண்டவர்கள் திருவாய்மலர்ந் நருளினர்கள்.

293

செனஂனை உயர்னீதிமன்ற னீதிபதி
திரு. என். சோமசுந்நரம் அவர்கள் வந்திருந்நபோது
பிறந்ந ஆண்டவர்கள் வாக்கியம்

முடிவில்லாத வாழ்வை, னித்திய வாழ்வைத் தர னிற்கின்ற அறிவை அடைவதற்காகவேதான், மனிதனுக்கு னூறு ஆண்டுகால வயது தந்நது. அந்ந வயதை அழிந்நு போகிற வேறு எதெதற்கோ செலவழித்து விட்டுக் கொஞ்சு னேரம்தான் அதற்கு உரிய செயலுக்குத் தந்நீர்கள் — அந்ந னேரத்தை வேணுமென்றால் அதிகமாக்கிக் கொள்ளலாம். அந்ந அதிகாரம் உங்கள் கையில்தா னிருக்கிறது. (சபையில் மகிழ்ச்சி).

மெய்ப்பால் அறியவே மனிதன் படைக்கப்பெற்றான். மனித குலத்துக்கு உரிய சொத்து மெய். அதை அடைவதற்காகவே சிறப்புடைய ஞானேந்திரியங்ஙளாகிய செவி, வாய், கண் பெற்று வந்நுள்ளான். அவற்றைக் கொண்டு ஈசனாகும் சக்தி மனிதனுக்கு இருக்கிறது. இந்ந அரிய வாய்ப்பு மனிதன் ஒருவனுக்கே உண்டு. மற்றைய படைப்பினங்ஙளுக்கு இல்லை. ஆகவேதான் மனுசன் அதாவது மனு ஈசன் என்ற

பெயர் இவனுக்கு வைக்கப்பெற்றுள்ளது. இந்த மெய்ச் செயலை எடுத்து விரித்து விவரித்துச் சொல்வதற்கு ஈசனால் ஆகாது. மனு உடல் தாங்கி வந்துள்ள ஒரு மனு ஈசனால் தான் ஆகும்.

உலகில் சிலர் உபதேசம் பெற்றேன் என்கிறார்களே; அவர்களைப் பார்த்து "உபதேசம் என்றால் என்ன அர்த்தம்" என்று கேட்டால், பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறார்கள். உ - ஓர் அறையின் உள்ளே வைத்து, ப - பட்டினி கிடக்கச் செய்து, தே - தேக மெல்லாம், ச - சந்தனத்தைப் பூசி, ம் - ஏதோ காதிலே மந்திரம் சொல்லித்தருவது என்று அர்த்தம் சொல்லலாமா? (சபையில் மகிழ்ச்சி) இப்படியா அதன் அர்த்தம் இருக்கும்? இல்லை. அதன் னிஜச் செயல் னும் சொல்லுகிறோம், கேளுங்கள். னும் வசிக்கும் இந்தத் தேசம் னமக்குத் தெரிகிறது. உப - இரண்டாவது அல்லது அடுத்ததேசம் னமக்குத் தெரிய வேண்டும். இக் கடமாகிய தேசத்தை விட்டு அக் கடத்துள் ஆக்குவதே உபதேசம். இதைத்தான் அருள் னுவேந்தராகிய அருணகிரினுதர் அவர்களும் "இக்கடத்தை னீக்கி அக் கடத்துள் ஆக்கி இப்படிக்கு மோக்ஷம் அருள்வாயே என்று கூறிவைத்துள்ளார்கள். அத் திருச்செயலைச் செய்கிறவர்கள்தான் குரு, ஆசான், தெய்வம் ஆகும். இந்தச் செயல் - மனிதன் தன் வல்லபத்தால் செய்து கொள்வதல்ல. அந்தர்முக னோக்காக உள்ளே பாய இவனால் முடியாது. அதற்குத் தெய்வ னுயகமாகிய ஒரு ஆசானின் துணை கட்டாயம் வேண்டும்.

'இந்நக் காலத்தில் அந்த வல்லபம் பெற்றவர்கள் எங்கிருக்கிறார்கள் - அவர்களை எப்படி அடையாளம் கண்டு பிடிப்பது' என்று யோசிக்கின்றீர்களா? அந்த ஜீவ ஆட்சிச் செயலுடையவர்கள், சுவாசபதி வீட்டைத் தம் வசமாக்கியவர்களாய் - அதாவது மூக்கிற்கு வெளியே சுவாசம் ஓடாத தவாதிக்க முடையவர்களாய் விளங்குவார்கள். இன்னும் வேல், சங்கு சக்கரம், உடுக்கை, சூலம் முதலான தேவ சன்னதங்களைத் தங்கள் திருக்கரம் தாங்கி வந்திருப்பார்கள். கடம்பவனக் காளையாகிய ஸ்ரீ சுப்பிரமணியர் வேல்தாங்கி வந்நார்கள் என்றதும், தங்கத்தாலோ அல்லது வெள்ளியிலோ ஓர் வேல் செய்து வைக்கிறார்களே - அது அல்ல அந்நத் தேவ சன்னதம். காமாதி அசுரர்களைக் கருவறுக்கும் கோடி சூரியப் பிரகாசமான ஆயிதம் அது. தங்கமயமா யிலங்கும் முத்தர்கோடி சதகோடி மகத்துக்களின் சபையில் வைத்துச் செம்மல்களில் கோடிக்கொருவர் பெறுவது அத் தேவாயிதங்கள்.

அவ்வாறு பெற்றுவந்த செம்மல்களின் கையிலே தான் உபதேசம் என்ற னிஜச் செயல் இருக்கும். 'னிறைமொழி மாந்நர் பெருமை னிலத்தில் மறைமொழி காட்டி விடும்.' எவ்வளவோ னீண்ட காலம் இதை இப்படி எடுத்துப் பேசித் தருகின்றவர்கள் இல்லாமலே போய்விட்டதால், அந்நப் பிரம்மச் செயலானது மங்கி மறைந்து விடுமோ அல்லது காய்ந்து சிறுத்துப் போய் விடுமோ - அப்படி யெல்லாம் போகவில்லை. இதோ உங்கள் ஆட்சிக் குட்பட்ட இந்த எல்லையில் பூரண வல்லபத்தோடு இருக்கிறது. இதை னும், 67 சாதிக

ளடங்கிய பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு னிரூபித்து விட்டோம். அசலான செயல் இங்கு இப்படி விளங்கிக் கொண்டிருக்க, உலகில் வேஷம் போட்டுத் திரிகிறவர்கள் கையிலிருப்பது ஞானமாகுமா? னும் வேண்டுவது ஞானத்தைப் போல அல்லவே! விஜய காண்டீபனுகிய பற்குணன், னீலமேக சாமள வர்ணப் பஞ்ஞாயுதராகிய ஸ்ரீ கண்ணபிரானிடம் பெற்ற ஞானந்நானே னும் ஆசையுற்று வேண்டுவது? ஆம். னித்திய அழியாச் செயலாகிய அது என்றும் மாருதிருப்பது. ஸ்ரீ மாணிக்கவாசகர் முதலான னுல்வர்களுக்கும், ஜனகாதியர் னுல்வர்களுக்கும் குருமூர்த்தமாக எழுந்நருளி எப்படி அந்ந ஜீவ வரம் வழங்கப்பெற்றது என்பதைச் சொல்லி வைத்திருக்கிறுர்களே!

கல்லாலின் புடையமர்ந்நு னுன்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் னுல்வருக்கும் வாக்கிறந்ந
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமா யிருந்நதனை
யிருந்நபடி இருந்நு காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை னினையாமல்
னினைந்நுபவத் தொடக்கை வெல்வாம்.

இருந்நதனை இருந்நபடி இருந்நு காட்டினவர் யார், சொல்லாமல் சொன்னது எப்படி? இத் தேவ ரகசியம் இன்னதென்று யாருக்கும் தெரியாது. அது, னிஜ குரு க்ஷேத்திரத்தில், ஒரு தெய்வ சன்னதாலங்கிர்தரின் திருச்சன்னிதியில் மனு உடல் எடுத்த பயன் பெற ஏங்கி னிற்கும் சீடனுடைய உள்ளத்தில் வெளியாகு

வது. மற்ற எந்த எல்லையிலும் அப் பவத் தொடக்கு அருது.

இந்த மனித தூலம் இருக்கும்வரை பவத் தொடக்கை வெல்வது என்பது முடியாது. அது இருக்கவே செய்யும். ஆகவே இந்தத் தேகம் முத்திக்கு வராது என்று தெரிகிறதல்லவா? இது னித்தியத்திற் கான தேகமல்ல. னித்திய தேகம் எமன் அணுகா வைரமணித் தேகம்; அதுதானே னமக்கு வேண்டியது. அது எங்கே? இந்த மனிதனுக்குள் தூல சூக்கும காரண மகாகாரணம் என்ற னன்கு தேகங்களை வைத்துப் படைத்தான். அவை னம் பார்க்கும் இந்த மாமிசம், ஆவி, சுத்தாவி, பிரம்ம ஆவி என னன்கு வடிவாக இருக்கின்றன. னித்திய பிரம்ம ஆவித் தேகமாகிய மகா காரண தேகத்தில் குடியேறி, தேவ சன்னதாலங்கிர்தம் பெற்று வந்தவர்கள்தான், "இருந்ததை இருந்தபடி இருந்து காட்ட" வல்லவர்கள் ஆவார்கள். னம் உங்களைப்போலப் படித்தவர்கள் அல்ல. திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தபின் மாடு மேய்க்கப் போய்விட்டோம். ஆனல் மேற்சொன்ன திருச்செயலை ஒரு தேவ சன்னதர் எமக்குப் பழக்கித்தர னம் பழகி வந்துள்ளோம்.

வாக்கிறந்த பூரணமாய் மறைக் கப்பாலாய் எல்லாமாய் அல்லதுமாய் இருக்கும் அந்தப் பரமரகசியத்தை, செவ்வான் தேகத்தை, சிவபரம் சுடரை, சைவ மங்களத்தை, குறைவற்ற முதலாகிய கோடி கோடி காலக் கோதற்ற வாழ்வைக் கை போட்டு அனுபவிக்கத் தான், அதற்கான உதவி உபகரணங்களோடு இந்த

மனிதனைவன் அனுப்பப்பெற்று வந்துள்ளான். அதை னிரூபித்து அவனே அந்த எல்லையில் குடியேற்றவே நாம் வந்துள்ளோம்.

இவ் வுலகில் உள்ள எத்தனையோ வகையான எண்ணிறந்த வித்துக்கள் முளைத்து, செடியாய், மரமாய், அரும்பிப் பூத்துக் காய்த்துப் பழமாய்ப் பலன் தருவது யாருக்காக? மனிதன் ஒருவனுக்காகத்தானே? ஆம்; மாடு முதலிய மற்றைய ஜீவராசிகளுக்கல்ல. இவ்வாறு இந்த ருசியோடு இந்த வாசனையோடு இந்த மதுரத்தோடு செய்துகொடு என்று நாம் கேட்டதுண்டா? இல்லை - கேட்கவாவது தெரியுமா? தெரியாது. நாம் கேளாமலேயே இவ்வளவு பெருக்கமாக எவ்வளவோ பொருள்களை னம்மைக் குறி வைத்துப் படைத்து, எளிமையாக னமக்குக் கிடைக்கும்படி வைத்துள்ளானே அந்தப் பெருங்காருண்யன். அவன் னம்மை எதற்காகப் படைத்துள்ளான்?.

இது ஒரு எலுமிச்சம்பழம். இது போலவே தங்கத்தால் ஒரு பழம் செய்தால் அதில் இந்த ருசி யிருக்குமா? ஜீவனுக்கு உணவாகிய இந்த மணம் இருக்குமா? இருக்காது. மேற்கொண்டு இதன் விலை இருனூறு முன்னூறு என்பார்களே. ஏழை எளியவர்கள் வாங்க முடியுமா? முடியாது. பிரபுக்கள்தான் வாங்க முடியும். ஏழை எளியவர் யாவருக்கும் கிடைக்கும்படி உபயோகத்திற்கான இதை அபரிமிதமாய்ப் படைத்து விசிறி விட்டிருக்கிறானே. இப்படியாக எண்ணிறந்த வஸ்துக்களைப் படைத்துத் தந்திருக்கிறானே. இந்தப் பெருங்கருணைத்

தகையை னம் தாய் தந்நையரிடத்தில் கோடியில் ஒரு பங்கு காணமுடியுமா? முடியாது.

னம் உலகத் தந்நையிடம் கடமைபூண் டொழுகி வருகிற ஞும், அனந்நானந்நமாக னமக்கு வேண்டுவன வெல்லாம், ஞும் கேளாமலே இன்ன காலத்திற்கு இன்னது வேண்டும் என முற்கூட்டியே படைத்து வைக்கிற சர்வக்ஞனுகிய அந்நப் பரம தந்நைத்கு, ஞும் எப்படி கடமைப்பட்டவர்களா யிருக்கவேண்டும்? னம் அறிவைக்கொண்டு எட்டி அளக்க முடியாத மகா மேலான அத் தந்நை, இவ்வளவையும் தந்நுவிட்டு னம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்று யாரும் சிந்நித்துப் பார்த்ததுண்டா?

உலகத்தில் ஒரு தந்நை தன் மகனுக்கு உணவு உடை எல்லாம் தந்நு, படிக்கவைத்துக் கல்யாணம் முடித்து, வீடு னிலம் சொத்துச் சுதந்நிரம் முதலிய யாவும் தேடிவைத்து, இவ்வாறு எல்லா உதவிகளும் செய்து முடித்தபின் கடைசியாக அவனைக் கொல்வதற்கு அவர் ஒரு கத்தி தயார் செய்து வைப்பதுண்டா? வைப்பதில்லை. இந்நத் தந்நையே, தான் ஆசையுடன் வளர்த்த மகனைக் கொல்ல ஒரு கத்தி செய்து வைப்பதில்லை யென்ருல், எண்ணிறந்நகோடி உயிரினங்களை மனிதனுக்காகப் படைத்து, அவற்றிற்கான உணவுகளையும் ஆங்காங்கு ஓயாது உண்டுபண்ணித் தந்நு உதவிவரும் அந்நக் காருண்யப் பிரபுவாகிய பரம தந்நை, னரகமென்னும் வல்லிடும்பைப் பேராயுதத்தை எதற்காக முன்னமேயே தயார்செய்து வைத்துள்ளான்? ஆயிரங்கோடி தாய்தந்நையருக்கும் மேலான கருணை

யுடைய அந்நப் பரமகருணைமூர்த்தி, ஏன் இப்படி கோரக் கொடூர எரி னரகமாகிய வாளைத் தயார்பண்ணி வைத்திருக்கிறுன்? அப் பரம தயாளனின் மகாக் குறி ளேக்குக்கு இலக்காக வேண்டியது இவனது கடமை. அதை மறந்து அவன் தந்த சர்வ பொருள்களையும் அனுபவித்து விட்டு, அவனைத் திரும்பிக்கூடப் பார்க் காத னன்றிகெட்ட செயலுக்குத் தண்டனையாகத்தான் னரகத்தைப் படைத்தான். இதனை இப்படி னிச்சய மாக எண்ண வேண்டும். இங்கே இவ்வாறு எண்ணி அடைவோன் மனு ஈசனுகிறது சத்தியம். இது னேரம் இங்கே அப்படியாக்குவது திண்ணம்.

இந்நக் காலத்தில் இந்த ஒரு எல்லையிலன்றி, மற் றெங்கே எவ்வளவு னுணுகி னுணுகி னினைத்தாலும் பிரயோசனமில்லை - இந்த னேரம், இப்படி ஒரு வசந் நம், இங்கு வந்து வாய்த்திருக்கிறது.

உங்கள் எல்லோருடைய பார்வைக்கும் இது ஒரு காடுதானே? ஆம். ஆனல் இப்போது இது ஜீவ ரக்ஷிப்பு அளக்கும் தேவ பூமியாக மாற்றப்பெற்று விளங்கி யொளிர்கிறது. இதை இன்னெருவரால் இப் படி ஆக்க முடியாது. இது எவருடைய அதிகாரமும் வந்து எட்ட முடியாத தேவ பூமி.

ஆட்சியில் இரண்டு விதம் இருக்கிறது. இந்த அழி உலக ஆட்சி ளுளுக்கு ளுள் இறக்கமாகிக் கொண்டே போகும் ஆட்சி. இன்னெரு ஆட்சி யிருக்கிறது; அது ஒவ்வொரு ளுளும் ஏற்றமே யாகிக் கொண்டிருக்கிற ஆட்சி. வாடாத ஆட்சி - எல்லோரையும் ஆளுகிற எம னையும் அடக்கி ஆள்கின்ற ஆட்சி. அந்த ஆட்சி, மனிதனுக்குள்ளே வைத்து படைக்கப்பெற்றுள்ள ஜீவ

காயத்திரியை இவனுக்கு னேசமாக்கி முடிசூட்டி வைக்கப்பெறும் அழியாத ஆட்சி. மனிதன் அதனை அறியாமலே, அறிவிக்க வைக்கின்றவர்களையும் அடுத்துக் கேளாமலே, தனது அழினேசவாசப் பழக்கத்தால் தன்னை மட்டமாக, மிகத் துச்சமாகக் கேவலமாக எண்ணி வாழ்ந்து, கடைசியில் னரகாளப் புகுகின்ருன். இவ்வாறு தன் மேன்மையை அறியாமலே மரண இருட் கிடங்கிலே கிடந்து உழலும் இந்தத் துக்க உலகிற்கு ஞம் வந்தோம். அப்படி வந்து எம்மை அண்டி வந்த பல ஆயிரக் கணக்கானவர்களை மரண இருள் னீக்கப்பெற்ற தேவ ஆட்சி வல்லபர்களாய் இது காலம் ஆக்கி வைத்திருக்கிரும், இன்னும் ஆக்கவும் இருக்கிரும். ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஆயிரவிதமாக முயற்சி செய்தாலும், தேனீ, கரையான் கட்டுகிற கூடு, புற்று போலச் செய்ய முடியுமா? முடியாது. அவற்றிற்கு அந்தக் காரியம் எளிது. இப்படியே எல்லோருக்கும் ஒவ்வொரு காரியம் எளிது. அதுபோல ஞமும் இந்தத் தேவச் செயலை எளிதாகப் பழகி வந்திருக்கிரும்.

உலகத்தே எந்தத் தொழில் இல்லாது போனலும் அதனல் குறைவு ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆனல் இந்தப் பிரம்மச் செயல் அப்படியானதல்ல. மனிதனுக்குச் சிரசு எப்படியோ, அப்படி முக்கியமானது இது. மனித தலைக்குக் கட்டாயம் அவசியத் தேவையானது. இதை மனுக்குலத்திற்குப் பழக்கித்தர ஞம் பட்ட படுகளத்தைப் பின்னர் னீங்கள் அறிவீர்கள்.

இந்த மெய்னிலைப் பதம்பெற இரண்டுவித மார்க்கங்கள் இருக்கின்றனை. மர்க்கட ஞாயம், மார்ச்சால ஞாயம் என்று அறிந்த மகத்துக்கள் அதற்கு நாமம் தந்திருக்கிறார்கள் – ஒன்று பூனைக்குட்டி போல, தாயால் வாய்க்கொண்டு கௌவி எடுத்து வளர்க்கப் பெறுவது. மற்றொன்று குரங்குக் குட்டிபோல, தானே தாய் வயிற்றைப் பற்றிக்கொண்டு வளர்வது. இவன் தேகாதியந் நமும் பாவமாதலால் அதை மாற்றத் தேவனுடைய எண்ணத்திற்கு ஐக்கியமுற்று எல்லாம் அவர்கள்செயல் என்று அமர்ந்து விடுவது, அல்லது தானே இறுதி வரை னிலை னின்று சாதித்து வல்லபம் பெறுவது. இரண்டிற்கும் பதவி ஒன்றேதான். அடையும் அழியாத் திருத்தலமாகிய ஜாகையும் ஒன்றேதான்.

பெரியோர்கள் மயில், அன்னம், புருக், வாசியென்ற குதிரை முதலான வாகனங்களில் ஏறிப் பிரம்ம லோகம், சொர்க்க லோகம், வைகுந்த லோகம், மெக ராஜ் முதலான அதிமகோன்னத எல்லைகளுக்குச் சென்று வந்நார்கள் எனவும், இன்னும் சித்தர் முத்தர்கள் கவனக் குளிகை போட்டு அந்த எல்லைகளுக்குப் போய்வந்நார்கள் எனவும் உலகில் கூறப்படுகிறதே, இந்த பிரம்மர் செயலை னின்று கவனித்தால் மனித அறிவுக்கு எட்ட முடியாததாய் இருக்கிறதல்லவா? ஆம். இந்தக் காலத்தில் இது ஏது? இது னிஜமாயிருக்குமா? என்றுதான் னினைக்கவரும் ஆனல். இங்கே இது னிஜமான செயலேதான் என்று பிரத்தியக்ஷ னிரூபணையில் பல ஆயிரக்கணக்கான தலைகளுக்கு ஆக்கப்பெற்றுவிட்டது.

இது தூலதேகம் – இதற்குள்ளே பிரகாச சூக்கும தேகம் விளங்குகிறது. அதன்பால் சைவனுயக, சைவ மேனியாகிய நிராலம்ப லகித மெல்லிய மினுங்கிய பரி சுத்த எழிலியல் காரணதேகம் எழுந்து மிளிர்கிறது. அந்த எல்லையில் எமனுக்கு அதிகாரம் இல்லை. அத் தேகத்தைக் கைபோட்டுள்ளவர்களுடைய ஆக்கினைக்கு எமன் கைகட்டிக் காத்துக்கொண்டிருப்பான். இந்தப் பெரும் பேறு, இந்த அருங்காரண வல்லப சம்பத்து மனிதனுக்கே யல்லாமல் வேறு எந்தப் படைப்புக்கும் இல்லை.

“நான் இந்த வேதகுலாதித செயல் பெற்றவன்” என்று ஒருவன் வேடம் போட்டுப் பகசாங்கு செய்தால், அவனுக்கு இந்தச் செயல் வந்துவிடுமா? வராது. நானு கையோடு கருப்புக் கோட்டு அணிந்து கொண்டு வக் கீல் என்று வேடம் போட்டுக்கொண்டு கோர்ட்டுக்கு வந்தால் வழக்காட முடியுமா? முடியாது. (சபையில் மகிழ்ச்சி) அப்படி ஒருவன் வேடம் போட்டுக் கோர்ட் டுக்கு வந்துவிட்டால் அவனுக்கு என்ன கிடைக்கும்? ஜெயில் தண்டனை கிடைக்குமல்லவா? இப்படி, தெய் வீக காரியத்தில் இந்த நீதி செலுத்த ஆளும் இல்லை; அரசுமில்லை.

நீங்கள் இப்போது பெரிய ஜட்ஜாக வேலை பார்க்கிறீர்களே. இந்தத் தொழிலைப் பழகி சர்வீசாகி விட்டதால் உங்களுக்கு இது எளிமையா யிருக்கிறது. ஆனால் எங்களுக்கு இது எவ்வளவு பிரயாசை யுடைய தாகத் தோன்றும். அதேபோல எம்முடைய இந்த ஜீவ வல்லபச் செயல் உங்களுக்கு மகாப் பிரயாசையுடைய

தாகத் தோன்றலாம். ஆனால் நாம் சொல்லுகிறோம் - உங்கள் தொழிலுக்கு நீங்கள் எடுத்துக்கொண்ட பிர யாசையில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இந்த ஜீவ காரி யத்திற்கு வேண்டியதில்லை. அவ்வளவு எளிதாக இதை உங்கள் தலையில் ஏற்றி வைத்துவிடுவோம். எவ் வளவோ பேர்கள் இங்கு அப்படிப் பெற்றுள்ளார்கள். அதற்கு நாம் ஜவாப்தாரி.

நீங்கள் மதராஸிலிருந்து இங்கு வந்தது எத் தனையோ முக்கியமான காரியங்களைப் பார்ப்பதற்காக இருக்கும். அந்தக் காரியங்களைவிட மகா அவசியமான முக்கியமான காரியம் இதுதான். இந்தப் பிரம்ம வித்தை யைக் கற்றுப் பழகத்தான் நாம் எல்லோரும் இந்த மனித தூலம் எடுத்து வந்தது.

கடன் வாங்கியவன் கடன் தந்த முதலாளிக்கு உரிய காலத்தில் அதைக் கட்டவேண்டியது உலக நீத மாச்சே. அப்படியிருக்க இறைவனிடத்தில் வித்தியா தத்துவம் என்னும் அமானிதக் கடன் வாங்கிவந்த மனிதன், அதை மறந்து திரிகின்றானே. அந்த அறி வாகார நித்தியத்தை அழிந்துபோகிற எதெதற்கோ செலவு செய்கிறானே. தனது செவ்விய பாதையிலே அதைச் செலவு செய்யாதிருப்பதை, இறைவன் ஒரு தலைமுறை காலமட்டும் பொறுத்துப் பார்த்துவிட்டு, இறு தியில் ஒரு நாள் அதைப் பிடுங்கிக்கொண்டு எமனுடைய கையில் இவனை ஒப்படைத்து விடுகிறான். பிறகு மீளா எரி நரகத் தண்டனை வந்துவிடுமே! அந்தப் பாதையில் நாம் போகாமல், அவன் கடனைத் தந்த வித்தியா தத் துவமாகிய ஜீவ நாட்டுச் செல்வத்தைக் கொண்டு, கோடி

கோடி காலம் இருக்கும் தேவ சிரேஷ்டர்களாக ஆகி, சிரஞ்ஜீவி வரம் பெற்று வாழ னமக்கு இறைவன் வழி காட்டுவாஞக!

உணர்வறிவு, கேள்வியறிவு, பார்வையறிவு, ருசி யறிவு, வாசனை அறிவு முதலாகிய அறிவுகளை னமக்குத் தந்திருப்பதோடு அவற்றை வைத்து ஆளும் அருமை யான வயதையும் இனுமாகத் தந்திருக்கிருனே இறை வன். அவனது சிபாரிசு வரம்பெற்றுள்ள சிவசெம்மல் களின் துணைபெற்று அவனைச் சந்திக்கவே ஞம் இந்த மனித உடல் எடுத்து வந்நது. அப்படிச் செய்யாமல் வேறு வேறு அழி செயல்களில் ஞம் ஈடுபடுவதால், னம்முள்ளே இருக்கும் சிவப்பிரகாச சூக்கும காரண தேகவல்லபங்ஙளெல்லாம் மங்ஙி மாறி - ஆவி, சுத்தாவி மயமாக உள்ள அந்நத் தேகங்ஙளின்மீது னரக ஆவி கள் சதா பட்டு, அவற்றின் தன்மை கெட்டு ஞசமாகின் றன. அதைத்தான் சாவு என்கிறது. அப்படிக் கெட் டுப் போகாதபடி, பரிசுத்தஆவி சதா வீசப்பெற்று, எழில் ஒளிர்தேக இன்பப் பூப்பானது னேரத்திற்கு னேரம் வளர்ந்நேறச் செய்து, னித்திய தேக வாழ்வில் ஆக்குவதே எம்முடைய இந்ந எழுபது வருஷப் பாடு. எம்முடைய பேச்செல்லாம் அந்நத் திருச்செயலை அடைய வைக்கவேதா னிருக்கும்.

“இந்ந அருங்ஙாரணச் செயலை இவரால் எப்படிச் செய்ய முடியும்” என்று னிங்ஙளெல்லோரும் னினைக்க லாம். அப்படி னினைப்பது சரிதான் - ஏனெனில் உலக அறிவுக்கு எட்டாத செயல் இது. (தங்ஙள் திருச்சன் னிதியில் இருந்ந அனந்நாதி தேவர்களைச் சுட்டிக்காட்டி)

இவர்களும் எம்மை அப்படி நினைத்தவர்கள்தான் - ஆனால் இன்று, எவர் சிந்தனைக்கும் எட்ட முடியாத அந்த வான வீட்டுத் தெய்வப் பொக்கிஷம் இவர்கள் தலையில் ஏற்றப்பெற்று, இந்தத் தெய்வ வாழ்வில் நம் படிபண்ணி ஆக்கப்பெற்றுள்ளார்கள். இதோ நீங்கள் பார்க்க அவர்கள் கண்களில் நீர் துளிக்கிறதே- அதற்குக் காரணம் "இந்த மகா மகத்துவ வல்லப வாய்மைச் செயலினுக்கு நாம் எடுத்துக்கொண்ட பாடு ஒன்றுமில்லையே - எல்லாம் நம் ஆண்டவர்கள் தந்ததல்லவா" என்று அவர்கள் உள்ளத்தில் இத் தெய்வ நன்றியை எண்ணுவதால்தான். சிறிது காலமாவது இதில் தலையிட்டு நின்று பார்க்கிறவர்களுக்குத்தான் இந்த உண்மை தெரியவரும்.

இது ஒரு கூரை வீடு - இதில் நாம் வசிக்கிறோம். நமக்கு ஒரு வைர வீடு இனாமாகக் கிடைத்தால் எதில் வாழ நம் ஆசைவரும்? இந்தக் கூரை வீட்டை விட்டு வைர வீட்டில் குடி புகத்தான் ஆசை வரும். மனிதனிடத்தில் பேராசை வைத்துப் படைக்கப்பெற்றது, இந்த அழி உடலை விட்டு அழியாத நித்திய முத்தி வைர உடலில் புகுகின்ற மெய்ஞ்ஞான சித்தியைப் பெறத்தான். ஆசை கூடாதென்பவர் மெய்ஞ்ஞான வழிபயன் அறியாதவர்களே ஆவர். ஆசையை நம்மிடத்தில் வைத்துப் படைக்கப்பெற்றது - நம் வயிறு வளர்ப்பதற்காக அல்ல; முடிவில்லாத சுவர்க்கபதி வாழ்வை அடைவதற்காகத்தான்.

ஒரே மண்ணில் சந்தன மரம், புளிய மரம், எட்டி மரம், வேப்ப மரம் முளைத்து வேர்விட்டுப்பணர் விரித்

துப் பெருமரங்களாய் னிற்கப் பார்க்கிரும். அவற்றின் உணவு எவ்வளவு அருமையானது. பூமியிலிருந்து ஒரு மரம் தேடி எடுத்துக் கொள்ளுகிற உணவு மற்ரென்றுக்கு ஆகாது. இப்படி அருமையான உணவுகளை, அவை ஒரு எட்டி அடிகூட வைக்காமல், இருந்த இடத்திலேயே இருந்து தேடித் தங்கள் உடல்களை வளர்த்துக்கொள்வதை னும் பார்க்கிரேமே. னம்முடைய உணவு அப்படி அருமையான உணவு இல்லேயே. அப்படியிருந்தும் இந்த மனிதன் ஏன் தன் வயிற்றிற்கென்று இவ்வளவு பாடும் கவலேயும் அடைகிருன்?

பெண்டு பிள்ளேகளேவிட்டு வெளியேறி மொட்டையடித்துக்கொண்டு கோவணக்கட்டோடு இருப்பவர்களே சாமியார்கள், ஞானிகள் என்று னினேக்கிருர்கள். இப்படி யாரால் ஆகமுடியாது? ஆனல், இப்படித் துணிந்து மானம் கெட்டுக் கையேந்தி னிற்கிற எல்லேக்கு எல்லோரும் வரமாட்டார்கள் என்றுதான் அவர்கள் அந்த வேடம்போட்டு ஏய்த்து மக்கள் மடிகளேத் துழாவுகிருர்கள்.

கலெக்டர் என்று ஒருவன் எழுதிக் கட்டிக் கொண்டால், அவர் மாதிரியே வேடம் போட்டுக்கொண்டால், அவருடைய செயலேச் செய்ய வருமா? வராது. இந்த அழிகின்ற உலகச் செயலே செய்ய வராதென்ருல் அந்த னித்தியச் செயல் வேடம் போடுவதால் வந்துவிடுமா? வராது. இதை எடுத்துக் காட்டி எச்சரித்துக் கண்டித்துத் தடுத்து னிறுத்த வேண்டியது யார்? னம் அரசாங்கந்தான்.

சொரணை கெட்டு, அறிவற்றுப் பிதற்றுவது ஞான மாகாது. மேலும் மேலும் ஞுளுக்குளுள் அறிவு கூரேறி ஒளிவாளாக ஆவதுவே ஞானம். எமன் எல்லையிலும் அஞ்ஞாமல் வீரம் பொழிய னிற்கச் செய்வதுவே ஞானம் - இன்னும் அது, சிவமாகிய செங்கனி யை, மதுரம் பொழியும் மாணிக்கத்தை, தெய்வ மணம் வீசும் தீஞ்ஞுவைத் தேனை, செவ்வானில் குடி ஏற்றும் செங்கரும்புக் கட்டியை, ஜீவ மெய்ப்பிரகாசச் சிருடைக் கதிர்ப்பரப்பைத் தன்னில் தானே கண்டு மகிழ்ச்சி ஏற னிற்பது. அதன் பிறகுதான், தான் (ஒரு குலம்) ஒரு சாதி என்றிருந்த வெறுப்பு அழுக்கு மலமா னது அகலும். சர்வ உயிரும் ஒன்றுதான் எனக் காணப் பெறும். வழிவழி வந்த அந்த அழுக்கைத் தானே போக்கிக்கொள்வது என்பது ஒருக்காலும் முடியவே முடியாது.

வாய் திறந்து ஆலங்காட்டும் வடிவு மாயனுக ஸ்ரீகிருஷ்ணபகவான் அங்கே தன்னை வெளிப்படுத்தி, அர்ச்சுனர் முதலானவர்களுக்கு அண்டாண்ட விஸ்வரூப தெரிசனை காட்டினுர்களே. அந்தத் திருச்செயல் ஒன்றி னுல்தான் வாக்கு மலம் பொடியும். பிறகு இவன்பால் எழுகோடி மந்திரங்களும் சர்வ வேதங்களும் மகாத் துப்புரவாகத் துலங்கும். இவ்வாருக இவனிடத்திலிருக் கும் பொய் மலம் கடியப்பெற்று, மெய் ஒளிவு உள்ளத் தில் பிரகாசிக்கச் செய்யப்பெறும். இச்செயல் அன் றைக்கு எப்படி னடந்ததோ அதுபோலவேதான் இன் றைக்கு இங்கே னடத்தப் பெறுகிறது. அன்றைக்குப் பகவான் வந்தது மக்களுக்காக என்ருல் இன்றைக்கு

மட்டும் அவர் வராமல் இருப்பாரா? - 'வந்நாச்சு' என்பதை எல்லோரும் சிறிது காலத்தில் தெரிந்நுகொள்வார்கள்.

"ஏக ரூப கோடி கிரணோதயம் விரிக்கும் எட்டாத மேனிலை யென்னும் இருதய னிலமும் கண்டோம். இன்னும் அப்பெரிய னிலையிருப்பின் கண்ணே அஞ்ஞாயிதமும் அதிலாறு வீதியும் கஞ்ஞாமனக்கண் கண்டோம். அஞ்ஞுமூன்றெட்டாம் பந்நுலாம் மந்நிரம் அந்நணர் ஆதி மூல வேர் கண்டு மூடலுக்குள்ளே முதலூமை எழுத்தும் வாடாத கன்னி வயது பத்தான ஏடான கலைமகள் இருமணம் காட்டித்தோடுடை செவியும் துலங்நு குண்டலமும் கூடஸ்த பிரம்மக் குறியதில் னின்று வெட்டாத சக்கரம் பேசாத மந்நிரம் எட்டாத புட்பத் தியல் பெலாம் கண்டு பொழுது படாத பொய்கையில் மூழ்கி முழுதுகில் னனையா முக்கரை ஏறி னிழற் சாயலற்ற னீள் உடல் கண்டு னீர் சடைமேலே னின்றதிசயமும் னோர் காவிப் பூப்பும் னீலமலை கண்டு மேல்கீழ் உலகமும் விழுங்நி யங்நுமிழும் ஆலவாய் திறந்ந அதிசயமும் கண்டோம்" - என்று இவர்களெல்லாம் இங்நு ஆடிப்பாடி இருட்பய னீங்நி அருட்பலம் மீறி னிற்கிறார்களே - னும் இவர்களெல்லோருக்கும் னெற்றிக் கண்ணை உண்டாக்கி வைத்திருக்கும் காரணத்தால் அல்லவா இந்ந பெருமித மகிழ்ச்சிப் பூப்பு, இவர்கள் உள்ளத்தில் காணப்பெறுகிறது. இது ஏன் மக்கள் கண்ணிலும் செவியிலும் படவில்லை? பாவ இருள் மலிந்நு திமிரேறிப் புடைப்பாக விரிந்நு னிற்கிற கருணத்தில், எமனென்னும் வேங்கை

வந்துவிட்டால் என்ன செய்வார்கள்? அவன் முன்னிலையில் இந்த அழி உலகப் பவச் செருக்குச் சேட்டை நிற்குமா? தேவ நிர்மாணத் திருநிறை உலகில், வாடாத வயதுடைய வளர்மதி வாழ்வில், இதோ பல ஆயிரக்கணக்கான பேர்கள் ஆகிக்கொண்டார்களே! இது மற்றையோருக்கும் வேண்டியது தானே?

தேவ லோகம் சிருஷ்டிக்கப்பெற்று இங்கே வரும் போல இருக்கிறது. அதற்கான தேவச் செயல்கள் பெருக்கமாக ஒரு எல்லையில் நடந்துகொண் டிருக்கிறது. இது நேரம் அளவுகாண முடியாத பாதகங்கள் சூழ்றி வளர்ந்தேறி அழிவு நேரத்தை வெகு வேகமாக வரும்படி நெருக்கிக்கொண் டிருக்கிறது. அதுவும் வந்துகொண் டிருக்கிறது. இதற்கிடையில் நாம் கொண்டுவந்த காரியம் நினைத்த அளவு முடியவில்லையே என்று நமக்குப் பெருங்கவலையா யிருக்கிறது.

ஒரு பெண் அந்தத் தெருவில் கூத்து ஆடுகிறாள் என்றதும் ஆயிரக்கணக்கான பேர்கள் கூடுகிறார்களே. ஐம்பது ஆண்டுகளாக நாமும் கூவிக் கூவி அழைத்து, எம் வயது வாழ்நாளை எல்லாம் செலவழித்து, இந்த மெய்யில் சேர்க்க முடிந்தது இவ்வளவுதானே என்பதுதான் எம்முடைய கவலை. ஒரு சிறு தொகை மக்களைத்தானே நாம் சேர்க்க முடிந்தது என்று ஒரு நேரம் நமக்கு எண்ணம் வரும். ஆயிரக்கணக்கான மிருகங்கள் வாழும் காட்டில் சிங்கம் ஒன்றுதானே இருக்கும். அதைப்போலத்தான் இங்கே இவர்கள் நமக்கு, என்று நம் மனதைத் தேற்றிக் கொள்வோம்.

சர்வ சாதிகளுக்கும் சர்வ மதங்களுக்கும் சர்வ வேதங்களுக்குமாகப் பூமியடங்கலுக்கும், ஒரு நிஜநிதி

லாபகர வசந்த காலம் நம் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கான பாடல்கள், நூல்கள், மான்மியம், வாக்கியங்கள் அனந்தானந்தம் இங்கு இருக்கின்றன. பயன்படுத்திக் கொள்கிறவர்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கோ என்று நம் சொல்லிக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

294

மனித உடல் எடுத்துப் பிறந்தவர்களுக்கு இளமையிலேயே கற்பிக்கப் பெற வேண்டிய மூன்று பாடங்கள்

(1) இந்த மனித தூலத்திற்குள் அழியாத னித்திய தேகம் ஒன்றிருக்கிறது. அதை மனிதனுக்கென்று தனிச் சீதனமாகத் தரப் பெற்றுள்ள ஆறுவது அறிவைக் கொண்டுதான் கைபோட முடியும். பேரின்பம், அதாவது அழியாத இன்பம், அனுபவிப்பது அந்த னித்திய தேகத்தில்தான்.

(2) மனித உடல் எடுத்த ஒவ்வொருவரும் சாவுடைய னேரத்தில், கசப்பு ஜலம் வெளியாகிப் பிணநாற்றம் எழாதபடித் தப்பிக்க வேண்டும்.

(3) அந்த அருங்காரணச் செயலை இவனுக்குக் கைபலிதமாக்கித் தரவல்லவர்களும், அதற்காகவே இறைவனால் முத்திரிக்கப்பெற்று இப்பூமிக்கு அனுப்பப் பெற்றுள்ளவர்களுமாகிய ஒரு சற்குருபெருமானை இவன் தேடி அடைந்து, அவர்களது இரக்கத்திற்கு ஆளாக வேண்டும். ஒருவன் தூலம் எடுத்துத் தேட வேண்டிய தேட்டு இதுதான்.

(4) அப்படித் தேடிப் பெற்ற சற்குருபிரானைத் தன் கண்ணாக, உயிராக நினைத்து அவர்கள்பால் ஒட்டிப் படிந்து இறுதி வரை நிலை நிற்க வேண்டும்.

இந்த நான்கையும் கற்றுப் பழகுவதுதான் கல்வி. அதன் பயன் நித்தியம் - அழியாமை.

295

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தையும் விட்டு நின்றாலும் பிரம்மநிலை கிட்டாது. ஏன்? அது நமக்குக் கிட்டவில்லையே என்ற விசனம் தானாக உன் நினைவில் சதா குடிஏற வேண்டும். அந்த விசனம் நாளும் வளர்ந்து வளர்ந்து விசனத்தின் கோடிக்குப் போகவேண்டும். இவ்வாறாக அது உன் உள்ளத்தில் கனம்கொண்டு ஏறும்போதுதான் உன் அங்கக் குலங்கள் தெய்வ நீதத்திற்கு இணங்கி நடக்க ஆரம்பிக்கின்றன. காலகாலம் இடையறாது இப்படி ஒட்டிப் படிந்து நின்று அந்தப் பிரம்ம நிலை கைபோடப் பெறுகிறது. இந்த ஆத்திரத்தை உண்டு பண்ணச் செய்கிறது ஆசானின் உபதேசம்.

296

ஆசீர்பாதம் என்ற ஒரு எல்லை இருக்கிறது. ஒரு தெய்வீக மலை இருக்கிறது. அந்த மணிச் சிகரத்தின் ஒரு சரிவில் அது இக்கிறது. அங்கு போய் நின்று கொண்டுதான், அதைத் தொட்டுக் கொண்டுதான் மெய்த்தவ மேருவாகிய பெரியோர்கள் ஆசீர்பதிக்கிறார்கள். ஆசீர்பாதம் கேட்பவர்களின் முயற்சி மேலெழுந்த வாரியாகப் போடுபோக்காக இருந்தால், அப்பெரியோர்களும் போடுபோக்காக வாயினால் 'ஆசீர்பாதம்' என்று

சொல்வார்கள். ஆனால் கேட்பவர்கள் கனிந்து னின்று மெய்ம் முயற்சியோடு கேட்டால் அவர்களும் அந்த ஆசீர்பாத எல்லைக்குப் போய் னின்றுகொண்டு ஆசீர் பதிப்பார்கள். அவர்களை ஆசீர்பாத எல்லைக்குப் போகச் செய்வது, கேட்பவர்களது அன்பு னிறைந்த யதார்த்த முயற்சியே. அது தான் உடன் ஜெயம்.

297

மனிதனைக் குறிவைத்துத்தான் ஈசனின் இவ்வளவு னீண்டகாலப் பாடும் ஊழியமும் - வேறு எந்த படைப்புக்காகவும் அல்ல. அழிந்து போகிற இந்த சிருஷ்டியே இவ்வளவு னீண்ட காலமுடையதா யிருந்தால், னித்தியத்திற்கெனப் படைக்கப்பெற இருக்கிற அந்த சிருஷ்டிக்கு ஒரு கால முடிவு உண்டா? அதைத் தான் வேதங்கள் "சுயராஜ்யம்" என்று கூறுகின்றன. ஒரு பிரம்மாண்டமான அழகிய அரண்மனையைக் கட்டுவதற்குமுன் சாமான்கள் வைக்க, வேலை ஆட்கள் தங்க தற்காலிகமாகக் குடிசை ஒன்று கட்டுகிறார்களல்லவா? அந்தக் குடிசை போன்றதுதான் நம் பார்க்க னிற்கிற இந்த சிருஷ்டி. வர இருக்கிற னித்திய உலகம் அந்தச் சாமான்களைக் கொண்டு கட்டி முடித்த அரண்மனையைப் போன்று எக்காலத்துக்கும் அழியாது னிற்பது. சர்வ சிருஷ்டிகளும் னித்திய உலகாகிய அந்த அரண்மனையை னிர்மாணிக்க வந்த கருவிகளே.

298

மனிதனிடத்தில் மூன்று மலங்கள் இருக்கின்றன. அவை மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றிலும் உள்ள

மலங்கள். அவற்றில் பிரதானமானது வாக்கு மலம். ஒரு மெய்ஞ்ஞான ஆசாரியரை அடைந்து பிரம்மோப தேசம் பெற்று மறுபிறப் படைவதால்தான் வாக்கு மலம் பொடிகிறது. அவர்கள்பால் ஒட்டிப்படிந்து இருக்க இருக்க, வாக்கு மலம் நீங்கி இவனது ஜீவன் மேலும் மேலும் சுத்த மாகிறது; அறிவு துளிர்கொண் டேறுகிறது; ஈளடைவில் எமனையும் கண்டஞ்ஞாத பலம் பெறுகிறது.

299

ஒவ்வொரு மதமும் அபரஞ்ஜியே. பத்தரை மாத்துத் தங்கத்தின் ஒளியைத்தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்; அப்படிப்பட்ட ஆயிரத் தெட்டு மாத்துக் கொண்டது அபரஞ்ஜி. ஆயிரத்தெட்டு அபரஞ்ஜியின் ஒளி கொண்டது ஒரு கீர். ஆயிரத்தெட்டுக் கீர் கொண்டது ஒரு கிரணம். ஆயிரத்தெட்டு கிரணம் உடையது ஒரு மாலி. ஆயிரத்தெட்டு மாலி கொண்டது ஒரு சூரியன். உங்கள் தூலக் கண்கொண்டு பார்க்கின்ற இந்த அழிந்து போகிற சூரியனே இவ்வளவு ஒளி படைத்ததாக இருந்தால், நீக்குதற்கரிய பிறவி இருளை மாய்த்து மறு பிறப்பாளனுகை ஆக்குகிற ஒரு தேவகுரு என்ன அருள் ஒளி யுடையவர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

300

ஒரு பிரம்மநிஷ்டர் ஒரு திருக்குழாத்தில் அமர்ந்து மெய்ஞ்ஞான விளக்கம் செய்து கொண்டிருக்கும் அந்த நேரத்தில் அவருக்குப் பெயர் ஞானி.

அவரே ஒரு னரனை மனுவாக்கி மனுவைத் தேவ னுக்கச் சத்திய மேடையில் அமர்ந்து பிரம்மோபதேசம் செய்துகொண்டிருக்கும்போது அவருக்குப் பெயர் ஞான குரு, சற்குரு.

ஆனல் அவர் இத்தூலவாசனையை விட்டு, அந்நர் முகனேக்குப் பிரயாணமாகி, அன்னம் மயில் வாசி என்று சொல்லப் பெறுகின்ற வாகனத்தில் சவாரியராகி பிரம்மத்தை னேக்கிக் கடுனடை வேகமெழப் போய்க் கொண்டிருக்கும்போது அவருக்குப் பெயர் பிரம்மச்சாரி. அந்நப் பிரம்மத்தை அடைந்நதும் அந்நப் பெயர் மாறி விடும். பிறகு பிரம்மமே அவர்கள்.

301

னம்ம தமிழ் னட்டில் மாதா மாதம் பௌர்ணமி சமயத்தில் திரு விழாக் கொண்டாடுகிறர்களே, அது ஏன்? தெரியாது. மெய்ஞ்ஞான மகத்துக்களுக்கு அவர் களுடைய அகமிய உலகில் ஒவ்வொரு மாதமும் பௌர் ணமி சமயத்தில் ஒரு புதிய பலமும் புதிய காட்சியும் புதிய திருப்பமும் உண்டாகிறது. அது ஒரு சன்னதம் போல அவர்களுக்கு இறக்கப் பெறுகிறது. அத் திருச் செயலைப் போற்றிக் கொண்டாடி அவர்களுடைய மக் கள் அந்நத்தெய்வ வாடையைப் பெறவேண்டு மென்ற கருணை னேக்கத்துடன்தான் மாதா மாதம் பௌர்ணமி சமயத்தில் இந்நத் திருவிழாக்கள் எடுத்து வைக்கப் பெற்றுள்ளன.

இன்னென்று தெரியுமா? வர னிற்கிற அந்ந னித்திய உலகுக்கு முதல் மாதம் சித்திரை அல்ல; மார் கழி.

302

சர்வ புவனத்திற்கும் எப்படி ஒரே சூரியன் உளதோ அப்படியே ஒரே ஒரு தெய்வம்தான் உண்டு. மெய்ன் னிலை கண்ட ஆசான் தான் அந்தத் தெய்வம். உனக்கு நன்மை பயக்குகிற உருவத்தில் உன் கண் முன் னிற் கின்ற தெய்வம் ஆசானே.

"மூக்கில் மூச்சு ஆடுகின்ற எவரையும் நம்பாதே என்பது வேதத்தீர்ப்பு – அப்படி மூச்சு ஆடாதிருப் பவர்களே எங்கள் ஆசான் – இந்த அடையாளம் இல் லாதவர்களைத் தெய்வமாகக் கொண்டால் நரகமே கதி." நம் சபைப் பிள்ளைகள் யார் பேசினாலும் பேச்சு முடிவில் இதைக் கட்டாயம் சொல்லவேண்டும் - அப்புறம் ஒன் றும் பேசக்கூடாது.

303

உனது நாவு எல்லா ருசிகளையும் ருசித்துச் சந்தோ ஷிக்கிறது. உனது கண் எல்லாக் காட்சிகளையும் கண்டு ஆனந்திக்கிறது. உனது செவி எல்லாச் சப்தங்களையும் ராகங்களையும் கேட்டு மகிழ்கிறது. உனது மூக்கு எல்லா வாசனைகளையும் நுகர்ந்து இன்பம் அனுபவிக்க, ஜீவனாகிய வயது வலுவடைகிறது. மிருகங்களுக்கு இந்தக் கருவிகளெல்லா மிருந்தாலும் மனிதனைப் போல அனுபவிக்கும் வல்லபம் அவைகளுக்கு இல்லை. மனி தனது இந்த அழிதேகத்தில் உள்ள கருவிகளே இவ் வளவு வல்லப முடையனவாக இருந்தால், இவனது அகமியத்தில் பொதிந்து வைக்கப் பெற்றுள்ள உயிர் உடலமாகிய அழியாத வைர மணித்தேகத்தின் கருவி

கள் என்ன வல்லமைப் பெருக்குடையனவாக இருக்க வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள்.

304

மனிதனைகப் பிறந்நவன் கடமை என்ன என்பது யாருக்கும் தெரியாது. தன் ஜீவனை, தன் அறிவைத் தரிசிக்கச் செய்ய வல்ல, வேதத் தலையாகிய மூல மந் திரத்தைக் காட்சி ரூபத்தில் அறிவிக்க வல்ல, தன் ஞமத்தை னேருக்கு னேர் தரிசிக்க இவனைத் தேவப் பிறப்பாகிய மறுபிறப்பில் ஆக்க வல்ல ஒரு தேவகுரு பிரானைச் சந்திப்பதுவே மனிதனின் முதல் கடமை. பிறகு அவர்களது தயவால் சகல தவ ஆதிக்கமும் கை கூடும். அத்தகைய முத்தி உருவாகிய தேவகுருவைச் சந்தித்த பின்னரும் இவன் முழு மனத்தோடு அவர்கள் பால் ஒட்டாதிருந்நால் ஆடிக்கொண்டே யிருக்கிற ஊசி யினிடத்தில் எப்படி னூலைக் கோர்க்க முடியாதோ அப் படியே இந்த மெய்யையும் இவன் உள்ளத்தில் புகுத்த முடியாமல் போகும்.

305

உன்னுடைய அங்கக் குலங்களை ஆண்டு அரசு பண்ணிக் கொண்டிருக்கிற ராஜா உன் னினைவுதான். அதன் கோணலை யாற்றி னேர்மையில் ஆக்குகின்ற அறிவு ரூபக மந்திரியே ஞம்.

306

எம்மிடத்தில் மறுபிறப்புப் பெற்றுள்ள மக்களுக்கு னிஜமான சோதிடம் தெரியும். அதுதான் பிரம்மோப தேசத் திருத்தலம். எமன் எல்லை கடந்து சிவன் எல்லை

யாகிய அத் திருத்தலத்தில் குடிபுகுந்து கொண்டவர்களே அனந்நர்கள்.

307

தொண்ணூற்றாறு வேலை ஆட்கள் (நம் உடலிலுள்ள தத்துவங்கள்) ஒரு எஜமானனின் ஏவுதலுக்கு இணங்கிச் சொற்படி கேட்டுச் சதா நடக்கிறார்கள். ஓயாமல் வேலை செய்துகொண்டே இருக்கிறார்கள். ஆனால் அந்த வேலை ஆட்கள் தங்களை ஏவுகிற எஜமானனைச் சந்திக்கிறதேயில்லை. அந்த எஜமான் எங்கிருந்து தங்களை ஏவுகிறார் என்று அறியவுமில்லை. அந்த எஜமானனையும், அவரது தொண்ணூற்றாறு வேலை ஆட்களையும், அவர்களின் சுறுசுறுப்பான வேலைகளையும் வேடிக்கை பார்ப்பதுவே நிஷ்டை.

308

ஒரு அரசனாகவே இருந்தாலும் தன் ஆட்சி இவ்வளவு காலம் இருக்கும் என்ற நிச்சயம் உண்டா? மகா வீரம் பொருந்திய பெரிய படையை நடத்திச் செல்லுகிற ஒரு அதிபதிக்கு, தான் போய்ப் பொருத நிற்கும் போர் முனையில் வெற்றிகாணப் போகிறோம் என்ற நிச்சயம் உண்டா? இல்லை. இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவர் வாழ்க்கையும் இப்படி நிச்சயமற்ற நிலையில்தா னிருக்கிறது. ஆனால் நீ இங்கு, சாலையில் பெற்றுள்ள வாழ்வு என்ன நிச்சய முடையது பார்! எவரும் தோல்வி யடைகிற எமனுடைய சந்திப்பில் வெற்றி கண்டு வீரக்குன்றேறி நித்தியத்தில் ஆக்கி வைக்கும் வல்லபம் உடையதல்லவா இது!

309

உன் மனைவி உன்னிடம் காட்டும் ஒழுக்கம், அன்பு வாய்ச்சொல்லாகவா இருக்கிறது - செயலாக வன்றோ இருக்கிறது. அப்படியே ஆசானிடமும் உன் ஒழுக்கமும் அன்பும் வரவேண்டும். ஆசானின் இரக்கம் உன்மேல் வர, உன் னடத்தை அவர்கள் எண்ணத் திற்கு னேர்பட இருக்க வேண்டும். அப்பொழுது னீ அறியாமலே உன் உள்ளத்தில், அறிவாகார உப்புதல் திடீர் திடீர் என்று வந்து உராஞ்னும். உனக்கு அதிச யம் மேலும் மேலும் ஏறிவரும். பிறகு உன் மனம் ஆசா னின் மனத்தோடு ஒட்டிப் படியும். அதன்பின் அவர் களின் ஞானச்செல்வம் ஒவ்வொன்ருக உன் கைக்கு வரும். அதைவிட்டு அவர்களிடம் ஞாயம் பேசி வாதாடி ஜெயித்து விடலாம் என்று னினைத்தால் உனக்கு ஒரு பிரயோஜனமு மில்லாமல் போகும்.

310

இந்நத் தூலத்தைவிட்டு ஜீவன் பிரிந்ந பிறகு, இந் நத் தேகத்தைத் தீயிட்டுக் கொளுத்துவதென்ற ஒருபழக் கம் வந்து விட்டதல்லவா? ஆம். அதை மகாக்கொடிய செயல் என்று தெய்வீகச் செம்மல்கள் எல்லாரும் ஒரு முகமாகக் கண்டித்துள்ளார்கள். ஆனல் மக்களில் பலர் - 'இறந்நபின் இந்நத் தேகத்தைப் புதைப்பது னம் குடிக்கே ஆகாது' என்ற னிலைக்கு வந்து அதி லேயே லகித்து, இந்நத் தேகத்தை னெருப்பிட்டுச் சுட் டெரிப்பதையே தங்ஙள் குலப்பெருமையாகக் கொண்டு விட்டார்கள். இப்படி வேதனீத ஜட்ஜ்மெண்ட்டுக்குப் புறம்பாகப் போய்விட்ட கூட்டத்திலிருந்ந உங்ஙளை, னம்

எடுத்துப் பிரட்டி, இந்நச் சத்திய வீதி வழியில் ஆக்கி இருக்கிறோம். இதைப் பற்றித் திரினேத்திர பிராணகிய காகபுசுண்டர் அவர்கள், தங்கள் ஜீவமந்திர கிரந்நத்தில் அருளிச்செய்துள்ளதாவது:—

பாருமதில் உடலொட்டி னின்ற ஆவல்
பக்குவங்கள் அறியவோ காத்த தாகும்
தேருமந்ந உயிருமே வெளியில் வந்நால்
தேகத்திற் கிட்டஆவல் அதனி லொட்டும்
வேறுமதே செய்திட எரிப்போ மாகில்
வேணுமென்று செய்துகொள்ளத் தனித்தே போகும்
கோருதற்கும் பின்வருவ தெவ்வா றய்யா
குறிப்பிடுவீர் என்றதற்கு முறையும் சொன்னர்.

முறையுமதில் பதிந்நஉயிர் வெளியு மானல்
முத்திரையும் சுருங்குமே லிங்க வங்கம்
துறையுமுடன் மூடுவதும் ஆவி மெய்யைத்
தொட்டாலும் பத்திழுக்க முடியா தய்யா
தரையுமதில் எதனலே என்றி வரும்
தன்னினுள் யூகிக்கத் தெளிவு கொண்டு
உரையதனில் அந்நலிங்க கவசந் நானே
ஓதுக்கினல் அழிவில்லை என்று சொன்னர்.

(வால்யம் 13—668 , 669

ஏழுவித ஆவிகள் கூடிச் சேர்ந்துதான் உன்னிடத்தி லிருக்கிற பரிசுத்த ஆவியாக ஆகுகின்றது. இந்ந ஏழுவித ஆவிகளில் ஒன்று ஆவல் என்ற ஆவி. இவ் விதமான ஆவிகள் ஏழும் ஒரே கட்டாகக் கட்டுப்பட்டு ஒரு பரிசுத்த ஆவியாகத் தேக மெடுக்கிறது; ஆனல் அதைத் தீயிலிட்டால் இந்நக் கட்டுப்பாடு கெட்டுத் தனித் தனியாகப் பிரிந்து வேருகி, மறுபடியும் இந்ந மானிட தேகம் எடுக்கின்ற சக்தி அதற்கில்லாமல் போய் விடுகி

றது. ஆகவே அதைக் கைபோட்டு இழுக்க வேண்டிய னேரம் வந்து அதை இழுத்தாலும் அது மனித ரூபத் தில் எழுந்திருக்க முடியாமல் போய்விடுகிறது.

ஏழு வகைப் பொருள்களால் ஆகிய ஒரு வஸ்து இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதி லிருந்து ஒரு பொருளை எடுத்துவிட்டால், பழையபடிக்கு அதே வஸ்துவைச் செய்யமுடியுமா? முடியாது. அறு வகைப் பொருள்களாலான ஒரு வஸ்துவைத்தான் செய்யலாம். அதுபோலவே தீயிலிட்டு எரித்து விட்டால் இந்த மானிட தேகமெடுக்கின்ற ஆவல், அந் நச் சுத்தாவிக்கு இல்லாமல் போய், பின் பற்றி இழுக் கப் பெறும்போது, னித்திய அழியாத மனித தூலத்தில் எழுந்திருக்க முடியாமல் போய் விடும். பிறகு அதற்கு வேறு தேகந்நான் கொடுக்கப்படும். ஆகையால்தான் "பரனளிக்கும் தேகமிது சுடுவ தபராதம்" என்ற சட் டத்தை ஞம் ஆதினிலேயே எமது குலமக்களுக்கு எடுத்து வைத்தோம்.

311

ஹபீப் என்று சொல்லப்பெற்ற என்றும் பத்து வயதுள்ள சத்தினியாகிய உலக அன்னையை, எல்லா ஜீவகோடிகளையும் தன் சூலில் வைத்துப் பெற்றெடுத்த அன்னையை, ரூபா ரூபியாக உன் முகத்தில் வைத்து னீ படைக்கப்பெற் றிருக்கிருய் – அவள் இல்லையென் ருல் இந்த உலகமே இல்லை. அறியாதவர்களுக்கும், அசட்டையா யிருப்போர்க்கும் அவள் ரண சங்காரி. அவள் வேறு வேறு உருவோடு வேறு வேறு வல்லபத் தோடு இவ்வுலகத்திற்கு வந்துகொண்டே யிருப்பாள்.

உன்னை ரக்ஷிப்பதும் அவனே - அவனைத் திரும்பிப் பாராவிட்டால், பக்ஷிப்பதும் அவனே. அந்த அன்னையை உனக்கு அறிமுகப் படுத்தி னேசமாக்கி வைக்க வந்த னும், உன் கையை எதிர் பார்க்கவில்லை. ஏன்? உன் கையில் இருப்பது துன்பம், கவலை, பயம், ஓயா மாறித் தனம், னரகலாகிய சிக்கு என்பது எமக்கு னன்ருகத் தெரியும். சுவர்ணபதிக்குப் போக லாயக் குடையவன் என்றே னீ இந்த சத்தினி வடிவத்தில் படைக்கப்பெற்ருய். ஆனல் னீ அதற்கு லாயக்காகிக் கொள்ளாமல் மாடு ஆடு இவற்றிற்கும் மட்டமாகப் போகிருய். இதை னும் னிரூபிப்போம். பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு னிரூபிச்சும் விட்டோம். னிரூபிக்கவும் இருக்கிருேம். சொல்லிவிட்டுப் போகிறவர்கள் னும் அல்ல.

312

உன் ஜீவ தேகமாகிய சூக்கும தேகம் - சத்தினி உடம்பு - அதுதான் கீர்த்தி வைக்கும் பாத்திரம். அதுவே எல்லாக் கீர்த்தியையும் படைத்த பாத்திரம். அதை முதலில் னீ கையில்பெருமல் கீர்த்திதேடி எங்கே வைப்பாய்? எச்சித்தன இச்சைக்கு உன் கையை எதிர்பார்க்கிறவர்கள் இவற்றை எல்லாம் இப்படித் திட்ட வட்டமாக எடுத்தெடுத்துச் சொல்லமாட்டார்கள் - ஏனெனில் பாவம் - அவர்களும் உன்னைப்போல அதோகதியில் இருப்பவர்களே. இதை உனக்குச் சொல்ல ஒரு னுதியுமில்லை என்று இரங்கி னும் சொல்ல வந்திருக்கிருேம்.

இந்த உலகத்தில் னீ அரச பதவியே ஏற்று னின்ருலும் கடைசியில் உன் தலே புழுத்துக் கெட்டுப்போய் விடத்தானே போகிறது – உஜார்.

313

மனிதர்க்காக இறைவன் தன்கிரயம் செய்து வைத்திருக்கிற வாழ்க்கைகள் அனந்நானந்நம், ரக ரகமான முடிவில்லாதவைகளாக இருக்கின்றன.

எம் னினைவிலிருந்து வெளியாகும் கோடியில் ஒன்றை – அணுவில் ஒரு அணுவை – னம்பிக் கைப்பற்றினல் எம்மிடத்திலுள்ள இந்நப் பெருமித மெய் வாழ்வை எல்லோர் தலேயிலும் ஏற்றிவிடுவோம்.

ஒரு கம்பு விதையைப் பார்த்தால், பின் அது முளைத்து வெளியாகும் 5 அடி உயரச் செடி தெரியுமா? இந்த மெய் வாழ்வில் வைத்துக் கம்பு விதையைப் பார்க்கிறவன் போல் இருக்கும் னீ, னும் சொல்லும் அதன் பின்கால எண்ண முடியாத னித்திய வரவுகளைப் பற்றி எப்படி னினைப்பாயோ என்றுதான் அதைப்பற்றி வெகு சூதானமாக ஒவ்வொன்ருக வெளியாக்கி வருகிரேம்.

314

ஜீவன் மரண அவஸ்தையில் சிக்கி னலியாவண்ணம் பாதுகாப்பதுவே சேவை. 'சாவதனைத் தள்ளியே சேவை கொள்ள' என்பது ஸ்ரீ காகபுசுண்டர்பிரான் அவர்களின் திருவாக்கு.

315

எமன் பதி கடந்து விரக்குன்றேறி னித்திய அழியா வாழ்வில் வாழவைப்பது, அறிவு. தனக்கு

மகா மட்டமான எமனைத் தன்னை அதிகாரம் பண்ணும் எஜமானுக ஆக்கிக் கொள்வது, மனம். ஆகையினுல்தான் எல்லோரும் மன வெறியால் எமன் கை சிக்கி மாள்கிருர்கள். மனம் என்பது அழிவையே தருவது. ஆகையால் மனத்தைக் கொண்டு தேடினது அனைத்தும் அழிக்கப்பட்டுப் போவனவே. அவற்றில் ஒட்டியிருக்கும் மனிதனும் கடைசியில் அழிந்து போகிருன். னித்திய வாழ்வு வரம் பெறுவதற்கான அமானிதமும் தனித்த வல்லப வரங்களும் வாங்கி வந்த மனிதன், தன் மேன்மை அறியாமல் இறுதியில் தனது அடிமையாகிய எமனிடத்தில் சிக்கி, கசப்பு ஜல அடையாளத்தோடு சாகிருனே! அப்படிச் சாகலாமா? தற்கால உலகில் - அறிவு அழிக்கப்பட்டே போய்விட்டது. அறிவுக்குப் பதிலாக வெறிகொண்ட மனதையே அறிவு என்று வைத்துக்கொள்ளபட்டு விட்டது. இதை இப்படி எடுத்துக் காட்டிக் குறுக்காட்டிச் சொல்லுவதற்கு இது ளுள் எம்மைத் தவிர இந்த உலகிற்கு வேறு ளுதி இல்லை.

316

இந்த ஊன தேகத்தில் வைத்து, எத்தனை பிறப் பெடுத்து ளும் இந்த அறிவுப் பிறப்புக்கு வந்துள்ளோம் என்று கேட்டால் யாருக்காவது தெரியுமா? தெரியாது. அறிவுப் பிறப்பாகிய இந்தப் பிறப்பு எடுப்பதற்கு முன், ளும் ஐந்து பிறப்பு எடுத்துள்ளோம். இதை னம் வாய் மூலமாக வெளியாக்கினுல் அல்லது வேறு யாருக்கும் தெரியாது. எவ்வளவு காலம்

வேதத்தைப் படி படி என்று படித்தாலும் அதில் கூறி யுள்ள அந்நரங்கப் பாஷை யாருக்கும் தெரியாது.

ஒரு விதையைப் பூமியில் நட்டால் அது முளைத்து, இலை கிளை வாது கொம்பு என்று பல பலவாக வளர்ந்து மரமாகிறது. விதையிலிருந்து வெளியான முதல் முளை யோடு நின்று விடுவதில்லை. அது போலவே மனிதனும் ஒவ்வொரு பிறப்புக்களாக மாறி மாறி ஆறு பிறப்புக்கள் எடுக்கிறான். முதலில் தாயின் வயிற்றில் இருந்தோமே, அப்போது உயிர்ப்பாகிய சுவாசம் இல்லை. தொனி யாகிய சப்தம் இல்லை. உயிர் மட்டும் இருந்தது. அந் நச் சடப் பிறப்பில்தான் நாம் முதல் முதல் இருந் தோம். அது ஒரு மடம். அதிலேயே நாம் தங்கி விடுவ தில்லை. பிறகு அந்நக் கருவறையிலிருந்து ஒரு தலை வாசல் வழியாக இந்த மனித ரூபமாகிய தேகம் - எல் லாரும் பார்க்கக்கூடிய தோற்றத்தில் வெளியானோம். முன்னே சுவாசம் இல்லை. இப்ப சுவாசம் வந்தது. முன்னே சப்தம் இல்லை. இப்போ சுவாசம் போய் ஒரு எல்லையில் முட்டவும் சப்தம் உண்டாயிற்று. கண், செவி, வாய் முதலியன இருந்தன. ஆனால் அவை மரத்தில் உள்ள துளைகள் போலத்தான் இருந்தன. கண் இருந்தும் குருடாய் இருந்தோம். காது இருந்தும் செவிடாய் இருந்தோம். மூக்கு இருந்தும் வாசனை தெரியவில்லை. நாக்கு இருந்தது, ருசி தெரியவில்லை. சர்க்கரைத் தண்ணீர் கொடுத்தாலும் அழுகை - வேப்ப எண்ணெய் கொடுத்தாலும் அழுகை. இப்படி ஒரு மூடகமான பிறப்பில் இருந்தோம். ஆனால் அம்மா

தூக்கி மடியில் வைத்துக் கொண்டால் கொறப்பயல் மாதிரி தூங்குவான். கீழேபோட்டால் அழுவான். ஆகவே உணர்ச்சி அறிவு ஒன்றுமட்டும் இருந்தது. அந்த அறிவில் தங்கினேமா? இறைவன் னம்மைத் தங்க விட்டானு? இல்லை. கருவிகள் எல்லாம் இருந்தன. ஆனல் அவற்றைப் பிரயோசனப்படுத்தாத பிறப்பில் இருந்தோம். இது இரண்டாவது பிறப்பு. தேகம் ஒன்ருகவே இருந்தாலும், பிறப்பு முற்றிலும் வேருனது. அந்த ஓரறிவுப் பிறப்பில் தங்கினேமா? இறைவன் தங்க விட்டானு? இல்லை. அதிலிருந்து மூன்ருவது பிறப்பிற்குள் னுழைந்தோம் - அது முன் இருந்த தேகம் மாறி, கண் காது முதலிய கருவிகளை உபயோகப் படுத்தும் பிறப்பு - முன் இருந்ததைவிட மேலான தொரு பிறப்பு. கண் பார்க்கத் தெரிந்தது. ஆனல் சும்மா பொதுவாகத் தெரிந்ததே தவிர விபரமாகத் தெரியவில்லை. கை தட்டினுல் செவி கேட்டது. னல்ல சப்தம், கெட்ட சப்தம் என்ற வித்தியாசம் தெரியவில்லை. பால் கொடுத்தால் மொச் மொச்சென்று குடிப்பான், மருந்து கொடுத்தால் அழுவான். பட்டு மெத்தையில் போட்டு இருந்தாலும் தெரியாது; மலஜலத்தில் கிடந்நாலும் தெரியாது. தேள் மேலே கை வைத்ததும் அது கொட்டுது - அதனல் வலிக்குது - அந்த உணர்ச்சி தெரிகிறதால் கூ கூ என்று கத்துவான். ஆனல் தேள் கொட்டினதால்தான் இந்த வலி என்று தெரியாமல் மேலும் அதன்மேல் கை வைக்கும் பிறப்பு. இது, மூன்ருவது பிறப்பு - அதில் னும் தங்கவில்லை.

ஞன்ஙாவது பிறப்பில் னுழைந்நோம். கண் காது முதலிய கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு பொருளேயும் செயலேயும் விபரமாக அறிகிற பிறப்பு. இனிப்பு இன்னது அது னமக்கு வேண்டும். கசப்பு இன்னது அது னமக்கு வேண்டாம். அம்மா அப்பா இன்னுர் என்று தெரிந்நு எட்டிப் பாய்வோம் – அன்னியரைக் கண்டால் வெறுப்பாகப் போகமாட்டேன் என்று திரும்பிக் கொள்வோம். னல்ல சப்தம் இன்னது பயங்ஙர சப்தம் இன்னது என்று ஒவ்வொன்றையும் பிரித்துப் பிரித்து அறிகிற அதிசயப் பிறப்பு. முன்னிருந்ந அதே தூலந்நான் இப்படி மாறிற்று. ஆனல் அந்நப் பிறப்பில், தின்கிற பழத்தை ஒரு கையிலும் பவுனே மற்ருெரு கையிலும் வைத்துக் கொண்டு எது வேண்டும் என்று கேட்டால், பவுனே விட்டுவிட்டுப் பழத்தைப் பிடுங்ஙிக் கொள்ளுகிற பிறப்பு. பொரி கடலே மிட்டாய் வேண்டுமா, ரத்தின சரப்பளி தங்ஙமாலே வேண்டுமா என்று கேட்டால் பொரி கடலே மிட்டாயை வேண்டுகிற பிறப்பு. தங்ஙமாலேயைத் தந்நாலும் அதை மண்ணிலே போட்டு விளேயாடும் பிறப்பு.

அதற்கு மேலே இன்ஞெரு தெளிவுடைய பிறப்பு எடுத்தோம். அது ஐந்நாவது பிறப்பு. பவுனே வாங்ஙிக்கொண்டால் அதைக் கொண்டு எத்தனேயோ பழங்ஙளே வாங்ஙிக் கொள்ளலாமே என்ற அறிவு படைத்த பிறப்பு அது. எல்லாம் தனக்கு வேணுமென்று ஆவிப்

பாய்கிற அறிவு பெற்ற பிறப்பு. அந்நப் பிறப்பில் தங் காமல் இன்னொரு மாற்றம் - இன்னொரு பிறப்பு எடுத் தோம். வேறு தூலமல்ல - முன்னிருந்த தூலத்தில் தான் அந்த மாற்றம். நம் தேகத்தில் ரோமம் இல் லாத சில இடங்களில் கரேல் என்று ரோமம் முளைத் தது. நாம் நினைக்காத எல்லையில் இன்பம் அனுப விக்க ஒரு ஆசை வந்தது. இது ஒரு அதிசயத் தோற் றம் அல்லவா? நமக்குத் திடமான தேகம் வேண்டும், நோய்நொடி இல்லாது எப்பவும் அழகாகவே இருக்க வேண்டும், நம் அழகு மாறவே கூடாது; கீர்த்தி, நன்மை எல்லாம் நமக்கே வேண்டும் என்று ஆசைப் படுகிற பிறப்பு அது. எல்லாம் அழியாமல் நித்திய மாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிற இந்த அறிவு கொடுத்தது அழியாத நீண்டகால வாழ்வாகிய நித்திய வாழ்வை நாம் அடையவேண்டும் என்ப தற்காகத்தான். இறைவன் நமக்கென்று தன் கிரயம் செய்துவைத்திருக்கிற அதிசோபன சுகந்த வாழ்வை நாம் கைபோடுவதற்கு என்றே அந்த அறிவுப் பிறப்பாகிய ஆறுவது பிறப்பு வந்தது. இப்படி ஆறு பிறப்புவரை இறைவனே ஒவ்வொரு பிறப்பாக மாற்றி மாற்றி வளர்த்து வருகிறான். இந்த ஆறுவது பிறப்பில் அறிவு என்ற மாணிக்கக் கஜானாவை நம் தலையில் கட்டிவிடுகிறான். இந்தப் பிறப்பில் நுழைந்ததும் பையன் என்ற பெயர் போய் மனுசன் என்ற பெயர் நமக்கு வந்துவிடுகிறதல்லவா? ஆகவே மனு ஈசன் ஆகவேண்டிய தனிக் கடமை வந்துவிடுகிறது. ஆனால்

அதை னிறைவேற்றிவிடாமல் னம் மனத்தின் அழி செயல் இச்சை குறுக்காட்டி னிற்கிறது. அதற்கு இசைந்துவிட்டால் னித்திய னரகம் வந்துவிடுகிறது.

இந்த ஆறுவது பிறப்பிலிருந்து—ஏழாவது பிறப்பாகிய பிறவாப் பிறப்பை னித்தியப் பிறப்பை னும் அடைய வேண்டும். இது னம்முடைய அறிவில் வைத்துப் பிரட்டிப் படைப்பிக்கின்ற அரிய பிறப்பு. இதை அடைய ஒட்டாது தடுத்து ஆபத்தாய் னிற்கிறது உன் பேய் மனம். வஞ்ஞகச் சதி செய்கின்ற உன் புலன்களுக்கு அது உதவி தரும் வாகனமாக னிற்பதால் அறிவைப் புலன்கள் வென்று விடுகின்றன. னித்திய அறிவை அடைய ஒட்டாமல் தடுத்துவிடுகின்றன. அவ்வாறு தடுத்து உன் வஞ்ஞுப் புலன்கள், எமனிடம் உன்னைக் கொண்டுபோய்ச் சிக்க வைத்துவிட்டு, அவை ஒதுங்கிக் கொள்ளுகின்றன. அந்த வெறி கொண்ட புலன்களையும் அவற்றிற்கு உதவியாக னின்று கொண்டு எது வந்தாலும் பத்தலே பத்தலே என்று பேயாய்த் திரியும் சதி மனத்தையும், பொய் வேடம் போட்டுப் பயில் பண்ணிச் செயித்து, னித்தியத்துவம் என்ற சீவ சிம்மாசன மேடு ஏற்றுவதற்கு, னம் அறிவுக்குத் தூலத்துணையாகிய பேயோடாடும் பெருமான் ஒருவர் வேண்டும். தெய்வத்தாய் ஒருவர் வேண்டும். அவர்களைத் தஞ்ஞுமாக னும் அடையவே தான் வேண்டும். னித்திய அறிவுபெற்ற னம்மை அழிவில் புகுத்த னிற்கும் பேய் மனதைத் திருப்பிச் சாவாவர முத்தி வழி னடத்தும் ஒரு அறிவாகார வல்

லபரை - னித்திய ரூபகரை இப்பவே அடையாவிட்டால், னீங்காத தண்டனையாகிய னரக அவஸ்தையே வந்து விடும். அங்கு வாழ்க்கை அலற னிற்கும் கொடிய னெருப்பே; உணவு னரகலே. அறிவுப் பிறப்பாகிய இதில் ஏற்படும் தவறுதல் ஒரு னுள் தவறுதலா? எக்கோடி காலத்திற்கும் அவஸ்தையில் புகுகின்ற தவறுதல் அல்லவா? இதை எச்சரித்து அறிவிப்பதற்குத்தான், இந்த னித்திய முத்திக் கல்வியைக் கற்பிப்பதற்குத்தான் எல்லாக் கிரந்நங்களும் எல்லா வேத பாடங்களும் வந்நன.

ஒரு எல்லையில் மூச்சு ஆடாமல் இருந்த பிறப்பிலிருந்து மூச்சு ஆடிச் சப்தம் தோன்றிய பிறப்பு அடைந்நோம். முன்னிருந்த எல்லையில் உணவு வேறே - பின்வந்த எல்லையில் உணவு வேறே. இவ்வாருகவே ஒவ்வொரு பிறப்புக்களாக மாறி மாறி, இல்லாமல் இருந்து ஒவ்வொன்ருக உண்டாகி உண்டாகி, னித்தியத்தை அடைகிற ஆருவது பிறப்பு வரை வருகிரேம். இந்த அரிய பிறப்பிலே இருந்து அவஸ்தை அலகை தேகத்தில் புகாமல் னித்திய சுவர்ணபதி தேகத்தைக் கைபோட வேண்டும். அதற்கு, னம் வஞ்ஞப் புலன்களின் சதியை வெல்லக்கூடிய ஒரு ஜீவரட்சிப்புத் தாயை, பேரறி வாகரத் துணையை, காருண்யத் திருமேனி தாங்கி வந்துள்ள தெய்வ தேசிகேந்திரரை அடைய வேண்டியது மனித தூலம் எடுத்த எல்லாருடைய முதன்மையான அதி முக்கிய கடமையாகும். இவ்வாறு அவர்களைத் தேடி அடைந்து தஞ்ஞம் புகவில்லையென்ருல், அவர்களின் காருண்யக் கோட்டைக்குள் னீ

குடியேறிக் கொள்ளவில்லை யென்றால், நிச்சயம் உன் அறிவு சிறுத்து மனப்பேய்க்கு அடிமையாகி விடும். அதன் பயன் எமனாகிய மறலி செய்யும் வாதனையில் புக்கு, கற்பகோடி கால அபாயத்தில் நீ நுழைய வேண்டியதுதான். இணை துணையற்ற அந்த ஆபத்தை மாற்றித் தப்பித்துக் கொள்வதற்கு அல்லாமல் இந்த அருமையான மேலாம்பரமான அறிவை உனக்குக் கொடுத்தது வேறு எதற்கு?

"வெறி கொண்ட இந்த எண்ணத்தில் இருந்தால் நிச்சயம் நாம் நாறிச் செத்தே போவோம்" என்று அஞ்சி இந்த உடலை வெறுத்து, வைராக்கிய புருஷனாக நின்று, நித்திய வைராக்கிய மேருவாகிய தெய்வ ஆசானை இடையறாது பற்றிக் கொள்ள வேண்டும். அவர்களிடத்தில் ஒத்தை மனம் படைத்தவனாய் நிலைத்து நின்று நஷ்டமோ கஷ்டமோ அவமானமோ எது வந்நாலும் வைத்த அடி பின் வாங்காத திடசித்தனாய் நின்று மாறாத நித்திய வாழ்வைக் கை போட வேண்டும்.

ஒவ்வொன்றாக ஏழு பிறப்பு எடுத்து நித்திய முத்தி வாழ்வை அடைகிறோம் என்ற இந்தத் தேவரகசியம் இது காலம்வரை யாருக்காவது தெரியுமா? தெரியாது.

317

பர்ணக சாலை பந்நடி மேடை அன்னகக் கொலு அரண்மனை வாசல் எல்லாம் கட்டி ஒருவன் வாழ்ந்நாலும் அந்த இடங்கள் எல்லாவற்றிலுமா இவன் உருண்டு பிரளப்போகிறான்? இவனுக்கு வேண்டியது

3½ முழ இடந்நானே? இப்படி யாராவது னினைத்துப் பார்ப்பதுண்டா? அழிந்து போகிற ஊன வாழ்வைத் தினம்தினம் பெரிதாக்கப் பார்க்கிருயே, அதே வெறி கொண்டு அலைகிருயே, அப்படி ஆக்கி அலகைத் தேகத்தை விரைவில் எடுத்துக் கொள்ள ஆசையா?

318

எமன் கண்ணுல் பார்க்கக் கூடியவனு? இல்லை. அரூபமானவன். ஆனுல் சாவுடைய னேரத்தில் அவன் இந்ந மனித தேகத்தைப் படுத்துகிற பாடு, அலங் கோல வேதனை எல்லோரும் பார்க்கும்படி ரூபமாய்த் தெரிகிறது. அவன் உள்ளேயே இருந்து சதிசெய்து வஞ்சகமாய்ச் சாய்த்து விடுகிருன். பாவி என்று காட்டு கிற கசப்பு தீட்டு பிணனுற்ற ஜல அடையாளமும் ரூபத்தில் வந்து விடுகிறது. இவ்வாறு அரூபத்தில் னின்று சாய்த்து விடுகிற அந்நக் கோரனை, சதிகாரனை ரூபத்தில் வந்நுள்ள ஒருவர்கள் தங்களின் தவாதிக்க வலிமையினுல் அடக்கி, இல்லாமல் ஆக்கி, உன்னை னித்திய பேரின்ப தேகத்தில் ஏற்றி வைக்கின் ருர்கள் என்ருல், இவ்வுலகில் இதைவிட வேறென்ன அதி சயம் இருக்கிறது! அறுசுவை தேடி அழி சுகபோகம் அடைவதில் னுணுக்க னுணுக்கமாக உன் அறிவு ஓடு கிறதே, அந்ந அறிவு இந்நச் சாவாவர மெய்வாழ்வில் ஏன் வரவில்லை? வராவிட்டால் அதற்குத் தண்டனை வராமலா இருக்கும்? கட்டாயம் வரும்.

319

இந்நத் தூலப் பிறப்பு எடுப்பதற்கு முன் கருவ றையில் இருக்கும்போது உனக்கு உயிர் இருந்நது –

ஆனுல் மூச்சு இல்லே. அப்படி இருந்நதால் தான் மகாவல் லபமான ஐந்நு பொறிகள் முதலானசகல கருவிக் குலங் ஙளும் சுமார் ஐந்நு மாத காலத்தில் பூத்துக் காய்த்து இந்ந மனிதரூபம் எடுக்க முடிந்நது. பிறகு வெளியே வரும்போது ஒரேனேரத்தில் ஒன்பது ஆபரேஷன்ஙள் ஆகிறது. அதன் வடுக்கள்தான் னவத் துவாரங்ஙள் - வெளியே வந்நதும் உன் உள்ளே இருந்ந ஞதம் மூக் கில் வந்நு மோதியதும், குவா குவா என்ற தொனி கிளம்ப மூச்சும் ஓட ஆரம்பித்தது!

இந்நத் தூலப் பிறப்பைப் போலவே னீ மறு பிறப்பு எடுக்கும் னேரத்திலும் உன்ன அந்நப் பிர ணவ கருவறைக்குக் கொண்டுபோய், மூச்சு ஆடாமல் ஒரு அணு னேரமோ அல்லது ஒரு யுகமோ அங்ஙு இருக்க வைத்து, உன் அங்ஙக் குலங்ஙளே மாற்றி மறு படியும் தேவனுகப் படைக்கப் பெறுகிறது. இதை இது ஞள்வரை ஞம் உனக்கு வெளியாக்க வில்லே.

இறுதி னேரத்தில் கசப்பு அடையாளஎ பிணனுற் றம் இல்லாமல் முக மலர்ச்சியுடன் விளங்ங, அதில் வியர்வை கொட்ட, சூடு மாருமல், கை கால்கள் துவண்டு இருக்கப் பரிசுத்தப் பிரயாணம் ஆகிறவர் களுக்கு ஆதியில் தாயின் கருவறையிலிருந்நதுபோலவே மூச்சு ஒடுங்ஙி உயிர் உள்ளே அடங்ஙி இருக்கிறது. அப்படி ஆனவர்களேத்தான் ஜீவப்பிரயாணம் ஆன வர்கள், அடக்கம் ஆனவர்கள் என்று சொல்லவேண் டும்.

320

திரு. சின்மயானந்தாவும், மெ. எஸ். ஆர். நாயுடு பி. இ.
(ஹைவேஸ் சூப்பரெண்டிங் என்ஜினியர்)
அவர்களும் வந்திருந்தபோது,

ஆண்டவர்கள்:— ஐயறிவுடைய புலிக்குப் பசி வந்தால் ஒரு மிருகத்தை அடித்துக் கொல்லும். பசி ஆறிய பின் அடுத்த ஒரு மிருகம் எதிரிட்டாலும் கொல்லாது. அடுத்த நாளைக்குச் சேர்த்து வைப்போம் என்ற எண்ணம் அதற்கு வருவதில்லை. ஆனால் மனிதன் - ஆறறிவுடைய இவன் - அப்படியா? பத்து கிடைத்தாலும் அடித்துச் சேர்த்து வைக்கிறான். இவன் இருந்தால் நூறு ஆண்டு தானே இருப்பான். அப்படியிருக்கும்போது இவன் ஏன் சாஸ்வதமாக இருக்கக்கூடிய மதிப்பு, கட்டிடம், நிலபுலம் தேடுகிறான்? இந்த எண்ணம் இவனுக்கு வருவது ஏன்? எப்பவும் சாகாமல் இருக்கப் பிறந்தவன் என்பதையே இது காட்டுகிறது.

மனைவி மக்களுக்கு வெகுநாளைக்கு இருக்கவேண்டும் என்று வீடு நிலம் முதலியன தேடிவைத்தானே - ஆனால் செத்து எடுத்துப்போகும் போது, "அப்பா - திரும்பி வந்துவிடாதே, பிள்ளைகுட்டிகள் க்ஷேமமாய் இருக்கவேண்டும்" என்று தன் மனைவியே சொல்லுகிறாளே, வீட்டில் வேலைசெய்யும் ஒரு கூலி ஆளைக்கூட அப்படிச் சொல்லமாட்டாளே. ஆகவே இவன் - அப்படித் தள்ளப்பட்ட, வெறுக்கப்பட்ட சாதியாக, பிசாசு என்ற சாதியாக ஆகிவிட்டான் என்று காட்டுகிறதல்லவா? இதற்கா, இவ்வளவு அவமானப் பட்டுச் சாகவா, மனிதன் பிறந்தான்? இல்லை. மனு

ஈசனுகப் பிறந்நவன் இப்படி மனு னீசனுகப் போய்விட்டான்.

15 னள் ஒருவனுக்கு ''ஜெயில்'' என்று சொல்லி விட்டால், அந்ந அவமானம் தாங்கமுடியாமல் எல்லா வற்றையும் விற்று அந்ந அவமானத்தைப் போக்கிக் கொள்ளப் பாடுபடுகிருனே! அங்கென்ன னெருப்பு வாளேக் கொண்டா அறுக்கிருர்கள்? உயிரோடு கொதிக்கிற எண்ணெயிலா போடுகிருர்கள்? பாம்பையும் தேளேயும் விட்டா கடிக்க வைக்கிருர்கள்? சீழையும் மலத்தையுமா குடிக்கத் தருகிருர்கள்? இல்லேயே. இங்கே இந்ந சிறு அவமானத்திற்கும் சகிக்காதவன் - ஒரு சின்ன முள் குத்தினுலும் பொறுக்கமுடியாதவன் ஆச்சே னீ. னித்திய அழிவில்லாத தேகம் கொடுத்து அங்கே னரகில் எக்கோடி காலத்திற்கும் னீங்காத அவஸ்தையும் அவமானமும் அடையப்போகிருயே, அதிலிருந்து தப்ப னீயாக என்ன செய்து கொள்ளமுடியும்? அவ்வித ஆபத்து அவமானத்திலிருந்து தப்பித்துக்கொள்ளச் செய்யவே, எல்லா மதங்களும் வந்நன. அவற்றிற்கு அதிபதிகளாக குரு தேவ பிரான்களும் வந்நார்கள் என்று அருளிச்செய்த பின்,

ஆண்டவர்கள்: உங்கள் மதம் என்ன? என்று கேட்க

சின்மயானந்நர: சிவமதம் என்று பதில் சொல்லவும்

ஆண்டவர்கள்: அதில் இறைவன், மனிதனுடைய இதயத்தில் இருப்பதாகக் கூறியிருக்கிறது. அடுத்த

வைஷ்ணவ மதத்தில், "ஹிருதய கமலவாசன்" என்று சொல்லப் பெற்றுள்ளது. எதிர் மதம் என்று சொல்லு கிற இஸ்லாமிய மதத்தில் "கல்புஅதாவது ஹிருதயம் வெளிச்சமாகணும்" என்று பேசப்பெறுகிறது. கிறிஸ் தவ மதத்திலோ இருதயம் பிரகாசரூபமாகப் போட்டுக் காட்டப்பெறுகிறது. புத்தமதத்தில் "ஓம் பத்மி னீ ஹம்" என்று ஓதப் பெறுகிறது.

ஒரே இடத்தை, அதாவது மனிதனுடைய உள்ள கத்திலுள்ள ரத்தம் சுரந்துள்ள ஒரு கூட்டையே அவை பேசுகின்றன. எவ்வளவு படித்தாலும் அந்த ஹிரு தயத்தைப் பார்க்க முடியுமா? முடியாது. ஒரு மதத் தின் உண்மையை மெய்யை இவன் சந்தித்தால், ஹிருதயம் பிரகாசமாகிறது. னேருக்கு னேர் தரிசிக்க முடிகிறது - பிறகு இவன் எல்லா மதத்தையும் தன்ன தாக னேசிக்கிறவனுக ஆகி விடுவான். (சன்னிதானத் தில் இருந்த அனந்நாதி தேவர்களைச் சுட்டிக்காட்டி) இவர்கள் ஆளுக்கு ஒருமதம், ஒரு சாதி. இப்படி 67சாதி கள். வெவ்வேறு மதத்தினர் உள்ளார்கள். இங்கு எல் லோரும் ஒரே குலமானது - அந்த இறைவனைத் தங்கள் இருதயத்தில் னேருக்கு னேர் சந்தித்ததாலேயே - சந் திக்க வைத்ததாலேயே - இப்படி ஆகியுள்ளார்கள்.

"ஹறுமோர் மாமிசத் துண்டாய்ள ளக்குள்ளி
ருந்தஇ ருதயத்தைக்
கூறவொண் ணச்சம்பத் தெல்லாவி ளைஉத்தி
யோவன மாக்கிவைத்தாய்
பாரிலுள் ளோர்கூறும் இதயத்தை என்குரு
பாரென்று சொன்னவுடன்

பார்க்கப்பார்க் கஆயி ரத்தெட்டண் டமெலாம்
பகல்போலி லங்கக் கண்டேன்

என்ற செய்யுள் பாடப்பெற்றது. தொடர்ந்து–

ஆண்டவர்கள்: ஒரு உத்திரவில் ஒரு ஊரையே சுட்டெரி என்று உத்திரவு போடக்கூடிய ஒரு அரசனல் இந்நக் காரியத்தைச் செய்யமுடியுமா? முடியாது. இத்தகைய காரியத்தையே அன்று பகவான் – போர் முனையில் – அர்ச்சுனனுக்குச் செய்தார்கள். "தரிசனை, தரிசனை" என்கிறார்களே "பார்க்கிறது" என்பது தானே இவர்கள் அர்த்தம்? 30 ஆண்டு காலம் பகவானைப் பார்த்தானே அர்ச்சுனன்; என்ன பயன்? அப்ப தரிசனை என்றால் என்ன? இது ஒரு தேவ ரகசியம் – மெய்க் குரு சன்னிதியில்தான் அது வெளியாகும். பல காலம் கீதையைப் படி படி என்று படித்து – பிறருக்கும் போதிக்கக் கிளம்பி விடுகிறார்களே - அன்று அர்ச்சுனன் பெற்ற பதவியைப் பெற்றார்களா? அந்நக் கீதை எங்கே? அந்நத் திருச்செயல் எங்கே? வாடிப் போய் விட்டதா? மழையில் கரைந்து போய் விட்டதா?

ஆண்டவர்கள்: உங்கள் வேலை என்ன?

சின்ம: வேலை இல்லை - சன்னியாசம் - உபனிஷத்துக்களைப் பிறருக்குச் சொல்வது.

ஆண்டவர்கள்: அதனல் நீ என்ன பெற்றாய்? உனக்கு என்ன ஆச்சு? உன்னால் எத்தனை பேர் அந்ந மெய்ப்பலன் அடைந்நார்கள்?

சின்ம: எனக்குத் தெரியாது – பிரசங்கிப்பதோடு சரி.

ஆண்டவர்கள்:(ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்துக் கொண்டு) இது ஒரு வித்தாக இருந்நது. முளைத்து

மரமாகி - வந்த வேலையை இந்நா முடித்துவிட்டது. நீ அம்மாதிரி சாதாரண ஒரு வித்தா? ஆறறிவு படைத்து முளைத்து வந்த உருவாச்சே நீ! உன் வேலையை-கடவுள் உனக்கு நிர்ணயித்த வேலையை - கடமையை-முடித்தாயா? மனிதனுடைய கடமை இன்னது என்று கூடத் தெரியாமல் இருக்கிறார்கள்.

"கடவுள்" என்றால் என்ன என்று தெரியாமலே உலகம் பாழாகி விட்டது. வந்த பொய்க் குருக்கள் மார்கள் "பராபரா, ஈஸ்வரா" என்று ஆகாயத்தை நோக்கிக் கைகாட்ட, மக்களும் கடவுள் மேலே இருக்கிறார் என்று முடிவு கட்டி விட்டார்கள். அந்தச் சொல், மேலேயா கை காட்டுகிறது? கடம் - தன் தேகத்திற்குள் - என்றல்லவோ சுட்டுகிறது!

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்

என்றுதானே மெய்கண்ட மகத்துக்கள் கூறுகிறார்கள்.

படைப்பில் வைத்து உயர்ந்த படைப்பு மனிதன் அல்லவா? நீ ஒரு வீடு கட்டினால் மாட்டுத் தொழுவத்தில் - கக்கூஸில் போய் இருப்பாயா? உனக்கு என்று கட்டப்பெற்ற அழகிய அலங்கரிக்கப்பட்ட எல்லாவற்றையும்விட மேலான அறையில் அல்லவா தங்குவாய்? உனக்கு இருக்கிற புத்திகூட இறைவனுக்கு இல்லையா? உயர்ந்த படைப்பாகிய மனிதனைவிட்டுக் கல்லிலும் செம்பிலும் கட்டையிலும் காற்றிலுமா இறைவன் தங்குவான்? உன்னில் இருக்கும் அந்த இறை பொருளை நீயாக வெளியாக்க உன்னால் முடியாது. எப்படி தன்னில் இருக்கும் ஒரு குழந்தையை வெளியாக்க ஒரு

ஆணுக்கு ஒரு பெண் தேவையோ, அப்படியே தன்னில் இருக்கும் பிரம்மத்தை வெளியாக்க உன்போல் உடல் எடுத்த ஒரு ஆசான் தேவை. கட்டாயம் தேவை. குரு விலான் பெற்ற வாழ்க்கை, குமரியைக் குமரிகூடி மருவிய சுகத்தையே ஒக்கும். இச்செயல் கடவுளாலும் செய்ய முடியாது. ஞமும் பன்னிரண்டு போலிக் குருக்களைச் சந்தித்துப் பாடுபட்டோம். எல்லாச் சட்டதிட்டங்கள் படி தகச்சத் - இரவு தொழுகை - முதற்கொண்டு காலாகாலம் ஒரு காலில் னின்று செய்தோம். ஒன்றும் கிட்டவில்லை. எம்போல் தேகம் எடுத்துப் பிரம்மம் ஒன்று வந்தது. அதன் காலடியில் சார்ந்தோம். அதன் பிறகே இந்த மெய்ஞானம் எம் கைவசமாயிற்று.

தேகம்னம்போல் உள்ளஎம்குரு ஞதருக்கு
    ஞமமெதும் செப்புதற்கொப் பனேஉளதோ
ஏகன்முதல் யாரையும்இ றைஞ்ஞினேம்
    இவர்தொழில்வி யந்துரைசெ யப்படில்காணேம்

வெளியே இருப்பதுபோல மூன்று உலகம் உன்னில் இருக்குமே. அவற்றைப் பிரித்து வான லோகத்திற்கு, இறைவன் சன்னிதிக்கு உன்னை அழைத்துப் போவது யார்? மெய்வழி எஸ். ஆர். ஞயுடுவைப் பார்த்து- அன்று மூன்று உலகம் கடந்து அத் தெய்வ எல்லைக்குப் போனயே - அப்படி, உன் முயற்சியால் படிப்பால் போக முடியுமா? முடியாது. இந்தத் தேகம் சொற்ப காலம் இருப்பது. ஒரு முள் தைத்தால்கூடத் தாங்க முடியாதது. இதில் அறிவு என்ற பிரகாசத் தூலம் ஒன்று வைத்துப் படைக்கப்பெற்றிருக்கிறது. அதை இப்போதே சந்தித்துக் குடியேறிப் பழகிக்கொண்

டால் - சாவு என்ற அந்த நீண்ட கால அவஸ்தையி லிருந்து நீ தப்பித்துக்கொள்ளலாம்.

சாவருமுன் சாப்பழக்கம் பழகுவதும் எளிதோ
சாவந்நிடில் சமர்த்தும்உந்நன் படிப்பும்அங்கே செலுமோ
சாவருமுன் சாப்பழக்கம் பழகுவதிங் கெளிதே.

உபதேசம் என்றதும் பட்டினி போட்டு மேள தாளம் வைத்துப் பந்நல் சோடனை செய்து ஒரு மந் நிரத்தைச் சொல்வது என்று அர்த்தம். அந்த வார்த் தைக்கு நிஜதத்துவ அர்த்தம் மறைந்து விட்டது. இது வே இப்படியானால் காயத்திரி, சுக்லாம்பரதரம் முதலிய மந்நிரங்களை நேருக்குநேர் இவன் தரிசிப்பது எப்போ? அப்படித் தரிசிக்கப்பெற்றவர்களே இங்குள்ள ஆண் பெண் ஆயிரக்கணக்கான பேர்கள் - இதற்குப் படிப்பு தேவையில்லை. நாம் என்ன உங்கள்போல் படித்தவரா? இல்லை. இப்ப – எமது பிள்ளைகளாகிய இவர்களிடம்தான் தமிழ் எழுதக் கற்றுக்கொண்டோம். ஆனால் எமது நாவில், எமது குருபிரான் சகல வேதத் தையும் எழுதி வைத்து விட்டார்கள்.

மெய்வழி எஸ். ஆர். நாயுடு நேரமாச்சு என்று சமிக்ஞை காட்ட, ஆண்டவர்கள் : அங்குபோய் என்ன செய்யப் போகிறீர்கள்? இந்த வேலையைவிட்டு மற்ற எந்தக் காரியமும் சாவுவேலைதான். சத்தியமாகச் சாவு வேலைதான். போங்க போங்க – உங்கள் வேலைகளுக் கெல்லாம் ஒரு முடிவு வருகிறது. வெகு சீக்கிரத்தில் அதற்கு ஒரு நாள் வருகிறது. நாம் சொல்லவேண்டிய சாக்கிரதையை முற்கூட்டிச் சொல்லிவிட்டோம்.

பிரசாதம் வழங்கினார்கள். பிறகு ஆண்டவர்கள் எழுந்து திருமாளிகைக்குப் போக வெளியே வந்தார்கள். அங்கு ஒருமுறை மண்டியிட்டுச் சின்மயானந்தா வணங்க,

ஆண்டவர்கள்: அழகான தேகம், பாழாக்கி விடாதே, போய்விட்டு வா—

சின்மயானந்தா: அப்படியே வருகிறேன்.

ஆண்டவர்கள்: (நிமிர்ந்து அன்பு ததும்பும் அலங்காரத் தொனியில்) வா – கட்டாயம் வா – தப்பித்துக் கொள்வாய் என்று அருளிச் செய்தார்கள்.

321

ஆண்டவர்கள்: (பேரேட்டுப் புஸ்தகத்தை எடுத்துக்காட்டி) இது ஒரு புஸ்தகம்; (டைரியைக் காட்டி) இதுவும் ஒரு புஸ்தகந்தான். ஒன்று கணக்கு எழுதுவது, மற்றொன்று தேதி தேதிக்கு நடந்தது, நடக்கிறது எழுதுவது. (இன்னும் இரண்டு புஸ்தகங்களைக் காட்டி) இது கணக்கோ, பாட்டோ எழுதுகிற புஸ்தகம்; இது படிப்பதற்குரிய அச்சேற்றிய புஸ்தகம். இவ்வாறு வேதம், காவியம், அம்மானை, கணக்கு, டைரி என்று வேறு வேறாக இருந்தாலும் எல்லாவற்றையும் புஸ்தகம் என்றே சொல்கிறோம்.

புழுக்கம், வித்து, அண்டம், சினை என்ற நால் வகை யோனியில் சினை (கருப்பை) என்ற யோனியை எடுத்துக்கொண்டால் - கோரமாகிய புலி, பெரிய யானை, சிறிய எலி எல்லாம் சினை என்ற யோனியைச் சார்ந்தவைகளே. நாமும் சினையென்ற யோனிப் பகுப்பில் சேர்ந்தவர்களே. புழுக்கத்தால் உண்டாகும் ஜீவர்கள்-

ஈர், பேன், புழுக்கள் முதலியன. இவைகள் ஒரே யோனி. எறும்பு பிறப்பதும் முட்டையிலிருந்துதான்; நீக்கோழியும் முட்டையிலிருந்துதான். ஆகவே இவற்றை யோனி வகையில் வைத்துப் பிரித்தால் இரண்டும் அண்டம் என்னும் யோனியே. புல்லும் ஆல மரமும் ஒன்றா? இல்லை. சந்தன மரமும் வேலா மரமும் ஒன்றா? சவுக்கும் நெச்சியும், நெற்பயிரும் பனை மரமும் ஒன்றா? இல்லை. அப்படி இருந்தாலும் அவை எல்லாம் வித்து என்ற யோனியின் கீழ் வருவனவே. இவ்வாறு ஆடு, மாடு, புலி, எலி, யானை, பூனை முதலிய கோடா கோடியான சாதி அவ்வளவும் சினை என்ற யோனியிலிருந்து உண்டாகின்றவை. இப்படித்தான் சர்வ உலகங்களின் உற்பத்தி. இந்த நால்வகை யோனியில் உண்டாகின்ற தோற்றங்கள் ஏழுவகை - அவை அமரர், மனு முதலாகிய ஏழு வகைத் தோற்றங்கள். இதை வகுத்தது யார்? ஆதி பிதா. இன்று அதை விளக்குகிறவர்கள் யார்?

அனந்நாதி தேவர்கள்: அதே ஆதி பிதா தான்.

ஆண்டவர்கள்: அந்த ஆதி பிதாவின் சொந்தமான யோக்கிய அறிவுடைய பரம்பரைக்குத்தானே இது விளக்கப்பெறும். சரி. அதிருக்கட்டும். ஊர்வன என்ற தோற்றப்பகுதியை எடுத்துக் கொண்டால், அட்டை, அரணை, பாம்பு, பாம்பில் எத்தனையோ வகை; பெரிது, சிறிது (செவிட்டுப் பாம்பிலிருந்து மலைப்பாம்பு வரை). எல்லாவற்றையும் ஒரே இனமாகப் பிரித்தார்கள். எறும்புக்கும் மலைப்பாம்புக்கும் சுவாசம் ஒன்றா? இல்லை. அப்படியிருந்தும் வித்தியாசம் குறிக்

காது அவற்றைத் தோற்றத்தில் வைத்து ஊர்வன என்றே பிரித்திருக்கிருர்கள்.

விலங்கினங்களில் யானைக்கும், பூனைக்கும் பக்கமா? இல்லை. அதே போல மானும் முயலும் வேறே – புலியும் ஞயும் வேறே. புல் தின்கிற சாதி ஒன்று – மாமிசம் தின்கிற சாதி ஒன்று. ஆனல் அவை எல்லாவற்றையும் விலங்கு என்ற இனத்தில் சேர்த்துள்ளார்கள்.

சலம் வாழ் ஜந்துக்களில், கெண்டை மீன், திமிங்கலம், சென்ஞகுன்னி, பறக்கிறமீன் இருக்கின்றன. இனத்தில் வைத்து அவை எல்லாவற்றையும் சலம் வாழ்வன என்று பிரித்துள்ளார்கள்.

இவ்வாறு வகுத்த அவர்களே – ஒரு தேவ புருஷரை அடைந்து அவர் மூலமாகத் தன் ஜீவ னிலையாகிய தேவ னிலையை, பிரம்ம னிலையை அறிந்தவன் எவனே அதாவது மனுத் தோற்றத்தில் வைத்துத் தேவரகசியத்தை உணர்ந்து கொண்டவன் எவனே- அவனை "அமரர்" என்று எழுவகைத் தோற்றத்தில் முதலிடம் தந்து வகுத்துள்ளார்கள். அதாவது, தேவ யோனியில் பிறந்து தெய்வப் பொருளை அறியப்பெற்றவன், மனித உருவில் இருந்தாலும், அவன் உன்னதமாக உயர்த்தப் பெற்றுவிட்டான். ஆகையால், தோற்றத்தில் வைத்து அவனை "அமரர்" என்றும், அவ்வாறு அறிவிக்கப்பெருத மற்றையோர்களை னரர் என்றும் பிரித்துவிட்டார்கள். ஆதிச் சட்டம் வகுத்த அவர்கள், யானைக்கும் பூனைக்கும் உள்ள வித்தியா

சமா வைத்து இதைப் பிரித்திருக்கிருர்கள்? இல்லை. எழுவகைத் தோற்றத்தில் ஒரு இனத்திற்கும் மற்ருெரு இனத்திற்குமுள்ள வித்தியாசம் வைத்துத் தனித் தோற்றமாகப் பிரித்துள்ளார்கள். இதை வைத்துப் பார்க்கும் போது, நீங்கள் 'முன்பு எந்தக் கீழ் நிலையில் இருந்தீர்கள்? இப்ப எந்தத் தூராதிதூர உன்னத எல்லையில் தூக்கி ஏற்றி வைக்கப் பெற்றிருக்கிறீர்கள்' என்று தெரிய வரும். உங்களறிவில் இதை நீங்கள் எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? இல்லை. முதலில் நீ இருந்த பிறப்பு னரன் என்ற இனம். மெய்ச் செயலேனும் அறிவிக்க அறிந்த பிறகு நீ வேறு இனம். அதாவது அமரர் என்னும் இனம் ஆகும். எவ்வளவு பெரிய வித்தியாசம் பார். இந்த பிரம்மாண்டமான வித்தியாசம் தெரியவில்லை என்ருல், தங்கத்திற்கும் வெள்ளிக்கும், தின்கிற பழத்திற்கும் தோலிற்கும் உள்ள வித்தியாசம் தெரியாதவனுக ஆவாய். கொசுவையும், அண்டங்களை அரட்டுகின்ற அண்டரண்டப் பக்ஷியையும் ஒரே இனத்தில் சேர்த்த அவர்கள், மெய்யறியா மக்களை னரன் என்ற தோற்றத்திலும், மெய்யறிந்த உன்னை "அமரர்" என்ற தோற்றத்திலும், பிரித்திருந்தால் உன் பிறப்பின் உன்னதந்தான் என்னே!

பூமி உண்டான கால முதல், சந்திர சூரியாள் முதன் முனை கண்ட கால வரம்பிலிருந்து இதை இவ்வாறு யாரும் பாகுபடுத்திப் பேசவில்லை. வேதத் தெய்வாதீனப் பெட்டகமாகிய தேவரகசிய கஜானுவிலிருந்த இதை இன்னுள்வரை யாரும் எடுத்து வெளியாக்கவில்லை. னும்தான் இதை இன்று எடுத்து உங்களுக்குத் தந்நோம். இது சதுர் யுகத்திற்கு ஒரு வார்த்தை.

மக்களும் ளூமும் வேறு வேறு எண்ண உலகில் வாழ்கிறேம். ஒரே தோற்றத்தைச் சார்ந்த கொசு வாழ்கிற எண்ண உலகத்திற்கும் அண்டரண்டப் பக்ஷி வாழ்கின்ற எண்ண உலகத்திற்கும் இடையில் உள்ள அந்த வித்தியாசமல்ல தேவ குலத்திற்கும் மனித குலத்திற்கும் உள்ள வித்தியாசம். ஒரு இனத்து எண்ண உலகத்திற்கும் மற்றொரு இனத்து எண்ண உலகத்திற்கும் உள்ள வித்தியாசமே, அவர்களுக்கும் னமக்கும் உள்ள வித்தியாசம்.

322

மனுக்குலத்திற்கு மெய்வழியின் அருட்பரிசு

பிறவிப் பயனும் மெய்க் குருபிரானும்

இறைவனாகிய ஏகனையகனை அறிவதற்கு வேண்டிய வித்தியா தத்துவ எழுவகை அமானிதத்தைக் கடன் வாங்கி வந்துள்ள மனுமக்கள், ஓர் மெய்யருட் குரு பிரானைத் தேடியடைந்து, விபரீதச்செயல் விளைந்திரா னின்ற பஞ்சேந்திரிய ராக்கதர்களை அடக்கி, வாசனைக்ஷயம் மனேநாசமென்னும் ஜெயத்தையடைந்து, அரங்க மென்னும் பதிஞான வீட்டில் சாந்தியடைதலென்னும் பூர்விக பூரண சுயராஜ்ஜிய இன்பத்தை இச் சீவிய வாழ்விலேயே முயற்சித்து அடைவதுவே பிறவிப் பெரும் பயனென்பது வேதத்தீர்ப்பாகும்.

இந்த னித்தியப் பெரும்பயனை, அற்பச் சோம்பலினாலும் அழியுலகப் பராக்கினாலும் சம்பாதனைக்கும் மதிப்பினுக்குமாகத் திரியும் பொய்க் குருமார்களின் பிர

கடச் செயலினுலும் ஞஸ்திகக் கொள்கை ஞடெங்கும் பரவி வளர்ந்து வருவதினுலும் அறவே மறந்து, பொய் யாகிய உடை னடை ஞமஞ்ஞாடும் புறச் செயலினையே போதுமாக்கிக்கொண்டு, அமானிதம் சுமந்த அனி யாயக்காரர்களாய், வாணுளை வீணுளாக்கி இறுதியில் னரக இருளிற் புகுதுவதையே எதிர்னேக்குடையவர்க ளாக இருக்கும் மக்களுக்கு—

இறைவன் தன் திருவசனமாகிய வேதத்தில், னம் தன்னையறிவது னமது முதற்கடமையென்று விதியாக்கி வைத்ததுமன்றி, இந்தக் கடமையானது னம் அகத்துள் திட்டமாகப் பதியுமாறு, அவ் வேதத் தீர்ப்புக்கிணங்க ஆங்காங்குப் பல பாஷைகளிலும் உதயஞ்செய்துள்ள எண்ணற்ற யோக்கிய அரசர்களாகிய பாரவான் களுடைய கிரந்தங்களிலும் காணக்கிடப்பதானது—

மக்களுக்கு அந்நகார மென்னும் இருளிருப்பாகிய இதய லோகத்தைத் திறப்பித்து, அவ்விருள் கிழிய னெரித்து ஓட்டிவைக்கும் ஓர் மெய்க்குருபிரான் எவனொரு வனுக்கு இல்லையோ அவனுக்குச் சன்மார்க்கமே இல்லை யென்றும், இன்னும் அப்பேர்க்கொத்த அருட்குரு பிரா னுடைய உண்மையைத் தெரிந்துகொள்ளாத ஒருவன் தனக்கு னலமென்று செய்துவரும் அனைத்தும் முழுப் பாவ வியர்த்த மென்றும், அதனன்றியும் ஆண்ட குருவைத்தேடி அறியாதார் செய்த தவம் மாண்ட மரத் திற்கு மண்ணணைத்து னீர் வார்த்த லொக்குமென்றும் காணப்பெறும் இம்மொழிகள் எக்காலத்தும் மாருத அனுபவ சாக்ஷியான சத்திய வாக்குக்களாம்.

இங்ஙனம் ஆட்கொண்ட அருட்குரு பிரானுடைய உதவியால் தன்னுடைய இதய லோகத்தின் கதவானது திறப்பிக்கப்பெற்று, அடைதற்கரிய முத்திவீட்டினை யடைந்து, கயிலாயம் வைகுண்டம் பரமண்டலம் மெக ராஜ் என்னும் தெய்வப் பதிகட்குப் போக்குவரத் துடையவர்களாய், எக்காலமும் உள்ள ஏகனையகனை மறைபடாத் தெரிசனையுடனே அறிந்து வணங்கும் வணக்கமானதே - இங்ஙே சத்திய னகரமாகிய எமது மெய்வழிச்சாலை யென்னும் திருவளர் தேவ பூமியில் கைவந்த வரவெனச் சுவானுபவத்தில் மலிந்து கிடக் கின்றன.

இச் சபையை உண்டுபண்ணிய ஸ்ரீவித்துனயகம்

ஸ்ரீ ஆண்டவர்கள் சுமார் 114 ஆண்டுகளுக்கு முன்னே, பாண்டிவளனாட்டின் வடமேற்குப் பகுதியில் மார்க்கம்பட்டி என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்து, பெருந்துறையைச் சார்ந்த காசுக்காரன் பாளையத்தில் வியாபாரத்திற்கெனக் குடியேறி, னெல் வியாபாரம் செய் யத் தொடங்ஙிச் செல்வம் திரட்டிச் சிறப்போங்ஙி வாழ்ந்து வருகையில், அந்த ஊர் வழியாக வந்த ஒரு பெரியாரவர்களைச் சந்தித்து, அவர்கள் ஓர் எதார்த்த மெய்ஞ்ஞானியெனப் பரிபூரணமாக அறிந்து, அப் பெரி யாரவர்களுடைய பாதார விந்தங்ஙளைப் பற்றிக் கொள் வதுதான் மெய்ஞ்ஞான னாட்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் மார்க்கம் என்று உணர்ந்து, தம்முடைய பெரிய வியாபாரத்தையும் இளம் மனைவியரையும் பால் மணம் மாருக் குழந்தையையும் உற்றார் பெற்றாரையும் திடீரென விட்டுப் பிரிந்து, பரம ஏழை வடிவினராய்

மெய்ஞ்ஞான வேட்கையில் ஒருமுகத் துணிவுகொண்டு, தங்கள் குருபிரானவர்களே கதியெனப் பின் தொடர்ந்து சுமார் 20 ஆண்டுகள் அவர்களோடு பிரியாமலிருந்து, சர்வ வேதங்களினுடைய உயிர் ஆதிக்கப் பதவிகளைக் கைக்கொண்டு வந்து, தாங்கள் பெற்றிருக்கின்ற சர்வக்ஞத் தன்மையின் னிரந்தர மகிழ்ச்சியினாலே மக்கள் யாவற்றிராளும் தங்களைப் போலவே இம் மகிழ்ச்சி ஜீவ வாழ்வை அடைய வேண்டும் என்னும் னாட்டத்தினராய், ஜாதி மத வேற்றுமையின்றி மக்கள் அனைவர்க்கும் போதிக்கும் தேவபோதனாச்சாரியராய் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

இதனை, இதற்கு முன்காலத்தே வந்த மெய்த்தவத் தீர்க்கத் தெரிசியர்கள் எல்லோரும் தங்கள் தங்களின் முன்னு பின்னு காலங்களை எக்கி எட்டித் தடாவிக் கூர்ந்து னோக்கி, னேரில் இங்கே வந்து பார்த்துக் கூடவே இருந்து எடுத்து எழுதி வைத்தவர்களைப் போலவே, முன்னெடுங்காலமாகிய ஆயிரமாயிரத் தாண்டுகளுக்கு அப்பாலேயுள்ள அக்காலத்தில் வெளியாக்கியுள்ள தீர்க்கத்தரிசனங்களாகிய இறுதித் தீர்ப்பரவர்களின் செயல் அடையாளங்கள் ஒவ்வொன்றினையும் ஊன்றிப் பார்க்குமிடத்து அவையாவும் னிலைனிறுத்தும் வாய்மையாவது -

இப்போது இக்காலத்தில் கலிவலி தொலைத்துத் தலையுகப் பயிர் ஏற்றுவதற்கென எழுந்தருளி இம் மெய் வழிச்சபையை உண்டுபண்ணிய ஸ்ரீ வித்துனாயகமாகிய மெய்வழிச்சாலை ஆண்டவர்களே, திருக்கயிலாய பரம் பரை ஞான சித்த கல்கி அவதார மகாபுருடோத்தமர்

எனவும், சமரச வேத மன்னுவாகிய மைத்திரேய புத்தர் எனவும், உலகப் பவத்தீர்ப்பு இறுதி மெஸ்ஸியாவாகிய ஜாதிகளின் கர்த்தர் எனவும், யுக ஞதராகிய மகதி எனவும் விளங்குவது, இங்கு வந்திருந்து அமைதி கொண்டு ஆராயும் சிறிது நாட் பழக்கத்தினுல் தெற்றெனப் புலனுகியிருக்கின்றதும் புலனுகுவதும் புலனுகப் பெறுவதுமாம்.

சபையின் நோக்கம்

இவ்வாருக இம் மெய்வழிச் சபையின் பொல்லாப் பிணி நீக்கும் பெருந்தவப் பள்ளியாகிய பொன்னரங்க தேவாலயத்தில் நடமாடும் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் எங்கள் தெய்வீகக் கர்த்தாதி கர்த்தராகிய ஆண்டவர்களின் திருவுள்ளத்தில் சதா உலாவிப் பரிமளித்துக் கொண்டிருக்கின்ற – மனுக்குல மக்களை ஜென்ம சாபல்யர்களாக ஆக்கவே வேண்டுமென்ற – இரக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக மக்களெல்லோரையும் இச் சன்னிதியில் சாரும்படிச் செய்துவைக்கும் இப்பெரிய புண்ணிய காரியத்தைக் கையேற்று மாரேந்நிச் சிரம் தாங்கி நடாத்தும் பரோபகார எதார்த்தத் திருப்பணி வேலை செய்வதாவதே இச் சபையின் நோக்கமாகும்.

மெய்வழித் தேவ மக்களின் சமரச நீதம்

அழியாத ஜீவ வாழ்வான மெய்யென்பது ஒன்று இருக்கிறதென்றுகூடத் தெளியாது, நிலையற்ற பொய்யினேடு ஒட்டியுள்ள காரணத்தினுலேயே அம் மாயா பேதக உணர்வில் ஊன்றி நின்றுகொண்டு, எங்கெங்கும் சமத்துவம் சமரசம் என்று வாயில் மட்டுமே கதறி,

காரியமோ கைகூடாது, பிரத்தியக்ஷத்தில் விபரீதக் கலகமாக இருந்துவரும் இதுனுள், இங்கே எழுந்தருளியுள்ள சமரச வேத கர்த்தாவாகிய ஸ்ரீ சாலை ஆண்டவரவர்கள், தங்களின் செயற்கரும் செயலாகிய னீள்தடம் பாடென்னும் - இத்தூலம் கடந்த அழியா னிலையாகிய மெய்யில் உள்ளும் புறம்பும் தித்திக்க, ஜாதிகளின் வேற்றுமைகளை வேரறக் களைந்து, சமரச சமத்துவ னிலையில் 67 சாதி இனத்தவர்களை மகிழ்ச்சி பிறங்க ஜீவ கூட்டுறவு ஏற்றத்தில் ஒரே குடும்பச் சம்மனசுகளாக ஆக்கிவைத்திருப்பது பிரத்தியக்ஷம்.

இன்னும் இத்தூல வாழ்விலுங்கூடப் படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் எட்டிக் கற்கமுடியாத மெய்க் கல்வியைக் கற்பிப்பதும்; இழிகுலத்தோர் என்பவரையும் உயர் குலத்தோர் என்பவரையும் எக்குலத்திற்கும் மேம்பட்ட ஒரே உன்னத குலத்தினராகப் பிறப்பிப்பதும்; பணக்காரர்களுக்கு மேன்மேலும் ஏறிவரும் அவாவையும், பணமில்லாதவர்களுக்கு மேலே குறித்துள்ளவர்களை அண்ணுந்து பார்த்துத் தொண்ணுந்து கொண்டிருக்கும் தன்மையையும், இவ்வகையில் இயற்கையாய் எவருக்கும் இருந்துவரும் இவ்விரண்டு தன்மைகளை வேரறக் களைந்து, எல்லாம் போதுமென்ற அந்நப் பெருந்நகை ஆஸ்திகத்தில் மனத்தைக் குடியேற்றித் தெய்வீக சம்பன்ன சம்பத் துடையவர்களாக ஆக்குவிப்பதும்; சைவம் வைணவம் கிறிஸ்தவம் இஸ்லாமியம் முதலிய பற்பல மதஸ்தர்களும் தங்கள் தங்களின் மதங்களில் உள்ள உள்ளீடான மூலமந்திர உயிராதார மெய்ப்பொருளினைத் தாங்கள் தாங்களே கைக்

கனியென அனுபவிக்கும்படியாக அவர்களை ஆக்கியும் ஆக்கிக்கொண்டும் ஆக்குவதற்கும் பிரத்தியக்ஷ னிரு பணையில் னின்றுகொண் டிருப்பதுவுமே எம்மனேருடைய சமரச னீதமாகும்.

இச் சபையாரின் அடிப்படையான னம்பிக்கைகளாவன

ஆண்டவன் ஒருவன் உண்டென்பதும், அவனது சிபார்சுக்குரிய தீர்க்கத்தரிசியர்கள் உண்டென்பதும், அவனுடைய அடியார்களாகிய அமரர்கள் உண்டென்பதும், வேதங்கள் உண்டென்பதும், மரணம் உண்டென்பதும், அதன் பின்னர் இறைவனுடைய கட்டளைப்படி அவரவர் செயலுக்குத் தக்க பலன் பெறுகின்ற தீர்ப்பு னுள் உண்டென்பதுமாம்.

சபையும் சர்க்காரும்

இராஜத்துரோகிகளையும், அரசாங்கச் சட்ட திட்டங்கட்கும் ஆக்கினைகட்கும் விரோதமாகவும் அல்லது மாருகவும் பகிரங்கமாகவேனும் அல்லது அந்நரங்கமாகவேனும் னடப்பவர்களையும், அவ்வாறு னடப்பவர்களைப் பெருமைப்படுத்திப் பேசுபவர்களையும் எந்நக் காலத்திலும் எக் காரணத்தைக் கொண்டும் இந்நச் சபையில் சேர்க்கப்பெறமாட்டாது. சபையின் அங்கத்தினருள் எவரிடமாவது, இத்தகைய துர்னடத்தை காணப்படுமாயின் அவர் உடனே சபையினின்றும் விலக்கப்படுகிருர்.

சபையின் தெய்விக அங்கத்தினர்

ஜாதி மத தேச பேதமின்றி, அங்க ஈனமில்லாது, 22 வயதுக்கு மேல் 64 வயதுக்கு உட்பட்டவராயும், விவாகம் ஆனவராயும், அவரவர் சாதி மதாச்

சாரத்தை ஒப்புக்கொண்ட ஒழுக்கமுடையவராயுமுள்ள ஆண் பெண் இரு பாலாரும் இந்நச் சபையின் தெய்விக அங்கத்தினராக ஆகிக்கொள்வதற்குச் சேர அருகதை யுள்ளவ ராவார்கள்.

அங்கத்தினரின் விரதம்

கொலை களவு கள் காமம் பொய் என்னும் பஞ்சமா பாதகம் செய்பவர்களையும், புகை குடிப்பவர்களையும் சினிமாவுக்குப் போகிறவர்களையும் இந்நச் சபையில் சேர்க்கப்பெறமாட்டாது.

அனந்நர், அனந்நகி என்னும் தீக்ஷா மகுடம்

மெய்க்கல்விக் கலாசாலைத் தேவனாட்டு ஐயர் ஸ்ரீ சாலை ஆண்டவர்கள் திருச்சன்னிதியில் வேத வியாக்யான விற்பனம் கடந்த மந்நிரோற்பன்ன சூக்கு மாரூர்ச் சுலாம் ஏற்றுளிற்கும் சௌபாக்ய ஜெயசீலருக்கு "அனந்நர்" "அனந்நகி" என்னும் பரிசுப்பட்டம் மெய்ம்மை வழங்கப் பெறுகிறது. அவ்வாறு மெய்ஞ் ஞானப் பரிசுப் பட்டம் பெற்ற பலரும், அவ்வப்போது தங்கள் அனந்நர் குல தீக்ஷா நாமங்களைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரித்து வருகின்றார்கள். இன்னும் இவர் கள் தங்கள் சிரங்களில் காஷாய தலைப்பாகை அணி யவும் தகுதியுடையவர்களாகின்றார்கள்.

323

முத்துனபி தங்கள் பெருந்நடம்
(சர்வஜன ரஹ்மத்து)

ராஜிகுல் ஹவாம் மலிகுல் உலாவென்னும் பூர ணக் கடவுளாகிய அல்லாஹ் ஜல்லஷானஹு த ஆலா தன் திருவசனமாகிய குர் ஆன் ஷரீபின்கண் மவுத்தை

னிக்கும் ஆதமியாகிய தூலமெடுத்த மூமீன்கள் யாவருக்கும் திருவுளம் பற்றிய

"குல்ஜா அல்ஹக்கு வஜஹகல் பாதிலு
இன்னல் பாதில கான ஜஹூகா"

என்னும் ஆயத்தின் கருத்தின் பிரகாரம் அபத்தப் பொய்ம்மொழி அழிவடைந்து மெய்யானது பிரத்தியக்ஷமாகிவிட்டது.

மூமீன்களான சுத்தவான்களுக்கென் றிருக்கும் னித்திய பெரும் பிரயோசனமாகிய றப்புடைய வணக்கத்தை அற்பச் சோம்பலினுலும் பராக்கினுலும் அறவே மறந்து - பொய்யாகிய லிபாஸென்னும் உடை னடையமம் கூடுவதை மட்டுமே போதுமாக்கிக்கொண்டு - ஜோசியக் குறி கேட்பதிலும், மாந்திரீகத்திலும், உள்ளன்பு வைத்துப் பனுவாகத் திரிந்து - அமானிதம் சுமந்த அனியாயக்காரனுகி - தௌபாவுடைய வாசல் அடைபடும் இறுதி னுள் வரை - ஆ - கைசேதமே! வீண் காலம் கழிப்பவர்களுக்கு இறைவன் தன் திருவசனத் தீர்ப்பில் னம் தன்னையறிவது னமது முதற் கடமையாகிய முந்தின பருலென்று விதியாக்கி வைத்தது மன்றி, இது னம் அகத்துள் திட்டமாகப் பதியுமாறு பல ஆயத்துக்கள் மூலம் - உதாரணமாக - ஒரு தலேமுறை காலம் மட்டும் னுன் உன்னிடம் குடியேறி இருக்கிறேன், னீ என்னைத் திரும்பிப் பார்க்கமாட்டாயா என்றும் - தன்னையறிவதற்கே யன்றி இன்சானை னுன் வீணுக்காகப் படைக்கவில்லை என்றும் - னுன் ஆதத்துடைய சூரத்தைக் கொண்டு வெளியாகி இருக்கிறேன் என்றும் - அதே இன்சானுடைய கல்பிலேயே வெளியா

கிறதே யல்லாமல் வேறே எதிலும் னுன் வெளியாகிற தில்லை என்றும் – மனிதன் என்னுடைய ரகசியப் பெட்டகம் என்றும் – இன்னும் இவை போன்ற அனேகம் திருவசனங்களால் னம்மைத் தடுத்தாட்கொள்பவனுகிய னம் தலைவனை யறிவது சுன்னத்தாக வைத்த காரணம் என்னவெனின் – தன்னை ஒருவன் அறிந்தாஞகில் தன் என்னும் ஆலயத்துள் ளிருக்கும் தெய்விகமாகிய உதயம் திட்டமாக அங்கே தோற்றரவாகிக் காணுகின்ற படியினுலே தனக்காதாரத் தலைவனை யறிவதே தன் பெருமுதல் எனினும் அதைச் சுன்னத்தாகவும் தன்னை யறிவதைப் பருலாகவும் வைத்த தெனக் காண்க.

மேலும் இதன் பொருட்டாகவே – திக்கீர் உடையவர்களிடத்தில் னீங்கள் அறியாதவர்களாய் இருக்கிற செயலை விட்டுத் திட்டமாக இஸ்தக்பார் என்னும் மன்னிப்புத் தேடிக் கொள்ளுங்கள் என்றும் – இன்னும் அவர்களைக்கொண்டேதான் மனிதனுக்குப் பிரயோஜனம் ஆக்கிவைத்திருக்கிறேம் என்றும் – இன்னும் எவன் ஒருவனுக்கு அப்படிக்கொத்த ஷெய்க் இல்லையோ அவனுக்கு ஷெய்க் ஷைத்தானுகத்தான் இருக்கவேண்டும் என்றும் – அத்தகைய ஷெய்க்கை எவனெருவன் அடையவில்லையோ அவனுக்குப் பரிசுத்த மார்க்கமே இல்லை என்றும் – இன்னும் அத்தகைய ஷெய்க்குவானவர் சீன தேசத்தில் இருந்தாலும் னீங்கள் தேடிப் போகத்தான் வேண்டும் என்றும் – இங்ஙனம் தடுத்தாட்கொள்பவனுகிய முதல்வன் தன் தனிப்பெருங்கருணைப் பிரதினிதி

யாகிய னமது இறுதி முத்துனபி அவர்களின் கிரந்நங் ஙளில் காணக்கிடப்பதானது உள்ளங்கைக் கனியாம்.

அன்றியும், னம் திருமந்நிரத்தில் "அஷ்ஹது அன் லாயிலாஹா இல்லல்லாஹு" என்னும் சத்தியத் தீர்ப்பினையும் துலக்கிக் காட்டிய னம் மனுக்குல ஞயகம் னபிகளுக் கரசராகிய முஹம்மத் 'சல்' அவர்களின் வேத னீதினெறிப்படியே, முன்னுள்ள எல்லா மத வேதங்ஙளை யும் தனதென ஒப்புக்கொண்டு – "மன் அரப னப்ஸஹு பகத் அரப றப்பஹு" என்னும் ஹதீது குத்ஸியின்படி தன்னை யறிந்து தன் தலைவனின் தரிசனத்தைக் கல் புக் கண்கொண்டு சந்நேகமறத் திட்டவட்டமாகக் கண் டறிந்து - கலப்பற்ற சாலிஹான அமலாகிய தௌஹீ துடைய இபாதத்தென்னும் வணக்கத்தை உள்ளதை யுள்ளபடி மெய்யாகவே புகட்டி – உலக மக்கள் அனை வரும் அழிவில்லாத ஜீவ சுயராஜ்யத்தைக் கைப்பற்றச் செய்தும் செய்துகொண்டும் வருவதே இம் மெய்வழிச் சபை.

இச் சபையோரின் அடிப்படையான னம்பிக்கைக ளாவன:—ஆண்டவன் ஒருவன் உண்டென்பதும், மலா யிகத்து மார்கள் உண்டென்பதும், தீர்க்கதரிசிமார்கள் உண்டென்பதும், வேதங்ஙள் உண்டென்பதும், மர ணம் உண்டென்பதும், அதன் பின்னர் இறைவனின் ஹுக்குமுபடிக்கு அவரவர் அமலுக்குத் தக்க பலனை ஜீவர்கள் அடையும் தீர்ப்பு னாள் ஒன்று உண்டென்பது மாம்.

சபையின் தெய்வீக அங்ஙத்தினர்:—

ஜாதி, மத, தேச பேதமின்றி, அங்ங ஈன மில்லாது

22 வயதுக்குமேல் 64 வயதுக்கு உட்பட்டவராயும், விவாகம் ஆனவராயும், அவரவர் ஜாதி மதாச்சாரத்தை ஒப்புக்கொண்ட ஒழுக்க முடையவராயுமுள்ள ஆண் பெண் இருபாலரும் இந்நச் சபையின் தெய்வீக அங்கத்தினராக ஆகிக்கொள்வதற்குச் சேர அருகதை யுள்ளவராவார்கள்.

அங்கத்தினரின் விரதம்:— கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமா பாதகம் செய்பவர் களையும் புகை குடிப்பவர்களையும் சினிமா முதலிய கேளிக்கை விளையாட்டுக்களுக்குப் போவோர்களையும் இந்நச் சபையில் சேர்க்கப் பெற மாட்டாது.

சபையும் சர்க்காரும்:— இராஜத் துரோகிகளையும் அரசாங்கச் சட்ட திட்டங்கட்கும் ஆக்கினைகட்கும் விரோதமாகவும் அல்லது மாருகவும், பகிரங்கமாக வேனும் அல்லது அந்தரங்கமாகவேனும் னடப்பவர்க ளையும் அவ்வாறு னடப்பவர்களைப் பெருமைப் படுத்திப் பேசுபவர்களையும் எந்நக் காலத்திலும் எக்காரணத்தைக் கொண்டும் இந்நச் சபையில் சேர்க்கப்பெற மாட்டாது. சபையின் அங்கத்தினருள் எவரிடமாவது இத்தகைய துர் னடத்தை காணப்படுமாயின் அவர் உடனே சபை யினின்றும் விலக்கப்படுகிறார்.

காமில் ஞயகமாகிய ஷெய்குல் முர்ஷதுனு சாலை ஆண்டவர் அவர்கள், அல்லா றசூல் என்னும் னிஜ மான அச்சப்பாட்டினை யுடைய கூட்டாளர்கள் என்று தெரிந்து கொண்டதன்பின் – அவர்களுக்குச் செய்து வைக்கும் பைஆத்துக்களின் ஞன்கு படிகளாவன:—

முதலாவது

'இல்முல் யகீன்' வழிபிடித்துவரும் முரீதீன்களுக்குத் தூலத்தைத் தாங்கி னடாத்திக் கொண்டிருக்கும் ஆதி னடுத்தலமாகிய 'மக்காமன் மஹ்மூதா' என்னும் தலத்தில் வாஜிபுல் - உஜூது தோண, தூலத்தினுள்ளே கூட்டிக்கொண்டுபோய்ச் செய்து வைக்கப்பெறும்.

இரண்டாவது

முரீதீன்களின் பொய்மலக் குற்றமாகிய னபுஸே ஷைத்தானியா மாறுபட அந்நரங்க ஜீவகளை யிருப்பாகிய அஜைபையென்னும் உஜூது னடையைக் கல்பெனும் அரியாசனத்தில் தனக்குப் புலப்பட எழுப்பித் தன்னையறியும் தவமுறையை ஆல மிதாலில் சூக்கும தேகத்தைக் கைப்பற்றும் படிக்கு மும்கினுல் உஜூதென்னும் தலத்தில் செய்துவைக்கப் பெறும்.

மூன்ருவது

'மௌத்து கப்ல அன்த்த மௌத்து' என்னும் மௌத்துக்கு முன் மௌத்தாகிப் பழகும் தவத்தில் னின்று, தூலதேகத்தை விட்டுக் காரண தேகத் துறவியல் போக்குவரத்துப் பெற்று, வாசி தன் வசப்பட மாவுல் ஹயாத்தென்னும் அமிர்தவூற்று எழும்படியாய் ஆலம் மலகூத்தில் வஹதானியப் பொழிலாகிய - வேர் மேலும் பணர் கீழுமாக னின்று விளங்கும் சிதரத்துல் முன்தஹா வென்னும் விருக்ஷத்தின் அடி னிழலில் - மாருத அருங்காரணச் சோங்குடைய மும்தனஅல் உஜூதென்னும் தலத்தில் செய்து வைக்கப்பெறும்.

ஞன்ஙாவது

மகாகாரண உபதேசம் - ஹக்கினிடத்தில் அன்பெனும் யகீன் தரிபாடாகி னிலைத்து ஒன்று படுவதற்காக, இரவு பகலில்லாத எல்லையற்ற பரம ரகசியமாகிய சலாமத்தென்னும் சாந்நி னிலை பொருந்ந ரூஹை சிர்றியில் செய்துவைக்கப்பெறும்.

"காலல்லாஹு த ஆலா குல் அதீ உல்லாஹ வர்ரசூல பஇன்த்த வல்லெள பஇன்னல்லாஹ லாயுஹுப்புல் காபிரீன்" என்ற கருத்தின்படி அல்லாஹு த ஆலா வையும் அவனுடைய ரசூலையும் ஹுப்பு வைத்து ஒவ்வொருவரும் இதை வையகத்தில் பரவச் செய்யக் கடமை பூண்டவர்களே. ஆகையால், இப் புண்ணிய கைங்கர்யத்தைப் பரவச்செய்பவர்கள் எல்லோரும் திட்டமாகப் பெரிய தர்மங்களைச் செய்த புண்ணியசாலிகளே யாவார்கள். இதனை னன்மனங்கொண்டு பன்முறை படிப்போரும் பயனடைவார்கள் – ஆமீன்.

ஹிஜ்ரி 1300 ஆகியும், அதன்மேலும் 72 – ஆம் வருஷம் னடந்துகொண் டிருக்கின்ற இப்போது, சலாமத்தடைய வைக்கும் இந்ந ரஹ்மத்து வெளியாயிருக்கிற தானது – இது என்ன ஜமானு? என்று அறிவோர்கள் அனைவரும் னீதி னெறிப்படி அறிவார்களாக.

324

சம்மத மனத்தினர்க்கான சத்திய யுகப் பரிசு

முன் வந்ந வேத மாமறைகளில் ஊமை எழுத்தென்றும், பிள்ளையார் சுழி என்றும், ஏகாட்சர மென்

றும், மோன எழுத்தென்றும், அடி முடி னடு என்றும், அகர உகர சிகர மென்றும், முச்சுடர் என்றும், அகம் பிரம்மாஸ்மி என்றும், ஓம் தத் சத் என்றும், ஓம் ஸ்ரீ ஹலால் என்றும் கூறிவைத் துள்ளதையே, குர் ஆன் ஷரீபாகிய புர்கான் வேதத்தின் முன்முகப்பில் 'அலீப் லாம் மீம்' என்ற அளவு குறி அடையாள அகமியக் கிரந்நமாக எடுத்து வைத்துள்ளது. அந்ந அலீப் லாம் மீ, மைத் தாங்ஙள் திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் அறிந்தும் அனுபவித்துக்கொண்டு மிருப்பதோடு, தங்ஙளேச் சார்ந்நுள்ள 67 சாதிகளேக் கொண்ட எல்லா மதங்ஙளிலுமுள்ள பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு அதை அறிவித்தும் - அதன் பலனுக அன்னவர்களின் இறுதிப் பிரயாண னேரத்தில் 'இவர்கள் தான் னல்லவர்கள் புண்ணியர்கள் மெய்யான பரிசுத்தவான்ஙள்' என்று காட்டக்கூடிய பகிரங்ங அடையாளமாகிய சுத்தப் பிரயாணர்களாக ஆகி, அதாவது னஜீஸ் கசப்பு ஜலம் என்னும் தீட்டுத் துடக்கு ஹற்றம் யாதொன்று மில்லாதவர்களாகி - சுவர்க்க பதிக்குக் குடியேறும் முழு யோக்கியப் பதவியை இன்றே இங்ஙு பிரத்தியக்ஷத்தில் அனுபவிக்கும் படி ஆக்கிவிட்டும் ஆக்கிக்கொண்டு மிருக்கிறவர்களுக்கு -சம்ஸ்கிருத கிரந்நத்திலும் அரபு வேதத்திலும் மகதி என்றும், இன்னும் மற்றைய வேத வேதாந்நங்ஙளில் கல்க்கி, இறுதி மெசியா, மைத்திரேயபுத்தர், வீரபோகவசந்நராயர், சாலே ஆண்டவர்கள் என்றும் திருனமங்ஙள் இருக்க, அதை விட்டு விட்டு, அந்ந

'அலீப் லாம் மீ' மை சர்வக்ஞ சாட்சிப் பொருளாக விளங்கும் இறைவனுகிய அல்லாஹ் என்னும் கடவுள் தான் அறிவான் என்று, கண்ணைமூடிக்கொண்டு முன் பின் பார்க்காமல் முரட்டுத்தனமாகச் சொல்வதானது - வஸ்து வித்தாகிய அந்த 'அலீப் லாம் மீ'மை ஓர் உருக் கொண்ட அறிவு அறியுமே ஒழிய, அதே வஸ்து வித் தாக அருபத்தில் விளங்கும் அல்லாஹ் எப்படி அறிய முடியும்; எதற்காக அறிய வேண்டும்? என்று யோசித் துப்பார்க்கும் இப் பூமண்டலம் முழுதிலுமுள்ள நால மெடுத்த சர்வ சாதி மத மனித கோலங்களின் னன் மை அறிவு அடங்கலும் னின்று கவனித்து, இது சரியா அல்லது அது சரியா என்று சொல்லட்டும்.

மேற்கூறிய மேலாம்பரமாகிய சர்வக்ஞத் திறம் படைத்த உள்ளமைப் பெட்டக மெய்யை, னெடுங் காலம் அதற்கென்றே தங்கள் நூலத்தைக் காவு கொடுத்துப் பாடுபட்டுப்பெற்று, மூக்கை விட்டு மூச்சானது வெளியேருது ஓயாத் தவங்கொண்டு என் றுனும் னிற்கும் வல்லபப் பாரவான்களை, அதற்காகச் சிறிதுகூடப் பாடுபடாது சோம்பேறியர்களா யிருந்து கொண்டு, தின்று தூங்கிப் பெருமூச்சும் கொட்டாவியும் விட்டுக்கொண்டிருப்பவர்கள் குறை கூறத் துணி வதானது - அதற்கான பலனை, சீக்கிரத்தில் அடை வதற்கோ? அப்படிக் குறை கூறுவதானது, தங்கள் குறை அவ்வளவு மலிந்து அடங்காமல் வழிந்து ஓடி வெளியாகிற தென்பதையே காட்டுகிறது. அந்நத் தலே வறண்டதனம் படைத்தவர்கள் தொண்ணூறு னைக்குள் அதற்குரிய பலனைப் பெறுவார்களாகவும்.

அவர்கள் வாழ்கின்ற பூமியை ஹலாக் ஆக்கி சர்வ நாசம் செய்யத் தயாராக நிற்கின்ற வானமும் பாதாளமும் இருக்கிறது என்பதை மறந்துவிட்டார்களோ? பூமியில் நீர் ஊற்று வரவேண்டிய எல்லையில் தீத்தண்ணீர் ஊற்றெடுக்க ஆரம்பித்தபோதே, இந்தப் பூமியை அழிக்க முகூர்த்தக்கால் ஊன்றியாச்சு என்பதை அவர்கள் அறிந்தா இருக்கிறார்கள்?

இன்னும் அந்த 'அலீப் லாம் மீ'மை மனிதன் தன்னில் அறிந்து, அதன் உதவிகொண்டு வேத விட்டுக்குள் நுழைந்து, சாந்தி என்னும் சலாமத்தை அடையட்டும் என்று விதித்துள்ளதை, அல்லாஹு வாகிய வஸ்து வித்தாக விளங்கும் கடவுள் அறிய வேண்டுமென்று மனிதன் ஏவுகிறது, அல்லாஹ் பயன் பெறுவதற்கா? அப்படி மாற்றி மறுத்துச் சொல்லுகிறவர்கள், அதே குர்ஆன் ஷரீபில் அல்லாஹ்வின் ஆக்ஞைக்கு மாற்றமாகச் சொல்லுகிறவர்கள், சண்டாளப் பாவியாகிய இபுலீஸ் என்று கூறி வைத்துள்ளதைப் புறக்கணிக்கும் மகா தைரிய முள்ளவர்களாய் ஆய்விட்டார்களா? அந்தத் தைரியம் எமனாகிய இஸ்ராயில் என்னும் இடியின் முன்பாக நிற்குமா பார்ப்போம்.

தன்னை அறிந்துள்ள சிரஞ்சீவியர்களாகிய பாரவான்களுக்குத் தன்னை அறியாதவர்களா யிருந்து கொண்டு, சிறுபிள்ளைத் தொழுகையையே போதுமானதாகப் பிடித்துக்கொண்டுள்ள வயதான பெரிய மனிதர்கள், புத்தி சொல்லும் காலமும் நேரமும் வந்துவிட்டதுபோலிருக்கிறது.

இன்னும் 'அரசிற் கபுகூடன் ஏறிய மாமதிஞகுறை சிக் குல திலகத்ததி சையதுஞ'வாகிய னம் மனுக்குல ஞயகம் முகம்மது (சல்) ஆல னபியவர்கள் மூலமாக இறக்கப்பெற்ற குர் ஆன் ஷரீபின் கண்ணே தீர்க்கம் பிறங்கக் காணக்கிடக்கும் திருவசனங்களாவன:—

மனிதர்களை னன்மை செய்ய ஏவுகின்றீர்கள். ஆனல் னீங்களோ அதைச் செய்வதில்லை. னீங்கள் வேதத்தைப் படிக்கிறீர்களே, படித்தும் அறிய அறிவு இல்லையா? சூரா. 2, ஆயத். 44.

(தங்கள் தலைவர்களால் கூறப்படும்) பொய்யை அல்லாமல் வேதத்தின் மெய்யான ஞானம் சிறிதுகூட அறியாத மூடர்களும் அவர்களுள் இருக்கிறுர்கள்.
சூரா. 2, ஆயத் 78.

பிறகு னீங்கள் தாமே உம்மவர்களைக் கொலை புரிகிறவர்களாகவும், ஒரு கூட்டத்தை அவர்களின் இல்லங்களிலிருந்து வெளிக் கிளப்புகிறவர்களாகவும், அவர்களுக்கு இடர்செய்வதில் பாவமும் அதிக்கிரமமுமான செய்கைகளைக்கொண்டு னீங்கள் ஒருவர்க்கொருவர் தீங்கிற்கு உதவி புரிபவர்களாகவும் இருக்கிறீர்கள். அவர்களை வெளிக் கிளப்புவது உங்களுக்குத் தகாத காரியமாயிருக்கிறது. என்ன! வேதத்தின் ஒரு பகுதியில் னம்பிக்கை வைத்து மற்றைய பகுதியை மறந்து விடுகிறீர்களோ? ஆகவே அப்படிச் செய்கிறவர்களுக்கு இம்மையில் மானக்கேடும் தரித்திரியமும், னியாயத் தீர்ப்புக்கு னிற்கும் ஞளான மறுமையில் மிக்க கொடூரமான வேதனையின் பக்கம் திருப்பப்படுவதுமே

யன்றி வேறென்ன இருக்கிறது? இன்னும் னீங்கள் செய்வதை அல்லாஹ்ற அறிந்து கொள்ளாதவனுயில்லே.
சூரா. 2, ஆயத். 85.

மேலும், அல்லாஹ்றவின் ஆலயங்களிலிருந்து அவனுடைய ஞமத்தை ஜபிக்கிறவர்களேத் தடுக்கிற வனே, இன்னும் அந்த ஆலயங்களே ஞசமாக்குவதில் முயற்சி எடுத்துக்கொள்பவனேக்காட்டிலும் பெரிய அனியாயக்காரன் யார்? அவர்களுக்கு இவ்வுலகில் இழிவுண்டு. மேலும் பின்வரும் மறுமையிலும் கொடிய வேதனே யுண்டு.

சூரா. 2, ஆயத்: 114.

மேலும், கிழக்குத் திசையும் மேற்குத் திசையும் அல்லாஹ்றவுக்கே உரியன. ஆதலின் எத்திசை னீங்கள் முகம் திரும்புகிறீர்களோ அத்திசையில் தான் அல்லாஹ்றவின் திருமுகம் (இருக்கிறது); அல்லாஹ்ற விசாலக் கொடையுடையவன். எல்லாம் அறிபவன்.
சூரா. 2, ஆயத் 115.

னம்முடைய உத்தரவின்படி னேர் வழி காட்டக் கூடிய இமாம் (முதன்மை) ஆனவர்களே ஜனங்களுக் கிடையில் உண்டாக்கினேம். சூரா. 32, ஆயத். 24.

னீங்கள் அல்லாஹ்றவின் விஷயமாக எங்களுடன் வாதாடுகிறீர்களோ? மேலும் அவன் எங்களுடைய றப்பாகவும் உங்களுடைய றப்பாகவும் இருக்கிறன். எங்கள் செயல்கள் எங்களுக்கும், உங்கள்செயல்கள் உங்களுக்குமா யிருக்கின்றன. மேலும் ஞங்கள் அவனேயே மெய்யாக ஞடியிருக்கிறேம் என்று சொல்வீர்களாக.
சூரா. 2, ஆயத். 139.

மேற்கூறிய திருவசனங்களை னின்று கவனிக்குமிடத்து, இந்நப் புனித வேதம் இப் பூமிக்கு இறக்கப் பெற்ற முதற் காலமாகிய ஆதிகாலத்தில், இறைவனின் னேர்வழியை மறுதலித்த விரோத மனம் படைத்தவர்களையே அவை சுட்டிக் கூறியனவாயிருப்பினும், பிறருக்காக மட்டும் பெரும் பெரும் மார்க்க உபதேசங்களைச் செய்துவிட்டுத் தாங்கள் மட்டும் றப்பாகிய இறைவனின் னேர்வழிபாட்டைப் பின்பற்ருது இருக்கும், இக்காலத்திய மத போதகர்கள் என்று தலை ஆட்டி வயிறு வளர்க்கத் திரிகிறவர்களுக்கும் இந்நத் திருவசனங்கள் மிகப் பொருத்தமாகவே இருக்கின்றன. மேலும் அவர்கள் தங்களுடைய குலத்தையே ஒழிப்பதற்கான வழியில் ஒருவர் மீது ஒருவர் 'குப்ர் பத்வா' கொடுத்துக் கொண்டு, அந்நரங்கத்தில் சூழ்ச்சி செய்த வண்ணமாகவே அலைந்து திரிவதையும், தங்களுக்குள்ளே ஏற்படும் சிறுசிறு சச்சரவுகளுக்காக, 'அதனல் அவன் காபிராய்விட்டான் – இதனல் இவன் காபிராய்விட்டான்' என்று ஹபீப் குலமக்களை ஒவ்வொருவனையும் காபிராக்கிக்கொண்டே போவதையும், மேலும் செல்வத்தை அறிந்து னேர்வழி னடப்பவர்களுக்கு இன்னலும் இடைஞ்ஞலும் அவமானமும் அவதூறும் செய்வதில் தரிபாடாக இருப்பதையும் பார்க்கும்போது, இக் காலத்தில் னிகழப்போகும் இந்ந அனீதத்தை முன்னறிந்து, ஆண்டவனே முற்கூறிய ஆயத்துக்களை இறக்கியருளியுள்ளான் என்றே காணக்கிடக்கிறது.

மனிதன், தன் முயற்சியால் எவ்வளவு படித்தாலும் அழிந்து போகிற வெளிரங்கமான பொய்தான்

தெரியுமே ஒழிய, மெய்யாகிய னித்திய அந்நரங் கம் பலகோடி உள்ளவற்றில் ஒரு திவலைகூடத் தெரிய வரவே வராது. ஆகவே அந்த மெய்யாகிய உள்ளகப் பெட்டகத்தைத் திறக்கும் திறவுகோல் தங்கள் மெய்த் தவப்பாட்டினுல் என்றென்றும் ஹயாத்தாயுள்ள இறை வனிடத்திலிருந்து பெற்றுத் திருக்கரம் வைத்திருக்கும் ஒரு சற்குரு பிரானுகிய பாரவான்களை இப்பவே தேடி அடைய வேண்டியது மனிதனுகப் பிறந்த ஒவ்வொரு வருடைய உயிர்க்கடமையா யிருக்கிறது.

அத்தகைய - ஜீவனுட்டு அமல் பெற்றுள்ள அர சர் கோமானுகிய - அதாவது கலிமாவைத் தன்னில் உயிர்ப்பொருளாக அறிந்து கல்பு பிரகாசமாகி எமன் இருளில் ஒளி பரப்பும் தவ ஆதிக்க வல்லபத்தைப் பெற்றிருக்கின்றவர்களாகிய - ஞான மேதைகளிட மல் லாமல், அதை அறியாத மற்றவர்களிடம் ஒருவன் வேத விளக்கத்தைக் கேட்பதே, அதாபாகிய னரகத் தில் அவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று வேதச் சட்டம் இருக்கும்போது, மெய்னிலை அறியாது அதை தர்ஜமா செய்கிறவனுக்கு சுவர்க்கம் வந்து விடுமோ? மேற்கொண்டு தன்னையறியும் தவ முறையில் தலை யிட்டு னிற்கும் மெய்யறிந்தவர்களைத் தூஷணை செய் யவும் அவர்களுக்கு இடர் செய்யவும் துணிகிறது என்ன அதிக்கிரமமோ?

ஏழை அழுத கண்ணீரே கூரிய வாளை ஒக்கும் என்றிருக்குமானுல், மெய்ஞ்ஞானப் பாரவான்களாகிய மகத்துக்களின் திரு உள்ளம் பேதித்தால் எந்த வலிமை படைத்த எப்பொருளும் பேதியாதோ என்று னன்

மனத்தவர்கள் அறிவு அனைத்தும் குவிந்து பார்க்கட்டும்.

தப்பிதங்களுக்குத் தண்டனை பிடிக்கும் காலமானது, முன்போலே இல்லாமல் இப்போது சமீபமான காலமாய் இருக்கிறது; ஏனெனில் மகதி அவர்களுடைய அதி ஜெயச் செயல் வலிமை உரிமை ஓங்கி விளங்கும் காலம் இது என்று திட்ட வட்டமாக அறிந்தே சொல்லுகிறோம்.

325

விசுவனுத உயிராணித் திருவசனம்

(திருச்சிராப்பள்ளியில் நிகழ்த்தியருளியது)

தெய்வீக இச்சையுடைய பெருங்குல மக்களே! நான் பேசுகிறேன். நீங்கள் கேளுங்கள். நான் பேசுகிறேன் நீங்கள் கேளுங்கள் என்றேனே. நான் பேசுவது பிரசங்கம் அல்ல. பிரசங்கம் எல்லோரும் செய்வார்கள். நீங்களும் செய்வீர்கள். எத்தனையோ எண்ணற்ற பிரசங்கங்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதல்ல இது. பின்னே என்ன?

இது ஒரு தெய்வீகச் செயலென்று தெரிந்தல்லவா, பெருங்குல மக்களாகிய நீங்களெல்லோரும் வந்திருக்கிறீர்கள்! இது பிரசங்கம் அல்ல என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இது - உயிராணித் திருவசனம் - அதாவது விசுவனுத உயிராணித் திருவசனம் - விசுவரூப உயிராணித் திருவசனம். விசுவபரூபம் என்கிறது வேறே. விசுவனுதம் என்கிது வேறே. அந்த விசுவனுதம் என்னப்பெற்றது சந்திர சூரியாள் ஓடிக்கொண்டிருக்கிற இந்த உலகத்தினிடத்திலே இல்லை. பின்னே அது எங்கே இருக்கிறதென்றால், ஜீவ உல

கத்திலே - ஜீவ னட்டிலே - ஜீவச்செம்மல்களுடைய இதய கமலத்திலே இருக்கிறது. அங்கே இருந்துதான் 64 ராகங்கள், தாளங்கள், மேளங்கள், அவ்வளவையும், அதற்கான கருவிகளைச் செய்து செய்து இணைத்து இணைத்து அந்த னதத்தை இங்குக் கொண்டு வந்நார்கள். அந்த ஜீவனுத இலட்சண விலாசத்திற்குப் பெயர்தான் விசுவனுதம். அது இங்கு உள்ளதல்ல. னிங்கள் பிறர் எழுதியதைப் படிப்பீர்கள் - பேசியதைக் கேட்பீர்கள் - பிறகு, அதை வைத்துப் பேசுவீர்கள். ஆனல், னன் பேசுகிறது அப்படியல்ல. னன், பார்த்துப் பேசுகிறேன். அந்த விசுவ ரூபத்தைப் பார்த்துப் பேசுகிறேன். விசுவனுதத் தொனியைக் கேட்டுப் பேசுகின்றேன். அப்படியானல் னன் பேசுவது பிரசங்கமா? பிரசங்கம் அல்ல - உங்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய உயிராணித் திருவசனம். அந்த விசுவரூபம் என்னப்பட்டதற்குக் கோடி சூர்யப் பிரகாசமும் பின்னடையும் - னணும். அதற்கு இது ஒரு பெரிசல்ல. உலகத்தில் சும்மா உபசாரத்திற்குச் சொல்வது தான் கோடி சூர்யப் பிரகாசம் என்று.

அந்நக் கோடி சூர்யப் பிரகாச விசுவரூபத்தைத் தரிசித்து அனுபவிக்கத்தான் இந்த மனுத்தூலம் வந்நது. அப்படிக் கில்லாமல், இந்த உலகிற்கு மனு வந்நது - செத்து அவஸ்தைக்குப் போவதற்குத்தான் என்று - எந்த வேதத்தைக் கொண்டும் என் முன்னல் னிரூபிக்க முடியாது. மனுவை இறைவன் சாகப் படைக்கவில்லை. பின்னே என்ன? இப்ப இருக்கிற இவனுடைய இந்நப் பீத்த உடலைத் தூக்கி எறிந்து விட்டு,

இதற்குள் இருக்கிறதே எக்கோடி காலத்திற்கும் அழியாத ஜீவப் பிரகாசத் தங்க உடல், அதைப்பெற்று நித்தியனாக வாழவே இவனைப் படைத்தான். அதற்காகவே அந்த அறிவென்கிற மாணிக்கத்தையும் இந்த உடலில் வைத்துப் படைத்திருக்கிறான். மனுவைத் தவிர, வேறு எந்த ஜீவராசிக்காவது இந்த அறிவு மாணிக்கம் இருக்கிறதா? இல்லவே இல்லை. யானை முதல் எறும்புகடை எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவ ராசிகள் அவ்வளவையும் எடுத்துக்கொண்டாலும் சரியே - அவ்வளவுக்கும் மனிதனுக்குள்ள இந்த அறிவு திவலைகூடக் கிடையாது. அப்போ, இந்த உன்னத அறிவை மனிதனுக்கு மட்டும் எதற்குத் தந்நான்? அது வாழ்கிற மாதிரி வாழ்ந்து சாவதற்கா, இவனுக்கு இந்த அறிவைத் தந்திருப்பான்? இல்லை - தரவில்லை. இந்த அறிவு என்கிற மாணிக்கத்தை உனக்குத் தந்நது, சாவுக்கோ - இந்தப் பீத்தப்பிழைப்புக்கோ - பீத்தப் பொருள் சம்பாதிக்கிறதற்கோ அல்ல. நிஜமான பொருளைச் சம்பாதித்து நீ எக்கோடி காலத்திற்கும் ஆண்மையனாக இருந்து வாழவே இந்த நர ஜென்மத்தில் உன்னைப் படைத்தது. அது இப்ப எப்படிப் போச்சு என்றால், இதைப் பேசக்கூட ஆளே இல்லாத தூசிகூட இந்த நினைவேயில்லாத எல்லைக்குப் போய் விட்டது. இந்தப் பேச்சேயில்லாத உலகத்தில் நாம் குடியிருக்கிறோம். நாம் எதற்காகப் பிறந்நோம் என்று பேசுகின்ற உலகத்தில் நாம் இல்லை. இப்போ நான் சொல்கிறேன் - அதாவது தேவனாக - மரண மில்லாத

பெருவாழ்வு வாழ - எக்கோடி காலத்தும் அழிவில்லாத அந்தப் பேரின்பத்தை அனுபவிக்க - பிறந்த மகனே நீ. இது சத்தியம்.

எல்லாவற்றுக்கும் - வித்து இருக்கிறது. அப்படியானால், தேவனாக ஆவதற்குரிய வித்து எது? தேவனாவதற்கு வித்து நரன். வேறு ஏதாவது வித்து இருக்கிறதாஎன்றால் இல்லை. இந்த நரன்தான் மனிதன் ஆகித் தேவன் ஆவது. அதை மறந்து விட்டு தேவனாவதற்குத் தந்த அறிவு மாணிக்கம் - அழியாத நித்திய உடலைப்பெற்று வாழக் கொடுத்த அந்த அறிவு மாணிக்கம் இப்போ என்ன ஆச்சுது? "உணவுப் பிரச்னை - உணவுப் பிரச்னை" என்று சொல்லித் திரிவதாகப் போச்சு. எவ்வளவு கீழ்த்தரமான செயலுக்கு அதைக் கொண்டு போய் உபயோகிக்கிறோம் என்று பார். இன்னும் மிருகங்கள், பறவைகள், ஜலம் வாழ் ஜந்துக்கள் என்று எவ்வளவோ ஜாதிகள் இருக்கின்றனவே - இந்த உணவுப் பிரச்னை அதுகளுக் கெல்லாம் கிடையாதோ? அவையெல்லாம் வாழலையோ? அவைகள் எல்லாந் தானே வாழுது! இது ஒரு வார்த்தை யென்று வாயிலே பேசிக்கொண்டு திரிகிறாயே - என்னடா அப்பா, அவ்வளவு அருமையானது உன்னுடைய உணவு? கவனமாய்க் கேள். எழுவகைத் தோற்றத்தில், கீழ்மட்டத்திலுள்ள தாவர வர்க்கத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு சந்தன மரத்தை ஓரிடத்தில் வைத்தால், அதற்குவேண்டிய உணவை, அது எப்படி எடுத்துச் சாப்பிடுது? அதற்குப் பக்கத்தி

லேயே ஒரு எட்டிமரத்தை வைத்தால், அந்த உணவை இது தின்னுமா? தின்னவே தின்னாது. அது போலவே, ஒரு வேப்பமரத்தை வை - பக்கத்திலேயே ஒரு கரும்பையும் வை - இதன் உணவை அது தின்னுமா? அதன் உணவை இது தின்னுமா? தின்னவே தின்னாது என்று உங்கள் அறிவுக்கே படுமே - படாதா? னல்லா யோசித்துப் பாருங்கோ. தின்னவே தின்னாது, அல்லவா? ஆம் - இப் படைப்பினங்களெல்லாம் எந்தப் பள்ளிக்கூடத்திலே போய்ப் படிச்சி வந்து சம்பாதிச்சுப் பிழைக்குதுங்க? சொல்லு! அப்படியிருக்க, அறுசுவைகளை னிறைத்துவைத்து, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் உனக்காகவென்றே படைத்திருக்கின்ற இந்த உலகத்திற்கு வந்து, னீ மட்டும் ஏன் "உணவுப் பிரச்னை உணவுப் பிரச்னை" என்று பேசிக் கொண்டு திரியறே! இதற்காகவா இறைவன் அவைகளுக்கெல்லாம் இல்லாத அறிவை உனக்குக் கொடுத்திருப்பான்? அந்த அறிவு என்கிற மாணிக்கத்தை, னீ தேவனாவதற்குத்தான் கொடுத்தான். இதை எடுத்துச் சொல்லவே னாதி இல்லாத உலகத்தில் - இந்தப் பேச்சேயில்லாத ஒரு பெருங்கூட்டத்தில் னீ வாழ்வதால், இது இப்பத்தான் புதிசா வந்து உன் காதில் விழுகுது! முந்தி விழுந்திருந்நால், அது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி யிருக்கும். எவ்வளவு பெரிய வித்தியாசமா யிருக்குமென்றால், இப்போது னம் இருக்கிற இந்த ரூபத்திற்கும் - னம் தலைமேல் கடமையாக விதிக்கப்பட்டிருக்கும் அந்தத் தேவரூபத்திற்கும் இடை

யிலுள்ள அவ்வளவு வித்தியாசமா யிருக்கும். அந்த வித்தியாசம்தான் எவ்வளவு என்ருல், எழுவகைத் தோற்றத்தில், ஓர் இனத்துக்கும் இன்னோர் இனத்துக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவு. எழுவகைத் தோற்றமென்ருல்தான் இந்த உலகத்திற்குத் தெரியாதே! எந்த வித்துவானைக் கேட்டாலும் தெரியாது. உன் உலகத்தில் அது இல்லை இப்போ. அந்தப் படிப்பு எல்லாம் அழிந்து போச்சு. எழுபது வருஷத்துக்கு முந்தி அதெல்லாம் பள்ளிக்கூடத்தில் இருந்தது - படிக்கிற பாடத்திலேயே இருந்தது. இப்போ நீங்கள் வாழ்கிற இந்தப் படிப்பு உலகத்திலே இல்லவே யில்லை. ஒருத்தருக்கும் தெரியாதென்று நான் சொல்லுகிறேனே - எங்கே, சொல்லுங்க பார்க்கலாம். யாருக்காவது தெரிந்தா சொல்லட்டும். நால்வகை யோனியென்ருல், சொல்லிப்போடுவாங்க. ஆனல், எழுவகைத் தோற்றம் என்னவென்ருலோ, "மெம் மெம்மே" என்று மேலும் கீழும் முழிப்பார்கள். அப்போ நாங்களெல்லாம் - சிறுபிள்ளையாய் இருந்த காலத்திலே - இதெல்லாம் சங்கம் சங்கமாய் இருந்தது. இப்போ அந்தப் பாடமே மறைந்து போச்சு.

எழுவகைத் தோற்றம் என்ருல் என்ன? அமரர், மனு, விலங்கு, புள், ஊர்வன, ஜலம்வாழ் ஜந்து, தருக்கினம். இதுவே எழுவகைத் தோற்றம். அமரர் - மனுஷரர் என்ருல், ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது தெரியுமா? தருக்கினத்துக்கும் பறவை இனத்துக்குமுள்ள அவ்வளவு வித்தியாசமே அந்த வித்தியாசம். நல்லா நினைச்சுப் பாருங்கோ. இது

வும் அதுவும் பக்கத்திலா இருக்குது? இதுவும் அதுவும் ஒரு சாதியா? இல்லை. ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசமா யிருக்குது. அது போலவே, ஜலம்வாழ் ஜந்துக்களுக்கும், ஆடுமாடுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, உனக்கும் உன் பேரில் கடமையாக இருக்கிற அந்த இன்னொரு பிறப்புக்கு மிடையில்- அதாவது மனுவுக்கும் தேவப்பிறப்புக்கும் இடையில்.

இப்போ ளும் னரனுயிருக்கிறோம். அமரர் ஆக வேண்டும். அப்படியானால், இப்போ இருக்கிற னரகப் பிறவிக்கும், அமரர் ஆவதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்றால், எழுவகைத் தோற்றத்தை உலகில் இறைவன் படைச்சிருக்கானே - அதில் ஊர்வன சாதியை எடுத்துக்கொண்டால் அதற்கும் பறவை இனத்துக்கும் பக்கத்திலா இருக்குதென்று பாருங்களேன் - இதன் சேர்க்கையானது அதற்கு எத்துமா? அதன் சேர்க்கை இதற்கு எத்துமா? எத்தாது. அதுபோலவே, இப்போ ளும் இருக்கிற இந்த னரஉடம்புக்கும், ளும் பெறவேண்டிய அழியாத மேனியென்று சொன்னேனே, அந்தத் தேவ ரூபத்திற்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட வித்தியாசம் இருக்குதென்று யாராவது இதுவரை உங்களிடம் சொல்லியதுண்டா? இல்லை. ஆகவே இப்போ ளுன் சொல்லுகிறேனே, இது பிரசங்கமா? இல்லை. பல்லாயிரக் கணக்கான மக்களைச் செயலில் பிரட்டி ஆக்கிவைத்துக்கொண்டு சொல்லுகிற சொல்.

சாதாரணமாக மயில், அன்னம், புரு, இன்னும் வாசி என்ற குதிரை, கவனக்குளிகை என்பவைகளின் மீது ஏறி, கயிலாயம், வைகுந்தம், பிரம்மலோகம் ஆகிய அதி மகோன்னத னிலேகளுக் கெல்லாம் தெய்வங்களாய் உள்ளவர்கள் போகிறுர்கள், வருகிறுர்கள் என்று கேள்விப்பட்டதுண்டா? சொல்லுங்கையா! னிங்கள் என்ன எனக்குக் குறைந்த மனிசரோ? ஞம் ஒரு கிழவர் இப்படிப் பேசுகிறபோது, னீங்கள் அவ்வளவு பேரும் வயசு ஆளுங்கத்தானே சொல்லுங்கையா! கேள்விப்பட்டதுண்டா, இல்லேயா? "உண்டு" என்று சொல்லுங்களேன்.

"சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் ஏறிக் கயிலாயம் போனுர்கள்" என்று கேள்விப்பட்டிருக்கிறுமே - னம் வேதங்களிலும் மற்ற கிரந்தங்களிலும் எழுதியிருக்கிறதே. அதென்ன, அவரை மட்டும் அப்படிப் படைச்சது? அவர் ஒருத்தருக்கு மட்டுந்தான் அது கடமையா? இன்றைக்கு இதோ, (அனந்நாதி தேவர்களேச் சுட்டிக்காட்டி) அறுபத்தேழு சாதிகள் - பல்லாயிரக் கணக்காண மக்கள் - போக்குவரவில் இருக்கிறுர்களே - இது என்ன செயல்! அதற்குப் பிறந்த மகனே னீ. இதோ இங்கே பிரத்தியட்சத்தில் இருக்கே. மனு என்ருல் லேசல்ல, எளிதல்ல. அப்பேர்ப்பட்ட வல்லபம் உடையவன். எக்கோடி காலத்துக்கும் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வந்தவன்.

மரணமென்ருல், இரண்டுவிதம் இருக்கிறது. இப்போ னன் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். உன் னினேவைப் பிரட்டி ஆக்கவேண்டிய செயல் எல்லாம்

ரொம்ப இருக்குது. ஆர்வமா கேட்கிறீர்களேயென்று இந்த னேரத்தில் கட்டாயம் பேசவேண்டியதைப் பேசுகிறேன். மரணத்தில் இரண்டு வகை உண்டு என்றேன் அல்லவா? அதெப்படி என்று கேட்கிறீர் களா!

ஒரு ஜெயில் சூப்பிரண்டெண்ட் இருக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் தன் வீட்டிலே யிருந்து புறப்படுகிருர். எங்கே? ஜெயிலுக்கு! பின்னுலே ரெண்டு போலீஸ்காரர்கள் துப்பாக்கியோடு வருகிருர்கள். "எங்கே ஐயா போகிறீங்க" என்று அவரைக் கேட்டால் "ஞன் ஜெயிலுக்குப் போகிறேன்" என்கிருர். இன் ெனருத்தன் - ஒரு திருடன். அவனுக்கும் இரண்டுபேர் துப்பாக்கிகளுடன் கூடவேயிருக்கிருர்கள். அவனை னேக்கி, "எங்கேடா, போகிருய்" என்ருல், அவனும் "ஞன் ஜெயிலுக்குப் போகிறேன்" என்று அழுது கொண்டே சொல்லுகிருன். இரண்டுபேரும் ஜெயிலுக்குத் தான் போகிருர்கள் ஆனுல், அவர் எதற்குப் போகிருர்? இவன் எதற்குப் போகிருன்? சூப்பிரண்டெண்ட் போ கிறது அதிகாரம் பண்ணவும், மதிப்படையவும், தன் குடும்பத்தை விசாலமாகச் செல்வப் படுத்தவும். ஆனுல், திருடன் என்னத்துக்குப் போகிருன்? உதை தின்ன வும், அவமானப்படவும். இரண்டு பேருந்நான் ஜெயிலுக் குப் போருங்க - ஆனுல், இரண்டும் ஒன்றுதானு? இரண்டு வார்த்தையும் சரியாயிருக்குதா என்று அறிவில் வைத்து யோசித்துப் பாருங்கோ.

இதைப்போலவே, அந்தத் தங்கப் பிரகாச ஜீவ தேகத்தில் - தன் இதய உலகுக்குள்ளாவாகத் தான்

னுழைந்து கொள்வதும், இன்னொரு மூர்க்கத் தடியன் (எமன்) வந்து இவனை அடி அடின்னு அடித்து, பண்ணாத கோலமெல்லாம் பண்ணிச் சின்னபின்னமாக்கி, இவனுடைய ஜீவச் சாஸரங்களையெல்லாம் னரகலாக்கி, னுறடித்து அலகையாக்கி விட்டுப் போகிறனே இதுவும், ரெண்டும் ஒன்று? இரண்டுக்கும் திட்டமான அடையாளம் இருக்கிறது. அது என்ன அடையாளம்? நீட்டாகிய ஜலம் னுற்றத்துடன் வெளியாவது – இது ஒன்று. "கசப்பு" வெளியாகாமல் பரிசுத்தமாயிருப்பது - இன்னொன்று. அசுத்த னரகவாதிகளான பாவிகளையும் பரிசுத்த புண்ணியர்களையும் பாகுபடுத்திக்காட்டும் பிரத்தியட்சமான அடையாளம் இது. கசப்புடன் செத்தான் ஒருவன் என்றால், அவன் னரகவாதி – அவனை னெருப்பில் வைக்கனும் – அவனைச் சுட்டால்தான் அந்தக் குடும்பத்துக்கு னல்லது. இல்லாவிட்டால் பாவமே லபிக்கும். ஆனல், பரிசுத்த ஜீவப் பிரயாணமானவர்களையோ, புஷ்பமாட்டம் எடுத்து அலுங்காமல் கொண்டு போய் மண்ணடக்கம் செய்ய வேணும். இவர்களின் சடலத்தை மூன்று னுட்களுக்குப் போட்டிருந்தாலும், வியர்வை வேர்த்துக் கொண்டே யிருக்கும். அப்போ, செத்துப் போனு னென்று அர்த்தமா? இல்லே – ஆள் உள்ளே இருக்குதென் றுகுதல்லவா?

"இதோ தெய்வம் வருகிறார்கள், வந்திருக்கிறார்கள், னுன் போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிரயாணமாவதும் அப்படிக்கில்லாதபடி, இங்கே தொண்டையில் "கர் கர்" என்று கருக்கரிவாளைப் போட்டு அறுக்க, 'திடீர் புடீர்' என்று "கசப்பு" கத்தரித்துவிழ,

அண்டளிக்கமுடியாத நாற்றத்துடன் அவலமாக ஒழி வதும் இரண்டும் ஒன்று? மனிதன் செத்தால் மட்டுந் தானே, அண்டளிக்கமுடியாத நாற்றம் அடிக்குது. அது ஏன்? அந்தக் 'கசப்பு' வெளியேறுவதால்தான். அது தானே ஜீவன் - இவனை உண்டாக்கியது அதுவே. அது வெளியில் கத்தரிச்சு விழுவதால்தான் அந்தச் சூறை நாற்றம், பிண நாற்றம்! மற்ற எந்த ஒரு ஜீவராசியாவது செத்தால் இப்படி நாறுவதுண்டா? இல்லையே, ஏன்? இவன் பெரியதோர் செயலுக்கு வந்தவன், அந்தக் கடமையை விட்டுவிட்டு, அற்பச் செயலைச் செய்து திரிந்ததினாலே, அதற்குத் தண்டனையாக வருது அந்த நாற்றம். கற்பாந்த கோடி வாழ்க்கைக் கல்லவா வந்த வன்? அந்த வாழ்வுக்கு வந்தவன், ஒரு ஈனச் செயலிலே நுழைந்துகொண்டு திரிந்ததாலே, அதற்குத் தண்டனை யா வருது! அப்படியானால், நமது சொந்த வாழ்க்கை தான் எது? நமக்குள்ளே தங்க சொரூபமாகிய தெய் வீக உடல் ஒன்று இருக்கிறது - அதனுள், இந்தத் தூல உடல் இருக்கும்போதே நீ நுழைந்து பழகிக்கொள்ளும் வாழ்க்கையே அது. அழியாத தெய்வீக உடலே உன் சொந்த உடல். அது இன்னொருத்தர் கிரயத்துக்கு வாங்கிக் கொடுக்கிறதல்ல. அவரவருக்கும் அது தனிச் சீதனமாகிய சொந்த உடல்.

இந்த உலகத்திலே, ஒரு வேலைக்கு, ஒரு பணக் காரர் அல்லது படிப்பாளி போனால் "வாங்க வாங்க" என்று உபசரிப்பாங்க. ஆனால், ஒரு ஏழைபாழை போனால் "அட - சே - அப்படி நில்" என்பார்கள். இந்த மெய் வாழ்வில், அதைப்போல அல்ல. ஏழை

யானலும் பணக்காரனுனலும் சரியே - இரண்டு பேரும் ஒரே தரந்நான். படிப்பாளியாய் இருந்நாலும் அதே தரந்நான். இதில் எல்லோருக்கும் ஒரே சட்டந் நான். னித்தியமான செயலுக்குப் பணம் தேவை யில்லே. ஆனல், இந்ந உலகக் காரியங்களுக்கோ, அதுதான் வேணும். அது இல்லாவிட்டால், னம்மைச் சேர்த்துக்கொள்ள மாட்டாங்ங. ஆனல் னித்தியச் செயலுக்கோ, பணக்காரனும் சரியே - ஏழையும் சரியே. அந்நத் தெய்வீக முதலே வாங்ஙக்கூடிய பொருள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதை இப்போது னும் சொல்லமாட்டோம். அது எல்லோ ரிடத்திலும் இருக்கிறது. ஏதாவது உலகப்பொருளே வாங்ஙுவதா யிருந்நால், னலுபேரோடு கூடி மதிப் பாகப் போகவேண்டும்; கொஞ்ஞும் பணம் காசு இருக்கவேணும். ஆனல், இதிலே - ஓர் அரசனேக் கூப்பிட்டு எந்ந இலக்கில் வைப்பார்களோ அதே இலக்கில்தான் ஒரு ஏழையையும் வைப்பார்கள் - ஏன்? அந்ந னித்திய முதலே வாங்ஙுகிற சொத்து அவனி டத்திலும் இருக்கிறது, இவனிடத்திலும் இருக்கிறது. அப்போ - ஒரு அரசன் போய் வாங்ஙுகிற சொத்து ஓர் ஏழையிடத்திலும் இருக்கிறதென்ருல், அது எவ் வளவு னிரந்நரமான பெருந்நகைச் செயலா யிருக்க வேணும்.

அந்ந முதல் எல்லாருக்கும் சொந்நமானது. அது எது? னீ மரணமில்லாப் பெருவாழ்வு பெறுகிற அந்ந வரமே அந்ந முதல். அது ஒவ்வொருவருக்கும் சொந் நச் சொத்து. ஆனபடியினலே, உனக்குள்ளாகவே

அதை வாங்குகிற கிரயத்தையும் இறைவன் வைத்திருக்கிறன்! அந்நக் கிரயத்தை எடுத்துக்கொடுத்து அதை நாம் வாங்கவேண்டியதுதான். அதற்கு வேறே இந்த உலகப் பொருள் தேவையில்லை. அப்போ— இறைவனுடைய செயலைக் கைபோட இறைவனுடைய படைப்பிலேயே அதற்கான பொருளேயும் நம்மிடத்தில் வைத்திருக்கிறன் பார்!

மரணமிலாப் பெருவாழ்வாகிய அந்நப் பெரிய பாக்கியத்தை நீ பெறுவதற்காக வேண்டியே இறைவன் இந்த நீதிவித்தாகிய மனுத் தூலத்தை உண்டாக்கினன். இந்த மனிததூலத்தைப் படைத்தது செத்துப் போகிறதுக்கு அல்ல. அநியாய மரணத்துக்குப் போகிறதற்கு அல்ல. அநியாய மரணத்துக்குப் போய்விட்டாலோ, என்ன கதி? எக்கோடி காலத்திற்கும் அங்கு நித்திய அவஸ்தைதானே? அங்கு, சாகாமல் அலகையாக இருக்கிறனென்று காட்டுவதற்குத் தானே தெவசம் முதலிய எல்லாச் சடங்குகளும் இந்த உலகத்தில் செய்யப்படுகிறது. அப்போது சொல்லப்படும் மந்திரங்கள் அவன் நீங்காத அவஸ்தையில் இருக்கிறன் என்பதையே குறிக்கும். எவ்வளவு காலத்துக்கு அந்த அவஸ்தையில் நிற்கணுமென்றல், எண்ணற்ற நெடுங்கால காலம் அந்த அவஸ்தையில் தங்கித் தரிக்க வேண்டும். அந்த அவஸ்தையை மகிழ்ச்சிச் செல்வமாக நாம் மாற்றிக் கொள்வது இந்நப் பீத்த உடலில், அழி உடலில் இருக்கிறபோதேதான். இந்த அழி உடலில் இருக்கும்போதுதான் அதைப் பெற்றுக்கொள்ள வேணும். ஆகவே இந்த ஒரே ஒரு வேலைக்குத்தான்

னும் தூலம் எடுத்து வந்தோமே தவிர, வேறே எந்த வேலைக்கும் அல்ல.

சாதாரணமாக வாயிலே சொல்லக் கூசும் - ஏனென்றால் அது தின்பது கீழ்த்தரமான உணவு. பன்றி என்று சொல்வோம். அது சாகிறது, மனிதனும் சாகிறான். அது செத்தவுடனே ஒட்டத் தெருவிலே பாருங்க, காசு எடுத்துக்கொண்டு ஓடறாங்க. "எங்கேடா அப்பா ஓடுறே" என்றால், "கறி வாங்க" என்கிறான். அந்தப் பன்றியைப் போய்க் கேட்டாலோ, "என் கறி மட்டுமா கிரயத்துக்குப் போவுது? என் மசிரு கூடத்தான் காசுக்குப் போவுது! மனுப்பயல் வாங்கு கிறான்" என்கிறது. ஞியாயமா நினைச்சுப் பார்த்தால், அது சொல்லாவிட்டாலும் - நாம் சொன்னால்தான் என்ன - எதார்த்தத்தைச் சொல்லலாம் அல்லவா?

சரி - அதே போல - மனு செத்தால் - இவர் தான் குளிச்சி கிளிச்சி ஆறுகால பூஜைபண்ணிக் கொண்டிருந்தவர் ஆச்சே - இவர் செத்தால் - என்ன கதி? கேட்டவுடனே, ஓடணும் குளிக்க. ஆயிரம் மை லுக்கு அப்பாலிருந்து, செத்தான் என்று காகிதம் வந்தால் அதைக் கண்ணிலே பார்த்து வாசித்தவுடனே, போட்டுப் போட்டுக் குளிக்க ஓடணும். அப்போ - அவன் தீட்டு அவ்வளவு தூரத்துக்கு விஸ்தரிச்சுப் போச்சோ! முன்னே மூணரை முழத்துக்குள்ளே கட்டுப் பட்டுக் கிடந்தது - உயிர் பிரிந்தவுடனே எவ்வளவு தூரம் விசிறிவிட்டது பார்த்தியா? இவர் அடைகிற பலனா இது? இது தானா மனிதன் அடையும் பலன்! இதுக்கா நாம் வந்தது? ஒரு பொருளை - அழியாத பொருளைச் சம்

பாதிக்க அல்லவா வந்தோம். பொருள்தான் எல்லோரும் சம்பாதிக்கிறோம். ஆனால், அது பொய்ப்பொருள். மெய்ப் பொருள் அல்ல. நம் வாழ்வதற்கு மெய்யல்லவா வேணும்? அப்போ - நம் எக்கோடி காலத்துக்கும் இருந்து வாழ்வதற்கான மெய்ப்பொருள் வேணுமென்றால், அதைச் சம்பாதிக்கிற ஒரு முறை இருக்கிறது. சாதாரணமாக ஒருவன் மண்வெட்ட அரிவாள் எடுத்துப் போவானா? அது போல எந்த எந்த வேலைக்கு எந்த எந்த ஆயுதங்கள் வேணுமோ அந்தந்த ஆயுதங்களை யல்லவா தேடவேணும். இந்தத் தெய்வீக வேலையில் பழக்குவதற்குப் பெரியோர்களாகிய செம்மல்கள் வந்தார்கள். இதைக் கிரயத்துக்கு விற்க அவர்கள் வரவில்லை. நரரைத் தேவர்களாக மாற்றுவதற்கே அவர்கள் வந்தார்கள். மக்கள் அழிவிலே நிற்கிறார்களே என்று இரக்கப் பட்டு, அழியாத் தன்மையில் அவர்களைப் புகுத்துவதற்கு வந்தார்கள்.

சாதாரணமாக, எமதர்மன் என்ற பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால், எமன் என்றால் யாருக்கு? அது போலவே தர்மன் என்றால் யாருக்கு? இது ஒருத்தருக்கும் தெரியாது. தன்னை அறிந்தவர்களுக்குத் தர்மன், தன்னை அறியாதவர்களுக்கு எமன். அப்போ எமதர்மன் என்ற பெயர் எப்படிப் பிணைத்திருக்கிறது பார்! இந்தச் சொல்லுக்குள்ளே இவ்வளவு பெரியசெயல் இருக்கிறது என்று காட்டி இந்த விவரங்களை எடுத்துச் சொல்வாரில்லை. நம் பெறவேண்டியவற்றைக் கனவில் கூடச் சொல்வாரில்லை.

ஆனல், உலகத்திலோ சாமியார் கூட்டத்திற்குக் குறைவேயில்லை. மந்தை மந்தையாகக் கிடக்குது. அவர்கள் சாமியார் அல்ல. நீங்கள் அவர்களை ஊன்றிக் கவனிக்காததால் "சாமியாரு - சாமியாரு" என்கிறீர்கள். சாமியார் வருவார் – கொட்டகை, ஜோடனை, கீடனையுடன்! அவருக்கு முத்தி எங்கே இருக்கிறது தெரியுமா? உன் மடியில்தான். உன் மடியிலே முத்தி தேடப் பார்க்கிறவன, உனக்கு ஜீவன் முத்தியை அளக்கப்போகிருன்! அவன் கையிலே அது கிடையாது. அவன் வார்த்தையில் அதை நாம் நன்ருகக் கண்டு கொள்ளலாம். தன் கையில் இன்னது இருக்கிறது, இன்னது இல்லை என்று யதார்த்தத்தைச் சொல்லாமல், ஒரு குல்லு முல்லுத்தனமாகப் பேசுவான். நமக்கு முந்தித் தெரிந்த கதையைத்தான் அவனும் பேசிக்கொண்டு போவான். அந்தக் கதையால் நமக்கு என்ன பலன்? நமது தூக்கம் கெட்டதுதான் - நம்ம பணம் போனது தான் – நமது பிழைப்பு கெட்டதுதான் லாபம்! வேறென்ன வரும்?

ஆனல், நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியது எது? இந்த உலகத்தில் நரனுகப் பிறப்பு எடுத்து வந்தோமே, அது எதற்காக என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நரப் பிறப்பு என்ருல் என்ன? நம் தாயோ அல்லது தந்தையோ நம்மைப் பெற்ற போது இப்படி, இந்த உருவத்தில், ஆண்பிள்ளையாக வரவேண்டுமென்று நினைத்தா பெற்ருர்கள்? எங்க அம்மா நினைத்தாளா? அல்லது எம் தந்தை நினைத்திருப்பாரா? இல்லை. நம்ம செயலைப் பார்த்தாலே,

அவர்கள் அப்படி நம்மைப் பெறவில்லை யென்று தெரிகிறதல்லவா? நினைத்துப் பெற்றெடுக்கவில்லை. அப்போ, எப்படியோ ஒரு வெறியினாலே - ஓர் ஆவல் ஆசையினாலே, அறிவழிந்த தன்மையினாலே வந்தது இந்த நரப் பிறப்பு. ஆனால் தேவப் பிறப்போ அப்படி அல்ல. இன்னொருவருடைய கையகத்தாகி, எமன் கைப்படா நித்திய முத்திக்கு ஆகவேணுமென்று பிறக்கவேண்டும். அதற்கு நரனே இணக்கமான வித்து. ஒரு வானாட்டுச் செம்மலின் கையிலேபோய் இவன் மாட்டிக் கொண்டால், இந்த நரனைத் தேவனாக மாற்றுவது அவர்களுக்கு அவ்வளவு இணக்கமாயிருக்கும்! இந்த நரன் என்ற ஒரு வித்துத்தான் தேவனாகிறதே தவிர, மற்றப்படி பெரிய யானையாகவே இருந்தாலும் முடியாது.

தரைதனில் நரராய்த் தோன்றித்
தாம்கெதி அடையா தோரை
முறைசங்கா ரனுக்கி ரகம்
முடித்துமே மனுவாய் மாற்றி
விரைபிரம்மம் அவர்மு கத்தில்
வைத்துமே படைத்துப் பின்னும்
மறைபடாத் தேவ ராக்க
வந்தனர் உலகுக் கம்மே.

இப்போது நான் பேசுகிறேனே - எந்தச் செயலைப் பற்றி ஐயா, பேசுகிறேன்? உங்கள் தலைக்கு வேண்டிய செயலல்லவா இது - பழனிக்கெல்லாம் போகிறீர்களே! எங்கெங்கெல்லாமோ ஓடுகிறீர்களே! இந்த மெய்வழிச் சாலை வெகு தூரமோ உங்களுக்கு? இதிலே வரக்கூடிய லாபம் என்ன? எதற்காக இறைவன் உங்களை மனிதனாகப் படைத்தானோ அதை வெகு எளிதாகப் பெறலாமே - உங்கள் ஊரிலே இவ்வளவு பேர்கள் (அனந்நாதி

தேவர்களைக் காட்டி) - என் மக்கள் - இருக்கிறார்கள் என்ற உரிமையால் உங்களைப் பார்த்து இப்படிக் கேட்கிறேன்? வேறே ஒருத்தரா யிருந்தால், திரும்பியா பார்ப்பேன்? என்ன அவசியம்? பழனி எங்கே, ராமேசுவரம் எங்கே, திருப்பதி எங்கே - இன்னும் எங்கெங்கெல்லாமோ போய்ச் சுற்றுகிறோமே, என்ன காரியத்துக்கு? மெய்வழிச்சாலை மட்டும் வெகு தூரமோ? ஏன் வரக்கூடாது? என்ன கெட்டுப்போகும்? என்ன காரியம் இது? எப்பேர்ப்பட்ட காரியம்? அதை நினைக்க வேண்டாமா? நமக்காக இன்னொருத்தரா நினைக்கிறது? நான் இங்கே பேசுவதற்கு வரவில்லை. இவர்களெல்லாம் (அனந்நாதி தேவர்களைக் காட்டி) கேட்டுக் கொண்டார்களே என்று இரக்கப்பட்டு இந்த வார்த்தைகளை வெளியிடுகிறேன். எம் கையில் என்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது! (அனந்நாதி தேவர்களை மீண்டும் சுட்டி) இவர்களுக்குத் தெரிந்ததா முதலிலே? தெரியலே. தெரியவே தெரியாது.

ஆனால் நீங்கள் எவ்வளவோ சாஸ்திரங்களை எல்லாம் படித்திருப்பீர்கள்! சிவபுராணம் - அது இதுன்னு - கண்ணில் கண்டதெல்லாம் படித்திருப்பிங்க. அதிலே, சிவானந்தபோதம் என்ற நூல் சொல்கிறதாவது,

''மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமு முண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு
அனேககுல மனித ருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதர்போல் வருவ துண்டு

மனிதரிலே பிறப்பறுக்க வந்நதுவே
அருமையென வகுத்தார் முன்னோர்"

அப்போ, மனிதரிலே எத்தனை ரகம் இருக்கிறது. ஆனால் அத்தனையும் பார்த்த அளவில் அடையாளம் தெரிகிறதா என்றால், தெரியவில்லை. மனு என்றால் எப்பேர்ப்பட்ட வித்து? தேவனாகின்ற வித்தல்லவா? அப்போ, தேவப் பிறவியே மனுவிற்கு இன்னொரு பிறவியென்று சொல்லப்பெறுகிறது. நும் ஒரு யோனியிலிருந்து பிறந்தோமே அந்நப் பிறப்பல்ல அது. உன் கண், உன் கண்ணாயிருக்காது – அது வேறே கண்ணாக வரும். தெய்வக் கண்ணாக வரும். உன் செவி தேவச் செவியாக வரும். நுவானது தேவ நுவாக வரும். தேவ உணர்ச்சியாக வரும், தேவ உயிராக வரும், தேவ வாக்காக வரும். எல்லாவற்றையும் தேவக் கருவிகளாக மாற்றி விடுவார்கள். ஆனால் பார்வைக்கு அந்நக் கருவிகள் முந்நி யிருந்ந படியாகவே இருக்கும். இந்நச் செயல் செய்கிறதென்ன, விளையாட்டா? எல்லோரும் செய்யலாமோ? ஆனால் இந்நச் செயல் செய்கிறவர்களென்றால், னல்லா திட்டமாய் னெஞ்ஞிலே ஆணி வைத்தாப்போலே னினைத்துக் கொள்ளுங்கள் இந்ந வார்த்தையை – அதாவது அந்நச் சர்வேஸ்வரனாலே தரப்பெற்ற தெய்வீக முத்திரை அவர்களிடத்திலிருக்கும். அந்நச் சிவபிரானாலேயே அந்ந முத்திரை வைக்கப்பெறும். ஆனால் குரு என்று மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றவரால் இந்ந வேலை செய்வதற்கு – அதாவது, உன்னைத் தேவனாக மாற்று

வதற்கு – முடியவே முடியாது. அவருக்கு நீ கோடி கோடியாகச் செலவு பண்ணினாலும், உன் மதிப்புக் காகச் செலவு பண்ணுகிறாய். அவர் உனக்குக் கோடி கோடியாக அளந்தாலும் அதுவும் மதிப்புக்குத்தான். அதென்ன அரைக்கால்படி உப்புக்குக்கூட ஆகாது. மதிப்பு – அது ஒண்ணுக்கும் ஆகாது - சோற்றுக்குப் போட்டுக்கக்கூட ஆகாது. அப்போ, இந்தத் தேவச் செயலானது அபுரூபம் என்று தெரியவில்லையா? இன் றைக்கு உலகத்தில் எடுத்துக்கொண்டால் எத்தனையோ சாமியார்கள், எண்ணிறந்த கோடி சாமியார்கள் இருக் கிறார்கள். ஆனால் இந்த அடையாளம் அவர்களிடத்தில் இருக்குமா? சர்வேஸ்வரனாலேயே அனுப்பப்பெற்று வந்தவர்களுக்குத்தான் இந்தச் செயல் பலிக்குமே தவிர, மற்றவர்களுக்குப் பலிக்கவே பலிக்காது. உன்னைத் தேவனாக மாற்றுவதற்கு அந்தச் சக்தி இருக்காது. உன்னை அந்தத் தேவ ரூபத்துக்கு மாற்றவே முடியாது - ஆகாது!

சரி ஐயா, உன்னுடைய ஒரு பகட்டைக் கொடு, பத்தாயிரம் ரூபாய் தருகிறேன் என்றால் நாம் கொடுப் போமா? கொடுக்க மாட்டோம். நாக்கைக் கொடுத்தால் இருபதாயிரம் தருகிறேன் என்றால் கொடுப்போமா? கொடுக்க மாட்டோம். அப்போ, என்ன கிரயமுள்ளது மனிதனுடைய ஒவ்வொரு கருவிகளும்! ஒவ்வொன்றாக எடுத்துக்கொள். இப்படி எத்தனை கருவி யிருக்கு! அப் போ, ஏழை யாரிருக்கா? மனிதப் பிறப்பிலே வைச்சு ஏழை ஒருத்தரு மில்லே. பின்னே என்ன? இந்த அழிந்து போகிற ஊனச் செயலிருக்கும் பாரு, இதிலே

தான் ஏழை ஏழையென்று இவனுகச் சொல்லிக்கொள்வது. ஏன், உணவுப் பிரச்னை, உணவுப் பிரச்னை என்று திரிகிறவன் தானே! இதையே பேசிப் பேசி மண்டையைப் போட்டுவிட்டுப் போகிறவன் தானே! இவனுக்கு எம்மட்டு அறிவிருக்கும்?

உணவுப் பிரச்னை என்று சொல்லி மகா முயற்சியோடு அலைகிறார்களே, உணவு கிடைக்காமல் ஒரு வேளை பட்டினிகிடந்தால், அடுத்த வேளை எப்படியாவது உணவு கிடைத்து விடுமே. பட்டினியாய்க் கிடந்து செத்தவர்கள் யாராவது உண்டா? இல்லையே. ஒரு னேர சிறிய இந்த அவஸ்தைக்கு இவ்வளவு முயற்சி எடுக்கிறார்களே – ஜீவ அவஸ்தையானது ஊழி ஊழி மானெடுங்காலம் – னரகத்தில் அமளிபட னிற்கிறதாச்சே. அதற்கு இவ்வளவு முயற்சியைக் காணோமே. இதைப் பார்க்கிறபோது கடப்பாறையை விழுங்கி விட்டுச் சுக்குக் கஷாயம் போட்டது போலவும் - சுக்கை விழுங்கினதற்குக் கடப்பாறை கஷாயம் போட்டது போலவும் இருக்கிறது. னிஜமாகப் பிறந்து - னிஜமான அறிவைப் பெற்றுள்ள மனுவே! எண்ணிப்பார். என் உடலொத்த பிறவியரே! மறுபடியும் எண்ணிப் பார்!

மனிதன் என்ன உன்னதமாக வாழ வந்தவன், என்ன ரீதிக்குப் போகிறான் பார். இவன் செயலைப் பார்த்துப் பன்றியெல்லாம் பழிக்குது! இதை எண்ணிப் பார்க்கவேண்டியது யார்? ஆடுமாடா எண்ணிப் பார்க்கும் னமக்காக? னும் தான் எண்ணிப் பார்க்கணும். எண்ணிப் பார்க்க முந்தித் தெரியாவிட்டால் கூட

எண்ணிப் பார்க்கிற அளவுக்கு இப்ப உங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கோம், எண்ணிப் பாருங்கோ.

மனு வீணுக்காக வரவில்லை. சாவுக்கு வேண்டி வரவில்லை. அவஸ்தைக்காக வேண்டி வரவில்லை. ஒரு கருப்பிலே கட்டையாயிருக்கிறவனுக்கு, ஒரு சிகப்பா வாட்டசாட்டமாக அழகாக இருக்கிற இன்னொருவனைப் பார்த்தா, "ஆஹா அந்த உடலாட்டம் னமக்கிருந்நால் தேவலை," என்று ஆசை வரும் அல்லவா? வசீகரமா, இளமையாயிருந்நால் தேவலை யென்று முகத்திலே என்னென்னத்தையோ தேய்ச்சிப் பாலிஷ் பண்ண ஆசை வருகிறதே. அப்படியிருக்க, அழியாத உடலாக, தங்க உடலாக மாறுகிறதென்றால் அதுக்கு ஆசையா யிருக்காது ஒருவனுக்கு? னல்லாயிருக்கும். இது, இந்த உடல், இறுதியில் அவஸ்தையிலேதான் கொண்டுபோய் மாட்டும். ஆனால், அந்த உடலை எடுத்தவுடனே எமனச்சம் இல்லாமல் போகிறதே, அது எப்படி? (தம் மக்களாகிய அனந்நாதி தேவர்களைச் சுட்டிக்காட்டி) இவர்களும் னம்மைப் போல னம்மோடு- கூடப் பிறந்நவங்கதானே? - ஆம், னம்மோடு இருந்நவங்க தான், னம்ம ஊர்தான், னம்ம சாதிதான், னம்மோடு ஒன்றாய்ப் புழங்கியவங்கதான், அவங்களுக்கு மட்டும் எமன் என்றுக்கா, 'அவன் கிடக்கிறான், போ!' என்று வருதே, அது எப்படி? இந்தத் திடம் எல்லாருக்கும் வருமா? னியாக அப்படி னினைத்துக்கொள்வதா? முரட்டுத் தனமா னினைத்துக் கொள்வதா? இல்லை இல்லை, அப்படியில்லை. அந்த வேலையை- அந்தப் பிரம்ம

வித்தையாகிய செயலைத் தானே செய்து செய்து பழகிக் கொள்வது. இந்த உடலையே மாற்றி, அழியாத தங்க வுடலில் குடி ஏறி ஏறிப் பழகிக் கொள்வது, செத்துச் செத்துப் பழகிக் கொள்வது. இப்படிப் பழகினால், தினம் போய்வந்த அந்த வீட்டுக்கு என்றைக்குப் போவோமென்று ஆசையா யிருக்குமா இருக்காதா? தங்க வீடொன்று இருக்குது, ஒரு கூரை வீடும் இருக்குது. கூரை வீட்டிலே நாம் குடியிருக்கிறோம், தங்க வீட்டிலே எப்பப் போய் நாம் குடியிருப்போம் என்று ஆசையா யிருக்குமா யிருக்காதா? எவ்வளவு ஆசையாயிருக்கும்! அங்கே அழுதுகொண்டா போவாங்க? அது போல, தங்க முதல் ஒன்று இருக்கிறது, அது தெய்வீக முதல். மனிதன் பெறவேண்டியது அது. அதற்கு ஒரு பூவணை காலம் இப்போது வந்திருக்கிறது. நூறாண்டுகளுக்கு முன்னால் வடலூரின் கண்ணே ஒரு பூவணைக்காலம் வந்தது. மண்டைக்கர்வம் கொண்ட தலையாட்டிகள் அதைக் கைசோர விட்டு விட்டு, இன்றைக்கு லட்சக் கணக்கில் போய் அந்த இடத்திலே சோறு ஆக்கிப் போட்டு நெறடிக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வரும் பிரயோசனம் என்ன?

ருத்திராட்சம்! ருத்திராட்சம் என்றால் என்ன? எமன் அஞ்சுகின்ற குளிசம் என்று பெயர். ருத்திராட்சம் ருத்திராட்சம் என்று முக்காத்துட்டுக் காயை வாங்கிக் கட்டிக் கொள்வதா? அவர்கள் கொண்டுவந்தது ஒரு அசலான முதல். அதை நீ அடைவதற்கு, 'இதோ பார் இது நகல் – இதற்கு ஒரு அசல் இருக்குது' என்று காட்டுவதற்குத் தானே எடுத்து வைத்தாங்க? இந்த

னகலா உனக்கு னிசமான முத்தியைத் தரும்? அது எப்படித் தரும் ? அப்ப, இந்த னகலுக்கே இவ்வளவு பிரயாசைப்பட்டு இவ்வளவு பெருக்கமா முயற்சி பண்ணு கிறதாக இருந்நால், அந்த அசலை அடைவதற்கு எந்த மாதிரியான முயற்சி எடுக்கவேண்டுமென்று னும் யோசித்தால் வராதா ? அந்த அசல் கிடைக்கிற வரைக்கும்– னீ முக்காத் துட்டுக்கு ஒரு கொட்டையை வாங்கிக் கட்டிக்கொண்டுதான் இருக்கவேண்டும், அந்தப் பேரைச் சொல்லி. என்னையா இது? மாணிக்கம் என்று பேரைச் சொல்லி வேலங்காயை எடுத்துக் கட்டிக்கொள்வதா ? அது அவ்வளவு கட்டாயம்! அது இவனுக்கு எப்பவும் ஞாபகமிருந்து, "இவன் வீணகச் சாகப்படாது, னித்திய னுக வாழ வேண்டும்," என்று எண்ணிப் பெரியவர்கள் எடுத்து வைத்திருக்கிருர்களே-இந்தக் கட்டாயங்கூடத் தெரியவில்லையா ? னன் இப்ப சொல்லவிட்டாவது தெரியுமா ? இல்லே, தெரியாமல் தான் போகுமா ?

அடுத்த னுளானது ரொம்ப திகுடு முகுடான னுள் வருகுது - அந்த னுளானது எல்லோருக்கும் புத்தி சொல் கிற னுளாக இருக்குது.

சாதாரணமாக உலகத்தில், னம்ம உடலுக்குள் உள்ள அந்த ஜீவன் இல்லை என்ருல், னம்மிடத்தில் உள்ள ஒவ்வொரு கருவிகளும் ஆயிரம் இரண்டாயிரம் பத்தாயிரம் கிரயமுள்ள கருவிகள் என்று மேலே பேசி னேமே - அது ஒரு பைசாகூடப் பெருது. எந்த முதல் இல்லாவிட்டால்? அந்த ஜீவன் என்ற முதலில்லாவிட்டால். இந்தக் கருவிகளெல்லாம் சேர்ந்து ஒரு பைசாகூடப் பெருதது மட்டுமல்ல, கையிலே தொடுவதற்கும் கூலி

கொடுக்கணும். அப்பேர்ப்பட்ட இந்நக் கிரயத்துக்கு இந்த உடலை ஏற்றி வைத்திருக்கிறது இந்த ஜீவன்.

அப்பேர்ப்பட்ட அந்த ஜீவனைக்காணாத உன்னுடைய வணக்கம், என்ன வணக்கம்? மனு வணக்கமா? மனுக் களுக்குரிய வணக்கமா? என்று கேட்கிறான் இன்று. இது புதிசா உன் காதில் விழுந்திருக்கிறது! தன் ஜீவனை அறியாமல் - தன்னை அறியாமல் செய்கிற வணக்கம் என்ன வணக்கம்?

எல்லா வேதங்களும் இதைத்தான் குறிக்கின்றன. "இவன் தன்னை அறிந்தவனா - அறியாதவனா? என்பது மரண காலத்தில் தெரிந்து விடும். மரண தருவாயில் அறியாத பாவியாய் இருந்நால், அவனுக்குக் "கசப்பு" வெளியாகிவிடும். இந்த அடையாளத்தைத்தான் ஒவ் வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாகச் சொல்லு கிறார்கள். "ஜலம் வரும் பாவிகளுக்கு" - "கசப்பு வந்து விடும் பாவிகளுக்கு" என்கிறார்கள்.

"சைவ மானதடி அகப்பேய் தானாகி நின்றதடி
சைவ மில்லையானால் அகப்பேய் ஜலம் வரும் கண்டாயே"
(அகப்பைச் சித்தர்)

அப்போ - அதுதான் படுநாற்றம். பாவியாப் போய் விட்டான் என்பதற்கு அடையாளம். அதை நிறுத்துகின்ற ஸ்விட்ச்சானது-பிரணவ ஸ்விட்ச்சானது ஒன்று இருக்கிறது. பஞ்சாட்சரம் என்றும், அஷ்டாட் சரம் என்றும், கலிமா என்றும், இப்படிப் பல்வேறு நாமங்களைக் கொண்டுள்ள மூலமந்திர ஸ்விட்ச் அது. அந்த ஜீவ ஸ்விட்ச்சை இப்போதும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்நாள் நாம் வாழ்கிற

னுள். அப்படி அவகேடாக வருகிற அந்த னுள் எப்ப வோ? என்றைக்கோ? எந்த னேரத்திலோ? இதை னமக்கு எச்சரிக்கை செய்யவே-

"இப்பவோ பின்னேயோ சற்றுனே ரத்திலோ
இரவிதான் படுனேரமோ
இரவிலோ பகலிலோ உதயகா லத்திலோ
எந்நெந்த வேளேதனிலோ
அப்பிலோ தீயிலோ ஞயிலோ பேயிலோ
அரவுதரு பெருமிடியிலோ
ஆருத புண்ணிலோ அடனேய்கள் தன்னிலோ
ஆயுதங் களினுலேயோ
செப்பரிய வீட்டிலோ காட்டிலோ என்னுயிர்
பிரிந்திடும் இறைவா"

என்றெல்லாம் சொல்கிருர்கள். அப்போ - அந்தப் பிரணவ ஸ்விட்சைப்பெற காலவரம்பு ஏதாவது இருக்கிறதா என்று பாருங்கள். இதைக் கட்டாயமாக ஒவ்வொருவரும் பெற்றே தீரவேண்டும். எப்போது? எந்த னேரம் கேட்டோமோ அந்த னேரமே! ஏன்? தான் வாழ்வதுக்குத்தான். முடிவிலே தலேக்கு வருகிறதே ஆபத்து - மானெடுங்கால ஆபத்து - யாரும் தடுக்க முடியாத ஆபத்து - அந்த ஆபத்தைத் தடுக்கிறதுக்குத் தானே உனக்கு இந்த உன்னத அறிவைத் தந்தான். சோறு தின்னுவதற்கல்ல - பொய்ப்பொருளேச் சம்பாதித்துப் போட்டுவிட்டு - மானங்கெட்டு - கரட்டு கொரட்டுகரட்டுகொரட்டுஎன்று இழுத்துக்கிட்டு - கடைசியிலே அங்கே சிரிப்பாச் சிரிச்சுப் போகுதே - அதுக்காக தரலே ஐயா உனக்கு இந்தஅறிவு! மானெடுங்கால ஆபத்து ஒன்று வருகுதே - அதை யாராலும் தடுக்க

முடியாதே - அந்த ஆபத்தைத் தடுப்பதற்காகத்தான் இந்த அறிவு மாணிக்கத்தைத் தந்தான். இந்த அறிவு மாணிக்கத்தை எல்லோரும் பலன்கேடாக ஆக்கிவிடாத படி, இந்த அறிவு மாணிக்கத்தின் முழுப்பலன் உண்டாகும் படியாக - பெருமையுடன் ஓங்கும்படியாக - இப்பவே செய்து கொள்ளுங்கள். "கொள்ளுங்கள்" என்று நான் சொல்லுகிறேன் உனக்கு. நீ என்னிடத்திலே வந்து கேட்கவில்லை. நான் உன்னிடத்திலே வந்து சொல்லுகிறேன் - வலிய வந்து. வலிய வந்தா சொல்லனும் இது?

செந்நில்மு னிமணி வந்நந்ந ளிலிந்
  நப்பயிர் செய்ததுண்டு
செயல்பொரு மைமூல வர்க்கமி ருகங்கள்
  சேதங்கள் செய்ததுண்டு
பகுதாது மாமணிப் பயிரினுக் குக்காவல்
  பார்க்கவும் வந்நதுண்டு
பன்றிப லமிரு கங்கள்க டுவாய்பின்
  பற்றிய ழித்ததுண்டு
சேர்க்கவும் மெய்வழி தேசமெல் லாமுமே
  சீருரை பாஷையெலாம்
தீர்க்கதெ ரிசிகள் பூமிபுல் லுள்ளன
  ளெல்லாம்வ ருவதுண்டு

யார்? அந்தக் கடம்பவனக் காளையாகிய செந்நில் முனிமணி என்ற அந்தச் சிவசுப்பிர முத்தானது, வந்து, இந்த உலகத்தில் அந்த மகத்தான செயலை ஒரு நாள் நடத்திக்கொண்டு இருந்திருக்குமல்லவா? இந்தச் செயல் சும்மாவா பொத்தென்று வந்திடுச்சு! இந்தச் செயலை நடத்தினர்களே அவர்களிடத்தில் - இந்த உடலை

னீக்கி அந்த உடலைக்காட்டி எனக்கு இப்படி அருள வேணும் என்று கேட்கிறார்களே-அதுகூடத் தெரியலையா? னல்லா வெள்ளையா சொல்லுகிறார்களே –

"இக்கடத்தை னீக்கி அக்கடத்துள் னாக்கி
இப்படிக்கு மோட்சம் அருள் வாயே" என்று—
(திருப்புகழ்)

இன்றைக்கு, இப்போ, அந்தச் செயல் எங்கே னடக்குது? இங்கே தான்; அன்றைக்கு சுப்பிரமணியர் வந்திருந்தபோது, அவர்கள் முன் போய், யார் பக்தியுடன் கரணம் போட்டாங்க? இல்லை – விரட்டினாங்க! ஏன்? இவர்கள் தான் சுப்பிரமணியர் என்று தெரியுமா? தெரியவில்லை - மனுத்தூலத்திலா தெரியும்? அதெப்படித் தெரியும்? தெரியாது. செயலை வைத்து, அந்த இலஞ்ஞிய மனத்தினர்க்கு – ஏகாந்த மனத்தினர்க்கு – அந்த அழியாத வாழ்வுக்குரிய மனத்தினர்க்கு மட்டுந்நானே படும். மற்றவர்க்கு அன்றைக்குப் பட்டதா? அவர்கள் இன்னவர்கள் என்று அன்றைக்குத் தெரிந்ததா? இல்லே. அவர்கள் கொண்டுவந்த செயல், எம் கையிலிருக்கும் இதே செயல்தான்.

"இக்கடத்தை னீக்கி அக்கடத்துள் னாக்கி
இப்படிக்கு மோட்சம் அருள் வாயே"

என்று இதை ஓங்கி ஓங்கி – முக்கி முக்கி – முப்பத்து முக்கோடி தடவை உருப்போட்டதினாலேயா வரப் போகுது. கர்ணம் அடிச்சிக்கிட்டுச் சொன்னால்தான் ஆகுமா? ஆகாது. தானாகவா அது வந்நுடும்? ஒருக்காலும் வராது.

"முருகா – முருகா" என்கிருனே, அந்தத் தெய்வ ஞயகம் இவன் வீட்டு ஆளா? அந்த வார்த்தையைக் கேட்கிற போதே பக்தியற்ற இவனது அவலட்சணக்குறி தெரியுது - அதற்குப் பலன் பாவந்நான் வருமே தவிர, அவர்களின் இரக்கமா வரும்? இப்ப, னம்மைப் பார்த்து ஒருவன் வெட்டையாய்ப் பேரைச் சொன்னல், கோபம் வருதே. அப் பிரபுவை – சிவசெம்மலே – வெட்டையாச் சொல்கிருனே, அச்சமில்லாமல். இந்நத் தூர்த்தனுக்கா அவர்களின் இரக்கம் கிட்டும்? இதைக் காலமெல்லாம் சொன்னுலும் கிட்டுமா? கிட்டாதே. அப்போ, இதை எடுத்து ஞன் உங்களிடம் பேசுகிறேன் என்ருல், என்னத்துக்காகப் பேசுகிறேன்? காலமெல்லாம் ஒருவன் பேசுகிருனே, எங்கே இந்த வார்த்தையை யெடுத்து இப்படிப் பேசச்சொல்லு. பேசுவானு? பேசமாட்டான். "அப்படி யிப்படி" யென்று மழுப்பி விட்டுப் போயிடு வான். "ஆய்ரா - ஊய்ரான்னு" கத்தி விட்டு அங்விட்டுப் போயிடுவான். ஏன்? "காட்டு" என்று எட்டிப் பிடிச்சிக் கிட்டா என்ன செய்வது என்று.

ஒரு காலத்தில் மகாவிஷ்ணுவானவர் இந்த உலகத்துக்கு வந்நார். கிருஷ்ண பரமாத்மா, அந்த னீல மேக சாமள ரூபராகிய அவர்கள், அருச்சுனனுக்கு 30 வருஷ காலம் தோழனுகவே இருந்நார்கள். என்னையா? ஒரு ஞளல்ல, ஒரு மாசமல்ல, ஒரு வருஷமல்ல. மூப்பது ஆண்டு காலம்! அவனுக்கு னல்லா மூர்த்தண்யமான வயது வருகின்ற காலம் வரைக்கும் ஒன்ருகவே இருந் நார்கள். அவர்களை எல்லாருக்கும் தெரியும். என்ன னினைச்சிருந்நாங்க. னல்லா அறிவிலே மகா சாமர்த்திய

மானவர் - னமக்கு ஒரு இணக்கமான கையாள்-ஆயுதம் - துணிச்சலிலே பார்த்தால் எதற்கும் சளைக்காத வீரர் - ஆகையால் இவரை வைத்து எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணத்தில் அவரைக்கொண்டாடிக்கொண்டு இருந்நார்கள். அதே போலத்தான் அருச்சுனனும் அவர்களை னினைத்தான். மகாவிஷ்ணுவும் அவனும் - இரண்டுபேரும் ஒன்ருகவே இருந்நார்களே - பழகினர்களே ஒன்ருகவே முப்பது வருஷம் வரைக்கும். அப்படியிருந்தும், அவர்களை அருச்சுனனுக்கே தெரியவில்லை என்ருல், கொஞ்ஞனேரம் இப்படீன்னு எக்கிப்பார்த்தாலா, "இவுங்க பிரம்ம னிஷ்ட" ரென்று தெரியப்போவுது! உஜார்! இந்ந இலக்கில் மறுபடியும் 'உஜார்' என்கிறேன்!

துரியோதனுதிகள் இந்நப் பாண்டவர்களைப் போல எத்தனை மடங்கு அதிகம்! ஏராளமான கும்பல். அவர்களில் யாருக்காவது மகாவிஷ்ணுவை இன்னுரென்று தெரியுமா? "ஆ! இவர்கள் மகாவிஷ்ணு - னீலமேக சாமளரூபர் - அவதார புருஷர்" என்று தெரியுமா? தெரியவில்லை - பகவானைப்பார்த்து அவலட்சணமாகச் சொல்லியிருக்கிருனே, அருச்சுனனுங்கூட. என்னென்ன கேவலமான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிருன். கடைசியிலே அதைச் சொல்லிச்சொல்லிக் கதறுகிருனே!

"யாத வாஎன் மைத்துன அடாஅ சோதை யின்னுயிர்க்
காத லாய காலியாய கண்ண கண்ண என்றுஞன்
ஓத லாவ தன்றியேஉ ரைத்த தீமை யாவையும்
மாத காத தென்றுனை நிந்தி லேன்என் மாயனே"

அப்போ பகவானை இன்னாரென்று தெரியாமல் இப்படி எல்லாம் சொல்லித் திரிந்து கொண்டிருந்தவன் அர்ச்சுனன் என்று ஆகுதல்லவா? மகாவிஷ்ணு எனத் தெரிந்திருந்தால், அப்படிச் சொல்ல வருமா? இதைச் சொல்லிச் சொல்லி, பகவானின் பாததாமரைகளில் விழுந்தானென்றால், அப்போ, அவன் என்ன தெரிந்து கொண்டிருப்பான்? ஒரு க்ஷணனேரத்திற்குள்ளாக என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கும்? இது உன் அறிவுக்கு எட்டுதா? யோசனைக்கு எட்டுமா? எட்டவே முடியாத காரியமாக அல்லவா இருக்குது! ஞன் கொஞ்ஞனேரத் திற்கு முந்திச் சொன்னேனே - இந்தக் கருவிகளை எல் லாம் தேவகருவிகளாக மாற்றி விடுவதென்று - அதை இங்கே வைத்துப்பார் - அப்போ, பொருத்தமாயி ருக்கும்.

க்ஷணனேரத்தில் அந்தக் கருவிகளை எல்லாம் மாற்றி, அவனுடையதை எடுத்துக்கொண்டு தன்னதை வைத்துத் இணித்து விட்டார்கள் என்றால், இந்த வார்த்தை பொருந்தும். மற்றப்படி எந்த யோசனை பண்ணினாலும். இது எட்டுமா? எட்டவே எட்டாது.

செய்த்தலைச் செவிகண் வாயும்
தீக்குணப் பேழை யெங்கும்
கைத்தலை மலர்க்கை வைத்துக்
களைந்தெடுத் தெறிந்தாங் ஙாங்கு
வைத்தனர் புதிதா யெங்கும்
வலிமைகள் குமுறி னிற்க
மெய்த்திறன் வாரிப் பின்னும்
வான்முகட் டெத்தி னரே.

இப்படிப்பட்ட காரியமானது யாருடைய யூகத்திற்கும் எட்டக் கூடியதா?

அருச்சுனனுக்கு வீராதிவீரன் என்ற பெயருண்டு. னமது சாஸ்திரங்களில் வீரன் என்ருல் என்ன? புலியின் தோலும், கவரிமான் கற்றையும், வீரன் கை ஆயுதமும் உயிர் போகவிட்டுத்தான் கையாலே தொடமுடியும். இன்னெருத்தர் அதற்கிடையில் தொட முடியாது. இப்படி வீரனுக்கு இலட்சணம் சொல்வார்கள். அப்படியானல் வீராதி வீரனுக்கு இலட்சணம் வாய் கொண்டு சொல்வதற்கு இல்லை. அப்போ, அவ்வளவு அளவுகடந்த பலத்தை உடையவன் அவன். அவனுடைய திடத்துக்கு உபமானம் கொடுக்கிறதுக்கே இல்லை. அப்பேர்ப்பட்ட வீராதி வீரன் தன்னுடைய பாசறையை விட்டுப் புறப்பட்டுவிட்டான். இன்னும் துரியோதனுதிகளுடைய படைக்குப் போய்ச் சேரவில்லை. இடையிலே போய் னின்று தன் எதிரில் இருக்கும் வரம்பிலான் படையைப் பார்த்தான். இப்படிப் பார்த்தவுடனே உடல் னடுங்கிச்சி - கை னடுங்கிச்சி - கால் னடுங்கிச்சி – தொடை னடுங்கிச்சி - சுடர் முடியும் னடுங்கியது– விட்டுவிட்டான் கை ஆயுதத்தை - ஆமாம். இப்பேர்ப்பட்ட வீராதி வீரனுடைய கை ஆயுதத்தைப் பறித்ததே அது எது? இப்பேர்ப்பட்ட பலசாலியினுடைய கையாயுதத்தைப் பறித்ததே அது எது? எப்படியும் பறிச்சிட்டுது அல்லவா ? அப்போ, பறிச்ச அது எது என்ருல் ஒரு மனிதனுக்குள்ளே அதிமிஞ்சிய பயங்கரம் என்றிருக்கும் அந்த ஒரு பொருள்தான். அதுக்கு எதுவும் எதிர்த்து னிற்காதென்று தெரிகிறதல்லவா? அப்போ, மனிதனுடைய பலத்துக்கெல்லாம் மிஞ்சின அது எது?

மரணபயம். அப்பேர்ப்பட்ட அந்நப் பயத்தின் கையிலே இருந்து பறிச்சி, மறுபடியும் அந்ந ஆயுதத்தை அவன் கையிலே கொடுத்ததே அது எது? அது பகவானின் செயல். அன்றைக்குத்தான் பகவானுடைய செயல் இருந்நதா? பகவான் செயல் அன்றோடே அந்ந மாதம் தேதியோடே போய்விடுமா அல்லது னித்தியமாக இருக்குமா? இந்நச் சூரியன்கூட அப்படியே இருக்குதே - ஒரு ஜடப்பொருள். அந்ந உயிர்ப் பொருளா போயி ருக்கும்? இல்லே, போகாது. அன்றைக்கு மட்டும் இருந்நது இன்றைக்குப் போய்விடுமா? போய்விடாது. இவ்வளவு வெய்யிலடிச்சுதே காய்ந்நிருக்குமா? அல்லது மழை பெய்ததில் இத்துப்போய் இருக்குமா? இருக்காது. வெகு காலமாச்சே அதனல் காலங்கடந்நு போயி ருக்குமா? போயிருக்காது - ஆனல், ஒரு காரியம் கேளுங்கள். "உங்களுக்கும் தருவதற்கு யுகயுகம் வருவேன்" என்று ஒரு வார்த்தையு மிருக்குதே அதிலே - ஏனையா - அதே கீதையிலே. னுன் பவக் கோள் மிஞ்ஞிய காலத்திலே வருவேன் என்று இருக் குதே. இப்ப என்ன புண்ணிய காலமா? பவக்கோள் தலை எடுத்து, எங்கும் பறவாப் பறந்து படர்ந்து, சிரிப்பா சிரிச்சித் திரிகிற காலமா யிருக்குதே இப்போ- இந்நக் காலத்திலே பகவான் வராமலா இருப்பார்கள்? ஆனல் வந்நால் அவர்களின் அங்க அடையாளம் தெரியுமா?

"சாகாது பிறவாது
தனிமுதலா இருந்நனுன்

ஆவா இவ் வுலகுபடும்
அழி துயர்தீர்ப் பதற்காக
மேவாது னின்றேஎன்
மாயையினுன் மெய்யேபோல்
ஓவாதுவந்நு பிறந்நிடுவேன்
யுகந்நோறும் யுகந்நோறும்"

இப்படிச் சொன்னவர்கள், அதற்குரிய காலம் என்று இதே காலத்தைச் சொல்கிருர்களே, வராமலா இருப்பார்கள்? அவர்கள் வந்நாக்கா னமக்குத்தான் அடையாளம் தெரியுமே. தெரியுமா? தெரியாது. அதுதான் அடையாளம் இருக்குதே - ஏன் - படத்திலே போட்டு ஒவ்வொரு வீட்டிலும் இருக்குதே. னமக்காத் தெரியாது அவர்கள் வந்நா? வரவில்லே என்றுதானே, உங்கள் எண்ணம்? ஆனல் வந்நுவிட்டார். வரக்கூடாதா? அன்று குருக்ஷேத்திரத்தில் அவர்கள் இந்நக் கீதையை எழுதினுர்களா? இல்லே. அர்ச்சுனன் எழுதினுனே? இல்லே. யாரிடமாவது சொன்னுர்களா? அதுவும் இல்லே. சரி - இந்நக் கீதை இவ்வளவு பெரிய புத்தகமாய் இருக்குதே - இதிலுள்ள இவ்வளவு சம்பாஷணேயையும் அங்கே பண்ணிக்கொண்டிருந்நால் இவர்கள் தலே தப்புமா? னல்லா யோசனே பண்ணிப் பாருங்க. இதைக் கீதை என்று ஒப்புக்கொள்வோம் - சத்தியமானும் னம்பிக்கொள்வோம் - இவ்வளவும் பேசிக்கொண்டு இருக்கிறவரைக்கும் துரியோதனுதிகள் பூப் பறிச்சிக் கொண்டா இருந்நார்கள்? ஏனேயா - அப்போ அந்நக் கீதை இல்லேயா? கட்டாயம், சத்தியமா, கீதை இருக்கணுமே - எங்கே அது? இத்தனே காகிதம் படிக்கிற வரைக்கும், என்ன, அங்கே னிற்குமா இவன் தலே.

ஒரு பக்கம் படிக்கிறதுக்குள்ளே, தலையைத் தூக்கிக்கிட்டுப் போய்விடுமே. அப்போ, அந்தக் கீதை என்னப்பட்டது எது? இந்தக் கீதைக்குள்ளாகவே இருக்கணுமே அது. அது எங்கே? அதுதான் ஒரு மொழிக் கீதை. அது ஒரே ஒருமொழிக் கீதை. இப்ப, இது எப்படிப் பொருந்துது பாருங்க. ஒரு மொழிக் கீதைதான் அவனுக்குத் தந்தது.

இப்பப் படிக்கிற கீதையானதை - பொழுது போக்குக்காக இவர் காலமெல்லாம் படிக்கிறாரே –அருச்சுனனைப்போல் பலன் வந்ததா இவருக்கு? வந்ததா என்று நல்லா நினைத்துப் பாருங்க - யாருக்காவது வந்திருக்கா? நினைத்துப் பாருங்களேன் - படிக்கிறாரே முக்கி முக்கி - அவருக்காவது வந்ததா? வரவில்லை. அப்போ இவர் படிக்கிறது கீதை இல்லையா? பகவான் சொன்ன அந்தக் கீதை எங்கே? அர்ச்சுனனுக்கு அந்த விஸ்வரூப தரிசனை காட்டுகிறதும் அந்தக் காண்டபம் தருகின்றதுமான அந்த ஒரு சொல் கீதை எது? அது அழிந்து போச்சா? அந்தத் தெய்வ மூதல் அழியுமா? அழியாதே. நான் எதுக்காகப் பேச வந்திருக்கிறேன் உங்களிடத்தில்? என்ன நினைத்து நான் பேசுகிறேன்? நானைக்கு நீ ஒரு ஆட்டை அனுப்புவே, நீ ஒரு மாட்டை அனுப்புவே, இவர் ஒரு பூமி வாங்கிக் கொடுப்பாரு, என்று நான் பேசுகிறேன் - ஏனய்யா? அங்கிருந்து இங்கே வந்து எதற்காக நான் உன் காதிலே இதைப் போடுகிறேன்? நீ ஆயிரம் பதினாயிரம் கொடுத்தாலும் இந்த ஒரு வார்த்தை உனக்குக் கிட்டுமா? உன் காதுக்கு வருமா? உன் செவிப் புலனுக்கு எட்டாதபடிக்கு எந்த

ஒரு செயலையும் செய்ய வருமா? ஒரு செயல் செய் வதற்கு முதலிலே உன் செவிப் புலனுக்கு அது வர ணுமே! அப்போ, உன் செவிப் புலனுக்கு முதலிலே எட்ட வைக்கிறது எதுக்காக? உன் கையை எதிர் பார்த்தா? நீ கொடுத்தா என் வயிறு வளர்க்கணும்? ஏன்? உன்னைப்போல் நான் இல்லையோ? இந்தச் சக்தி கூட எனக்கு இல்லேன்னு உனக்கு மேம்பட்ட சக்தி எனக்கு இருக்குமா? தன் அழி வயிறுக்கு உன்னை எதிர்பார்க்கிறவனிடம் என்ன இருக்கும்? உன்னைவிட மேம்பட்ட சக்தி வேறென்ன இருக்கும்? ஆகையால், பெருந்திரளாகக் கூடிஇருக்கும் பெருங்குல மக்களே! நான் உங்களிடம் வந்து பேசுகிறதானது என்ன காரியத்துக்காக வேண்டிப் பேசுகிறேன்? எதுக்காகப் பேசுகிறேன்? அதாவது, அநியாய மரணத்தை எதிர் பார்த்து விடுவீர்களோ என்னமோ என்ற அச்சத்தால் பேசுகிறேன். அப்போ நீங்களல்லவோ அவஸ்தைப் படவேண்டும்? அது எனக்குப் பயமாக இருக்கிறது. சத்தியமா பயத்தினால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். இன்னொருவர் படுகிற அவஸ்தையானது எனக்குப் பயம். ஏனென்றால், உன்னுடைய தூலமே என்னுடைய தூலமும். உன் தூலம் வேறே, என்னுடைய தூலம் வேறே அல்ல. அப்போ, என்னுடைய இந்தத் தூலத் துக்குச் சகோதரராக உள்ளவர்கள் அந்த அவஸ் தைக்கு உட்பட்டால் அது என்றைக்கு முடிகிறது? அந்த அவஸ்தை இந்த உலக அவஸ்தையைப் போ லல்லவே. உள்ள நாள் உள்ள வரைக்கும் கோடான கோடி காலத்திற்கல்லவா அந்தப் பேரவஸ்தைப் பட வேண்டும். அவஸ்தைக்காக நாம் பிறக்கவில்லை. (தம்

மக்களாகிய அனந்தாதி தேவர்களைக்காட்டி) உன் கூடப் பிறந்தவர்கள் இதோ கரை தாண்டிவிட்டார்களே - எமன் என்றால், அவன் கிடக்கிறான் போ என்று வந்து விட்டாங்களே – அவர்களுக்கு என்ன இரண்டு தலையா இருக்குது? உன் கூடப் பிறந்தவர்கள் தானே? என்ன, அவர்களுக்கு மட்டும் ஆறு கையா? இல்லையே.

இந்த ஒருமொழிக் கீதையானது எங்கே இருக்குது? காலமெல்லாம் கீதையைப் படிக்கிறவன் – படிச்சி உங்கிட்ட வசூல் பண்ணுகிறவன் - இந்த விளக்க மெல்லாம் உங்கிட்ட சொல்லுவானா? ஏனையா சொல்ல மாட்டான்? அவனுக்குத் தெரியாது!

வெஞ்சமரி லேவிழுவான் அஞ்சியவன் சிந்தையோ
    சிந்தனை வேரெறிந்திட
கொஞ்சுகிளி வாய்புகன்று வெஞ்சமர்க்கை மிஞ்சுவிதர்
    வந்ததெந்நேர் வாய்மை கீதைபோல்
பஞ்சவர்கள் கீதைபடு தோத்திரமாக் கீறும்பன்னுள்
    பற்றுவனம்போல் அந்தநேரத்து
மிஞ்சியேவி ஜயம்மனை போகறிவன் டாக்குமெங்கள்
    வேதநல ஜதாச்சரிதி.

"கொஞ்சுகிளி வாய்புகன்று வெஞ்சமர்க்கை மிஞ்சுவிதர்
    வந்ததெந்நேர் வாய்மை கீதைபோல்"

"ஓர் வாய்மை" – அந்த ஒரு வார்த்தைதானே அங்கே வெளியானது – ஒரு வார்த்தைதானே அந்த லக்கிலே பொருந்தும். இல்லாவிட்டால், அங்கே இவன் தலை நிற்காதே. அது எங்கே? காலமெல்லாம் இவன் படிச்சாலும் அந்தப் பலன் உண்டா? கிடையாது. அர்ச்சுனனுக்கு ஒரே சொல்லில், அந்த நிமிஷமே அந்தக்

கீதையின் பலன் வந்திடுச்சே. அப்படி இருக்கக் காலமெல்லாம் இவன் படிச்சாலும் அந்தப் பலன் வருதா? ஒரு மொழிக் கீதை என்றால் கட்டாயம் வரணும் அல்லவா?

பகவானின் கீதை யன்றும்
பற்றுணர் மற்றோர்க் கீந்து
ஏகாதுகள் வந்து கீதை
உங்களுக்கும் தருவே னென்று
சகந்தனி லுற்ற வாக்கு
தாமெங்கே புழங்கு தென்று
இகந்தனில் தேடு வார்கள்
இவர்களெல்லாம் மனத்த ராமே.

அப்போ, பகவான் வருகிறேன் என்று சொல்லி யுள்ளார்கள். வருகிறேன் என்று சொல்லியிருக்க, ஏனையா, "விஸ்வரூப தெரிசனம், காண்டீபம், தெரிசனை இப்படி எங்கய்யா புழங்குது? எந்த ஊரிலே புழங்குது? எங்கே இந்த வார்த்தை எல்லாம் புழங்குது?" என்று தேடுகிறதுக்கு மனம் வரவேண்டாமா? – அவர்களோ வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தனக்கு வேணும் என்ற மனிதனுக்கு எந்த எண்ணம் வரும்? இது எங்கே புழங்குது என்றுதானே தேட வரும் – இல்லே, இந்தக் கீதையை எடுத்துக்கொண்டு படிக்கவருமா? ஏன்? அவர்கள் சொன்ன அந்தக் காலம் வந்துவிட்டதே – பகவான் வந்திருப்பார்களே – அந்தச் செயல் எங்கே நடக்குது – எங்கே தருகிறார்கள் என்று தேட அல்லவா மனம் வரும்? கட்டிக் கூடிக்கொண்டு படிக்கிறதுக்கா மனம் வரும்? உட்கார்ந்துகொண்டு படிக்கிறதுக்கு ஓடுகிறானே – காரணம் என்ன? அவங்க

"குசுகுசு" என்று இரகசியமா வந்திருப்பாங்க என்ற எண்ணமா? வேறு என்ன எண்ணம்? அந்தக் காலம் வந்து விட்டதே – அந்தச் செயல் எங்கே னடக்குதென்ற எண்ணம் அல்லவா வரணும் னன் மனத்தவர்களுக்கு? அதைவிட்டு இந்தக் கீதையைப் படிச்சுக்கொண்டிருக்கிற அவர்கள் மனதைப் பார்க்கிறபோது அவர்களுக்குப் பகவானைத்தேடுகிற னினைப்பே இல்லே. னினைப்பு இருக்கிறதாகத் தெரியவில்லே. மெய் மனத்தவருக்கு, தேடத்தான் வருமே தவிரப் படிக்கவராது.

பகவனின் உபதே சத்தைப்
பகர்கின்ருேர் இவர்யா ரின்ருள்
பகவனின் ஒருசொல் கீதை
பவம்அழி விஸ்வ ரூபம்
தகவகாண் டப மற்றும்
தருதுவ தத்தற்கின் ருளில்
பகவனும் வரக்கூ டாதோ
பார்குரு வந்திட் டாரே.

கீதை என்ருல் என்ன? உபதேசம். யாருடைய உபதேசம்? பகவானுடைய உபதேசம். பகவானுடைய உபதேசத்தைப் பேசுகிறதற்கு இவர் யாரு? னல்லா னினைத்துப் பாருங்கள் - னல்லா காதிலே விழுகுதில்லே – னன் கிழவன் ரொம்ப – அதனுல்தான் கேட்கிறேன். பவம் அழி விஸ்வரூபம், தகவ காண்டபம் தர பகவான்தான் இப்ப வந்து விட்டாரே. இனி என்ன பண்ணுவாய்?

வந்தனர் இன்ருள் எல்லா
மறைகளும் மதம்கைக் கொண்டு
உந்தன்முன் வைத்துப் பார்க்கும்
உருவடை யாள மில்லே

வந்துசன் னதங்க ளோடு
வளர்வடை யாளம் வேறு
விந்தையாய்ச் செயல் அதீத
மாகவே முழங்கு தம்ம!

அன்றைக்கு அந்த மரத்திலே சிவப்பழம் என்ற ஒரே கனிதான் காய்த்தது – இன்றைக்குச் சைவம், வைணவம், ஜைனம், புத்தம், இஸ்லாம், இன்னும் கிறித்துவம் என்று சொல்லப்பட்ட எல்லாக் கனிகளும் ஒரே மரத்திலே காய்க்கிறது.

அம்மரும் அனந்தர் கள்பல்
லாயிர மாயி ரம்மாய்
தம்மனுச் சாதி அறுபத்
தேழொரு குலமாய்ச் சேர்த்து
அம்மனுப் பேத மில்லா
தாக்கப்பெற் றிருக்கும் காட்சி
எம்மனுப் பிறப்பே யோமற்
றுன்றலைக் கில்லா தேனோ?

வாய்திறந் ஞாலங் காட்டும்
வடிவுடை மாயோ னென்ன
தாய்அசோ தயர்க்கு அன்னாள்
தனிப்பட நடந்த தென்பார்
ஆய்மதிச் சிந்தை யான
அனந்தர்கள்க் காலம் காட்டத்
தாய்மனுப் பிறப்பே உங்கள்
தலைக்கது இல்லா தேனோ?

[விசுவாவசு ௵ சித்திரை ௴ 20ஆம் தேதி (2–5–65) அன்று திருச்சித் தில்லை நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில், நரரைத் தேவராக்கும் புனித பூரண பலமறை உதிக்கும் ஒருமொழிக்கீதை உருவக உதய பாலிப்புத் திருவிழாவில், இது நிகழ்ந்தது.]

ஆதியே துணை

கர்த்தாதி கர்த்தர்
பிரம்மோதய சாலை ஆண்டவர்கள்
அருளிச்செய்த

எமவாதையைத் தடுக்கும் என்திரம்

இறுதித் திருக்கூடகக் கொரல்

எல்லாண்டு எல்லாண்டு
எண்ணிலடங் காக்காலம்

வல்லமையும் சீர்சிறப்பும்
வாழ்வினுக்கே வந்தமனு

பரமபத வாழ்வினுக்கே
பாரில்ப டைத்தமனு

வரமான சொர்க்கபதி
வாழ்வினுக்கே வந்தமனு

நெடுங்கால வாழ்வினுக்கே
நிலத்தில் படைத்தமனு

அண்டமனைத் துள்ளபொருள்
அனைத்தும் மனுஉனக்கே

குடுத்தான் பரம்பெரியோன்
குறித்தபெரும் வாழ்வினுக்கே

இதைவிட்டு நறிச்செத்து
எறிநிட்டாய்ப் போறுயே

திட்டாகிச் செத்தபின்னே
　　தேத்தவரு வான்குருக்கள்

இறைவனுட தீர்ப்பதனே
　　இவன்ருனு மாற்றுபவன்

ஐயோஈ தென்னவய்யா
　　அனியாய அறிவலவோ

ஜீவாவி யுண்ணுதற்கே
　　சீர்மணம லர்படைத்தான்

னரகஎ ரினெருப்பில்
　　னறுமணப்பூ வைப்போடும்

பொல்லாங் ஙறிவே
　　பெருகிவருங் ஙாலம்உஜார்

பிணைறற்றத் திட்டைப்
　　பிரியமாய்த் தானுகக்கும்

கனத்தஅ ழிவுவரும்
　　கடுங்கொடுமைக் காலமய்யா

ஏழ்பிறப்பு னித்தியத்தில்
　　இருந்நாள வந்நமன்னே

னித்தியவாழ் வுக்கென்றே
　　னிலத்தில் படைத்தமனு

ஆரும்பி றப்பிலேயே
　　அனித்தியனுப் போனக்கால்

ஏழாம் பிறப்புடலம்
　　எடுக்காமல் போவாயேல்

பேராப்பெரு னட்டமுடன்
பொணமென்ற பேரும்வரும்

தேருப் பிணனுற்றம்
சிதறிவிடும் ஸ்ரீவவித்து

என்றுமே மீளாமல்
எரினரகம் போவாயே

இதற்காக உன்னை
இறைவன் படைக்கவில்லை

ஆறுபிறப் பின்விபரம்
அறியாய் பெருமகனே

ஆறுபிறப் பின்னதென்று
அங்கம்தெ ரிவதிங்கே

இவ்வுடலில் ஏழ்பிறப்பும்
இருப்ப தறியாமல்

செத்துப்பி றப்பதென்று
சொல்வார் அறியாதோர்

இவ்வுலகி லேயலைந்து
எந்நவிதத் தேட்டாலும்

அங்கேஅ றியவொண்ணு
ஆறுபிறப் பானகுறி

தெரிவதுஇங் கேயப்பா
திரண்டேழு தன்பிறப்பும்

இப்படிஇ ருக்குதென்று
எவரும் அறியார்கள்

உன் உலகத் தேட்டனைத்தும்
ஊதாரித் தானழிவே

அனைத்தும்னி ரூபணைசெய்
தாக்கும் இடமிதனை

தேடாதி ருப்பதென்ன
தோசித்தன மய்யாவே

இறைவன்செய் னன்றியது
எட்டாப் பெருங்கடனே

ஏழாம் பிறப்பதுனீ
எடுக்கையிலே திருதையா

மாறு திருக்கவந்த
மறையோன் சொரூபமிது

அழியாச் சிறப்புடைய
ஆண்டோன் சொரூபமிது

என்றும்இ ருக்கவந்த
ஈசன்சொ ரூபமிது

அழித்துவிடா தேஎன்று
அறைந்தேன் உலகினுக்கே

னித்தியத் தின்பிறவி
னீயெடுக்கா தேஇருந்து

கெடுத்துவி டாதேயென்று
கூறும்கொ ரல்இதுவே

கற்பாந்த கோடி
கருவுலவாழ் வீதென்று

சற்பாத் திரனைகத்
தானேறி வாழ்வதற்கு

எண்ணத்த டங்காத
எப்பெரும்பா வங்களுடன்

வெற்புஎம படருன்னை
விட்டொழிந்து போகுமய்யா

சாதிமா னென்றுசொல்லி
தரணிதனி லேபிறந்து

சாதிகெட்ட பாவிஎமன்
தன்கையில் சிக்கிவிட்டால்

கசப்புஜலம் நீட்டுடனே
கனத்துபெரு ஞற்றமுடன்

விறைத்து விறுவிறுத்து
வேறுபட்டுப் போகும்முகம்

இந்தஅுடை யாளம்கண்டால்
எக்கோடி காலமுமே

வந்துள ரினரகம்
வலுவாய்ப் பிடித்திடுமே

எமபயத்தைத் தாண்டாத
எவ்வாழ்வும் வாழ்வுமல்ல

எமபயத்தைக் கடந்திடிலோ
எவ்வாழ்வும் வாழ்வாகும்

அமலாம்பஞ் ஞாட்சரவா
ளாயுதமெய் ஆலயத்தில்

னமதெனவே மெய்ப்பொருளை
ளுடிய டைந்திடுவாய்

ஞுசிவெளி யேமூச்சு
ஓடாத்த வத்தாலே

மறலிவெருண் டோடுகின்ற
வான்குலத்தி லேபிறந்து

வாழ்வாய்சி ரஞ்ஜிவியாய்
வரைந்தேன் பெருமகனே

அழியாத்தி ருனாட்டில்
ஆளும்தி ருவாக்கு

வலுவாக்கு ஈதறிந்து
வாழ்வீர்ம னுக்குலமே!

அனுபந்தம்

சர்வமத மெய்வழிச் சபையும் இஸ்லாமும்

18-3-66 ல் 'மறுமலர்ச்சி'யில் வெளியாகிய லால் பேட்டை மௌல்விகளின் அபிப்பிராயத்தைப் பற்றி, மெய்வழிச் சபையார் ஜனங்களுக்கு எடுத்துக்கூறும் தெளிவுரை.

8-4-66ல் வெளியான சென்னை "நூருல் இஸ்லாம்" பத்திரிகையிலும், 18-3-66 ல் வெளியான திருச்சி "மறுமலர்ச்சி" ப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட சேலம் முஸ்லிம் வாலிபர்கள் பெடரேஷன் செக்ரடரியின் வினாக்களுக்கு, லால்பேட்டை மதரஸா மன்பஉல் அன்வாரின் ஹஜ்ரத், மெய்வழிச் சபையைக் குறித்துக் குறைகூறி விடைகொடுத்தது சம்பந்தமாக, ஜனங்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளட்டுமென்றே இந்தத் தெளிவுரையைத் தருகிறோம்.

சேலம் நகரில் ஒரு தனிப்பட்ட முஸ்லிம் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவினால், எங்கள் மெய்வழிச் சபையைப் பற்றியும், அதன் கொள்கைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளாமலும் தீர விசாரிக்காமலும் கேள்விகளும் பதில்களும் வந்துள்ளன.

(முதலாவதாக, "மேற்படி சங்கத்தில் குறிப்பிட்ட வழிமுறையைக் கைக்கொண்டு, தன்னை நஜீஸை விட்டும் நீக்கிச் சுத்தப்படுத்திக் கொண்டால், இறைவனைக் கண்டுகொள்ள முடியும்" என்று மெய்வழிச் சபையார் கூறுகிறார்கள் என்று, சேலம் வாலிபர்கள் கூறியதற்கு லால்பேட்டை ஹஜ்ரத் பிரதானமான இதுபற்றி ஒன்றும் கூறாமல் விட்டுவிட்டார்). நாங்கள் கைக்கொண்டுள்ள சன்மார்க்க வழிமுறையினால் எங்கள் கல்பானது பிரகாசக் கதிர் இலங்க, மகாப் பரிசுத்த நூர் என்னும் சுயஞ் ஜோதியாக ஆக்கப்பெற்று, எங்கள் கை வசத்தில் விளங்குகிறது. அதை, இனி எவரும் மாற்றவோ

அழிக்கவோ முடியாது. கலிமாவை அறிவதுதான் இஸ்லாத்தின் முக்கிய அடிப்படை. ஐந்து கடமைகளில் முதல் கடமையும் இதுவே. கலிமாவை ஒவ்வொரு இன்ஸானும் தன்னில் அறிவதன் மூலம், தன்னைப் படைத்த நாயகனுடைய மறைபடா லிகாவாகிய னேர்முக தரிசனையையும் பெறுகிருன். மற்றைய நான்கு கடமைகளுக்கும் (பருல்களுக்கும்) 'கலா' என்ற ஒத்திவைத்தல் உண்டு. கலிமாவை மாத்திரம் தூலம் அழியுமுன் கட்டாயம் மனிதன் அறிந்தே தீர வேண்டும். இதனுலேதான் மெய் வணக்கம் னிறைவேறிப் பூர்த்தியாகிறது. இதனையே இரண்டாம் கலிமா (ஷஹாதத்து) என்பதில் றப்பாகிய ஆண்டவனைத் தன்னில் திட்டவட்டமாக னேரில் காண வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறது. இன்னும் அது, பரஞ்ஜோதி ஒத்தாணி முத்தாகிய கலிமாவைத் தன்னில் பிரகாசமாகக் கண்டறியாமல், வாயில் மட்டும் சொல்லிக்கொண்டிருந்நால் போதாது என்பதையும் வலியுறுத்துகிறது.

திருக்குர்ஆனில், "நான் உன் ஜீவ னரம்பிற்கும் சமீபமாய் இருக்கிறேன், னீ என்னை அறியமாட்டாயா?" என்றும்; "இறைவனைக் கண்டுகொள்ளாமல் துன்யாவில் குருடனுக இருந்நால் ஆகிரத்திலும் குருடனுகவே இருப்பான்" என்றும்; இது என் வழி, நான் பார்த்ததின் பேரில் உங்களையும் ஆண்டவன்பால் கூப்பிடுகிறேன்" என்றும்; இன்னும் மனுக்குல நாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கான 'ஹதீஸ்' களின்படி, "ஆண்டவன் இன்ஸானின் கல்பகத்தில் வெளியாவதன்றி, வேறு எங்கும் வெளியாவதில்லை" என்றும் "மூமீனுடைய கல்பு இறைவனுடைய அர்ஷ்பீட" மென்றும்; "இன்ஸான் இறைவனின் ரகசியப் பெட்டகம்" என்றும் இன்னும் பல பலவாம் சாக்ஷியங்கள் காணப்படுகின்றன.

மேலும் ஒருவன், தன் உயிர் உள்ளபோதே "ஜுனுபு" என்னும் அசுத்தமாகி விட்டால், அவன் 'னிய்யத்து' செய்து உடனுக்குடன் குளிக்க வேண்டியது அவசியக் கடமையாய் இருக்கிறது. அப்படி இருக்க, ஒருவன் மவுத்தாகிற காலத்தில் கசப்பு, என்கிற அசுத்தம் வெளியாகி மரணித்து விட்டால், யார் "னிய்யத்து", செய்து குளிக்கிறது? அவனுக்காக இன்னொருவன் செய்தால் னஜீஸ்

னீங்குமா? அவன் எப்படிப் பரிசுத்தனாகுவான்? இந்த அசுத்தம் தான் அவன் ஜன்னத்துக்குப் போகும் அடையாளமோ? நூரே முகமதியாவின் தஜல்லியத்தை ஒரு காமில் நாயகம் அவர்களின் நல்லுதவி கொண்டு, நேரில் தன்னில் தரிசித்தவனுக்கே, 'சக்ராத்' என்னும் அமளி மிருந்த கைசேத னெருக்கு வராது; கசப்பும் வராது. எங்கள் சபையில் உள்ள ஆண்களும் பெண்களும் 'சக்ராத்தும் – கசப்பும், இல்லாமல் மகிழ்ச்சி ஜீவப்பிரயாணர்களாய், றப்புடைய னேர் சன்னிதிக்குப் போக முழு யோக்கியதை யுள்ளவர்களாய் ஆகியிருக்கிறார்கள். (மேலே சொல்லிய இத்தகைய உண்மைகள் பொதிந்த கேள்வி வாசகத்தை, லால்பேட்டை மௌல்வி பதில் சொல்லாமல் எட்டித் தாண்டிவிட்டார். இஸ்லாத்தில் இவர் தெரிந்துள்ள உச்சிப்படி இதுதானோ? ஆகையினால்தான் நாங்கள் முதலாம் பர்லாகிய கலிமாவின் மகான்மிய மகத்துவத்தை எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாயிற்று. இன்னும் எங்களை அவருடைய பதிலில் இழுக்காவிடில், நாங்களும் எடுத்துக்காட்டி யிருக்க மாட்டோம். இதையே அறியாதபோது ஏழுவகை அமானிதமும் சுமந்துகொண்டிருக்கின்ற மனிதன், இறைவனுக்குக் கடன்காரன் என்பது தெரியவா போகிறது.)

இரண்டாவதாக, சேலம் வாலிபர் பெடரேஷன் செக்ரடரி, "இவர்கள் (மெய்வழிச் சபையார்) பள்ளிவாசலுக்குச் சென்று தொழ வேண்டியதில்லை", என்று சொல்வதாகக் குறை கூறுகிறார். இதற்கும், லால்பேட்டை ஹஜ்ரத் னேர்பதில் தரவில்லை. மெய்வழிச் சபையைச் சேர்ந்த முஸ்லிம்களை, "பள்ளிவாசலுக்குப் போய்த் தொழ வேண்டாம்" என்று எப்போதும் எங்கள் சபை சொன்னதில்லை; வணக்கமென்னும் தொழுகையை யாரும் விட்டதும் இல்லை. அப்படி இருக்க, மவுத்தாம் தகத்திலிருந்து றப்புடைய னேர் தரிசனையில் வணங்குகின்ற மெய்வணக்கத்தைப் புறக்கணித்தவர்களைக் குறித்துப் பேசிய வியாதியான, தீ வைத்தல், சிறைப்படுத்தல், கொலை செய்தல் போன்ற செயல்களைச் சிறிதும் பொருத்தமில்லாமல் எங்கள் சபையைச் சம்பந்தப்படுத்தி இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்.

மெய்வழி அங்கத்தினர் சபையில் சேரும்போது, ‘‘சரிகைத் துறையில் தொழுகை, பூஜை முதலிய அனுஷ்டானங்களில் தவருத வர்களாய் இருத்தல் வேண்டும்’’ என்று உறுதி வாங்கியே சேர்க்கப் பெறுகிருர்கள். அந்த உறுதிப்படி முஸ்லிம் அங்கத்தினர்கள் பலரும் பள்ளிவாசலுக்குப் போய்த் தொழுது வருகிருர்கள். அப்படி இருக்க, ‘‘தொழவேண்டியதில்லை’’ என்று எங்கள் சபையார் சொல்லுகிருர் களென்பது அபாண்டப் பொய்யாகும். எங்கள் ஞானபிதா அவர்கள், திருப்புத்தூரிலே னவாபு கல் கட்டிட மஸ்ஜீத்தில் கல்லைத் துளைத்து மின்சார விளக்குப் போட்டும், தொழுதும், அங்கேயே வெகுகாலம் இருந்து னஸீஹத்துச் செய்தும் வந்திருக்கிருர்கள்.

குர்ஆன் ஷரீபில் ‘‘சூரையேஹஜ்ஜில்’’ கண்டுள்ளபடி, உண் மையில் ஆண்டவனின் ஒரு ஞள் னேர் தரிசனை (வணக்கம்) ஆயிரம் வருஷ வணக்கத்திற்கு மேலானது என்பது மெய்ச் செயல். இன்னும் ஹதீஸில், ‘‘அஸ்ஸலாத்து மெஅராஜில் மூமினீன்’’ என்ற ஞயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கின்படியே, மெய்வழிச் சபையில் இம் மெய்ச் செயல் திட்டமாக னடைபெற்று வருகிறது. குத்புல் அக்தாப் கௌதுல் ஆலம் அவர்கள், ‘‘தான் பெற்றுள்ள மகத்தான ஞானத் தின்படி மெய்வணக்கம் புரியாதவனே மாபெரும் அறிவிலி’’ என்று கூறிய வாக்கியம், மெய்வழிச்சபை ஆலய முன்முகப்பில் போர்டில் எழுதித் தொங்கவிடப்பெற்றுள்ளது. அதுவே எங்கள் செயலைக் குறிக் கிறது. ஆகையால், முதல் விதியான கலிமா என்னும் மூலமந்திர னிருபிக ரூபரைத் தன்னில் திட்டவட்டமாகக் கண்டு தெரிந்துகொள் ளும்வரை, ஒருவன் வணங்கும் வணக்கம், னப்ஸே ஷைத்தானியா வைத்தவிர வேறு என்ன வணக்கமாக இருக்கும்? மனிதனின் உள்ள மாகிய மகா மகசூக்கான இருதயத்தை, ஒரு சற்குரு பெருமானுடைய னல்லுதவி கொண்டு பிரகாசமாக ஆக்கிக்கொண்டால்தான், அதன் மீது அவனுடைய ஆசை சாய்ந்து னின்று வணங்க ஏதுவாகும். இவ்வித அகமிய தொழுகைதான் ஜீவ மேம்பாட்டிற்குக் கூட்டிச் செல்லும் தரத்தையும் சக்தியையும் உடையது. இதை அறியும்வரை, வெளிரங்க ஷரீகத்தின் தொழுகையை விடாமல் தொழவேண்டியது தான். இக் கருத்துக்கொண்டே ஞயகம் (ஸல்) அவர்களும், மற்ற ஞதாக்களும், மெய்ஞானம் அடைவதற்கு முதற்படியாக ஷரீகத்துத் தொழுகையை எடுத்து வைத்தார்கள். மேலும், குர் ஆன் ஷரீபில்

“மாஊன்” என்ற சூராவில் அருளிச் செய்துள்ளபடி, மெய் வணக்கம் அல்லாத புறத் தொழுகையை மட்டும் போதுமாக்கிக் கொண்டவர்கள் “வைல்” என்று சொல்லப்பட்ட ரௌரவாதி னரகத்துக்கு உரியவராவார்கள் என்று கூறுவதும் அறியத்தக்கது. ஷரீகத்தின் வெளிரங்கத் தொழுகை, சிறுபிள்ளையாக இருந்தது முதற் கொண்டே பழக்கம் வருவதற்காக எடுத்து வைத்தது. இதையே போதுமாக்கிக் கொள்வது என்பது னிலேனிற்காது; வேதத் தீர்ப்பும் ஆகாது. மேலான பலன்தரும் அகமியத் தௌஹீதுடைய ஒருமைப் பாட்டுத் தொழுகை இருக்க, ஏன் அதை அறிய விரும்பவில்லை? மேற்கொண்டு அந்த அகமியத் தொழுகை தொழுகின்றவர்களை “பித்னு” செய்வதும், அவமானப்படுத்துவதும், குறைகூறுவதும்தானு, பெரிய மனிதர்களின் உன்னத மேம்பாடு?

மூன்ருவதாக, சேலம் பெடரேஷன், “திருமக்கா சென்று அங்குள்ள கஅபதுல்லாவைச் சுற்றி வருவதால் ஒரு பயனுமில்லை” என்று மெய்வழிச் சபையார் சொல்வதாகக் குற்றம் சாட்டுகிறது. அதற்கு, லால்பேட்டை மௌல்வியும், “ஹஜ்ஜை மறுப்பவன் வன்காபிருக்கு ஒத்தவனுவான்” என்கிருர். இது, எங்கள் சபையார்மேல் சுமத்துகிற அபாண்டப் பழி. மெய்வழிச்சபையார் ஹஜ் யாத்திரை செய்வதையும், தவ்வாப்பு செய்வதையும் இன்கார் (மறுப்பு) சொன்னதில்லை. சொல்லவும் துணியார். மெய்வழி அங்கத்தினர்களில் சிலர், சமீபத்தில்கூட “ஹஜ்” முடித்து வந்திருக்கிருர்கள். மேலும் சர்வ மதங்களின் மூல மந்திரங்களை அவரவர்களின் கல்பகத்தில் பிரகாசக் கதிரிலங்கப் பதிப்பித்து, ஓயாத்தொழுகையில் னிலேனிறுத்தாட்டி வருகின்றவர்களாகிய எங்கள் ஞானபிதா மெய்வழிச் சாலைஆண்டவர்கள், தங்கள் பத்தினியாரோடு மக்கமா னகரம் சென்று “ஹஜ்” முடித்து, மதினு முனவ்வரா சென்றகாலை, அங்குள்ள னபிகள் ஞயகம் (ஸல்) அவர்கள் திருச்சன்னிதானமாகிய “ரௌலாஷரீபில்” னின்று கனிந்துருகித் தோத்திரம் செய்தருளிய குருமணி மாலை எங்கள் ஆதி மெய் உதய பூரண வேதாந்த னூலில் சேர்க்கப் பெற்றுள்ளது பகிரங்கம். அதில்,

“ விதம் பூத்த சரிகைனெறி வித்யவழி யும்பூத்த வீதவேதா ”

என்று திருவாய் மலர்ந்தருளி யிருப்பதையும் ஜனங்கள் கவனிப்பார்களாக.

றுன்ருவதாக, ''சேலத்தார்'' கவனத்தில் உறுத்துவது மெய் வழி அனந்நர்களின் தலைப்பாகை. இதுபற்றி மவுல்வி யாதும் கூற வில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் ''பல தெய்வத்தை வணங்கும் மூஷ்ரிகீன்கள் தலையில் தொப்பியும், ஒரே தெய்வத்தை மெய்யாகக் கண்டு வணங்குபவர்கள் தலையில் பாகையும் அணிவார்கள்'' என்று அருளிச் செய்துள்ளார்கள். இதனால் பாகை அணிவது இஸ்லாத்திற்குப் புறம்பா? அல்லது ஒவ்வொரு முஸ்லீமும் கட்டாயம் அணிந்து அலங்கரித்துக்கொள்ள வேண்டிய சிரசாபரணமா? என்பதை ஜனங்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

ஐந்நாவதாக, லால்பேட்டை மவுல்வி, மெய்வழிச் சபையாரைக் குறித்து, ''அவர்கள் இஸ்லாமிய கோஷ்டியல்ல; மக்களை வழி கெடுக்கும் தஜ்ஜால்கள் என்று கூறவேண்டும்'' என்கிருர்-தஜ்ஜால்கள் என்று பொதுவாகச் சொன்னால் மக்களுக்கு இன்னாரென்று தெரியாது. லாகிர் உலமாக்களும் பாதின் உலமாக்களும் ஒப்புக்கொண்டபடி, ஹிஜ்ரி 1300–க்குப் பின் மஹதி அலைகிஸ்ஸலாம் அவர்கள் தோன்றி யருளுவார்கள். அக்காலத்தில் அவர்கள் ''அலீப்-லாம்-மீம்'' ''அந்நக் கிதாப்'' என்று கூறி, மக்களின் கல்பைத் திறந்து இல்ஹாமை னிரம்ப வெளியாக்குவார்கள். அவர்கள் எல்லா மதங்களையும் எல்லா ஜாதிகளையும் மெய் என்னும் ஒரே குலத்திலாக்கி, அதிஜெயச் செயல் வலிமையுடன் விளங்குவார்கள். அவர்களின் மெய்ச்செயல்களைக் குறித்து, பல தீர்க்கதரிசனங்களும் வெளியாகும். அதுகாலத்தில் அவர்களை அடைந்து அவர்களின் மெய்யான வழிபாட்டைப் பின்பற்றி னடக்கிறவர்களுக்குத் தீங்கிழைப்பவர்களும் அவதாறு செய்கின்றவர் களும்தான் ''தஜ்ஜால்கள்'' என்று கிரந்நங்களில் விளக்கப்பெற் றிருக்கின்றது. இப்படி இருக்க, லால்பேட்டை மவுல்வி, மெய்வழிச் சபையிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்களை மட்டும் அல்லாமல், தன்னை அறிந்த சைவர், வைணவர், கிறிஸ்தவர் முதலிய ஐம்பத்தாறு சாதி களைச் சேர்ந்த அங்கத்தினர்களையும் ''வழி கெடுக்கும் தஜ்ஜால்கள்'' என்று சொல்லத் துணிந்தது அபாண்ட அவதாருகும். முன் வந்த சர்வ மத தீர்க்கதரிசிமார்களும் எதிர்பார்த்த கால னிர்ணயப்படி, இன்று சைய்யதுனு மகதி அலைஹிச்சலாம் அவர்கள் உதயம் செய்

திருக்க, அவர்களைத் தேடி அடைந்து பயன்பெறும் அறிவில்லாதவர்களாய், அவர்களுக்கு இன்னல்களும் இடைஞ்சல்களும் செய்பவர்களை யார் என்று கூறுவது? இறுதிக்காலம் இதோ நெருங்கிவிட்டது. இன்னுள், ஐம்பத்தாறு சாதி மக்கள் - பல்லாயிரக்கணக்கானேர் - கூடிப் பெற்றுள்ள வித்தியச் செயல் சிறப்பினைக் கண்டு மனம் சகியாது பொருமை நிரம்பி வழிகிறது.

மேலே குறித்த பத்திரிகைகளில் வெளியாகிய லால்பேட்டை ஹஜிரின் ஆய்ந்தறியா வார்த்தைகளை நம்பி, மார்க்கம்பட்டி போன்ற பட்டி தொட்டி கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள முஸ்லிம்கள் மெய்வழி சமூகத்தாரை ஊருக்குள் புகவிடக் கூடாதென்றும், சோறு தண்ணீர் கொடுக்கக் கூடாதென்றும் பேசிக் கூச்சல் போட்டும், பிற ஊர்களில் உள்ளவர்களுக்குக் கடிதங்கள் எழுதியும் கலகத்திற்கு ஆங்காங்கு அடிகோலுகிருர்கள். இதைப் பார்க்கும்போது எல்லாச் சமூகத்தையும் எல்லா மதத்தவர்களையும் சமமாகப் பாவித்து ஆதரித்து வரும் மகாபலம் பொருந்திய நம்முடைய அரசாங்கம் இன்னுட்டில் இப்போது செங்கோல் செலுத்தி வருகிறது என்பதை மறந்து நம்முடைய மவுல்வி அவர்களுக்கே ராஜாங்கம் வந்துவிட்டது என்று நினைத்து; மௌல்விகள் மேலே எடுத்துக் காட்டியுள்ள படியும், தங்கள் யோசனைப்படியும், எல்லா அக்கிரம அமல்களும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அது எங்கே கொண்டுபோய் விடும் என்று அவர்கள் யோசிக்கவில்லை. அப்படி ஏதும் நடந்நால், லால்பேட்டை ஹஜிர் முதலிய மௌல்விகள்தான் ஜவாப்தாரியாவார்கள் என்று திட்டமாக அறியவேண்டும். இப்படி சமூகத் துவேஷம் வகுப்புக் கலகம், வெறுப்பு, பகை முதலிய செயல்களைத் தூண்டிவிட்டும், அவைகளை வளர்த்தும் வருவதற்காக அரசாங்கச் சட்டப்படி கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று எச்சரிக்கிருேம். கடைசியாக, திருக்குர் ஆன் ஆணைப்படி, "மெய் வந்து விட்டது பொய்யானது அழியப் போகிறது". அபத்தப் பொய்யானது அழிய வேண்டியதுதான் என்பதை லால்பேட்டை மதரஸா ஹஜிர் அறியக்கடவர்.

வாக்கியங்களின் உள்க் குறிப்பு வரிசை

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்

அ

324	அகம் பிரம்மாஸ்மி	343
324	அகர உகர சிகரம்	343
264	அங்கத்தினன்	219
265	அங்கத்தினன்	220
322	அடிப்படையான நம்பிக்கைகள்	335
324	அடி முடி நடு	343
253	"அண்ட சராசரம் முழுவதும் இதய காலச் சக்கரத்திற்குள் அணுவாக அடங்கியிருக்கிறது"	210 - 211
176	அதிஷ்டம்	147
293	அமானிதக் கடன்	288 - 289
185	அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - விரிப்பு	150
268	அருள்	223
299	அருள்	298
293	அழி உலக் ஆட்சி	284 - 285
205	அறம்	159 - 160
264	"அறிவதனைக் கொண்டு அறிவதனைக் காணுதல்"	219 - 220
	அறிவு	

வாக்கிய எண்	- பக்க எண்	வாக்கிய எண்	- பக்க எண்
173	- 146	248	- 206
264	- 219	305	- 301
315	- 307	325	- 352, 353, 375, 376

233	அறிவுடையவன்	193
16-17	அறிவுடையோர் ஆண்மை	51-52,
101	அறிவுடையோர் ஆண்மை	115
242	"அறியோம் நற்குருக்கள் குரு வாழ்க குருவே துணை"	203
284	அன்னம்	232
197	அன்னியர்கள்	153
165	அன்பு	143
189	அன்பே சிவம்	151
227	அன்பே சிவம்	180
290	அன்பே சிவம்	252,260
306	அனந்நர்கள்	301,302
322	அனந்நர் / அனந்நகி தீட்சா நாமம்	336
142	அனித்தியம்	135
284	அஜபை	232
96	அஷ்டாட்சரம்	113
77	அஹிம்சை	105

ஆ

51	ஆசார அனுஷ்டாங்களின் நோக்கம்	86 -88
49	ஆசான்	88
120	ஆசான்	130
280	ஆசான்	230
281	ஆசான்	230
320	ஆசான்	322-324
296	ஆசீர் பாதம்	296 - 297
293	ஆசை	290
293	ஆட்சி	284 - 285
289	ஆண்டவர்	238 - 239
12	ஆத்மா	27 - 33
139	ஆதிமெய் உதய பூரண வேதாந்த முகப்பு	135
168	ஆயுள்	144
	ஆன்மநேயம்	

வாக்கிய எண்	- பக்க எண்	வாக்கிய எண்	- பக்க எண்
117	- 129	129	- 132
150	- 138	151	- 138
154	- 140	155	- 140
156	- 140	200	- 155
257	- 215	259	- 216
262	- 217, 218		

137	ஆஸ்திகம்	134

இ

38	இரண்டும் கெட்ட உலகம் இது	69 - 70
52	இராதத்து	88
290	இராஜகெம்பீரப் பிரசங்கம்	242-269
136	இலிங்கம்	134

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
324	இறுதி மெசியா	343
82	இறைவனின் அன்பு	107-108
	ஈ	
14	ஈசன்	41,42
	உ	
3	உண்டு காண் (ஸ்ரீ காகபுசுண்டர் பிரான் ஜீவ மந்திரம்)	20
293	உணவுப் பிரச்னை	290-291
325	உணவுப் பிரச்னை	353-354, 370
100	உத்தியோவனம்	114
	உபதேசம்	

வாக்கிய எண்	பக்க எண்	வாக்கிய எண்	பக்க எண்
14	42	165	143
228	182-186	237	195
239	199-200	245	205
293	278	295	296
320	324		

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
211	உபதேச இரவு	165 - 166
325	உயிராணித் திருவசனம்	350
290	உயிருடலம்	267 -268
303	உயிருடலம்	300 - 301
228	உலகங்கள்	181
271	உலகப்பொருள், தேவன் என்ற இரண்டு எஜமானருக்கு ஊழியம் செய்ய முடியாது	224
284	உஜூது	232
	ஊ	
324	ஊமை எழுத்து	342
	எ	
264	எண்ணமும், ஞதமும்	220
325	எமதர்மன்	364
210	எமபயம்	164-165
251	எமபயம்	207
	எமவாதையத் துடுக்கும் என்திறம் (இறுதித் திருக்கூடகக் கொரல்)	390-395
14	எமன்	46
238	எமன்	195-196
160	எல்லாண்டு எல்லாண்டு எண்ணுய்கிறத்தாண்டு (ஆதிமான்மியம் விளக்கம்)	142
141	எழுதா மறை	135
229	எழுவகைத் தோற்றம்	186-187
321	எழுவகைத் தோற்றம்	325-328
325	எழுவகைத் தோற்றம்	355-356
	ஏ	
121	ஏகராசிக் குவியல் னிலை	130
324	ஏகாட்சரம்	342
190	"ஏடு தண்ணீரில் எதிர் ஏறிற்று" - விரிப்பு	151
106	ஏழ் பிறப்பு	117 - 120
316	ஏழ் பிறப்பு	308 - 315
	ஐ	
18	ஐந்நொகை	52 - 54
	ஒ	
325	ஒரு மொழி கீதை	378 - 389
100	ஒலிவாமலை	114
	ஓ	
324	ஓம் தத் சத்	343
	க	
228	கடவுள்	182
253	கடவுள்	208 - 210
320	கடவுள்	322
208	"கண்டறி யாமுன்கை கொண்டிடு வானென்று விண்டதெந்த வேதமோ "- விளக்கம்	163 - 164
289	கல்க்கி	238 - 239
324	கல்க்கி	343

Salai Pasumai

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
15	கல்யாணம்	50 - 51
253	கல்யாணம்	212
1	கல்வி	1
2	கல்வி	8 - 9
81	கல்வி	107
140	கல்வி	135
325	கலிமா	374 - 375

கா

256	காட்டானை வாலைப் பற்று	214 - 215
178	"காத்துள்ள போதே தூத்திக்கொள்"	147
293	காரணம்	281, 287
157	கான்வாதாக்கள்	141

கி

299	கிரணம்	298

கீ

320	கீதை	321
299	கீர்	298

கு

52	குதாத்து	88
	குரு	

வாக்கிய எண்	பக்க எண்	வாக்கிய எண்	பக்க எண்
6	23	14	42
64	101	71	103
92	111	97	113
241	201	247	206
286	234	293	278
299	298	320	319

32	குருக்ஷேத்திரம்	64
98	குருக்ஷேத்திரம்	113 - 114
251	குருக்ஷேத்திரம்	207

கோ

14	கோவில்கள்	49
243	கோவில் அனுஷ்டானங்கள்	203

ச

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
53	சத்தான தலம்	89 - 90
312	சத்தினி உடம்பு	306
322	சபையின் நோக்கம்	333
324	சம்மத மனத்தினர்க்கான் சத்திய யுகப்பரிசு	342 - 350
	சமரசம்	

வாக்கிய எண்	பக்க எண்	வாக்கிய எண்	பக்க எண்
14	45	207	162-163
212	167	244	204
252	208	270	224
289	237-238, 239,240		
290	256-257, 261		
291	270-271	292	275
299	298	320	319, 321
322	333 - 335		

289	சமரச வேத ஞுதர்	238 - 239
193	"சமரச வேத ஞுதாவே - சாதிகளின் கர்த்தாவே"	152 - 153
	சர்வமத மெய்வழிச் சபையும் இஸ்லாமும்	396 - 402
300	சற்குரு	299
293	சன்னதங்கள்	279
289	சன்மார்க்கம் (சாமுணம் செத்துப் பழகுதல்)	239
325	சன்மார்க்கம் (சாமுணம் செத்துப் பழகுதல்)	371 - 372
167	சஷ்டியப்த பூர்த்தி	144

சா

134	சாகாக் கல்வி	134
198	சாதி	154
289	சாதிகளின் மேல் அரசாளுபவர்	238-239
211	சாலை	165
289	சாலை ஆண்டவர்கள்	238 - 239
45	சாலைத் தமிழ்	75 - 84
59	சாலைப் பொன்னரங்கம்	99
115	சாலை வணக்கங்கள்	128
116	சாலை வணக்கங்கள்	128 - 129

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
132	சாவா வரம்	133
183	சாவு (மாள்தல்)	149
290	சாவு (மாள்தல்)	247-250, 258-259
292	சாவு (மாள்தல்)	- 272 - 273
325	சாவு (மாள்தல்)	357-360, 363

சி

7	"சிவாயனம வென்று சந்நித் திருப்போர்க்கு அபாயம் ஒரு ஞளுமில்லை"	24-25
202	சிஷ்டபரிபாலனம்	156 - 157

சீ

119	சீடன்	130

சு

133	சுதந்திரம்	134
297	சுயராஜ்ஜியம்	297
322	சுயராஜ்ஜியம்	329

சூ

293	சூக்குமம்	281, 287
247	சூக்கும ஞான னிஷ்டை	206
312	சூக்கும தேகம்	306
131	சூத்திரன்	133
299	சூரியன்	298

செ

13	செய்ன்னற்றி	33 - 38
325	"செந்தில் முனிமணி வந்தந்த ஞளிலிந் நப்பயிர் செய்ததுண்டு"	376 - 378
293	சென்னை உயர்னீதி மன்ற னீதிபதி திரு. சோமசுந்தரம் வந்திருந்த போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்	277 - 295

சே

314	சேவை	307

சை

111	சைவ மதம்	127

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்

சொ

239	சொர்க்கம்	200

சோ

306	சோதிடம்	301 - 302

ஞா

300	ஞானகுரு	299
57	ஞான பண்டிதர்	99

ஞானம்

வாக்கிய எண்	- பக்க எண்	வாக்கிய எண்	- பக்க எண்
58	99	75	104
103	115-116	248	206
253	211	274	226
293	292		

290	ஞானி	255
300	ஞானி	298

த

100	தண்டகாரண்யம்	114
134	தவம்	134
6	தரிசனை	23, 24
320	தரிசனை	321
290	தன்னையறிதல்	261-262
180	தனஞ்ஞெயன்	148

தா

9	"தாயுமிலி தந்நையிலி தான் தனியன் காணேடி"	26

தி

320	திரு.சின்மயானந்நாவும், மெய்வழி எஸ்.ஆர். ஞயுடு (ஹைவேஸ் சூபரின்டெண்டிங் என்ஜினியர்) அவர்களும் வந்திருந்த போது வெளியான பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் திருவாக்கிம்	318-325

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
23	திரு ஞுள்	56-58
183	திரு ஞுள்	149
301	திரு விழா	299
211	திரிகோணமலே	166
221	திவசம்	174

தீ

73	தீர்த்தம்	104
149	தீக்ஷை	138

தூ

273	தூக்கம்	225 - 226
56	தூக்க மாத்திரை	92-94
247	தூல ஞான னிஷ்டை	206
293	தூலம்	281, 287

தெ

10	தெய்வக் குபேர பூவண காலம்	26-27
138	தெய்வம்	135
293	தெய்வம்	278
302	தெய்வம்	300

தே

57	தேக பண்டிதர்	99
289	தேவகுருமூர்த்த சமூகத்தாய்	238 - 239
180	தேவதத்தன்	148
325	தேவப் பிறப்பு	366, 367-368
21	தேவர்கள்	55
61	தேவர்கள்	100
111	தேவர்கள்	124 - 126
177	தேவர்கள்	147

தொ

153	தொண்டர்கள்	139

ப

251	பகவான்	207
272	பசுவின் தூக்கமும், காரசாரம் இல்லாத உணவும்	225

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எ
96	பஞ்ஞாட்சரம்	113
325	பஞ்ஞாட்சரம்	374 - 37
282	படிக்கின்ற முறை	230 - 2
179	"படிப்படக்கிக் கேள்வி யெல்லாம் பற்றற விட்டடக்கிப் பார்த்திடலும் அடக்கி" - திரு அருட்பா விரிப்பு	148
290	படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக	243-244, 245-246, 264- 266
293	படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக	282-283
299	பத்தரை மாத்து தங்கம்	298
311	பத்து வயதுள்ள சத்தினி	305 - 306
310	"பரனளிக்கும் தேகமிது சுடுவது அபராதம்"	303-305
287	பரமவித்து	234-235
182	பழமொழி	149
211	பஜார்	166
130	பக்ஷிக்கின்ற அக்கினிகள்	132-133

பா

199	பாதகன்	154
196	பாவசாதி	153
120	பாவம்	130
267	"பார்வையில் பாண்டியன் தன்னேனி வைத்திடப் பார்க்கும் தொ தில் வேறு இல்லேயடி"	222

பி

269	பிடரி	223
180	பித்	148
96	பிரணவம்	113
118	பிரணவம்	129
325	பிரணவ ஸ்விட்ச்	374 - 3
284	பிரம்மச்சாரி	232
322	பிரம்மப் பிரகாச மெய்வழி சாலே ஆண்டவர்கள் சரிதம்	331 -

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் தவச் செயலாட்சி மாட்சி

வாக்கிய எண்	பக்க எண்	வாக்கிய எண்	பக்க எண்
3	15,16,17	14	48,49,50
27	60-61	28	61
31	63	33	64
34	65	36	66 - 67
39	70	40	70 - 71
41	71-72	42	72
48	85	60	100
63	100	66	101
76	104 - 105	84	108
88	110	90	110
91	111	93	111-112
104	116	109	122-123
110	123-124	111	126-127
114	128	115	128
118	129	127	132
146	137	159	141
163	142-143	166	143-144
169	144 - 145	180	148
184	149-150	188	150
191	151-152	192	152
201	155-156	202	156-157
203	157-158	209	164
213	167	215	168
219	172-173	221	174
230	191	232	193
235	194	239	198-199
240	200	255	213
277	228-229	279	229
288	235-236	289	239
290	243, 263	311	305-306
292	276-277,275	312	306-307
293	279-280, 281-282, 284-285, 286, 287-288, 289-290, 294	313	307
		315	308
		325	365-367

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
118	பிரம்மம்	129
14	பிரம்ம வித்தை	42,43,44, 46,47,49
20	பிரம்ம வித்தை	54
29	பிரம்ம வித்தை	61-62
95	பிரம்ம வித்தை	112
96	பிரம்ம வித்தை	113
290	பிரம்ம னிஷ்டர்	254
148	பிரளயங்களில் ஞானிகளின் சரீரம்	138
86	பிரளயம்	109
206	பிரளயம்	160-162
218	பிரளயம்	169 - 171
238.	பிரளயம்	196
131	பிராம்மணன்	133
124	பிருக்த யோகம்	131
324	பிள்ளையார் சுழி	342
83	பிறப்பு வகைகள்	108
	பீ	
211	பீட பூமி	165
	பு	
120	புண்ணியம்	130
284	புராக்	232
182	புராதனமொழி	149
14	புனர் ஜென்மம்	42-43
	பூ	
269	"பூமியிலுள்ள அனைவரின் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்" - விரிப்பு	223-224
228	பூமியின் தலைவு	180-181
247	பூரண ஞான னிஷ்டை	206
	பெ	
195	"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்"	153
289	பெரியதாய்	238 - 239

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
	பே	
290	பேரின்பம்	257-258
	பை	
246	"பையப் பையத் தின்றால் பனையையும் தின்றுவிடலாம்"	205
	பொ	
81	பொய்க் கல்வி	107
230	பொய்க் குரு	187-190
290	பொய்க் குரு	259-260
293	பொய்க் குரு	287, 291
324	பொய்க் குரு	344-350
325	பொய்க் குரு	365, 368-369
257	பொறுமை	215
211	பொன்னரங்கம்	165
	பௌ	
81	பௌர்ணமி	299
	ம	
324	மகதி	343
293	மகாகாரணம்	281, 287
228	மண்டலங்கள்	181
3	மதம்	16
144	மதம்	136
152	மதம்	139
299	மதம்	298
4	மதிப்பிலடங்கா மாணிக்கப் பரிசு	21-22
100	மதிவளரும் பூவனம்	114
258	மந்திரஸ்திரம்(மூன்று)	215
217	மயிர் பாலம் நெருப் பாறு	169
284	மயில்	232
293	மர்க்கடஞாயம்	286
158	மரணம்	141
325	மரணமிலாப் பெருவாழ்வு	357,360-363
3	மரணமே உன் கூர் எங்கே	20
4	மரணமே உன கூர் எங்கே	22
140	"மலர்மிசை ஏகினன்"	135
248	மறதி	206
3	மறலி கைதீண்டா சாலே ஆண்டவர்கள் மெய்மதம்	10-20
4	மறலி கைதீண்டா சாலே ஆண்டவர்கள் மெய்மதம்	21
14	மறு பிறப்பு	42-43
64	மறு பிறப்பு	101
214	மறு பிறப்பு	168
319	மறு பிறப்பு	316-317
6	மறை மொழி	23-24
11	மறை மொழி	27
80	மனம்	106-107
170	மனம்	145
260	மனம்	216
264	மனம்	219
315	மனம்	307-308

மனிதனின் கடமைகள் :

வாக்கிய எண்	பக்க எண்	வாக்கிய எண்	பக்க எண்
3	15-16	19	54
24	58	35	66
36	67-68	37	68-69
43	73-74		
46	84 54 - 90		
56	96-97	65	101
67	101-102	70	102-103
79	106	87	109
89	110	99	114
103	115-116	107	120-121
108	121-122	112	127-128
113	128	118	129
120	130	122	130
123	131	125	131
126	131	135	134
143	136	145	136-13
146	137	147	137-1
161	142	164	143

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்

194 - 153 216 - 168
219 - 171-172 220 - 173-174
222 - 174-175 223 - 175-176
238 - 196, 197, 198
246 - 205 251 - 208
254 - 212 255 - 212-213
256 - 213-215 263 - 218-219
264 - 219 266 - 221
267 - 221 275 - 227
278 - 229 285 - 232-234
294 - 295-296 309 - 303

294 மனித உடல் எடுத்து பிறந்தவர்களுக்கு இளமையிலேயே கற்பிக்கப் பெற வேண்டிய நான்கு பாடங்கள் 295-296
304 மனிதனின் முதல் கடமை 301
22 மனித ஐந்து 55-86
14 மனு ஈசன் 41
68 மனு ஈசன் 102
290 மனு ஈசன் 247
293 மனு ஈசன் 277-278, 283-284
320 மனு ஈசன் 318-319
322 மனுக்குலத்திற்கு மெய்வழியின் அருட்பரிசு - பிறவிப் பயனும் மெய்க்குரு பிரானும் 329-336
325 மனுத் தூலத்தின் உன்னதம் 369-370
290 மனுவிற்கு ஒரே சட்டம் 257
317 மனுவுக்கு வேண்டியது 3 1/2முழ இடந்தானே 315 - 316
68 மனுனீசன் 102
289 மனுமகன் / மகதி 238 - 239

மா

241 மாயை 201
301 மார்கழி (னித்திய உலகுக்கு முதல் மாதம்) 299
293 மார்ச்சால ஞாயம் 286
299 மாலி 298
175 மானிடன் 1[illegible]6

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்

மு

257 முகதாட்சண்யம் 215
10 முச்சுடர் 26
323 முத்துனபிதங்கள் பெருந்நடம் 336-342
182 முதல் னூல் 149
259 முதல் மந்நிரம் 216
182 முதன் மொழி 149
158 முப்பால் 141
298 மும்மலங்கள் 297-298
50 "முயற்சி திருவினை ஆக்கும்" 88

மூ

96 மூல மந்நிரம் 113
289 மூல மந்நிரம் 236-237
169 மூன்று பத்தியங்கள் 144

மெ

1 மெய்க் கல்வி 1-2
81 மெய்க் கல்வி 107
95 மெய்க் கல்வி 112
1 மெய்க் கல்விக் கலா சாலை 1-2
2 மெய்க் கல்விக் கலா சாலை 3-5
278 மெய்த் தொழுகை 229
259 மெய்ப் பொருள் காண்பது அறிவு 216
26 மெய்யும், பொய்யும் - கதை 59-60
246 மெய்வழி 205-206
289 மெய்வழி குபேர லக்ஷிய உச்சம் 236-240

மெய்வழிச் சபை :

வாக்கிய எண் - பக்க எண் வாக்கிய எண் - பக்க எண்
85 - 109 249 - 206
289 - 237-238 322 - 335-336
323 - 339 - 342

மெய்வழிச் சாலை :

வாக்கிய எண் - பக்க எண் வாக்கிய எண் - பக்க எண்
206 - 162 209 - 164
275 - 227 276 - 227
292 - 276 293 - 284
3[illegible] - 329-331

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
292	மெய்வழி னித்திய முத்தி பாபஞ்ச தரித்திரிய சங்ஙார மகிழ்ச்சிப் பத்திரம்	271 - 275
289	மெஸ்ஸயா	238 - 239
	மே	
231	மேனுட்டுப் பழக்கம்	191-193
	மை	
14	மைசூர் அரசர் அவர்களுடன் சந்திப்பில் வெளியாகிய பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் திருவாக்கு	38 - 50
289	மைத்திரேய புத்தர்	238-239
	மோ	
121	மோனம்	130
324	மோன எழுத்து	343
	யா	
171	யாகம்	145
204	யாரும் கட்ட முடியாத திருமாளிகையே உன் தேகம்	158-159
	யு	
289	யுகனுதர்	238-239
	யோ	
102	யோக்கியனும் போக்கிரியும்	115
247	யோகம்	206
290	யோகி	255
	ர	
130	ரக்ஷிக்கற அக்கினிகள்	132 - 133
	ரா	
121	ராசி னிலை	130
	ரு	
325	ருத்திராட்சம்	372 - 373
	வ	
284	வணக்கம்	232
325	வணக்கம்	374
293	வயது	277, 289
182	வழி னூல்	149
187	வள்ளல்	150
	வா	
118	வாக்கு	129
293	வாடாத ஆட்சி	284 - 285
	வி	
186	விசனம்	150
325	விசுவனுத உயிராணித் திருவசனம் திருச்சிராப்பள்ளியில் னிகழ்த்தியருளியது	350 - 389
293	வித்தியாதத்துவம்	288-289
35	விதி	65 - 66
55	விதியும், விலக்குகளும்	90 - 91
174	விபூதி	146
197	விரோதி	153
62	விஸ்வரூபக் காட்சி	100
72	விஸ்வரூப தரிசனம்	104
290	விஸ்வரூப தரிசனம்	267 - 268
293	விஸ்வரூப தரிசனம்	292 - 294
	வீ	
128	வீடடைதல்	132
324	வீரபோக வசந்நராயர்	343
	வெ	
162	வெற்றி வீர வாழ்க்கை	142
	வே	
239	வேதம்	200
267	வேதம்	222
267	வேத விளக்கம்	222
241	வேதாந்நம்	201, 202
	வை	
303	வைரமணித் தேகம்	300-301
131	வைஸ்யன்	133

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எண்
	ன	
211	னரக தேகம்	166
239	னரகம்	200
325	னரன்	353
2	னற்ருள்	5 - 8
94	னற்ருள்	112
263	னன்னம்பிக்கை வைப்பு - ஞேக்கம்	218-219
	ஞு	
3	ஞுதன் தான் வந்நுலாவ - தீர்க்க தரிசனம் - ஸ்ரீ காகபுசுண்டர் பிரான் ஜீவ மந்திரம்	20
321	ஞுல் வகை யோனி	325
137	ஞுஸ்திகம்	134
	னி	

னித்தியம் :

வாக்கிய எண் - பக்க எண்		வாக்கிய எண் - பக்க எண்	
14	40-41	142	135
225	178	290	266
292	271-272	293	281
308	302	320	318
325	351-352		

3	னித்திய னன்மை	18-19
69	னினைவு	102
250	னினைவு	207
305	னினைவு	301
116	னிஷ்டை	129
247	னிஷ்டை	206
307	னிஷ்டை	302
	னீ	
140	னீதி	135
289	னீதி	239
290	னீதி	266 - 267
56	னீதித் தீர்ப்பு	98 - 99

வாக்கிய எண்	உள்க் குறிப்பு	பக்க எ
	ஞூ	
44	ஞூலறிவினர் உரை	74 - 75
74	ஞூலறிவினர் உரை	104
105	ஞூலறிவினர் உரை	116-117
	ஞே	
47	ஞேய்	84 - 85
	ஜீ	
283	ஜீவ தேகம்	231
78	ஜீவ பண்டிதர்	105 - 106

ஜீவபிரயாணம் (அடக்கம், பெருமாள்தல்)

வாக்கிய எண் - பக்க எண்		வாக்கிய எண் - பக்க எண்	
56	91-92,94-96	132	133
183	149	224	177
290	251-252-254	292	273-275
324	343	325	357-360,363

5	ஜீவன்	22 - 23
170	ஜீவன்	145
172	ஜீவன்	145 - 146
284	ஜீவன்	232
325	ஜீவன்	373 - 374
125	ஜீவன்முக்தன்	131
243	ஜீவன்முக்தன்	204
248	ஜீவன்முக்தன்	206
	க்ஷ	
131	க்ஷத்திரியன்	133
	ஹ	
286	ஹக்கீகத் முகம்மது	284
311	ஹபீப்	305 - 306

அழகன் அச்சகம், ஆற்காடு.